# 1

# தேவனுடைய வார்த்தை

## தேவனுடைய வார்த்தையின் முக்கியத்துவம்

| | |
|---|---|
| **2 பேதுரு 1:19-21** | வேதாகமத் தீர்க்கதரிசனம் நமது கண்களைவிட அதிக நிச்சயமானது. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டபோது, அவர்களால் வேதாகமம் எழுதப்பட்டது. |
| **2 தீமோ. 3:15-17** | வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. |
| **அப். 17:11** | பெரோயா பட்டணத்து ஜனங்கள் ''தினந்தோறும்'' வேத வாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், ''நற்குணசாலிகளாக'' இருந்தார்கள். |
| **லூக்கா 24:27** | இயேசுவின் உதாரணம். வேத வாக்கியங்கள் எல்லா வற்றையும் பயன்படுத்தினதால் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது. |
| **மத். 22:29** | வேதாகமத்தை அறியாமலிருப்பதனால் தவறு வருகின்றது. நீங்கள் வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறீர்கள். |
| **ஏசாயா 8:20** | நாம் எல்லாவற்றையும் வேதம் மற்றும் சாட்சியாகமத்தின் பரீட்சைக்குக் கொண்டுவரவேண்டும். (சாட்சியாகமம் = வேதாகமத்தின் மற்ற பாகங்கள்). “இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால். அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.” |
| **அப். 18: 24,28** | அப்பொல்லொ வேதாகமங்களில் வல்லவனாக இருந்தான். இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினான். |

**குறிப்பு** : இந்த வசனங்களில் சில. வேதவாக்கியங்களைப்பற்றிப் பேசுகின்றன. வேதாகமம் என்றால், எழுதப்பட்டது என்று பொருள்படும்.

எனவே, தேவனுடைய வார்த்தைகள் ஒரு புத்தகத்தில் எழுதிவைக்கப்பட்டு கைக்கொள்ளப்படவேண்டும் என்று தேவன் அர்த்தம்கொண்டார் என்பது தெளிவாக இருக்கின்றது. அதனால் பெரோயாவிலுள்ளவர்களைப்போல அனைவரும் அவைகளைத் தங்களுக்கென்று வாசிக்கமுடியும்.

| | |
|---|---|
| **வெளி. 21:5** | "இவைகளை எழுது என்றார்." |
| **வெளி. 22:18,19** | "இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறவைகளை" |
| **சங்கீதம் 40:7; எபி. 10:7** | "... புத்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது." |
| **ஏசாயா 34:16** | "கர்த்தருடைய புத்தகத்திலே தேடிவாசியுங்கள்." |

**இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்துவதே வேதாகமத்தின் நோக்கமாக இருக்கிறது.**

| | |
|---|---|
| **சங். 40:7;2 எபி. 10:7** | "...புத்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது." |
| **லூக்கா 24:27** | "... வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை ..." |
| **லூக். 24:44** | "...மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் ..." |
| **யோவான் 5:39** | "என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே." |

**வேதாகமம் நமக்காகச் செய்யக்கூடிய மற்ற காரியங்கள்:**

| | |
|---|---|
| **சங்கீதம் 119:9,11** | சுத்தம் செய்கிறது. |
| **சங்கீதம் 119:105** | வெளிச்சத்தைக் கொடுக்கிறது. |
| **யோவான் 17:17** | சத்தியத்தைக் கொடுக்கிறது. |
| **2 தீமோ. 3:15-17** | நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கு கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் ... உபதேசத்திற்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்துதலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது. இவை அனைத்தையும் வேதாகமம் நமக்காகச் செய்யும். |

## வேதாகமத்தைக் கற்பது எப்படி?

**யாக்கோபு 1:5** ஞானத்திற்காகத் தேவனிடத்தில் கேள்.

**ஏசாயா 28:10,13** வேதாகமத்தின் ஒரு பகுதியை மற்றொரு பகுதியுடன் ஒப்பிடுங்கள்.

**1 கொரி. 2:13** வேதாகமத்தின் எல்லா பகுதிகளினாலும் கட்டுங்கள். (லூக்கா 24:27 - ல் உள்ள இயேசுவின் உதாரணத்தைக் கவனியுங்கள்).

**யோவான் 16:13** உங்களை வழிநடத்துவதற்காக—பரிசுத்த ஆவிக்காக ஜெபியுங்கள்.

"பரிசுத்த வேத வாக்கியங்கள் தேவனுடைய அதிகாரப்பூர்வமான, தவறாத அவருடைய சித்தத்தின் வெளிப்படுத்தல் என்பது ஏற்றுக்கொள்ளப் படவேண்டும். அவைகள் சுபாவத்தின் தரமாகவும் கோட்பாடுகளின் வெளிப்படுத்தலாகவும் அனுபவத்தின் பரீட்சையாகவும் உள்ளன."—GC 7

"தேவனுடைய வார்த்தையை மிக மேலான அதிகாரமாக நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம்."—CT 402

"வேதாகமத்தின் ஒவ்வோர் அதிகாரமும் ஒவ்வொரு வசனமும் தேவ னிடமிருந்துள்ள, மனிதனுக்கான தகவல் தொடர்பாக இருக்கிறது."—PP504

"நாளுக்குப்பின் நாளாக நாம் விழிப்புடன் வேதாகமத்தை வாசித்து, ஒவ்வொரு எண்ணத்தையும் நிறுத்து, வேதவாக்கியத்தை வேதவாக்கியத்துடன் ஒப்பிடவேண்டும்."—GC 598

"ஜெபம்பண்ணாமல் ஒருபோதும் வேதாகமத்தை வாசிக்கக்கூடாது. அதின் பக்கங்களைத் திறப்பதற்குமுன் பரிசுத்த ஆவியால் அறிவூட்டப் படுவதற்காக நாம் கேட்கவேண்டும்; அப்பொழுது அது கொடுக்கப்படும்."—SC 96

"நுண்ணறிவைப் பலப்படுத்துவதற்காக வேதவாக்கியங்களை வாசிப்பதைவிட, அதிகமானதாக வேறெதுவும் கணக்கிடப்படவில்லை. எண்ணங்களை உயர்த்துவதற்கும் அறிவுத் திறனை வளப்படுத்தவும் மிகவும் விசாலமான வேதாகம சத்தியங்களைப்போல வேறு எந்த புத்தகமும் வலிமையுடையதாக இல்லை. தேவனுடைய வார்த்தை அது இருக்கவேண்டியவிதமாக வாசிக்கப்பட்டிருந்தால், இந்தக் காலங்களில் அபூர்வமாகக் காணப்படுகின்றவிதத்தில் இல்லாமல், மனிதர்கள் பரந்த மனப்பான்மை உள்ளவர்களாகவும், நோக்கத்தில் ஸ்திரத் தன்மை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்."—SC 94,95

“தேவனுடைய வார்த்தை, இயற்கையான பூமிக்குரிய தன்மையை அழித்து, கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய ஜீவனைக் கொடுக்கிறது.”—DA 391

“தேவனுடைய வார்த்தையாகிய உப்பினால் நாள்தோறும் சாரப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படாத எந்த இருதயமும் இனிமையான நிலைமையில் காக்கப்படமுடியாது. தெய்வீகக் கிருபை நாள்தோறும் பெறப்படவேண்டும். அப்படியில்லாவிட்டால், எந்த ஒரு மனிதனும் மாற்றம் அடைந்தவனாக நிலைத்திருக்கமாட்டான்.”—R&H 9-4-1897

“வேதாகமச் சத்தியங்களால் தங்களுடைய மனதைப் பலப்படுத்தி இருப்பவர்களைத்தவிர, மற்றொருவரும் கடைசிப் பெரும் போராட்டத்திற்கூடாக நிற்கமாட்டார்கள்.”—GC 593,594. ★

# 2

# தேவனுடைய வார்த்தையிலுள்ள உண்மைத்தன்மை

### தேவனுடைய வார்த்தையைப் பாதுகாக்கும் அவருடைய வாக்குத்தத்தம்

**சங். 12:6,7** "கர்த்தருடைய சொற்கள் … சுத்த சொற்களாயிருக்கிறது. அவைகளைக் காப்பாற்றி, என்றென்றைக்கும் … காத்துக்கொள்வீர்."

**ஏசாயா 40:8** "கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்."

**மத். 24:35** "என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை."

**யோவான் 10:35** "வேதவாக்கியமும் தவறாததாயிருக்க …"

**1 பேதுரு 1:25** "கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்."

### தீர்க்கதரிசனத்தினால் தேவனுடைய வார்த்தை மெய்யானது என்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது

ஏசாயா 41:21–23 பின்வரும் காரியங்களை எங்களுக்குத் தெரிவியுங்கள் என்பது தவறான எல்லா மதங்களுக்கும் தேவன் விடுக்கும் சவாலாக உள்ளது. (எதிர்காலத்தைப்பற்றிய மிகவும் சரியான—உண்மையான—தீர்க்கதரிசனங்களை வேதாகமத்தின் தேவன் ஒருவரால்மட்டுமே நமக்குக் கொடுக்கமுடிகிறது).

**ஏசாயா 42:9** "… அவைகள் தோன்றாததற்குமுன்னே அவைகளை உங்களுக்குச் சொல்லுகிறேன்."

**ஏசாயா 46:9,10** "நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்தில் உள்ளவைகளை … ஆதிமுதற்கொண்டும் … அறிவிக்கின்றேன்."

**யோவான் 14:29** "நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்."

**2 பேதுரு 1:19** "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம்."

வேதாகமம் முழுவதிலும் உள்ள நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்களுக்குச் சுருக்கமான சித்திரங்களாகக் கீழ்க்காணும் தீர்க்கதரிசனங்கள் உள்ளன என்பதைக் கவனிக்கவும்:

| | |
|---|---|
| **உபாகமம் 28:25,37,64** | யூத இனத்தின் பாடுகள். |
| **ஏசாயா 13:19,20** | பாபிலோனின் பாழ்க்கடிப்பு. |
| **எசே. 26:4,5,12,14** | தீருவின் அழிவு. |
| **மத். 24:1,2** | எருசலேம் தேவாலயத்தின் அழிவு. |

தானியேலும் வெளிப்படுத்தின விசேஷமும் இராஜ்ஜியங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் நூற்றாண்டுகளுக்கூடாகவுள்ள தேவனுடைய சபையின் வரலாற்றையும் பெரும் தீர்க்கதரிசனங்களின் மார்க்கமாக காட்டிக்கொண்டிருக்கின்றன.

**மனிதர்களுடைய வாழ்க்கையை மாற்றக்கூடிய தேவனுடைய வார்ததையின் வல்லமையினால் அவருடைய வார்த்தை உண்மையானது என்று மெய்ப்பிக்கப்பட்டிருந்கிறது.**

**ரோமர் 1:16** "இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது."

**1 பேதுரு 1:23** "... தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்."

**2 கொரி. 5:17** "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புது சிருஷ்டியா யிருக்கிறான்."

**1 யோவா. 5:10** "தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்." (நாம் நமது வாழ்க்கையைத் தேவனுக்குக் கொடுக்கும்போது, அவருடைய வல்லமை மெய்யாகவே நமக்குள்ளிருக்கிறது என்பதை அறிந்துகொள்வோம்; அது நம்மை வழிநடத்தி, அவரைப்போல் மிக அதிகமாக நம்மை மாற்றுகிறது என்பதையும் அறிந்துகொள்வோம்).

**சங். 34:8** "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்."

அதிக வல்லமையுடன் மனிதனை மேல்நோக்கிச் சுட்டிக்காட்டவும், அவனை ஆச்சரியமானவிதமாக மாற்றவும், வேதாகமம் அளிப்பதைப்போன்று மிகவும் மேலானதும்—மிகவும் தூய்மையானதும்—மிகவும் உயரமானதும்—மிகவும் நீதியானதும்—மிகவும் நேசிக்கின்றதும்—மிகவும் கடுமையாக எல்லாத் தீமைகளையும் எதிர்க்கின்றதுமான வல்லமையை வேறு எந்த மனித நூலும் அளிக்கமுடியாது. இதுவே வேதாகமத்தினுடைய தெய்வீகத் தொடக்கத்திற்கான ஆதாரமாயிருக்கிறது!

### தேவனுடைய வார்த்தை மிகவும் சரியானது என்பதை அகழ்வாராய்ச்சிகள் உண்மையாக்குகிறது!

கடந்த காலத்தின் ஆவணங்களை மனிதர்கள் தோண்டி எடுத்தபோது, வேதாகமம் மிகவும் சரியானது என்று ஆச்சரியமான விதத்தில் மீண்டும் மீண்டும் அவை மெய்ப்பித்திருக்கின்றன. மோசேயின் நாட்களின் எழுத்துக்கள் அறியப்படாதவைகளாக இருந்ததனால், முதல் ஐந்து புத்தகங்களும் மோசேயினால் எழுதப்பட்டிருந்திருக்கமுடியாது என்று கூறும் வழக்கத்தை வேதாகமத்தின்மீது நம்பிக்கையற்றவர்களும், விமர்சகர்களும், கொண்டிருந்து, அவ்வளவு முன்னான காலத்தில் அப்படிப்பட்ட பிரமாணங்கள் அளவுக்கு அதிகமாக முன்னேற்றமுடையவைகளாக இருந்தன என்றும் கூறியிருந்தனர். ஏத்தியர்கள் என்று கூறப்பட்டிருந்த அப்படிப்பட்ட ஜனங்களும், பெல்ஷாத்சார் என்று சொல்லக்கூடிய அப்படிப்பட்ட ஓர் அரசனும், பாபிலோனில் இருந்திருக்கவில்லையென்றும் விமர்சகர்கள் மேற்கொண்டு அறிவித்திருந்தனர். அப்படியிருந்தபோதிலும், வேதாகமம் அறிவித்திருப்பவைகள் அனைத்திற்குமான சாட்சியங்களை அகழ்வாராய்ச்சி தோண்டியெடுத்திருக்கிறது. இதற்குமுன் ஒருபோதும் இருந்திராதவிதத்தில், அதன் சரியான தன்மையின்மீது நாம் நம்பிக்கை வைக்கலாம். வேதாகமத்தின்மீது நம்பிக்கையற்றவர்களும் விமர்சகர்களும் மௌனப்படுத்தப்பட்டு, வேதாகமம் உண்மையானதென்று மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது. அகழ்வாராய்ச்சியின் முதன்மையான கண்டுபிடிப்புகளில் சில இங்குள்ளன:

#### 1. டெல்–ஏல்–அமர்னா களிமண் கற்கள்

எகிப்தின் தலைநகரான கெய்ரோவிலிருந்து இருநூறு மைல் தெற்கில் கி.பி. **1887**– ல் கண்டுபிடிக்கப்பட்டது. ஏறத்தாழ கி.மு. **1400** – ல் யோசுவா பாலஸ்தீனத்தின்மீது படையெடுத்தபோது, எகிப்திலிருந்து உதவி கேட்டுக் கெஞ்சி, கானானிய அரசர்களால் எழுதப்பட்டவை இதிலுள்ளன. மோசேயின் காலத்தில் இந்த எழுத்துக்கள் அறியப்பட்டு, பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதை இந்தக் களிமண் கற்கள் காட்டுகின்றன.

**2. ஹமுராபியின் சட்டங்கள்**

பாபிலோனுக்கு ஏறத்தாழ இருநூறு மைல் கிழக்கே சூசான் என்னுமிடத்தில் கி.பி. **1900**–ல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆபிரகாம் வாழ்ந்திருந்த அதே காலத்தில், பாபிலோனின் அரசனாக இருந்த ஹமுராபியினால் இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டு, அவனுடைய உத்தரவின்படி கி.மு. **1750**–ல் எழுதப்பட்டன. இதில் சட்டம் மற்றும் அரசாங்கத்தின் முன்னேற்றத்திற்கான கருத்துக்களும் எழுத்துக்களும் இருந்தன என்பதையும், மோசேயின் காலத்திற்கும் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன்னதாகவே உலகின் அப்பகுதிகளில் எழுத்தறிவு முன்னேற்றம் அறியப்பட்டிருந்தது என்பதையும் அந்தச் சட்டங்கள் உண்மையாக்குகின்றன.

**3. நூஜி மாரி களிகண் கற்கள்**

நினிவேக்குத் தெற்கே நூஜி இருக்கிறது. கி.மு.**1500**–ல் எழுதப்பட்ட ஆயிரக்கணக்கான களிமண் கற்கள் **1925**–க்கும் **1941**–க்கும் இடையில் அங்கு காணப்பட்டன. **1933**–லிருந்து கி.மு.**1800** வாக்கில் எழுதப்பட்ட **20,000** களிமண் கற்கள் யூப்ரட்டீஸ் நதிக்கரையில் உள்ள மாரி என்னுமிடத்தில் காணப்பட்டுள்ளன. இந்தக் கற்கள் பழைய ஏற்பாட்டுக் காலம் விவரிக்கின்ற அதேவிதமான வாழ்க்கை முறையைப்பற்றி விவரிக்கின்றன.

**4. ரஷ் ஷாம்ரா களிகண் கற்கள்**

கி.மு.**1500**–க்கும் கி.மு. **1400**–க்கும் இடையில் எழுதப்பட்டு, சிரியா நாட்டின் வடபகுதியில் **1929**–க்குப்பிறகு காணப்பட்டுள்ளவை இவை. இந்த எழுத்துக்களில் அகராதிகள், பொருள்களின் விலைப் பட்டியல், கானானியர்களின் மத சம்பந்தமான எழுத்துக்கள் ஆகியவை உள்ளடங்கியுள்ளன. இந்த மத சம்பந்தமான எழுத்துக்கள் கானானிய மதத்தின் மிகக் கீழ்த்தரமும் பயங்கரமுமான நிலைமையையும், இந்தப் பகுதியிலிருந்த மக்களை அழித்தொழிக்கும்படி எபிரெய ஜாதிக்கு ஏன் சொல்லப்பட்டது என்பதையும் காட்டுகின்றன.

**5. ஏத்தியர்கள்**

நூறு வருடங்களுக்கு முன்வரை, வேதாகம விமர்சகர்கள் ஏத்தியர்கள் என்று அழைக்கப்பட்டிருந்த ஒரு ஜாதியினர் ஒருபோதும் இருந்திருக்க வில்லையென்று அறிவித்திருந்தனர். ஆனால், ஒரு பெரிய ஏத்திய ஜாதி என்னும் கருத்து, வேதாகம எழுத்தாளர்களால் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதுடன், பல்லாயிரக்கணக்கான ஏத்திய களிமண் கற்களும் (பெர்லின் அருங்காட்சியகத்தில் மட்டும் **20,000** கற்கள்) தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. ஏத்தியர்களைப்பற்றி வேதாகமம் என்ன கூறியிருக்கிறதோ, அது உண்மையென்று மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

### 6. நெபோநிடசின் உருளைக் களிகண் படிவங்கள்

**1854**–ல் கல்தேயர்களின் ஊர் என்னுமிடத்தில் தோண்டி எடுக்கப்பட்டு, பாபிலோனின் அரசனான பெல்ஷாத்சாரைப்பற்றி (வேதாகமம் அவனைப்பற்றி விவரிக்கின்ற அதேவிதமாக) கூறுகின்றன.

### 7. பாபிலோனில் தோண்டி எடுக்கப்பட்ட எழுத்துக்கள்!

கி.மு.**595**–க்கும் **570**–க்கும் இடையில் எழுதப்பட்ட கல்வெட்டுகள், (எருசலேமிலிருந்து அடிமைகளாக வந்த யூதர்களுக்கு உணவுப்பொருள் கொடுக்கப்படவேண்டியதாக) கூறுகிறது. இந்தக் களிமண் கற்களில் ஒன்று, யூத அரசன் யோயாக்கீனைப்பற்றி கூறும்போது, வேதாகமம் கூறுவதைப்போன்று, யூதர்களும் அவர்களுடைய இராஜா யோயாக்கீனும் அடிமைகளாக இருந்தார்கள் எனக்காட்டுகிறது. வேதாகம அறிக்கைகள் சரியானவைகளாக இருக்கின்றன என்பதை அகழ்வாராய்ச்சி எவ்வாறாக மெய்ப்பிக்கின்றது என்பதைக் காட்ட, மற்றும் அனேக விளக்கங்களைக் கொடுக்கமுடியும்.

**“**தேவனுடைய சித்தத்தின் அதிகாரப்பூர்வமான வெளிப்படுத்தலாக வேதவாக்கியங்கள் கற்றுக்கொள்ளப்படவேண்டியவைகளாக உள்ளன” என்று நாம் நம்பிக்கையுடன் கூறலாம்.—GC 7. ★

# 3

# தேவனுடைய வார்த்தையினால் மட்டுமே கட்டப்படவேண்டியதின் அவசியம்

**பாரம்பரியம்**

ரோமன் கத்தோலிக்க சபை அதன் கோட்பாடுகளை அதிகமாகப் பாரம்பரியத்தின்மீது கட்டுகிறது. இந்த வார்த்தையை நாம் புரிந்துகொள்ளவேண்டியது அவசியம். அதற்கு மூன்று அர்த்தங்கள் உண்டு.

1. தலைமுறை தலைமுறையாக வழக்கத்திலிருக்கும், அநேகமாக வாய்மொழியாகப் பரவின பழைய கதைகள் அல்லது நம்பிக்கைகள். உதாரணம்: தங்களுடைய பேரரசன் சூரியனிலிருந்து கீழே இறங்கியிருந்தான் என்பது ஜப்பானியர்களின் பழைய **பாரம்பரிய** நம்பிக்கை.

2. பழைய சம்பிரதாயங்கள் வழக்கமாகச் செய்யப்பட்டிருந்த விதம். உதாரணம்: உணவு தயாரிக்கும் பாரம்பரியமுறை நாட்டுக்கு நாடு வேறுபட்டிருக்கிறது.

3. அநேக வருடங்களாக சம்பாதித்திருந்த பெயர் அல்லது புகழ். உதாரணம்: இந்தப் பள்ளியின் பாரம்பரியங்கள் மிகவும் நல்லவைகளாக உள்ளன. அதன்மீது அவமதிப்பைக் கொண்டுவருவதற்கு ஒருவரும் ஒன்றும் செய்யாதிருப்பார்களாக.

கீழேக் காணக்கூடிய விதத்தில் இந்த வார்த்தையை நல்லவிதமாக அடிக்கடி பயன்படுத்தப்படலாம். (2 தெச. 2:15; 3:6–ஐ கவனிக்கவும்).

அப்படியிருந்தபோதிலும், சபையைப்பற்றிய நம்பிக்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் வரும்போது, பாரம்பரியத்தின்மீது கட்டத்துணியாமல், தேவனுடைய வார்த்தையின்மீது மட்டுமே நாம் கட்டவேண்டும். வேதாகமத்தின்மேலன்றி பாரம்பரியத்தின்மீது கட்டுவோமானால், நாம் எளிதாக தெய்வீக சத்தியத்தைவிட்டு விலகிச்செல்ல நேரிடும்!

| | |
|---|---|
| **மத். 15:3** | "நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?" |
| **மத். 15:6** | "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனைகளை அவமாக்கிவருகிறீர்கள்." |
| **மத். 15:9** | "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனைசெய்கிறார்கள்." |
| **மாற்கு 7:9** | "நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது." |
| **மாற்கு 7:13** | "உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள்." |
| **கொலோ. 2:8** | "... ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரியம்." |

**தேவனுடைய வார்த்தையின்மீதுமட்டுமே நமது கோட்பாடுகள் கட்டப்படவேண்டும்.**

| | |
|---|---|
| **ஏசாயா 8:20** | "வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." |
| **லூக்கா 24:27** | சத்தியத்தைப் போதிக்க விரும்பியபோதெல்லாம் இயேசு வேத வாக்கியங்கள் அனைத்தையும் பயன்படுத்தினார்.(45–ம் வசனத்தையும் கவனியுங்கள்). |
| **அப். 17:11** | பெரோயா பட்டணத்து மக்கள் நாள்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், அவர்கள் அதிக நற்குணசாலி களாக இருந்தனர். |
| **2 தீமோ. 3:15–17** | "தேவனுடைய மனுஷனைத் தேறினவனா"யிருக்கும்படிச்செய்ய வேதவாக்கியங்கள் தகுதியுடையவைகளாயுள்ளன. (பூரணமாக இருப்பதைவிட மேலானது ஒன்றுமில்லை. நமக்காக இதைச் செய்வதற்கு வேதாகமம் வல்லமையுள்ளதாக இருக்கிறது). |

**உணர்வுகள்—உணர்த்துதல்கள்—அற்புதங்கள்!**

இன்று அநேக சபைகளும், சபை இயக்கங்களும் அவைகளுடைய நம்பிக்கையை உணர்வுகளின் தூண்டுதல்கள், உணர்ச்சிகள், உணர்த்து தல்கள், அற்புதங்கள், பாஷைகள், சுகப்படுத்துதல்கள் போன்றவை கள்மீது கட்டுகின்றனர். மக்களில் அநேகர் உண்மையாகவே கர்த்தரை

நேசிக்கின்றனர்; ஆனால், அவர்கள் அடையாளங்களையும் அற்புதங் களையும் சுகப்படுத்துதல் போன்றவைகளையும் பார்ப்பதினால், விரை வாகவும் எளிதாகவும் வஞ்சிக்கப்படக்கூடியவர்களாக உள்ளனர். பிசாசு, பெரியவஞ்சகன் என்பதை நாம் நினைக்கவேண்டும். அவனாலுங்கூட அற்புதங்கள் செய்யவும், அடையாளங்களையும் சுகப்படுத்துதல்களையும் கொடுக்கவும்முடியும். வாழ்க்கையில் காணக்கூடிய மாற்றங்களை அவனால் செய்யமுடியும். அவன் ஒளியின் தூதனைப்போல் காட்சி தருகிறான். அவனால் நடத்தப்படுகின்ற மக்கள் தங்களுடைய தீய பழக்கங்களை விட்டுவிடலாம்; சீர்திருந்தி மிகவும் அழகான கிறிஸ்தவர்களைப்போல் காணப்படலாம். ஆனால் அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவரை, பிசாசு அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை.

**மத். 7:21–23** ‘‘அநேகர் கர்த்தாவே, கர்த்தாவே’’ என்று கூறுவார்கள் என்பது வேதாகமத்திலுள்ள மிகத் துயரமான வார்த்தைகளாக உள்ளன. அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள்; பிசாசுகளைத் துரத்தி, அநேக ஆச்சரியமான செயல்களைச் செய்திருக் கிறார்கள். என்றாலும் அவர்கள் இழந்துபோனவர்களே! எனவே, நாம் கர்த்தருடைய நாமத்தை அநேக தடவைகள் திரும்பக் கூறுகிறோமா என்பதோ, தீர்க்கதரிசனம் உரைக்கிறோமா என்பதோ, அற்புதங்களைச் செய்கிறோமா என்பதோ, பிசாசுகளைத் துரத்துகிறோமா என்பதோ பரீட்சை அல்ல. மாறாக, உண்மையாகவே நமக்காக வேதாகமத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்தின்படி செயலாற்றுகின்றோமா என்பதுதான்.

| | |
|---|---|
| **நீதி. 14:12 16:25** | “மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.” |
| **மத். 12:39 16:4** | “இந்தப் பொல்லாத விபச்சாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்.’’ (கிறிஸ்தவர்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் பார்க்கிறவர்களாக இராமல், தேவன்மீது விசுவாசமுடையவர்களாக இருந்து, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிபவர்களாக இருக்கவேண்டும்). |
| **மத். 24:24** | பிசாசினாலுங்கூட பெரிய அடையாளங்களையும் அதிசயங்களையும் செய்யமுடியும். |
| **2 கொரி. 11:13–15** | சாத்தானால் “ஒளியின் தூதனுடைய” வேஷத்தைத் தரித்துக்கொள்ளமுடியும். அவனுடைய ஊழியக்காரர்கள் “நீதியின் ஊழியக்காரரைப்போல” வருகின்றனர். அவர்கள் |

நோயாளிகளைச் சுகப்படுத்தி, அற்புதங்களைச் செய்து, பிரசங்கஞ்செய்து, ஜெபஞ்செய்து உண்மையான நீதியின் ஊழியக்காரரைப்போல் காணப்படுவார்கள். அவர்கள் சரியான காரியங்களைச் செய்வார்கள்; அப்படியிருந்தாலும், அவர்கள் சாத்தானின் ஊழியக்காரர்களாகவே இருக்கின்றனர்.

**வெளி. 13:13,14** "பெரிய அற்புதங்களை நடப்பித்து ... பூமியின் குடிகளை மோசம்போக்கி"

**வெளி. 16:14** "அற்புதங்களைச் செய்யும் பிசாசின் ஆவிகள்."

**2 தெச. 2:8–11** "அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக…சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும், அற்புதங்களோடும் இருக்கும்"

## கிறிஸ்தவனுடைய ஒரே பாதுகாப்பு எது?

**ஏசாயா 8:20** "வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்க வேண்டும்"

**மத். 22:29** "நீங்கள் வேதவாக்கியங்களை அறியாமல், தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்."

**2 பேதுரு 1:19–21** "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு."

**எபி. 4:12** "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது."

"எவர்கள் வஞ்சிக்கப்படுவதற்கு விரும்புகிறார்களோ அவர்களை வஞ்சிப்பதற்கும், சத்தியம் அவசியப்படுத்தும் சுயமறுப்பையும் தியாகத்தையும் தவிர்க்க விரும்புகிறவர்களை வஞ்சிக்கவும், சத்தியத்தைப்போல நெருக்கமாகத் தோன்றக்கூடிய ஒரு போலியைச் சாத்தானால் கொடுக்கமுடியும்; ஆனால், என்ன விலை கொடுத்தும் சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு நேர்மையாக விரும்பும் ஓர் ஆத்துமாவை தன்னுடைய வல்லமையின்கீழ் நிறுத்திவைப்பது அவனால் முடியாததாக உள்ளது. கிறிஸ்துவின் அடியார்களுக்கு எதிராகச்

சாத்தானும் அவனுடைய சேனைகளும் அமைத்துக்கொண்டிருக்கும் திட்டங்களைப்பற்றி அவர்கள் அறிவதில்லை; ஆனால் வானங்களில் வீற்றிருக்கும் ஒருவர் அவருடைய ஆழமான நோக்கங்களை—நிறைவேற்ற இந்த உபாயங்களனைத்தையும் மேற்கொள்ளுவார்."—GC 528.

"இங்கு எந்தவிதமான வஞ்சக வேஷமும் முன்கூறப்படவில்லை. (சாத்தானின் ஏஜண்டுகளிடம், இல்லாததை இருப்பதுபோல காட்டுகின்றதாக இல்லாமல்), அவர்களுடைய வல்லமையினால் செய்யப்படும் அற்புதங்களினால் அவர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்."—GC 553.

"ஆனால் தேவனுடைய ஜனங்கள் தவறாக நடத்தப்படமாட்டார்கள். இந்தத் தவறான போதனைகள் வேதவாக்கியங்களுக்கு இசைவானதாக இல்லை."—GC 625.

"அவர்களைத் (மனிதர்களை) திருப்திப்படுத்துவதற்காகக் கிறிஸ்து அற்புதங்கள் எதுவும் செய்யவில்லை; வேதவாக்கியங்களை அவர்களுக்கு விளக்குவதே அவருடைய முதல் வேலையாக இருந்தது."—DA 799.

"அனுபவத்தின் பரீட்சையாக... பரிசுத்த வேத வாக்கியங்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதாக உள்ளது."—GC 7.

"ஒவ்வொரு எண்ணத்தையும் நிறுப்பவர்களாகவும் வேதவாக்கியத்துடன் வேதவாக்கியத்தை ஒப்பிட்டும், ஒவ்வொரு நாளும் நாம் வேத வாக்கியங்களை வாசிக்கவேண்டும்."—GC 508.

"தாக்குதலுக்கு எதிராகத் தங்களுடைய மனங்களை வேதாகமச் சத்தியங்களினால் பலப்படுத்திக்கொண்டிருப்பவர்களை அல்லாமல் மற்றவர்கள் பெரும் போராட்டத்திற்கூடாக நிற்கமாட்டார்கள்."—GC 593,594. ★

# 4

# தேவத்துவம்

## தேவனின் ஒருமைப்பாடு

| | |
|---|---|
| **உபா. 6:4; மாற்கு 12:29** | "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்." |
| **ஏசாயா 43:10** | "எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை." |
| **ஏசாயா 44:8** | "என்னைத்தவிரத் தேவனுண்டோ? வேறொரு கன்மலையும் இல்லையே; ஒருவனையும் அறியேன்." |
| **ஏசாயா 46:9** | "நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை." |

## தேவனுடைய தன்மை

**யோவான் 4:24** "தேவன் ஆவியாயிருக்கிறார்"

**குறிப்பு:**– எனவே, தேவன் உண்மையான ஒரு உருவம் இல்லாதவர் என அர்த்தப்படுவதில்லை. தேவன் உண்மையாகவே உருவமுடைய ஒருவராக இருக்கிறார். நாம் அவருடைய ரூபத்தின்படியே உண்டுபண்ணப் பட்டிருக்கிறோம் (ஆதி. 1:26). அவருடைய தன்மைகள் உண்மையானவைகள் (யாத். 34:6,7). தேவன் ஆவியாயிருக்கிறார் எனக்கூறும்போது, அவர் பரிசுத்தம், தூய்மை, அன்பு, மன்னிக்கும் தன்மை ஆகியவைகளையுடைய ஓர் ஆவிக்குரியவராக இருக்கிறார் எனப் பொருள்படுகிறது. அதன் பொருள் – தேவன் மனிதனைவிடப் பெரியவராக இருக்கிறார் என்பதே. அவர் சர்வ ஞானமும், சர்வ வல்லமையும் கொண்ட, எல்லாவற்றையும் அறிபவராக, நித்தியமானவராக இருக்கிறார். நாம் இருப்பதைவிடவும் மேலான ஓர் உயர்ந்த நிலையில் அவர் வாழ்கிறார்.

## தேவனுடைய நித்தியத்துவம்

**சங். 90:2** "நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்."
**யோவான் 5:26** "தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறார்."
**1 தீமோ. 1:17** "நித்தியமும் அழிவில்லாமையும்" உடையவர்.

## தேவனுடைய குணம்

**யாத். 34:6,7** "இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்.... மன்னிக்கிறவர்."
**உபா. 32:3,4** "அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்"
**மீகா 7:18** "அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற" தேவன்.
**யோவான் 3:16** "இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (1 கொரி. 5:19 காண்க.)
**1 யோவான் 4:8** " தேவன் அன்பாகவே இருக்கிறார்."
**ஏசாயா 57:15** "நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்."

## சிருஷ்டிகராகிய தேவன்

**ஆதி. 1:1** "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."
**சங். 33:6,9** "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், ... அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது."
**எரேமியா 10:12** "அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கினார்."
**எபே. 3:11** "இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே..."

## தேவனும் விக்கிரகங்களும்

**யாத். 20:4–6** "யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்;"
**ஏசாயா 4:8,9** "விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர்;"

| | |
|---|---|
| **சங். 97:7** | "சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றிப் பெருமைபாராட்டுகிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக;" |
| **சங். 115:4–8** | "அவைகளுக்கு (விக்கிரகங்களுக்கு) வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது." |
| **ஏசாயா 46:5–9** | " நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை." |
| **எரே. 10:2–6** | "புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்;" |
| **1 யோவான் 5:21** | "விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக." |
| **வெளி. 21:8** | "விக்கிரகாராதனைக்காரரும், ... இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்." |

"அவருடைய நாமம் பரிசுத்தமும் பயபக்திக்குரியதாகவும் இருக்கிறதென்று சங்கீதக்காரன் அறிவிக்கிறான். அந்த நாமத்தைப் பற்றி தேவதூதர்கள் பேசும்போது, தங்களுடைய முகத்தை மறைத்துக் கொள்ளுகின்றனர். அப்படியிருக்கும்போது, விழுந்துபோனவர்களும் பாவமுள்ளவர்களுமாக இருக்கின்ற நாம், எப்படிப்பட்ட பயபக்தியுடன் அதனை நமது உதடுகளில் உச்சரிக்கவேண்டும்!" – **PK 49**.

"நம்முடைய உலகத்தைப் படைப்பதற்கு முன்பிருந்த பொருட்களுக்குக் கடனாளியாக தேவன் இருக்கவில்லை; அதற்குமாறாக, பொருட்களைச் சார்ந்தவைகளானாலும் ஆவிக்குரியவைகளானாலும் கர்த்தராகிய யேகோவாவின் வார்த்தைக்குமுன்பாக எழுந்து நின்றதுடன், நாம் அவருடைய சொந்த நோக்கத்திற்கென்று படைக்கப்பட்டிருந்தோம். வானங்களும் அவைகளின் சேனைகள் அனைத்தும் பூமியும் அதிலுள்ளவைகள் அனைத்தும் அவரது கரத்தினால் மட்டுமிராமல், அவருடைய வாயின் சுவாசத்தினாலும் உண்டாயின." – **8T 258,259.** ★

# 5

# சிருஷ்டிகராகிய தேவன்

### தேவன் எல்லாவற்றையும் படைத்தவர் என வேதாகமம் போதிக்கிறது

**ஆதி. 1:1** "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."

**ஆதி. 1:21** "தேவன் சிருஷ்டித்தார்."

**ஆதி. 1:27** "தேவன் மனிதனைச் சிருஷ்டித்தார்."

**ஆதி. 2:4** "தேவனாகிய கர்த்தர் பூமியையும் ஆகாயத்தையும் உண்டாக்கினார்."

**சங். 102:25** "வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது."

**சங். 121:2** "வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணிய கர்த்தர் ..."

**ஏசா. 45:12** "நான் பூமியை உண்டுபண்ணி, நானே அதின் மேலிருக்கிற மனுஷரைச் சிருஷ்டித்தேன். என் கரங்கள் வானங்களை விரித்தன; அவைகளின் சர்வசேனைகளையும் நான் கட்டளையிட்டேன்."

### மனிதன் சிருஷ்டிக்கப்படல்

**ஆதி. 1:26,27** "தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார்" ( t r d k–27). தமது "சாயலாகவும்" தமது ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்கினார் (வசனம்–26).

**ஆதி. 1:26–28** தேவன் சகல ஜீவஜந்துக்களின்மீதுள்ள ஆளுகை யையும் அதிகாரத்தையும் மனிதனுக்குக் கொடுத்தார்.

**ஆதி.. 2:7** பூமியின் தூளிலிருந்து மனிதன் உண்டாக்கப்பட்டான். ஜீவ சுவாசம் அவனுடைய நாசியிலே ஊதப்பட்டபோது, "மனிதன் ஜீவாத்துமா வானான்". அதுதான் முழுநிறைவையும் உடைய ஒரு ஜீவனானது; அதாவது அசையவும் சிந்திக்கவும் நேசிக்கவும் தேவனை ஆராதிக்கவும் துதிக்கவுங்கூடிய ஒரு ஜீவனானது. (R.S.V; AMPLIFIED; N.E.B; LIVING BIBLE- இந்த வேதாகமங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்).

**சங். 8:5** மனிதன் தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாகப் படைக்கப் பட்டான். (அவன் ஆதியில் ஒரு குரங்கிலிருந்தோ அமீபாவினாலோ உண்டுபண்ணப்படாமல், தேவதூதர்களுக்கு சற்று குறைவான மகிமை, கனம், ஞானம் ஆகியவைகளுடன் உண்டுபண்ணப்பட்டான். "மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டான்.")

**சங். 139:14** "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள்."

**பிர. 7:29** "தேவன் மனிதனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்."

**லூக்கா 3:38** மனிதனுடைய வம்சாவழி (பழைய காலத்திலுள்ள குடும்பத்தொடர்கள்) கீழ்த்தரமான விலங்குகளை நோக்கிச் செல்லாமல், தேவனுடைய குமாரனாக இருந்த ஆதாமைநோக்கிப் பின்செல்லுகிறது."

**குறிப்பு:** ஆதியில் ஆதாமும் ஏவாளும் ஞானத்திற்கு ஆதாரமானவராக இருக்கும் தேவனுடன் நேரடியான தொடர்பை உடையவர்களாக இருந்தனர். ஆரம்பகால மனிதர்கள், கட்டடக் கலை (**ஆதி. 4:17**), ஆடு வளர்த்தல் (**4:20**), இசை (**4:21**), உலோகங்கள் (**4:22**) ஆகியவைகளைப் பற்றிய அறிவை உடையவர்களாக இருந்தனர்.

கீழான எல்லாப் பிராணிகளுக்கும் மேலாகத் தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரீடம்போன்ற செயலாக இருந்த மனிதனை, தம்முடைய எண்ணத்தை வெளிப்படுத்திக்காட்டவும் தம்முடைய மகிமையை வெளிப்படுத்திக்காட்டவும் வடிவமைத்தார்.—**MH 415.**

## தேவன் சிருஷ்டிகர் என்னும் பதவியினால் தம்மைச் சிறப்பாக வேறுபடுத்திக்காட்டுகிறார்.

(மற்றனைத்தையும்விட அவர் மாறுபட்டவராகவும் மேலானவராகவும் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறார்)

**யோபு 38:4–11** "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்?... விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே... சமுத்திரம் புரண்டு வந்தபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்? இம்மட்டும் வா, மிஞ்சி வராதே … என்றவர் யார்?"

**ஏசாயா 40:26** "உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத் திட்டமாய்ப் புறப்படப்பண்ணி, … அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது."

**ஏசாயா 42:5** "வானங்களைச் சிருஷ்டித்து, அவைகளை விரித்து, … கர்த்தராகிய தேவன் சொல்லுகிறதாவது."

**ஏசாயா 44:24** "நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்…"

**ஏசாயா 45:18** "வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையா யிருக்கச் சிருஷ்டியாமல், அதை குடியிருப்புக்காகச் செய்து படைத்து, … நானே கர்த்தர், வேறொருவர் இல்லை."

**எரேமியா 10:11,12** "வானத்தையும், பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள் … அழிந்துபோகும்; (கர்த்தரோ மெய்யான தெய்வம். 10 - ம் t r d k). அவர் பூமியை உண்டுபண்ணினார்."

**ஆமோஸ் 4:13** "அவர் பர்வதங்களை உருவாக்கினவரும் காற்றை சிருஷ்டித்தவரும் (அவரே) … சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவருடைய நாமம்."

**வெளி. 4:11** "கர்த்தாவே, தேவரீர் மகிமையையும் கனத்தையும் வல்லமையையும்பெற்றுக்கொள்கிறதற்குப்பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்."

### தேவன் உலகத்தைப் படைத்தவிதம்

**ஆதி. 1:3** "தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று."

**ஆதி. 1:6,7, 9,24,29,30** "தேவன் சொன்னார் … அது அப்படியே ஆயிற்று."

**சங். 33:6** "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்கள் உண்டாக்கப் பட்டது."

**சங். 33:9** "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்"

**சங். 148:5** "அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டன".

**எபி. 11:3** "உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப் பட்டன."

**குறிப்பு:-**மேலே உள்ள வசனங்களிலிருந்து, தேவன் அவருடைய வார்த்தையின் வல்லமையினால் சாதாரணமாக உலகத்தைப் படைத்தார் என்பதை நாம் அறிகிறோம்; அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

கிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்த தேவனுடைய வார்த்தையின் வல்லமையைக் கவனியுங்கள்!

**1**. கிறிஸ்துவின் வார்த்தையின்படி, சூம்பின கையை உடைய மனிதன் கையை நீட்டினான். அது மறு கையைப் போலாயிற்று (மத். 12:13).

**2**. கிறிஸ்துவின் வார்த்தையினால், அத்திமரம் உடனே பட்டுப் போயிற்று (மத். 21:19).

**3**. கிறிஸ்துவின் வார்த்தையினால், திமிர்வாதக்காரன் எழுந்து நடந்தான். (லூக்கா 5:24,25).

**4.** கிறிஸ்துவின் வார்த்தையினால், நாயீன் ஊர் விதவையின் மரித்துப் போன மகன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான் (லூக்கா 7:14,15**)**.

**5**. கிறிஸ்துவின் வார்த்தையினால், காற்றும் ஜலத்தின் கொந்தளிப்பும் உடனே நின்றுபோய், அமைதலுண்டாயிற்று (லூக்கா 8:24**)**.

**6**. கிறிஸ்துவின் வார்த்தையினால், பெதஸ்தா என்னும் குளத்தருகில் முப்பத்தெட்டு வருஷம் வியாதிகொண்டிருந்த மனிதன் சொஸ்தமாக்கப்பட்டான். யோவான் 5:1-8**.**

**7.** யோவான் 11:43,44. இயேசுவின் வார்த்தையினால் லாசரு மீண்டும் உயிரடைந்தான்.

**தேவன் ஏற்கனவே இருந்த பொருளை சார்ந்தவரல்ல**

**எபி. 11:3**(பின்பகுதி) "காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்."

"உலகமும் விண்மீன்களும் உண்மையில் எல்லாப் பொருள்களும் - அவருடைய கட்டளையால் உண்டாக்கப்பட்டன என்பதையும், அவைகள் ஒன்றும் இல்லாமையிலிருந்து உண்டாக்கப்பட்டன என்றும் நாம் அறிகிறோம்."—**The Living New Testament; 1967 Edition.**

"காணக்கூடாதவைகளில் இருந்து காணக்கூடியவைகள் வந்தன." —**New English Bible.**

இப்பொழுதுள்ள பொருளில் இருந்து பரிணமிக்கவில்லை.—**Norile.**

"நம்முடைய உலகத்தைப் படைக்கும்போது தேவன் ஏற்கனவே

இருந்த பொருட்களைச் சார்ந்திருக்கவில்லை;"—8T 258.

**தேவனுடைய வார்த்தை அவர் படைத்த எல்லாப் பொருள்களையும் தாங்குகிறது**

**யோபு 26:7** "அவர் ... பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்."

**எபி. 1:3** "சர்வத்தையும் தம்முடைய வல்லைமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராயிருக்கிறார்."

**அப். 17:28** "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்."

**கொலோ. 1:17** "எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது."

**எல்லாவற்றையும் படைத்ததில் இயேசு தீவிரமான முகவராக இருந்தார்**

**யோவான் 1:3** "சகலமும் அவர் (இயேசு) மூலமாய் உண்டாயிற்று."

**யோவான் 1:10** "உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று."

**எபே. 3:11** "இயேசு கிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன் ..."

**கொலோ. 1:16,17** "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது."

**எபி. 1:2** "குமாரன் முலமாய் ... இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்."

**எபி. 1:10** "கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது." (இயேசுவைப்பற்றின சங். 102:25-27-ன் மேற்கோள் இது).

**இந்த உலகத்தின் படைப்பு**

**ஆதி. 1:1,2** இந்த வசனங்களை வாசிப்பதில் கடந்த காலத்தில் அறியப்படாத ஒரு கட்டத்தில், இந்த உலகம் ஒரு திடப் பொருளாக—சரியான உருவமற்ற—ஒளியில்லாத—தண்ணீர் கிரகமாக இருந்திருக்கலாமென்றும், அது அதேவிதமாக எண்ணிமுடியாத யுகங்களாக அப்படியேதான் இருந்திருக்கக்கூடுமென்றும் சிலர் யோசிக்கிறார்கள்.

அதற்குப்பின் (3-ம் t r d k) தேவன் வந்து அதன்மீது ஒளியை உண்டுபண்ணினாரென்றும், இதுதான் தேவன் இந்த உலகத்தை

உருவப்படுத்தி, குடியிருக்கத் தகுந்ததாகப் படைத்த—மனிதன் வாழ்வதற்குப் பொருத்தமானதாகச் செய்த ஏழுநாட்களின் முதல்நாள் என்கிறார்கள்.

மற்றவர்கள் இப்பூமியின்மீது வெளிச்சம் உண்டாக்கப்பட்ட அதே நாளில் முதல்நாளிலேயே, ஒழுங்கான உருவமற்ற, நீர்நிறைந்த, இருண்ட திடப்பொருளான இந்த பூமி உருவாக்கப்பட்டது என்கிறார்கள். இந்தக் கருத்து **யாத். 20:8-11** உடன் நல்லவிதமாக ஒத்துப்போகிறதாகத் தோன்றுகிறது.

வேதாகமத்தின்படி, இந்தத் திடப் பொருளை எல்லாவிதமான உயிரினங்களையும் தாங்கக்கூடிய, அழகும் கிரமமுமுள்ள ஒரு கிரகமாக ஏழுநாட்களில் உண்டுபண்ணினார் என்பது தெளிவாகின்றது. முதல் மனிதனும் மனுஷியும் இதன்மீது வாழவும் ஆளுகைசெய்யவும்கூடிய ஓர் ஆச்சரியமான வீடாக இதை உருவாக்கினார்.

### படைப்பில் உள்ள நாட்களின் கிரமம்

| | |
|---|---|
| **முதல் நாள் (ஆதி. 1:1-5)** | மிக உத்தேசமாக இந்த நாளில், இந்த உலகமாகிய திடப் பொருள் படைக்கப்பட்டு, முழுவதும் தண்ணீராலும் இருளாலும் மூடப்பட்டிருந்தது. ஒளி படைக்கப்பட்டு, ஒளியையும் இருளையும் பிரித்தது— பகலாகவும் இரவாகவும் ஆனது. |
| **2 - வது நாள் (ஆதி. 1:6-8)** | மேகங்களும் தண்ணீரும் வானம் என்று அழைக்கப் பட்ட ஒரு வெட்டவெளியாக பூமிக்குமேல் படைக்கப் பட்டது; இங்கு பறவைகளாலும் பூச்சிகளாலும் பறக்கமுடியும். இதை வேதாகமம் முதலாம் வானம் என்றும் சூரியன், சந்திரன், விண்மீன்களை உள்ளடக்கியது இரண்டாவது வானம் என்றும் அழைக்கிறது. மூன்றாம் வானம், பரதீசு என்று சொல்லப்படும் தேவனுடைய வீடு. |
| **3-வது நாள் (ஆதி. 1:9-13)** | வெட்டாந்தரை காணப்படும்படி, சமுத்திரத்திலிருந்து பூமி பிரிக்கப்படுகிறது. தாவரப் பொருள்களும் படைக்கப்படுகின்றன. |
| **4 - வது நாள் (ஆதி. 1:14-19)** | சூரியன், சந்திரன், விண்மீன்களாகிய வானராசிகள் படைக்கப்பட்டன. |
| **5 - வது நாள் (ஆதி. 1:20-23)** | நீர்வாழ் உயிரினங்கள் படைக்கப்பட்டன; பறவை யினங்களும் படைக்கப்பட்டன. |

| | |
|---|---|
| **6 - வது நாள் (ஆதி. 1:24- 31)** | (பூமியின்மீது நடமாடுகின்ற ஜீவன்கள் அனைத்தும்) விலங்கினங்கள் படைக்கப்பட்டன. தேவனுடைய சுய ரூபத்தின்படி மனிதன் படைக்கப்பட்டு, பூமியின்மீதும் அதன்மீதுள்ள உயிரினங்கள் அனைத்தின்மீதுமான ஆளுகையும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. |
| **7 - வது நாள் (1:ஆதி.. 2:1-3)** | ஒரு பரிசுத்தமான நோக்கத்திற்காக இந்த நாள் பரிசுத்தமானதாக்கப்பட்டு அல்லது வேறாகப் பிரித்துவைக்கப்பட்டு ஆதாமுக்கும் ஏவாளுக்கும், அவர்களைப் பின்தொடர்ந்த மனித இனம் முழுவதற்கும் ஓர் இளைப்பாறும் நாளாகவும் ஆராதனை செய்யும் நாளாகவும் சிருஷ்டிகராகிய தேவனுடைய சிருஷ்டிப்பின் ஞாபகச் சின்னமாகவும் உண்டாக்கப்பட்டது. |

## சிருஷ்டிப்பின் நாட்கள் எழுத்தின்படியானவைகளா அல்லது அடையாளமானவைகளா?

**எழுத்தின்படியானது** என்றால், அந்தக் காரியம் கூறப்படுகின்ற அதேவிதமாக மிகச் சரியானவிதமாக இருக்கிறது என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம்; அதாவது, முதல் அர்த்தம் — வழக்கமான சரியான அர்த்தம்.

**அடையாளமானது** என்றால், அந்தக் காரியம் இரண்டாவது ஓர் அர்த்தத்தின்படியான ஒரு காரியம் என்று நாம் புரிந்துகொள்ளுகிறோம்; அதாவது, அது அப்படியே இல்லாமல்—முதலாவது அர்த்தத்தை உடையதாக இல்லாமல் இரண்டாம் அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது.

ஆதி. 1:5-ல் உள்ள "நாள்" என்னும் சொல் (எபிரெயச் சொல் "யாம்") **எழுத்தின்படியானது** என்று சிலர் கூறுகின்றனர். அதாவது, அது அர்த்தம் உள்ளதாக இருக்கிறது. பகலையும் இரவையும் உள்ளடக்கிய, **24** மணி நேரம் என்று இப்போது நாம் புரிந்து கொள்ளுவதைப்போல இருக்கிறது. இது, முதலாவது அர்த்தம்.

மற்றவர்கள், ஆதி. 1:1-ல் உள்ள நாள் என்னும் சொல் உண்மையாகவே ஒரு நீண்டகாலம்; அநேகமாக இலட்சக்கணக்கான வருடங்கள் என்று பொருள்படுகிறது என்று கூறுகின்றனர்; இதைக் கூறுகின்ற ஜனங்கள் உண்மையாகவே வேதாகமத்தைப் பரிணாம வாதத்தடன் ஒத்துப்போகச்செய்யும்படி முயன்றுகொண்டிருக்கின்றனர்.

வேதாகமத்தின் “நாள்” என்னும் சொல், ஆங்கிலத்திலும் மற்ற அநேக மொழிகளிலும் உள்ளதுபோல, சில சமயங்களில். “ஒரு குறிப்பிட்ட நேரத்தைக்” குறிப்பிடலாம் என்பது உண்மைதான்; அப்படியிருந்த போதிலும், ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரம் ஒன்றாம் வசனத்தில் உள்ள “நாள்” என்பது இந்த அர்த்தத்தைக் கொடுக்க முடியாததாக உள்ளது.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள முக்கியமான கருத்துக்களைக் கருத்தாகக் கவனியுங்கள்:**

**1**. வேதாகமத்தில் ஓர் எண்ணுடன் சேர்த்து நாள் என்னும் சொல் பயன்படும்போது, அது எப்பொழுதும் இருபத்துநான்கு மணி நேரத்தை உடைய ஒரு நாளையே குறிக்கிறது. இதற்கு எந்தவிதமான தவிர்ப்புகளும் இல்லை. இவ்வாறாக ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் உள்ள “முதலாம்” நாள், “இரண்டாம்” நாள், “மூன்றாம்” நாள் மற்றுமுள்ளவைகளை வாசிக்கும்போது, அது இருபத்துநான்கு மணிநேரமுள்ள ஒரு எழுத்தின்படியான நாளைமட்டுமே குறிக்கக்கூடும்.

**2**. ஒவ்வொரு நாளையும் “சாயங்காலமும் விடியற்காலமுமாகி” என்று விவரித்திருப்பதால், மோசே இங்கு ஒரு சாதாரணமான நாளைத்தான் குறிப்பிடுகிறான்.

**3**. **யாத். 20:8-11** எழுத்தின்படியான இருபத்துநான்கு மணி நேரத்தையுடைய ஏழாம் நாளான ஓய்வுநாள், சிருஷ்டிப்பின் ஆறு நாட்களின் நினைவுச் சின்னமாக இருப்பதை விவரிக்கிறது. இந்த ஓய்வுநாள் கட்டளையானது முன்னால் உள்ள படைப்பின் ஆறு நாட்களைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் வேறு எந்தவிதமாகவும் புரிந்துகொள்ளமுடியாததாக உள்ளன. இஸ்ரவேல் ஜனங்கள் அதை இந்த ஒரேவிதமாக மட்டும்தான் புரிந்துகொண்டிருப்பார்கள். தேவன் அவர்களை வஞ்சித்திருக்கமாட்டார்.

**4**. தேவன் பேசினவுடனே, பொருள்கள் உண்டாகி வந்ததைப்போல, சிருஷ்டிப்பு என்பது உடனடியாக நடந்த ஒரு செயல் என்று வேதாகமம் கூறுகிறது. காலத்தின் நீண்ட பகுதிகள் ஒருபோதும் குறிப்பிடப்படவில்லை.

**சங். 33:9** “அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.”

**சங். 148:5** “அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது”.

**ஆதி. 1:3,6,7,9,24,29,31** “தேவன் சொன்னார்; அது அப்படியே ஆயிற்று”

இந்த வசனங்களினால், படைப்பு என்பது தேவனுடைய வார்த்தை

யினால் மட்டுமே நிகழ்ந்த, ஒரு உடனடியான செயல் என்று வேதாகமம் போதிக்கிறது.

**5.** ஆதாம் ஆறாவது நாளில் படைக்கப்பட்டான். படைப்பின் ஒவ்வொரு நாளும் இலட்சக்கணக்கான வருடங்களைக் கொண்டிருந்தால், படைப்பின் வாரத்தின் முடிவின்போது ஆதாம் அதிக வயதை உடையவனாக இருந்திருப்பான்; ஆனால், ஆதாம் உயிர் வாழ்ந்த மொத்த வருடம் **930** வருடங்கள்மட்டுமே என்று **ஆதி. 5:5**-கூறுகிறது. சிருஷ்டிப்பின் வாரத்திற்கு அநேக வருடங்கள் கழித்துப் பிறந்த மக்ககளின் வயதைவிடவும் குறைவான வருடங்களே அவன் உயிர்வாழ்ந்தான். எனவே படைப்பின் வாரம் சாதாரணமான எழுத்தின்படியான வாரமே என்பதை இது காட்டுகிறது.

**6.** சிருஷ்டிப்பின் ஒவ்வொரு நாளிலும் இருளான பகுதியும் ஒளியான பகுதியுமான "சாயங்காலமும் விடியற்காலமும்" இருந்திருக்கிறது என்பது அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்போது பல்வேறுபட்ட விஞ்ஞானிகள் கூறுவதுபோல், ஒவ்வொரு நாளும் இருபது முதல் நூறு மில்லியன் வருடங்களை உடையதாக இருந்திருந்தால், மூன்றாவது நாளில் படைக்கப் பட்ட தாவரங்கள் ஒளியின் பகுதிக்கு முன்பாகப் பத்துலட்சம் இருண்ட வருடங்களைக் கொண்டிருந்திருக்கும். தேவனுடைய அற்புதத்தினால் காக்கப்பட்டிருந்தாலொழிய அவைகள் உயிர்வாழ்வது கூடாததாகியிருந் திருக்கும். அப்படியேயானாலும், இப்படிப்பட்ட திறமை யில்லாத விதத்தை தேவன் தெரிந்துகொண்டிருக்கமாட்டார் என்றே தோன்றுகிறது. ஆதி. **1:1**-ல் உள்ள வார்த்தைகள் முழுவதும் அதற்கு எதிரானதாக இருக்கிறது.

மூன்றாவது நாளில், தாவரங்கள் படைக்கப்பட்டன என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. அநேக தாவரங்கள் இனப் பெருக்கம் செய்யவும் உயிர்வாழவும் பூச்சியினங்களைச் சார்ந்து இருக்கின்றன. இலட்சக்கணக்கான வருடங்களுக்குப்பிறகு, "ஐந்தாவது நாளில்" அப்படிப்பட்ட பூச்சியினங்கள் தோன்றியிருந்தால், தாவர ஜீவன்கள் உயிர்வாழ்ந்திருக்கமுடியாது.

இவ்வாறாக, ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரம் கூறுகின்ற "நாட்கள்" ஒவ்வொன்றும் நீண்டகால அளவை குறிக்கின்றன என்பது ஏற்க முடியாததாக இருக்கிறது. "யாம்" (நாள்) என்பதன் "AEON" இயோன் (நீண்டகாலம்) என்னும் விளக்கம், விஞ்ஞானத்தையும் வெளிப்படுத்தலையும் இணைக்கின்றவர்களுக்குப் பிடித்தமான ஆதாரமாக இருந்தபோதிலும், அந்த வாசகத்தின் வெளிப்படையான அர்த்தத்தை எதிர்ப்பதாக இருந்து, எபிரெய மொழியின் அழைப்பாக இல்லாமல் இருக்கிறது.— **INTERNATIONAL CRITICAL COMMENTARY VOLUME 1 BY JOHN SKINNER. PAGE**

**ஓய்வுநாள்—சிருஷ்டிப்பின் ஞாபகச் சின்னம்**

**ஆதி. 2:1-3** "(தேவன்) ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."

**யாத். 20:8-11** "ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக, … ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."

**யாத். 31:17** "ஆறுநாட்களுக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார்."

**எபி. 4:4** "தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் என்று ஏழாம் நாளைக்குறித்து ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்." தேவன் தம்முடைய அவருடைய கிரியைகளெல்லா வற்றிலிருந்தும் ஓய்ந்திருந்த நாளை—ஏழாம் நாளை படைப்பின் நினைவுச் சின்னம் என்று புதிய ஏற்பாடு அங்கீகரிக்கிறது (இனம் கண்டிருக்கிறது).

**வெளி. 1:10** "நான் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்." வேதாகமத்தில் ஓய்வுநாள் "கர்த்தருடையநாள்" என்றும் அழைக்கப்பட்டிருக் கிறது; ஏனெனில், அந்த நாள், எல்லாவற்றிற்கும் கர்த்தரே சிருஷ்டிகர் என்னும் நமது கர்த்தருடைய அடையாளமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில், கர்த்தருடைய நாள் ஓய்வுநாள்தான் என்பதை **மத். 12:8, மாற்கு 2:28, லூக்கா 6:5** trd';fs் காட்டுகின்றன. **("ஏழாம் நாளோ கர்த்தருடைய ஓய்வுநாள்").**

**மனிதனின் (மத) மாற்றத்திலுள்ள**
**தேவனுடைய படைக்கும் வல்லமை**

**ஏசா. 43:1** "உன்னைச் சிருஷ்டித்த கர்த்தர் சொல்லுகிறதாவது: உன்னை மீட்டுக்கொண்டேன்."

**எசே. 36:25-27** "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிடுவேன்."

**யோவான் 3:3** நாம் "மறுபடியும் பிறக்கவேண்டும்." (இதற்கு நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய படைக்கும் வல்லமை அவசியமாயிருக்கிறது. தேவனுடைய வல்லமைக்குக் குறைவான எதுவும் நம்மை மாற்றாது).

**2 கொரி. 5:17** "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாய் இருக்கிறான்."

**எபே. 2:10** "நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்;..."

**எசே. 20:12,20** நமது வாழ்க்கையில் நம்மைப் பரிசுத்தப்படுத்துகின்ற தேவனுடைய வல்லமையின் அடையாளமாக ஓய்வுநாள் இருக்கிறது; ஆகையால், நமக்குள் ஒரு புதிய மனதையும் புதிய இருதயத்தையும் அவரால் சிருஷ்டிக்கமுடியும்.

## தேவனுடைய படைக்கும் வல்லமை
## புதிய வானங்களையும் புதிய பூமியையும் உண்டுபண்ணும்

**ஏசா. 65:17** "இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்."

**ஏசா. 66:22** "நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும்..."

**2 பேதுரு 3:13** "அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்."

**வெளி. 21:1** "நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்".

**வெளி. 21:5** "நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்."

"இந்த உலகத்தை அமைப்பதில், தேவன் முன்னிருந்த பொருளுக்கு கடனாளியாக இருக்கவில்லை; (அதற்குமாறாக, சடப்பொருளாலும் ஆவிக்குரிய பொருளாலும் அனைத்துப் பொருட்களும் யேகோவாவின் குரலில், அவருக்கு முன்பாக நின்றன.) அவை அவரது நோக்கத்திற்கென்று படைக்கப்பட்டன. வானங்களும் அவைகளிலுள்ள சர்வ சேனைகளும், பூமியும் அதிலுள்ள அனைத்தும் அவரது கரத்தின் கிரியையாகமட்டுமிராமல், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவை யாவும் உண்டாயின."— **8T 258,259.**

"ஆதாம் தன்னுடைய சிருஷ்டிகருடைய கரத்திலிருந்து வந்த போது, மேன்மைமிக்க உயரத்தையும், அழகிய உருவத்தையும் உடைய வனாயிருந்தான். இப்போது பூமியில் வாழுகிற மனிதர்களைவிட அவன் இரண்டு மடங்கிற்குமேல் உயரமுடையவனாக இருந்து, சரியான வடிவமைப்பு உடையவனாகவும் இருந்தான். அவனது அங்கங்கள் பூரணமாகவும் அழகானவைகளாகவும் இருந்தன. அவனது நிறம் வெள்ளை

யாகவோ நோய்வாய்ப்பட்டு வெளிறினதாகவோ இல்லாமல், உடல் நலமும் புத்துணர்ச்சியுமிக்க அழகிய சிவப்பு நிறமாக இருந்தது. ஏவாள் ஆதாமைப்போன்று அதே உயரத்தில் இருக்கவில்லை. அவளுடைய தலை ஆதாமின் தோளுக்கும் சற்றுமேலாக உயர்ந்திருந்தது; அவளும் மிகவும் மேன்மையானவளாகவும் பூரணமான வடிவமுடையவளாகவும் மிக அழகானவளாகவுமிருந்தாள்."—SR 21. ★

# 6

# திரித்துவம்

திரித்துவம் என்னும் சொல் Xரு முக்கியமான வேதாகமச் சத்தியத்தை விவரிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு சொல்லாக இருக்கிறது.

தேவன் ஒருவர்மட்டுமே இருக்கின்றபோதிலும், இந்தத் தேவத்துவத்தை நிறைவடையச் செய்கிறவர்களாக மூவர் இருக்கின்றனர். வேதாகமத்தில் "திரித்துவம்" என்னும் சொல் இல்லாமலிருந்தாலும், "தேவத்துவம்" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (**அப். 17:29; ரோமர் 1:20; கொலோ. 2:9**). இந்த மூன்று தெய்வீக நபர்களில் ஒவ்வொருவரும் தனிப்பட்டவர்களாக உள்ளனர். கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது, அவர்களுடைய தனிப்பட்ட தன்மை காணப்படுகிறது (**மத். 3:16,17**). ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் ஒன்றுசேர்ந்து தேவனாக இருக்கின்றனர் என்று வேதாகமம் போதிக்கிறது; ஆகவே அவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரே தேவத்துவமாகின்றனர் என்று நாம் பேசுகிறோம்; வேதாகமும் பேசுகிறது. அவர்கள் சிந்தையிலும் செயலிலும் திட்டமிடுதலிலும் இயற்கையிலும் வல்லமையிலும் பரிசுத்தத்திலும் அன்பிலும் சித்தத்திலும் நித்தியத்திலும் தேவத்துவத்திலும் ஒரேவிதமானவர்களாக (ஒருவராக) உள்ளனர். ஒருவர் நினைப்பதுபோலவே, மற்றவர்களும் நினைக்கின்றனர்; ஒருவர் திட்டமிடுவதைப்போலவே மற்றவர்களும் திட்டமிடுகின்றனர்; எல்லாவற்றிலுமுள்ள இவ்விதமான, ஒரேவிதமான தெய்வீகத் தன்மையின் காரணமாக, இசைவினிமித்தமாக வேதாகமம் ஒரே தேவனைப்பற்றிப் பேசுகிறது.

தேவத்துவத்தின் இந்த ஒருமைப்பாட்டையும், எண்ணத்தின் பிணைப்பையும், ஒரே தேவத் தன்மையில் பங்குபெறுவதையும், விழுந்துபோன பிரிக்கப்பட்டுள்ள வெறுப்பால் நிறைந்துள்ள உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நம்மால் முழுமையாக புரிந்துகொள்ளுவது முடியாது; அப்படியிருந்தபோதிலும், வேதாகமம் இதைப் போதிப்பதினால், விசுவாசத்தினால் நாம் இந்தச் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுகிறோம். ஒரே நிகழ்ச்சிநிரலைக் கொடுக்கும்படி மூன்று வானொலி நிலையங்கள் ஒன்றாக

இணைக்கப்படுவது, ஒரே மின்சார ஓட்டத்தினால் மூன்று வேறுவிதமான மின்சார பல்புகள் ஒன்றாக எரிந்து ஒன்றாக அணைவது, மூன்று நபர்கள் கொண்ட ஒரே குழு, தகப்பன், தாய், பிள்ளை என்று ஒரு குடும்பத்தில் மூன்று நபர்கள் இருந்தாலும் ஒரே குடும்பம் என்றழைக்கப்படுவதுபோன்ற சித்திரவிளக்கங்களைக் கொடுக்க சிலர் முற்படுகின்றனர்.

## புதிய ஏற்பாட்டில் திரித்துவம்

**மத். 3:16,17** இயேசு ஞானஸ்நானம் பெற்றார். ஒரு புறாவின் வடிவத்தில் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். வானத்திலிருந்து பிதாவின் குரல் கேட்கப்பட்டது.

**மத். 28:19** “பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்து” (மூவர்).

**யோவான் 14:2,6** “நான் பிதாவை வேண்டிக்கொள்வேன். பரிசுத்த ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை ...” (மூவர்).

**அப். 2:32,33** “இந்த இயேசுவை தேவன் எழுப்பி, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப் பெற்று...” (மூவர்)

**2 கொரி. 13:14** “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், ...”

## தேவத்துவத்திலுள்ள ஒருமைப்பாடு

**யோவான் 17:21** “அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், ...நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல...” (மனம், இருதயம் ஆகியவைகளிலுள்ள ஒற்றுமையினால், தேவன் ஒருவராக இருக்கிறார்).

“கிறிஸ்துவிற்கும் அவருடைய சீஷர்களுக்கும் இடையிலுள்ள ஒருமைப்பாடு அவர்களுடைய ஆள்தத்துவத்தை அழிப்பதில்லை. அவர்கள் நோக்கத்திலும் மனதிலும் சுபாவத்திலும் ஒன்றாக உள்ளனர்; ஆனால் ஆளில் அப்படியில்லை; இவ்விதமாகத்தான் தேவனும் கிறிஸ்துவும் ஒருவராக உள்ளனர்”—**MH 422.** ★

# 7

# குமாரனாகிய தேவன்

## அவரது தெய்வீகம்

**ஏசாயா 9:6** இயேசு வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா என்று தீர்க்க தரிசனத்தில் அழைக்கப்பட்டிருக்கிறார். இயேசுவானவர் தேவன் என்பதற்கும், வல்லமையுள்ள தேவன் என்பதற்கும், அதாவது இயேசு பிதாவுடன் தேவத் தன்மையில் பங்குபெறும் ஒருவர் என்பதற்கும், அவரை நித்திய பிதா என்று அழைக்கலாம் என்பதற்கும் வேறு எந்த வசனமும் அதிகத் தெளிவானதாக இருக்கமுடியாது.

**வெளி. 1:8** இயேசுவைச் சர்வ வல்லமையுள்ளவர் என்றுங்கூட நாம் அழைக்கலாம். வச.7 கிறிஸ்துவைப்பற்றிப் பேசுகிறது. எட்டாம் வசனத்திலுள்ள நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாக இருக்கிறேன் என்னும் உணர்த்துதலுங்கூட மிகத் தெளிவாக நமது கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது (ஒப்பிடுக வெளி. 1:17, வெளி. 22:13–16).

**மத். 1:23** "அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்கள். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்." அந்தப் பெயரிலுள்ள சத்தியத்தின் முழுமையான தன்மையைக் காட்டுகின்ற ஒரு பெயர் காபிரியேல் தூதனால் கொடுக்கப்பட்டது.

**மத். 28:19** இயேசு ஒருமையிலுள்ள அந்தப் பெயரைத் தேவத்துவத்தின் ஒரு பகுதியாக இணைத்தார்.

**லூக்கா 5:20,21** பாவத்தை மன்னிக்கும் வல்லமை தமக்கு உண்டு என்று இயேசு உரிமைபாராட்டுகிறார். இந்த வல்லமை, தேவனுக்குமட்டுமே சொந்தமானதாக இருக்கிறது.

**யோவான் 1:1** "அந்த வார்த்தை தேவனாயிருந்தது." இயேசு பூமியின்மீது தேவனுக்காகப் பேசும் மனிதராக இருந்ததனால், "வார்த்தை" என்று அழைக்கப்பட்டிருக்கிறார்; ஆனால், இந்த வார்த்தை தேவனாக இருந்தது என்பதைக் கவனியுங்கள்.

**குறிப்பு:** ஆனால் கிரேக்க மொழியில் அந்த "ஒன்று" என்னும் நிச்சயமான "A" இல்லாததினால், நாம் விரும்பினால், அதை ஆங்கிலத்தில் "அந்த வார்த்தை—ஒரு தேவனாக இருந்தது" என்று மொழிபெயர்க்கலாம். அநேக இடங்களில் இப்படிச் செய்யமுடியும் என்பது உண்மையாக இருக்கிறது; ஆனால், இந்த இடத்திலில்லை. தேவன் அந்த வார்த்தையாக இருந்தார் என்று கிரேக்க மொழி இங்கு கூறுகிறது. தேவன் என்னும் வார்த்தையை முதலாவது வைத்து, இவ்வாறாக அதனை வற்புறுத்தி அல்லது மிகப் பலமாகச்செய்து, இந்தச் சந்தர்ப்பத்தில் நிச்சயமற்ற சுட்டு வார்த்தையைப் பயன்படுத்துவதை முற்றிலுமாக முடியாமல் செய்திருக்கிறது.

இந்த வசனங்களில் அமைக்கப்பட்டுள்ள எண்ணத்தைக் கவனியுங்கள்:

1. ஆதியில் வார்த்தை இருந்தது.
2. அந்த வார்த்தை தேவனோடிருந்தது.
3. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.
4. சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று (**3–ம் வசனம்**).

மெய்யாகவே இயேசு தேவனாக இருந்து, எல்லா விதத்திலும் பிதாவுக்குச் சமமானவராக இருந்தார் என்பதைக்காட்ட, இந்த வாக்கியத் திலுள்ளதைவிட கிரேக்க மொழியில் வேறு எந்த வாக்கியத்தையும் வைக்க முடியவில்லை.

**யோவான் 5:18** "தம்மை தேவனுக்குச் சமமாக்கிக்கொண்டு." வச.17, 18–ல் இயேசு தேவனைச் சிறப்பாக என்னுடைய பிதா என்று அழைத்தது, அவரும் பிதாவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று இயேசு கூறுவதாக யூதர்களுக்கு உணர்த்தியது. தேவத்துவம் என்னும் வட்டத்துக்குள் தாம் இருப்பதாக இங்கு இயேசு உரிமைபாராட்டினார்.மேலும், பிதாவைப்போலவே அதேவிதமாக—தாம் விரும்புகிறவர் களுக்கு ஜீவனைக் கொடுக்க தமக்கு முடியும் என்று கூறி, இந்த உரிமையை மேலும் அதிகமாகப் பலப்படுத்துகிறார் (வச. 21). வச.23–ல் பிதாவைக் கனம்பண்ணுகிறதைப்போல, மனிதர்கள் எல்லோரும் தம்மையும் கனம்பண்ண வேண்டும் என்று கூறுகிறார். நிச்சயமான இந்த வார்த்தைகள் ஒரு மிகப்பெரிய உரிமைபாராட்டுதல்! அது அவரைத் தேவனுக்குச் சமமாக்கிக்கொண்டிருந்தது; இதனால்தான் யூதர்கள் அவரைக் கொலைசெய்ய வகை தேடியிருந்தனர்.

**யோவான் 5:23** "பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லோரும் குமாரனையும் கனம்பண்ணவேண்டும்."**(N.E.B);**

**யோவான் 8:58** "ஆபிரகாம் உண்டாகிறதற்குமுன்னமே **நான் இருக்கிறேன்.**"

தன்னிஷ்டமாக கூறப்பட்ட இந்த வார்த்தைகள், ஒரே ஒரு அர்த்தத்தை மட்டுமே கொடுப்பதாக இருந்தது. அது யூதர்களின் மனங்களைத் தேவனுடைய நாமத்திற்கே பின்னாக எடுத்துச்சென்றது (**யாத். 3:14**). இயேசு இந்தப் பெயரைப் பயன்படுத்தினதால், யூதர்கள் அவரைக் கொலைசெய்ய வகைதேடினர் (**59 – ம் வசனம்**).

**யோவான் 10:30–33** "நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று இயேசு சொன்னதைக் கேட்டவுடன் அவர்மீது கல்லெறிய ஆயத்தமானார்கள் –(வச. 31).

**குறிப்பு:** பழைய ஏற்பாட்டின் காலத்தில் நியாயாதிபதிகள் ஜனங்களை நியாயம் விசாரித்தபோது, அவர்கள் தேவனின் சார்பாகச் செயலாற்றினர். அதனால் நியாயாதிபதிகள் சில சமயங்களில் தேவர்கள், தெய்வங்கள் என்று அழைக்கப்பட்டிருந்தனர் (சங். 82:6; யாத். 4:16, 7:1, 18:19). சில மனிதர்கள், (யோவான் 10:34–36–ல்) இயேசு தம்மை பழைய ஏற்பாட்டிலிருந்த மனிதர்களைப்போல ஒரு சிறிய தேவன் அல்லது நியாயாதிபதி என்றதாகக் கூறுகின்றனர்; அப்படியானாலும், இதைச் சொல்லுகின்ற ஜனங்கள் சரியான காரியத்தைத் தவறவிடுகின்றனர். பழைய ஏற்பாட்டிலுள்ள இந்தத் தேவர்கள் அல்லது நியாயாதிபதிகளைவிட, அவர் மிகவும் பெரியவர் என்பதை அறிக்கைசெய்யக்கூடிய ஒரு வாய்ப்பை யூதர்களுக்கு கொடுப்பதற்காக 34–36–ம் வசனங்களிலுள்ள இந்தக் கேள்விகளை இயேசு கேட்டார்.

இயேசு இந்த அதிகாரங்களினால், அவருடைய அநேக பலத்த செயல்களைக் கவனிக்கும்படியாகவும் (வச. 25,37), ஜனங்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கின்ற வல்லைமை உடையவராக அவர் இருக்கிறார் என்பதையும், தேவனுடன் ஒன்றாக இருப்பதையும் (வச. 30), உலகத்திற்கு ஒளியாக இருப்பதையும் (9:5), இரட்சிப்பதற்காகத் தமது ஜீவனைக் கொடுக்கின்ற ஒருவராக இருப்பதையும் (10:11,15), மரணத்தின்மீதுகூட வல்லமை உடையவராக இருப்பதையும் (வச. 18) உரிமைபாராட்டுகிறார்.

பூமிக்குரிய எந்த அதிபதியாலும் அல்லது நியாயாதிபதியாலும் இதை உரிமைபாராட்டமுடியாது. 34–36–ம் வசனங்களில் உள்ள இயேசுவின் கேள்விகளினால், இவைகளை ஒப்புக்கொள்ளவும் பூமிக்குரிய எந்த நியாயாதி பதியையும்விட மிகப் பெரியவரான ஒருவர் அவர்களுக்குமுன் இருக்கிறார்

என்பதை அறிக்கைசெய்யவும் இயேசு யூதர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தார். இந்தச் சான்றுகளெல்லாம் இருந்துங்கூட, மிகத் தெளிவாக இருந்ததைப் பார்க்கத் தங்களுடைய கண்களைத் திறப்பதற்கு யூதர்கள் மறுத்திருந்தனர்; ஆகவே, பிதா என்னிலும் **நான் பிதாவிலும்** இருக்கிறோம் என்பதை மறுபடியும் ஒருதடவை (வச. 38) அழுத்தத்துடன் கூறி, இந்த விவாதத்திற்கு இயேசு ஒரு முடிவு வைத்தார்.

தெய்வீகத்தின்மீதுள்ள கிறிஸ்துவின் உரிமைபாராட்டுதலை இந்த வசனம் மிகத் தெளிவாக உறுதிப்படுத்துகிறது; கோபமடைந்த யூதர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள்; அவரோ அவர்கள் கைக்குத் தப்பிச் சென்றார்.

**யோவான் 14:9** "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்." தேவனுக்குச் சமமாகவிருக்கும் ஒரேஒருவரால்மட்டுமே இப்படிக் கூறமுடியும்.

**யோவான் 20:28** "தோமா ... என் ஆண்டவரே, என் தேவனே" என்றான். தோமா இதைக் கூறினதற்காக இயேசு அவனைக் கடிந்துகொள்ள வில்லை. இதை நம்புகின்ற அனைவரின்மீதும் அவர்கள் அவரைக் காணாதவர்களாக இருந்தபோதிலும், இயேசு ஓர் ஆசீர்வாதத்தைக் கூறுகிறார்" **(வச. 29).**

**பிலி. 2:6** "அவர் **தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக்** கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்."

"**தேவனுடைய ரூபமாயிருந்தும்**"— அதாவது மிகச் சரியாக அவர் தேவனைப் போலவே காணப்பட்டார். (இங்குள்ள ரூபம் என்னும் சொல், "**மார்பே**" என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. அதன் பொருள்: கிறிஸ்துவின் **தன்மை** தெய்வீகமானது என்பதே). இவ்வாறாக, அவர் வெளிப்பார்வைக்கு மட்டும் தேவனைப்போல் காணப்படாமல், உள்ளும் தேவனுடைய அதே தன்மையில் தேவனைப் போன்றவராக இருந்தார்.

தேவனுக்குச் சமமாக இருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை. இயேசு தேவனுக்குச் சமமாக இருந்தது தேவனிடமிருந்து திருடப்பட்டதன்று; ஏனெனில், அவர் தேவனுக்குச் சமமாக இருந்தார்.

**கொலோ. 2:9** "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிர காரமாக அவருக்குள் வாசமாயிருந்தது." தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம்—தேவனுக்குச் சொந்தமான அனைத்தும் இயேசுவுக்குள்ளும் இருக்கிறது.

**1 தீமோ. 3:16** "தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்..."

**எபி. 1:3** "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து..."அதாவது தேவனுக்குச் சொந்தமாயிருந்த அதே மகிமையின் பிரகாசத்தையும் மிகச் சரியாக தேவனுடைய ரூபத்தையும் தேவனுடைய தன்மையின் சாயலையும் உடையவராக இயேசு இருந்தார்.

**எபி. 1:6** "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக் கடவர்கள்." தொழுதுகொள்ளக்கூடியவராக தேவன் ஒருவர்மட்டுமே இருக்கிறார். தேவதூதர்கள் இயேசுவைத் தொழுதுகொள்கிறார்கள் என்னும் உண்மை அவர் தேவத்துவத்தின் ஒரு பகுதியாக—தெய்வீகமானவராக இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

**எபி. 1:8** "குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது"—இங்கு பிதாவாகிய தேவன், இயேசுவை நோக்கி, தேவனே என்று அழைக்கிறார்.

**குறிப்பு:** (கிரேக்க இலக்கணம் இந்த வசனத்தை, "தேவன் என்றென் றைக்கும் உம்முடைய சிங்காசனமாக இருக்கிறார்" என்ற வார்த்தைகளை அமைப்பதற்கு உண்மையில் அனுமதிக்கிறது.) அப்படியிருந்தபோதிலும், அப்படிப்பட்ட ஒரு மொழிபெயர்ப்பு சரியில்லாததாக இருக்கும். பிதாவாகிய தேவன் ஒரு சிங்காசனமாக இல்லாமலிருப்பதனால், எந்த ஒரு கிரேக்கப் பேச்சாளனும் இந்த எண்ணத்தை மனதில் உடையவனாக இருக்கமாட்டான். சிங்காசனம் என்பது ஒரு நாற்காலி. இயேசு என்றென்றைக்கும் உட்காரக்கூடிய ஒரு சிங்காசனமாகவோ நாற்காலியாகவோ பிதாவாகிய தேவன் இருக்கப்போகிறார் என்று ஒருவராலும் கூறமுடியாது; இது முடியாத ஒரு எண்ணம்; எனவே, மிகத் தெளிவானவிதத்திலும் தனிச் சிறப்பான விதத்திலும் இங்கு இயேசு அழைக்கப்பட்டுள்ளது போல, இயேசு தேவனாக இருக்கிறார் என்னும் சரியான ஒரு மொழிபெயர்ப்பை நாம் கொண்டிருக்கிறோம்.

## இயேசு தொழுகையைப் பெற்றுக்கொண்டார்

**மத். 14:33** "... வந்து அவரை பணிந்துகொண்டார்கள்."

**மத். 28:9,17** "அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள்."

**யோவா. 9:38** "அவரைப் பணிந்துகொண்டான்."

**எபி. 1:6** "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக் கடவர்கள்"

**அப். 7:59,60** ஸ்தேவான் தேவனை நோக்கி கூப்பிட்டு: **"கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்** .... ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்." ஸ்தேவான் இங்கு இயேசுவை கர்த்தர் என்று அழைத்து, தன்னுடைய ஆவியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஜெபிக்கிறான். அவனைக் கொலைசெய்பவர்களின் பாவம் மன்னிக்கப்பட வேண்டுமென்றுங்கூட அவன் **இயேசுவை நோக்கி ஜெபிக்கிறான்**. இயேசுவிடம் ஜெபமும், தொழுகையும் நேரடியாகக் கொடுக்கப்படலாம் என்பதைக் காட்டுகின்ற ஒரு ஜெபமாக இது இருக்கிறது.

**யோவா. 5:23** "பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல, எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணவேண்டும்." பிதாவாகிய தேவனுக்கு கொடுக்கின்ற அதே கனத்தை, நாம் இயேசுவிற்கும் கொடுக்கவேண்டும்; ஆகையால், ஸ்தேவானைப்போல நாமும் இயேசுவைத் தொழுது அவரிடம் ஜெபிக்கலாம்.

## இயேசுவே. பழைய ஏற்பாட்டின் யேகோவா!

**"யேகோவா"** என்னும் நாமம் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில், அடிக்கடி "கர்த்தர்" அல்லது "தேவன்" என்று மொழிபெயர்க்கப்பட்டு, **"யேகோவா"** என்னும் வார்த்தையிலிருந்து வருகிறது என்பதைக் காட்டு வதற்கு **பெரிய எழுத்துக்களால்** குறிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில், தேவனின் சிறப்பான பெயராக **யேகோவா** என்னும் பெயர் இருக்கிறது. தேவத்துவத்திலுள்ள எல்லா நபர்களுக்கும் பொருந்தக்கூடிய பெயராக அது இருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் அநேக இடங்களில் **யேகோவா** என்பது கிறிஸ்துவின் சிறப்பான பெயராக இருக்கிறது. யேகோவாவைப் பற்றின **பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் இயேசுவில் நிறைவேறியிருப்பதனால், இயேசுதான் யேகோவா என்று நம்மால் எளிதில் கூறமுடியும்.**

**எரே. 23:5,6** "அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்...அவருக்கு இடும் நாமம் **நமது நீதியாயிருக்கிற**

**யேகோவா** என்பதே.” **இது இயேசு கிறிஸ்து, யேகோவா என்று அழைக்கப்படுவார் என்கிற தீர்க்கதரிசனம்.**

இயேசுதான் யேகோவா என்று நிரூபிக்கும்
பழைய ஏற்பாட்டு வசனங்கள்!

| **யேகோவா (பழைய ஏற்பாட்டில்)** | **இயேசு (புதிய ஏற்பாட்டில்)** |
| --- | --- |
| **ஏசாயா 40:3** “கர்த்தருக்கு (**யேகோவாவிற்கு**) வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள்”. | மாற்கு **1:1–3** “கர்த்தருக்கு (**இயேசுவுக்கு**) வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவருக்கு பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும்.” (யேகோவாவைப் பற்றிய தீர்க்கதரிசனம் இயேசுவிற்குப் பொருந்துகிறது). |
| **ஏசாயா 43:11** நானே கர்த்தர் (**யேகோவா**), என்னையல்லாமல் இரட்சகர் இல்லை. | **அப். 4:12** “அவராலேயன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை”. (**கிறிஸ்துவை**ப்பற்றிக் கூறுகிறது). |
| **ஏசாயா 8:13,14** “அவர் (**யேகோவா**) தடுக்கலின் கல்லும் இடறுதலின் கன்மலையுமாயிருப்பார்;” | **ரோமர் 9:33; 1 பேதுரு 2:6,8:** “இடறுதற்கான கல்லையும் தவறுதற்கான கன்மலையையும் சீயோனில் வைக்கிறேன்.” “மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன். அதன்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை.” (**கிறிஸ்துவை**க் குறிப்பிடுகிறது). |
| **சங்.102:25-27; 1,12,15,16,18,19, 21,22** “நீர் (**யேகோவா**) ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். வானங்கள்உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம். நீரோ நிலைத்திருப்பீர். | **எபி. 1:10–12** “**கர்த்தாவே**, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது; அவைகள் அழிந்துபோம். நீரோ நிலைத்திருப்பீர்” (**இயேசுவை**ப்பற்றிக் குறிப்பிடுகிறார்). |
| **ஏசாயா 44:6** “நான் (**யேகோவா**), முந்தினவரும், நான் பிந்தினவரும் தானே”. | **வெளி. 1:17,18; 22:13:** “நான் முந்தினவரும் பிந்தினவரும்” (**இயேசுவை**ப்பற்றிக் குறிப்பிடுகிறது). |

**2 சாமுவேல் 22:2,32** "நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்?" (**யேகோவா**வைப்பற்றிப் பேசுகிறது).

**1 கொரி. 10:4** "அந்தக் கன்மலை **கிறிஸ்துவே**."

**எரேமியா 17:10** "கர்த்தராகிய நானே (**யேகோவா**) இருதயத்தை ஆராய்கிறவரும்உள்ளிந்திரியங்களைச் சோதித்து அறிகிறவருமாய் இருக்கிறேன்."

**வெளி.2:23** "நானே உள்ளந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர்.". (**கிறிஸ்துவை**ப்பற்றிக் குறிப்பிடுகிறது).

## அவரது முன்னிருப்பு

| | |
|---|---|
| **மீகா 5:2** | "அவருடைய புறப்படுதல் **அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது.**" |
| **யோவான் 1:1,2** | "**ஆதியிலே** வார்த்தையிருந்தது. **அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார்**." |
| **யோவான் 8:58** | "**ஆபிரகாம் உண்டாகிறதற்குமுன்னமே நான் இருக்கிறேன்**." |
| **யோவான் 17:5** | "... **உலகம் உண்டாகிறதற்கு முன்னே** உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமை ..." |
| **வெளி. 1:8** | "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். நான் அல்பாவும் ஒமேகாவும், **ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்.**" |

## அவருடைய சிருஷ்டிகர் என்னும் தன்மை

தேவத்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசு, படைப்பில் தீவிர முகவராக இருந்தார்.

| | |
|---|---|
| **யோவான் 1:3** | "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று." |
| **யோவான் 1:10** | "உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று." |
| **எபே. 3:9** | "**இயேசு கிறிஸ்துவைக்கொண்டு** எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன் ..." |
| **எபி. 1:2,10** | "...(குமாரன் மூலமாய்) இவரைக் கொண்டு உலகங்களையும் உண் டாக்கினார்." |

**கொலோ. 1:16** "ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது."

**இயேசுவின் அவதாரம்**

(இயேசு மனித சரீரத்தை எடுத்துக்கொள்கிறார்).

**எபி. 2:14–18** இயேசு நம்மைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராக இருந்தார்.

**யோவான்.1:14** "...மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார்."

**பிலி. 2:7,8** "மனுஷ சாயலானார்...மனுஷ ரூபமாய்க் காணப்பட்டார்."

**கலா. 4:4** ஸ்திரீயினிடத்தில் பிறந்திட அவருடைய குமாரனை அனுப்பினார்.

**மத். 1:23** "... கன்னிகை ஒரு குமாரனைப் பெறுவாள்; தேவன் நம்மோடிருக்கிறார்."

**ரோமர் 1:3,4** "மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவர்."

**1 தீமோ. 3:16** "தேவபக்திக்குரிய இரகசியமானது, யாவரும் ஒப்புக்கொள்கிற படியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்.

**அவருடைய பாவமில்லாத தன்மை**

**லூக்கா 1:35** "...உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது..."

**யோவான் :46** "...என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்..."

**யோவான் 4:30** "...இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை..."

**2 கொரி. 5:21** "...பாவம் அறியாத அவர்..."

**எபி. 7:26** "பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும்..."

**1 பேதுரு 1:19** "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி."

**1 பேதுரு 2:22** "அவர் பாவம் செய்யவில்லை."

**அவருடைய பாவ நிவாரணம்**

(நம்மை இரட்சிப்பதற்காக, நமக்காக இயேசு மரிக்கிறார்)

**ஏசா. 53:4–6** "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார்".

| | |
|---|---|
| **மத். 20:28** | "அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." |
| **ரோமர் 5:6,8** | "நாம் பாவிகளாய் இருக்கையில் நமக்காக மரித்தார்" |
| **ரோமர் 5:10** | "அவருடைய குமாரனின் மரணத்தினாலே, தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டோம்." |
| **1 பேதுரு 2:24** | "அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்." |
| **1 யோவான் 1:7** | "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." |
| **1 யோவான் ,4:14** | "பிதாவானவர், தமது குமாரனை உலக இரட்சகராக அனுப்பினார். |

**அவர் உயர்த்தப்படுதல்**

| | |
|---|---|
| **அப். 5:30,31** | "தேவன்... அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் உயர்த்தினார்." |
| **எபே. 1:19–22** | "...எல்லாத் துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் கர்த்தத்துவத்துக்கும் மேலாக..." |
| **பிலி. 2:9–11** | "இயேசுவின் நாமத்தில முழங்கால் யாவும் முடங்கும்." |
| **எபி. 4:14** | "ஆசாரியர்." |
| **1 தீமோ. 2:5,6** | "மத்தியஸ்தர்." |
| **1 யோவான் 2:1,2** | "பரிந்துபேசுகிறவர்." |
| **அப். 4:12** | "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" |

**இயேசுவுக்குச் சொந்தமானவை**

| | |
|---|---|
| **ஜீவன்** | யோவான் 1:4; 11:25; 14:6. |
| **சுயமாக இருப்பவர்** | யோவான் 1:1,2; 5:26; வெளி. 22:13.. |
| **மாறாத தன்மை** | எபி. 1:10–12; 13:18. |
| **சத்தியம்** | யோவான் 14:6; வெளி. 3:7. |
| **அன்பு** | யோவான் 13:1; 1 யோவான் 3:16. |
| **பரிசுத்தம்** | லூக்கா 1:35; எபி. 7:26. |

| | |
|---|---|
| **நித்தியத்துவம்** | ஏசாயா 9:6; யோவான் 1:1–3; கொலோ. 1:17; வெளி. 22:13. |
| **சிருஷ்டிகர்** | யோவான் 1:3,10; கொலோ. 1:16; எபி. 1:10. |
| **மன்னிக்கும் தன்மை** | மத். 9:2; மாற்கு 2:5; லூக்கா 5:20; எபே.1:17. |
| **சர்வவியாபகம்** (நம்முடன் கூட எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் இருக்கின்ற வல்லமையை உடையவர்) | மத். 18:20; 28:20. |
| **சர்வ ஞானம்** (எல்லா ஞானத்தையும் உடையவர்) | மத். 9:4; 12:25; யோவான் 2:24,25; 16:30; அப். 1:24; கொலோ. 2:23. |
| **சர்வ வல்லமை** (எல்லா வல்லமையும் உடையவர்) | மத். 27:18; பிலி. 3:21. |
| **தெய்வீகப்பாதுகாப்பு** (நமது தேவைகளனைத்திலும் நமக்கு உதவக்கூடிய வல்லமை) | யோவான் 3:35; 17:2; எபே. 1:22; கொலோ.1:17; எபி. 1:3. |
| **உயிர்த்தெழுதல்** | யோவான் 5:21; 5:25; 5:28,29; 11:25; 11:43,44; பிலி. 3:20,21; 1 தெச. 4:16–18. |
| **நியாயத்தீர்ப்பு** | மத். 25 :31,32; யோவான் 5:22; 5:27; அப். 17:31; 10:42; 2 தீமோ. 4:1. |
| **எல்லாவற்றையும் புதிதாக்குதல்** | 1 கொரி. 15:51–55; பிலி. 3:20,21; வெளி. 21:5. |
| **தெய்வீகக் கனங்கள்** | ஏசாயா 9:6; எரே. 23:5,6; மத். 1:23; 28:19; லூக்கா 5:20,21; யோவான் 1:1,18; 5:18,22,23; 8:58; 10:30–33; 14:9; 20:28; ரோமர் 9:5; 2 கொரி. 13:14; பிலி. 2:6; 3:20,21; கொலோ. 2:9; 1 தீமோ. 3:16; தீத்து 2:13; எபி. 1:3,6,8; வெளி. 1:8. |

**முடிவுக்குறிப்பு** :– நாம் மேலே வாசித்திருக்கும் அனைத்திலிருந்தும், தெய்வீக வட்டத்திற்கு வெளியில் இயேசு ஒரு சிறிய தேவனாக இருந்துகொண்டு, அதே நேரத்தில், பாவங்களை மன்னிப்பவராகவும்

பிதாவுக்குச் சமமானவராகவும் இருக்கமுடியாது என்பது தெளிவானதாக இருக்கிறது (**லூக்கா 5:20,21**). இருந்தபோதிலும், அவர் தேவனுடன் மிக நெருக்கமானவராக இருக்கிறார் என்பதற்கு, என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் (**யோவான் 14:9,10**) என்றும், தேவத்துவத்தின் பரிபூரணத்தையெல்லாம் (**கொலோ. 2:9**) தாம் கொண்டிருப்பதாகவும், பிதாவின் மகிமையின் பிரகாசத்தைக் கொண்டிருப்பதாகவும், அவருடைய மகிமையின் பிரகாசமாக இருக்கிறார் என்றும் (**எபி. 1:3**), எல்லோரும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல குமாரனையும் கனம்பண்ணவேண்டும் என்றும் (**யோவான் 5:23**) சொல்லக்கூடியவராக இருக்கிறார். இதைக் கூறுவது என்பது இயேசு மெய்யாகவே ஓர் இரண்டாவது தேவனாக இருக்கிறார் என்று கூறுவதாக இருக்கும். ஒரே தேவன் இருப்பதனால் அப்படியிருக்கமுடியாது. ஆகையால், இயேசு தேவத்துவம் என்னும் **வட்டத்திற்குள்** பிதாவுடனான பூரணமான சமத்துவத்துடனும் ஐக்கியத்துடனும் இருந்தாகவேண்டும் என்பது தெளிவானதாக இருக்கிறது. அந்த **வட்டத்திற்கு வெளியே** வேறு ஒருவரும் இல்லை (**ஏசாயா 43:10,11; 44:8; 46:9**).

இயேசு தம்மால் பாவத்தை மன்னிக்கமுடியும் என்று கூறினார். அவர் தம்மைப்பற்றி “இருக்கிறேன்” என்றும் கூறினார். ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பே தாம் இருந்ததாக அவர் கூறினார். தம்மைக் கண்டவன் பிதாவைக் கண்டிருக்கிறான் என்றும் அறிவித்தார். தாம் தேவனுடைய குமாரன் என்று ஒரு தெய்வீகப் பதவியின்மீது உரிமைபாராட்டினார். தொழுகையை ஏற்றுக்கொண்டார். தோமா அவரை என் ஆண்டவரே (குரியோஸ்), என் தேவனே (தியோஸ்) என்று அழைத்தான். உலகத் தோற்றத்துக்குமுன்னே, பிதாவுடனிருந்த அவருடைய ஒன்றித்தத் தன்மையின்மீது அவர் உரிமை பாராட்டினார். அவர் பேசுவதைக் கேட்டிருந்த அவரது நண்பர்களும் விரோதிகளும் இயேசு தமது தெய்வத் தன்மையின்மீது உரிமைபாராட்டிக் கொண்டிருந்தார் என்பதை அறிந்திருந்தனர். இதற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று அவருடைய விரோதிகள் கோரிக்கை விடுத்தனர். அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்று எழுதும்படி யோவான் ஆவியினால் ஏவப்பட்டான். மிகவும் அழுத்தமான விதத்திலும், தெளிவான விதத்திலும், கிரேக்க மொழி இந்தக் கருத்தை உணர்த்துகிறது. இயேசு எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்றும் எதுவும் படைக்கப்படுவதற்கு முன்னதாக அவர் இருந்திருந்தார் என்றும் யோவான், பவுல் ஆகிய இருவரும் கூறினார்கள். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் இயேசுவிடம் இருந்தது என்று பவுல் கூறினான். வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா என்று ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இயேசுவை அழைக்கிறான். மற்றப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும் அவரை யேகோவா என்றே அழைக்கின்றனர்.

புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களும் இயேசுவை ஒரு தெய்வீக நபராகக் காட்டுகின்றன என்ற உண்மையை இவை அனைத்தும் சுட்டிக்காட்டுகின்றன; நாம் படித்த வேதவாக்கியங்களனைத்தும் மிக பலமாக நிரூபித்தபோதிலும், நமது கர்த்தரின் தெய்வீகத்தை நம்புவதற்கான மிகப் பலமான காரணம் நமது இரட்சகரின் வாழ்க்கையிலும் சுபாவத்திலும், மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் இருக்கின்றது. அவரைப்பற்றிய அனைத்தும் அவரது தெய்வீகத்தை அறிவிக்கின்றன.

இந்த இரட்சகரே, தெய்வீகமான, பரிசுத்தமான தேவகுமாரனே, நாம் அவருடையவர்களாகும்படி, நமக்காக சிலுவையில் மரித்தார்.

**சாட்சியாகமத்திலிருந்து சாராம்சங்கள்**

**தெய்வீகம்:**

“ஆதியான—கடனாகப்பெறாத, பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ளாத ஜீவன் கிறிஸ்துவில் இருக்கிறது. 'குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்' **(1 யோவான் 5:12).** விசுவாசியின் நித்திய ஜீவனைப்பற்றிய நிச்சயமாகக் கிறிஸ்துவின் தெய்வீகம் இருக்கிறது.”—**DA 530.**

“மிக முக்கியமான விதத்திலும் மிக மேலான அர்த்தத்திலும் கிறிஸ்து தேவனாக இருந்தார்.”—**R&H, April 5, 1906:8.**

“கிறிஸ்துவின் தெய்வீகம் பற்றிய ஏவுதலினாலான வேதவாக்கியங்களின் சாட்சியை மனிதர்கள் நிராகரித்தால், இந்தக் காரியம்பற்றி அவர்களுடன் வாதம் செய்வது வீணாக இருக்கும். இந்தத் தவறைப் பற்றிக்கொண்டிருக்கும் ஒருவரும் கிறிஸ்துவின் சுபாவம்பற்றியும் ஊழியம்பற்றியும் மனிதனுடைய மீட்பிற்கான தேவனுடைய பெரிய திட்டத்தைப்பற்றியும் சரியான கருத்தை உடையவர்களாக இருக்கமாட்டார்கள்.”—**GC 524.**

**முன் உயிர்வாழ்தல்**

“கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (தேவனுடைய தேவ குமாரன்) ஒரு தனி நபராக இருந்தும், பிதாவுடன் ஒருவராக நித்திய காலமாக இருந்தார். பரலோகத்தின் அளவுகடந்த மகிமையாக அவர் இருந்தார். பரலோக நுண்ணறிவாளர்களின் தலைவராக இருந்தார். அவர் தேவதூதர்களின் துதியை தமது உரிமையாக ஏற்றிருந்தார்.”—**R&H, April 5, 1906:8.**

“நித்திய காலம் முழுவதும் கிறிஸ்து பிதாவுடன் ஒருமித்திருந்தார். மானிட இயல்பை தம்மீது எடுத்துக்கொண்டபோதும், அவர் தேவனுடன் ஒருவராக இருந்தார்.”—**S&T August 2, 1905, 10.**

“மானிடத்தில் தோன்றின கிறிஸ்துவின் அவதாரத்தைப்பற்றி

நாம் தியானம் செய்யும்போது, ஆழம் காணமுடியாத, மனித மனதால் புரிந்துகொள்ளமுடியாத ஓர் இரகசியத்துக்குமுன் தடுமாறினவர்களாக நிற்கிறோம். நாம் எந்த அளவிற்கு அதை எடுத்துக்காட்டுகிறோமோ அந்த அளவிற்கு அது அதிகமான அதிசயமாகத் தோன்றுகிறது. கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கும் பெத்லெகேம் முன்னணையிலுள்ள உதவியற்ற குழந்தைக்கும் இடையிலான ஒப்பிடுதல் எவ்வளவு விசாலமாக இருக்கிறது. வல்லமையுள்ள ஒரு தேவனுக்கும் உதவியற்ற ஒரு பிள்ளைக்கும் இடையிலுள்ள தூரத்தை நம்மால் எவ்வாறு அளக்க முடியும்? அப்படியிருந்தபோதிலும், எந்த ஒருவருக்குள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக வாசம்செய்திருந்ததோ, அவர்—உலகங்களைப் படைத்திருந்த அவர்—முன்னணையில் உதவியற்றதாக இருந்த சிறு குழந்தையின் வடிவில் வெளிக்காட்டப்பட்டிருந்தார். எந்த ஒரு தேவ தூதனையும்விட மிக உயர்ந்தவராகவும், மேன்மையிலும் மகிமையிலும் பிதாவுக்குச் சமமானவராகவும் இருந்தும், அவர் மானுடம் என்னும் உடையை அணிந்துகொண்டிருந்தார். தெய்வீகமும் மானுடமும் இரகசியமான விதத்தில் இணைந்திருந்து, மனிதனும், தேவனும் ஒருவராயினர். நமது விழுந்துபோன இனத்தின் நம்பிக்கையை, இந்த ஐக்கியத்தில் நாம் காண்கிறோம். மானிடத்திலுள்ள கிறிஸ்துவை, பார்க்கும்போது, நாம் தேவனைப் பார்த்து, அவரில் அவருடைய மகிமையின் பிரகாசத்தையும் அவருடைய தன்மையின் சொரூபத்தையும் பார்க்கிறோம்."—**DA 24.**

"விழுந்துபோன நிலைமையில் இருந்த மனிதனின் இயல்பை தம்மீது எடுத்துக்கொண்டதனால் (அதாவது மனிதனின் சரீரப்பிரகாரமான இயல்பு), **கிறிஸ்து மிகக் குறைந்த அளவிலுங்கூட, அதன் பாவத்தில் பங்குபெறவில்லை**. மனிதனைச் சூழ்ந்துகொண்டிருக்கிற பலவீனங்களுக்கு ஆளானவராக அவர் இருந்தார். இருந்தபோதிலும், பாவமறியாதவராக இருந்தார். அவர் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக இருந்தார். **மானிட இயல்பிலிருந்த கிறிஸ்துவின் பாவமற்றத் தன்மையைப்பற்றி நாம் தவறான கருத்துக்களை உடையவர்களாக இருக்கக்கூடாது**."—**5 SDABC 1131.**

"**கிறிஸ்துவின் மானிட இயல்பைப்பற்றி எப்படிக் கருதுகிறீர்கள் என்பதைப்பற்றி நீங்கள் கவனமுள்ளவர்களாக, மிக அதிகமான கவனமுள்ளவர்களாக இருங்கள். பாவம் செய்யும் இயற்கையான விருப்பத்தையுடைய ஒரு மனிதனாக அவரை மக்களுக்குமுன் வைக்காதீர்கள்**. அவர் இரண்டாவது ஆதாமாக இருக்கிறார். பாவத்தின் தீய கறைகள் எதுவும் இல்லாதவனாக முதலாம் ஆதாம் படைக்கப்பட்டிருந்தான். அவன் தேவனுடைய சாயலில்

இருந்தான். அவன் விழுந்துவிடக்கூடியவனாக இருந்து, மீறுதலின் காரணமாக விழுந்துபோனான். ஆனால் இயேசு கிறிஸ்து ஒரே பேறான குமாரனாக இருந்தார். அவர் தாமாகவே தம்மீது மானிட இயல்பை எடுத்துக்கொண்டு, எல்லாக்காரியத்திலும் மானிட இயல்பு பரீட்சிக்கப்படுவதைப்போல் பரீட்சிக்கப்பட்டார். அவரால் பாவம் செய்திருக்கமுடியும். அவரால் விழுந்திருக்கமுடியும்; ஆனால், பாவம் செய்யும்படி இயற்கையான விருப்பம் நொடிநேரங்கூட அவரிடம் இருக்கவில்லை."— **5 SDABC 1128.**

"அழிவிற்குரிய பாவத்தின் தீய கறைகள் அல்லது விருப்பம் கிறிஸ்துவின் மீது தங்கியிருந்தது என்றோ அல்லது எந்தவிதத்திலாவது கறைபடும் காரியங்களுக்கு அவர் இணங்கினார் என்றே மிக லகுவான உணர்த்துதலுங்கூட மனித மனதில் ஒருபோதும் விட்டுவிடப்படக்கூடாது. கிறிஸ்துவை ஒட்டுமொத்தமாக நம்மைப்போன்ற ஒருவர் என்று கருதச் செய்கின்ற அடிப்படைக்கெதிராக, ஒவ்வொரு மனிதனும் எச்சரிக்கப்படுவானாக. ஏனெனில், அது அப்படி இருக்கமுடியாது."—**5 SDABC 1128, 1129.**

"நமது மனித வெறிகளையும் விழுந்துபோன தன்மைகளையும் உடையவராக அவர் இல்லாமல், நம்முடையதைப் போன்ற பலவீனங்களால் சூழப்பட்டவராக, எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டவராக இருந்த அவர், பலமிக்க விதத்தில் வேண்டுதல்செய்யும் ஒருவராக இருந்தார்."—**2T 508.**

"அவர் சோதிக்கப்பட்டுப் பாடு அனுபவித்தார். அவருடைய பாடுகள் **அவரது பரிபூரணமான பரிசுத்த தன்மைக்கேற்ற அளவில்** இருந்தது. ஆனாலும் அவரிடத்தில் அந்தகார பிரபுவுக்கு ஒன்றும் இருக்கவில்லை. **சோதனைக்குப் பதிலான ஒரு நினைவையோ அல்லது உணர்வையோகூட அவரில் காணமுடியவில்லை.**"—**5T 422.**

"பாவத்தின் தீய மாசுகள் எதுவும் இல்லாதவராக அவர் இருந்தார்... சோதனையின் வல்லமைக்கு இணங்கும்படி ஓர் எண்ணத்தினாலுங்கூட கிறிஸ்துவைக் கொண்டுவரமுடியவில்லை."—R&H November 8, 1887.

"அவர் பூரணமானவராகவும், பாவத்தால் தீட்டுப்படாதவராகவும் ... கறைதிரை எதுவும் இல்லாதவராக இருந்தார்."—**2 SOP 11,12.**

"மானுடத்தில் வாழும்படி கிறிஸ்து வந்ததினால், அவர் மாசு எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. அவருடைய பிரசன்னம் பாவிக்கு சுகம்தரும் புண்ணியத்தை உடையதாக இருக்கிறது."—**DA 266.**

"**கறையற்ற தூய்மையான அவருடைய ஆவி**, கடின இருதயத் தன்மை பாவம் ஆகிய காட்சியிலிருந்து பின்வாங்கியிருந்தது. **முடிவில்லாத**

**தூய்மையின்** பிரசன்னத்தில் அவர்கள் குற்றமுள்ளவர்களாகவும் ஆக்கினைக் குட்பட்டவர்களாகவும் நின்றிருந்தனர்."—**DA 461.**

"மேன்மையாகவும் தூய்மையாகவும் அனுதாபம் நிறைந்தும், தேவனைப் போன்ற தன்மையைப்பற்றிய உணர்வுடனும் அதேநேரம் எளிமையாகவும், மனித இனத்திற்கு நன்மை செய்யக்கூடிய திட்டங்களையும், நோக்கங்களையும் நிறைய உடைய ஒருவரும் ஒருபோதும் மனிதர்களுக்கு நடுவிலே சஞ்சரித்ததில்லை. அவர் பாவத்தை வெறுத்தபோதிலும், பாவியின் மீதுள்ள மன உருக்கத்தினால் அழுதார். அவர் தம்மை திருப்திப்படுத்தவில்லை. பரலோகத்தின் மகத்துவமானவர் மனிதக் குழந்தையின் உருவை எடுத்தார். இதுதான் கிறிஸ்துவின் சுபாவம்."—**5T 422.**

### பாவ நிவாரணம்

"(கிறிஸ்து) பரலோகத்திற்கும் பூமிக்கும் நடுவில் சிலுவையை நாட்டினார். பிதா அவருடைய குமாரனின் தியாகப் பலியைக் கண்டபோது, அதன் பரிபூரணத்தை அங்கீகரிக்கும்விதமாக அதற்கு முன்பாகக் குனிந்தார்; "அது போதும்; பாவ நிவாரணம் நிறைவடைந்திருக்கிறது" என்று கூறினார்.—**R&H September 24, 1901.**

"கிறிஸ்துவின் மரணத்தில் நிஜம் நிழலைச் சந்தித்தது. உலகத்தின் பாவங்களுக்காக ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. நமது மகா பிரதான ஆசாரியர் நமது இரட்சிப்பில் மிக முக்கிய பங்குடைய அந்த ஒரே பலியை செலுத்தியிருக்கிறார். **அவர் தம்மைச் சிலுவையின்மீது பலியாகச் செலுத்தினபோது**, மக்களின் பாவங்களுக்கான **ஒரு பூரணமான பாவ நிவாரணம் செய்யப்பட்டது.**"—**ST June 28, 1899.**

"நமது சார்பான பலி பூரணமாக இருப்பதைப்போல், பாவத்தின் அசுத்தத்திலிருந்து நம்மைப் புதுப்பித்தல் பூரணமானதாக இருக்கவேண்டியதாக இருக்கிறது."—**MH 451.**

"உலகத்தின் பாவங்களுக்காகக் கிறிஸ்து செய்த பாவநிவாரணம் பற்றிய உறுதிமிக்க சாதகங்களைச் சேகரியுங்கள். இந்தப் பாவ நிவாரணத்துக் கான அவசியத்தைக் காட்டுங்கள்."—**Ev 187.**

"கிறிஸ்தவனிடத்திலிருந்து சிலுவையை நீக்குவது என்பது சூரியனை வானத்திலிருந்து முற்றிலும் நீக்குவதைப்போன்றதாக இருக்கும்! சிலுவை நம்மை தேவனுடன் ஒப்புரவாக்கி, நம்மை தேவனுக்கு அருகில் கொண்டுவருகிறது. சிலுவையில்லாமல் மனிதனால் பிதாவுடன் ஐக்கியமுள்ளவனாக இருக்கமுடியாது. நமது ஒவ்வொரு நம்பிக்கையும் அதைச் சார்ந்துள்ளது."—**AA 209,210.**

“உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியைக் சுட்டிக்காட்டாமல், ஒருபோதும் ஒரு பிரசங்கம் செய்யப்படவோ வேத உபதேசம் கொடுக்கப்படவோகூடாது (**யோவான் 1:29**). ஒவ்வோர் உண்மையான கோட்பாடும் கிறிஸ்துவை மையமாகக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கற்பனையும் அவரது வார்த்தைகளிலிருந்து வலிமையைப் பெற்றுக்கொள்கிறது.”—**6T 54.**

“சுவிசேஷத்தின் அஸ்திபாரமாக உள்ள கிறிஸ்துவையும் சிலுவையில் அறையப்பட்ட அவரையும் முன்வைக்காமல், எந்த ஒரு பிரசங்கமும் ஒருபோதும் செய்யப்படக்கூடாது.”—**4T 394.**

“நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை விளக்குபவர்களாக நாம் ஆகவேண்டும்.”—**6T 82.**

“மற்றச் சத்தியங்களனைத்தும் சார்ந்திருக்கிற ஒரு பெரிய சத்தியம்—**பாவத்திற்கான ஒரு பாவநிவாரணமாக இருக்கும் கிறிஸ்துவின் தியாகபலியே.** இரக்கம், மறுபடியும் பிறத்தல், இரட்சிப்பு, மீட்பு ஆகியவைகளின் பெரும் நினைவுச் சின்னமாக இருக்கும் சிலுவையின்மீது உயர்த்தப்பட்ட தேவகுமாரனை நான் உங்கள்முன் காட்டுகிறேன். இது நமது ஊழியக்காரர்களால் கொடுக்கப்படும் ஒவ்வொரு பிரசங்கத்தின் அஸ்திபாரமாக இருக்கவேண்டும்.”—**GW 315.**

“வேதவாக்கியங்களை ஆராய்வதில் மனதிற்குமுன் வைக்கப்பட வேண்டிய ஒரு பெரும் மையமாக கிறிஸ்துவும்—சிலுவையில் அறையப்பட்ட அவரும்—உள்ளனர். இந்தக் கருப்பொருளுடன் சம்மந்தப்பட்டே மற்ற சத்தியங்கள் அனைத்தும் தங்களது செல்வாக்கையும் வல்லமையையும் கொண்டுள்ளன. சிலுவையின் ஒளி ஒன்றினால்மட்டுமே, தேவனுடைய பிரமாணத்தின் உயர்வான சுபாவத்தை நம்மால் அறிந்துகொள்ளமுடியும். பாவத்தினால் முடமாக்கப்பட்ட ஆத்துமாவிற்கு நமது இரட்சிப்பின் ஆக்கியோனால் சிலுவையின்மீது செய்யப்பட்ட செயலின்மூலமாகமட்டுமே, ஜீவன் அருளப்படமுடியும்.”—**Manuscript 31, 1890.**

“கிறிஸ்து பரலோகத்தின் கதவுகள் வழியாகக் கடந்துசென்றபோது, தேவ தூதர்களின் வரவேற்பையும் தொழுகையையும் ஏற்றுக்கொண்டார். அந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் பரிசுத்த ஆவியானவர் (பூமியில் காத்துக் கொண்டிருந்த—சீடர்களின்மேல்) மிகுந்த ஆசீர்வாதமான வல்லமையுடன் இறங்கினார். நிச்சயமாகவே கிறிஸ்து மகிமைப்பட்டார். ஆம்; அந்த மகிமையானது—முன்பு பிதாவுடன் அவருக்குண்டான நித்திய மகிமைக்கு ஒப்பானதாக இருந்தது.”—**AA 38,39.** ★

# 8

# இயேசுகிறிஸ்துவின் தெய்வீகம்!

**மறுப்பு -1:**

பிதாவாகிய தேவனைப்போலவே இயேசுவும் தேவனாக இருந்தால், அப்பொழுது இரண்டு தேவர்கள் இருப்பார்கள் (பரிசுத்த ஆவியும் தேவனாக இருப்பாரானால், மூன்று தேவர்கள் இருப்பார்கள்); ஆனால், **ஒரே தேவனே** என்று வேதாகமம் போதிக்கிறது.

**பதில்:** இது ஒரு நல்ல மறுப்புபோல் காணப்படுகிறது; **ஒரே தேவன்**தான் இருக்கிறார் என்று வேதகாமம் பலமாகப் போதித்தாலும், **தேவத்துவத்தில் மூன்று நபர்கள்** இருக்கின்றனர் என்று மிகப் பலமாகப் போதிக்கிறது.

**மத். 28:19** "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து ..." (**ஒரே தேவன்** இருப்பதனால், நாமத்திலே என்னும் ஒருமையில், நாமங்களிலே என்னும் பன்மையில் அல்ல; இதில் தேவன் என்னும் இந்த நாமத்தில்—பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று நபர்கள் அடங்கியுள்ளனர்).

அவர்கள் ஒரே தன்மை, மனம், எண்ணம், திட்டம், பரிசுத்தம், அன்பு, ஆகியவைகளுடன் ஒரேவிதமான ஐக்கியத்தில் செயல்படுகின்றனர்; எனவே, வேதாகமம் **ஒரே தேவனை**ப்பற்றிப் பேசுகிறது. இவ்விதமான ஐக்கியத்தைப்பற்றி பூமியிலிருக்கும் நாம் அறிந்துகொள்ளமுடியாதவர்களாக இருக்கலாம்; ஆனால் **வேதாகமம் இப்படித்தான் போதிக்கிறது**. வேதாகமம் எதைச் சொல்லுகிறதோ, அதை நாம் ஏற்றுக்கொண்டு பின்பற்றவேண்டும்.

**குறிப்பு:** மக்கள் சிலர் மெய்யான தேவனுடைய மகிமையில் பங்குபெறும், அவரைப் போன்றே தோன்றும் ஒரு சிறிய தேவனாக இயேசு இருந்தார் என்று போதிக்கின்றனர். உண்மையில் இது சரியன்று; ஏனெனில், "நானே தேவன், **வேறொருவரும் இல்லை**. நானே தேவன் **எனக்குச் சமானமில்லை" (ஏசாயா 46:9**) என்று வேதகாமம் கூறுகிறது; எனவே, இயேசு மெய்யான தேவனைப்போல் காணப்பட்டு தேவனுடைய

அதே மகிமையை கொண்ட ஒரு சிறிய தேவனாக இருக்கமுடியாது. ஆனால் உண்மையாகவே அவர் **மெய்யான தேவத்துவத்தின் ஒரு பகுதியாக,** அவர்தாமே உண்மையான தேவனாக இருக்கவேண்டும்; அந்தத் தேவத்துவத்திற்கு வெளியே வேறு ஒருவரும் இல்லை.

**மறுப்பு 2:** படைக்கப்பட்டுள்ளவைகளனைத்திலும் இயேசு **முந்தின பேறுமானவர்** என்று **கொலோ. 1:15** கூறுகிறது. தேவனுடைய படைப்பில் இயேசு **முதற்பேறான**வரென்றால், அவருக்கு ஓர் ஆரம்பம் இருந்தது; அதனால் அவரால் தேவனாக இருக்கமுடியாது.

**பதில்:** வேதாகமத்திலுள்ள முதற்பேறானவர் என்னும் சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன.

**1.** பிறப்பால் முதற்பேறானவர்!

**2.** முக்கியத்தில் முதற்பேறானவர்! ஒப்பற்ற ஒருவர் என்பது கனத்தைக் காட்டும் ஒரு சிறப்பான பட்டம்.

**கொலோ. 1:15** - ல் பயன்படுத்தப்பட்டுள்ள முந்தின பேறுமானவர் என்பது முதலாவது அர்த்தமாக இல்லாமல் **முக்கியத்தில் முதற்பேறானவர்** என்ற இரண்டாவது அர்த்தமாக இருக்கிறது. மேற்கொண்டுள்ள **வச. 18**—ல் உள்ள மூன்று சொற்களில் இயேசு **மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்** என்று அழைக்கப்பட்டிருப்பதினால், இதை நாம் அறிகிறோம். நிச்சயமாகவே மரித்தோரிலிருந்து **முதலில் எழுந்த**வராக இயேசு இருக்கவில்லை (**1 இராஜா. 17:17-22; 2 இராஜா. 4:18-36; லூக்கா 7:12-15; 8:49-55; யோவான் 11:11-44; லூக்கா 9:30,31;** காண்க. **யூதா 9; மத். 27:50-52** ஒப்பிடுக.) ஆனால், இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த முதற்பேறுமானவர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். ஏனெனில், **மரித்தோரிலிருந்து இதுவரை உயிர்தெழுந்தவர்களில் முக்கியமான ஒருவராக இயேசு இருந்தார். முக்கியத்தில் முதலானவர்-ஒப்புயர்வற்ற ஒருவர்.**

**15**-ம் வசனத்தில் முந்தினபேறுமானவர் அல்லது அதிக முக்கியமான ஒருவர் என்று இயேசு அழைக்கப்பட்டிருப்பதற்கான **காரணம்**, எல்லாவற்றையும் அவர் சிருஷ்டித்தார் என்பதாகும். (**16**—ம் வசனத்தைக் கவனிக்கவும்).

**சங். 89:27** தாவீதுக்கு ஏழு மூத்த சகோதரர்கள் இருந்தபோதிலும், அவனும் முதற்பேறானவன் என்று அழைக்கப்பட்டான்.

**யாத். 4:22** ஏசாவுக்குப்பின் பிறந்திருந்தாலுங்கூட இஸ்ரவேல் முதற்பேறானவன்—சேஷ்ட புத்திரன்—என்று அழைக்கப்பட்டான்.

**எரே. 31:9** உண்மையில் ரூபன் மூத்த குமாரனாக இருந்தபோதிலும், சேஷ்ட புத்திரன் என்று எப்பிராயீம் அழைக்கப்பட்டான் (**ஆதி. 46:8**).

**கொலோ. 1:15**-ல் உள்ள முதற்பேறுமானவர் என்னும் வசனத்தை புது ஆங்கில வேதாகமம் **(New English Bible)** முதன்மை ஸ்தானம் அவருடையது என்று மொழிபெயர்க்கிறது.

**மறுப்பு-3: வெளி. 3:14**—ல் சிருஷ்டிக்கு ஆதியுமானவராயிருக்கிறவர் என்று இயேசு அழைக்கப்படுகிறார். இது தேவன் ஆதியில் இயேசுவைச் சிருஷ்டித்தார் என்று பொருள்படுகிறது.

**பதில்:** இல்லை. வெளி. 3:14, **எல்லாவற்றையும் ஆரம்பித்தவர் இயேசு** எனப் போதிக்கிறது. அவர் எல்லாவற்றையும் படைத்தவராக இருக்கிறார் (**யோவான் 1:3; கொலோ. 1:16**).

இந்த வசனத்தை இன்றைய ஆங்கில வாசகம் என்னும் வேதாகமம்—**(Today's English version)**—தேவன் சிருஷ்டித்த அனைத்திற்கும் பிறப்பிடமானவர் என்று மொழிபெயர்க்கிறது.

**மறுப்பு - 4:** "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" **(யோவான் 14:28)** என்று இயேசு கூறினார். அவர் அறியாத சில காரியங்களுங்கூட இருந்தன என்று இயேசு கூறினார் (**மத். 24:36; மாற்கு 13:22**). கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் என்று **1 கொரி. 11:3**-ல் பவுல் கூறுகிறான். இந்த வசனங்கள் தேவன் இயேசுவைவிடப் பெரியவர் என்று காட்டுகின்றன.

**பதில்:** இயேசு இந்த வார்த்தைகளை அவருடைய மனிதன் என்னும் நிலையில் பேசினார். இயேசு அவருடைய தெய்வீக வல்லமைகளையும் சிலாக்கியங்களையும், மகிமையையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, ஒரு மனிதனைப்போல இந்த உலகத்திற்கு வந்திருந்தார். அவர் இன்னும் தேவனாகவே இருந்தார்; ஆனால், இந்த வல்லமைகளையெல்லாம் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, மற்ற எந்த மனிதனையும் போல், பிதாவுக்குக்கீழ் தம்மை வைத்தார். இந்த உலகத்தில் ஒரு மனிதனைப்போல இருந்தபோது மட்டுமே என் பிதா என்னிலும் பெரியவர், நான் அறியாத சில காரியங்கள் உள்ளன என்று இயேசுவால் கூறமுடிந்தது.

கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார் என்று பவுல் கூறுகிறான். இன்றுங்கூட பிரிக்கமுடியாத கட்டுகளுடன் கிறிஸ்துதாமே மனித இனத்துடன் தம்மைப் பிணைத்திருக்கிறார். இன்றும் அவர் "இயேசு கிறிஸ்து என்னும் மனிதனாக இருக்கிறார்" **(1 தீமோ. 2:5).** இது இயேசுவின் ஆச்சரியமான அன்பைக் காட்டுகிறது.

**பிலி. 2:6,7 "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்."**

இந்த வசனங்கள் உண்மையாகவே தேவனாக இருந்த இயேசு ஒரு வேலைக்காரனைப்போல, **மனிதனாக வந்து**, மற்ற எந்த மனிதனையும்போலத் தம்மைப் பிதாவுக்குக் கீழாக வைத்தார் என்பதைக் காட்டுகின்றன.

**மறுப்பு - 5:** இயேசு அடிக்கடி தேவகுமாரன் என்று அழைக்கப் படுகிறார். அவர் தேவனைவிட இளையவர் என்று இது அர்த்தம் கொடுக்கிறது.

**பதில்:** இல்லை, மரியாளிடத்தில் பிறப்பதற்கு**முன்** தேவ குமாரனாக இருந்த இயேசு, மரியாளிடத்தில் பிறந்ததினால் மனுஷ குமாரனானார். அவர் **ஏற்கனவே பரலோகத்தில் நித்திய காலமாக ஜீவித்திருந்தார்** (**மீகா 5:2; யோவான் 1:1-3; 1:15; 8:58; 17:5; கொலோ. 1:16**). முன்னமே இருந்தினால், அவர் பிறந்தபோது அவருடைய பிறப்பு அவரை இளையவராக்கவில்லை; ஏனெனில், மனித இனத்தில் பிறப்பிற்குமுன், அவர் பிதாவுடன் ஒருவராக இருந்திருந்தார்.

தேவகுமரான் என்னும் சொல் ஏன் இயேசுவை தேவனைவிட இளையவராக்குவதில்லை என்பதற்கான இரண்டாவது காரணம்: அதிக சந்தர்ப்பங்களில், "தேவகுமாரன்" என்னும் வார்த்தை, யூதர்களின் மொழியில், **தேவத்துவத்தின் வட்டத்திற்குள்** என்றோ அல்லது **தேவத்துவத்தின் ஒரு பகுதி**யையோ குறிப்பிட்டது. எனவேதான், இயேசு தம்மைத் தேவகுமரான் என்று கூறினபோது யூதர்கள் கோபமடைந்தார்கள். அவர்களுடைய மொழியில் அதன் அர்த்தம் இயேசு தம்மைத் **தேவத்துவத்தின் பகுதி** என்று கூறிக்கொண்டிருந்தார் என்று அறிந்திருந்தனர். அது ஒரு **தெய்வீகப் பட்டம்**ாக இருந்தது. **இவர் மெய்யான தேவன் என்று அது கூறிக்கொண்டிருந்தது** எனவேதான், அவர்கள் அவரைக் கொலைசெய்ய விரும்பினார்கள் (**யோவான் 19:7; லூக்கா 22:69-71**).

**மறுப்பு - 6:** மத். 19:17–லும் மாற்கு 10:17–லும் தேவன் ஒருவர்மட்டுமே நல்லவர் என்று இயேசு கூறினார். அப்படியே இயேசு நல்லவர் என்னும் பட்டத்தின்மீது உரிமைபாரட்டவில்லை.

**பதில்: ஆனால் இயேசு நல்லவராக இருந்தார்.** இந்த வேத வசனங்களை கருத்துடன் கவனியுங்கள் லூக்கா 1:35; யோவான் 8:46; 14:30;

**2 கொரி. 5:21; எபி. 7:26; 1 பேதுரு 1:9; 1 யோவான் 3:5.** "நல்ல

போதகரே" என்னும் வார்த்தை அசாதாரணமான ஒன்றாக இருந்தது. "நல்ல" என்னும் சொல்லும் உண்மையாகவே தேவனுக்குச் சொந்தமானது. எனவே, ஐசுவரியவானான அந்த வாலிப அதிபதி இயேசுவை "நல்ல போதகரே", என்று அழைத்தபோது, இயேசு அவனிடம், "நல்ல தன்மை தேவனுக்குமட்டுமே சொந்தமானதாக இருக்கும்போது, என்னில் **தேவனைக்** காண்கிறாயா அல்லது என்னை **தேவனாக** உணருகிறாயா? எதினால் என்னை நல்லவன் என்று கூறுகிறாய்?" என்றார். இங்கு தம்மை தெய்வீகமான ஒருவர் என்று அறிக்கைசெய்கின்ற ஒரு வாய்ப்பை இயேசு அந்த ஐசுவரியவானான வாலிப அதிபதிக்கு கொடுத்துக்கொண்டிருந்தார்.

**மறுப்பு - 7: 1 கொரி. 8:6-**ல் பிதா மாத்திரமே ஆண்டவர் என்பது பற்றி உங்கள் விளக்கம் என்ன?

**பதில்:** இங்கு பவுல், எல்லாவற்றையும் ஆளுகையும் **ஒரே தேவன்** என்ற கிறிஸ்தவ நம்பிக்கையை, ஒருவர்மீது ஒருவர் பொறாமைகொண்டு, **பிரபஞ்சத்தின் வெவ்வேறு பகுதிளை ஆட்சிசெய்வதாகக் கூறும் அநேக தெய்வங்களிடமிருந்து** வேறுபடுத்திக் காட்டுகிறார்.(**வச. 4,5**).

இயேசு பிதாவாகிய தேவனுடன் தெய்வீகத்தில் பங்கு பெறவில்லையென்று பவுல் இந்த வசனத்தில் சொல்வதாக நினைத்தால் அது தவறு. இருவரும் ஒரேவிதமாக விவரிக்கப்படுவதை கவனியுங்கள்.

| **பிதா** | **இயேசு கிறிஸ்து** |
|---|---|
| **"ஒரே தேவன்"** | **"ஒரே கர்த்தர்"** |
| "அவராலே சகலமும்" | "அவர்மூலமாய்ச் சகலமும்" |
| "அவருக்கென்று நாமும்" | "அவர் மூலமாய் நாமும்" |

இரண்டும் ஒரேவிதமாக விவரிக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். இருவரும் ஒரே நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இருவரும் ஒரே தேவத்துவத்திலும் ஒரே கர்த்தத்துவத்திலும் பூரணமான ஐக்கியம் உள்ளவர்களாக உள்ளடக்கப்பட்டுள்ளனர். இந்தப் பூரணமான தேவத்துவம் என்னும் ஐக்கியத்திற்கு வெளியில் வேறு ஒருவரும் இல்லை. இவ்வாறாக, பிதா—**ஒரே தேவன்** என்று விவரிக்கப்படும்போது தேவத்துவம் என்னும் வட்டத்திலிருந்து இயேசு தவிர்க்கப்படாமலிருப்பதைப்போல, ஒரே கர்த்தர் என்று இயேசு விவரிக்கப்படும்போது, தேவத்துவம் என்னும் வட்டதிலிருந்து பிதா தவிர்க்கப்படாதவராக இருக்கிறார். பிதாகூட கர்த்தர் என்று அழைக்கப்படலாம்; அது ஓர் ஒப்பிடுதலாகப் பயன்படுத்தப்படுவதாக இல்லாமல், அந்த இருவரையும் ஒரு பரிபூரணமான **இணையான** (பங்காளி) தன்மையில் ஒன்றாக இணைக்கும் சமச்சீராக பயன்படுத்தப்பட்டுள்ளது.

பவுல், இயேசுவை 1 கொரி. 8:6—ல் ஒரே கர்த்தர் என்று குறிப்பிடும்போது, அவன் சகரியா 14:9—ல் உள்ள அந்நாளில் **ஒரே கர்த்தா**வாக (யேகோவா) இருப்பார் என்பதைக் குறிப்பிடுகின்றானென்றும் இவ்வாறாக, பிதாவுக்குச் சமமாக உள்ள யேகோவா என்னும் தெய்வீகத்தை அவன் போதித்துக்கொண்டிருக்கின்றான் என்றும் வேதாகம அறிஞர்கள் எண்ணுகின்றனர்.

**மறுப்பு- 8: நீதி. 8:24,25** இயேசு ஜெநிப்பிக்கப்பட்டார் என்பதைக் காட்டுகின்றது.

**பதில்:** நிச்சயமாகவே அப்படி அல்ல. இந்த அதிகாரம் இயேசுவைப் பற்றியே் பேசவில்லை. ஆனால் ஞானத்தின் பெரிய முக்கியத்துவத்தைப்பற்றிய ஒரு கவிதையாக இருக்கிறது (**வச. 1, 5, 11, 12, 14** காண்க).

கிறிஸ்துவின் தெய்வீகம்பற்றிய ஆவியின் ஏவுதலினாலான வேத வாக்கியங்களின் சாட்சியை மனிதர்கள் நிராகரிப்பார்களானால், அந்தப் பொருள்பற்றி அவர்களுடன் வாதம்செய்வது வீணானதாக இருக்கிறது. இந்தத் தவறைப் பிடித்துக்கொண்டிருக்கும் ஒருவரும் கிறிஸ்துவின் தன்மையைப்பற்றியோ அவருடைய ஊழியத்தைப் பற்றியோ மனிதனின் மீட்பிற்கான தேவனுடைய பெரிய திட்டத்தைப் பற்றியோ உண்மையான கருத்தை உடையவர்களாக இருக்க மாட்டார்கள். **—GC 52.** ★

# 9

# ஆவியானவராகிய தேவன்!

பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தின் மூன்றாவது நபராக இருக்கிறார். ஆவி என்னும் சொல் பழைய ஏற்பாட்டில் உள்ள "ரூஆ" என்னும் வார்த்தையிலிருந்தும், புதிய ஏற்பாட்டில் உள்ள "ந்யூமா" என்னும் வார்த்தையிலிருந்தும் வருகிறது. இவை இரண்டும் காற்று, வாயு அல்லது சுவாசம் என்னும் அர்த்தத்தை உடையவையாக இருக்கின்றன.

இதன் காரணமாக, மக்கள் சிலர் பரிசுத்த ஆவி சாதாரண மான ஒரு சுவாசம் ( செல்வாக்கு அல்லது தேவனுடைய வல்லமையாகமட்டும் இருக்கிறது; ஒரு நபரே அல்லர் என்று கூறுகின்றனர். இது உண்மையில்லை. வேதாகமத்தில் பிதாவாகிய தேவனுங்கூட ஆவி என்று கூறப்பட்டிருக்கிறார் (யோவான் 4:24). நிச்சயமாகவே பிதாவாகிய தேவன் ஒரு காற்றாகவோ வாயுவாகவோ சாதாரணமான செல்வாக்காகவோ இல்லை. அவர் உண்மையான நபராக இருக்கிறார். ஆதாமும் ஏவாளும் அவருடைய ரூபத்தின்படியே படைக்கப்பட்டிருக்கின்றனர் (ஆதி. 1:26,27).

தேவதூதர்களுங்கூட ஆவிகள் என்று கூறப்படுகின்றனர் (எபி. 1:13,14). அவர்கள் காற்றாகவோ வாயுவாகவோ இல்லை; மாறாக உண்மையான நபர்களாக உள்ளனர் (எண். 22:22-35 ஆதி. 19:13).

அதேவிதமாக, **பரிசுத்த ஆவியானவர்** ஓர் உண்மையான நபராக இருக்கிறார்; இதைப்பற்றி வேதாகமம் மிகவும் தெளிவாகக் கூறி உள்ளது.

அடிக்கடி மனிதனின் பெயர்கள்கூட திரு. ஒயிட், திரு. பிளாக், திரு. புல்லாக், திரு. ஹவுஷ், திரு. புஷ், திரு. ஸ்நோ, திரு. போர்டு என்றும் உள்ளன; அவர்களுடைய பெயர்கள் அவ்விதமாக இருந்தபோதிலுங்கூட, அவர்கள் அனைவரும் **உண்மையாகவே மக்களாக** உள்ளனர். அப்படியே, ஆவி என்பது சுவாசம் அல்லது காற்று என்னும் அர்த்தத்தை உடையதாக இருந்தபோதிலுங்கூட, அது ஓர் **உண்மையான நபரின்** பெயராகவுங்கூட, தேவத்துவத்தின் மூன்றாவது நபராகவுங்கூட இருக்கிறார்.

அவர், நபர் சார்ந்த தன்மைகளையும் கடவுளின் அடிப்படைப் பண்பையும் (மக்களுக்குமட்டுமே சொந்தமானதாக இருக்கக்கூடிய

எல்லாவற்றையும்) உடையவராக இருக்கிறார் என்று அவரைப்பற்றி வேதாகமம் பேசுவதால், பரிசுத்த ஆவியானவர் ஒரு **நபராக** இருக்கிறார் என்பதை அறிகிறோம்.

**பரிசுத்த ஆவியின் தனித்தன்மை**

| | |
|---|---|
| **மத். 28:19** | "பிதா, குமாரன், **பரிசுத்த ஆவியின்** நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்து ..." இந்த மூன்று நபர்களில் ஒவ்வொருவரும் தனிப்பட்டவிதமாக விவரிக்கப்பட்டு இருப்பதையும் மற்றவரிலிருந்து தெளிவாக வேறுபட்டு இருப்பதையும் கவனியுங்கள். பிதா ஒரு நபராகவும், குமாரன் ஒரு நபராகவும் இருப்பதைப் போல பரிசுத்த ஆவியும் ஒரு நபராக இருக்கிறார். |
| **யோவான் 14:16-18** | **"வேறொரு தேற்றரவாளன்."** இயேசு முதலாவது தேற்றரவாளனாக இருந்தார். தாம் சென்றபோது, **வேறொரு** தேற்றரவாளனை அனுப்புவதாக அவர் வாக்குத்தத்தம் பண்ணினார். முதலாவது தேற்றரவாளனாக இருந்த இயேசு, ஓர் உண்மையான நபராக இருந்ததைப்போல, இரண்டாவது தேற்றரவாளனும் ஒரு உண்மையான நபராக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தேற்றரவு என்று கூறப்படாமல், ஓர் உண்மையான **தேற்றரவாளன்** என்று கூறப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். |
| **யோவான் 14:26** | "அவர் உங்களுக்குப் போதிப்பார்." |
| **யோவான் 16:7** | "**அவரை** உங்களிடத்திற்கு அனுப்புவேன்." |
| **யோவான் 16:13,14** | "**அவர்** ... உங்களை நடத்துவார், **அவர்**... கேள்விப்பட்டதை, **அவர்**... என்னை மகிமைப்படுத்துவார்." |
| **அப். 13:2, எபி. 3:7** | பரிசுத்த ஆவியானவர் **திருவுளம் பற்றினார்;** பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே... (எனவே அவர் பேசினார்.) |
| **ரோமர் 15:13** | **"பரிசுத்த ஆவியின் பலத்தினாலே**..." எனவே, பரிசுத்த ஆவியானவர் என்பதும், அவருடைய பலம் என்பதும் **இரண்டு வித்தியாசமான பொருட்களாக** உள்ளனர் (**லூக்கா 4:14; 1 கொரி. 2:4** வசனங்களையும் பார்க்கவும்). இது பரிசுத்த ஆவி என்பது வல்லமை அல்லது செல்வாக்கு என்பதற்கான ஒரு வார்த்தையாக இல்லை என்பதைக் காட்டுகிறது. |

**எபே. 4:30** "தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்." ஒரு வல்லமையையோ செல்வாக்கையோ நம்மால் துக்கப்படுத்தவோ துயரப்படுத்தவோ முடியாது. ஒரு **நபரை**மட்டுமே துக்கப்படுத்தமுடியும். பரிசுத்த ஆவி ஒரு நபராக இருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது.

**2 கொரி. 13:14** "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் **பரிசுத்த ஆவியின் ஐக்கியமும்**..."

**மத். 28:19**-ல் உள்ளதுபோல இந்த மூன்று நபர்களில் ஒவ்வொருவரும் மற்றவர்களிலிருந்து வேறுபட்டவர்களாக தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளனர். **பிதாவும் குமாரனும் ஆள் தத்துவமுடையவர்களாக இருப்பதுபோல பரிசுத்த ஆவியும் ஒரு நபராக இருக்கிறார்.**

### பரிசுத்த ஆவியின் தெய்வத்தன்மை

**மத். 28:19** "பரிசுத்த ஆவியின் நாமத்திலே..."

**2 கொரி. 13:14** பரிசுத்த ஆவியானவர் இங்கு தேவத்துவத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறார்.

**அப். 5:3-5** "**பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி** சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, **தேவனிடத்தில்** பொய் சொன்னாய்". (பரிசுத்த ஆவியானவர் இங்கு தேவன் என்று கூறப்பட்டிருக்கிறார்).

**எபி. 9:14** "நித்திய ஆவி...

### பூமியின்மீதிருந்த இயேசுவின் பணியில் பரிசுத்த ஆவியானவர் உடன் சேர்ந்திருந்தார்

**மத். 1:20** "அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது". (லூக்கா 1:35-யும் பார்க்கவும்).

**மத். 3:16** இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது, பரிசுத்த ஆவியின் பிரசன்னம் இருந்தது.

**மத். 4:1** ஆவியானவராலே இயேசு வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்.

**லூக்கா 4:14** கிறிஸ்துவின் ஊழியத்தைப் பலப்படுத்தினார்.

| | |
|---|---|
| **எபி. 9:14** | இயேசு தம்மைத்தாமே சிலுவையின்மீது ஒப்புக்கொடுத்தபோது, இயேசுவுடன் இருந்தார். |
| **1 பேதுரு 3:18** | இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். |

**பரிசுத்த ஆவியானவருடைய இன்றைய பணி**

| | |
|---|---|
| **யோவான் 14:16-18** | இன்று நம்முடன் ஜீவிக்கவும் நம்மைத் தேற்றவும் பூமியின்மீது இயேசு இருந்த இடத்தில் பரிசுத்த ஆவி இருக்கிறார். (இயேசு சென்றுவிட்டபின், அவருக்கு பூமியில் ஒரு பிரதிநிதி இருக்கவேண்டும் என்று சிலர் போதிக்கின்றனர். இது உண்மைதான்; ஆனால், இன்று பூமியின்மீது அந்தப் பிரதிநிதியாக பரிசுத்த ஆவி இருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது). |
| **யோவான் 16:13,14** | "... நடத்துவார், வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார், என்னை மகிமைப்படுத்துவார்" (பரிசுத்த ஆவியானவர் இயேசுவை நமக்குக் கவர்ச்சி யுள்ளவராகச்செய்து, நம்மை அவரிடம் நடத்துகிறார். நமது புதுப்பிக்கப்பட்ட வாழ்க்கையினால், நம்மில் இயேசுவை மகிமைப்படுத்துகிறார்). |
| **அப்.1:8** | "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து... எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" நாம் இயேசுவுக்குச் சாட்சிகளாக இருப்பதற்குப் பரிசுத்த ஆவியானவர் நமக்குப் பெலன் தருவார். |
| **கலா. 5:22,23** | ஆவியின் "கனிகள்." இவைகள் பரிசுத்த ஆவியானவர் உண்மையாகவே நமது வாழ்க்கையை மாற்றுகிறார் என்பதையும், நாம் அதிகமதிகமாக இயேசுவைப் போலாகிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் காட்டுகிறது. |
| **1 கொரி. 12:7-11, 28-31** | பரிசுத்த ஆவியின் "வரங்கள்." உலக முழுவதின் பிரயோஜனத் திற்கென்று, தேவனுடைய தூது செல்லுவதற்காக பரிசுத்த ஆவியானவரின் சித்தத்தின்படியே கொடுக்கப்பட்டிருக்கிறது. |
| **எபே. 1:13; 4:30** | பரிசுத்த ஆவியானவர் நம்மை முத்திரிக்கிறார்; அதாவது, நாம் மீட்கப்படும் நாளுக்கென்று நம்மை அவர் பாதுகாக்கிறார். நாம் தேவனுடைய சுபாவத்தை உடையவர்களாக இருப்பதனால், ஜனங்கள் நம்மைப் தேவனுடையவர்களென்று அறிகின்றனர். |

**யோவான் 14:26; 16:8** "...போதிக்கிறார்..." "கண்டித்து உணர்த்துவார்."

### பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்னும் வார்த்தைகள் ஆறு தடவைகள் வேதாகமத்தில் காணப்படுகின்றன -- (மத். 3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16; யோவான் 1:33; அப்.1:5; 11:6). பரிசுத்த ஆவியினால் நிறைந்து (அப். 2:4), பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெறுவீர்கள் (அப். 2:38) போன்ற வசனங்களுங்கூடப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஞானஸ்நானம் என்றால், மூழ்குதல் என்று பொருள்படும். அப்படியே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுதல் என்பதின் பொருள் நம்மை நாம் தேவனால் பயன்படுத்தப்படுவதற்கென்று முற்றிலுமாக தேவனுக்குக் கொடுப்பதாகும். நாம் சுயத்தை வெறுமையாக்கி, தேவன் நமது வாழ்க்கையை முற்றிலுமாக எடுத்துக்கொள்ளும்படி தேவனைக் கேட்கிறவர்களாக இருக்கிறோம். அப்பொழுது பரிசுத்த ஆவியினால் தேவன் உள்ளே வந்து, நமக்குள் வாசம்செய்யமுடியும். அவர் நமக்குள் வாசம்செய்வதற்கென்று நாம் அவருடைய ஆலயமாகிறோம்.

**1 கொரி. 3:16** "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

**1 கொரி. 6:19** "உங்கள் சரீரமானது... பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் அறியீர்களா?"

**2 கொரி. 6:16** "நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர் களே".

பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்க்கைக்குள் வந்தபின், நமக்காகச் செயலாற்றுவதற்கு அவர் வல்லமை உள்ளவராக இருப்பார்—தேற்றவும் (யோவான் 14:16-18), போதிக்கவும் (14:26), பாவத்தை கண்டிக்கவும் (16:18), சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தவும் (16:13), தேவப் பிரமாணத்திற்கு நம்மைக் கீழ்ப்படியச்செய்யவும் (எபி. 10:15,16; ரோமர் 8:4; எசே. 11:19,20), தூய்மைப்படுத்தவும் (கலா. 5:16; 2 தெச. 2:13; யோவான் 16:14), நமது வாழ்க்கையில் கனிகளைக் கொண்டுவரவும் (கலா. 5:22,23), அவருக்கான நமது பணியில் நமக்கு தைரியம் கொடுக்கவும் (அப். 1:8; 4:31,33; 9:17,20,22,29; 11:24), கிறிஸ்துவைப்பற்றி மற்றவர்களுக்குச் சாட்சிகூறும் வல்லமையை நமக்குத் தரவும், ஆவியானவருக்குத் தேவைப்படும்போது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுவிதமான வரத்தை சுவிசேஷத்தைப் பரப்ப

உதவியாகக் கொடுக்கவும் (1 கொரி. 12:7-11; 12:28-30), மீட்கப்படும் நாளுக்கென்று நம்மை முத்திரிக்கவும் (எபே. 1:13; 4:30) அவர் வல்லவராயிருக்கிறார்.

இது இப்படியிருக்கும்போது, ஓ! தேவனுடைய ஆவி நமது வாழ்க்கையை முற்றிலுமாக ஆட்கொள்ள நாம் எவ்விதமான ஏக்கத்துடன் ஜெபம் செய்யவேண்டும்.

## பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதன் அவசியம்!

**யோவான் 3:5** "ஒருவன் ஜலத்தினாலும் **ஆவியினாலும்** பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான்".

**ரோமர் 8:9** கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்லன்.

## நாம் பரிசுத்த ஆவியை எவ்விதமாகப் பெறலாம்?

1. **அப். 2:38** **மனந்திரும்புங்கள்** — "**மனந்திரும்பி**...இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்".
2. **அப். 5:32** **கீழ்ப்படியுங்கள்**—"தேவன் தமக்குக் **கீழ்ப்படிகிறவர் களுக்குத்** தந்தருளின பரிசுத்த ஆவி."(**யோவான் 14:15-17**)
3. **அப். 4:31** **ஜெபம் செய்யுங்கள்** — "அவர்கள் **ஜெபம்பண்ணினபோது**, ... அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்".
4. **லூக்கா 11:13** **கேளுங்கள்** — "பரம பிதாவானவர் தம்மிடத்தில் **வேண்டிக்கொள்கிறவர்களுக்குப்** பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார்..."
5. **கலா. 3:14** **விசுவாசத்தினாலே பெறும்படி** — "ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் **விசுவாசத்தினாலே** பெறும்படியாகவும்."

## பின்மாரி

**யோவேல் 2:28-32** "நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது, உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்.

கர்த்தருடைய பெரிதும் பயங்கரமான நாள் வருமுன்னே ....”

பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு இந்தத் தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிட்டான் (**அப். 2:16-21**). இது முன்மாரியாக இருந்தது. ஆனால், கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் **பின்மாரியாக** ஊற்றப்படுவதற்கு முன்னே, யோவேலின் தீர்க்கதரிசனத்தின் பூரணமான, முழுமையான நிறைவேறுதல் காணப்படமாட்டாது.

**வெளி. 14:6,7** “பின்பு வேறொரு தூதன் வானத்தின் மத்தியில் பறக்கக் கண்டேன். அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல **ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்** அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாக இருந்து, மிகுந்த சத்தமிட்டு, தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது என்றான்.”

**வெளி. 18:1,2** “வேறொரு தூதன் **மிகுந்த அதிகாரமுடையவனாய்** வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; **அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று; அவன் பலத்த சத்தமிட்டான்.**”

இயேசு வருவதற்குமுன், வேலையை விரைவாக முடிப்பதற்காக தேவனுடைய ஜனங்களுக்குப் பெரிய வல்லமை கொடுக்கப்படும். உலக வரலாற்றின் இந்தப் பிரம்மாண்டமான முடிவுக் காட்சிகளில், பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தப்படுவதற்கு நாம் தயாரானவர்களாக இருக்கும்படி, நாம் நம்மைத் தேவனுக்கு அர்ப்பணஞ்செய்யவேண்டும்.

“நமக்குத் தேவையானது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஆகும். இது இல்லாதவரை, சீஷர்கள் அவர்களுடைய கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதற்குபின் இருந்ததைவிட, உலகத்தை நோக்கி முன்செல்வதற்கு நாம் அதிகமான தகுதியை உடையவர் களாக இருக்கமாட்டோம்.”—**RH Feb. 18, 1890.**

“கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருக்கும்படி பரிசுத்த ஆவியை அனுப்புவதாக கிறிஸ்து பிரிந்துசெல்லுகின்ற நேரத்தில் பண்ணின வாக்குத்தத்தத்தில், காலத்தின் இழப்பு மாறுதலை உண்டுபண்ணவில்லை... எல்லாரும் விரும்பியிருந்தால், எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்திருப்பார்கள். ஆவியின் அவசியம்பற்றி எங்கெல்லாம் சிறிதாக—அற்பமாக—எண்ணப்படுகிறதோ, அங்கெல்லாம்—ஆவிக்குரிய வறட்சி, ஆவிக்குரிய இருள், ஆவிக்குரிய வீழ்ச்சி, மரணம் ஆகியவை

காணப்படுகின்றன. நாம் வல்லமையைப் பெற்றுக்கொள்ளவேண்டிய வழியாக இது இருக்கும்போது, ஆவியின் வரத்திற்காக நாம் ஏன் பசிதாகம் அற்றவர்களாக இருக்கிறோம்? அதைப்பற்றி ஏன் பேசாமல் இருக்கிறோம்? அதைப்பற்றி ஏன் பிரசங்கம் செய்யாமலிருக்கிறோம்? பெற்றோர்கள் அவர்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல ஈவைக் கொடுக்கவேண்டியவர்களாக இருப்பதைப்போல, கர்த்தர் அவருக்கு ஊழியஞ்செய்பவர்களுக்கு அதிகமான அளவில் பரிசுத்த ஆவியைக் கொடுக்க அதிக வாஞ்சையுள்ளவராக இருக்கிறார். நாள்தோறும் பெறப்படவேண்டிய ஆவியின் ஞானஸ்நானத்திற்காக ஒவ்வொரு ஊழியக்காரனும் தேவனை நோக்கி அவனுடைய விண்ணப்பத்தை ஏறெடுக்கவேண்டும்.” “தேவத்துவத்தின் மூன்றா வது நபராக இருப்பவரின் பலத்த ஏதுகரத்தினால்மட்டுமே பாவத்தைத் தடைசெய்யவும் மேற்கொள்ளவும் முடியும். அவர் மாறுபட்ட சக்தியுடன் வராமல், தெய்வீக வல்லமையின் நிறைவுடன் வருவார். உலக மீட்பரால் எது செயலாற்றப்பட்டிருக்கிறதோ அதை பலமுள்ளதாக்குவது ஆவிதான்; ஆவியினால்தான் இருதயம் தூய்மையாக்கப்பட்டிருக்கிறது. ஆவியின்மூலமாக விசுவாசி தெய்வீகத் தன்மையில் பங்குபெறுபவனாகிறான். பரம்பரையானதும் பழக்கப்படுத்தப்பட்டதுமான தீமைகளனைத்தையும் மேற்கொள்ளவும் அவரது சொந்த சுபாவத்தை அவரது சபையின்மீது பதிக்கவும், கிறிஸ்து ஒரு தெய்வீக வல்லமையாக அவருடைய ஆவியைத் தந்திருக்கிறார்.”—**AA 50; DA 671.**

“சுயத்தை ஒரு பக்கமாக வைத்துவிட்டு, இருதயத்தின்மீது பரிசுத்த ஆவி செயலாற்றுவதற்கு இடத்தை உண்டுபண்ணி, தேவனுக்கென்று முற்றிலுமாகப் பிரதிஷ்டைசெய்யப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழும் ஒருவனுக்கு, பயன்படுத்தப்படுவதற்கான எல்லை இல்லை. ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவைகளைத் தேவனுடைய ஊழியத்திற்கென்று அர்ப்பணஞ்செய்யும் அனைவரும் சரீரப்பிரகார மான, மனப்பிரகாரமான ஆவிக்குரியதான வல்லமையைப் புதிய மான்யமாகத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்டிருப்பார்கள். பரலோகத்தின் தீர்ந்துபோகாத விநியோகங்கள் அவர்களுடைய அழைப்பில் இருக்கின்றன. கிறிஸ்து அவருடைய சொந்த ஆவியின் சுவாசத்தையும் அவருடைய சொந்த ஜீவனின் ஜீவனையும் கொடுக்கிறார். மனதிலும் இருதயத்திலும் செயலாற்றும்படி, பரிசுத்த ஆவி அதன்மேலான சக்திகளை முன்வைக்கிறது. நமது சொந்தத் தவறுகளாலும் நாம் முந்தி உருவாக்கிக்கொண்ட அபிப்பிராயங்களாலும் நமது சுபாவத்தின் குறைபாடுகளினாலும் நமது விசுவாசத்தின் குறைவுத் தன்மையினாலும் நம்மால் முடியாததுபோல் காணப்படுகின்றவைகளை, நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்ற கிருபையினால் நாம் வெற்றியாக அடையலாம்.”—**MH 159.**

“பெற்றோர்கள் அவர்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுப்பதற்கு விருப்பமுள்ளவர்களாக இருப்பதைவிட, கர்த்தரைச் சேவிப்பவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பதற்குக் கர்த்தர் அதிகமாக விருப்பமுடையவராக இருக்கிறார்.”—**AA 50.**

“தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கும் ஈவை நாம் பெற்றுக்கொள்கிறோம் என்றும், அது நமதாக இருக்கிறதென்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். இது இயேசு பூமியிலிருந்தபோது போதித்த பாடமாக இருக்கிறது.”—**SC 54.**

**பின்மாரி ஊற்றப்படுவதுபற்றிய குறிப்புகள்**

“நாம் நமது இருதயங்களைக் கிறிஸ்துவினிடத்திற்குள்ளும் ஒருமைப்பாட்டிற்குள்ளும் கொண்டுவரும்போது, நமது வாழ்க்கை அவரது பணியுடன் இசைவானதாகும்போது, பெந்தகொஸ்தே நாளில் சீஷர்களின்மீது விழுந்த ஆவி நம்மீதும் விழும்.”—**8T 246.**

“ஒருவர் வார்த்தையை—வேதாகம வார்த்தையை—எழுத்தின்படி முன்வைக்கும் திறமையை உடையவராக இருக்கலாம். அதன் கட்டளைகள், வாக்குத்தத்தங்கள் ஆகிய அனைத்துடனும் அவர் பழக்கப்பட்டவராக இருக்கலாம் ஆனால், பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை உள்ளத்திற்குள் அமைக்காதவரை, எந்த ஓர் ஆத்துமாவும் பாறையின்மீது விழுந்து நொறுங்கினதாக இருக்காது. எந்த அளவிலான கல்வியானாலும் எந்த அளவிலான அனுகூலங்களானாலும் அவை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் தேவனுடைய ஆவியின் கூட்டுறவு இல்லாமல், அவை ஒருவரை ஒளியின் வாய்க்காலாக்காது.”—**DA 672.**

“தேவனது பரிசுத்த ஆவியானவருடைய வரங்களான செல்வம், நிறைவு, பூரணம் ஆகிய இவைகளெல்லாம் அவரது சபைக்கு அதைச் சூழ்ந்துள்ள அக்கினிச்சுவராக இருக்கும்போது, பாதாளத்தின் வல்லமைகள் அதனை மேற்கொள்ளாது.”—**TM 18.**

“தேவன்மீது தாழ்மையுடன் காத்திருந்து, அவருடைய வழி நடத்துதலுக்காகவும் கிருபைக்காகவும் விழித்திருப்பவர் களுக்குமட்டுமே ஆவி கொடுக்கப்படுகிறது … விசுவாசத்தினால் உரிமைபாராட்டப்பட்டிருக்கும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் இந்த ஆசீர்வாதம், தொடர்பான மற்ற அனைத்து ஆசீர்வாதங்களையும் கொண்டுவருகிறது.”—**DA 672.**

“**இந்தக் காட்சிகள் பெரிய வல்லமையுடன் திரும்பத் திரும்பக் காட்டப்படவேண்டும்.** பெந்தெகொஸ்தே நாளில் ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவி முன்மாரியாக இருந்தது; **ஆனால், பின்மாரி இன்னும் அதிகமாக**

—**ஏராளமானதாக இருக்கும்.** நமது கோரிக்கைக்காகவும் நமது வரவேற்பிற்காகவும் ஆவியானவர் காத்துக்கொண்டிருக்கிறார். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கிறிஸ்து அவருடைய பூரணத்தில் மறுபடியும் வெளிப்படுத்தப்படவேண்டியவராக இருக்கிறார்"—**COL 121.**

"அந்தப் பணி பெந்தெகொஸ்தே நாளில் நடந்திருந்ததைப் போன்றதாக இருக்கும். … **சுவிசேஷத்தின் பெரும் பணி, அதன் தொடக்கத்தில் வெளிக்காட்டப்பட்டிருந்த வல்லமையைவிட தேவனுடைய வல்லமையின் குறைவான வெளிக்காட்டலாக இருக்காது.** தேவனுடைய வேலைக்காரருடைய முகங்கள் பரிசுத்த மான அர்ப்பணிப்பினால் ஒளிதரபட்டு பிரகாசிப்பவைகளாக, பரலோகத்திலிருந்துள்ள தூதை அறிவித்துக்கொண்டு, இடம் விட்டு இடத்திற்கு விரைவார்கள். உலகம் முழுவதிலும் ஆயிரக் கணக்கான குரல்களினால் அந்த எச் சரிக்கை கொடுக்கப்படும். **அற்புதங்கள் செய்யப்படும் நோயாளிகள் சுகப்படுத்தப்படுவார்கள். அடையாளங்களும் ஆச்சரியங்களும் விசுவாசிகளைப் பின்தொடரும்.** … அந்தத் தூது வாதத்தினால் அதிகமாக எடுத்துச்செல்லப் படாமல், தேவ ஆவியின் மன உணர்த்துதலினால் எடுத்துச் செல்லப்படும். …பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்கள் கர்த்தருடைய பக்கத்தை (உறுதியாக) தெரிந்தெடுத்துக் கொள்வார்கள்."—**GC 611,612.**

"உரத்த சத்தத்தின்போது, சபை, உயர்த்தப்பட்டுள்ள அதனுடைய கர்த்தரின் தெய்வீகக் குறிக்கீடுதலாகிய உதவியுடன், இரட்சிப்பைப்பற்றிய அறிவை மிக ஏராளமாகப் பரப்புவதினால், ஒளி எல்லா நகரங்களுக்கும் பேரூர்களுக்கும் பரப்பப்படுகிறது. இரட்சிப்பைப்பற்றிய அறிவினால் பூமி நிரப்பப்படும். புதுப்பிக்கும் தேவனுடைய ஆவி ஏராளமானதாக இருந்து, வலிமைமிக்க தீவிரமான ஏதுகரங்களை வெற்றியினால் முடிசூட்டியிருப்பதினால், **நிகழ்கால சத்தியம்பற்றிய ஒளி எங்கும் பளிச்சிட்டுக் காணப்படும்.**"—**Ev. 694.**

"அப்போது **பதினோராம் மணி வேளையில் ஆயிரக்கணக்கான வர்கள் சத்தியத்தைக் கண்டு ஏற்றுக்கொள்வார்கள்.** சபையை ஆச்சரியப் படுத்தக்கூடியவிதத்தில் **விரைவாக சத்தியத்திற்கான இம்மாற்றங்கள் உண்டாகும்;** அப்பொழுது, தேவனுடைய நாமம்மட்டுமே மகிமைப் படுத்தப்படும்."—**2 SM 16.**

"யூதர்களுக்கிடையிலிருந்து அநேகர் மதம் மாறியிருப் பார்கள். இந்த மதமாற்றமடைந்தவர்கள் கர்த்தருக்குப் பாதையை ஆயத்தஞ்செய்வதில் உதவு வார்கள்… எதிர்காலத்தில் நமது பிரபுவாக உள்ள கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்காகச் செய்யப்படவேண்டிய பெரிய ஆயத்தத்தில் செயலாற்ற

மத மாற்றமடைந்துள்ள யூதர்கள் ஒரு முக்கியமான பங்குடையவர்களாக இருப்பார்கள். **ஒரு தேசம் (ஜாதி) ஒரே நாளில் பிறந்திருக்கும்**. எப்படி தேவன் நியமித்திருக்கும் மனிதர்கள் சத்தியத்திற்குள் மத மாற்றமடைவதினால் (இது நிகழும்)."—**Ev. 578,579.**

"பெந்தெகொஸ்தே நாளின் சம்பவங்கள் அந்தச் சந்தர்ப் பத்தில் இருந்ததைவிடப் பெரிய வல்லமையுடன் திரும்பச் செய்யப்படுவதைக் காண்பதற்காக நான் அக்கறைமிக்க ஏக்கத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். அப்போது பெந்தெகொஸ்தே வேளையைப்போல, மக்கள் அவர்களிடம் பேசப்பட்ட சத்தியத்தை, ஒவ்வொருவனும் அவனுடைய மொழியில் கேட்பான். தேவனுடைய வார்த்தையிலுள்ள ஆச்சரியமான சத்தியத்தை வல்லமையுடன் பேச, ஆயிரக்கணக்கான குரல்கள் ஊக்குவிக்கப்படும். திக்குவாய் நாவுகள் கட்டவிழ்க்கப்படும்; கோழையாக இருந்தவன் பெலப்படுத்தப்படுவான்"—**RH July 20,1886.**

"ஷாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ ஆகியோரின் நாட்களில் கர்த்தர் அவர்களுக்காகச் செயலாற்றியதைப்போல, உலக வரலாற்றின் முடிவின் நாட்களில் சரியான காரியத்திற்காக நிற்பவர்களின் சார்பில் கர்த்தர் செயலாற்றுவார்." —**PK 513.** ★

# 10

# அந்நியபாஷைகளின் வரம்!

ஆவியானவரின் வரங்களுக்கெதிராகப் போலியானவை களைச் செய்வதினால், தேவனுடைய ஜனங்களை வஞ்சிப்பதற்குச் சாத்தான் தொடர்ச்சியாக முயற்சிசெய்வான் என்றும், இந்தப் போலியானவைகள் மிகவும் சாமர்த்தியமானவைகளாக இருக்கும் என்றும், வேதம் நம்மை எச்சரிக்கிறது (**மத்.7:21-23;24:24; 2 கொரி.11:13-15; 2 தெச. 2:8-11; வெளி. 13:13,14**). தேவ மக்கள் தொடர்ந்து விழிப்பாயிருந்து (தங்களின் காவலிலிருந்து), ஒவ்வொரு போதனையையும் ஒவ்வொரு வெளிக்காட்டுதலையும் தேவனுடைய வார்த்தையினால் சோதிக்கவேண்டும். உலகத்தில் பிரசித்தமானவைகளாக இருக்கும் தவறுகளில் ஒன்று—இன்று பாஷைகளின் வரத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றது. அநேகர் அவர்களின் உணர்ச்சிகளின் தூண்டுதலினால், குளறுமொழி பேசி, அதனைப் பரிசுத்த ஆவியின் வரங்கள் என்று கூறுகின்றனர். அப்படியிருந்தபோதிலும், இந்தக் காரியத்தில் வேதாகமத்தின் போதனை மிகவும் தெளிவாக இருப்பதனால், தேவனுடைய ஜனங்கள் வழிவிலகிப்போகவேண்டிய அவசியம் இல்லை.

**தவறு - 1**:- விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதற்கான அடையாளமாகப் பாஷைகளைப் பேசுவது இருக்கிறது.

**பதில்:-** இல்லை. **வேதாகமத்தில் எங்கும் இப்படிக் கூறப்படவில்லை. அப். 2:1-21; 10:44-48; 19:1-7** ஆகிய மூன்று இடங்களில் குறிக்கப்பட்டுள்ள மூன்று நிகழ்ச்சிகளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபோது, பாஷைகளின் வரம் கொடுக்கப்பட்டது என்பது உண்மைதான். இது ஏசாயா 28:11–ல் கலகம் செய்பவர்களாக இருந்து கொண்டிருக்கும் யூத ஜனங்களிடம் தேவன் ஒரு புதிய பாஷையில் பேசுவார் என்று கூறியிருந்த தீர்க்கதரிசனம் புதிய ஏற்பாட்டு நிறைவேறுதலாக பயன்பட்டது. ஆனால், பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டபோதெல்லாம் நிச்சயமாகவே பாஷையின் வரங்கள் காணப்படவில்லை. நீங்கள் பெந்தெகொஸ்தேக்கு முன்னான லூக்கா 1:15, 41, 67; 4:1 வசனங்களையும் பெந்தெகொஸ்தே நாளுக்குப்

பின்னான அப். 4:8, 31; 7:55; 8:14-17; 9:17; 13:9; 13:52 – ம் வசனங்களையும் கவனியுங்கள். கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியை **விசுவாசத்தினால்** பெற்றுக் கொள்கின்றனர் எனவும் (கலா. 3:14). சில வெளியரங்கமான அடையாளத்தினால் அல்ல எனவும் வேதாகமம் போதிக்கிறது. பொல்லாத விபச்சார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகின்றனர் என வேதாகமம் கூறுகிறது (மத். 12:39; 16:4). கிறிஸ்தவர்கள் அடையாளத்தைத் தேடவேண்டிய அவசியமில்லை. அவர்கள் விசுவாசத்தினால் அவரை நம்பவும், அவருடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொள்ளவும் போதுமான அளவிற்கு அவரை நம்புகின்றனர்.

தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்யும் ஈவை **நாம் பெற்றுக்கொள்கிறோம் என்றும் அது நம்முடையதாயிருக்கிறது என்றும் நாம் நம்பவேண்டும்** என்று இயேசு பூமியிலிருந்தபோது போதித்தார்.—**SC 54.**

கலகம்செய்து, கீழ்ப்படியாமலிருந்த யூத ஜனங்களுக்கு அது ஆரம்பத்தில் ஒரு அடையாளமாக இருந்திருந்தபோதிலும், பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமல்ல என்று **1 கொரி. 14:22** தெளிவாகக் கூறுகிறது.

**தவறு- 2:** விசுவாசிகளனைவரும் பாஷைகளில் பேச வேண்டும்.

**பதில் :- வேதாகமம் இதை எங்கும் கூறுவதில்லை. 1 கொரி. 12:29,30** நாம் எல்லோரும் பாஷைகளில் பேசுவதில்லை என்று சுட்டிக்காட்டுகிறது. இங்கு பவுல் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறான் (**வச.13**).

**1 கொரி. 12:11**- ல் இந்த வரங்கள் வெவ்வேறு விதமாகப் **பிரிக்கப் பட்டிருக்கிறது** என்றும் நமது சித்தத்தின்படியல்லாமல், **அவருடைய சித்தத்தின்படி** ஒவ்வொன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும் பவுல் கூறுகின்றான். ஆகையால், தங்களுக்குப் பாஷைகளின் வரம் இல்லை என்பதற்காகவோ வேறு ஏதாவது வரம் இல்லை என்பதற்காகவோ செவன்த்-டே அட்வென்டிஸ்டுகள் வருத்தப்பட வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. இது பரிசுத்த ஆவியானவர் அவருடைய ஞானத்தின்படி முடிவுசெய்கின்ற ஒரு செயலாக இருக்கிறது.

**தவறு- 3:-** அதாவது, வழக்கத்தின்படியே பாஷைகள் என்னும் உண்மையான வரம் நுண்ணறிவற்ற ஒரு பேச்சாக, கேட்பவர்களுக்கும் பேசுபவர்களுக்குங்கூட (புரிந்துகொள்ளமுடியாததாக இருக்கிறது).

**பதில்:-** பரிசுத்த ஆவி இவ்விதமாகச் செயலாற்றுவதில்லை. **அப்.**

**2:1-21-**ல் பேசப்பட்ட பாஷைகள் **உண்மையான மொழிகளாக** இருந்தன. நீங்கள் **6, 8, 11** வசனங்களைக் கருத்துடன் கவனியுங்கள்.

**அப். 10:44-48-**லும் உண்மையான ஒரு மொழி குறிக்கப் பட்டுள்ளது. **11**-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி எருசலேமி லிருந்த சகோதரர்களுக்குப் பேதுரு திரும்பி வந்து விவரித்ததை நீங்கள் கவனியுங்கள். நான் பேசத் தொடங்கினபோது—பரிசுத்த ஆவியானவர் **ஆதியிலே நம்மேல்** இறங்கினதுபோலவே அவர்கள் மேலும் இறங்கினார் **(11:15)** என்றான் பேதுரு. **நமக்கு வரத்தை அனுக்கிரகம்பண்ணினதுபோல** அவர்களுக்கும் அந்த வரத்தையே அனுக்கிரகம்பண்ணினார் **(வச. 17).** அப்படியே **அப். 2**—ல் உள்ளதைப்போல **ஆரம்பத்தில் சீஷர்களின்மீது விழுந்ததைப்போன்ற** அதே பாஷையாக இது இருக்கின்றது. வேறு வார்த்தைகளில் **இது ஓர் உண்மையான பாஷையாக இருந்தது**.

**அப். 19:1-7**-ல் மறுபடியும் இது ஒரு உண்மையான பாஷையாக இருந்தது. அது **அப். 2**—லும் **10**—லும் உள்ள அதேவிதமான மொழிகளில் விவரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் கவனியுங்கள். வித்தியாசங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. பிற மொழிகளில் பேசும் திறமையைக் கொடுக்கத் தகுதிப்படுத்துகின்ற இந்த வரம் ஏறக்குறைய **10**—ம் வசனத்தில் காணப்படமுடியும். இப்படி நடந்ததினாலே, **ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லோரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்.**

**தவறு-4:-** 1 கொரி. 14:2—லும், 1 கொரி. 14 —ம் அதிகாரத்தின் மற்றப் பகுதிகளிலும் ஒருவரும் புரிந்துகொள்ளாமலிருந்த ஒரு பாஷையை கொரிந்து விசுவாசிகள் சபையில் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆகையால், நாமும் இன்று அதைப்போலவே செய்வது சரியானதுதான்.

**பதில்:-** இல்லை. கொரிந்து சபையில் இதைச் செய்து கொண்டிருப்பதற்காகப் பவுல் 1 கொரி. 14-ல் உண்மையில் அந்தச் சபையினரைக் **கண்டனஞ்செய்தும்** அவர்கள்மீது அதிருப்தியோடு இப்படிச் செய்யக்கூடாது என்று ஒவ்வொருவரிடமும் கூறிக்கொண்டிருந் தான். நீங்கள் பின்வருவனவற்றைக் கவனியுங்கள்:

**வச.-6** "நான் உங்களிடத்தில் வந்து அந்நிய பாஷைகளில் (உங்களுக்குத் தெரியாத பாஷைகளில்) பேசினால் **என்னாலே உங்களுக்குப் பிரயோஜனமென்ன**?"

**வச.-7** "அப்படியே புல்லாங்குழல், சுரமண்டலம் முதலாகிய சத்த மிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள், **தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுகிறதும், சுரமண்டலத்தாலே வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படித் தெரியும்?**" (இசைக் கருவிகளுங்கூட நாம் புரிந்துகொள்ளக்கூடியவிதத்தில் ஒலியை உண்டுபண்ண வேண்டும்; அதைப்போல, நாமும் எப்பொழுதும் புரிந்துக்கொள்ளக்கூடியவிதமாகப் பேசவேண்டும்).

**வச.-8** "**அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால், எவன் யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுவான்?**" (யுத்தத் திற்கு ஆயத்தம்பண்ண இராணுவ வீரன் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் யுத்த எக்காளம் ஊதப்பட வேண்டும். அதைப்போலவே, மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் நாமும் எப்பொழுதும் பேசவேண்டும்).

**வச.-9** "அதுபோல நீங்களும் **தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால்,** பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே." (நாம் எப்பொழுதும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய விதமாகப் பேசவேண்டும்.).

**வச.-11** "ஆயினும், பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந் தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன். பேசுகிற வனும் எனக்கு அந்நியனாயிருப்பான்." (பேசுகிறவனும் கேட்பவனும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாவிட்டால் அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அந்நியரா யிருப்பார்கள்).

**வச.-14** "என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணம்பண்ணுமே யன்றி, **என் கருத்து பயனற்றதாயிருக்கும்**". (அவன் பேசுவது ஆவிக்குரியதாயிருக்கலாம்; ஆனால் அது கனி எதுவும் கொடுப்பதில்லை. அது புரிந்துகொள்ள முடியாததாக இருக்குமானால், மற்றவர்களில் பலனை உண்டுபண்ணுவதில்லை).

**வச.-16** "இல்லாவிட்டால் **நீ ஆவியோடு ஸ்தோத்திரம்பண்ணும் போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்துக்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்?** நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே". (கூட்டத்தினர் புரிந்துகொள்ளக்கூடிய விதத்திலும், ஆமென் என்று கூற அறியும் விதத்திலும் நாம் எப்பொழுதும் பேசவேண்டும்).

**வச.-19** "நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தை களைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்." (இது மிகத் தெளிவான வசனமாயிருக்கிறது).

**வச.- 20** "சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங் கள். ... புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்." (மற்றவர்களுக்கு முன்னால் ஓர் அந்நிய பாஷையில்—அறியாத பாஷையில்—பேசுவது சிறுபிள்ளைத்தனமான தாக இருக்கிறது).

**வச.- 23** "ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே (அறியாத மொழி களில்) பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்க ளல்லவா?".

**வச.- 33** "தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத் திற்குத் தேவனாயிருக்கிறார்."

கொரிந்து சபை ஏன் இங்கு தவறான காரியத்தைச் செய்து கொண்டிருந்தது என்றால், அதன் அங்கத்தினர்கள் சத்தியத்திலிருந்து தூரமாகச் சறுக்கி விழுந்திருந்தனர்—மிக மோசமாகச் சறுக்கி விழுந்திருந்தனர். கீழ்க் காண்பவைகளைக் கவனியுங்கள்:

**1 கொரி. 1:11** (வாக்குவாதங்கள், வாய்ச்சண்டைகள்) தர்க்கங்கள்.

**1 கொரி. 3:1** பவுலார் அவர்களை ஆவிக்குரியவர்கள் என்றெண்ணிப் பேச முடியாமல், மாம்சத்திற்குரியவர்களாக (உலகப் பிரகாரமான, பாவமிக்க மக்களாக) எண்ணி பேசக் கூடியவராக இருந்தார்.

**1 கொரி. 3:3** பொறாமை, வாக்குவாதம், பேதங்கள்.

**1 கொரி. 5:1-13** அவர்களுடைய சபையில் மிகப் பயங்கரமான சன்மார்க்கக் கேடு இருந்தது; ஆனால் அங்கத்தினர்கள் அதற்காக ஒன்றும் செய்யவில்லை.

**1 கொரி. 6:1- 8** ஒருவர்மீது மற்றவர் அஞ்ஞான நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்திருந்தனர்.

**1 கொரி. 11:19** (மதப் புரட்டுகள்) தவறான போதனைகள்.

**1 கொரி. 11:33,34** கர்த்தருடைய இராப்போஜனத்தைப்பற்றிய ஆவிக்குரிய பொருளை இழந்து, அதனை ஒரு முழுச் சாப்பாடாகச் செய்திருந்தனர்.

**1 கொரி. 14:16-20** புத்தியில்லாத குழந்தைகளைப்போலச் செயலாற்றியிருந்தனர்.

இதன் காரணமாகத்தான் கிறிஸ்தவர்கள் கொரிந்து சபையினரின் உதாரணத்தைப் பின்பற்ற முடியாதவர்களாக இருக்கின்றனர். இதில் கொரிந்தியர்களின் சம்பிரதாயங்களைப் பின்பற்றுவது தவறாக இருக்கும். இதனால் பவுல் அவர்களைக் கண்டிக்கவும் சீர்ப்படுத்தவும் முயற்சிசெய்ய வேண்டிவனாக இருந்தான்.

கொரிந்து சபையில் நடந்திருந்தது என்னவெனில், **இதற்குமுன்** பாஷைகளைப் பேசுகின்ற உண்மையான வரத்தைப் பெற்றிருந்த அங்கத்தினர்களில் சிலர் **(1 கொரி 1:7),** வெளியில் சென்று அந்த வரத்தை, அந்த பாஷையைப் புரிந்துகொள்ளக்கூடிய வெளிநாட்டினரிடம் பயன்படுத்துவதற்குப் பதிலாக, அவைகளைப் **புரிந்துகொள்ளும் ஒருவரும் இல்லாத** சபைக்குள், தேவனை நோக்கி ஜெபிக்கவும் அவரைத் துதிக்கவும் அதைப் பயன்படுத்திக்கொண்டிருந்தனர். அது **ஓர் உண்மையான பாஷையாக**, அதைப் **பேசினவன்** தானே என்ன பேசியிருந்தான் என்பதைப் பூரணமாக அறியக்கூடியதாக இருந்தது. ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன் **தனக்கே பக்திவிருத்தி உண்டாகப்** பேசுகிறான் (**வச.** 4) என்று பவுல் கூறுகிறான். அதாவது அவன் என்ன பேசிக்கொண்டிருந்தான் என்பதை அறிந்துகொண்டிருந்தான்; ஆனால், **சபையிலிருந்த மற்றவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை** (புரிந்துகொள்ளமுடியவில்லை). அந்த மனிதன் தேவனிடம் பேசிக்கொண்டிருந்திருக்கக்கூடும் என்பது சரிதான். அவன் பேசிக்கொண்டிருந்தது சந்தேகத்திற் கிடமில்லாதவிதமாக சுவிசேஷத்தின் தெய்வீக இரகசியத்துடன் இடைப்பட்டுக்கொண்டிருந்திருக்கும். ஆனால் அவன் பேசுவதை **ஒருவனும் புரிந்துகொள்ளவில்லை** (**வச.** 2); எனவே, **சபையாரும் புரிந்துகொள்ளவேண்டும், அவர்களும் போதிக்கப்படவேண்டும்** என்பதைப் பவுல் சுட்டிக்காட்டுகிறான் **(வச. 3-5,17,19).** இந்தக் காரணத்திற்காகத்தான், **எல்லோரும்** புரிந்துகொள்ளக்கூடிய விதமாக நாம் எப்பொழுதும் பேசவேண்டும் என்று பவுல் கூறுகிறான்.

1 கொரி 14-ம் அதிகாரம் முழுவதையும் நாம் வாசிக்கும்போது, இரண்டாவது வசனம் முழு அர்த்தத்தையும் கொடுக்கும்படி கீழ்க்காணும் விதமாக மொழிபெயர்க்கப்பட்டிருப்பதை நம்மால் காணமுடியும்.

ஏனெனில், சபையில் ஒருவருக்கும் தெரியாத ஓர் அந்நிய பாஷையில் பேசுபவன், அங்குள்ள ஜனங்களிடத்தில் பேசாமல், (**அப்படிச் செய்திருக்கவேண்டும்** என்பதாக இல்லாமல்,) தேவனுடன் மட்டும் பேசிக்கொண்டிருக்கிறான். ஏனெனில், அவன் பேசுவதை ஒருவனும்

அறிந்துகொள்ளுவதில்லை. அவன் ஆவியில் பேசிக்கொண்டிருக்கலாம்; அதாவது அவன் பேசுவது ஆவிக்குரியதாக இருக்கலாம்; ஆனால், அது அங்கிருக்கும் மக்களுக்கு ஓர் இரகசியமாக இருக்கிறது; ஆகையால், அவன் சபையில் பேசக்கூடாது; எல்லா நேரங்களிலும் பேசுபவனின் குறிக்கோளெல்லாம் பேசுவதைக் கேட்பவர்கள் போதிக்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

அந்நிய பாஷைகளின் வரத்தை உடையவர்களை அந்த வரத்தைப் பயன்படுத்துவதிலிருந்து உண்மையில் தடைபண்ணக்கூடாது (**வச. 39**); ஆனால், அதை எங்கே புரிந்து கொள்ளமுடியுமோ—கேட்பவர்கள் அதனால் நன்மையடைவார் களோ—**அந்த இடத்தில்** பயன்படுத்தப்படவேண்டும்.

உள்ளிடத்து மொழியை அறியாத ஓர் அயல்நாட்டுப் பேச்சாளன் வருவானேயானால், அவனைத் தடைசெய்யாமல், அவனுக்கென்று **எப்பொழுதும் ஒரு மொழிபெயர்ப்பாளன் ஏற்படுத்தப்படவேண்டும்** (**வச. 27**);

ஆனால், அர்த்தஞ் சொல்லுகிறவன் **இல்லாவிட்டால்,** சபையில் பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரிய அவன் பேசக்கடவன்.(**வச. 28**).

இன்று காணப்படும் பல்வேறுபட்ட பாஷை இயக்கங்கள், 1 கொரி.14-ம் அதிகாரத்தின் மூலமாகப் பவுல் கொடுத்திருக்கின்ற சட்டங்களை மீறுகின்றன என்பதுடன், பாஷைகளைப் பேசுவதில் என்ன பேசிக்கொண்டிருக்கிறான் என்பதைப் பேசுபவனும்கூட அறியாதவனாக இருக்கிறான் என்பதை, தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய மனதில் வைக்கவேண்டும். இது வேதாகமப் போதனையிலிருந்து முற்றிலுமாக வித்தியாசமானதாக இருக்கிறது.

யாராவது ஒருவருக்கு பாஷைகளின் வரம் கொடுக்கப் பட்டிருந்தாலுங்கூட, (உண்மையாகவே ஓர் அயல்நாட்டு மொழியில்) பேசுவதற்கு தகுதியிருந்தாலும், அதைப் **புரிந்துகொள்ளமுடியாத இடத்தில் அவன் பயன்படுத்தக்கூடாது.** வேறொரு இடத்திலிருந்து ஒரு பார்வையாளர் சபைக்கு வந்தால், அவருக்கு ஒரு மொழிபெயர்ப்பாளன் அவசியமானால், பாஷைகளின் வரத்தை உடையவர்களில் யாராவது ஒருவன் அவருக்கு உதவிசெய்து, அவருக்காக மொழி பெயர்க்கலாம் (**வச. 5** கவனிக்க). "அர்த்தத்தையும் சொல்லாவிட்டால்" அதாவது, மற்ற இடங்களிலிருந்து வந்திருந்து, சபையில் எவன் பேச விரும்பு கிறானோ அவனுக்காக மொழிபெயர்ப்புச் செய்ய இந்த வரத்தைப் பயன்படுத்தாத வரையில்... **வச. 13**. "பேசுகிறவன், (பேசும் தகுதியை உடையவன்; பேசக்கூடியவன்) அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதன் அர்த்தத்தையும் சொல்லத்தக்க தாக விண்ணப்பம்பண்ணக்கடவன்." (அப்படிப்பட்ட உதவி தேவைப்படும் மற்ற

இடங்களிலிருந்து வந்திருப்பவர்களுக்காக இந்த வரத்தைப் பயன்படுத்தத் தகுதியடையும்படி ஜெபம்செய்வானாக).

**தவறு- 5.** புரிந்துகொள்ளமுடியாத விதத்திலான பேச்சு ஒரு கிறிஸ்தவ நடைமுறையாக உள்ளதா?

**பதில்:-** இல்லை. பிலேயாமின் கழுதையுங்கூட தேவனால் ஏவப்பட்டபோது, புரிந்துகொள்ளக்கூடிய விதமாக, அர்த்தமுள்ளதும் உடனே எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதுமானதைத்தான் பேசினது (எண். 22:28-30). அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பாஷைகளின் வரம் பற்றிய எடுத்துக்காட்டுகள் அனைத்தும் அறிந்துகொள்ளக்கூடியவைகளாக இருந்தன (அப். 2இ10இ19). பேச் சு எப்பொழுதும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும் என்று 1 கொரி. 14-ம் அதிகாரத்தில் பவுல் கூறுகிறான். ஏனெனில், **நுண்ணறிவின் மூலமாகத்தான்** தேவன் செயலாற்றுகிறார் என்பதை வேதாகமம் தெளிவுபடுத்துகிறது (**ஏசாயா 1:18;** ரோமர் 12:1 1 பேதுரு 1:13). நுண்ணறிவில்லாத (அர்த்தமில்லாத) பேச்சு அஞ்ஞான மார்க்கத்தில் நன்கு அறியப்பட்டிருந்த ஒரு பழக்கமாக இருந்தது. **ஏசாயா 29 : 4**-லிலும் **ஏசாயா 8: 19**-லும் வேதாகமம் இதைக் குறிப்பிடுகிறது.

“தேவனை ஆராதிப்பதும் பரலோகவாசிகளுடன் நம்மை ஒருங்கிணைப்பதுமாக மனம் இருக்கிறது.”—**FE 426.**

“தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய அறிவைப் பயன்படுத்தவேண்டும் என்றும் உணர்த்துதல்களுக்காக அதனை ஒரு பக்கமாக வைக்கக்கூடாது என்றும் கர்த்தர் அவசியப்படுத்துகிறார். அவருடைய செயல், அவருடைய பிள்ளைகள் அனைவரும் **புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்**”—**1 T 230.**

“அவர்கள் (சீஷர்கள்) இதுவரை அறிமுகமானவைகளாக இராத மொழிகளில் சரளமாகப் பேசும்படி ... பரிசுத்த ஆவியானவர் அவர்களைத் தகுதிப்படுத்தினார். இப்பொழுது சுவிசேஷ சத்தியங்களை அயல்நாடுகளிலும் அறிவிக்கக்கூடியவர்களானார்கள். அவர்கள் எவர்களுக்காக ஊழியம்செய்து கொண்டிருந்தார்களோ அவர்களுடைய மொழிகளில் மிகச் சரியாகப் பேசிக்கொண்டிருந்தனர். அந்த நேரத்திலிருந்து சீஷர்களின் மொழிகள் அவர்கள் தாய் மொழியிலானாலும் பிற மொழியிலானாலும், அவர்களுடைய பேச்சு தூய்மையானதாகவும் எளிமையானதாகவும் மிகச் சரியானதாகவும் இருந்தது. பல்வேறுபட்ட மொழிகளையும் அறிந்திருந்தவர்கள், சீஷர்களால் பயன்படுத்தப்பட்டிருந்த இந்த மொழிகளின் சரியான தன்மைக்குச் சாட்சிபகர்ந்திருந்தனர்.”—**AA 39,40.** (அப். 2)

“மற்ற ஜாதியினர்களுக்கிடையில் பேசவேண்டியவர்களாக இருந்ததினால், இந்த அந்நிய மொழிகளைப் பேசுவதற்கு வல்லமையைப் பெறவேண்டியவர்களாக இருந்தனர். அப்போஸ்தலர் களும் அவர்களுடைய உடன் ஊழியக்காரர்களும் எழுத்து அறிவில்லாதவர்களாக இருந்தனர். அப்படியிருந்தபோதிலும், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டதின்மூலமாக, அவர்களுடைய பேச்சு, அவர்களுடைய சொந்த மொழியிலானாலும் அல்லது பிறமொழியிலானாலும் சரி, வார்த்தையிலும் பேசும் விதத்திலும் தூய்மையானதாகவும், எளிமையானதாகவும், மிகச் சரியானதாகவும் இருந்தன.”—DA 821.

**“பெந்தெகொஸ்தே நாளில் வெளிக்காட்டப்பட்டிருந்த விதமாக,** பரிசுத்த ஆவி இறங்கினதால், அப்போஸ்தலன் தடங்கல் செய்யப்பட்டான்.”—**SR 289**. (அப். 10)

“அவர்கள் (இயேசு சபை விசுவாசிகள்) அதற்குப்பின் இயேசுவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்று, பவுல் அவனுடைய கரங்களை அவர்கள்மீது வைத்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும் பெற்றார்கள். அதனால் அவர்கள் மற்ற ஜாதியினரின் மொழிகளைப் பேசத் தகுதிப்படுத்தப்பட்டு தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். இவ்வாறாக, அவர்கள் எபேசுவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மிஷனரிகளாகப் பணிசெய்வதற்குத் தகுதிப்படுத்தப்பட்டதுடன், ஆசியா மைனரிலும் சுவிசேஷ த்தை அறிவிப்பதற்காகச் செல்ல தகுதிப்படுத்தப்பட்டனர்.”— **A.A:283.** (அப். 19)

“பாஷைகளின் வரங்களைப்பற்றிப் (1 கொரி. 14 - ல்) பவுலால் முன்வைக்கப்பட்ட கொள்கைகள், ஜெபத்திலும் சமூகக் கூட்டத்திலும் பயன்படுத்தக்கூடிய குரலுக்குச் சமமாகப் பொருத்தப்படக்கூடியதாக இருக்கிறது. இப்படிபட்டநிலையில், நீங்கள் என்ன கூறுகிறீர்களோ அதினால் நீங்கள் **சபைக்கு பக்திவிருத்தி உண்டாக்கலாம்** அவருடைய பிள்ளைகளை முன்னேறச்செய்யலாம்… கேட்பதில் மந்தமாக உள்ளவர்களைக் கேட்கும்படிச் செய்யலாம் … பேசும் வார்த்தைகள் தெளிவாக இருக்கும்… மிகத் தெளிவான தனிப்பட்ட விதத்தில் வாசிப்பதற்குப் பயிற்சியளிக்கப்படலாம்; கவனிப்பவர்களுக்குப் போதிக்கலாம்; வார்த்தைகளை மிகச் சிறப்பான—பூரணமான உச்சரிப்புடன் தெளிவாகக் கவரும் விதத்தில் பேசலாம்.”—**CT 243-247**

“இந்த நபர்களில் சிலர் வரங்கள் என்று தாங்கள் கூறிக்கொள்ளுகின்ற பயிற்சிகளைக் கொண்டிருந்து, கர்த்தர் தங்களைச் சபையில் வைத்திருப்பதாகக் கூறுகின்றனர். அவர்கள் அர்த்தமில்லாத ஒரு

குளறு மொழியை உடையவர்களாக, அதனை அவர்கள் அறியாத மொழி என்று கூறிக்கொண்டிருக்கின்றனர். அது மனிதர்களாலும் அறிந்துகொள்ள முடியாததாக இருப்பதுடன், கர்த்தராலும் பரலோகம் முழுவதினாலும் அறிந்துகொள்ள முடியாததாகவும் இருக்கிறது! **இப்படிப்பட்ட வரங்கள் பெரும் வஞ்சகனின் உதவியுடன் புருஷர்களாலும் ஸ்திரீகளாலும் தயாரிக்கப்படுகின்றன**... அப்படிப்பட்ட ஒரு மனிதன் சத்தியத்தைவிட்டு விலகிச்செல்வானானால், முத்தூதுகளின் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் அது மிக நன்மையானதாக இருக்கும். இவர்களில் சிலர் வரங்களைப்பற்றி அதிகமாகப் பேசவேண்டிவர்களாக இருந்து, அடிக்கடிச் சிறப்பாகப் பயிற்சியுள்ளவர்களாக உள்ளனர். அவர்கள் காட்டுத்தனமாக, உணர்ச்சிகளைத் தூண்டுகின்ற உணர்ச்சிகளுக்குத் தங்களைத் தாங்களாகவே விட்டுக்கொடுத்து, அர்த்தமற்ற ஓசைகளை உண்டுபண்ணி, அவைகளை, பாஷைகளின் வரம் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள், குறிப்பிட்ட வகுப்பினர் இந்த மாறுபட்ட வெளிக்காட்டுதல்களினால் கவரப்பட்டிருக்கின்றனர். இப்படி கடிந்துகொள்பவர்களை—அவர்களை ஆளுகின்ற அந்த விநோத ஆவி, பாய்ந்து கீழே தள்ளுகிறது. அப்படிப்பட்ட வேலையில் தேவனுடைய ஆவி இல்லை. அப்படிச் செயலாற்றுகின்றவர்களிடம் அது செயல்படுவதுமில்லை. **அவர்கள் வேறொரு ஆவியை உடையவர்களாக இருக்கின்றனர்**... சத்தியத்தைப் பிரசங்கம்செய்பவர்கள் அவர்களுடைய நடத்தையில் தூய்மையாக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டியது மிகவும் அதிகமானதான—முக்கியமானதாக—இருக்கிறது என்பதை நான் கண்டேன். அவர்கள் இயற்கைக்கு மாறான அங்க அசைவுகளையும் கிறுக்குத்தனமான தன்மைகளையும் விட்டு விலகி, சத்தியத்தை அதன் தூய்மையுடனும் தெளிவான விதத்திலும் முன்வைக்கவேண்டும் ... மற்றவர்களிடம் இல்லாத வரங்கள் தங்களிடம் இருக்கிறதென்று சிலர் களிகூர்ந்து வெற்றிச் சிரிப்புச் சிரிக்கின்றனர்; **அப்படிப்பட்ட வரங்களிலிருந்து தேவனுடைய ஜனங்களை அவர் விடுவிப்பாராக**...! பொருத்தமற்ற இவர்கள் தங்களுடைய வித்தியாசமான அபிப்பிராயங்களைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள் ஒன்றுசேர்ந்து வரும்போது, அங்கு குறிப்பிடக்கூடியவிதத்தில், குறிப்பிட்டவிதமாக உணர்ச்சிகளின் கொந்தளிப்பும் அறியாத பாஷையும் உண்டா கின்றன. அவர்கள் தங்களுடைய ஒளியை அவ்விதமாய் பிரகாசிக்கவிடுவதனால், இந்த மனிதர்களை பைத்தியக்காரர்கள் என்று கூறுவார்கள். தவறான ஒரு உணர்ச்சியின் உந்துதலினால் அவர்கள் எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றதையும், அவர்களிடத்தில் சத்தியம் இல்லை என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம்; அப்படிப்பட்டவர்கள் பாவிகளின் பாதையில் நேராக நிற்கின்றனர். ஓய்வுநாளை ஏற்றுக்கொள்ளுவதிலிருந்து மற்றவர்களைத் தூரமாக விலக்கிவைப்பதிலும், அவர்களுடைய செல்வாக்கு சக்தியுள்ளதாக

இருக்கிறது; அப்படிப்பட்டவர்கள் அவர்களுடைய செயல்களுக்குத்தக்க பலனை அடைந்துகொள்ளுவார்கள். **அவர்கள் சீர்திருத்தம் அடைவார்களாக, அல்லது ஓய்வுநாளை விட்டுவிடுவார்களாக.** அறிவுக்கு இணங்காத, ஒரு பலமிக்க ஆவியை உடையவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அது அவர்களை அவர்களுடைய சொந்த அழிவிற்குத் தான் வழிநடத்தும்."—**1T 411-420.** ★

# 11

# தூதர்கள்!

**விளக்கம்**

**எபி. 2:6,7** மனிதன் தேவ தூதரிலும் சற்றுச் சிறியவனாக உண்டு பண்ணப்பட்டான்; ஆகையால், தேவதூதர்கள் மனிதர்களைவிட உயர்ந்தவர்களாகவும் வித்தியாசமானவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் மனிதர்களுக்கு முன்பே இருந்திருந்தனர் (ஆதி. 3:24). தேவதூதர்களும் **படைக்கப்பட்டவர்களே** (**எசே. 28:15; கொலோ. 1:16**).

**வெளி. 22:8,9** அவர்களை வணங்கக்கூடாது (ஏனெனில், அவர்கள் படைக்கப்பட்டவர்களே).

**எபி. 1:6** அவர்கள் மனிதன் செய்வதுபோல, இயேசு கிறிஸ்துவை வணங்குகின்றனர்.

**எபி. 1:14** மனிதனின் நுண்ணறிவு, வல்லமை ஆகியவைகளில் மனிதனின் புரிந்துகொள்ளுதலைவிட பெரிய தன்மைகளை உடையவர்களாக அவர்கள் இருப்பதனால் அந்த அர்த்தமுடைய ஆவிகள் என்று கூறப்படுகின்றனர். அவர்கள் **உண்மையான உருவம் உடையவர்கள்.** சில சமயங்களில், அவர்கள் மனிதர்களால் காணப்பட்டிருக்கின்றனர் (எண்.22:31இ35). மிருகங்களினாலுங்கூட காணப்பட்டிருக்கின்றனர் (எண். 22:22-27). தேவதூதர்கள் லோத்துடன் புசிக்கவும் குடிக்கவும் செய்தனர். (ஆதி. 19:1-3 எபி.13:2 பார்க்கவும்).

**சங். 103:20** பலத்தில் மேலானவர்கள்.

**தானி. 9:21** வேகமாகப் பறக்கமுடியும்.

**வெளி. 5:11** பதினாயிரம் தடவை பதினாயிரங்களாக உள்ளவர்கள். எபி. 12:22 பார்க்கவும். சிலர் கேருபீன் என்று அழைக்கப்படுகின்றனர் (எசே. 10:1); சிலர் சேராபீன் என்று அழைக்கப்படுகின்றனர்.

**தேவதூதர்களின் ஊழியங்கள் (பணிகள்)**

தேவதூதர் என்னும் சொல், தூதுவர்கள் என்று பொருள்படும். அவர்கள் தேவனுடைய தூதுவர்களாக உள்ளனர்.

**எபி. 1:14** ஊழியம்செய்யும் பணிவிடை ஆவிகளாக உள்ளனர். அல்லது பூமியிலுள்ள தேவனுடைய ஜனங்களுக்கு உதவுபவர்களாக உள்ளனர்.

**சங்.. 34:7** தேவனுடைய ஜனங்களைப் பாதுகாத்து விடுவிப்பவர்களாக உள்ளனர்.

**மத். 18:10** ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு சிறு பிள்ளையுங்கூட ஒரு தனிப்பட்ட காவல் தூதனைக் கொண்டிருக்கிறான்.

**மத். 24:31** கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவரைச் சந்திக்கும் படி தேவதூதர்கள் தேவனுடைய ஜனங்களைக் கூட்டிச் சேர்க்கின்றனர்.

**குறிப்பு :-** இயேசுவின் வாழ்க்கையில் தேவதூதர்கள் அநேக தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இயேசுவின் பெற்றோர்களைத் தேவதூதர்கள் வழி நடத்தினார்கள் (மத். 1:20; 2:13,19). அவர் பிறந்த இரவில் பாடல்களைப் பாடினார்கள் (லூக்கா 2:13,14). அவருடைய சோதனையின் நேரத்தில் அவருக்கு ஊழியம்செய்தார்கள் (மத். 4:11). கல்லறையிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளினார்கள்(மத். 28:2).உயிர்த்தெழுந்ததை அறிவித்தார்கள்(மத். 28:5-7).

சோதோமிலிருந்து லோத்து தப்பிச்செல்வதற்கு உதவினதில் தேவதூதர்கள் மனிதனுக்கு உதவிசெய்வது காணப்படுகிறது (ஆதி. 19:15,16). தோத்தானில் எலிசாவை விடுவித்தார்கள் (2 இராஜா. 6:14-18). சனகரீப்பின் சேனையை அழித்ததினால், தேவனுடைய ஜனங்களை விடுவித்தனர் (ஏசாயா 37:33-36). தானியேலை சிங்கக் குகையிலிருந்து விடுவித்தார்கள் (தானி. 6:22). பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்தனர் (அப். 12:6-10).

தேவதூதர்கள் மனிதர்களிடம் பேசியிருக்கின்றனர். ஆபிரகாமிடம் (ஆதி. 18:1-33), திராட்சை ஆலைக்கு அருகில் கிதியோனிடம் (நியா. 6:11-22), மானோவாவிடமும் அவனுடைய மனைவியிடமும் (நியா. 13:2-21), தானியேலிடம் (தானி. 9:20-27), யோவான் ஸ்நானகனின் பிறப்பைப்பற்றிச் சகரியாவிடம் (லூக்கா 1:11-20), இயேசுவின் பிறப்பைப்பற்றி மரியாளிடம் (லூக்கா 1:26-38). அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபையில் தேவதூதர்கள் சிறைக்

கதவுகளைத் திறந்தார்கள் (அப். 5:19; 12:7-11). மிஷனரி ஊழியத்தில் வழிகாட்டினார்கள் (அப். 8:26). சுவிசேஷத்தைப்பற்றி விசாரிக்கும்படி, கிறிஸ்தவர்க ளல்லாதவர்களை உணர்த்தினார்கள் (அப்.10:1-8). கடலில் புயல் காற்று உண்டானபோது, பவுலுக்கு முன்தோன்றினான் (அப். 27:23,24). யோவானின் தீர்க்கதரிசனக் காட்சியின்போது, அவனருகில் நின்றிருந்தான் (வெளி. 1:1).

"காணப்பட்டதும்காணப்படாததுமான எவ்விதமான அபாயங்களிலிருந்து நாம் தேவதூதர்களின் குறுக்கிடுதலினால் பாதுகாக்கப்பட்டிருந்திருக்கிறோம் என்பதை, தேவனுடைய தெய்வீக ஏற்பாடுகளை நாம் நித்தியத்தின் ஒளியில் காணும்வரை நாம் ஒருபோதும் அறியமாட்டோம். அப்பொழுது நாம் இங்கு கீழே உள்ள குடும்பத்தின்மீது பரலோகத்தின் குடும்பம் முழுவதும் அக்கறை உள்ளதாக இருந்தது என்பதையும், தேவ சிங்காசனத்திலிருந்துள்ள தூதுவர்கள் நாளுக்கு நாளாக நமது அடிச்சுவடுகளை கவனித்திருந்தனர் என்பதையும் நாம் அறிந்து கொள்ளுவோம்."—**DA 240**

"கிறிஸ்துவின் ஒவ்வொரு அடியானுக்காகவும் ஒரு காவல் தூதன் நியமிக்கப்பட்டிருக்கிறான்."—**GC 512**

"மனிதர்களின் ஒவ்வொரு வார்த்தையையும் செயலையும் காண முடியாததாக உள்ள ஏதுகரங்கள் கவனித்துக்கொண்டிருக்கின்றன. தொழில் சம்பந்தப்பட்டதாகவோ சந்தோஷம் சம்பந்தப்பட்டதாகவோ உள்ள ஒவ்வொரு கூட்டத்திலும், ஆராதனைசெய்யக்கூடுகின்ற ஒவ்வொரு கூட்டத்திலும் கண்பார்வையில் காணப்படுபவர்களைவிட அதிகமான எண்ணிக்கையில் கவனிப்பவர்கள் உள்ளனர். சந்திக்கும் தூதர்களின் ஊழியத்தை நாம் புரிந்துகொண்டிருப்பதைவிட அதிகமாகப் புரிந்துகொள்ளவேண்டியது அவசியம்."—**COL 176.**

"நமது ஆவிக்குரிய பார்வை உயிர்ப்பிக்கப்படுமானால் … சோதிக்கப்படுகின்ற ஒருவருக்கு உதவிசெய்வதற்காக, அவர்களைச் சூழ்ந்திருக்கும் பொல்லாத சேனைகளைப் பின்னிட்டுத்தள்ளுவதற்காகவும், அவர்களுடைய பாதங்களை உறுதியான அஸ்திபாரத்தின்மீது நிறுத்து வதற்காகவும், தேவதூதர்கள் விரைவாகப் பறந்துகொண்டிருப்பதை நம்மால் காணமுடியும். இந்த இரண்டு சேனைகளுக்குமிடையில் நடக்கும் போர், இந்த உலகத்திலுள்ள சேனைகளால் நடத்தப்படும் போரைப்போலவே உண்மையானதாக இருக்கிறது. இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் உள்ள பிரச்சினை (காரியம்) நித்திய விதிகளைச் சார்ந்திருக்கிறது."—**PK 176.**

"மீட்கப்பட்ட ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்த வாழ்க்கையி லிருந்த தேவதூதனின் ஊழியத்தைப் புரிந்துகொள்ளுவான். அவனுடைய

ஆரம்ப நேரத்திலிருந்து, அவனுடைய காவல் தூதனாக இருந்தவன், அவனுடைய அடிச்சுவடுகளைக் காவல்செய்திருந்து, ஆபத்துக் காலத்தில் அவனுடைய தலையைக் காத்திருந்த தூதன், மரண இருளின் பள்ளத்தாக்கில் அவனுடனிருந்து, அவன் இளைப்பாறும் இடத்தை அடையாளப்படுத்தின தூதன், உயிர்த்தெழுதலின் காலை வேளையில், அவனை வாழ்த்துவதில் முதலாவதானவனாக இருந்தவன்—தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்த தெய்வீகக் குறுக்கிடுதலின் வரலாற்றை அறிந்துகொள்ளுவதும், மானுடத்திற்கான ஒவ்வொரு பணியிலும் இருந்த பரலோகத்தின் கூட்டுறவை அறிந்துகொள்ளுவதும், அவைகளைப்பற்றி அவனுடன் உரையாடுவதும் எப்படிப்பட்டதாக இருக்கும். வாழ்க்கையின் அனுபவத்திலிருந்த குழப்பங்கள் அனைத்தும் அப்பொழுது விளக்கப்படும். குழப்பம், ஏமாற்றம், உடைந்துபோன நோக்கங்கள், திட்டங்களில் உண்டான ஏமாற்றங்கள் ஆகியவை பெரும் எதிர்முடிவாகவும் வெற்றிகரமான நோக்கமாகவும் தெய்வீக இசைவாகவும் காணப்படும்."—**Ed. 305.** ★

# 12

# பாவமென்னும் பிரச்சனை

## பாவம் என்றால் என்ன?

**1 யோவான் 3:4** "நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்."

## பாவத்தின் தோற்றுவாய்...

**யோவான் 8:44** சாத்தான் பாவத்திற்குத் தகப்பனாக (அல்லது தோற்றுவாயாக) இருக்கிறான் (1 யோவான் 3:8 – ம் பார்க்கவும்).

**எசே. 28:14** ஆதியில் சாத்தான் ஒரு தூதனாக—தேவ அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேரூபாக— பரலோகத்தில் இருந்தான். அவன் ஞானத்தால் நிறைந்தவனாக, பூரண அழகுள்ளவனாக இருந்தான் (வச. 12).

**குறிப்பு:**– இது தீருவின் அரசனுக்கு எதிராகக் கூறப்பட்டதாக இருந்த போதிலும் (வச. 12), இந்த வார்த்தைகள் **அந்த அரசனுக்குப் பின்னாலிருந்த வல்லமையான**—சாத்தானுக்கெதிராகத்தான் உண்மையாகக் கூறப்பட்டிருந்தது. அது சாத்தானாக—தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் (வச. 13), ஒரு சமயத்தில் அவன் காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூபாக இருந்தான் (வச. 14).

**எசே. 28:15** அவன் பூரணமானவனாகச் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான்.

**எசே. 28:17** அகந்தையினால் அவன் விழுந்தான்.

**ஏசாயா 14:12** அவன் முதலில் **லூசிபர்** என்று அழைக்கப்பட்டிருந்தான்.

**ஏசாயா 14:12–15** அவன் இருதயத்தில் அகந்தை பிரவேசித்தது.

| | |
|---|---|
| **வெளி. 12:4,7–10** | மூன்றில் ஒரு பங்கு தேவதூதர்கள் சாத்தானால் வஞ்சிக்கப் பட்டனர். சாத்தானும் அவனைப் பின்பற்றின தேவ தூதர்களும் பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டனர். |
| **ஆதி. 3:1–4** | ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததினால், சாத்தானிடத்தில் விழுந்தார்கள். பாவம் இந்த உலகத்திற்குள் பிரவேசித்தது. |
| **ரோமர் 5:12** | எல்லாரும் பாவம் செய்ததினால் பாவம் எல்லோருக்கும் வந்தது. |
| **1 பேதுரு 5:8** | பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமென்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். |

## பாவத்தின் பலன்கள்

| | |
|---|---|
| **ஆதி 3:8–10** | பயம்… |
| **ஆதி. 3:19** | கடினமான உடலுழைப்பின் வேலை. |
| **ரோமர் 6:23** | பாவத்தின் சம்பளம் மரணம். (எசே. 18:4,20–ம் பார்க்க). |
| **ஏசாயா 1:4–6** | பாவத்தால் மனிதன் கோரமானவனாக, கலகம் செய்பவனாக, நோயுற்ற மனிதனாக இருக்கிறான். |
| **ஏசாயா 59:2** | தேவனிடத்திலிருந்து விலகினவனாக இருக்கிறான். |
| **ஏசாயா 64:6** | மனிதனுடைய நீதியெல்லாம் அழுக்கடைந்த கந்தையாகு மளவுக்குப் பாவம் அவனை அதிகமாகக் கெடுக்கிறது. |
| **ரோமர் 8:7** | நன்மையானவைகளைச் செய்கின்ற வல்லமையையெல்லாம் மனிதன் இழந்துவிடுகிறான். ரோமர் 7:18–24–ஐப் பாருங்கள். |

## பாவத்தைச் சுகப்படுத்தும் மருந்து

| | |
|---|---|
| **ரோமர் 7:24,25** | "இந்த மரண சரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்." |
| **யோவான் 1:29** | "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி." |
| **எபி.9:26** | "தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே, பாவங்களை நீக்கும் பொருட்டாக…" (தம்மைத்தாமே பலியிட்டதினால், இயேசு நமது பாவத்தைச் சுமந்து நீக்கினார்). |
| **1 பேதுரு 2:24** | "அவர்தாமே தமது சரீரத்திலே நமது பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்." |

| | |
|---|---|
| **கொலோ. 1:20** | "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே... யாவையும் ஒப்புரவாக்கினார்." |
| **எபி. 2:18** | "சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவரா யிருக்கிறார்." |
| **எபி. 4:16** | "ஏற்ற சமயத்தில் சகாயம்செய்ய ..." |
| **யாக். 4:7** | "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் .... அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்." |
| **2 பேதுரு 3:9–14** | "தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல்" |
| **வெளி. 21:8** | பாவமும் பாவிகளும் அழிக்கப்படுகின்றனர் (வெளி. 20:14,15–யும் பார்க்கவும்). |
| **எசே. 28:18,19** | சாத்தானின் முடிவு. |
| **நாகூம் 1:9** | "சர்வசங்காரம்பண்ணுவார், இடுக்கம் மறுபடியும் உண்டாகாது." |
| **வெளி. 21, 22** | "புதிய வானம், புதிய பூமி." |

பாவத்தின் உற்பத்தியும் அது உயிர்வாழ்வதற்கான காரணமும் அநேக மனங்களுக்குப் பெரும் குழப்பத்தின் ஓர் ஆதாரமாக இருக்கின்றது. அவர்கள் தீமையின் செயலை, துன்பத்தையும் பாழ்க்கடிப்பையும் உண்டுபண்ணும் அதின் பயங்கரமான பலன்களுடன் அதை காண்கின்றனர். ஞானத்திலும் வல்லமையிலும் அன்பிலும் முடிவில்லாதவராக இருக்கும் ஒருவருடைய இறையாண்மையின்கீழ் இவை அனைத்தும் எவ்விதமாக இருக்கின்றன என்று அவர்கள் கேள்வி கேட்கின்றனர். ... பாவம் உயிர்வாழ்ந்துகொண்டிருப்பதற்கான காரணத்தைக் காட்டக்கூடியவிதத்தில் அதன் தோற்றுவாயைப்பற்றி விளக்குவது முடியாததாக உள்ளது; இருந்தபோதிலும், அதன் தோற்றுவாய்பற்றியும் இறுதி முடிவுபற்றியும் போதுமான அளவிற்கு அறிந்துகொள்ளமுடியும். தீமையுடனுள்ள தேவனுடைய இடைப்படுதலில் அவருடைய நீதியும் அனுதாபமும் முழுவதுமாக வெளிக்காட்டப்பட்டதிலிருந்து போதுமான அளவில் அறிந்துகொள்ள முடியும். பாவம் ஓர் ஆக்கிரமிப்புக்காரன். இதன் பிரசன்னத்திற்கு எந்தவிதமான காரணமும் கொடுக்கமுடியாது. அது இரகசியமானது, கணக்குக்காட்டமுடியாது; அதற்கு சாக்குப்போக்கு கொடுப்பது, அதை ஆதரிப்பதாக—காப்பதாக—இருக்கும். அதற்குச் சாக்குபோக்குக் காணமுடியுமானால், அல்லது அது உயிர்வாழ்வதற்கான காரணம் காட்டமுடியுமானால், அப்பொழுது அது

பாவமில்லை என்றாகிவிடும்”—**GC 492.**

“தன்னை உயர்த்தவேண்டும் என்ற வாஞ்சையை லூசிபர் கொஞ்சங் கொஞ்சமாக நடப்பித்தான் … பரலோக சேனைக்கு மேலாக அவன் கனப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அந்தப் பதவியில் திருப்திப்படாதவனாக இருந்த அவன், சிருஷ்டிகர் ஒருவருக்குமட்டுமே உரித்தானதாக இருந்த வணக்கத்தை அடைந்துகொள்ள பிறர் பொருளின்மீது ஆசைவைக்கத் துணிந்தான்.”—**PP 35.**

“தீமை முதிர்ச்சியடைவதற்காக அனுமதிக்கப்படவேண்டும். முடிவில்லாத யுகங்களுக்கூடாக பிரபஞ்சம் முழுவதின் நன்மைக்காவும் சாத்தான் அவனுடைய கொள்கைகளை மிக அதிகமாக முன்னேற்றமடையச் செய்தாக வேண்டும். தேவ அரசாங்கத்திற்கெதிரான அவனுடைய குற்றச் சாட்டுகள் அதன் உண்மையான ஒளியில் காணப்படவேண்டும். தேவனுடைய நீதியும் இரக்கமும் அவருடைய பிரமாணத்தின் மாறாத தன்மையும் எல்லாக் கேள்விகளுக்கும் அப்பால் என்றென்றைக்கும் வைக்கப்படவேண்டும்.”—**GC 499.**

“அது ‘முடிந்தது’ என்னும் இரட்சகரின் மரணத் தருவாயின் குரலில், சாத்தானுக்கான சாவுமணி ஒலித்தது.”—**GC 503.**

“சாத்தானின் வல்லமையை மொத்தமாக மிக அதிகமானதாக நினைக்கின்றவர்களும் பேசுகின்றவர்களுமான கிறிஸ்தவர்கள் இருக்கின்ற னர். அவர்கள் தங்களுடைய எதிரியைப்பற்றி நினைத்து, அவனைப்பற்றிப் பேசுகின்றனர். அவன் அவர்களில் பெரியதும் மிகப் பெரியதுமான கற்பனைகளை (தோற்றங்களை) செய்துவிடுகிறான். சாத்தான் வல்லமையுள்ள ஒருவன் என்பது மெய்தான்; ஆனால், நமக்கு ஒரு பலமிக்க இரட்சகர்—பரலோகத்திலிருந்த பொல்லாத ஒருவனை வெளியேற்றிவிட்ட ஒருவர்—இருக்கிறார் என்பதற்காக நாம் தேவனுக்கு நன்றிகூறுகிறோம்.”—**DA 493.**

★

# 13

# மீட்பின் திட்டம்

**குறிப்பு**:- மீட்கப்பட்டவர்கள் என்றால், திரும்பவும் விலைக்கு வாங்கப்பட்டவர்கள் என்று பொருள்படுகிறது.

### கிறிஸ்து ஏன் பூமிக்கு வந்தார்?

**1 தீமோ. 1:15** "பாவிகளை இரட்சிக்க இயேசு உலகத்திற்கு வந்தார்."

**லூக்கா 19:10** "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தார்."

**மத். 1:21** "தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார்."

### நம்மை இரட்சிப்பதற்காக இயேசு என்ன செய்தார்?

**மத். 20:28** "அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கும்படி வந்தார்."

**1 பேதுரு 2:24** "தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்."

**ஏசாயா 53:4-6** "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு—நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."

**எபி. 9:26** "தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக ..."

**யோவான் 1:29** "இதோ, உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி."

**குறிப்பு:-** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலிசெலுத்தப்பட்ட மிருகங்கள் பழுதற்றவைகளாக இருக்கவேண்டியவைகளாக இருந்தன. பாவிக்குப்பதிலாக—பாவியின் இடத்தில்—அவை கொலைசெய்யப்பட்டிருந்தன. இது வரவிருந்த தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை—நமது இடத்தை எடுத்துக்கொள்ளவிருந்த, பூரணமான—பாவமற்ற ஒருவரைச் சுட்டிக்காட்டிக்

கொண்டிருந்தது. இயேசு மரித்ததினால் நாம் விடுதலையாகிச் செல்லலாம். நம்மை இரட்சிப்பதற்காக நமக்காக கிறிஸ்து மரிக்கவேண்டியதிருந்தது.

**நமது பாவமுள்ள இடத்தை எடுத்துக்கொள்ளுவதற்காகப் பாவமற்ற ஒருவராகிய இயேசு அவரது நீதியைத் தருகிறார்**

**1 பேதுரு 2:22** "அவர் பாவம் செய்யவில்லை."

**எபி. 7:26** "பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும்..."

**2 கொரி. 5:21** "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."

**குறிப்பு** :- இவ்வாறாக, பாவம் இல்லாதவரான இயேசு, நமது பாவத் தன்மையின் பொருள்மாற்றமாக, அவருடைய பாவமில்லாத ஜீவனை நமக்குத் தருகிறார். ஒரு பாவியைப்போல இயேசு சிலுவையின்மீது மரித்தார். நாம் விடுதலைபெற்றுச் செல்லும்படி நமது பாவங்களுக்காக அவர் தண்டிக்கப்பட்டார்; ஆனால், அதுவே மனிதனின் இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டமாக உள்ளது.

**கிறிஸ்துவின் தியாகபலி முழுமையானதும் நிறைவானதும் எல்லாப் பாவங்களையும் மூடிக்கொள்ளக்கூடியதுமாக இருக்கிறது**

**எபி. 10:10** "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் எல்லாவற்றிற்காகவும் பலியிடப்பட்டது."

**எபி. 10:12** "இவரோ (என்றென்றைக்கும்) பாவங்களுகாக ஒரே பலியைச் செலுத்தி..."

**எபி. 7:25** "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்."

**1 யோவான் 1:7** "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."

**குறிப்பு** :- ஒரு நீதிமன்றத்தில் நமக்கு அபராதம் விதிக்கப்பட்டால், நமக்காக ஓர் அன்பான சிநேகிதன் அந்த அபராதத்தைச் செலுத்திவிட்டால், அதன் பொருள் நாம் விடுதலையாகிச் செல்லலாம் என்பதாகும். நமது பாவத்திற்கான முழுக் கிரயத்தையும் நமது நண்பரான இயேசு கொடுத்துவிட்டார். அதனால் இப்பொழுது நாம் தண்டனையில்லாமலும் வேறு எந்த விலையையும் செலுத்தாமலும் நாம் விடுதலையாகிச் செல்லலாம். இவை அனைத்தையும் இயேசு நமக்காகச் செலுத்தியிருக்கிறார்; இதுதான் சுவிசேஷமாக இருக்கிறது.

“நமது அக்கிரமங்களெல்லாம் நமது பதிலாளியும் பிணையாளியுமாக உள்ள கிறிஸ்துவின்மீது வைக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் ஆக்கினை யிலிருந்து நம்மை மீட்பதற்காக அவர் ஒரு மீறுதல்காரராக எண்ணப்பட்டார். ஆதாமின் பின்சந்ததியினர் ஒவ்வொருவரின் குற்றமும் அவரது இருதயத் தின்மீது அழுத்திக் கொண்டிருந்தது. பாவத்திற்கெதிரான தேவனுடைய கோபம், அக்கிரமத்தின் காரணமாகப் பயங்கரமான விதத்தில் வெளிக்காட்டப் பட்ட அவருடைய கோபம், அவருடைய குமாரனின் ஆத்துமாவைப் பேரச்சத்தால் நிரப்பினது. கிறிஸ்து அவருடைய வாழ்க்கை முழுவதிலும், விழுந்துபோன ஓர் உலகத்திற்கு பிதாவின் இரக்கம், மன்னிக்கும் அன்பு ஆகிய நற்செய்தியை வெளியிட்டுக்கொண்டிருந்தார். பாவிகளில் பிரதான பாவிக்கு இரட்சிப்பு என்பது அவரது கோட்பாட்டின் கருப்பொருளாக இருந்தது; ஆனால், இப்பொழுது அவர் சுமந்துகொண்டிருக்கும் குற்றத்தின் பயங்கரமான பாரத்தினால், ஒப்புரவாக்கிகொண்டிருக்கும் பிதாவின் முகத்தை அவரால் பார்க்கமுடியாது. மிக அதிகமாக வேதனைமிக்க இந்த நேரத் தில் இரட்சகரிடமிருந்து தெய்வீக முகம் பின்னிழுத்துக்கொள்ளப்பட்டது. மனிதனால் ஒருபோதும் முழுவதுமாகப் புரிந்துகொள்ளமுடியாத துயரத்தால் அவருடைய இருதயம் துளைக்கப்பட, அவருடைய சரீர வேதனையையும் உணரமுடியாத அளவு இந்த மனவேதனை பெரிதாக இருந்தது…”

“சாத்தான் பயங்கரமான சோதனைகளினால் இயேசுவின் இருதயத்தைக் கிழித்தான். கல்லறையின் பிரகாரங்களுக்கூடாக இரட்சகரால் பார்க்கமுடியவில்லை. கல்லறையிலிருந்து ஒரு வெற்றி வீரராக அவர் வருவதையும், அவருடைய பலியை அவருடைய பிதா ஏற்றுக் கொண்டதையும்பற்றிய நம்பிக்கை அவர்முன் காணப்படவில்லை. பாவம் தேவனுக்கு மிகவும் எதிர்ப்பானதாக இருப்பதனால், அவர்களுடைய பிரிவினையும் நித்தியமானதாக இருக்கும் என்று அவர் பயந்தார்.”

“குற்றமுள்ள இனத்திற்காக இரக்கம் அதற்குமேல் பரிந்துபேசாதபோது, பாவி உணரக்கூடிய மனவேதனையைக் கிறிஸ்து உணர்ந்தார். மனிதனின் பதிலாளியாக இருந்த தம்மீது, பிதாவின் கோபத்தைக் கொண்டுவந்து கொண்டிருந்த பாவத்தின் உணர்வு, அவர் பானஞ்செய்திருந்த பாத்திரத்தை மிகவும் கசப்பாக்கி, தேவகுமாரனுடைய இருதயத்தை உடைத்தது.”—**DA 752,753.**

“பாவத்திற்கான பாவ நிவாரணமாக இருந்த கிறிஸ்துவின் தியாக பலியானது, மற்றெல்லாச் சத்தியங்களும் அதனைச் சுற்றிக் குலையாகத் தொங்கிக் கொண்டிருக்கும் மாபெரும் சத்தியமாக உள்ளது.”—**GW 315.** ★

# 14

# கிறிஸ்துவினால் மாத்திரமே மீட்பு

### ஒரே இரட்சகராகிய கிறிஸ்து

**அப் 4:12** "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வேறொரு நாமம் இல்லை."

**1 பேதுரு 2:24** "அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங் களைச் சிலுவையின்மேல் சுமந்தார்."

**1 பேதுரு 3:18** "கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களுக்காய் ஒருதரம் பாடுபட்டார்."

**மத். 20:28** "மனுஷகுமாரனும் ... அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார்."

**ஏசாயா 53:4-6** "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமங்களையும் அவர்மேல் விழப்பண்ணினார்."

### இயேசுவில் முழுமையான சுத்திகரிப்பும் மன்னிப்பும் உள்ளது

**1 யோவான் 1:7** "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."

**1 யோவான் 1:9** "எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."

### இந்தப் பாவமன்னிப்பு தேவனிடத்திலிருந்துமட்டுமே வருகிறது

**1 யோவான் 1:9** "அவர் (இயேசு) பாவங்களை நமக்கு மன்னிக்கிறதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்."

**எபே. 1:7** "... பாவமன்னிப்பு இவருக்குள் நமக்கு உண்டாகி யிருக்கிறது."

**சங். 32:5** "நான், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்."

| | |
|---|---|
| **ஏசாயா 43:25** | "நான், நானே உன் மீறுதல்களைக் குலைத்துப் போடுகிறேன்." |
| **தானி. 9:19** | "எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு." |
| **மீகா 7:18,19** | "அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்?" |
| **லூக்கா 5:21** | "தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத் தக்கவன் யார்?" |

**குறிப்பு** :- ஒரு மனிதன், அவனால் பாவங்களை மன்னிக்கமுடியும் என்று கூறுவது தேவதூஷணமாக இருக்கிறது. இது தேவன் ஒருவரால்மட்டுமே செய்யக்கூடிய ஒன்றாக இருக்கிறது; ஆதலால், நாம் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். எபி. **4:16.**

**தேவன் எவ்விதமாக நமது பாவங்களை முற்றும் முடிய மன்னிக்கிறார் என்பதைக் கவனியுங்கள் :-**

| | |
|---|---|
| **சங். 103:12** | "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய்" |
| **ஏசாயா 1:18** | "உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்... பஞ்சைப் போலாகும்." |
| **ஏசாயா 38:17** | "உம்முடைய முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர்." |
| **ஏசாயா 43:25** | "நினையாமலும் இருப்பேன்." |
| **ஏசாயா 44:22** | "கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன்." |
| **மீகா 7:19** | "பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டு விடுவார்." |
| **2 கொரி. 5:19** | "உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல்", |

**இந்தப் பாவமன்னிப்பும் இந்த இரட்சிப்பும்**
**அனைவருக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது!**

| | |
|---|---|
| **மத். 9:13** | "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்." |
| **லூக்கா 19:10** | "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்திருக்கிறார்." |
| **யோவான் 6:37** | "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." |

**வெளி. 22:17** "விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாக வாங்கிக்கொள்ளக்கடவன்."

நம்மை மீட்பதற்காகத்தான் இயேசு வாழ்ந்து பாடுபட்டு மரித்தார். நாம் நித்திய மகிழ்ச்சியில் பங்குபெறவேண்டும் என்பதற்காக அவர் ஒரு துயரமிக்க மனிதனானார். விவரிக்கமுடியாத மகிமையை உடைய ஓர் உலகத்திலிருந்து, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவரான தேவ குமாரனை, பாவத்தினால் சீர்குலைந்தும், அழிவுக்குரியதும், மரணத்தின் நிழலினாலும், சாபத்தினாலும் இருளடைந்துமிருந்த ஒரு உலகத்திற்கு தேவன் அனுமதித்திருந்தார். அவரது அன்பின் மடியை விட்டுச்செல்லவும், தேவதூதர்களின் போற்றுதலை விட்டுச்செல்லவும், அவமானம், கேவலம், நிந்தை, வெறுப்பு, மரணம் ஆகியவைகளை அனுபவிக்கும்படியும் அவரை (இயேசுவை) (தேவன்) அனுமதித்தார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவரது தழும்புகளால் குணமாகிறோம். வனாந்தரத்தில் கெத்சமெனேயில் சிலுவையின்மேல் அவரைப் பாருங்கள்! கறை எதுவும் இல்லாத தேவ குமாரன் பாவப் பாரத்தைத் தம்மீது சுமந்துகொண்டார். தேவனுடன் ஒன்றாக இருந்த ஒருவர், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பாவம் உண்டுபண்ணுகின்ற பயங்கரமான பிரிவினையை அவருடைய ஆத்துமாவில் அவர் உணர்ந்தார். இது, என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்னும் மனத்துயரம்மிக்க அழுகுரலை அவருடைய உதடுகளிலிருந்து ஒலிக்கச் செய்தது. பாவத்தின் பாரம், அதன் பயங்கர அதிகமான அளவு, தேவனிடமிருந்து ஆத்துமாவைப் பிரிக்கின்ற அதன் தன்மை - இதுதான் தேவ குமாரனுடைய இருதயத்தை உடைத்தது.

ஆனால், தேவனுடைய இருதயத்தில் மனிதனைப்பற்றிய ஓர் அன்பை உண்டுபண்ணுவதற்காக, அவனை இரட்சிப்பதற்கான ஒரு விருப்பத்தை அவருக்குள் உண்டுபண்ணுவதற்காக இது செய்யப்படவில்லை. இல்லை! இல்லை! தேவன் உலகத்தின்மீது அன்புகூர்ந்ததினால், தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார். அந்த மாபெரும் பாவநிவிர்த்திச் செயல் காரணமாக பிதா நம்மை நேசிக்கவில்லை. அவர் நம்மை நேசித்ததினால், அந்த ஏற்பாட்டை அவர் செய்திருந்தார். விழுந்துபோன ஓர் உலகத்தின்மீது, முடிவில்லாத தம்முடைய அன்பை ஊற்றுவதற்கு கிறிஸ்து ஊடகமாக இருந்தார். தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு உலகத்தைத் தம்முடன் ஒப்புவராக்கிக்கொண்டிருந்தார். தேவன் அவருடைய குமாரனுடன் பாடுகளை அனுபவித்தார். கெத்சமனேயின் வேதனையிலும் கல்வாரி மரணத்திலும் முடிவில்லாத அன்பின் இருதயம் நமது மீட்பிற்கான விலையைக் கொடுத்தது.—**SC 14,15.** ★

# 15

# இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

(அப். 16:30)

**நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளவேண்டும்**

(இயேசு தேவகுமாரனென்றும், அவர் ஒருவர்மட்டுமே பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்கக் கூடியவர் என்றும் நம்புங்கள். நம்மை இரட்சிக்கிறவரும் நம்மை மன்னிக்கிறவருமான ஒருவர் என்று இயேசுவை இருதயங்களில் ஏற்றுக்கொள்ளுங்கள்).

| | |
|---|---|
| **அப். 16:31** | "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுதும் நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்." |
| **யோவான் 3:16** | "விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு ..." |
| **யோவான் 1:12** | "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்கள்... தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார்." |

**குறிப்பு**:- நமக்காகச் சிலுவையின்மேல் மரித்ததினால், இயேசு நமது இரட்சிப்பிற்கான முழு ஏற்பாட்டையும் செய்திருக்கிறார். நாம் இரட்சிக்கப்படுவதற்கு, சிலுவையில் தொங்கின அந்தக் கள்ளனைப்போல நாமும் விசுவாசிக்கவேண்டும்.

**இயேசுவின்மேல்மட்டுமே விசுவாசமுடையவர்களாயிருங்கள்**

| | |
|---|---|
| **அப். 4:12** | "வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை." |
| **ரோமர் 1:17** | "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்." (அதாவது இயேசுவில் உள்ள விசுவாசம், இயேசு நமது பாவங்களுக்காக மரித்து இலவசமான மன்னிப்பை நமக்கு அனுமதித்து இருக்கிறார் என்கிற விசுவாசம்). |
| **கலா. 3:11** | "நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் நீதிமானாகிற தில்லை; ஏனெனில், விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்." |

**எபே.2:8** "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு."

**எபே. 2:9** "கிரியைகளினால் உண்டானதல்ல."

**2தீமோ. 1:9** "நம்முடைய கிரியைகளின்படி அல்லாமல்..."

**ரோமர் 11:6** "கிரியைகளினால் ஆனதல்ல."

**ரோமர் 4:6** "... கிரியைகளில்லாமல்..."

**ரோமர் 3:24** "... இலவசமாய் ... நீதிமான்களாக்கப்படுகிறார்கள்."

**தீத்து 3:5** "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே நம்மை இரட்சித்தார்."

**குறிப்பு:-** தேவனுடைய அன்பையோ மன்னிப்பையோ பெறுவதற்கு தாங்கள் ஏதாவது செய்தாகவேண்டும் என்று அநேகர் நினைக்கின்றனர். அஞ்ஞான மதங்களில் உள்ள மனிதர்கள் பாவமன்னிப்பைப் பெறுவதற்காகவும் பரலோகத்திற்கான அவர்களுடைய பாதையைச் சம்பாதிப்பதற்காகவும் சில சமயங்களில் கடினமான காரியங்களைச் செய்வதுடன் தங்களைத் தாங்களே தண்டித்தும்கொள்ளுகின்றனர்; ஆனால், மன்னிப்பைப் பெறுவதற்கோ நித்திய ஜீவனைச் சம்பாதிப்பதற்கோ நம்மால் எதையும் செய்ய முடியாது என்று வேதாகமம் போதிக்கிறது. நமக்கான தண்டனைகளையெல்லாம் ஏற்கனவே இயேசு எடுத்துக்கொண்டிருக்கிறார் (ஏசாயா 53:4-6). நமது பாவங்களுக்காக மரித்திருக்கிறார் (1 பேதுரு 2:24). நம்மை இலவசமாக மீட்கிறார் (ரோமர் 3:24). நமது பாவங்கள் எல்லாவற்றிலிருந்தும் நம்முடைய எந்தச் செயலும் அல்ல, அவருடைய இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7). எல்லாவற்றையும் இயேசு நமக்காகச் செய்திருக்கிறார் என்னும் விசுவாசத்தினால் நாம் இந்த மகிமைமிக்க உண்மையை ஏற்றுக்கொள்கிறோம்.

**மனம் வருந்தி மனந்திரும்புங்கள்**

**மத். 4:17** "மனம் வருந்துங்கள்" (மனம் வருந்துதல் என்பது பாவத்திற்காக வருந்துவதாகும்).

**மத். 18:3** "மனந்திரும்புங்கள்" (மனந்திரும்புதல் என்றால், நமது பாவங்களிலிருந்து திரும்பி, ஒரு புது மனிதனாக மாறுவதாகும்).

இயேசுவின் வல்லமையின்மூலமாக இவைகளை நம்மால் செய்யமுடியும்—(பிலிப். 4:13).

**ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்** (தேவன் நம்மை இரட்சித்

திருக்கிறார்) என்பதற்கான ஒரு வெளிப்படையான அடையாளமாக அது இருக்கிறது.

**மாற்கு 16:15,16** விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.

**குறிப்பு:-** சிலுவையில் தொங்கின கள்ளன் விசுவாசித்து இரட்சிக்கப் பட்டான். ஆனால், அவன் ஞானஸ்நானம் பெற்றிருக்கவில்லை; ஏனெனில், இந்த அடையாளத்தைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பை அவன் பெற்றிருக்கவில்லை; ஆனால், தனது வாழ்க்கையைக் கிறிஸ்துவிற்குக் கொடுத்துவிட்ட ஒவ்வொரு மனிதனும், இப்பொழுது தான் தேவனுக்குச் சொந்தமாகியிருப்பதையும் பழைய வாழ்க்கைக்கு மரித்துவிட்டதையும் காண்பிக்கும் அடையாளமாக, தேவனுக்கென்றும் தனக்கென்றும் தன்னைச் சுற்றிலுமுள்ள அனைவருக்கென்றும், ஞானஸ்நானம் பெறவேண்டும்.

**அப். 2:38** மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறுங்கள்.

**மத். 28:19** ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய்,... ஞானஸ்நானம் கொடுங்கள்.

**ரோமர் 6:3-5** ஞானஸ்நானம் என்பது இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் அடையாளமாக இருக்கிறது-நாமும் பாவத்திற்கு மரித்து, பழைய மனிதனை அடக்கம்செய்து, கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக உயிர்த்தெழுந்திருக்கிறோம் என்னும் அடையாளமாக இருக்கிறது.

**அப். 22:16** இப்பொழுதும் நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.

## இரட்சிப்பின் படிகள்

சில ஜனங்கள் இரட்சிப்பின் படிக்கட்டுகளை இவ்விதமாக அமைத்தி ருக்கின்றனர்.

1. **ரோமர் 3:23** எல்லாரும் பாவஞ்செய்து (நமக்குள் நாம் நம்பிக்கையற்ற பாவிகளாக இருக்கிறோம் என்பதை ஒப்புகைசெய்யுங்கள்).
2. **அப். 16:31** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி ... (அவர் தேவகுமாரனென்றும், நம்மை இரட்சிக்கக்கூடிய ஒரே ஒருவர் என்றும் விசுவாசியுங்கள்).
3. **மத். 11:28** என்னிடத்தில் வாருங்கள்.

“கிருபை என்பது தகுதியில்லாத மனிதனுக்கு நேராகச் செயலாற்றப்படும் தேவனுடைய சிறப்பாக உள்ளது. நாம் அதைத் தேடவில்லை; ஆனால், நம்மைத் தேடி அது அனுப்பப்பட்டது. நாம் தகுதியானவர்களாக இருப்பதனால் நமக்கு அவருடைய கிருபையை அருளுவதில் அவர் சந்தோஷப்படாமல், நாம் முற்றிலுமாகத் தகுதியில்லாதவர்களாக இருப்பதனால், கிருபையை நமக்கு அருளுவதில் களிகூருகிறார். நமது பெரிய தேவைமட்டுமே அவரது இரக்கத்திற்கான நமது உரிமைபாராட்டுதலாக இருக்கிறது.”—**MH 161.**

“கிறிஸ்துவின் நீதி நமக்கு அணிவிக்கப்பட்டிருக்கிறது என்னும் சிந்தனை, நமது எந்தவிதமான புண்ணியத்தின் காரணமாகவும் இராமல், தேவனுடைய இலவசமான ஈவு என்பது, விலைமதிப்புமிக்க சிந்தனையாக இருக்கிறது. இந்தச் சத்தியம் தெளிவாக முன்வைக்கப்படவேண்டும் என்பதில் தேவனுக்கும் மனிதனுக்கும் எதிரியாக இருப்பவன் விருப்பமில்லாதிருக்கிறான். ஏனெனில், மக்கள் அதனைப் பூரணமாக பெற்றுக்கொள்ளுவார்களானால், அவனுடைய வல்லமை தகர்க்கப்பட்டுவிடும் என்பதை அவன் அறிந் திருக்கிறான். தங்களைத் தேவனுடைய பிள்ளைகள் என்று உரிமைபாராட்டிக் கொண்டிருப்பவர்களின் மனங்களை, சந்தேகம், நம்பிக்கையின்மை, இருள் ஆகியவைகளால் நிறைத்துக் கட்டுப்படுத்த முடியுமானால், சோதனையினால் அவர்களை அவனால் மேற்கொள்ளமுடியும்.”—**GW 162.**

“உங்களுடைய கடந்தகாலப் பாவங்களுக்காக உங்களால் பாவ நிவாரணம் செய்யமுடியாது. உங்களுடைய இருதயத்தை மாற்றி, உங்களால் உங்களைப் பரிசுத்தமடையச் செய்யமுடியாது; ஆனால், இவைகளனைத்தையும் உங்களுக்காக கிறிஸ்துவின்மூலமாகச் செய்வதாகத் தேவன் வாக்குக் கொடுக்கிறார். அந்த வாக்குத்தத்தத்தை நீங்கள் நம்புங்கள். உங்கள் பாவங்களை அறிக்கைசெய்து, உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் எவ்வளவு நிச்சயமாக இதைச் செய்வீர்களோ, அவ்வளவு நிச்சயமாக உங்களுக்கான தேவனுடைய வார்த்தையை அவர் நிறைவேற்றுவார். நீங்கள் அந்த வாக்குத்தத்தத்தை நம்பினீர்களானால், நீங்கள் மன்னிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றும் நம்புங்கள். தேவன் தேவைகளை விநியோகிக்கிறார். நீங்கள் முழுமையாக்கப்படுகிறீர்கள். அந்தத் திமிர்வாதக்காரன் சுகமடைந்துவிட்டதாக நம்பினபோது, கிறிஸ்து அவனுக்கு நடப்பதற்கான வல்லமையைத் தந்தார். அதுபோல உங்களுக்கும் தருகிறார். நீங்கள் நம்பும்போது அது அப்படியாகிறது. நீங்கள் சுகமடைந்துவிட்டீர்கள் என்று உணர்வதற்காகக் காத்திருக்காமல், அது அப்படியிருக்கிறது நான் உணருவதால் இல்லாமல் தேவன் வாக்குத்தத்தம்பண்ணியிருப்பதனால் அப்படி இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.”—**SC 55.**

"நீங்கள் உங்களுடைய பாவத்தன்மையைக் காண்பீர்களானால், உங்களை நீங்களாகவே நல்லவராகச் செய்வதற்காகக் காத்திருக்காதீர்கள். கிறிஸ்துவிடம் வருகிற அளவிற்கு நாங்கள் நல்லவர்கள் அல்லர் என்று நினைப்பவர்கள் எத்தனை பேர்கள்? உங்களுடைய சொந்த முயற்சிகளினால் நல்லவர்களாகிவிடலாம் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால் தீமை செய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும். தேவனில்மட்டுமே நமக்கான உதவி இருக்கிறது. பலத்த இணங்கச் செய்தல்களுக்காகவும் நல்ல வாய்ப்புகளுக்காகவும் அல்லது பரிசுத்தமான சுபாவத்துக்காகவும் நாம் காத்திருக்கக்கூடாது. நம்மால் நமக்கென்று எதுவும் செய்யமுடியாது. நாம் இருக்கும் அதேவிதமாக, நாம் கிறிஸ்துவிடம் வரவேண்டும்."—**SC 35,36.**

"நாம் இயேசுவிடம் வருவதை அவர் விரும்புகிறார். நமது பலவீனங்கள், நமது பாவத்தன்மை ஆகிய அனைத்துடன் நாம் வந்து பாவத்திற்கான வருத்தத்துடன் அவரது பாதங்களில் விழவேண்டும். அவரது அன்பின் கரங்களால் நம்மைச் சுற்றிவளைத்துக்கொள்வதும் நமது காயங்களைக் கட்டுவதும் எல்லாவிதமான அசுத்தங்களிலிருந்தும் நம்மைச் சுத்திகரிப்பதும் அவரது மகிமையாக இருக்கிறது."—**SC 57.** ★

# 16

# இரட்சிக்கப்பட்டோரின் வாழ்க்கையில் உண்டாகும் மாற்றம்

நாம் கிறிஸ்தவர்களாக இருக்கும்போது, நமது வாழ்க்கை மாறுகிறது என்று வேதாகமம் கூறுகிறது. நாம் நல்ல ஜனங்களாகவும், புதிய ஜனங்களாகவும் ஆகிறோம்.

| | |
|---|---|
| **2 கொரி. 5:17** | "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், **புது சிருஷ்டியாயிருக்கிறான்.** பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" |
| **மத். 1:21** | "இயேசு … ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார்." |
| **எபே. 2:8—10** | "நற்கிரியைகளைச் செய்வதற்கு …" |
| **தீத்து 2:14** | "தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் சுத்திகரிக்கும்படி …" |
| **யாக். 2:14—26** | "விசுவாசம் கிரியைகளில்லாதிருந்தால், செத்ததா யிருக்கும்." |
| **2 பேதுரு 3:11** | "பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களா யிருக்கவேண்டும்." |
| **2 பேதுரு 3:14** | "கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களாயுமிருங்கள்" |
| **1 யோவான் 3:3** | "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவன் எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருப்பதைப்போல, தன்னையும் **சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.**" |
| **1 தெச. 4:7** | "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, **பரிசுத்தத்திற்கே** அழைத்திருக்கிறார்." |

**ரோமர் 6:2** "பாவத்திற்கு மரித்த நாம் அதிலே எப்படிப் பிழைப்போம்"

**1 கொரி. 4:9** "நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் **வேடிக்கையாக்கப்பட்டோம்.**"

**யோவான் 14:15** "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்."

**ரோமர் 3:31** "அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? **அப்படியல்ல நியாயப் பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே**.

இரட்சிப்பு என்பது **நாம் இயேசுவை ஏற்றுக்கொள்ளுகின்றவுடனே** நடைபெறும் வினாடி நேரச் செயல். இது **நீதிமானாக்கப்படுதல்** என்று கூறப்படுகிறது. இது கிரியைகளில்லாமல் இயேசுவின்மீதுள்ள விசுவாசத்தினால் மட்டுமே நிறைவேறியிருக்கிறது. இப்படியாகத்தான் சிலுவையில் தொங்கின கள்ளன் இரட்சிக்கப்பட்டான். அவன் முற்றிலுமாகவும் முழுமையாகவும் இரட்சிக்கப்பட்டான். அப்படியிருந்தபோதிலும், **நாம் இரட்சிக்கப்பட்டபின்,** நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் வல்லமை வரவே, நாம் அவருடைய பிரசன்னத்தின் அற்புதங்களினால் மாற்றப்பட்டு மறுவுருவம; அடைகிறோம். இதுவே **பரிசுத்தமடைதல்** என்று கூறப்படுகிறது. பரிசுத்தமடைதல் என்பது வாழ்க்கை முழுவதிலும் நடைபெறுகின்ற ஒரு செயலாக இருக்கிறது. ஏனெனில், நாம் எவ்வளவு நீண்டகாலம் வாழ்ந்தபோதிலும், சுபாவத்தில் வளர்ச்சியடையவும், பெரிய பரிசுத்த தன்மையை அடையவும் எப்பொழுதும் இடம் இருந்துகொண்டேயிருக்கும். கிறிஸ்தவர்களாக இருக்கும் நாம், கிருபையிலும், நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் எப்பொழுதும் வளருவோம் — **2 பேதுரு 3:18.**

"இவ்வாறாகக் கிரியைகள் எதுவும் இல்லாமல், இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தினால்மட்டுமே இரட்சிக்கப்பட்டிருந்தபோதிலும், நம்மால் அதைச் சம்பாதிக்க முடியாது; ஏனெனில், இது தேவனுடைய இலவச ஈவு. ஆனாலும், ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டவுடனே அவனில் மாறுதல் உண்டாகிறது என்று வேதாகமம் கூறுகிறது. இப்பொழுது அவன் ஒரு தேவனுடைய குமாரனாக இருக்கிறான்; அவனுடைய வாழ்க்கை அதைக் காட்டவேண்டும். இயேசு அவனுக்குள் வாசம்செய்கிறார் என்பதைக் காட்டாதவனாக அவனால் இருக்கமுடியாது.

"அவனின் உண்டாகிற மாற்றம் ஆச்சரியமானது. எப்படியெனில், சாத்தான் தனது வெற்றிகளைக்குறித்த பெருமையோடு, தனது பொல்லாத சேனை கூட்டத்துடனும் இணைந்து தேவனையும் அவருடைய அரசாங்கத்தின்

கட்டளைகளையும் எதிர்த்தாலும், தன்னுடைய ஜாலங்களாலும் தந்திரங்களாலும் துளைக்கமுடியாத ஒரு கோட்டையாக அதைப் பார்க்கிறான். அவைகள் அவனுக்குப் புரிந்துகொள்ளமுடியாத இரகசியமாக இருக்கிறது."— **TM 18.**

"சீர்திருத்தத்தம் உண்டாகாதவரை, உண்மையான மனந்திரும்புதலுக்கான சான்று இல்லை."—**SC 63.**

"தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பவர்களின் சுபாவத்தில் உண்டாகும் மாறுதலைக் கண்டு தூதர்கள் ஆச்சரியமடைந்து, தங்களுடைய மகிழ்ச்சியை பாடல்களால் தேவனையும் ஆட்டுக்குட்டியானவரையும் துதிக்கும் பாடல்களால் வெளிப்படுத்துகின்றனர்."—**TM 49,50.**

"நம்மை நீதிமான்களாக்கியிருக்கும் நீதி, நமக்கு அணிவிக்கப் பட்ட நீதி. நம்மைப் பரிசுத்தமாக்கப்படும் நீதி, நமக்கு அருளப்பட்ட நீதி. முதலாவது நீதி, பரலோகத்திற்கான நமது பட்டமாக உள்ளது. இரண்டாவது நீதி, நம்மைப் பரலோகத்துக்குத் தகுதிப்படுத்துவதாக உள்ளது."— **RH June 4, 1895.**

"எப்போதாவது செய்யப்படுகின்ற நல்ல செயல்களினாலோ கெட்ட செயல்களினாலோ சுபாவம் வெளிப்படுத்தப்படாமல், வழக்கமாக பேசும் வார்த்தைகளாலும் செயல்களாலும் வெளிப்படுத்தப்படுகிறது... நம்முடைய இருதயம் யாரிடமுள்ளது? நமது எண்ணங்கள் எவர்களுடன் உள்ளன? எவர்களுடன் உரையாடுவதை நாம் விரும்புகிறோம்? நமது அனலான நேசங்களையும், நமது மேலான சக்திகளையும் யார் பெறுகிறார்கள்? நாம் கிறிஸ்துவினுடையவர்களாக இருந்தால், நமது எண்ணங்கள் அவருடன் இருக்கின்றன. நமது இனிமையான எண்ணங்கள் எல்லாம் அவரைப்பற்றியதாக இருக்கின்றன. நம்முடைய அனைத்தும் அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன. அவருடைய உருவத்தை அணிந்து கொள்ளவும், அவருடைய ஆவியை சுவாசிக்கவும், அவருடைய சித்தத்தைச் செய்யவும், எல்லாக் காரியங்களிலும் அவரைச் சந்தோஷப்படுத்தவும் நாம் ஏக்கமுடையவர்களாக இருக்கிறோம்.

"கிறிஸ்து இயேசுவில் புது சிருஷ்டியானவர்களெல்லாம், ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவைகளைக் கொண்டுவருவார்கள். தங்களுடைய முந்தின இச்சைகளின்படி இனி அவர்கள் தங்களை அலங்கரிக்காமல், தேவகுமாரனின்மீதுள்ள விசுவாசத்தினால், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவருடைய சுபாவத்தைப் பிரதிபலித்து, அவர் தூய்மையானவராக இருப்பதுபோல தங்களையும்

தூய்மைப்படுத்துவார்கள். கிறிஸ்துவின் சுபாவத்தின் அழகு அவருடைய அடியார்களில் காணப்படும்.”—**SC 62—64.**

“பாவத்தினால் ஆத்துமாவைத் தீட்டுப்படுத்துவதைவிட வறுமை, நிந்தை, நண்பர்களிடமிருந்துள்ள பிரிவினை அல்லது வேறு எந்தப் பாடுகளையும் தெரிந்து கொள்ளுங்கள். கனக்குறைவுக்குமுன் அல்லது தேவனுடைய கற்பனையை மீறுவதற்குமுன், மரணம் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் இலட்சியமாக இருக்கவேண்டும். சீர்திருத்தவாதிகள் என்று கூறிக்கொண்டிருக்கும் ஒரு ஜனமாக நாம், தேவனுடைய வார்த்தையான தூய்மைப்படுத்தும் சத்தியத்தை—பக்திவிநயமான பொக்கிஷங்களைச் சேர்த்து, நிகழ்வுகாலத்தில் இருப்பதைவிட மிக மேலான தரத்திற்கு உயர்த்தவேண்டும். மற்றவர்கள் கறைபடாதபடிக்கும் சபையிலுள்ள பாவத்துடனும் பாவிகளுடனும் உடனடியாக இடைப்பட்டாகவேண்டும். பாளையத்தைச் சுத்திகரிப்பதற்காக நாம் முழுமையான வேலையைச் செய்தாகவேண்டும் என்ற சத்தியமும் தூய்மையும் அவசியப்படுகின்றன.” —**5T 147.**

“தேவனுடைய பிள்ளைகள், குறிப்பாக சமீபத்தில் அவருடைய கிருபையில் நம்பிக்கை வைக்க வந்துள்ளவர்கள், தங்களைக் காத்துக் கொள்வதற்கெதிரான இரண்டு தவறுகள் உள்ளன; முதலாவது தவறு, ஏற்கனவே விளக்கப்பட்டுவிட்டது. அதாவது, தங்களுடைய சொந்தக் கிரியைகளைப் பார்ப்பது, தேவனோடு தங்களை இசைவாக்க தங்களால் செய்யமுடிகின்ற எதன்மீதும் நம்பிக்கை வைப்பது. பிரமாணத்தைக் கைக்கொள்ளுகின்ற தனது சொந்தக் கிரியைகளினால் பரிசுத்தமடைய முயற்சிசெய்துகொண்டிருப்பவன், முடியாத ஒன்றைச் செய்ய முயற்சிக்கிறான். கிறிஸ்து இல்லாமல் மனிதன் செய்கின்ற அனைத்தும், சுயநலத்தினாலும் பாவத்தினாலும் தீட்டுப்பட்டுள்ளது. விசுவாசத்தினாலாகும் கிறிஸ்துவின் கிருபை—அதுமட்டுமே—நம்மைப் பரிசுத்தமாக்குகிறது.

“அதற்கு நேர் எதிரானதும் அதைவிட அபாயக் குறைவு இல்லாததுமான தவறு, கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கை மனிதர்களைப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதிலிருந்து விடுவித்திருக்கிறது என்று எண்ணுவதாகும். அதாவது விசுவாசத்தினால்மட்டுமே நாம் கிறிஸ்துவின் கிருபையில் பங்குபெறுபவதால், நமது மீட்புடன் நமது கிரியைகளுக்குச் சம்பந்தமில்லை என்பதாகும்.

“ஆனால், கீழ்ப்படிதல் என்பது சாதாரணமான வெளிப்படையான செயலாக இல்லாமல், அன்பின் சேவையாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். தேவப் பிரமாணம் தேவனுடைய தன்மையின் வெளிப்பாடாக

இருக்கிறது. அது அன்பு என்னும் பெரிய கொள்கையின் மாற்றுருவமாக இருக்கிறது; எனவே, அது பரலோகத்திலும் பூமியிலும் உள்ள அவரது அரசாங்கத்தின் அஸ்திபாரமாக இருக்கிறது. நமது இருதயங்கள் தேவ சாயலில் புதுப்பிக்கப்படுமானால், ஆத்துமாவில் தெய்வீக அன்பு நடப்படுமானால், வாழ்க்கையில் தேவப் பிரமாணம் செயல்படுத்தப்படாதா?” **—SC 59,60.** ★

# 17

# நீதிமானாக்கப்படுதலும் பரிசுத்தமடைதலும்

**நீதிமானாக்கப்படுதல் —இரட்சிப்பிற்கான காரணம் (நாம் எவ்விதமாக இரட்சிக்கப்படுகிறோம்? )**

**பரிசுத்தமடைதல் — இரட்சிப்பின் பலன் (நாம் இரட்சிக்கப்பட்டபின் நமது வாழ்க்கையில் உண்டாகும் மாறுதல்கள்)**

| நீதிமானாக்கப்படுதல் | பரிசுத்தமடைதல் |
|---|---|
| 1. நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது | **1**.கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின் தினம்தோறும் தேவனுடன் நடத்தல். |
| **2**. நாம் நீதிமான்களாக இல்லாத போது நீதிமான்கள் என்னப்படுதல். | **2**. கிறிஸ்துவின் நீதி நமது ஒரு பகுதியாகுதல். பாவம் கவர்ச்சிக் குறைவாகின்றது. |
| **3**. கிறிஸ்துவின் நீதி ஓர் இலவச ஈவாக நம்மைச் சுற்றி வைக்கப்படுதல். | **3**. பரிசுத்த ஆவி உள்ளே வாசம் செய்வதன்மூலமாக நமது சுபாவங்கள் பலமடைதலும் தூய்மையடைதலும். |
| **4**. கிறிஸ்துவின் மரணம், புண்ணியங் களின்மூலமாக தேவனுடன் சீர் பொருந்துதல். | **4**.பரிசுத்த ஆவியின் தொடர்ச்சி யான பிரசன்னத்தினால் பரிசுத்தமாக்கப் படுதல். |
| **5**. நம்மை நாம் கிறிஸ்துவுக்குக் கொடுக்கும் வினாடி நேரம், வினாடி நேரச்செயல். | **5**. நாம் ஆவியினால் நடத்தப்படும் போது நமது சுபாவங்கள் தொடர்ச்சியாக முன்னேற்றமடை கின்றன.—வாழ்க்கை முழுவதிலும் உள்ள செயல். |

| | |
|---|---|
| **6**. நமக்கான கிறிஸ்துவின் தியாக பலியை விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளுவதின்மூலமாக, பரலோகத் திற்கான நமது உரிமை. | **6**. அதிகமதிகமாக நமது இரட்சகரைப் போலாகும்போது, பரலோகத்திற்கு என்று தகுதி அடைதல். |
| **7.** தேவ கிருபைமட்டும். | **7.** நம்மைப் பூரணப்படுத்துவதில் உள்ள தேவனின் செயல். |
| **8.** எந்தவிதமான நற்செயலும் இல்லாமல் இரட்சிக்கப்படுதல்; — நாம் இருக்கும் அதேவிதமாகக் கிறிஸ்துவிடம் வருதல். | **8.** தொடர்ந்து கிறிஸ்துவுடன் நடக்கும்போது, நமக்குள் முன்னேற்றமடையும் சகலவிதமான நற்செயல்கள். |
| **9**. தேவப்பிரமாணத்தால் பாவியை இரட்சிக்கமுடியாது. பாவி விசுவாசத் தினால் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது—கிறிஸ்துவின் இரத்தத்தினால் மட்டுமே இரட்சிக்கப் படுதல். | **9.** மீட்கப்பட்ட கிறிஸ்தவனின் வாழ்க்கையின் மகிழ்ச்சியும் இயற்கையின் ஒரு பகுதியுமாகத் தேவப் பிரமாணத்திற்குக் கீழ்ப் படிதல் இருக்கிறது. உலகத்தின் பாதைகளிலிருந்து கர்த்தர் அவனை உண்மையாகவே மீட்டிருக்கிறார் என்பதற்கான சான்று. |
| **10**. சிலுவையில் தொங்கின கள்ளனின் சித்திர விளக்கத்தினால் இரட்சிப்பு கிரியைகள் இல்லாமல் உண்டாகிறது என்று காட்டப்படுதல். | **10**. பவுலின் அனுபவத்தினால் சித்திரிக்கப்பட்டுள்ளது. வருடங் களுக்கூடாக வாழ்ந்த அவனால் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்று எழுத முடிந்தது — **2** கொரி. **5:17.** |

## நீதிமானாக்கப்படுதல்

நாம் எந்த ஒரு நற்கிரியையும் செய்யாதபோதும், அல்லது தேவப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் இரட்சிப்பை சம்பாதிக்காதபோதும் நாம் எவ்வாறு இரட்சிப்பப்படக்கூடும் என்பதை புரிந்துகொள்வது சிலருக்குக் கடினமாக இருக்கிறது. உண்மையில் இதற்கான காரணம்: தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்கு, அல்லது தேவன் விரும்புகிறவிதமான வாழ்க்கையை வாழ்வதற்கு, மனிதன் அதிகமான பலவீனமானவனாக இருக்கிறான்; ஆகையால், நாம் இரட்சிக்கப்படவேண்டுமானால், தேவனுடைய கிருபையினால்மட்டுமே இரட்சிக்கப்பட்டாகவேண்டும். **இதுதான் இரட்சிக்கப்படுவதற்கான ஒரே பாதை. இது நீதிமானாக்கப்படுதல் என்று**

**கூறப்படுகிறது.** விசுவாசத்தினால் நாம் தேவனிடத்தில் வரும்போது, அது தேவனுடைய **இலவசமான ஈவாக** கிடைக்கிறது.

**இவ்விதமாக அதைப்பற்றி நினையுங்கள்:–**

சாலை வழியாகச் செல்லும் ஒரு மனிதன்: **"அபாயம்! சதுப்பு நிலம்! சாலையை விட்டு விலகாதே!"** என்று கூறும் ஓர் அடையாளத்தைக் காண்கிறான்; ஆனால், அந்த எச்சரிக்கை அடையாளத்திற்குக் கீழ்ப்படிவதற்குப்பதிலாக, அந்தச் சதுப்பின் ஓரத்திலுள்ள அவனைக் கவர்கின்ற ஏதோ ஒன்றைப் பரீட்சிப்பதற்காக இந்த மனிதன் சாலைக்கு வெளியில் அலைகிறான். தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்குப் போதுமான ஞானத்தை தான் பெற்றிருப்பதாகவும், அந்த அடையாளப் பலகை உண்மையாகவே அவனுக்கானதன்று என்றும் அவன் நினைக்கிறான்; ஆனால், அந்த நிலம் வஞ்சிக்கின்றதாக இருக்கின்றது. அது அவன் நினைப்பதைப்போல, கெட்டியானதாக இல்லாமலிருக்கவே, அவன் அமிழ்ந்துபோக ஆரம்பிக்கிறான். கழுத்துவரை ஆழமாக—அதிக ஆழமாக அவன் அமிழ்கிறான். அவன் சிக்கிக்கொண்டிருக்கிறான்; அவன் சாகப்போகிறான்; இப்பொழுது அந்த அடையாளப் பலகையால் அவனைக் காப்பாற்ற முடியாது. எப்படிப்பட்ட முயற்சியும் அவனைக் காப்பாற்றாது. அந்த அடையாளப் பலகைக்குக் கீழ்ப்படியவேண்டும் என்ற முடிவு மிகவும் பிந்தினதாக இருக்கிறது. அவன் ஏற்கனவே பிடிபட்டிருக்கிறான். ஓர் அன்பான சிநேகிதன் வந்து ஒரு கயிற்றை வீசி எறிந்து, அவனை அந்தச் சதுப்பு நிலத்திற்கு வெளியே இழுக்கின்ற ஒரு காரியம்மட்டுமே அவனைக் காப்பாற்றக்கூடியதாக இருக்கிறது. இந்த மனிதன் அவனுடைய அன்பினால்மட்டுமே—கிருபையினால்மட்டுமே—காப்பாற்றப்படுகிறான். அவன் பிழைப்பதற்கு இந்த ஒரே மார்க்கம்மட்டுமே இருக்கிறது. ஒரு பாவி இரட்சிக்கப்படுவதற்கான ஒரே மார்க்கமாகக் கிறிஸ்து ஒருவர்மட்டுமே இருக்கிறார்.



**3.** பாவி — அவன் பிரமாணத்தை மீறி இப்பொழுது பிடிக்கப்பட்டு மரணத்தை எதிர்நோக்குகிறான்; அவனது கீழ்ப்படிதலாலும் நற்கிரியைகளாலும் அல்லது நல்ல எண்ணங்களாலும் அவனைக் காப்பாற்றமுடியாது. பிரமாணத்தினால் அவனுக்கு உதவிசெய்யமுடியாது; அது மிகவும் பிந்தினதாக இருக்கிறது.

**4.** கிறிஸ்து நமது நண்பராக இருக்கிறார். அவர்மட்டுமே நமக்கு உதவக்கூடிய ஒரே ஒருவர். நாம் அவரை அனுமதித்தால், அவர் நம்மைக் காப்பாற்றுவார்.

**5.** கிறிஸ்துவின் அன்பு பாவிக்கு நீட்டப்பட்டது. நமது பங்காக எந்தவிதமான நற்கிரியையும் இல்லாமல், இந்த அன்பினால் அல்லது கிருபையினால்மட்டுமே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் அந்தக் கயிறை மட்டுமே பிடித்துக்கொள்ளவேண்டும். அதாவது, நமக்கு நேராக நீட்டப்பட்டுள்ள அன்பை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**குறிப்பு:** நம்மை இரட்சிப்பதற்காக நமது பாவத்திற்கான தண்டனையை இயேசு எடுத்துக்கொண்டார்; ஆகையால், நாம் தண்டனையே இல்லாமல் இலவசமாகப் பரலோகத்திற்குச் சென்றுவிடலாம் என்று இந்தச் சித்திர விளக்கம் காட்டுவதில்லை.

**சித்திர விளக்கம் — 2 :**

ஒரு மனிதன் கடந்து செல்லாதே என்னும் எச்சரிக்கைப் பலகையை அலட்சியப்படுத்துகிறான்; தடைசெய்யப்பட்டுள்ள நிலத்தில் பிரவேசிக்கிறான்; குழிக்குள் விழுகிறான். குழி ஆழமாயிருப்பதினால், ஒன்றுமே (முயற்சிகள், நற்கிரியைகள், கற்பனையைக் கைக்கொள்ளுதல்) அவனைக் காப்பாற்றாது. அவனை வெளியே இழுக்கக்கூடிய ஒரு அன்புமிக்க நண்பனின் வருகைமட்டுமே இப்பொழுது அவனைக் காப்பாற்றமுடியும்.




பாவிகளின் காரியமும் இதைப்போலவே இருக்கிறது;—நமது கிரியைகள் அல்ல; கிறிஸ்துவின் அன்புமட்டுமே பாவக்குழியிலிருந்து நம்மை இரட்சிக்கும்!

**சித்திர விளக்கம் — 3 :**



கப்பலின்மேலிருக்கும் ஒரு மனிதன் கவனமில்லாதவனாக, கப்பலின் பாதுகாப்புக் கம்பிகளுக்கு வெளியில் நடந்து, சமுத்திரத்தில் விழுந்துவிடுகிறான்; அவனால் நீந்த முடியாது. கடல் மிகவும் கொந்தளிப்பாய் இருக்கிறது. அவனுக்காக அவன் செய்யும் முயற்சிகள் அவனைக் காப்பாற்ற முடியாது. அவன் காப்பாற்றப்படக்கூடிய ஒரே மார்க்கம், கப்பல் தலைவன் கப்பலை அவன் பக்கமாகத் திருப்பி, கடலின் மேல்தளத்திற்கு வந்து, ஓர் உயிர்காக்கும் படகை அவனருகில் வீசுவதாகும். இப்பொழுது கப்பல் தலைவனின் அன்பினால் அவன் காப்பாற்றப்பட்டிருக்கிறான். கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறான். பாவி இரட்சிக்கப்படுவதற்கான ஒரே மார்க்கமாகக் கிறிஸ்துவின் கிருபை அல்லது அன்பு இருக்கிறது.

**சித்திர விளக்கம்:— 4**



இந்த மனிதன் எவ்விதமாக இரட்சிக்கப்பட்டான் என்று சிந்தித்துப் பாருங்கள். அவனை அவனால் இரட்சித்துக்கொள்ளமுடியவில்லை. நற்கிரியை எதையும் செய்யவோ பிரமாணத்தைக் கைக்கொள்ளவோ நேரமில்லை. அது மிகவும் தாமதமானதாக இருந்தது; ஆனால், அவன் இயேசுவிடம் சரணடைந்த அந்த வினாடியிலேயே இரட்சிக்கப்பட்டான். சிலுவையில் தொங்கின அந்தக் கள்ளன் கிறிஸ்துவின் அன்பினால்மட்டுமே உடனே முற்றிலுமாக இரட்சிக்கப்பட்டான். இயேசுவை ஏற்றுக்கொண்டதினால்மட்டுமே கிரியைகள் இல்லாமல் — கிருபையினால் இரட்சிக்கப்பட்டான்;

**நீதிமானாக்கப்படுதல் என்பதன் பொருள்**

கையின் கிரியை ஒன்றுமே
கற்பனைமுன் செல்லாதே!
கண்ணீர் நித்தம் சொரிந்தும்
தெய்யாத்தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே!
கையில் ஒன்றும் இல்லையே
சிலுவையை சார்ந்தேனே!
நிர்வாணி அங்கிக்காய்,
நிர்பாக்கியன் கிருபைக்காய்
பறக்கிறேன் கன்மலையை நோக்கி
கழுவுமே நான் மடிவேனே!

— அகஸ்டஸ். M . டாப்லேடி

**பரிசுத்தமடைதல்**

நாம் அவருடைய கிருபையினால்மட்டுமே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றால், தேவன் அவருடைய பிரமாணத்திற்கான அப்படிப்பட்ட பூரணமான கீழ்ப்படிதலை நம்மிடத்திலிருந்து ஏன் வேண்டுகிறார் என்பதைப் புரிந்துகொள்வதைச் சில மக்கள் கடினமானதாகக் காண்கின்றனர். இதைப் புரிந்துகொள்ளுவதற்காக, நாம் நமது சித்திர விளக்கத்தைப் பின்நோக்கிப் பார்ப்போமாக.

**சித்திர விளக்கம் — 1 சதுப்பு நிலத்தில் அகப்பட்ட மனிதன்**

சதுப்பு நிலத்திலிருந்து காப்பாற்றப்பட்ட பின்பும், இந்த மனிதன் அந்த எச்சரிக்கைப் பலகையைக் கருதாமலிருந்து, மறுபடியும் அதை நோக்கித் திரும்பச் செல்லுவது சரியாக இருக்குமா? உண்மையில் இருக்காது. அந்த மனிதன் கிருபையினால்மட்டுமே, அவனுடைய சிநேகிதனின் அன்பினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டான் என்பது உண்மைதான்; ஆனால், அவன் காப்பாற்றப்பட்ட**பின்பு**, இதற்குமுன் எப்போதும் இருந்ததைவிட இப்போதும் எதிர்காலத்திலும், எல்லா அடையாளப் பலகைகளுக்கும் கீழ்ப்படிய கவனமுள்ளவனாக இருக்கவேண்டும். அவனுக்கு உதவவும், வழிகாட்டவுமே அவைகள் அங்கு உள்ளன.

கிறிஸ்தவன் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருப்பதனால், கீழ்ப்படிவது எவ்வாறு என்பதை அறிந்துகொள்வதற்கும், தனக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பான பாதையில் எவ்விதம் செல்லலாம் என்பதை அறிந்துகொள்ளுவதற்கும் அக்கறை கொண்டிருப்பான். இப்படிச் செய்வதனால், எதிர்காலக் கஷ்டங்களைத் தவிர்ப்பதுடன், அவ்வளவு பெரிய கிரயத்தைச் செலுத்தி இரட்சித்திருப்பவரை சந்தோஷப்படுத்தவும் செய்வான்.

"அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல. **நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்துகிறோமே**" (ரோமர் 3:31) என்று பவுல் கூறுகிறான்.

இதைத்தான் நாம் **பரிசுத்தமடைதல்** என்கிறோம்.

**சித்திர விளக்கம்: — 2. புதை குழியில் விழுந்த மனிதன்**

மிகவும் ஆழமான பயங்கரமான குழியிலிருந்து வெளியிலே இழுத்துவிடப்பட்டபின், மறுபடியும் அந்தக் குழியில் விழுந்துவிடாமல் நடப்பது எப்படி என்று கற்றுக்கொள்ள அந்த மனிதன் நிச்சயமாகவே விரும்புவான்.

**சித்திர விளக்கம்: — 3. கப்பலிலிருந்து கடலில் விழுந்த மனிதன்**

கப்பல் தலைவனால் காப்பாற்றப்பட்டபின், தன்னை பாதுகாப்பு வேலியின் கம்பிகளுக்குள்ளாக வைத்துக்கொள்ளுவதும், கப்பலின்மேல் இருக்கும்போது எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதை அறிந்துகொள்ளுவதும் அவனுக்கு அவசியம்.

**சிலுவையில் தொங்கின கள்ளன்**

சிலுவையில் தொங்கின அந்தக் கள்ளன் தன்னுடைய மதத்தின்படி நடப்பதற்காக உயிர்வாழவில்லை. அந்த நாளில் அவன் இறந்துபோனான்; ஆனால், நிச்சயமாகவே அவன் வாழ்ந்திருப்பானானால், தன்னுடைய

வாழ்க்கையைத் தேவனுடைய வல்லமையினால் மாற்றி, தேவனுடைய பரிசுத்தமான பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்திருப்பான். அவனுடைய வாழ்க்கையில் உண்டான இந்த மாறுதல், உண்மையாகவே அவன் ஓர் இரட்சிக்கப்பட்ட மனிதன் என்று சாட்சி பகர்ந்திருக்கும். நாம் ஒவ்வொரு நாளும் நம்மைப் பரிசுத்த ஆவிக்குக் கீழ்ப்படியச்செய்யும்போது, அதுவே நமது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் ஆற்றும் செயலாக இருக்கும்.

| நீதிமானாக்கப்படுதல் | பரிசுத்தமடைதல் |
|---|---|
| இரட்சிக்கப்படுவதின் காரணம் (நாம் எவ்விதமாக இரட்சிக்கப்பட்டிருக் கிறோம்). | இரட்சிப்பின் பலன் (நாம் இரட்சிக்கப்பட்டபின் என்ன நிகழ்கிறது). |
| தேவனுடன் சீர் பொருந்தியிருப் பதனால் | தேவனால் பரிசுத்தம்பண்ணப்படு கிறோம். |
| நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது, வினாடி நேரத்தில் நடைபெறும் செயல். | நாம் ஆவியினால் நடத்தப்படும் போது, வாழ்க்கை முழுவதிலும் நடைபெறுகிற ஒரு செயல். |
| கிறிஸ்துவின் மரணத்தினால்மட்டும் இரட்சிக்கப்படுகிறோம். | சுபாவத்தின் மாறுதலினால் இரட்சிப்பு சாட்சியாக்கப்படுகிறது. |
| தேவகிருபைமட்டும்! கிரியைகள் இல்லாமல் இரட்சிப்பு! பிரமாணம் இரட்சிக்காது. | வாழ்க்கையை மாற்றக்கூடிய தேவனுடைய வல்லமையால், நற்கிரியைகளை செய்வதற்காக இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். |
| கிறிஸ்துமட்டுமே இரட்சிக்கிறார் | கீழ்ப்படிதல் இரட்சிப்பின் கனியாக உள்ளது. |
| **ஏசாயா 53:4—6;** | **யோவான் 14:15;** |
| **மத். 20:28;** | **ரோமர் 3:31; 6:1,2,15; 8:4,7,8; 12:2;** |
| **லூக்கா 23:42,43;** | **2 கொரி. 5:17;** |
| **யோவான்3:16;** | **கலா. 6:9;** |
| **அப். 4:12; 16:31;** | **எபே. 2:10;** |
| **ரோமர் 1:17; 3:24; 4:6; 6:14; 8:3; 10:9,13; 11:6;** | **பிலி. 4:8;** |
| **2 கொரி. 5:21;** | **1 தெச. 4:7;** |
| **கலா. 3:11.** | |

**எபே. 2:8,9;**

**பிலி. 3:9;**

**1 தீமோ. 1:15;**

**2 தீமோ. 1:9;**

**தீத்து 3:5;**

**1 பேதுரு 2:24; 3:18;**

**1 யோவான் 1:7,9.**

நீதிமானாக்கப்படுதல் பவுலின் கண்ணோட்டத்தில், முக்கியமான கருத்து!

நீதிமானாக்கப்படுதல் என்னும் இந்தப் பகுதியுடன் இடைப்படும் அனைத்தையும் கிறிஸ்தவ சபைகள் அனைத்தும் நம்புகின்றன.

**யாக். 1:22—25; 2:14—26;**

**2 பேதுரு 3:11,14;**

**1 யோவான் 2:3,4; 5:2,3.**

**வெளி. 12:17; 14:12; 22:14;**

பரிசுத்தமடைதல் யாக்கோபின் முக்கியமான பார்வையின் கருத்து; ஆனாலும் பவுல் இடைப்படும் இந்த விஷயத்தில் உள்ள மேற்காணும் வசனங்களைக் கவனியுங்கள்.

பரிசுத்தமடைதல் என்னும் விஷயம் பற்றிய இந்தப் பகுதியில், செவன்த்—டே அட்வென்டிஸ்ட் சபையும் இடைப்படுகிறது.

**கிறிஸ்தவனின் முழு வாழ்க்கைக்கும் இந்த இரண்டு பகுதிகளும் அவசியமாக உள்ளன.**

**குறிப்பு :— இந்த விஷயம் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. எல்லா வசனங்களையும் நன்றாகக் கவனித்து, அதை மிகக் கவனமாக வாசியுங்கள்.**

அவனுடைய வாழ்க்கையில் இருக்கும் இந்த மாற்றம் அவன் உண்மையில் இரட்சிக்கப்பட்டவன் என்று சாட்சிபகரும். ஒவ்வொரு நாளும் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது. நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் செய்யும் கிரியை இது.

கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலே வருகிற இந்த அனுதின மாற்றமே பரிசுத்தமடைதலாகும். இது நம்முடைய வாழ்நாள் முழுவதும் நாம் செய்யும் வேலை.

“சீர்திருத்தம் உண்டாகாதவரை, மனந்திரும்புதலுக்கான உண்மையான சான்று இருக்காது.”— **S.C:44**

“தேவனுடைய பிள்ளைகள், குறிப்பாக சமீபத்தில் அவருடைய கிருபையில் நம்பிக்கை வைக்க வந்துள்ளவர்கள், தங்களைக் காத்துக் கொள்வதற்கெதிரான இரண்டு தவறுகள் உள்ளன; முதலாவது தவறு, ஏற்கனவே விளக்கப்பட்டுவிட்டது. அதாவது, தங்களுடைய சொந்தக் கிரியைகளைப் பார்ப்பது, தேவனோடு தங்களை இசைவாக்க தங்களால் செய்யமுடிகின்ற எதன்மீதும் நம்பிக்கை வைப்பது. பிரமாணத்தைக் கைக்கொள்ளுகின்ற தனது சொந்தக் கிரியைகளினால் பரிசுத்தமடைய முயற்சிசெய்துகொண்டிருப்பவன், முடியாத ஒன்றைச் செய்ய முயற்சிக்கிறான். கிறிஸ்து இல்லாமல் மனிதன் செய்கின்ற அனைத்தும், சுயநலத்தினாலும் பாவத்தினாலும் தீட்டுப்பட்டுள்ளது. விசுவாசத்தினாலாகும் கிறிஸ்துவின் கிருபை—அதுமட்டுமே—நம்மைப் பரிசுத்தமாக்குகிறது.

“அதற்கு நேர் எதிரானதும் அதைவிட அபாயக் குறைவு இல்லாததுமான தவறு, கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கை மனிதர்களைப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதிலிருந்து விடுவித்திருக்கிறது என்று எண்ணுவதாகும். அதாவது விசுவாசத்தினால்மட்டுமே நாம் கிறிஸ்துவின் கிருபையில் பங்குபெறுபவதால், நமது மீட்புடன் நமது கிரியைகளுக்குச் சம்பந்தமில்லை என்பதாகும்.”— **SC 59,60.**

“கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தின்மூலமாக, மனிதன் அவனுடைய மிகவும் நல்ல திறமைக்குத்தக்கதாகச் செயலாற்றும்போது, பத்துக் கற்பனைகளைக் கைக்கொள்ளுகின்ற கீழ்ப்படிதலினால், கர்த்தருடைய பாதையில் நடப்பதனால், மனந்திரும்பிக் கீழ்ப்படிகின்ற ஆத்துமாவின் மீறுதலை மூடுவதற்காகக் கிறிஸ்துவின் பரிபூரணம் (நீதி) அணிவிக்கப் படுகிறது.”—**FE 135.**

“வேதாகமச் சத்தியத்தின் ஒரு பகுதியைத் தங்களுக்குப் பின்னாக வீசியெறிந்துவிடுபவர்களுக்கு வேதாகமம் கூறும் பரிசுத்தமடைதல் இல்லை… பரிசுத்தமடைதல் என்பது ஒரு வினாடி நேர, ஒரு மணி நேர அல்லது ஒரு நாளின் செயலாக இல்லை. அது தொடர்ச்சியாகக் கிருபையில் வளர்வதாக உள்ளது. ஒரு நாளில் அடுத்ததாக இருக்கக்கூடிய நமது போராட்டம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நாம் அறியமாட்டோம். சாத்தான் உயிருடன் இருக்கிறான். அவன் தீவிரமானவனாக இருக்கிறான். அவனைத் தடைசெய்வதற்கான உதவிக்காகவும் பலத்திற்காகவும் தேவனை நோக்கி நாள்தோறும் அக்கறையுடன் நாம் அழ வேண்டியது அவசியமாயிருக்கிறது. — **7 S.D.A.BC 947.**

"சத்தியம் உள்ளான பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுவரப்பட்டு ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்தாதவரை அதற்கு மதிப்பில்லை. இருதயமாகிய நிலத்தின் உழவுச்சாலில் சத்தியம் என்னும் ஏர்க்கொழு ஆழமாகச் செலுத்தப்படாதவரை, பக்தி நலிவடைந்துவிடுவதுடன், மதம் ஒரு மேலோட்டமான நுண்ணுணர்வுக் கோட்பாடாகிவிடும். சத்தியம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் போது, அது வாழ்க்கையிலும் சுபாவத்திலும் அடிப்படையான மாறுதல்களைச் செய்யும். ஏனெனில், மதம் என்றால் இருதயத்தில் கிறிஸ்து வாசம்செய்கிறார் என்று பொருள்படும். அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கு ஆத்துமா ஆவிக்குரிய காரியங்களைச் செய்யச் சொல்லுகிறது. எப்போதும் கிருபையில் வளருகிறது, எப்போதும் பூரணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. நமது சபைகளனைத்திற்கும் ஊடாக ஆவிக்குரிய வாதமுள்ளவர்கள், செயலாற்றமுடியாதவர்கள் இருக்கின்றனர். அவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை வெளிக்காட்டுவதில்லை."—**RH, May 24, 1892.** ★

# 18

# கிறிஸ்தவ படித்தரங்கள்!

## கிறிஸ்துவைப்போன்ற தன்மைகள்

**1 யோவான் 2:6** "அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்."

**பிலி.2:5** "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையேஉங்களிலும் இருக்கக்கடவது."

**1 பேதுரு 2:21** "நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்."

**கொலோ. 3:17** "நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே செய்யுங்கள்."

**கொலோ. 2:6** "அவருக்குள் நடந்துகொண்டு..."

**1 கொரி. 10:31** "எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்."

"கிறிஸ்துவின் வாழ்க்கையும் ஆவியும்மட்டுமே மேன்மைமிக்கதும் பூரணமானதுமான தரமாக இருக்கிறது. அவருடைய பூரணத்தைப் பின்பற்றுவதே, நமது பாதுகாப்பான நடத்தையாக இருக்கிறது."—**1 T 408.**

## அன்பு

**யோவான் 13:35** "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களா யிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று அறியப்படுவீர்கள்."

**1 யோவான் 3:14** "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்கு உட்பட்டிருக்கிறோம் ..."

**1 யோவான் 3:11** "நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும்."

**யோவான் 15:12** "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது."

**கலா. 5:22** "ஆவியின் கனியோ அன்பு."

**எபே. 4:31,32** "ஒருவருக்கொருவர் மன உருக்கமாயிருந்து … ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."

## வாழ்க்கையில் தூய்மை

**மத். 5:8** "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."

**மத். 5:28** தூய்மையற்ற செயல்கள் மட்டும் ஆக்கினைக்குட் படுத்தப்படாமல், தூய்மையற்ற பார்வையும் எண்ணமுங் கூட ஆக்கினைக்குட்படுத்தப்படுகிறது.

**ரோமர் 1:21-32** "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள், (வச.26-ல் கூறப்பட்டுள்ள தீய ஆசைகளை உடையவர்கள்), மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்." (வச.32)

**1 கொரி. 5:9-11** சகோதரன் என்னப்பட்ட ஒருவன் விபச்சாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, உதாசீனனாயாவது, விக்கிரக ஆராதனைக்காரனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது.

**குறிப்பு** - "கலந்திருந்தல்" என்றால், சகோதரன் (முன்பு சொல்லப்பட்ட அதாவது சபை விசுவாசி) எனப்படுகிற எவரோடும், அவனுடைய பாவத்தை நாம் அங்கீகரிக்கிறோம் என்றோ அல்லது பெரிதாக நினைக்கவில்லை என்றோ, அவனிடமோ அல்லது மற்றவர்களிடமோ சொல்லுவதைப்போல நடந்துகொள்ளுவதாகும். அப்படிப்பட்டவர்களைக் கிறிஸ்துவுக்கென்று மீண்டும் ஆதாயப்படுத்த, நிச்சயமாகவே நாம் நண்பர்களாக இருந்தாகவேண்டும்; ஆனால், தேவனுடைய கண்களில் பாவம் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கிறதென்பதை இந்த வசனங்கள் போதிக்கின்றன. பாவம் ஒரு சிறு காரியமன்று. அப்படிப்பட்டவர்கள் புறம்பாக்கப்படவேண்டும் (வச. 13). அதாவது, சபையின் பெயர் சுத்தமானதாக இருக்கும்படிக்கு அப்படிப்பட்டவர்கள் சபையிலிருந்து நீக்கப்பட்டாகவேண்டும்.

| | |
|---|---|
| **2 பேதுரு 3:14** | "நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் … இருங்கள்." |
| **கலா. 5:19-21** | "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் **சுதந்தரிப்பதில்லை**." |
| **எபே. 5:3-12** | "வேசித்தனமும் மற்றெந்த அசுத்தமும் பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவும்கூடாது." |
| **பிலி. 4:8** | "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ள வைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே **சிந்தித்துக்கொண்டிருங்கள்**." |
| **கொலோ. 3:5-10** | "ஆகையால், (கீழடக்கி, கீழேவைத்து, வெற்றி கொண்டு) உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்; புதிய மனுஷரைத் தரித்துக்கொள்ளுங்கள்." |
| **1 தெச. 4:7** | "தேவன் நம்மை…பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்." |
| **2 பேதுரு 3:11** | "நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும் …" |
| **வெளி. 21:8,27; 22:15** | "தேவனுடைய இராஜ்ஜியத்துக்குப் புறம்பே இருப்பவர்கள்." |

**குறிப்பு**:- இந்தத் துன்மார்க்கமான உலகத்தில், பாவத்திற்குள் நாம் பிறந்திருப்பதினால், நாம் பாவத்தால் சூழப்பட்டிருப்பதினால், இயற்கையிலேயே பாவமுள்ளவர்களாக இருக்கும் நம்மால், ஒரு சுத்தமான வாழ்க்கையை வாழ்வதும் தூய்மையாகவும் நீதியாகவும் நமது சொந்த பலத்தினால் வாழ்வதும் முடியாததாக உள்ளது. நமக்கு இயேசு தேவையாக இருக்கிறார். நாம் இயேசுவை உடையவர்களாக இருக்கவேண்டும். என்னைப் பெலப்படுத்துகின்ற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலிப்பியர் 4:13) என்று வேதாகமம் கூறுகிறது. கிறிஸ்துவில் நாம் ஜெயம்கொள்ளுகிறவர்களாக இருக்கமுடியும். கிறிஸ்துவில் நாம் தூய்மையானவர்களாக இருக்கமுடியும். என்

### உலகத்தின் டிபால்லாத வரிகளைவிட்டு விலகி இருத்தல்

**லூக்கா 9:23** "தன்னைத்தான் வெறுத்து என்னைப் பின்பற்றக்கடவன்"

**கலா. 6:14** "அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்."

**யாக். 4:4** "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை."

**1 யோவான் 2:15-17** "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்.

**தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதல்**

**மத். 19:17** "நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால், கற்பனைகளைக் கைக்கொள்."

**குறிப்பு:**- இவைகள், தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டிருந்த அந்த வாலிப அதிபதியை நோக்கி, இயேசு கூறின வார்த்தைகள்; என்றாலும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் உண்மையான அஸ்திபாரமாக இருக்கும் அன்பின் ஆவியுடன் அவன் அப்படிச் செய்திருக்கவில்லை.

**யோவான் 14:15** "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்."

**யாக்கோபு 2:10-12** "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக் கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால், எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்... (எல்லோரும்) சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்பை அடைவார்கள்."

**குறிப்பு:**- பத்துக் கற்பனைகள் சுயாதீனப்பிரமாணம் என்று கூறப்படுகின்றது. ஏனெனில், அவைகளுக்குக் கீழ்ப்படிவதினால் நாம் பாவத்திலிருந்தும் பாவத்தின் பலன்களிலிருந்தும் அதன் பலனாகிய மரணத்திலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

**1 யோவான் 2:3,4** "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதனால் அறிவோம்."

**1 யோவான் 5:2,3** "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூர்வதாம்."

**வெளி. 12:17** "தேவனுடைய மீதியான (கடைசி) சபை, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறது."

**வெளி. 14:12** தேவனுடைய கற்பனைகளைக் காத்துக்கொள்கிறவர்கள் இங்கு இருக்கின்றனர். (இயேசுவின் இரண்டாம் வருகையின் நேரத்தைப்பற்றிப் பேசுதல்.வச. 14).

**வெளி. 22:14** "ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கு ... அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்."

**குறிப்பு:-** சில வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் கற்பனைகளின்படி செய்கிறவர்கள் என்பதற்குப்பதிலாக, அங்கியைத் தோய்த்து வெளுத்தவர் கள் என்று மொழிபெயர்த்துள்ளனர். மூல மொழியிலுள்ள வார்த்தைகள் அதிகமாக அதேவிதமாக இருப்பதினால் இப்படி இருக்கிறது; அப்படியிருந்தாலும், அவர்களுடைய அங்கிகளை வெளுப்பது என்பதின் அர்த்தம், நாம் தேவனுக்கு முன்பாக முற்றிலுமாகச் சுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும்; அவருடைய பரிபூரணமான கற்பனைகளைக் காத்துக்கொள்ளுவதினால்மட்டுமே நம்மால் வரமுடியும்.

**உபா. 22:5** ஆண்கள் பெண்களுடைய உடைகளையோ பெண்கள் ஆண்களுடைய உடைகளையோ உடுத்திக்கொள்ளக்கூடாது.

**ஏசாயா 3:16-24** பிறரைக் கவரும் விதத்தில், அல்லது தனித்தவர்கள் என்னும் தோற்றத்துடன் காணும்படி ஆபரணங்களை அணியக்கூடாது.

**2 இராஜா. 9:30** முகத்தில் வர்ணம் பூசுதல் என்பது ஓர் அஞ்ஞான ஸ்திரீயின் அடையாளம்.

**எரே. 4:30; எசே. 28:40** நகைகள் அணிந்துகொள்ளுவதும் முகத்துக்குச் சாயம் பூசுவதும் மருளவிழுகையின் அடையாளம்.

**1 பேதுரு 3:3-5** ஆபரணங்களை அணிதல், கிறிஸ்தவ உடையின் ஒரு பகுதியல்ல; இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்.

**1 தீமோ. 2:9** "தகுதியான வஸ்திரத்தினால்"

"உடையில் இருக்கவேண்டிய அடக்கத்தைப்பற்றி வேதாகமம் போதிக்கிறது. அணிந்துகொள்ளுபவரின்மீது கவனம் இழுக்கப்படும்படியாக, வடிவமைக்கப்பட்ட எந்தக் கருவியும் (பொருளும்) அல்லது போற்றுதலைத் தூண்டக்கூடிய எதுவும் தேவனுடைய வார்த்தை கட்டளையிடும் அடக்கமான உடையிலிருந்து தவிர்க்கப்பட்டிருக்கிறது."—**MH 287.**

"நமது உடையில் உள்ள அஜாக்கிராதையினாலும் அலட்சியத் தினாலும் அவிசுவாசிகளுக்கு அருவருப்பை உண்டுபண்ண வகைதேடாமல், அடக்கமான விதத்தில், கபடமில்லாத மனங்களின் நிதானத்தில் புகழ்ச்சியை

உண்டுபண்ணுகின்றவிதத்தில், உடல் நலத்திற்கும் நல்ல பண்பிற்கும் ஏற்ற விதத்தில் உடை இருக்கவேண்டும்."—**2 T 66.**

## தோலின்மீது கீறல்களையும் அல்லது அடையாளங்களையும் உண்டுபண்ணுதல்

**லேவி. 19:28; 21:5** "உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும் அடையாளமான எழுத்துக்களை உங்கள்மேல் குத்திக்கொள்ளாமலும் இருப்பீர்களாக."

**உபா. 14:1** "கர்த்தரின் பிள்ளைகளே ... கீறிக்கொள்ளாமலிருங்கள்"

**1 இராஜா. 18:28** பாகாலுக்கு ஆராதனைசெய்பவர்கள் தங்களைக் கீறிக்கொள்வது வழக்கமாயிருந்தது.

## மற்ற ஜனங்களுக்கு முன்பாக நாம் எவ்விதமாக நடந்துகொள்ளவேண்டும்,

நாம் அன்புள்ளவர்களாகவும், நேசிப்பவர்களாகவும், மதிப்பவர் களாகவும், மற்றவர்களுடைய உணர்ச்சிகளைப்பற்றிக் கவனமுள்ளவர் களாகவும் இருக்க வேண்டுமென்று வேதாகமம் கூறுகிறது. நாம் மரியாதை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று அது நமக்குப் போதிக்கிறது. கிறிஸ்தவன் மற்றவர்களுக்கு நேராக எவ்விதமாக நடந்துகொள்ளவேண்டும் என்பதைக் காட்டுவதில் கீழ்க்காணும் வசனங்கள் சிலவாகமட்டும் உள்ளன.

**யாத். 20:12** "உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக ..." (தங்களுடைய தகப்பன், தாய் சொல்லுவதைக் கவனித்து, அவர்களை மதிப்பவர்கள் தேவனுடைய பார்வையில் ஓர் ஆபரணமாகவும் அல்லது அழகானவர்களாகவும் உள்ளனர்—நீதி. 1:8,9).

**யாத். 22:22-24** விதவைகளிடத்திலும், திக்கற்றவர்களிடத்திலும் அன்புள்ளவர்களாயிருங்கள் — (யாக். 1:27)

**லேவி. 19:14** செவிடரும், குருடருமாக இருப்பவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

**லேவி. 19:32** நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணுங்கள்.

| | |
|---|---|
| **நீதி. 6:12-5** | கண்களால் சைகை காட்டுவதும், கைகளினாலும், கால்களினாலும் சைகை காட்டுகிறான்; அது அகந்தையின் அடையாளமாக இருந்து, பொல்லாப்புக்கு நடத்துகிறது. |
| **நீதி. 25:17** | "உன் அயலான் சலித்து, உன்னை வெறுக்காதபடிக்கு, அடிக்கடி அவன் வீட்டில் கால் வைக்காதே." |
| **நீதி. 27:14** | "நீங்கள் அதிகாலையில் எழுந்தால், மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யாமலிருக்க நிச்சயித்துக்கொள்ளுங்கள்." |
| **மத். 5:33-37; 12:36-37** | வீணான வார்த்தைகளைக் குறித்தும் பயனற்ற உணர்த்துதல்களைக்குறித்தும் எச்சரிக்கை உள்ளவர்களாயிருங்கள். |
| **ரோமர் 12:10** | "கனம்பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்." |
| **2 தீமோ. 2:24** | "எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனாயிரு." |

"அன்றாட வாழ்க்கையிலுள்ள நமது நடத்தையில் தான் உண்மையான மதம் காணப்படுகிறது.—**3 T 377.**

**தொழிலில் கிறிஸ்தவன்**

| | |
|---|---|
| **யாத். 20:15** | "களவுசெய்யாதிருப்பாயாக." |
| **லேவி. 19:11; ரோமர் 12:17; 1 தெச. 4:6; எபி. 13:18** | "யோக்கியமாய் நடவுங்கள்." |
| **லேவி. 19:36** | சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான நிறைகல்லும் உடையவர்களாய் இருங்கள். |
| **லேவி. 19:13** | கூலி சரியான நேரத்தில் கொடுக்கப்படவேண்டும். |
| **லேவி. 25:35-37** | ஏழையான சகோதரனிடத்திலிருந்து வட்டி வாங்க வேண்டாம். |
| **நீதி. 22:7; ரோமர் 13:8** | கடன்படாதே. |
| **யாத். 22:14** | இரவல் வாங்கினது சேதமடைந்தால், அதை நாம் சரி செய்துகொடுக்கவேண்டும். |
| **நீதி. 10:4; 19:15; 20:24; 22:29;** | நாம் சோம்பேறிகளாக இராமல், |

| | |
|---|---|
| **ரோமர் 12:11** | சுறுசுறுப்புள்ளவர்களாக வேலைசெய்யவேண்டும். |
| **பிரசங்கி 9:10** | "செய்யும்படி உன் கைக்கு வாய்க்கிறது எதுவோ அதை உன் பெலத்தோடே செய்." |
| **1 தெச. 4:11** | புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து, நாம் நமது சொந்த வேலையை சரியாகச் செய்ய நிச்சயமுள்ளவர்களாயிருக்க வேண்டும். |
| **நீதி. 6:1,2; 11:15; 17:18; 22:26** | மற்றவர்களுக்காக பிணைப்படாதே. |
| **ஆபகூக் 2:15** | மதுபானம் விற்பவன் சபிக்கப்பட்டவன். |
| **மல்கியா 3:8-11** | தசமபாகத்தை நேர்மையாய் கொடுங்கள். |
| **லூக். 12:20,21** | தேவனுக்கு நேராய் ஐசுவரியவானாய் இராமல், பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைப்பது மதிகேடான காரியம். |
| **யாத். 22:21-24; நீதி. 22:22** | அந்நியர்களையும், விதவைகளையும் அல்லது தகப்பனில்லாதவர்களையும் அல்லது ஏழைகளாக இருப்பவர்களையும் அல்லது துன்பப்படுகிறவர்களையும் எப்படி நடத்துகிறோம் என்பதில் குறிப்பாக கவனமுள்ளவர்களாக இருங்கள். |
| **மீகா 6:8** | "நியாயஞ்செய்து, இரக்கத்தை நேசித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத் தாழ்மையாய் நட." |
| **மத். 7:12** | பொன்னான சட்டம்! "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." |

"வியாபாரச் செயல்கள் ஒவ்வொன்றும் தேவப் பிரசன்னத்துடன் சுகந்தமானதாக இருக்கவேண்டும்.—**9T 21.**

### பண ஆசைக்கு எதிரான எச்சரிக்கை

| | |
|---|---|
| **1 தீமோ. 6:10** | "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" பண ஆசையின்மூலமாக சிலர் விசுவாசத்திலிருந்து தவறியிருக்கின்றனர். |

**சங். 62:10** "ஐசுவரியம் விருத்தியானால், உங்கள் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்."

**நீதி. 15:27; பிர. 5:10** "பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்."

**மாற்கு 10:24** "ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாய் இருக்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது."

**உபா. 8:18** ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலனைக் கொடுக்கிறவர் தேவன் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதே. நாம் அதனை அவருடைய மகிமைக்காகப் பயன்படுத்தவேண்டும்.

"தேவனுடைய ஆவி இருதயத்தின் இடத்தை எடுத்துக்கொள்ளும்போது, அது வாழ்க்கையை மறுரூபப்படுத்துகிறது. பாவமிக்க எண்ணங்கள் தூரமாக விலக்கப்படுகின்றன. தீய செயல்கள் மறுக்கப்படுகின்றன. அன்பு, தாழ்மை, சமாதானம் ஆகியவை, கோபம், பொறாமை, கலகம் ஆகியவைகளின் இடத்தை எடுத்துக்கொள்ளுகின்றன. துயரத்தின் இடத்தை மகிழ்ச்சி எடுத்துக்கொள்ளும்போது, முகம் பரலோகத்தின் ஒளியைப் பிரதிபலிக்கிறது. பாரத்தைக் தூக்குகின்ற கரத்தை ஒருவரும் பார்ப்பதில்லை; அல்லது உன்னதத்தின் பிராகாரங்களிலிருந்து இறங்கும் ஒளியைக் காண்பதும் இல்லை. விசுவாசத்தினால் ஆத்துமா தேவனிடம் தானாகச் சரணடையும்போது, ஆசீர்வாதம் வருகிறது. அப்பொழுது எந்த மனிதக் கண்களினாலும் பார்க்கமுடியாத வல்லமை தேவனுடைய சாயலில் ஒரு புதிய மனிதனைப் படைக்கிறது."—**DA 173.**

"தேவனுடன் உண்மையாகவே பிணைக்கப்பட்டவர்களால், சுயமறுப்பு, சுயத்தியாகம், அனுதாபம், அன்பு, நேசம், பொறுமை, தீமையை எதிர்த்து நிற்கும் மனவலிமை, கிறிஸ்தவ நம்பிக்கை ஆகிய அன்றாடக் கனிகள் கொடுக்கப்படுகின்றன."—**SL 10.**

"கர்த்தராகிய இயேசு அவருடைய இரக்கம், ஏராளமான கிருபை ஆகியவைகளின் வெளிக்காட்டுதலின்மூலமாக, மனித இருதயங்களில் பரிசோதனைகளைச் செய்துகொண்டிருக்கிறார். அவனின் உண்டாகிற மாற்றம் ஆச்சரியமானது. எப்படியெனில், சாத்தான் தனது வெற்றிகளைக்குறித்த பெருமையோடு, தனது பொல்லாத சேனை கூட்டத்துடனும் இணைந்து தேவனையும் அவருடைய அரசாங்கத்தின் கட்டளைகளையும் எதிர்த்தாலும், தன்னுடைய ஜாலங்களாலும் தந்திரங்களாலும் துளைக்கமுடியாத

ஒரு கோட்டையாக அதைப் பார்க்கிறான். அவைகள் அவனுக்குப் புரிந்துகொள்ளமுடியாத இரகசியமாக இருக்கிறது. தேவனுடைய தூதர்களும் சேராபீன்களும், கேருபீன்களும் மனித ஏதுகரங்களுடன் கூட்டுறவுகொள்ளும்படி ஏற்படுத்தப்பட்டுள்ள வல்லமைகளும், விழுந்துபோன மனிதர்கள், ஒரு சமயத்தில் கோபத்திற்குட்பட்டவர்களாக இருந்த பிள்ளைகள், கிறிஸ்துவின் பயிற்சியின் மூலமாகத் தேவ சாயலையும் தெய்வீக சுபாவத்தையும் முன்னேற்றமடையச் செய்துகொண்டிருப்பதையும், தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாகிக்கொண்டிருப்பதையும் பரலோகத்தின் பணிகளிலும் சந்தோஷங்களிலும் முக்கியமான பங்குபெறச் செயலாற்றுவதையும் ஆச்சரியத்துடனும் சந்தோஷத்துடனும் பார்க்கின்றனர்."—**TM 18.** ★

# 19

# கிறிஸ்தவனும் அவனது ஆகாரமும்!

## மிகவும் சிறந்தவைகளைமட்டும் உண்ணுங்கள்

| | |
|---|---|
| **1 கொரி. 3:16,17** | "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்; ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது." |
| **1 கொரி. 10:31** | "... புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." |
| **3 யோவா. 2** | "உன் ஆத்துமா வாழ்கிறதுபோல, நீ சுகமாயிரு..." |
| **1 கொரி. 9:24–27** | "எல்லாவற்றிலும் இச்சையடக்கமாயிருப்பார்கள்" |
| **சங். 106:14,15** | இஸ்ரவேலர்கள் அவர்கள் விரும்பினதைப் புசித்தபோது, அது ஆத்துமாக்களில் இளைப்பை உண்டுபண்ணினது. |
| **நீதி. 23:1–3** | ஐசுவரியவானின் அறுஞ்சுவை உணவுகள் கள்ளப் போஜனமே; கேக்குகள், கஸ்டர்டுகள், குளிர்பானங்கள் போன்றவைகள் சுவையுள்ளவைகளாக இருந்தபோதிலும், பலமும் நலமும்மிக்க உடல்களைக் கட்டுமானம்செய்வதற்கான சிறந்த உணவல்ல! |
| **நீதி. 25:27,28** | இனிப்புப் பண்டங்களை உண்ணும் மக்கள் பலவீனர்களாகவே உள்ளனர். |
| **தானி. 1:8** | மிகச் சிறந்தவைகளைமட்டுமே புசித்து குடிக்கிற தானியேல் மற்றும் அவனது நண்பர்களின் பழக்கம் உதாரணமாயிருக்கிறது; அது அவர்களை அதிக அழகுள்ளவர்களாகவும் ஆரோக்கியமுள்ளவர்களாவும் மற்றவர்களைவிட ஞானமுள்ள வர்களாகவும் மாற்றியது (வச. 15, வச. 20). |

### நல்லவைகளல்லாத உணவுகள்

| | |
|---|---|
| **லேவி. 7:23–27; அப். 15:20** | கொழுப்பையும் இரத்தத்தையும் உண்ணக்கூடாது. |
| **லேவி. 11; உபா. 14** | புசிக்கக்கூடாத மாமிச உணவுகள். |
| **ஏசாயா 66:15–17** | இவைகளைப் புசிப்பவர்கள், இயேசுவின் இரண்டாம் வருகையின்போது, சங்காரம் செய்யப்படுவார்கள். |
| **மாற்கு 5:13** | இரண்டாயிரம் பன்றிகளை அழிக்க இயேசு அனுமதித்தார். (நிச்சயமாகவே அவர் நல்ல உணவுப் பொருள்களை அழிக்க அனுமதித்திருக்கமாட்டார்; பன்றிகளை அழிக்க அனுமதித்ததால், இயேசு அவைகளை நல்ல உணவாகக் கருதவில்லை. இப்படிப்பட்ட உணவை தேவன் தடைசெய்திருக்கிறார்). |

### பீர், ஒயின் போன்ற போதைவகைகள்

| | |
|---|---|
| **உபா. 29:18–21** | தாகத்தினிமித்தம் வெறிக்கக் குடிக்கக்கூடாது; அல்லது நஞ்சுள்ள வேர்களையும், செடிகளையும், சாறுபிழிந்தும் குடிக்கக்கூடாது. |
| **நீதி. 20:1** | "மதுபானம் அமளிபண்ணும்." |
| **நீதி. 23:29–32** | "ஐயோ! யாருக்கு வேதனை! (மதுபானத்தை) நீ அதைப் பாராதே…" (ஏசாயா 5:11; 28:7,8– யும் படிக்கவும்). |
| **நீதி. 31:4,5** | அதிகாரத்தில் உள்ளவர்கள் மதுபானம் குடிக்கக்கூடாது; ஏனெனில், அவைகள் நியாயத்தைப் புரட்டும். |
| **நீதி. 31:6,7** | இறந்துகொண்டிருப்பர்களுக்கு அவர்களுடைய வேதனை யிலிருந்து நிவாரணம் கிடைக்க உதவ, ஒரு மருந்தாக மதுபானம் கொடுக்கலாம். (எங்கு அவசியமோ அங்கு விஷமிக்க மருந்துகள் ஒரு மருந்தாகப் பயன்படுத்தப்படலாம் என்று இந்த வசனம் காட்டுகிறது; அப்படியிருந்தபோதிலும், அப்படிப்பட்ட பொருள்கள், எல்லா நேரத்திலும் ஒரு உணவைப்போல், பயன்படுத்தப்படக்கூடாது; இந்தக் காலத்தில் வேதனையிலிருப்பவர்களுக்கு உதவுவதற்காக சாராயத்தைவிட நல்ல மருந்துகள் பல உள்ளன). |
| **ஆபகூக் 2:15** | மற்றவர்களுக்கு மதுபானத்தைக் குடிக்கக் கொடுக்கக் கூடாது. |

| | |
|---|---|
| **1 கொரி. 6:10** | வெறியர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை. |

**புகையிலை, வெற்றிலை பாக்கு, அபின் போன்றவைகள்**

| | |
|---|---|
| **1 கொரி. 3:16,17** | "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்." |

**குறிப்பு:**– புகையிலை, வெற்றிலை பாக்கு, மாரிஜீனா, அபின் மற்றும் அவைபோன்ற பொருட்கள் நமது உடல்களைப் பலவீனப்படுத்தவும் நோயுறச் செய்யவும் காரணமாகின்றன என்று டாக்டர்கள் கூறுவதுடன், அது முழுமையாக மெய்ப்பிக்கப்பட்டுமிருக்கிறது. நுரையீரல் புற்றுநோய்க்கும் இருதயக் கோளாறுகளுக்கும் இன்னும் அநேக நோய்களுக்கும் பெரும் காரணமாகப் புகையிலை இருக்கிறது. வெற்றிலை பாக்குச் சுவைத்தால், வாய்ப் புற்று ஏற்படுவதுடன், அநேகர் இறந்தும் உள்ளனர். வெற்றிலை பாக்குச் சுவைத்தல் மூளையையும் மந்தப்படுத்துகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அது நமது உடலைக் கெடுக்கிறது. அப்படியே, புகை பிடிப்பதையும் வெற்றிலை பாக்குச் சுவைப்பதையும் உடலை மோசமாகப் பாதிக்கின்ற மற்றெதையும் இந்த வசனம் தடைசெய்கிறது. இவைகள் அசுத்தமான பழக்கங்களாக உள்ளன. இவை கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் காணப்படலாகாது.

நாம் பானம்செய்வதற்கு நல்லவைகளல்லாத தேயிலை, காபிபோன்ற அநேக பிரசித்தமான பானங்களுங்கூட உள்ளன. தேயிலையில் டானின் என்னும் பொருளும், காபியில;காபின் என்னும் பொருளும் அடங்கியுள்ளன. இவைகள் சரீரத்தில் வழக்கமாக உட்கொள்ளப்பட்டால், அவை நரம்புகளையும், வயிற்றையும், சீரண உறுப்புகளையும் அழற்சியுறச்செய்கின்றன. இவைகள் ஊக்குவிப்பவைகளாக இருந்து, சிறிது நேரத்திற்கு உடலை நன்றாக இருப்பதுபோல் உணரச்செய்து, ஆனால் கொஞ்சங்கொஞ்சமாக உடலையும், நரம்புகளையும் பலவீனப்படுத்துகின்றன. இந்தப் பொருட்கள் இல்லாமல் வாழ்வதற்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டும்; ஏனெனில், நாம் சுகமாய் இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் (3 யோவான் 2). நமது உடல்களை நாம் கெட்டுப்போகாத தேவனுடைய ஆலயங்களாகக் காத்துக்கொள்ளவேண்டும் (1 கொரி. 3:16,17).

"தொடாதே, ருசிக்காதே, கையாளாதே என்பதுமட்டுமே பாதுகாப்பான பாதையாக இருக்கிறது. தேயிலை, காபி ஆகியவைகளும் அவைகளைப்போன்ற பானங்களின் தன்மைகளும், ஆல்கஹால் கலந்த

மதுவையும் புகையிலையையும் போன்றவைகளின் அதே திசையிலிருந்து, சில காரியங்களில், ஒரு குடிகாரனால் போதைப்பொருட்களை விட்டுவிடுவது கடினமானதாக இருக்கிறது. இந்த ஊக்குவிக்கும் பொருட்களை விட்டுவிலக முயற்சிசெய்பவர்கள் சிறிது காலத்திற்கு ஓர் இழப்பை உணர்ந்து, அவைகள் இல்லாமல் துன்பப்படுவார்கள்; ஆனால் தொடர்ந்த முயற்சியினால், அவர்கள் அந்த ஏக்கத்தை—மிகுந்த விருப்பத்தை—மேற்கொண்டு, அதன் இல்லாமை என்னும் உணர்வு இல்லாதவர்களாகிவிடுவார்கள். அனுபவித்திருக்கும் தவறான பழக்கத்திலிருந்து மீள்வதற்கு இயற்கைக்குச் சிறிது கால அவகாசம் அவசியமாக இருக்கலாம்; ஆகையால் அவளுக்கு மறுபடியும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள்; அவள் மறுபடியும் நலம்பெற்று, அவளுடைய பணியை மேன்மையாகவும் நன்றாகவும் செய்வாள்."—**MH 335.**

"உடல் நலத்திலும், நோயிலும், தூய்மையான நீர் பரலோகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மிகச் சிறப்பான ஆசீர்வாதங்களில் ஒன்றாக இருக்கிறது. அதன் சரியான உபயோகம் உடல் நலத்தை முன்னேற்றுகிறது. அது விலங்குகள் மனிதர்கள் ஆகியோரின் தாகத்தைக் தணிப்பதற்கென்று, தேவனே ஏற்படுத்தியிருக்கும் பானமாயிருக்கிறது. சரீரத்தின் தேவைகளுக்கு விநியோகம் செய்யவும், நோயைத் தடுப்பதற்காக இயற்கைக்குத் துணைசெய்யவும் அது உதவுகிறது. ஏராளமாகத் தண்ணீர் குடியுங்கள்." —**MH 237.**

"மட்டாகக் குடித்தல் என்னும் பள்ளியில் தான், குடிகாரர்கள் தங்களுடைய கேட்டிற்கு வழிநடத்தும் பாடத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றனர்." —**5T 357.**

"கற்பனையான ஒரு பலவீனத்திற்காக, அல்லது முடிந்த அளவு ஒரு நோயைத்தடைசெய்வதற்காக, ஏதாவது ஒரு சாக்காக மதுவை அருந்தும்போது, அது பலமுள்ள ஊக்குவிகளின்மீதுள்ள வாஞ்சைக்கு நடத்துவதுபோல, வெறுப்பூட்டும் அசுத்தமான புகையிலைக்காக உண்டுபண்ணப்பட்ட சுவையும் இருக்கிறது. அவர்களுடைய நுண்ணறிவு பலவீனமடைகிறது; அவர்களுடைய சன்மார்க்க வல்லமைகள் பலவீனமடைகின்றன; அவர்களுடைய உணர்வுகள் மறத்துவிடுகின்றன; அப்பொழுது தேவன் பாராட்டும் உரிமைகளும் பரலோகமும் உணரப்படாமலாகிவிடுகின்றது. நித்திய காரியங்கள் வரவேற்கப்படுவதில்லை. குடிகாரன் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்கமாட்டான் என்று வேதாகமம் கூறுகிறது.

"மதுவும் புகையிலையும் அவைகளைப் பயன்படுத்துபவர்களின் செயல்திறனை மழுங்கச்செய்து, கெடுக்கின்றன. ஆனால் அத்தீமை இத்துடன் நின்றுவிடுவதில்லை. எரிச்சலூட்டும் சுபாவம், மாசுபட்ட இரத்தம்,

பலவீனமாக்கப்பட்ட நுண்ணறிவு, பலவீனமான சன்மார்க்க நெறி ஆகியவை களை அவனுடைய பிள்ளைகளுக்கும் பரப்புகின்றான்.”—**4 T 30,31.**

“பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயிருக்கிற தென்று யாக்கோபு கூறுகிறான். அவனுடைய சகோதரர்கள் புகையிலை உபயோகிப்பதை அவன் கண்டிருந்தால், அந்தப் பழக்கம் பூமிக்குரியது, சிற்றின்பமானது, பேய்த்தனமானது என்று அந்த நடத்தையை வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருந்திருக்கமாட்டானா? கிறிஸ்தவ ஒளியை உடைய இந்தக் காலத்தில், கிறிஸ்துவின் விலைமதிப்புமிக்க நாமத்தை உச்சரிக்கின்ற உதடுகள், அடிக்கடி எவ்விதமாகப் புகையிலை எச்சியினால் கெடுக்கப்பட்டும், அந்த நாற்றத்தினால் சுவாசம் மாசுபடுத்தப்பட்டும் இருக்கிறது. அவ்விதமான அசுத்தத்தை அனுபவிக்கும் ஆத்துமாவும் நிச்சயமாகவே, தீட்டுள்ளதாயிருக்கும்.”

“புகையிலைக்கு அடிமைகளாக இருந்துகொண்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கும் எல்லாவற்றையும் கெடுத்துக்கொண்டிருந்து, முழுமையான பரிசுத்தமாக்கப்படுதலின் ஆசீர்வாதத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டிருப்பவர்களை—புகையிலையை உபயோகிப்பவர்களை தன்னுள் உடையதாக பரலோகம் எவ்விதமாக காணப்படும்? என்று நான் சிந்தித்திருக்கிறேன். தீட்டுள்ளதை நடப்பிக்கிற ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை என்று தேவனுடைய வார்த்தை வெளிப்படையாக அறிவித்திருக்கும்போது, இந்த அசுத்தமான பழக்கத்தை நடப்பிப்பவர்களால் அதற்குள் செல்வதற்கு அனுமதியைப் பெறமுடியும் என்று எப்படி நம்பமுடியும்?”

“தெய்வபக்தி உள்ளவர்களாக தங்களைப்பற்றிக் கூறிக்கொள்ளும் மனிதர்கள், சாத்தானின் பலிபீடத்தின்மீது அவர்களுடைய சரீரத்தைக் காணிக்கையாகச் செலுத்தி, சாத்தானின் மகத்துவத்திற்குப் புகை யிலையைச் சுகந்த வாசனையாக எரிக்கின்றனர். இந்த அறிக்கை கடுமையானதாகக் காணப்படுகிறதா? நிச்சயமாகவே இந்தக் காணிக்கை ஏதோ ஒரு தெய்வத்திற்குச் செலுத்தப்படுகிறது. தேவன் தூய்மையும் பரிசுத்தமானவராகவும் இருப்பதினால், தீட்டுப்படுத்துகின்ற தன்மையை உடைய எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதினால், இந்தச் செலவுமிக்க அசுத்தமும் பரிசுத்தமில்லாததுமான பலியை மறுப்பார்; ஆகையால், அந்தக் கனத்தின்மீது உரிமைபாராட்டும் ஒருவனாகச் சாத்தான்மட்டுமே இருக்கிறான் என்று நாம் முடிவுசெய்கிறோம்.”

“சாத்தானின் பிடியிலிருந்து மனிதனை விடுவிப்பதற்காக இயேசு மரித்தார். அவரது பாவ நிவாரண பலியின் இரத்தத்தினால் நமக்கு

விடுதலை வழங்க அவர் வந்தார். இயேசு கிறிஸ்துவின் சொத்தாக எந்த மனிதன் ஆகியிருக்கிறானோ, எவனுடைய சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாகியிருக்கிறதோ, அவன் நாசத்தை உண்டுபண்ணும் புகையிலையை உபயோகிக்கும் பழக்கத்திற்குத் தன்னை அடிமையாக்கமாட்டான். கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்டிருக்கும் அவன் கிறிஸ்துவினுடையவனாக இருக்கிறான். அவனுடைய ஆஸ்தி கர்த்தருடையதாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது, கர்த்தரால் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அவருடைய மூலதனத்தை, இயற்கையான அஸ்திபாரம் எதுவும் இல்லாத ஒரு பசியைத் திருப்திப்படுத்துவதற்காக, நாள்தோறும் செலவுசெய்வதில் அவனால் எவ்விதமாகக் குற்றமில்லாதவனாக இருக்கமுடியும்?"

"தேவனுடைய வார்த்தை கிடைக்காததினால் ஆத்துமாக்கள் அழிந்துகொண்டிருக்கும்போது, இந்தப் பழக்கத்திற்காக வருடந்தோறும் பெருந்தொகை வீணாக்கப்படுகிறது. புகையிலையை உபயோகிப்பதில், ஏழைகளுக்கு நிவாரணம் அளிப்பதைவிடவும் கர்த்தரின் காரியத்திற்காகச் செலவிடுவதைவிட அதிகமாகச் செலவுசெய்து, அழிக்கும் இச்சை என்னும் பலிபீடத்தின்மீது அவர்கள் காணிக்கை செலுத்தும்போது, பெயர்க் கிறிஸ்தவர்கள் தசமபாகங்களிலும், காணிக்கைகளிலும் தேவனைக் கொள்ளையிடுகின்றனர். உண்மையாகவே பரிசுத்தமடைந்தவர்கள் தீமையான இச்சைகள் ஒவ்வொன்றையும் மேற்கொள்ளுவார்கள். அப்பொழுது தேவையற்ற செலவுகள் என்னப்படும் இந்த வாய்க்கால்கள் அனைத்தும் தேவனுடைய கருவூலத்திற்குத் திருப்பிவிடப்பட்டு, சுயத்தை மறுத்தல், சுயத்தைத் தியாகம்செய்தல், இச்சையடக்கம் ஆகிய காரியங்களில் கிறிஸ்தவர்கள் தலைமை தாங்குவார்கள்; அப்பொழுது அவர்கள் உலகத்திற்கு ஒளியாயிருப்பார்கள்."

"தேயிலை, காபி, புகையிலை, அபின் அல்லது சாராயம் ஆகியவைகளை உபயோகப்படுத்தும் பழக்கமுள்ளவர்கள், பழக்கப்பட்ட அந்த வழக்கத்தை இழக்கும்போது (விட்டுவிடும்போது), தேவனை ஆராதிக்கின்ற காரியத்தில் ஆர்வத்துடனும், பேரார்வத்துடனும் தங்களை ஈடுபடுத்துவது முடியாததாக இருப்பதைக் காணுகின்றனர். அவர்களுடைய ஜெபங்களையோ அவர்களது சாட்சிகளையோ உயிரோட்டமுடையதாக ஆவிக்குரிய தன்மையுடையதாகச் செய்வதற்குத் தெய்வீகக் கிருபை வல்லமையற்றதாக இருப்பதுபோல காணப்படுகிறது. இந்தப் பெயர்க் கிறிஸ்தவர்கள், அவர்களுடைய இன்பம் அனுபவித்தலின் ஆதாரத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டும். அது மேலேயிருந்துள்ளதா?— கீழேயிருந்துள்ளதா?"

"உற்சாகமூட்டுபவைகளை உபயோகிப்பவர்களுக்கு அவர்கள் நேசிக்கும் பொருள் இல்லாதபோது, மற்றனைத்தும் சுவையும், மணமும் இல்லாததாகக் காணப்படுகிறது. இது சரீரம், மனம் இரண்டிலுமுள்ள இயற்கையான உணரும் தன்மைகளைச் சாகடித்து, பரிசுத்த ஆவியின் செல்வாக்கைப் பெற்றுக்கொள்வதற்கு, தகுதியில்லாதவனாக்கிவிடுகிறது. வழக்கமான உற்சாகமூட்டும் பொருள் இல்லாதபோது, நீதியின்மேலோ பரிசுத்தத்தின்மேலோ தேவ பிரசன்னத்தின்மேலோ அவன் பசிதாகமுள்ளவனாக இல்லாமல், அவன் பேணுகின்ற விக்கிரகத்தின்மேல், சரீரப்பிரகாரமாகவும் ஆவியின் பிரகாரமாகவும் பசியுள்ளவனாயிருக்கிறான். தீமையான இச்சைகளின்படி நடப்பதனால், பெயர்க் கிறிஸ்தவர்கள் நாள்தோறும் அவர்களுடைய வல்லமைகளைப் பலவீனமடையச்செய்து, அதினால் தேவனை மகிமைப்படுத்துவதை முடியாததாக்குகின்றனர்."—**SC 24,25.** ★

# 20

உடல்நலத்திற்குக் கேடு உண்டுபண்ணக்கூடியவைகளைப் புசிக்கவும் குடிக்கவும் செய்கின்ற மக்கள் சில சமயங்களில், அந்த உணவுகள் எவ்வளவுதான் அசுத்தமுள்ளவைகளாகவும் உடல் நலத்திற்குக் கேடுசெய்பவைகளாவுங்கூட இருந்தபோதிலும், அவர்கள் விரும்புபவைகளைப் புசிப்பது சரியானதுதான் என்பதை மெய்ப்பிக்க, வேதாகமத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளைப் பயன்படுத்துகின்றனர். வேதாகமத்தைச் சரியானவிதத்தில் பயன்படுத்துவது இதில் இல்லை. நமக்குக் கெட்டவைகள் என்று நாம் நன்றாக அறிந்திருக்கின்ற காரியங்களைச் செய்வதற்குச் சாக்குப்போக்காக வேதவாக்கியங்களைப் பயன்படுத்துவதற்கு நாம் முயற்சிசெய்யக்கூடாது. வஞ்சகமான விதத்தில் தேவனுடைய வார்த்தைகளை கையாளுவதற்கெதிராக வேதாகமம் எச்சரிக்கின்றது—(2 கொரி. 4:2). வேதவாக்கியங்களைப் புரட்டக்கூடாது என்று பேதுரு நமக்குக் கூறுகிறார்; அல்லது தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக அதன் சரியான அர்த்தத்திலிருந்து அதைப் புரட்டக்கூடாது (2 பேதுரு 3:16).

சில ஜனங்கள் பயன்படுத்தும் (கீழ்க்காணும்) வசனங்களின் உண்மையான அர்த்தம் தெளிவாகவும் எளிதாகவும் காணப்படமுடியும்:

1. **மத். 15:11,17,18** நாம் எதைப் புசித்தாலும் அது நம்மைத் தீட்டுப்படுத்தாது என்று இந்த வசனங்கள் கூறுகின்றன; ஆனாலும், இவை தேவனுடைய பிரமாணங்களைப்பற்றிப் பேசாமல், மனிதனுடைய பிரமாணங்களைப்பற்றியே பேசுகின்றன. வேறுவிதமாகக் கூறுவதானால், மனிதர்களின் பாரம் பரியங்களைப்பற்றிக் கூறுகின்றன (வச. 2). இங்கு பேசப்படும் முக்கியமான காரியம் சடங்காச்சாரமான கைகளைக் கழுவுதலாகும். (வச. 2), இதன் முடிவைப் பற்றி மறுபடியும் (வச. 20) கவனியுங்கள். கை கழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, இந்த வசனங்களனைத்தும் பேசுவது இதைப்பற்றித்தான்.

பரிசேயர்கள் புசிப்பதைப்பற்றிமட்டுமல்லாது, எவ்விதமாகப் புசிக்கிறார்கள் என்பதைப்பற்றியும் குறிப்பானவர்களாக இருந்தார்கள்

என்பது நினைக்கப்படவேண்டும். சடங்காச்சாரப்படியான அல்லது சமயச் சடங்கின்படியான தீட்டிலிருந்து ஒருவன் தன்னைச் சுத்திகரிக்க, முழங் கையைக் கீழ்நோக்கி வைத்து, கைவிரல்களை உயர்த்தி வைத்து, கைவிரல்களிலிருந்து முழங்கைவரைக் கழுவவேண்டும் என்ற ஒரு தனிப்பட்ட, கை கழுவும்விதத்தை அவர்கள் கண்டுபிடித்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| **2.** | **மாற்கு 7:14–23** | இது மத். 15:11,17,18–ல் உள்ள அதே காரியத்தைப்பற்றி பேசுகிறது. இந்த வசனங்கள் தேவனுடைய உடல் நலப் பிரமாணங்களுடன் இடைப்படாமல், பரிசேயர்களின் மனிதப் பாரம்பரியங்களைப் பற்றிய காரியத்தைப்பற்றி குறிப்பாகச் சடங்காச்சாரமான கை கழுவுதலுடன் இடைப்படுகிறது—மாற்கு 7:2–5. உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி, ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள்? ஆகவே, இது தேவனுடைய ஆரோக்கியப் பிரமாணத்தைப்பற்றிப் பேசவில்லை என்பதும், பரிசேயர்களின் மனிதச் சட்டங்களையும் பாரம்பரியங்களையும்பற்றிப் பேசுகிறது என்பதும் தெளிவாகிறது. |
| **3.** | **அப். 10:11–16** | இந்தத் தரிசனத்தில் தேவன் அசுத்தமான மிருகங்க ளைப் பேதுருவுக்குக்காட்டி, அடித்துப்புசி (வச.13) தேவன் சுத்தமாக்கின வைகளை நீ தீட்டாக எண்ணாதே (வச.15) என்று அவனிடம் கூறினார். நாம் இந்த அதிகாரத்தையும் அதைப்போலவே (அடுத்த 11–ம் அதிகாரத்தையும்) வாசிக்கும்போது, பேதுரு எதை விரும்பினாலும் அதைப் புசிக்கலாம் என்று இந்தத் தரிசனம் அவனுக்குப் போதிக்காமல், புறஜாதியார்களை அசுத்தமானவர்கள் என்று நினைக்கவோ—பேசவோ வேண்டியதில்லை என்றும், சுவிசேஷம் யூதர்களைப்போலவே, புறஜாதியினருக்கும் உள்ளது என்றும் போதித்தது என்பதை காண்கிறோம். இந்தத் தரிசனம் கொடுக்கப்படுவதற்குமுன், யூதக் கிறிஸ்தவர்கள், மற்ற யூதர்களுக்குமட்டுமே பிரசங்கம் செய்யவேண்டும் என்று எண்ணியிருந்தனர். எந்த மனுஷ னையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். (அப்.10:28) என்னும் திறவுகோலான சிந்தனையைக் கவனி யுங்கள். பேதுரு மற்ற யூத விசுவாசிகளுக்கு இந்தத் தரிசனத் தைப்பற்றிக் கூறினபோது, அவர்கள்: "அப்படியானால், |

ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதி யாருக்கும் அருளிச்செய்தார்" (அப். 11:18) என்று கூறுவதைக் கவனியுங்கள். இந்தத் தரிசனத்தின் பொருள்: சுவிசேஷம் ஒவ்வொரு மனிதனுக்கும் செல்லவேண்டும். நாம் எந்த ஒரு மனிதனையும் அசுத்தனென்றும் தீட்டுள்ளவனென்றும் கூறக்கூடாது என்பதுதான். இந்தத் தரிசனத்தில் தேவன், இன வேற்றுமைகளைக் கடிந்துகொள்ளுகிறார்.

4. **ரோமர் 14:1–3** எதைப் புசிக்கலாம் என்பதைப்பற்றி நாம் ஒருவரை ஒருவர் நியாயந்தீர்க்கக்கூடாது என்று இந்த வசனங்கள் கூறுகின்றன. அது தனிப்பட்டவர்களின் மனச்சாட்சிக்கு விட்டுவிடப்படவேண்டும். இப்பொழுது இங்கு பவுல் பேசிக் கொண்டிருக்கும் காரியம், விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்ட உணவைப்பற்றி உள்ளது. இந்த உணவை வாங்கவோ புசிக்கவோகூடாது என்று சில கிறிஸ்தவர்கள் எண்ணி யிருந்தனர். அப்படியிருந்தபோதிலும், மற்ற கிறிஸ்தவர்கள், விக்கிரகங்கள் என்பவைகள் ஒன்றுமில்லை என்றும், குறிப்பாகக் கடைகளிலிருந்து வாங்கப்படுபவைகள் ஒன்று மில்லை என்றும், ஒருவரும் அவர்கள் விக்கிரகங்களைக் கனப்படுத்துவதாக நினைத்துக்கொள்ளக்கூடாது என்றும் நினைத்தனர். 1 கொரி. 8:1–13–ம், 1 கொரி. 10:25–29–ம் கருத் துடன் கவனியுங்கள்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைப்பற்றிய கேள்வி, உண்மையில் யூத சபையில் இருந்த பழைய சடங்காச்சாரமான, மத சம்மந்தமான நாட்களை கைக்கொள்ளுவதைப்போன்ற மிக அற்பமான காரியம் என்று இங்கு பவுல் கூறுகிறான் (வச. 5,6 காண்க). அப்படிப்பட்ட உணவை வாங்கக் கிறிஸ்தவர்கள் விரும்பினால், நல்லது அவர்கள் வாங்கிக்கொள்ளட்டும். அதை வாங்கக்கூடாது என்று அவர்கள் உணர்ந்தால், நல்லது, இந்தக் காரியத்தில் அவர்கள் தங்களுடைய சொந்த மனச்சாட்சியைப் பின்பற்றட்டும். ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று முடிவெடுக்க அனுமதிக்கப்படவேண்டும்.

வேதாகமம் தெளிவாகக் குறிப்பிடாத சிறிய விஷயங்களைப்பற்றி, ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கென்று செயல்பட, சபை அதனை விட்டுவிட வேண்டும். இந்தக் காரியங்களில் நாம் ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கக்கூடாது.

ரோமர் 14:1–3–ல் உள்ள வசனங்கள் இவ்வாறாக, லேவி. 11–ம் அதிகாரத்திலும், உபா. 14–ம் அதிகாரத்திலுமுள்ள தேவனுடைய ஆரோக்கியப் பிரமாணத்தைப் பேசாமலிருக்கின்றன. இந்தப் பிரமாணங்களைக் கொடுத்தவராகத் தேவன் இருக்கிறார். இவைகள் காரியமல்ல என்று அவர் ஒருபோதும் கூறியதில்லை. நோய்கள் உள்ள இந்தக் காலத்தில் இதற்குமுன் ஒருபோதும் இருந்திராததைவிட இவை முக்கியமானவைகளாக அல்லது அதிக முக்கியமானவைகளாக உள்ளன. மறுபடியும் கருத்துடன் கவனியுங்கள்: ஏசாயா 66:15–17; மாற்கு 5:13; 1 கொரி. 10:31; 3:16,17; 3 யோவான் 2**.**

**5. 1 தீமோ. 4:1–5** கடைசி நாட்களில் சிலர் பிசாசுகளின் உபதேசங்களைப் பின்பற்றுவார்கள் மேலும்:

**1**. விவாகத்தைத் தடைசெய்வார்கள்.

**2**. தேவன் படைத்த போஜனப் பதார்த்தங்களை விலக்கச் சொல்லுவார்கள்.

(வச. 3) இது செவன்த் – டே அட்வென்டிஸ்ட் சபையைக் குறிக்கிறதென்று சில மக்கள் கூறுகின்றனர்; அது அப்படியில்லை; ஏனெனில்:

1. நாம் விவாகத்தைத் தடைசெய்யவில்லை.

**2**. பெற்றுக்கொள்ளுவதற்கென்று தேவன் படைத்த எந்த உணவையும் விட்டு விலகியிருக்கவேண்டும் என்று நாம் கட்டளையிடுவதில்லை. தேவன் தடைசெய்திருக்கும் உணவிலிருந்துமட்டுமே நாம் விலகியிருக்க வேண்டும். (லேவி. 11; உபா. 4; ஏசாயா 66:15–17).

பவுலின் காலத்தில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டிருந்த சிலர், தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்திருந்ததுமட்டுமின்றி, அதைப் போலவே தங்களுடைய சொந்தமான, அதிகப்படியான பிரமாணத்தையும் உண்டுபண்ணப் புறப்பட்டார்கள். விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது (எபி. 13:4) என்று தேவன் கூறியிருந்தபோதிலும், திருமணம் செய்து கொள்ளாமலிருப்பதே நல்லது என்று அவர்கள் கூறினார்கள். இந்த ஜனங்கள் நாஸ்திகர்கள் என்று அழைக்கப்பட்டிருந்தனர். தேவன் நல்லது என்று கூறியிருந்த குறிப்பிட்ட உணவுகளைத் தடைசெய்யவும் அவர்கள் முயன்றிருந்தனர். இப்படிப்பட்ட உபதேசங்களைத்தான் இந்த வசனங்களில் பவுல் குறிப்பிடுகிறான். ரோமன் கத்தோலிக்க சபை, அவர்களுடைய குருமார்களும் கன்னியாஸ்திரீகளும், மத சம்மந்தமான சகோதரர்களும் திருமணம் செய்வதைத் தடைசெய்திருப்பதுடன், வேதாகமத்தில் இல்லாத குறிப்பான சில உபவாச நாட்களையும் கட்டளையிட்டிருப்பதினால், இந்த வசனங்கள்

ரோமன் கத்தோலிக்கச் சபைக்குப் பொருந்தும் என்று சிலர் நம்புகின்றனர்.

**வச. 4:** தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது, ஒன்றுமே தள்ளப்படத்தக்கதல்ல; அதாவது, தேவன் படைத்த எல்லாப் பிராணிகளும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் (வச. 3). (தேவன் நமக்காக உண்டுபண்ணியிருப்பவைகளைத் தடைசெய்யும் அதிகாரம் எந்தச் சபைக்கும் இல்லை).

**வச. 5** தேவ வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படும், பன்றிகள், திருக்கைகள், பாம்புகள் போன்றவைகள் தேவ வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படவில்லை. தேவன் அவருடைய வசனத்தினால், பரிசுத்தமாக்கியிருப்பவைகளை நாம் புசிக்கலாம்.

இந்த வசனங்கள் மனிதனால் உண்டுபண்ணப்பட்ட மதச் சம்பந்தமான பிரமாணங்களுக்கு எதிரான எச்சரிக்கையாயிருக்கின்றன; இவைகளுக்கு நாம் எப்பொழுதும் கீழ்ப்படியவேண்டும்.

## திராட்சரசம் பற்றிய முக்கியமான குறிப்புகள்

**யோவான் 2:1–11; 1 தீமோ. 5:23.** கானா ஊரில் இயேசு தண்ணீரைத் திராட்சரசமாக்கவில்லையா? என்று சில ஜனங்கள் கேட்கின்றனர். உன் வயிற்றிற்காகவும்,... கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள் என்று பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகிறான்—1 தீமோ. 5:23 .

இது உண்மைதான். அப்படியிருந்தபோதிலும், வேதாகமத்தில் திராட்சரசம் என்னும் சொல், புளித்த திராட்சரசத்தையும் குறிப்பதில்லை, புளிக்காத திராட்சரசத்தையும் குறிப்பதில்லை என்பது நினைவில் வைத்துக்கொள்ளப்படவேண்டும். (புளித்தது என்றால் சாராயத்தை உண்டுபண்ணக்கூடிய விதமாக, கெட்டுப்போன திராட்சரசம் என்று பொருள்படும்; புளிக்காதது என்றால், இன்னும் நல்லதாக இருக்கும்– சுவையுள்ள – இனிப்பான திராட்சரசம் என்று பொருள்படும். புளிக்காத இந்தத் திராட்சரசம், திராட்சைப் பழத்தின் தூய்மையான இரத்தமாக (சாறாக) இருந்தது. (உபா. 32:14).

புளித்த மாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும் (யாத். 12:15) என்ற கட்டளை காரணமாகப் பஸ்காப் பண்டிகையின் நேரத்தில், யூதர்கள் அவர்களுடைய வீடுகளில் புளித்த திராட்சரசத்தை வைத்திருக்கமாட்டார்கள். இது மிகவும் கண்டிப்புடன் கீழ்ப்படியப்பட்டு, இன்றுங்கூட கவனமிக்க யூதர்களால் பின்பற்றப்படுகிறது. இவ்வாறாக, கர்த்தருடைய முதலாவது திருவிருந்தின்போது, இயேசு பானம்செய்திருந்த திராட்சரசமானது யூதச் சட்டத்தின்படியும், வேதாகமக் கட்டளையின்படியும் புளிப்பில்லாததாக இருந்தது; ஏனெனில், அது பஸ்காப் பண்டிகையின் நேரமாக இருந்தது— (மத். 26:17).

கானா ஊரில் இயேசு உண்டுபண்ணினது இப்படிப்பட்ட புளிப்பில்லாத திராட்சரசமாக இருந்தது; ஏனெனில், நாம் வேதாகமத்தில் பார்த்திருப்பதைப் போன்று அது ஆக்கினைக்குட்படுத்தப்பட்டிருந்தது. ( உபா. 29:18–21; நீதி. 31:4,5; 20:21; 23:29–32; ஆபகூக் 2:15; 1 கொரி. 6:10). பரிசுத்தமுள்ளவராக இருக்கும் இயேசு, மக்களின் தெளிவான சிந்தனைக்கு இடையூறுசெய்கின்ற, விஷமுள்ள எதையும் உண்டுபண்ணமாட்டார்; ஆகையால், முதலில் நசுக்கப்படும்போது திராட்சைப் பழத்திலிருந்து வெளியேறும் சாறு, அது புளிப்படையும் நேரம் வருவதற்குமுன், திராட்சரசம் என்ற மிகத் தெளிவாக வேதவாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நீதி.3:10). இதைப் பருகிடத்தான் (1 தீமோ. 5:23)–ல் பவுல் தீமோத்தேயுவிடம் கூறியிருந்தான். இப்படிப்பட்ட திராட்சரசம் நோயாளிகளுக்கும், பலவீனமான வயிற்றை உடையவர்களுக்கும் மிகவும் மேலானது என்று மருத்துவகள் நமக்குக் கூறுகின்றனர். அப்படியிருந்தாலும், புளித்த திராட்சரசம் ஒரு விஷமாக இருப்பதுடன் வயிற்றுக்கும் மூளைக்கும் கேடு உண்டுபண்ணுவதாகவும் இருக்கிறது. தீமோத்தேயுவைப் பானம்செய்யும்படி பவுல் கூறினது நிச்சயமாக அது அல்ல; (புளித்த திராட்சை ரசமான—சாராயத்தை அல்ல).

மோட்டார் வாகனங்களும், விமானங்களும், சிக்கல்மிக்க இயந்திரங் களும், அதிக வேகமான இயந்திரங்களும் உள்ள இன்று, இதற்குமுன் இருந்ததைவிட இப்போது மதுபானங்களைவிட்டு விலகும்படி கிறிஸ்தவன் உலகத்தை நடத்தவேண்டும். இப்போதிருப்பதைப்போல ஆபத்தானதாக வேதாகம காலத்தில் இல்லாமலிருந்தபோதிலும்கூட, அங்கு நாம் மதுபானம் இரத்த வருணமாயிருந்து பளபளக்கும்போது, நீ அதைப் பாராதே (நீதி. 23:32) என்று வாசிக்கிறோம். வெறியரும் … தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை (1 கொரி. 6:10) என்னும் பயங்கரமான செய்தி நமக்குக் கூறப்பட்டுள்ளது.

வேதாகம காலத்திலிருந்த புளித்த திராட்சரசம், இன்றுள்ள திராட்சை ரசத்தின் அளவிற்கு விஷமுள்ளதாக இருந்திருக்கவில்லை என்பதை அநேக ஜனங்கள் அறியாதவர்களாக உள்ளனர். கிறிஸ்துவுக்குப்பின், ஆயிரத்துநூறு வருடங்கள்வரை சாராயம் (ஆல்கஹால்) பிரிக்கப்படாமலிருந்தது. இது முதலாவதாக அரேபியாவில் செய்யப்பட்டதென்றும், இத்தாலியில் செய்யப் பட்டதென்றும் கூறுகின்றனர். அப்படியே இன்று பருகும் பானங்களைப் பலமுள்ளதாகச் செய்வதற்கு அவைகளுடன் சாராயத்தைச் சேர்த்து, வேதாகமம் கூறும் பொருள்களைவிட அதிகமான விஷமுள்ளதாகச் செய்யமுடியும். இயற்கையாகப் புளிக்கச்செய்யும் பொருளில் காணப்படக்கூடிய ஆல்கஹால் 16% மட்டுமே இருக்கும். அப்படியிருந்தபோதிலும், இப்பொழுதுள்ள ஆவியாக்கி வடிகட்டும் முறையினால் ஆல்கஹாலைச் சேர்க்கமுடியும். சில வகை விஷ்கிகள் 54% ஆல்கஹால் உள்ளதாகவும்,

சில வகை திராட்சரசங்கள் **68%** ஆல்கஹாலை அவைகளில் உள்ளதாகவும் உள்ளன. ஆகவே, இன்று தயாரிக்கப்படுகின்ற விதமான திராட்சரசத்தைப் பானம்செய்வதற்கான சாக்குப்போக்காக வேதாகமத்தை மேற்கோளாகக் காட்டமுடியாது.

**மத். 7:16** அவர்கள் கனிகளினால் அவர்களை அறிவீர்கள் என்று கூறுகிறது. அதிக வெறியுள்ள பானங்களில் உள்ள பயங்கரமான தன்மைகளின் காரணமாக, எந்த ஒரு கிறிஸ்தவனாலும் தனது சகோதரனுக்கு இடறலாக இருக்கக்கூடிய பானத்தைப் பருகவோ, அப்படிப் பருகுவதினால் தனது சகோதரனுக்கு இடறலாகவோ இருக்கலாகாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.( ரோமர் 14:21)

இந்தப் பயங்கரமான சாபத்தைப்பற்றிக் கிறிஸ்தவர்கள் மற்றவர்களை எச்சரித்து, இந்தக் காரியத்தைப்பற்றி வேதாகமம் என்ன கூறுகிறதென்று மற்றவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

“(கானா ஊரின்) விருந்தின்போது, இயேசு ஏற்பாடுசெய்திருந்த திராட்சரசமும், அவருடைய சொந்த இரத்தத்தின் அடையாளமாக அவர் அவருடைய சீஷர்களுக்குக் கொடுத்திருந்ததும், திராட்சைப் பழத்தின் தூய்மையான சாறாக இருந்தது. தீர்க்கதரிசியான ஏசாயா புதிய திராட்சரசத்தைப்பற்றிக் குறிப்பிடும் போது, ஒரு திராட்சைக் குலையில் ரசம் காணப்படும்போது, அதை அழிக்காதே, அதிலே ஆசீர்வாதம் உண்டென்று கூறுகிறான்—ஏசாயா 65:8”—**DA 149.** ★

# 21

# கிறிஸ்தவ இல்லம்

### திருமணம்

**ஆதி. 2:18** “திருமணம் தேவனால் உண்டுபண்ணப்பட்டது.”

**எபி. 13:4** “விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது.”

**1 தீமோ. 3:2** கண்காணியானவர்கள் (தேவனுடைய சபையின் தலைவர்கள்) திருமணம் செய்திருக்கவேண்டும்.

**மத். 8:14** பேதுரு விவாகம்பண்ணியிருந்த ஒரு மனிதனாக இருந்தான் (1 கொரி. 9:5–ம் பார்க்கவும்).

**நீதி. 18:22** “மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்.”

**1 கொரி. 7:3** புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டியதைச் செய்யக்கடவன். மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யவேண்டியதைச் செய்யக்கடவள்.

**1 கொரி. 7:4,5** புருஷனும் மனைவியும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருக்கக்கூடாது.

### விவாகம் நிரந்தரமானதாயிருக்கவேண்டும்

**ஆதி. 2:24** “அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.”

**மத். 19:6** “தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்.”

**1 கொரி. 7:10,11** மனைவியானவள் தன் புருஷனைவிட்டுப் பிரிந்து போகக்கூடாது; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது. கணவனோ மனைவியோ அவிசுவாசியாயிருந்தாலும் பிரிந்துசெல்லக்கூடாது. வச. 12–16, குறிப்பாக 12,13–ம் வசனங்களின் கடைசிப் பகுதியைக் கவனியுங்கள்.

**ரோமர் 7:23** புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் ... நிபந்தனைக்குக் கட்டுப்பட்டிருக்கிறாள். (1 கொரி 7:39–யும் பார்க்கவும்).

**மத். 19:7–9** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதர்களுடைய இருதயக்கடினத்தின் காரணமாக விவாகரத்து அனுமதிக்கப்பட்டிருந்தது; ஆனால் ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை (வச. 8). இங்கு புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இயேசு அவருடைய ஜனங்களைத் தேவனுடைய ஆதியான திட்டத்திற்கும் சரியான தரத்திற்கும் கொண்டுவந்துகொண்டிருக்கிறார். இந்தத் தரத்தை உடைக்கும் எதுவும் விபச்சாரமாக இருக்கும் என்று இயேசு கூறுகிறார். 12–ம் வசனத்தின் கடைசிப் பகுதி (அதாவது திருமணம்செய்துகொள்ளக்கூடிய அனைவரும்) ஏற்றுக்கொள்ளக்கடவன் என்றார். அதாவது, இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுவது என்பது விபச்சாரம் என்னும் காரணத்தைத்தவிர வேறொன்றிற்காகவும் விவாகரத்து செய்யக்கூடாது. **(Living Bible)** என்னுடைய அறிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடிய எவனாவது இருந்தால், எனது அறிவித்தலை ஏற்றுக்கொள்ளக்கடவன். (மத். 5:32 – ம் பார்க்கவும்).

**குறிப்பு:**—திருமணம் என்றால், அது நிரந்தரமானதாக இருக்கவேண்டும் என்று தேவன் அர்த்தம்கொண்டிருந்தார். புதிய ஏற்பாட்டில், இயேசு இந்தச் சட்டத்தை மறுபடியும் அவருடைய அடியார்களுக்கு அதிக வலுவுள்ளதாக்கினார். மத். 5:32; 19:9—லும் கணவனோ மனைவியோ விபச்சாரம் செய்திருந்தால், குற்றமில்லாத கட்சிக்காரன் அல்லது கட்சிக்காரி, (பாவம் செய்யாத ஒருவர்) விவாகரத்துப்பெற்று மறுபடியும் திருமணம் செய்துகொள்ளலாம். விபச்சாரம் திருமணப் பிணைப்பை உடைக்கிறது; ஏனெனில், பாவம் செய்திருக்கும் கணவனோ மனைவியோ தன்னை அடுத்தவனுக்கு அல்லது அடுத்தவளுக்குக் கொடுத்திருக்கின்றனர்; அப்படியிருந்தபோதிலும், இந்த விபச்சாரக் காரியத்திலுங்கூட, எங்கு சாத்தியமாகிறதோ அங்கு நாம் ஒருவரையொருவர் மன்னிக்கமுயன்று, திருமண உறவைக் காப்பாற்ற முயலவேண்டும். அதிகமான வழக்குகளில் இது மேலான மார்க்கமாக இருந்து, இது வேதாகமம் நம்மை என்ன செய்யவேண்டும் என்று கூறுகின்றதோ அதன்படி நடக்கும்படி நம்மிடம் கூறுகிறது. (எபே. 4:31,32; மத். 6:12, 14,15; கொலோ. 3:13; 1 யோவான் 3:18; 4:8,11; 1 பேதுரு 3:8,9). அப்படியிருந்தபோதிலும், குறிப்பான சில காரணங்களினால், திருமண உறவைச் சரிப்படுத்த முடியாமலாகிவிட்டால் (ஒருவேளை குற்றமுள்ள கட்சி விரும்பாமலிருக்கலாம்), அப்பொழுது குற்றமில்லாத கட்சி விடுதலைபெறவும் அவன் அல்லது அவள் மறுபடியும் திருமணம் செய்துகொள்ளவும் விரும்பினால், அவன் சுதந்திரமுள்ளவனாயிருக்கிறான் அல்லது இருக்கிறாள்.

**திருமணம் என்பது ஒரு கணவனுக்கும் ஒரு மனைவிக்கும் இடையில் உள்ளது**

**பழைய ஏற்பாடு:**

| | |
|---|---|
| **ஆதி. 2:18** | ஏற்ற துணை (ஒன்று). |
| **ஆதி. 2:24** | தன் மனைவியோடே இசைந்திருப்பான். (ஒருமை). |

இவ்வாறாக, திருமணம் ஒரு மனிதனுக்கும் ஒரு மனுஷிக்கும் இடையிலானது என்பதும், அவர்கள் உலகத்திலுள்ள மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாக இருந்து, ஒருவர் மற்றவருக்காக வாழவேண்டியவர் களாக இருந்தனர் என்பதும், தேவனுடைய ஆதியான திட்டத்தில் இருந்தது என்பது தெளிவானதாக இருக்கிறது. அவர்கள் ஒருவரை யொருவர் நேசிக்க வேண்டியவர்களாகவும், ஒருவருக்கொருவர் உதவிசெய்ய வேண்டியவர்களாகவும் இருந்தனர்.

**புதிய ஏற்பாடு**

**மத். 19:5** "புருஷனானவன் தன் மனைவியோடே இசைந்திருப்பான் (ஒருமை). அவர்கள் இருவரும் (பன்மை) ஒரே மாம்சமாயிருப்பார்கள்."

**1 கொரி. 7:2** "தன் சொந்த மனைவியையும், (ஒருமை) தன் சொந்த புருஷனையும், … (ஒருமை)."

**எபே. 5:31** "மனுஷன் தன் மனைவியுடன் இசைந்து (ஒருமை) இருவரும் (பன்மை) ஒரே மாம்சமாயிருப்பார்கள்."

**எபே. 5:33** "உங்களிலும் அவனவன் தன் மனைவியிடத்தில் (ஒருமை) அன்புகூறக்கடவன்."

**1 தீமோ. 2:2** "கண்காணியானவன் ஒரே மனைவியை (ஒருமை) உடையவன்."

**1 தீமோ. 3:12** "உதவிக்காரர்கள் ஒரே மனைவியை உடைய (ஒருமை)"

**தீத்து 1:5,6** "மூப்பர்(கள்), ஒரே மனைவியை (ஒருமை) உடைய புருஷர்களும்…"

**கணவன்**

**எபே. 5:23** "புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்." (1 கொரி. 11:3,8,9–ம் பார்க்கவும்). வேதாகமத்தின்படி கணவன் வீட்டின் அதிகாரியாக இருக்கிறான்.

**எபே. 5:28,33** கணவன் மனைவியை நேசிக்கவேண்டும்.(கொலோ.3:19)

**ஆதி. 2:24** ஒரு மனிதன் அவனுடைய பெற்றோரை விட்டுவிலகி, அவனுடைய மனைவிக்குமட்டும் சொந்தமானவனாக இருப்பான். (கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வரும்படி எந்தப் பெற்றோரும் அனுமதிக்கப்படக்கூடாது).

**1 பேதுரு 3:7** உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு ஒரு மனிதன் தன் மனைவியைக் கனப்படுத்தி, தன் மனைவியைக் கவனிக்கவேண்டும்.

**1 தீமோ. 5:8** ஒரு மனிதன் தனது சொந்த மனைவிக்கும் குடும்பத் திற்கும் அவசியமானவைகளை ஏற்பாடுசெய்யவேண்டும்; அப்படியில்லாவிட்டால், அவன் விசுவாசத்தை மறுதலித்த வனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

**மல். 2:14,15** ஒரு மனிதன் அவனுடைய மனைவியினிடத்தில் துரோகமுள்ளவனாக இடைப்படக்கூடாது (விசுவாச மில்லாதவனாக அல்லது வஞ்சகமாக இடைப்படக் கூடாது); அப்படியில்லாவிட்டால், அந்த மனிதனைத் தேவன் நியாயந்தீர்ப்பார். நீதி. 5:15–23–யும் கவனியுங்கள். விசுவாசமில்லாமைக்கான தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி மிக முக்கியமான 22,23 – ம் வசனங்களைக் கவனியுங்கள்.

**சங். 15:1** சரியான ஒரு மனிதனைப்பற்றிய வேதாகமச் சித்திரம்.

## மனைவி

**எபே. 5:22,24** "மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்." கொலோ. 3:18–ம் காணவும்).

**தீத்து 2:4,5** மனைவிகள் தங்கள் கணவர்களிடத்தில் அன்புசெலுத்த வேண்டும். மனைவிமார்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாக (ஞானம், திறமை, கற்பு, தூய்மை உள்ளவர்களாக), வீட்டைக் கவனிப்பவர்களாக, தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களாக, வேத வசனம் தூஷ ிக்கப்படாதபடி நடப்பவர்களாக இருக்கவேண்டும்.

**ஆதி. 2:18** மனைவிகள் தங்கள் கணவர்களுக்கு ஏற்ற துணைவி களாயிருக்கவேண்டும்.

**நீதி. 31:10–31** சிறப்பான ஸ்திரீயைப்பற்றிய ஒரு வேதாகமச் சித்திரம்.

## பிள்ளைகள்

| | |
|---|---|
| **சங். 127:4** | "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்." |
| **யாத். 20:12** | "பிள்ளைகள் தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும்." |
| **நீதி. 13:1** | "ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்." |
| **நீதி. 22:6** | பிள்ளைகள் சரியான பயிற்சிபெறவேண்டும். |
| **நீதி. 19:18** | பிள்ளைகளுக்குச் சில சமயங்களில் தண்டனை அவசியமாயிருக்கிறது — நீதி. 13:24; 29:17–யும் வாசிக்கவும். |
| **எபே. 6:4** | பிதாக்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தக்கூடாது—(கொலோ. 3:21–ம் வாசிக்கவும்). |
| **2 கொரி. 12:14** | பிள்ளைகளுக்குப் பெற்றோர்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டும். |
| **1 தீமோ. 3:4,5,12** | சபையில் உள்ள அதிகாரிகள் தங்களுடைய பிள்ளைகளைச் சரியானவிதத்தில் நடத்தும் திறமை உடையவர்களாக இருக்க வேண்டும். "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (வச. 5). (தீத்து 1:6–ம் வாசிக்கவும்). |
| **ஆதி. 18:19** | ஆபிரகாம் அவனுடைய பிள்ளைகளையும் வீட்டாரையும் நடத்துவதற்கு அறிந்திருந்தபடியால் தேவன் அவனை நம்பினார். |

## குடும்ப நலத்திட்டம்

**எபி. 13:4** "விவாகம் கனமுள்ளதாயிருக்கிறது. விவாக மஞ்சம் அசுசிப்படாததாயும் இருப்பதாக."

இந்த வசனமும் மற்ற வேத வாக்கியங்களும் திருமணத்தில் உள்ள உடலுறவு தேவனால் அருளப்பட்டது; எனவே, அது சாதாரணமானதும், தூய்மையானதுமென்று போதிக்கின்றன. வேதாகமத்தில் இந்த உறவு அடிக்கடி ஒற்றுமை, அன்பு ஆகியவைகளின் அடையாளமாகக் கூறப்பட்டு, ஒருவர்மேலொருவர் கொண்டிருக்கும் சொந்தத்தை வேறொருவரும் உடைக்கக்கூடாது என்றும் கூறுகிறது (நீதி. 5:19,20). இவ்வாறாக, வேதாகமத்தின்படி உடலுறவு பிள்ளைப் பேற்றிற்கானதாகமட்டும் இல்லை. கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் இருக்கும் இந்தத் தனிப்பட்ட முழுமையான அன்பு, ஐக்கியத்தின் அடையாளம்—உடல் நலம்

மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காக உலகத்திற்குள் அதிகமான பிள்ளைகளைக் கொண்டுவருவது ஞானமற்றதாக இருந்தாலும், கிறிஸ்தவத் திருமணத்தின் ஒரு பகுதி. உடல் நலத்தையும் மகிழ்ச்சியையும் பாதுகாப்பதற்காகவும், குடும்பத்திலுள்ள அனைவரின்மீதும் சரியான கவனம் வைப்பதற்காகவும் குடும்பக் கட்டுப்பாடு அறிவின்பால்பட்டதாகவும் அவசியமானதாகவும் இருக்கிறது.

உடல் நலமும் மகிழ்ச்சியும் அனுமதிக்கின்றதற்கும் அதிகமாக ஓர் அன்னை அநேக பிள்ளைகளை பெற்றெடுப்பதை தீர்க்கதரிசன ஆவி எச்சரிக்கிறது. (Adventist Home 162).

### குடும்ப ஆராதனை

**உபா. 6:6,7** பிள்ளைகளுக்குத் தேவனுடைய வார்த்தையைப் போதியுங்கள்.

**உபா. 11:19–21** வீட்டில் தேவனுடைய வார்த்தையைப் போதித்தால், வீடு– பரலோக வாழ்வை பூமியில் கொண்டுவந்ததைப்போல இருக்கும்.

**2 தீமோ. 3:15** தீமோத்தேயுவுக்கு சிறு வயதுமுதல் வேத வாக்கியங்கள் போதிக்கப்பட்டிருந்தன.

**மல்கியா 4:6** தேவனுக்கு ஆராதனை செய்யும்படி தகப்பன்களையும் பிள்ளைகளையும் ஒன்று கூட்டிச்சேர்ப்பதாகக் கடைசி நாட்களில் உள்ள எலியாவின் தூது இருக்கிறது.

### சாராம்சங்கள்
### கிறிஸ்தவ வீடு

“நன்முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு கிறிஸ்தவக் குடும்பம், கிறிஸ்தவ மதத்தின் உண்மைத் தன்மைக்கு அனுகூலமான ஒரு பிரசங்கமாக இருக்கிறது.”—**PP 144.**

“ஒரு கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் மரியாதையையும் பாசத்தையும் தங்களுக்கிடையில் பயிர்செய்து வளர்த்துக்கொள்ளவேண்டும். எதுவும் மற்றவரை எரிச்சலடையச் செய்து, தொந்தரவுசெய்யாதபடி அவர்கள் தங்களுடைய ஆவியையும், வார்த்தைகளையும், செயல்களையும் காவல்செய்யவேண்டும். ஒருவருக்கிடையில் ஒருவருக்குள்ள பாசத்தை பலப்படுத்துவதற்காக, தங்களுடைய வல்லமைக்குள் உள்ள எல்லாவற்றையும் செய்வதற்கு ஒவ்வொருவரும் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். கடினமான வார்த்தைகளினால் ஒருவரை ஒருவர் காயப் படுத்தாதீர்கள். அன்பாகவும் சாதுவாகவும்–பேசுங்கள். இதைவிடச் சிறந்த

போதனையை என்னால் உங்களுக்குக் கொடுக்கமுடியாது."—**AH 345.**

"வெளிக்காட்டுதல்களின்றி அன்பு, அதிகக் காலம் உயிருடன் இருக்காது. (உங்களுடன் சம்பந்தப்பட்டவர்களின் இருதயம் அன்பிற்கும் அனுதாபத்திற்கும் ஏங்கும்படிக்கு அனுமதிக்காதீர்கள்). துன்பங்களும் குழப்பங்களும் அதைரியங்களும் எழலாம்; ஆனாலும், அவர்களுடைய இணைப்பு ஒரு தவறு அல்லது ஏமாற்றம் என்னும் சிந்தையைக் கணவனும் மனைவியும் வைத்துக்கொள்ளாதவர்களாக இருப்பார்களாக. ஆரம்பத்திலேயே கவனம் செலுத்துவதில் தொடருங்கள். வாழ்க்கையின் போராட்டத்தை எதிர்த்துள்ள போரில் ஒருவரையொருவர் எல்லா வழிகளிலும் தைரியப்படுத்துங்கள். ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியை முன்னேறச்செய்வதைப்பற்றி ஆராயுங்கள். ஒருவர்மீது ஒருவருக்கு அன்பும் சகிப்புத் தன்மையும் உண்டாகட்டும். அப்பொழுது திருமணம் அன்பின் முடிவாக இருப்பதற்குப்பதிலாக, அன்பின் ஆரம்பமாக இருக்கும். ஒவ்வொரு குடும்பத்தைச் சுற்றிலும் முறிக்கப்படாமல் பாதுகாப்பாக வைக்கப்படவேண்டிய ஒரு பரிசுத்தமான வட்டம் இருக்கிறது. இந்த வட்டத்திற்குள் வரும் உரிமை வேறு ஒருவருக்கும் இல்லை. கணவனுக்கும் மனைவிக்கும்மட்டுமே முற்றிலுமாக—சொந்தமாக உள்ள நம்பிக்கைகளில்—இரகசியங்களில்—பிறர் பங்குபெற, கணவனோ மனைவியோ அனுமதிக்காமல் இருப்பார்களாக."—**MH 360, 361.**

"விருப்பத்தை உண்டுபண்ணக்கூடியதும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதுமான வேதவாக்கியங்களின் ஒரு பகுதியைத் தெரிந்துகொள்ளும் காலை—மாலை ஆராதனைக்கான ஒரு குறிப்பிட்ட நேரம், ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டும்."—**7T 43,44.**

### பிள்ளைகளின்பாலுள்ள பெற்றோரின் மனோபாவம்

"தகப்பன்மார்களே! தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளிடத்தில் அன்பாகப் பேசுங்கள்."—**1T 401.**

"உற்சாகம், உபச்சாரம், அன்பு ஆகியவைகள்மிக்க ஒரு சூழல் எல்லாவற்றிற்கும் மேலாகப் பெற்றோர்கள் பிள்ளைகளைச் சூழச் செய்யவேண்டும். எந்த ஒரு வீட்டில் அன்பு குடிக்கொண்டிருக்கிறதோ, பார்வைகளிலும், செயல்களிலும் அது உணர்த்துதல்களைக் காண்கிறதோ, அது தேவதூதர்கள் வாழ்வதற்கு விரும்பும் ஓர் இடமாக இருக்கிறது. பெற்றோர்களே! அன்பு, உற்சாகம், மகிழ்ச்சிமிக்க திருப்தி ஆகிய சூரிய ஒளி உங்கள் இருதயங்களில் பிரவேசித்து, அதின் இனிமையான நறுமணம் உங்கள் வீட்டை நிரப்பட்டும். அன்புள்ள, சகிப்புத் தன்மையுள்ள ஒரு ஆவியை வெளிக்காட்டி, வீட்டுவாழ்க்கையைப் பிரகாசிக்க செய்யும்

கிருபைகள் அனைத்தையும் வளரச்செய்து, உங்கள் பிள்ளைகளிலும் அவை உண்டாக அவர்களை தைரியப்படுத்துங்கள்; இவ்வாறாக, உண்டு பண்ணப்படும் சுற்றுப்புறம், தாவர உலகத்திற்குக் காற்றும், சூரிய ஒளியும் எப்படிப்பட்டவைகளாக இருக்கின்றனவோ அதேவிதமாகப் பிள்ளைகளுக்கு உடல் நலத்தையும் மன வலிமையையும் முன்னேற்றமடையச்செய்யும்." —**CPTS 115.**

"கிறிஸ்துவில்மட்டுமே ஒரு திருமண உறவு பாதுகாப்பானதாக அமைக்கப்படமுடியும். தெய்வீக அன்பிலிருந்து மனித அன்பு அதின் நெருக்கமான பிணைப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்து எங்கு ஆளுகைசெய்கின்றாரோ அங்கு மட்டுமே ஆழமான, உண்மையான, சுயநலமற்ற பாசம் இருக்கமுடியும்."— **MH 358.**

"திருமணம் செய்யவிருப்பவர், தனது வாழ்க்கையை எவருடன் பிணைக்க நினைக்கின்றாரோ, அவருடைய ஒவ்வொரு நுண்ணறிவைப்பற்றியும் சுபாவ முன்னேற்றத்தையும் நிறுத்துப்பார்ப்பாராக–சீர்தூக்கிப்பார்ப்பாராக. திருமண உறவில் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும், அடக்கம், எளிமை, உண்மைத் தன்மை ஆகியவற்றினால் அடையாளப்படுத்தப்படுவதாக. இந்த உலகத்திலும் வரவிருக்கும் உலகத்திலும் உள்ள வாழ்க்கையைத் திருமணம் பாதிக்கிறது. தேவனால் அங்கீகரிக்கமுடியாத திட்டத்தை ஓர் உண்மையான ஒரு கிறிஸ்தவன் செய்யமாட்டான்."—**MH 359.**

"ஒவ்வொரு திருமணமும் மிகவும் ஜாக்கிரதையுடன் ஆலோசிக்கப் படவேண்டும்; ஏனெனில், திருமணம் என்பது வாழ்க்கைக்காக எடுத்துவைக்கும் ஓர் அடியாக இருக்கிறது. அந்தப் புருஷனும் ஸ்திரீயுமாகிய இருவரும் அவர்கள் வாழுகின்ற காலம்வரை, வாழ்க்கையில் உண்டாகும் மாறுதல்களுக்கூடாக தங்களால் இணைந்து வாழமுடியுமா என்பதைப்பற்றிக் கவனமாக ஆலோசனை செய்யவேண்டும்."—**AH 340.**

"மிகவும் கவனமாக ஆலோசிக்கப்படவேண்டியதும், வயதானவர்கள் அனுபவமிக்கவர்களின் ஆலோசனையைத் தேடவேண்டியதுமான ஏதாவது ஒரு விஷயம் இருந்தால், அது திருமணம் என்னும் விஷயமே. வேதாகமம் நமக்கு ஆலோசகராக இருக்கவேண்டிய நேரம் எப்போதாவது இருந்தால், ஜெபத்துடன்கூடிய தெய்வீக வழிக்காட்டுதல் எப்போதாவது தேவையாக இருந்திருந்தால், அது அந்த நபர்கள் வாழ்க்கைக்கென்று ஒன்றாக இணைக்கின்ற நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னதாக உள்ள (திருமண) விஷயமே."—**PP 175.** ★

# 22

# திருமண பிரச்சனைகள்!

## கலப்புத் திருமணங்கள்

**2 கொரி. 6:14** “அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக.”

**உபா. 7:3** அவிசுவாசிகளுடனுள்ள தங்களுடைய பிள்ளைகளின் திருமண ஏற்பாட்டிலிருந்து பெற்றோர்கள் தடைசெய்யப்பட்டிருக்கின்றனர். “(உன் குமராத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக).”

**யோசுவா 23:11–13** சபைக்கு வெளியில் திருமணம் செய்பவர்களுடன் தேவனுடைய ஆசீர்வாதமும் பாதுகாப்பும் இருக்கமுடியாது.

குறிப்பு:– சிம்சோனின் வீழ்ச்சிக்கு அவனுடைய அஞ்ஞான மனைவி எவ்விதமாகக் காரணமாக இருந்தாள் (நியா. 16:4) என்பதையும், சாலமோனின் அஞ்ஞான மனைவிகள் எவ்விதமாக அவனுடைய இருதயத்தை மெய்த் தேவனிடத்திலிருந்து திருப்பினார்கள் என்பதையும் கவனியுங்கள் (1 இராஜா. 11:4).

ஆதி. 24 தன்னுடைய மகன் ஈசாக்கிற்குத் தேவனை ஆராதிப்பவர்களின் நடுவிலிருந்து, ஒரு நல்ல மனைவியைக் கண்ட ஆபிரகாமின் உதாரணம்… ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்!

## பல தார மணம்

திருமணம் என்பது ஒரு கணவனுக்கும் ஒரு மனைவிக்கும் இடையில் நடைபெறுவது. இது தேவனுடைய திட்டமும், மேலான யோசனையுமாக உள்ளது.

**ஆதி. 2:18** “ஏற்ற துணை.” (ஒருமை).

**ஆதி. 2:24** “மனைவியோடே இசைந்திருப்பான்.” (ஒருமை).

| | |
|---|---|
| **ஆதி. 7:13** | "நோவாவின் மனைவியும் அவன் குமாரர்களின் மூன்று மனைவிகளும் பேழைக்குள் பிரவேசித்தனர்." பன்மையான மனைவிகள் எவரும் பேழைக்குள் பிரவேசிக்கவில்லை. |
| **மத். 5:31** | "தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் (ஒருமை)..." |
| **மத். 19:4–9** | "தன் மனைவியோடே இசைந்திருப்பான் (ஒருமை)இ அவர்கள் இருவரும் (இருவர் மட்டும்) ஒரே மாம்சமாயிருப்பார்கள்." |
| **மாற்கு 10:2–12** | "புருஷனானவன் தன் மனைவியைத் தள்ளிவிடுவது நியாயமா?" (ஒருமை) என்று அவரிடம் கேட்டனர். மனைவியுடன் (ஒருமை) இசைந்திருப்பான் (வசனம் 7இ8). இனி இருவர் அல்ல் ஆனால், ஒரே மாம்சமா யிருப்பார்கள். |
| **லூக்கா 16:18** | "தன் மனைவியைத் தள்ளிவிட்டு (ஒருமை)..." |
| **1 கொரி. 7:2** | "அவனவன் தன் சொந்த மனைவியை உடைய வனாயிருக்கவேண்டும்" (ஒருமை). |
| **எபே. 5:23** | "புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்." (ஒருமை). |
| **எபே. 5:33** | "அவனவன் தன் மனைவியிடத்தில் (ஒருமை) அன்பு கூருவானாக் மனைவியும் (ஒருமை) பயபக்தியாய் இருக்கக்கடவள்" என்னும் ஒருமையைப் பாருங்கள். |
| **1 தீமோ. 3:2,12** | "கண்காணியானவன் ஒரே மனைவியை (ஒருமை) உடையவன். உதவிக்காரர்கள் ஒரே மனைவியை உடைய புருஷனாய் இருக்க வேண்டும்" (ஒருமை). |
| **தீத்து 1:5,6** | "மூப்பர்கள் ஒரே மனைவியை உடைய புருஷனா யிருக்கவேண்டும்." |

**பல தார மணம்பற்றிய முக்கியமான குறிப்பு:**

பாலிகேமி (polygamy) என்னும் சொல், அநேக, பல என்று பொருள்படும் போலஸ் என்ற கிரேக்க வார்த்தையும், விவாகம்செய்வது என்று பொருள்படும் கேமஸ் என்ற கிரேக்க வார்த்தையும் சேர்ந்த ஒரு சொல்.

இந்த வார்த்தை பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியை உடையவனைக் குறிக்கிறது. ஆனால், சில சமயங்களில் இது திபெத்து

நாட்டின் பழக்கத்தைப்போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை உடைய ஒரு மனைவி என்றும் பொருள்படுகிறது. பாவம் உலகத்தில் பிரவேசித்து, தேவனுடைய ஆதியான திருமணத் திட்டத்தைச் சீர்குலைத்தபின், ஜனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை விவாகம்பண்ணத் தொடங்கினார்கள்—(ஆதி. 2:18,24).

காயீனின் பின் சந்ததியானவனும், காயீனைப்போலவே ஒரு கொலைகாரனாகவும் இருந்த லாமேக்கு, இரண்டு மனைவிகளை கொண்டவர்களில் முதலாவதானவன் என்று நாம் வாசிக்கிறோம்—(ஆதி. 4:19,23).

இந்தச் சம்பிரதாயம் அதிகமான துன்பத்தையும், தொல்லையையும் பலனாகக் கொண்டுவந்தது. ஸ்திரீகளை வேலைக்காரர்களைப்போலவும் ஆண்களைவிட அதிகக் கீழானவர்களாகவும் பார்ப்பது ஆரம்பமாயிற்று. இது தேவனின் ஆதித் திட்டமாக இருக்கவில்லை. தேவன் பல தார மணத்தை ஆதரிக்கிறார் என்னும் கருத்தை வேதாகமம் எந்த இடத்திலும் தெரிவிப்பதில்லை. பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தேவனுடைய ஜனங்கள் அவர்களைச் சுற்றிலுமிருந்த அஞ்ஞான மக்களின் சம்பிரதாயங்களால் இன்னும் ஆட்கொள்ளப்பட்டிருந்து, இதுபோன்ற சில காரியங்களில் முழு ஒளியைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமில்லாமல் இருந்ததினால், தேவன் (பல தார மணத்தை) அனுமதித்திருந்தார். அவர்கள் தாங்கிக்கொள்ளத் தகுதியாக இருந்தவிதத்தில் தேவன் அவர்களை மெதுவாக நடத்திக்கொண்டும், அவர்களுக்குப் போதித்துக்கொண்டுமிருந்தார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்த சில பெரிய தெய்வ பக்தியுள்ள மனிதர்களும், தேவனுடைய தீர்க்கதரிசிகளுங்கூட பல தார மணத்தை நடைமுறைப்படுத்தியிருந்தனர். இது தேவன் அவர்களை அன்புடனும், சாதுவான விதத்திலும், பெரும் புரிந்துகொள்ளுதலுடனும், முழுமையான ஒளிக்கு நேராக நடத்தியிருந்ததையும், தேவனுடைய பெரும் சாதுவான தன்மையையும் காட்டுகிறது.

புதிய ஏற்பாட்டிலுங்கூட சபை அதிகாரிகளாக இருப்பவர்களுக்கு எதிராக அல்லாமல் (மற்ற அங்கத்தினர்களுக்கு எதிராக) பல தார மணம் பற்றிய குறிப்பான எந்தச் சட்டமும் கொடுக்கப்படாமலிருக்கிறது (1 தீமோ. 3:2; 3:12; தீத்து 1:5,6). ஆனால், ஏதேன் தோட்டத்தில், ஆதியில் தேவனால் கொடுக்கப்பட்டிருந்த தரத்திற்கு நடத்தக்கூடிய கொள்கைகள் புதிய ஏற்பாட்டுச் சபை அங்கத்தினர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருந்தன.

மத். 5:31,32; 19:4–9; மாற்கு 10:2–12; லூக்கா 16:18–ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளும் 1 கொரி7:2; எபே. 5:23,31,33–ல் உள்ள பவுலின்

எச்சரிப்புக்களுமாகிய அனைத்தும் ஒரு கணவன் ஒரு மனைவி என்னும் இந்தக் கொள்கையைமட்டுமே வலியுறுத்துகின்றன.

முனைவர் ஆதாம் கிளார்க் என்னும் மெதடிஸ்ட் சபை அறிஞர்– கற்றறிந்த மேதை. அவருடைய வேதாகம விளக்க நூலில் 1 கொரி. 7:2 வசனம்பற்றி:

“ஒவ்வொரு மனிதனும் ஒரு ஸ்திரீயை சொந்த மனைவியாகவும், ஒவ்வொரு மனுஷியும் ஒரு மனிதனை சொந்தப் புருஷனாகவும் கொண்டிருப்பார்களாக” என்று விவரிக்கிறார்.

இவ்வாறாக, இன்று கிறிஸ்தவ சபை “மோனோகேமி”–ஒரு மனிதன்– ஒரு மனைவி என்னும் நிலையை ஏற்றுக்கொள்ளுகிறது. (மோனோஸ் என்றால் ஒன்று என்றும், கேமோஸ் என்றால் திருமணம்செய்தல் என்றும் பொருள்களையுடைய கிரேக்க வார்த்தைகளிலிருந்து உண்டாகும்)

ஆகையால், இன்று சபை அங்கத்தினர்கள் இரண்டாவது மனைவியை எடுத்துக்கொள்ளுவார்களானால், அல்லது சபை அங்கத்தினளாக இருக்கும் ஒரு ஸ்திரீ, ஏற்கனவே திருமணமாகியுள்ள ஒரு மனிதனுக்கு இரண்டாவது மனைவியாவதற்கு ஒப்புக்கொண்டால், அப்படிப்பட்டவர்கள் சபைநீக்கம் செய்யப்படவேண்டும். ஏனெனில், ஞானஸ்நானத்தின்போது ஒப்புக்கொண்ட, தாங்கள் அறிந்திருக்கிற சபையின் தரத்தை விட்டு அவர்கள் விலகிச்செல்லுகின்றனர்.

## ஏற்கனவே பல தாரங்களை மணந்தவர்களுக்கு சுவிசேஷம் வரும்போது ஏற்படும் பிரச்சனை

இது ஒரு இடையூறுமிக்க பிரச்சினை. பல தார மணம் நடைமுறையிலுள்ள நாடுகளில் உள்ள கிறிஸ்தவ சபைகள் சந்திக்க வேண்டிய மிகவும் இடையூறான ஒரு பிரச்சனையாக இது இருக்கிறது. பல்வேறுபட்ட சபைகள், இதைக்குறித்த பல்வேறுபட்ட சட்டங்களை கொண்டிருப்பதை நாம் கவனிப்போம்.

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் இதைக்குறித்த குறிப்பான போதனை இல்லாதபோது, பல தாரங்களை மணந்த ஒருவன் கிறிஸ்தவனாகும்போது சபை ஏன் அவனுக்கு எதிராக உறுதியான முடிவை எடுக்கிறது என்பதைப்பற்றி அநேக மக்கள் குழப்பமடைந்திருக்கின்றனர்.

இதைப் புரிந்துகொள்ளுவதற்கு, இந்த மனோபாவம் எழும்புவதற்குக் காரணமான வரலாற்றுப் பின்னணியை நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். யூதர்கள் சுவிசேஷத்தை நிராகரித்தபோது, கிறிஸ்தவ மதம்

பெருமளவிற்கு ஐரோப்பாவில் குடியேறியது. ஐரோப்பாவில் அந்த நேரத்திலிருந்த அஞ்ஞான சம்பிரதாயம் ஒரே மனைவி என்பதே. என்றாலும், அவர்களுடைய விருப்பத்தின்படி அடிக்கடி மனைவியை மாற்ற முடிந்திருந்தது. விவாகரத்து சாதாரணமானதாக இருந்தது. இன்றுங்கூட ஐரோப்பாவிலும், ஐரோப்பா மக்கள் அதிகளவு குடியேறியுள்ள அமெரிக்காவிலும் மற்ற இடங்களிலும் பெருமளவில் இது வழக்கத்திலுள்ளது. ஒரே மனைவி, விவாகரத்து என்பது ஐரோப்பாவின் பழைய வழக்கமாக அஞ்ஞான நாட்களிலுங்கூட இருந்ததினால், விவாகரத்து, மறுமணம் என்பதை ஐரோப்பாவிலிருந்த கிறிஸ்தவ சபைகள் அதிகக் கடுமையானதாகப் பார்க்காமல், பல தார மணத்தை மிகவும் பயங்கரமான பாவமாகப் பார்த்திருந்தன. நாம் வேதாகமத்திற்குத் திரும்பும்போது, கிறிஸ்துவும் பவுலும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும், திருமணம், வேசித்தனம், விபச்சாரம், விவாகரத்து இவைபோன்ற அநேக காரியங்களைப்பற்றிப் பல தடவைகள் பேசியிருந்தாலும் ஒரு மனிதன் கிறிஸ்தவனாவதற்குமுன் அவனுடைய அதிகப்படியான மனைவிகளை விட்டுவிடவேண்டும் என்று எந்த ஒரு சட்டத்தையும் முன்வைத்ததைக் காண்பதில்லை. கிறிஸ்துவின் நாட்களில் யூதர்களுக்கிடையில் பல தார மணம் என்னும் பழக்கம் இருந்திருந்தது என்பதை நாம் உணரும்போது, இது மிகவும் ஆச்சரியமானதாயிருக்கிறது. பவுலும், அவனைச் சுற்றிலுமிருந்த அஞ்ஞான ஆசிய நாடுகளில் இந்த நிலைமையை அடிக்கடி சந்திக்கக்கூடியவனாக இருந்தும், அவனுடைய எழுத்துக்கள் எதிலும், ஒருவன் கிறிஸ்தவனாவதற்குத் தனது அதிகப்படியான மனைவிகளை விவாகரத்து செய்யவேண்டுமென்று ஒருபோதும் போதிக்கவில்லை.

ஆகையால், கிறிஸ்தவ சபை அதன் அங்கத்தினர்களிடம், ஒரே மனைவி என்னும் கொள்கையை கோருவதற்கும், பல தார திருமணத்திற்குள் பிரவேசிப்பவர்களை சபையிலிந்து நீக்குவதற்கும் நல்ல காரணம் இருந்தாலும், அஞ்ஞான மதத்திலிருந்து புதிதாக மதம் மாறியவர்களிடம் அல்லது முந்தைய அறியாமையையும் இருளையும் உடையவர்களிடம், அறியாமையின் காரணமாக அவர்கள் திருமணம் செய்திருக்கும் அதிகப்படியான மனைவிகளை விவாகரத்து செய்யும்படி கோருவதற்கு வேதாகம அடிப்படையிலான உண்மையான காரணம் எதுவும் இல்லை. புருஷர்கள் அவர்களுடைய மனைவிகளை விவாகரத்து செய்கின்ற கோரிக்கை, அதிகமான கொடுமைக்கும், அமைக்கப்பட்டுள்ள குடும்பங்கள் உடைந்து சிதறுவதற்கும், மனைவிகளும் பிள்ளைகளும் அலட்சியப்படுத்தப்படுவதற்கும் நடத்தியிருக்கிறது. சில காரியங்களில் மனைவிகள் வீட்டிலிருந்து துரத்தப்பட்டு, தற்கொலை செய்துமிருக்கின்றனர்.

மற்ற தீமைகளும் விளைந்துள்ளன. விபச்சாரக் காரணம் தவிர, வேறெந்தக் காரணத்திற்காகவும் ஒரு கணவன் தன் மனைவியை விவாகரத்து செய்யக்கூடாது என்று வேதாகமம் உண்மையாகவே போதிக்கிறது.

பழைய ஐரோப்பியக் கலாச்சாரத்திற்கும் வேதாகமத்திற்கும் இடையில் உள்ள இந்த மோதல், பல தார மணப் பழக்கமுள்ள சம்பிரதாயங்களில் இருந்து மதம் மாறினவர்களுக்காக பல்வேறு சட்டங்களை உண்டுபண்ணும்படி பல்வேறு சபைகளையும் நடத்தினது.

இந்தச் சட்டங்களில் சில:—

1. சுவிசேஷம் ஒரு மனிதனை எந்த ஒரு நிலைமையில் காண்கிறதோ அதே நிலையில் அவனும் அவனுடைய மனைவிகளும் சபைக்குள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் அப்படியிருந்தபோதிலும், அப்படிப்பட்ட மனிதன் ஒரு தடவை கிறிஸ்தவனானபின், அவன் தனது மனைவிகளை மேலும் அதிகப்படுத்தக்கூடாது. கிறிஸ்தவ சபையின் குறிக்கோளையும் சிறந்த கொள்கையையும் பல தார மணம் எடுத்துக்காட்டாமல் இருப்பதினால், அப்படிப்பட்ட ஒரு மனிதன் ஒரு கண்காணியாகவோ மூப்பனாகவோ டீக்கனாகவோ சபையின் அதிகாரியான பிரதிநிதியாகவோ இருக்கமுடியாது. இது பவுலினால் விளக்கப்பட்டிருக்கிறது — 1 தீமோ. 2:2; 3:12; தீத்து 1:5,6 காண்க.

இந்தக் காரியம் கடுமையான வேதாகம நோக்குடன் ஆராயந்த பல்வேறு கிறிஸ்தவ மேதைகளாலும் சபைகளாலும் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுவருகிறது.

2. ஒரு மனிதன் சட்டரீதியாக மனைவி என்று கருதப்படும் அவனுடைய முதல் மனைவியைத் தவிர, மற்ற எல்லா மனைவிகளையும் விவாகரத்து செய்யவேண்டும்.

3. ஒரு மனிதன் தனது ஒரு மனைவியைத் தவிர, மற்றெல்லாரையும் விவாகரத்து செய்யவேண்டும் ஆனால், அவன் எந்த ஒருவளை விரும்புகிறானோ அவளை வைத்துக்கொள்ளலாம். அவன் தேர்ந்தெடுக்க விரும்பினால், அது அவனுடைய கடைசி, அல்லது இளையவளாகவுங்கூட இருக்கலாம்.

4. பல மனைவிகளையுடைய ஒரு மனிதனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கமுடியாது. ஏனெனில், அவர்கள் அனைவரும் ஒரு பல தார நிலையில் ஒன்றுசேர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

5. விவாகரத்து செய்யப்பட்ட மனைவிமார்கள் அருகிலேயே வைக்கப் படவேண்டும். அதனால் அந்த மனிதனால் அவர்களைத் தொடர்ந்து பார்க்க—பராமரிக்கமுடியும் ஆனால், அவர்களை மனைவிகளாகக் கருதாமல், அன்னைகளைப் போலவும் சகோதரிகளைப்போலவும் கருதவேண்டும். (உண்மையில் ஒருவனுடைய மனைவி அவனுக்கருகில் தொடர்ச்சியாக இருக்கும்போது, அவளைச் சகோதரியாகக் கருதுவது முடியாத காரியம்தான். அது மனைவிக்கும் நேர்மையற்றதாக இருக்கும்).
6. விவாகரத்துசெய்த மனிதன் அவனுடைய மனைவிகளிடத் துக்கும் பிள்ளைகளிடத்திற்கும் திரும்பும்படி சோதனைக்குட்படாம லிருப்பதற்காக—அதைத் தவிர்ப்பதற்காக—மனைவிமார்களையும், பிள்ளைகளையும் தூரமாக அனுப்பிவிடவேண்டும். இது உண்மையில், மனைவிமார்களுக்கும், பிள்ளைகளுக்கும்கூட எதிரான கொடுமைமிக்க நேர்மையற்றச் செயலாக இருக்கும்.
7. ஒரு மனிதனுடைய மனைவிகள் அனைவரும் அவனுடனேயே வாழ்ந்துகொண்டிருப்பதினால், அவர்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெறமுடியும்.
8. விவாகரத்துசெய்து விலக்கப்பட்ட மனைவிகள், அவர்களுடைய கணவர்கள் விபச்சாரம்செய்பவர்களாக இருந்தபோதிலும், தாங்களும் தங்களுடைய பிள்ளைகளும் வேறு யாராவது ஒருவனால் கவனிக்கப்படும்படி, மறுமணம் செய்துகொள்ளத் தைரியப்படுத்தப்படவேண்டும்.
9. அடுத்த மனிதர்களைத் திருமணம் செய்துகொள்ளும்படி மனைவிகள் தைரியப்படுத்தப்படக்கூடாது. ஏனெனில், அடுத்த மனிதர்கள் சொந்த தகப்பன்களைப்போல இந்தப் பிள்ளைகளைக் கவனிக்கமாட்டார்கள். கணவர்கள் விபச்சாரம் செய்யாதவரை, மனைவிகள் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது.

இந்தப் போதனைகளில் அதிகமானவைகள் வேதாகமத்தில் காணப் படாமல், மனிதர்களால் உண்டுபண்ணப்பட்டதாக உள்ளது.

ஒட்டுமொத்தமாகக் கணிக்கும்போது, வேதாகமத்தின்படி பேசுவ தானால், பல தார மணமுடைய ஒரு மனிதன் முன்னமேயே, அவன் ஓர் அஞ்ஞானியாக அல்லது அறியாமைமிக்கவனாக இருந்திருந்தபோது, நல்ல நம்பிக்கையோடு மனைவிகளை விவாகம்செய்திருந்தால், அவனைச் சபைக்குள் ஏற்றுக்கொள்ளலாம். இது புதிய ஏற்பாட்டின் நிலைபோல, காணப்படுகிறது. ஒரு மனிதன் கிறிஸ்தவனாவதற்காக அவனுடைய

மனைவிகளையும் பிள்ளைகளையும் தூரமாக அனுப்பிவிடவேண்டும் என்று அவனிடம் ஒருபோதும் கூறக்கூடாது. அப்படிப்பட்ட சட்டம் மனைவிகளும் பிள்ளைகளுமாகிய இரு சாராருக்கும் எதிரான மிக அதிகமான கொடுமையாக இருக்கும். அது வேதாகமம் எதற்காக நிற்கின்றதோ, அந்த அன்பின் ஆவிக்கும், பொறுமையின் ஆவிக்கும் எதிரானதாகவும், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவைகளில் நாம் பெற்றிருக்கும் உதாரணத்திற்கும் எதிரானதாக இருக்கிறது.

ஒரு மனிதன் கர்த்தரிடத்திற்கு வரும்போது, அவன் அவனுடைய மூன்றாம், நான்காம், ஐந்தாம் மனைவியுடன்கூட வாழ்ந்துகொண்டிருக்கலாம் என்பதும், ஆனால், சுவிசேஷம் அவர்களைக் கண்டடைந்திருப்பதினால், சபை அந்த மனிதனையும் அவனது மனைவியையும் ஏற்றுக்கொள்ளும் என்பதும் கவனிக்கப்படவேண்டும். அவன் அவனுடைய முதல் மனைவியை நோக்கிப் பின்னிட்டுச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. தன்னுடைய அறியாமையின் நாட்களில் செய்திருப்பதை இப்போது மாற்றமுடியாது என்பதை சபை அங்கீகரித்திருக்கிறது. ஓர் அஞ்ஞானி அவனுடைய அறியாமையில், கிறிஸ்தவனாவதற்குமுன், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை உடையவனாக இருந்திருக்கிறான் என்பதினால், இந்தச் சட்டம் அந்த அஞ்ஞானிக்குங்கூட, சமமாகப் பொருத்தப்படலாம் என்று சிலர் நினைக்கின்றனர்.

அப்படியிருந்தாலும், அப்படி மாற்றமடைந்த ஒருவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை, சபையின் போதனையும், பாரம்பரியங்களும் தடுக்கிறது என்னும்போது, நாம் சபையின்பால் ஆழ்ந்த அன்பையும், புரிந்துகொள்ளும் தன்மையையும் உடையவர்களாக இருந்து, முழுச் சபையையும் தொந்தரவு செய்வதைவிட, அப்படிப்பட்ட பல தாரமுடைய மாற்றமடைந்தவனை, ஓய்வுநாள் பள்ளியின் விசுவாசமிக்க அங்கத்தினராகவும், சபைக்கு வருகை தரவும், தேவனுடைய ஓய்வுநாளை ஆசரிக்கவும், தேவனுடைய தசம பாகத்தைச் செலுத்தவும், அசுத்தமான உணவை விட்டுவிடவும், அவனிடத்திற்கு வந்திருக்கும் ஒளி அனைத்திற்கும் தக்கதாக வாழவும், அவனை நடத்தலாம். சிலுவையிலறையப்பட்ட கள்ளனுக்கு ஞானஸ்நானம் என்னும் அடையாளம் முடியாததாகவும், சூழ்நிலைகளின் காரணமாக தாமதப்படுத்த முடியாததாயிருந்தாலும், அப்படி மதமாற்ற மடைந்த ஒருவனுக்கு கிறிஸ்துவின் சிலுவையினிடத்திலிருந்து மட்டுமே வரக்கூடிய இரட்சிப்பை சுட்டிக்காட்டவேண்டும்.

## விபச்சாரம்

விபச்சாரம் என்பதின் அர்த்தம்:— திருமணமான ஒரு நபர், தனது திருமண பாகஸ்தராக இல்லாத ஒருவனுடன் அல்லது ஒருவளுடன்

கொள்ளும் உடலுறவு. ஒரு கணவன் அல்லது ஒரு மனைவியின் விசுவாசமற்றத் தன்மை. கெடுத்தல் என்னும் இலத்தீன் மொழியிலிருந்து அடல்டரி (Adultery) என்னும் ஆங்கிலச் சொல் உருவாகியுள்ளது.

பத்துக் கற்பனைகளிலும், சில சமயங்களில் வேதாகமத்தின் மற்ற பாகங்களிலும் சகலவிதமான உடலுறவுத் தூய்மையின்மையையும் விவரிக்கின்ற ஒரு பொதுவான வார்த்தையாக இது பயன்படுத்தப்படுகிறது.

தேவனுடைய மக்களின் ஆவிக்குரிய விசுவாசமின்மையை உருவகமாக விவரிக்க வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எரே. 3:8,9 எசே. 23:37; ஓசியா 2:2; மத். 12:39; வெளி. 2:22–ஐப் பார்க்கவும்.

Fornication என்பதின் பொருள்:– (வேசித்தனம்) திருமணமாகாத புருஷனுக்கும் ஸ்திரீக்கும் இடையில் நடைபெறும் உடலுறவு. பொதுவாக திருமணமாகாதவன் என்று பொருள்படும்.

வேதாகமத்தில் எல்லாவிதமான உடலுறவுத் தூய்மையின்மையையும் குறிக்கும் பொதுச் சொல்லாக இது உள்ளது. (இப்படியாக வேதாகமத்தில் விபச்சாரம் என்னும் சொல்லும் வேசித்தனம் என்னும் சொல்லும் அடிக்கடி ஒரே அர்த்தத்தை உடையதாக இருக்கிறது). வெளி. 17:2; 19:2 ஆகிய வசனங்களில் ஆவிக்குரிய மருளவிழுகையைச் சுட்டிக்காட்ட உருவகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**யாத். 20:14** “விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.”

**யாத். 20:17** “பிறன் மனைவியை இச்சியாதிருப்பாயாக.”

**லேவி. 20:10** “விபச்சாரர்களும், விபச்சாரிகளும் கொலைசெய்யப்பட வேண்டும்.”

**குறிப்பு**:–மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் விபச்சாரம் மரண தண்டனைக்கு உட்பட்டு இருந்தது. அது ஒரு கடுமையான குற்றமாக இருந்தது. தேவனுக்கு இன்று பூமிக்குரிய நாடு எதுவும் இல்லாததினால், சபை இன்று மரண தண்டனையை நடத்துவதில்லை—(யோவான் 18:36). ஆனால் விபச்சாரம் என்னும் பாவம் தேவனுடைய பார்வையில் அன்று இருந்ததுபோலவே இன்றும் கடுமையானதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஜனங்கள் தங்களுடைய ஜனங்களிலிருந்து அறுப்புண்டுபோகவேண்டியவர்களாக (சபையிலிருந்து நீக்கப்படவேண்டியவர்களாக) உள்ளனர். (லேவி. 18:29).

எண்.25:6–15 சிம்ரி என்பவனையும் அவனுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்த ஸ்திரீயையும் சீக்கிரமாகக் கொலைசெய்ததற்காகப் பினெகாஸ் ஆசீர்வதிக்கப்பட்டான்.

உபா. 23:2 “வேசிப்பிள்ளையும் … அவனுக்குப் பத்தாம் தலைமுறை யானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.” தேவாலயம் பரிசுத்தமானதாக இருந்தது. இந்த பிரமாணத்தினால், தேவன் பாவத்தின் பயங்கரமான தன்மைக்கு சித்திரவிளக்கம் கொடுத்து, அதினால் அவர்கள் பாவத்தை இலகுவானதாகக் கருதாமலிருக்கச் செய்தார். குடும்பத்தின் தூய்மையும் ஆவிக்குரிய வாழ்க்கையும் எப்பொழுதும் தேவனுக்கு மேலான காரியமாக இருக்கிறது. (SDABC உபா. 23:2 சம்மந்தமாக). இது இரட்சிப்பிலிருந்து விலக்கப்படுவதாக இல்லாமல், பரிசுத்த ஸ்தலத்திலிருந்து விலக்கப்படுகிறது என்று அர்த்தம் கொள்கிறது முதலாம் வசனம் பற்றிய வேதாகம விளக்கம்.

தேவனுடைய சுயமான பிரசன்னம் தங்கியிருந்த தேவாலயம் இப்பொழுது இல்லாமலாகிவிட்டிருப்பதினால், அந்தப் பிரமாணம் இன்று பொருந்துவதில்லை. ஆனால் தூய்மையின் கொள்கை இன்றும் தேவனுடைய ஜனங்களை அடையாளப்படுத்துகிறது.

அப். 15:20,29 வேசித்தனத்திற்கெதிராகப் புறஜாதியிலிருந்து மதம் மாறினவர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

**குறிப்பு:**– புறஜாதியாரான அஞ்ஞானிகள், விபச்சாரம் தவறானது என்பதை அறிந்திருந்தனர் ஆனால், வேசித்தனத்தை அவர்கள் பாவமாகப் பார்க்கவில்லை. உண்மையில் சில இடங்களில் அஞ்ஞான ஆராதனையில் வேசித்தனம் அவர்களுடைய ஆராதனையின் ஒரு பகுதியாக உட்படுத்தப் பட்டிருந்தது. கிறிஸ்தவ மதத்தில் வேசித்தனமும்கூடப் பாவம்தான் என்று புதிய ஏற்பாடு இங்கு எச்சரிக்கிறது.

மத். 5:32; மாற்கு 10:11,12; லூக்கா 16:18; ரோமர் 7:3 (திருமண உறவில்) முதலாவது பாகஸ்தர் உயிருடன் இருக்கும்போது, வேறொருவரைத் திருமணம்செய்வது தேவனுடைய கண்களில் பாவமாக இருக்கிறது. (மத். 5:32; 19:9–ல் இயேசு கொடுக்கும் (உதாரணம் போல) விசுவாசமின்மை தவிர மற்றுள்ளவைகள் விபச்சாரமாக உள்ளது).

1 கொரி. 6:9,10:– “வேசிமார்க்கத்தாரும் விபச்சாரக்காரரும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.”

**குறிப்பு:**– இந்த வசனங்கள் மனித இனத்துடன் தாங்களாகவே சுயபுணர்ச்சி செய்கிறவர்களையும் அல்லது ஓரினச்சேர்க்கை உள்ளவர்களையும் பற்றிக்கூடப் பேசுகின்றன. RSV; NEB; LIVING BIBLE ஆகிய வேதாகமங்களைப் பார்க்கவும்.

ஓரினச்சேர்க்கை என்றால், தனக்கு எதிரான இனத்துடன் உடலுறவு கொள்ளாமல், தனது இனத்துடனேயே உடலுறவு கொள்ளுவது என்பதாகும். (Homo என்னும் சொல் அதே என்றுபொருள்படும் கிரேக்கச் சொல்லிலிருந்து உண்டானதாகும்). இந்தப் பாவம் வேதாகமத்தில் அருவருப்பு என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட ஜனங்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று 1 கொரி. 6:9,10 கூறுகிறது. ஆதி. 19–ம் அதிகாரம் (யூதா. 7–ம் வசனம்) லேவி. 18:22; 20:13; யூதா 19:22–24; நியா. 20:8–11,46,48; ஓசியா 9:9; ரோமர் 1:26,27,32; 1 தீமோ. 1:9,10 வசனங்களையும் பார்க்கவும்).

ரோமர் 1:26–32 "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத் திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்."

1 கொரி. 6:13 "சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது."

**Living Bible**:– ஆனால், பாலுறவு சம்பந்தப்பட்ட பாவம் ஒருபோதும் சரியானதல்ல. நமது சரீரங்கள் அதற்கென்று உண்டுபண்ணப்படாமல், கர்த்தருக்கென்றே உண்டுபண்ணப்பட்டிருக்கிறது.

**குறிப்பு**:– தேவன் அருளியுள்ள பாலுறவு என்னும் வரம் திருமணத்தில் மட்டுமே, திருமண பாகஸ்தராக ஐக்கியப்பட்டதினால்மட்டுமே, திருமண உறவில் காணப்படுகின்ற அவர்களுடைய அன்பு, ஐக்கியம் ஆகியவைகளின் ஓர் அடையாளமாகப் பயன்படுத்தப்படவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இவ்வாறாக, ஒரு பாகஸ்தரில்லாமல் தனக்குத்தானே பாலுறவை நடப்பித்தல் (சுயப்புணர்ச்சி அல்லது கரமைத்துனம்) அல்லது தான் திருமணம்செய்த சொந்த மனைவிக்கு வெளியில் தூரமாக ஒரு பாகஸ்தரை உடையதாக இருப்பது, பாவமாக உள்ளது என்று வேதாகமம் கூறுகிறது. பாலுறவு என்னும் வரத்தை அளித்ததில் தேவனுடைய மனதிலிருந்த ஆழமான அர்த்தத்தை அது அழித்துவிடுகிறது. கிறிஸ்தவர்கள் இந்த விதிகளைத் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்.

**1 கொரி. 6:18** "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்." Living Bible– பாவமிக்க பாலுறவைவிட்டு ஓடுங்கள். சரீரத்தை இது பாதிப்பதுபோல் வேறு எதுவும் பாதிப்பதில்லை. நீ இந்தப் பாவத்தைச் செய்யும்போது, அது உனது சொந்த சரீரத்திற்கு எதிரானதாக இருக்கிறது.

**எபே. 5:3** "வேசித்தனத்தின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது."

**எபே. 5:5–7** "விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரக ஆராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது, தேவனுடைய இராஜ்யமாகிய கிறிஸ்துவின் இராஜ்யத்திலே சுதந்திரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே" (தூய்மையில்லாத ஒருவனும்) Living Bible:– கிறிஸ்துவின் இராஜ்யத்தில் சுதந்திரமடைவதில்லை.

**1 தீமோ. 1:9,10** சன்மார்க்க நெறியில்லாதவர்களையும், தூய்மை யற்றவர்களையும் பிரமாணமானது, பாவிகள் என்று அடையாளப்படுத்துகிறது.

**எபி. 13:4** "வேசிக்கள்ளரையும் விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந் தீர்ப்பார்" (NEB–வேசிமார்க்கத்தார்).

**வெளி. 21:8** (NEB வேசிமார்க்கத்தார்) "விபச்சாரக்காரரும் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்."

**வெளி. 21:27** "தீட்டுள்ளதும், அருவருப்பையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை."

**மத். 5:8** "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."

**குறிப்பு**:– சுத்தம் என்பது நமது செயல்களில்மட்டுமாக உள்ள ஒன்றாக இராமல், நமது ஒவ்வோர் எண்ணத்திலும் – நமது மனங்களிலும்– இருதயங்களிலும் இருக்கவேண்டும் என்று இயேசு காட்டுகிறார். (மத். 5:28; நீதி. 6:25–ம் பார்க்கவும்)

**ஏசாயா 52:11** கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அசுத்தமானதைத் தொடாமலிருங்கள்.

**மல்கியா 2:13–17** ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்கு ... துரோகம் பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் . (தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். வச. 15,16).Living Bible – தேவன் நம்மைப் புறக்கணித்தது ஏன்? என்று நீங்கள் கூக்குரலிடுகிறீர்கள். ஏன் என்று நான் உங்களுக்குச் சொல்லுவேன். வருடங்களுக்குகூடாக உங்களுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்த உங்கள் மனைவிகளை–நீங்கள் கவனிப்பதாகவும் காப்பாற்றுவதாகவும் வாக்குத்தத்தம்பண்ணின உங்கள் தோழிகளை விவாகரத்து செய்கின்ற உங்கள் துரோகங்களைக் கர்த்தர் கண்டிருப்பதுவே காரணமாக உள்ளது. நீ உன் மனைவியுடன் கர்த்தரால் இணைக்கப்பட்டாய். ஏனென்றால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் விவாகரத்தையும் கொடுமையான

மனிதர்களையும் வெறுக்கிறேன் என்று கூறுகிறார் ஆகையால், உங்கள் வெறிகளைக் கட்டுப்படுத்துங்கள். உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடுதல் உங்களிடம் இல்லாமலிருப்பதாக (வச. 14–16).

மத். 5:32; 19:9; மாற்கு 10:1,12; லூக்கா 16:18; ரோமர் 7:1–3 விபச்சாரம் என்னும் ஒரு காரணத்தினாலன்றி தள்ளிவிடுதலும், மறுமணமும் அனுமதிக்கப்படவில்லை!

**1 கொரி. 7:10,11** ஒரு ஸ்திரீ அவளுடைய கணவனை விட்டு விலகிடவேண்டும் என்று உணர்ந்தாலும், அவள் இன்னும் மறுமணம் செய்துகொள்ளாதவளாகவே இருக்கவேண்டும்.

**குறிப்பு:**– விவாகரத்து, மறுமணம் சம்மந்தப்பட்ட காரியங்களைப்பற்றி செவன்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபை கீழ்க்காணும் கொள்கைகளை முன்வைத்திருக்கிறது:

1. திருமணம் என்பது ஒரு புருஷனுக்கும் ஒரு ஸ்திரீக்கும் இடையிலான ஒப்பந்தமாக இருந்து, அவர்கள் இருவரும் உயிர் வாழும் காலம்வரை நீடிக்கவேண்டியதாக இருக்கிறது.

2. பிரிவினை நிகழ்ந்தபோதிலும், சட்டரீதியான விவாகரத்தை ஆதாயப்படுத்திக்கொண்டபோதிலும், சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடிய மறுமணம் எதுவும் நடைபெறக்கூடாது.

3. இதிலிருந்துள்ள ஒரே தவிர்ப்பு விபச்சாரம் என்பதில் மட்டுமாக உள்ளது. அப்படிப்பட்ட காரியத்தில் குற்றமில்லாத கட்சிக்கு மறுமணம் செய்துகொள்ளும் உரிமை இருக்கிறது. (மத். 5:32˙ 19:9).

4. குற்றமுள்ள கட்சிக்காரன் – கட்சிக்காரி எவ்வளவுதான் மனந்திரும்பி இருந்தபோதிலும், அவன் ஓர் இரண்டாவது மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலம்வரை, திரும்பவும் சேர்த்துக்கொள்ளமுடியாது. கீழ்க் காணபவை நடைபெறாதவரை, 1. அவனுடைய முதல் மனைவி இறந்துவிட்டால் அல்லது 2. அவனுடைய முதல் மனைவி மறுமணம் செய்துகொண்டிருந்தால், (இந்தக் காரியத்தில் அவனுடைய முதலாவது திருமணம் உண்மையாகவே தெளிவாகவே சென்றுவிட்டிருக்கின்றது. (முடிவடைந்திருக்கிறது). அதற்குபின் அவனால், அந்தத் திருமணத்தைச் சீர்செய்யவோ அவன் முதல் மனைவியிடத்திற்குத் திரும்பவோமுடியாது ஏனென்றால், இப்பொழுது அவள் வேறொருவனைத் திருமணம் செய்திருக்கிறாள். திருமணம் சம்மந்தப்பட்டவரையில் அவள் அவனுக்கு மரித்திருக்கிறாள்).

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் முன்னைய குற்றவாளியான கட்சி இப்பொழுது மீண்டும் சபைக்குள் இரண்டாவதாகத் திருமணம் செய்துகொண்டுள்ள பாகஸ்தருடன் சேர்த்து மறுஞானஸ்நானத்தின்மூலமாகச் சேர்த்துக்கொள்ளப்படலாம். அப்படியிருந்தபோதிலும், அப்படித் திரும்பவும் சேர்த்துக்கொள்ளுதலை விரைவாகச் செய்யக்கூடாது. அநேக வருடங்கள் கடந்துச் செல்லவேண்டியது அவசியமாக இருக்கலாம். அந்தப் பாவம் ஓர் அற்பமான காரியம் என்றும் அதை விரைவாகக் கவனிக்காமல் விட்டுவிடலாமென்றும் சபையிலுள்ள ஒருவரும் உணரக்கூடாது. சில காரியங்களில், முதலாவது பாகஸ்தர் இன்னும் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் போதும், முதலாவது பாகஸ்தர் மறுமணம்செய்திருக்கின்றபோதிலும், மன்னிப்பு இல்லாதவிதமாக அந்தப் பாவம் மிகவும் கடினமானதாயிருக்கும்போது, அப்படிப்பட்ட குற்றமுடைய கட்சிக்காரரை ஒருபோதும் திரும்பச் சேர்த்துக்கொள்ளாமலிருப்பது நல்லதாக இருக்கலாம்.

5. சில காரியங்களில் அவனைத் திருமணம்செய்தபோது, வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை அறியாமலிருந்து, தனது குற்றமில்லாத தன்மையில் அவனைத் திருமணம் செய்திருப்பவளுக்குச் செய்யும் தீங்காக அஙது இருந்து, குற்றமில்லாத கட்சிக்காரர் செய்யும் முதல் குற்றத்தின்மேல் இரண்டாவது குற்றமாக இருக்கும் என்று உணரலாம். இரண்டாவது திருமணத்தில் பிறந்த பிள்ளைகளுக்குத் தீங்கு உண்டாகிவிடலாம் என்று அவன் உணரலாம். ஏனெனில் அவர்களுக்கு ஒரு தகப்பனின் வழிகாட்டுதலும் பாதுகாப்பும் அவசியமாக இருக்கிறது. ஆனாலும் இதுபோன்ற ஒரு காரியத்தில், அவனுடைய முதல் மனைவி உயிருடனிருக்கும்வரை, அல்லது அவள் திருமணம் ஆகாதவளாக இருக்கின்றவரை, அந்த மனிதனைச் சபைக்குள் திரும்பவும் கொண்டுவரமுடியாது.

அப்படிப்பட்டவன் எப்பொழுதும் தன் முழு இருதயத்துடனும் மனந் திரும்புவானாகில், அவனுடைய காரியத்தைச் சபை அவனிடமே விட்டுவிட வேண்டும். அவன் பரலோகம் செல்லுவானானால், அது சபையின் சகோதரத் தோழமை இல்லாததாக இருக்கும்.—**1T 215.**

6. ஒரு மதமாற்றமடைந்தவனின் விஷயத்தில் அவன்—அவள் இதற்குமுன் எத்தனை தடவைகள் விவாகரத்தும், மறுமணமும் செய்திருந்த போதிலும், அப்படி மதமாற்றமடைந்தவர்களை, சுவிசேஷம் எந்த நிலைமையில் அவர்களைக் கண்டிருக்கிறதோ – இப்பொழுது அந்த நபரை மனைவியுடனோ கணவனுடனோ கண்டிருக்கிறதோ—அந்த நிலைமையில் —சபை ஏற்றுக்கொள்ளுகிறது. அறியாமையினால் கடந்த காலத்தில் என்ன செய்யப்பட்டிருக்கிறதோ அதை இப்பொழுது நேர்செய்யமுடியாது

என்பது உணரப்பட்டிருக்கிறது. ஆனால், புதிதாக மதம் மாறினவன், அவனுடைய மத மாற்றத்தின்போதிலிருந்து இப்பொழுது அவனுடைய அல்லது அவளுடைய புரிந்துகொள்ளுதலுக்கென்று திறக்கப்பட்டிருக்கும் வேதாகமக் கொள்கைகளில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**குறிப்பு:**— விவாகரத்தையும் மறுமணத்தையும் பற்றிய கேள்வியில் வேதாகமம் என்ன கூறயிருக்கிறது என்பதை, இன்றுள்ள சபையிலுள்ள சிலர் மென்மைப்படுத்த முயன்றுகொண்டிருக்கின்றனர் என்பது, வருத்தத்துடன் கவனிக்கப்படவேண்டியதாக உள்ளது. நாம் அன்பையும் புரிந்துகொள்ளுதலையும் உடையவர்களாக இருக்கவேண்டும் என்று சிலர் போதிக்கத் தொடங்கியுள்ளனர். ஆனால், தேவனுடைய கற்பனைகளுக்கு எதிராகச் செல்லுவதில் உண்மையான அன்பும், புரிந்துகொள்ளுதலும் இருப்பதில்லை. பாவத்தில் இருக்கும் ஒருவ னுக்கு விசேஷமான அன்பையும், புரிந்துகொள்ளுதலையும் கொடுப்பது, அநேகர் பாவம்செய்வதற்குக் கதவைத் திறந்துவிடுவதாக இருக்கலாம்.

இந்தக் காரியங்களில் சந்தேகமுள்ளவர்களாக இருப்பதற்கு உண்மையில் அவசியம் எதுவும் இல்லாமலிருக்கிறது. இந்தக் கேள்வியில் வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை தேவனால் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசன ஆவி தாங்கி நிற்பதையும், இன்றுள்ள சபையின் மனப்பாங்கு என்னவாக இருக்கவேண்டும் என்பதையும் கோடிட்டுக்காட்டுகிறது. இந்த எழுத்துக்களில் தேவன் கூறியிருப்பது எதுவோ, அதைப் பின்பற்றுவது நமது பாதுகாப்பான பாதையாக இருக்கிறது.

சபைச் சட்ட நூல், 1942 – ன் பதிப்பு, பக்கம் 188,189 பகுதி 4 கீழ்க் காணும் வண்ணம் கூறுகிறது :— விவாகரத்தில் குற்றமுள்ளவராக இருக்கும் ஒரு கட்சிக்காரராக உள்ள அங்கத்தினர், இன்னொருவரைத் திருமணம் செய்யும் உரிமையை இழக்கிறார். அப்படிப்பட்ட ஒரு திருமணத்தை நடத்திவைக்கின்ற ஊழியக்காரரின் உரிமையைச் சபை அங்கீகரிப்பதில்லை. அப்படிப்பட்ட ஒரு நபர் வேறொருவரைத் திருமணம்செய்துகொண்டால், வேதவாக்கிய ஆதாரமற்ற உறவு தொடருகின்றவரை அவரைச் சபை அங்கத்தினராக மறுபடியும் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

### பாவத்தைப்பற்றிய சபையின் மனப்பாங்கு

ஏசாயா 58:1 “சத்தமிட்டுக் கூப்பிடு அடக்கிக்கொள்ளாதே; எக்காளத் தைப்போல உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி” (எசே. 3:17–21 33:7–19 – ம் பார்க்கவும்).

லேவி. 18:29 "இப்படிப்பட்ட அருவருப்பானவைகளில் யாதொன்றைச் செய்தால் (வசனம் 6–28), அந்த ஆத்துமாக்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவார்கள்" (சபையிலிருந்து நீக்கப்படுவார்கள்).

எண். 25:6–15 சிம்ரியையும் அவனுடைய தோழியையும் அவர்களுடைய விபச்சாரத்திற்காக விரைவாகக் கொலைசெய்ததற்காகப் பினெகாஸ் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான். சபை பாவத்தை இலகுவான விதத்தில் பார்க்கக்கூடாது.

சங். 50:16–21 விபச்சாரரோடும் பங்குண்டு. விபச்சாரக்காரர்களுடன் நீ கூட்டாயிருக்கின்றாய் (வச. 18) RSV–பொல்லாதவர்களுடனும் சன்மார்க்கமில்லாத மனிதர்களிடமும் உன் நேரத்தைச் செலவுசெய்கிறாய். Living bible:—ஆனால், நான் உன்னைக் கடிந்துகொள்ளுவேன் (வசனம் 21). "தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள் இல்லாவிட்டால், நான் உங்களைப் பீறிப்போடுவேன்: ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை" (வசனம். 22).

**குறிப்பு**:– தேவன் விபச்சாரக்காரர்களை நியாயந்தீர்ப்பதுமட்டுமின்றி, அவர்களுக்கு அனுதாபம்காட்டுபவர்களையும் அவர்களுடனுள்ள தோழமைகளில் தொடர்கின்றவர்களையும் விபச்சாரக்காரர்களுடன் நண்பர்களாக இருந்து அவர்களுடைய பாவத்தைக் காணாததுபோல் விட்டுவிடுபவர்களையும், லேசாக நடத்துபவர்களையுங்கூட நியாயம் விசாரிப்பார்.

| | |
|---|---|
| **1 கொரி. 5:9–13** | "... விபச்சாரக்காரரோடு கலந்திருக்கக் கூடாது....அப்படிப் பட்டவனோடகூட புசிக்கவுங்கூடாது; ஆகையால், அந்தப் பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்." |
| **எபே. 5:11** | "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல்" (3–ம் 5–ம் வசனங்களிலுள்ள பாடப் பொருட்களைக் கவனியுங்கள்). |
| **2 யோவா. 10,11** | "அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும்." |
| **தீத்து 3:10** | "வேதப் புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு (Living Bible பிரிவினைகளை உண்டுபண்ணுகிறவனுக்கு) நீ இரண்டொரு தரம் புத்தி சொன்ன பின்பு, அவனை விட்டுவிலகு..." |
| **2 தெச. 3:14,15** | "... அவனோடே கலவாதிருங்கள் ஆனாலும், அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்." |

**குறிப்பு:**— விழுந்திருப்பவர்களுக்கு நேராக், உன்னைப் பார்க்கிலும் நான் பரிசுத்தன் என்னும் மனோபாவத்தை நாம ஒருபோதும் கொண்டிருக்கக் கூடாது. கிறிஸ்து அவருடைய ஜீவனைக் கொடுக்குமளவிற்குப் பாவிகளை நேசித்தார். கிறிஸ்துவால் மன்னிக்கப்படுவதற்காகப் பாவிகளை நேசித்து அவர்களைக் கிறிஸ்துவிடம் வரும்படி நாமும் தைரியப்படுத்தவேண்டும். நாமுங்கூட கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்ட பாவிகள் என்பதை நினைக்கவேண்டும். அதே நேரத்தில், பாவத்தில் தொடருகிறவரிடத்தில் அனுதாபம் கொள்வதை வேதாகமம் எச்சரிக்கிறது. நாம் பாவத்தை இலகுவானதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. மற்றவர்களும் பாவம் செய்வதற்குச் சோதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, பாவம் கண்டனஞ் செய்யப்பட்டு, நீதியின் தரம் உயர்த்திப் பிடிக்கப்படவேண்டும்.

காலம், பாவத்தை குறைவான பாவமாக்குகிறது அல்லது முக்கியமான கஷ்டங்கள் உண்டாகுமானால், பாவம் பாவமாகாமலாகிவிடுகிறது என்னும் நவீன போதனையில், விவாகரத்து, மறுமணம் என்னும் விஷயங்களில் சபை விழுந்துவிடக்கூடாது. இந்தக் கேள்வி தொடர்பாக நாம் பின்பற்றவேண்டிய விதத்தைப்பற்றித் தீர்க்கதரிசன ஆவி மிகத் தெளிவான வழிகாட்டுதலைக் கொடுக்கிறது. மறுபடியும் சபைச் சட்டம் 1942–ம் வருடப் பதிப்பு, பக்கம் 188,189–ல், 4 வது பகுதியின் கீழும், இந்தக் குறிப்பில்87–ம் பக்கத்தில் உள்ள குறிப்பையும் கவனியுங்கள்.

### அவிசுவாசிகளுடனுள்ள திருமணம்

“விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையில் உள்ள திருமணம் தேவனால் தடைசெய்யப்பட்டிருக்கிறது.”—**FC 500.**

“உலகப் பிரகாரமான ஒரு திருமணச் சம்மந்தத்தை ஏற்படுத்துவது ஆபத்தானது. அநேக புருஷர் மற்றும் ஸ்திரீகளுடைய மத சம்மந்தமான அனுபவத்தையும் பயனையும், அவர்களுடைய திருமணத்திற்குச் சாட்சிபகரும் நேரம் முடிவடையச்செய்கிறது என்பதைச் சாத்தான் நன்கு அறிந்திருக்கிறான்.”—**5T 364,365.**

“இன்று தேவனுடைய ஜனங்களைச் சூழ்ந்திருக்கும் மிகப் பெரிய ஆபத்துக்களில் ஒன்றாக, தெய்வ பக்தியில்லாதவர்களுடனுள்ள தோழமை கொள்வது இருக்கிறது. குறிப்பாகத் தங்களை அவிசுவாசிகளுடனுள்ள திருமணத்தினால் ஒன்றுபடுத்துவதில் இருக்கிறது… தேவனுடைய விளக்கமான கட்டளையைக் கருதாமலிருக்கத் துணிகரமாக முயலுவதினால், பின்னிட்டுவிழுதலின் முதல் அடியை அவர்கள் எடுத்துவைக்கின்றனர். தேவனுக்கு நண்பர்களாக இருப்பவர்களைமட்டுமே நமது நண்பர்களாக நாம் பாதுகாப்புடன் தேர்ந்துகொள்ளமுடியும்”—**2 SDABC 1000.**

தேவனுக்குப் பயப்படாத ஒருவளுடன் ஆபத்து இல்லாமல், தேவனுக்குப் பயப்படும் ஒருவன் தன்னை இணைக்கமுடியாது. இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ? (ஆமோஸ் 3:3). ஒருவனுடைய கொள்கைகள் எவ்வளவுதான் தூய்மையானதாக இருந்தபோதிலும், விசுவாசமில்லாத ஒரு தோழனின் செல்வாக்கு தேவனை விட்டு விலகிச்செல்லுகின்ற ஒரு சுபாவத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்.—**PP 174.**

“குறைகள் பெரிதுபடுத்துப்படாத ஒரு வீட்டை நீங்கள் பெற்றுக் கொள்ளும்வரை, தேவனுக்கு எதிரியாக இருக்கும் ஒருவருடன் நீங்கள் உங்களை ஐக்கியப்படுத்தாமலிருங்கள்... நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கின்ற தோழன் மற்ற எல்லா வகையிலும் தகுதிவாய்ந்தவராக இருந்தபோதிலும், இக்காலத்திற்குரிய தூதை ஏற்றுக்கொள்ளாதபோது, அவர் ஓர் அவிசுவாசியாக இருக்கிறார். எனவே நீங்கள் உங்களை அவருடன் இணைத்துக்கொள்ளுவதிலிருந்து பரலோகத்தால் தடைசெய்யப்பட்டிருக் கிறீர்கள். உங்களுடைய ஆத்துமாவுக்கு ஆபத்து இல்லாமல், இந்தத் உத்தரவை உங்களால் கருதாமலிருக்கமுடியாது. விசுவாசமில்லாத ஒருவருடன் உங்களைப் பிணைப்பது என்பது உங்களை நீங்களாகவே சாத்தானின் நிலத்தில் வைப்பதாக இருக்கும். நீங்கள் தேவனுடைய ஆவியை வருத்தப்படுத்தி அவருடைய பாதுகாப்பை இழந்துவிடுகிறீர்கள். என்ன விலை கொடுக்க வேண்டியதானாலும் சரி, அவரது வேண்டுதல்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிவது ஒன்று மட்டுமே நமது ஒரே பாதுகாப்பான பாதையாக இருக்கும். கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளைத் திருமணஞ்செய்வது சம்பந்தப்பட்ட தேவனுடைய போதனையில், கிறிஸ்தவ உலகத்தில் ஓர் ஆச்சரியமான– ஆபத்தான – வேற்றுமையற்ற–மந்தமான நிலைமை இருக்கிறது. தேவன் விளக்கமாகத் தடைசெய்திருக்கும் (திருமண) ஐக்கியத்திற்குத் தேவனுடைய அனுமதி வழங்கப்படாமலிருக்கிறது. அந்தப் பரீட்சையில் நிற்கவும், உங்களுடைய நேர்மையைப் பாதுகாத்துக்கொள்ளவும் தேவன் உங்களுக்கு உதவுவாராக.”—**5 T 363-366,368.**

**பல தார மணம்பற்றி:**

ஐந்தாவது தலைமுறையினனான லாமேக்கு அவனுடைய கொலைக் குற்றத்துடன் பலதாரமணத்தையும் சேர்த்துக்கொண்டான்.—**PP 81.**

“ஆதியிலிருந்த தெய்வீக ஏற்பாட்டிற்கு எதிராக பல தார மணம் ஆரம்ப காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக் காரியம் சம்பந்தப்பட்ட கர்த்தருடைய கிரமத்தை—ஒழுங்கைக் காட்டிக்கொண்டு, கர்த்தர் ஆதாமிற்கு ஒரே மனைவியைக் கொடுத்தார் ஆனால், விழுகைக்குப்பின் மனிதர்கள்

அவர்களுடைய பாவகரமான சொந்த விருப்பத்தைப் பின்பற்றுவதைத் தெரிந்துகொண்டார்கள்.”—**PP 91,91.**

“ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த உலகத்தின்மீது தேவனுடைய கோபத்தைக் கொண்டுவந்த பாவங்களில் ஒன்றாக—பல தார மணம் இருந்தது. திருமண அமைப்பைத் திரிபுசெய்வதும், அதன் கடமைப்பாடுகளைப் பலவீனப் படுத்துவதும், அதன் பரிசுத்தத் தன்மையைக் குறைப்பதும் சாத்தானின் திட்டமிடப்பட்ட முயற்சியாக இருந்தது; ஏனெனில், மனிதனில் உள்ள தேவ சாயலைச் சிதைப்பதிலும் துன்பத்திற்கும் தீய பழக்கங்களுக்குமான வாசலைத் திறப்பதற்கும் வேறு நிச்சயமான பாதை அவனுக்கு இருக்கவில்லை.”—**PP 338.**

“(ஜலப்பிரளயத்திற்கு முன்பாக இருந்த) அவர்கள் தேவனுடைய ஞானமிக்க ஏற்பாட்டிற்கு எதிராக பன்மையில் (பல) மனைவிகளை உடையவர்களாக இருந்தனர். திருமணக் காரியத்தில் உலகத்தில் உயிர்வாழும் அனைவருக்கும் அவருடைய ஒழுங்கையும் பிரமாணத்தையும் காட்டிக்கொண்டு, ஆதியில் தேவன் ஆதாமுக்கு ஒரு மனைவியைக் கொடுத்தார். மனிதர்கள் எந்த அளவிற்கு அவர்களுடைய மனைவிகளின் எண்ணிக்கையைப் பெருக்கினார்களோ அந்த அளவிற்கு துன்மார்க்கத்திலும் மகிழ்ச்சியற்ற நிலைமையிலும் அதிகரித்தனர்.”—**3 SpG 63.**

“அவர்கள் (ஜலப்பிரளயத்திற்கு முன்னானவர்கள்) தங்களுடைய பாவங்களைவிட்டு விலகாதவர்களாக இருந்து, பலதாரமணத்திலும் தங்களுடைய அழிவுக்குரிய வெறிகளிலும் தொடர்ந்திருந்தனர்.”—**3 SpG 67.**

“நோவாவிற்கு ஒரு மனைவிமட்டுமே இருந்தாள். ஒன்றுபட்ட அவர்களுடைய குடும்ப ஒழுங்கு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருந்தது. ஒரு சம்பவத்திலுங்கூட, ஒரு தடவையிலுங்கூட தேவன் பல தார மணத்தை அனுமதித்திருக்கவில்லை. அது அவருடைய சித்தத்திற்கு எதிரானதாக இருக்கிறது. அதனால் மனிதனின் மகிழ்ச்சி அழிக்கப்பட்டுவிடும் என்பதை அவர் அறிந்திருந்தார்.”—**SR 76.**

“ஆபிரகாமின் காலத்தில், அங்கு விசாலமாகப் பரவி, அது ஒரு பாவம் என்று கருதப்படாமலிருந்தது. அது தேவப் பிரமாணத்தின் மீறுதலுக்குக் குறைவானதாக இருக்கவில்லை. அது குடும்பத்தின் பரிசுத்தத் தன்மை, சமாதானம், குடும்ப உறவு ஆகியவைகளுக்கு மரணத்தை உண்டுபண்ணுவதாக இருந்தது. ஆகாருடனுள்ள ஆபிரகாமின் திருமணம் அவனுடைய குடும்பத்தினருக்குமட்டுமின்றி எதிர்காலத்

தலைமுறையினருக்கும் தீமைக்கான விளைவை ஏற்படுத்தியது."—**PP 145.**

"சாராள் ஒருவள்மட்டுமே ஆபிரகாமின் உண்மையான மனைவியாக இருந்தாள். மனைவி, அன்னை என்னும் அவளுடைய உரிமையில் பங்குபெற மற்றவர்கள் தகுதியற்றவர்களாக இருந்தனர். அவள் அவளுடைய கணவனிடத்தில் பக்தி செலுத்தியிருந்தாள். இதில் புதிய ஏற்பாட்டில் அவன் ஒரு விலைமதிப்புமிக்க உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறாள் ஆனால், ஆபிரகாமின் பாசங்கள் வேறொருவருக்குக் கொடுக்கப்படுவதில் அவள் விருப்பமில்லாதவளாக இருந்தாள். தனக்குப் போட்டியாக இருந்தவளைத் துரத்திவிடும்படி அவள் கூறியதில், கர்த்தர் அவளைக் கடிந்துகொள்ளவில்லை."—**PP 146,147.**

"பல தார மணத்தைத் தேவன் அனுமதித்திருந்தால், ஆகாரையும் அவளுடைய மகனையும் அனுப்பிவிடும்படியான கட்டளையை ஆபிரகாமிற்குக் கொடுத்திருக்கமாட்டார்."—**3 SpG 3:104.**

"யாக்கோபு இரண்டு மனைவிகளை எடுத்துக்கொண்டது லாபனின் தந்திரத்தினாலானதாக இருந்தபோதிலும், பல தார மணத்தின் தவறை அவன் புரிந்துகொண்டான்."—**3 SpG 126.**

"பல தார மணத்தின் பலன்கள் யாக்கோபுவின் வீட்டிலும் வெளிக்காட்டப்பட்டிருந்தது. பயங்கரமான இந்தத் தீமை அன்பின் ஊற்றையே வறண்டுவிட செய்வதுடன், அதன் செல்வாக்கு மிக அதிகமான பரிசுத்தமான பிணைப்புக்களை பலவீனப்படுத்துகிறது. அநேக தாய்மார்களின் பொறாமை, குடும்ப உறவுகளைக் கசப்பாக்கியிருந்தது. பிள்ளைகள் சண்டையிடுபவர்களாகவும், கட்டுப்பாடும், பொறுமையும் இல்லாதவர் களாகவும் வளர்ந்ததுடன், கவலையினாலும் வருத்தத்தினாலும் அந்தத் தகப்பனின் வாழ்க்கை இருளாகியிருந்தது."—**PP 208,209.**

"மக்கள் பல மனைவிகளை உடையவர்களாக இருப்பதற்கெதிராக அவர்களை எச்சரிக்கும்படி தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார். அவன் இருதயம் பின்வாங்கிப்போகாதபடி, அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம் என்றார்."—(உபா. 17:17).—**4 SpG 100.**

"தாவீதின்மீது நியாயத்தீர்ப்புச் செலுத்துவதின்மூலமாகவும், அவனுடைய வீட்டாரிடத்திலிருந்தே அவனுக்கு எதிராகத் தீமை எழும்புவதற்கு அனுமதித்ததன்மூலமாகவும், தாவீது பல மனைவிகளை உடையவனாக இருந்ததற்கான அவன்மீதுள்ள தமது கோபத்தை தேவன் காட்டுகிறார்."—**4 SpG 87.**

"அதற்குப்பின் தாவீது அபிகாயிலைத் திருமணஞ்செய்துகொண்டான். அவன் ஏற்கனவே ஒருத்திக்கு கணவனாக இருந்தான். ஆனால் அவனுடைய காலத்திலிருந்த ஜாதிகளின் சம்பிரதாயம் அவனுடைய நியாயத்தைப் புரட்டச்செய்து, அவனது செயல்களை ஆதீனத்திற்குட்படுத்தியிருந்தது. உலகத்தின் நடத்தையைப் பின்பற்றிச்செல்லுவதினால் பெரிய மனிதர்களும், நல்ல மனிதர்களுங்கூடத் தவறியிருக்கின்றனர். தாவீதின் வாழ்க்கை முழுவதிலும், அநேக மனைவிகளைத் திருமணம்செய்துகொண்டதாலான கசப்பான பலன்கள், புண்ணான விதத்தில் உணரப்பட்டிருந்தது."—**PP 668.**

**விபச்சாரம்பற்றி :**

"போரில் தங்களுடைய எதிரிகளை வென்றிருந்திருக்கக்கூடியவர்கள், அஞ்ஞான ஸ்திரீகளின் கண்ணிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தனர். மக்கள் காமவெறிபிடித்தவர்களைப்போலக் காணப்பட்டிருந்தனர்.. மீறுதலில் அதிபதிகளும் தலைவர்களும் முதன்மையானவர்களாயிருந்தனர். அநேக மக்களும் குற்றவாளிகளானார்கள். அந்த மீறுதல் நாடுதழுவியதாகிற்று.இந்த மருள விழுகையிலுள்ள தலைவர்கள் நியாயாதிபதிகளால் கொலை செய்யப்படவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார். இந்தச் சட்டம் உடனே கீழ்ப்படியப்பட்டது. குற்றம் செய்தவர்கள் கொலைசெய்யப்பட்டனர். தலைவர்கள் கடுமையானவிதத்தில் நடத்தப்பட்டதை சபையினர் காணவும், அவர்களுடைய பாவத்தின்மீதுள்ள தேவனுடைய ஆழ்ந்த வெறுப்பையும் கோபத்தின் பயங்கரத்தையும்பற்றிய ஆழ்ந்த உணர்வை உணரும்படி, மீறினவர்களின் உடல்கள் சகல இஸ்ரவேலர்களுடைய பார்வையிலும் தொங்கவிடப்பட்டன.

அந்தத் தண்டனை, நீதியானது என்பதை அனைவரும் உணர்ந்து, ஜனங்கள் ஆசரிப்புக்கூடாரத்தை நோக்கி ஓடி, கண்ணீருடனும் ஆழமான தாழ்மையுடனும் தங்களுடைய பாவங்களை அறிக்கைசெய்தனர். இவ்வாறாக, அவர்கள் தேவனுக்குமுன்பாக அழுதுகொண்டிருந்தபோது… இஸ்ரவேலின் பிரபுக்களில் ஒருவனாக இருந்த சிம்ரி என்பவன், மீதியானியரின் தலைவனின் வீட்டில் பிரபுவின் மகளும்—வேசியுமாக இருந்தவளை அழைத்துக்கொண்டு, தைரியமாகப் பாளையத்தில் அவனுடைய கூடாரத்திற்குள் வந்தான். தீய நடத்தை இதற்குமுன் ஒருபோதும் இந்த அளவிற்குத் துணிகரமானதாகவும் முரட்டாட்டமானதாகவும் இருக்கவில்லை,… சபையினரின் பார்வைக்குமுன் இந்தப் பிரபு அவனுடைய பாவத்தைத் துணிகரமாக வெளிப்படையாகச் செய்தபோது, அது தேவனுடைய பழிவாங்குதலை எதிர்ப்பதாகவும், அந்த ஜாதியின் நியாயாதிபதிகளைப் பரிகசிப்பதாகவும் இருந்தபோது, பிரதான ஆசாரியனான எலெயேசரின் மகனான பினெகாஸ் ஓர் ஈட்டியைப்

பிடித்துக்கொண்டு சென்று அவர்களிருவரையும் கொலைசெய்துபோட்டான். தெய்வீக நியாயத்தீர்ப்பை நடப்பித்த அந்த ஆசாரியன் இஸ்ரவேலரனைவருக்கும் முன்பாகக் கனப்படுத்தப்பட்டான்; ஆசாரியத்துவம் அவனுக்கும், அவனுடைய வீட்டாருக்கும் என்றென்றைக்குமாக உறுதிப்படுத்தப்பட்டது."—**PP 454, 455.**

"சன்மார்க்க நெறியை இழந்து, தேவனுடைய அதிகாரத்தை எதிர்த்திருந்த அந்தப் பிரபுவான சிம்ரியின்மீது நியாயத்தீர்ப்பு நடத்தப்படும் மட்டும், மோசேயின் ஜெபங்கள் கேட்கப்படவில்லை. அவனுடைய அழுகையும், வருத்தமும், தங்களுடைய நேர்மையைக் காத்திருந்தவர்களின் ஜெபமும் கேட்கப்படவில்லை. ஜெபங்களும் கண்ணீர்களும் அல்லாமல் வேறு விலைகளும் அவசியமாகின்றன. துன்மார்க்கமானது முடிவிற்குக் கொண்டுவரப்படவேண்டும்."—**RH May 17,1887.**

"தாவீது அவனுடைய பாவத்திற்காக மனம் வருந்தியிருந்தபோதிலும், மன்னிக்கப்பட்டுக் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும், அவன் தானாகவே விதைத்த விதையின் அழிவுக்குரிய அறுவடையைச் செய்தான். பாவத்தின்மீதுள்ள தேவனுடைய வெறுப்பிற்கு அவன்மீதும், அவனுடைய வீட்டின்மீதும் நடந்த நியாயத்தீர்ப்புகள் சாட்சியாக இருக்கின்றன."—**PP 723.**

"தாவீதின் உதாரணத்தைச் சுட்டிக்காட்டி, தங்களுடைய சொந்தப் பாவங்களின் குற்றத்தைத் குறைக்க முயலுபவர்கள், மீறுதலின் பாதை கடினமானது என்பதை வேதாகம ஆவணத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் தாவீதைப்போல தங்களுடைய கெட்ட நடத்தையிலிருந்து திரும்பினாலும், இந்த வாழ்க்கையில், பாவத்தின் பலன்கள் கசப்பானதாகவும் தாங்கிக்கொள்ளக் கடினமானதாகவும் காணப்படும்."—**PP 723.**

"தாவீதின் மனம்வருந்துதல் உண்மையானதாகவும், ஆழமானதாகவும் இருந்தது. அவனுடைய குற்றத்தைக் குறைத்துக்காட்டுகின்ற முயற்சி எதுவும் இருக்கவில்லை. அச்சுறுத்தியிருந்த நியாயத்தீர்ப்பிலிருந்து காப்பாற்றப்படுகின்ற வாஞ்சை அவனுடைய ஜெபத்தை ஏவச்செய்திருக்க வில்லை. தான் தேவனுக்கு எதிராகச் செய்திருந்த பாவத்தின் பெரிய தன்மையை அவன் கண்டான். தன்னுடைய ஆத்துமாவின் தீட்டையும் அவன் கண்டான். தன்னுடைய பாவத்தை அவன் வெறுத்தான். அவன் பாவமன்னிப்பிற்கென்றுமட்டும் ஜெபம்பண்ணாமல், இருதயத்தின் தூய்மைக் காகவும் ஜெபித்தான்."—**PP 725.**

"ஏரோது, அவனுடைய சகோதரனின் மனைவியான எரோதியாளுடன் கொண்டிருந்த அக்கிரமமான உறவை யோவான் ஸ்நானகன் வெளிப்படை யாகக் குற்றஞ்சாட்டி இடைப்பட்டிருந்தான்."—**DA 214.**

“யோவான் ஸ்நானகன் அவனுடைய ஊழியத்தில், மேலான இடங்களிலும், கீழான இடங்களிலும் அக்கிரமத்தை அச்சமின்றி கடிந்துகொள்ளுபவனாக நின்றிருந்தான். பாவத்தை வெளிப்படையாகக் கடிந்துகொள்ளுகின்றவனாக அவன் ஏரோது அரசனை நேரில் சந்திக்கத் துணிந்திருந்தான்.”—**DA 215.**

“விளைவுகளைப்பற்றிய பயமில்லாதவனாக அவன் (யோவான்) பாவத்தைக் கடிந்துகொண்டிருந்தான்.”—**EW 154.**

“உண்மையாயிருப்பதின் இடத்தைக் கொள்கை பிடித்திருக்கிறது. பாவம், கடிந்துகொள்ளப்படாமல் செல்லும்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 'நீ தான் அந்த மனிதன்' என்று விசுவாசத்துடன் கடிந்துகொள்ளுகின்ற அந்தக் குரல் மறுபடியும் சபையில் எப்பொழுது கேட்கப்படும்? அந்த வார்த்தைகள் அந்த அளவிற்கு அபூர்வமானதாக இல்லாமலிருந்தால், நம்மால் சபையில் தேவனுடைய வல்லமையைக் காணமுடியும். நாத்தான், எலியா, யோவான் ஆகியோரைப்போல, பலன்களைப்பற்றிக் கருதாமல், பயமின்றி, தேவனுடையவர்களாக, இதைச் செய்வதினால் தங்களுடையதனைத்தையும் தியாகம் பண்ணவேண்டியிருந்தாலும் சத்தியத்தைப் பேசுகின்ற மனிதர்களைத் தேவன் அழைக்கிறார்.”—**GW 149,150.**

“நீதிமான்கள் தங்களுடைய நீதியைவிட்டுத் திரும்பி, தீமைசெய்யும்போது, நீதியும்—பரிசுத்தமுமான ஒரு தேவனுடைய கோபத்திலிருந்து அவர்களுடைய கடந்தகால நீதி அவர்களை இரட்சிக்காது.” —**4 SpG 87.**

“நாம் காலத்தின் முடிவை நெருங்கும்போது—தேவனுடைய ஜனங்கள் பரலோகக் கானானின் எல்லையில் நிற்கும்போது, ஏழாவது கற்பனையை மீறும்படி சாத்தான் சோதிக்கின்றான்.”—**PP 457,458.**

**விவாகரத்து. மறுமணம்பற்றி:**

“திருமண மஞ்சத்தின் மீறுதலையன்றி வேறெதுவும் திருமண வார்த்தைப்பாட்டை, உடைக்கவோ இல்லாமலாக்கவோ செய்யமுடியாது. புருஷர்கள் தங்களுக்கென்று ஒரு சட்டத்தின் தரத்தை உண்டுபண்ணச் சுயாதீனமுள்ளவர்களாக இல்லை.”—**AH 341-342.**

“ஒரு மனைவி அவிசுவாசியாகவும் எதிர்ப்பவளாகவும் இருக்கிறாள் என்பதினாலேயே, தேவப் பிரமாணத்தின் பார்வையின்படி அவளை விலக்க (விவாகரத்துசெய்ய) முடியாது. யேகோவாவின் பிரமாணத்திற்கு இசைவானவளாக இருப்பதற்காக, அவள் தானாகவே பிரிந்துசெல்லுவதைத் தெரிந்துகொள்ளாதவரை அவன் அவளுடன் தங்கியிருக்கவேண்டும். ஒரு

மனைவி அவளுடைய கணவனை விட்டு ஏன் விலகவேண்டும் என்பதற்குத் தேவன் விபச்சாரம் என்கிற ஒரு காரணத்தைமட்டுமே கொடுத்தார். இந்தக் காரணம் ஜெபத்துடன் யோசிக்கப்படுவதாக. தேவனுடைய இந்தத் திருமண ஏற்பாடு நான்காவது கற்பனையின் ஓய்வுநாளைப்போல உங்கள்முன் உறுதியாக நிற்பதாக."—**AH 342.**

ஒரு தேசத்தின் சட்டத்தின்படி ஒரு மனைவி சட்டப்பிரகாரமாக விவாகரத்து செய்யப்பட்டவளாக இருக்கலாம் இருந்தபோதிலும், மேலான பிரமாணத்தின்படி—தேவனுடைய பார்வையில் அவள் விவாகரத்து செய்யப்பட்டவளாக இல்லை. தேவனுடைய பார்வையில், திருமண வார்த்தைப்பாட்டிலிருந்து கணவனையும் மனைவியையும் (விவாக) விடுதலை பெற்றவர்கள் என்னும் நிலையில் வைக்கக்கூடியதாக விபச்சாரம் என்னும் ஒரே ஒரு பாவம்மட்டுமே இருக்கிறது. ஒரு நாட்டின் சட்டம் விவாகரத்தை அனுமதித்தாலும், வேதாகம ஒளியில், தேவப் பிரமாணங்களின்படி, அவர்கள் இன்னும் கணவன் மனைவியாகவே உள்ளனர்.

நான் உங்களுடைய கணவனிடத்திலிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றிருக்கிறேன். ஒரு கணவன் தன் மனைவியையும் – ஒரு மனைவி தன் கணவனையும் விட்டுச் சட்டப்படி பிரிவதற்கு ஒரே ஒரு காரணம் மட்டும்தான் இருக்கிறது; அது விபச்சாரம் என்று நான் கூறுவேன். உங்களுடைய சுபாவங்கள் இணக்கமானதாக இல்லாமல் இருந்தால், தேவனுடைய மகிமைக்கென்று இந்த இணக்கமற்ற சுபாவங்களில் மாறுதல் செய்யமாட்டீர்களா?—**AH 344,345.**

E.G. ஒயிட் அவர்களின் பதில் :–A... அவனுடைய மனைவி விவாகரத்து செய்திருந்தாலுங்கூட, உங்களில் இருவரும் திருமண ஒப்பந்தம்செய்துகொள்ளுவதில் வேதாகமத்திலிருந்து கொடுக்கப்பட்டுள்ள தயையின் மிகச் சிறிய பகுதியையும்கூட நான் காண்பதில்லை. நீங்கள் இப்படிப்பட்ட காரியத்தை விநாடி நேரமாவது சிந்திக்கலாமா என்று நான் ஆச்சரியப்படுகிறேன். நீங்கள் திருமணத்தினால் இணைக்கப்படவேண்டும் என்று நினைத்தாலுங்கூட பிரமாணத்தை மீறியிருக்கிறீர்கள். அந்த எண்ணத்தின் முதல் கருத்திலேயே நீங்கள் அதை விலக்கியிருந்திருக்கவேண்டும்.

வேதவாக்கிய அடித்தளம் எதுவும் இல்லாமல், தனது விவாகரத்தை அடைந்துகொண்ட ஒரு மனிதனைத் திருமணஞ்செய்துகொள்ள விரும்பும் ஒரு பெண்ணின் காரியத்தில் இடைப்படுகின்ற **EG White Letter 14,1893.**

A என்பவருடனுள்ள உங்களுடைய மகளின் திருமணம்பற்றிய காரியத்தில்….. இந்தக் காரியத்தில் நீங்கள் ஏன் பாரம் சுமந்துகொண்டிருக்க

வேண்டும் என்பற்கான காரணத்தை என்னால் காணமுடியவில்லை. A அவனுடைய முதல் மனைவியை விலக்கிவைக்கவில்லை. அவள் அவனைவிட்டுத் தூரமாகச் சென்று வேறொரு மனிதனைத் திருமணம் செய்திருக்கிறாள். கர்த்தருக்குள் அவன் மறுபடியும் திருமணம் செய்வதைத் தடைசெய்கின்ற எதையும் நான் வேதவாக்கியத்தில் காண்பதில்லை. அவன் அவளைவிட்டு விலகவில்லை; அவள் அவனைவிட்டுச் சென்றுவிட்டாள். B (அவனுடைய முதல் மனைவி) வேறொரு மனிதனைத் திருமணம் செய்யும்வரை A... மறுபடியும் திருமணம் செய்யவில்லை.

வேதவாக்கியத்தின் அடித்தளத்தில் தனது விவாகரத்தைப் பெற்றுக்கொள்ளாத, விவாகரத்து செய்திருந்த ஒரு மனிதனை சபை அங்கத்தினரின் மகள் திருமணம் செய்துகொண்ட காரியத்துடன் சம்பந்தப்பட்ட திருமதி. ஒயிட் அவர்களின் கடிதம்.—**Lt. 50, 1895.**

## வெளிப்படையானதும் தொடர்ச்சியானதுமான பாவத்தைப்பற்றிய சபையின் மனப்பாங்குபற்றி!

“மற்றவர்கள் கறைப்படாமலிருக்கும்படி சபையில் உள்ள பாவத்துடனும் பாவிகளுடனும் உடனடியாக இடைப்படவேண்டும். ஆகான்களிலிருந்து பாளையத்தைச் சுத்திகரிக்கும்படி, நாம் அதிகமான—முழுமையான வேலையைச் செய்யவேண்டும் என்ற சத்தியமும் தூய்மையும் அவசியப்படுகின்றன.”—**5 T 147.**

“தங்களுடைய தவறுகளின் முழு அளவையும் காண்பதற்கும்—உணருவதற்கும் அவர்கள் விட்டுவிடப்படுவது ஒன்றுமட்டுமே அவர்களுடைய நம்பிக்கையாக இருந்தபோது, அவர்களுடன் ஞானமற்றவிதமாக அவர்களுடைய சகோதரர்கள் இடைப்பட்டுக்கொண்டிருந்ததனால், அநேக ஆத்துமாக்கள் அழிக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன். ஊழியக்காரர்கள் தவறுகளைக் கண்டிக்கவும், கடிந்துகொள்ளவும்வேண்டும்.”—**1T 213,214.**

“அந்தத் தீட்டுப்படுத்தும் பாவங்களை நடைமுறைப்படுத்துபவர்கள் சீராக உலகத்தில் அதிகரித்துவருவதனால், அவர்கள் தாங்களாகவே நமது சபைகளுக்குள் ஆக்கிரமிப்புசெய்வதனால், அவர்களுக்கு நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது என்று நான் உங்களை எச்சரிக்கிறேன். வஞ்சகர்களை விட்டுத்திரும்புங்கள். தன்னைக் கிறிஸ்துவைப் பின்பற்றுபவன் என்று கூறிக்கொண்டிருந்தாலும், அவன் மனிதவடிவிலிருக்கும் சாத்தானாக இருக்கிறான்! அவன் பரலோகத்தின் சீருடையைக் கைமாறுதலாகப் பெற்றிருந்தபோதிலும், அவனுடைய எஜமானனுக்குச் சிறந்தவகையில் சேவைசெய்பவனாக இருக்கிறான்!”—**5T 146.**

“E…ஐ தேவனுடைய சபையால் அதின் உறவுக்குள் வைத்துக் கொள்ளுவது முடியாத காரியம். அவர் சபையுடன் ஐக்கியப்பட்டவராகவும் அல்லது சபையில் உள்ள குரலைக் கேட்பவராகவும் இருக்கமுடியாத இடத்தில் தன்னைத்தானே வைத்திருக்கிறார். அவர் எப்போதாவது முழு இருதயத்துடனும் மனம்வருந்தினால், அவருடைய விஷயம் தனியானதாக இருக்கட்டும். அவர் பரலோகம் சென்றால் அது தனிப்பட்டதாக—சபையின் உறவு இல்லாததாக இருக்கும். சன்மார்க்க நெறியின் தரம் தூசியின்மேல் விழுந்துவிடும்படி தாழ்த்தப்படாதபடிக்கு தேவனிடமிருந்துள்ள கடிந்துகொள்ளுதல் அவருக்கு நேராக என்றும் நிற்கும்.”—**1T 215.**

“இந்த வேலையைப்பற்றிய பாரம் எவர்கள்மீது தங்கியிருக்கிறதோ அவர்கள், தவறு செய்யப்பட்டிருக்கும்போது அமைதியாக இல்லாமலும் தவறான அன்பு என்னும் போர்வையால் தீமையை மறைக்காமலும் இருப்பார்கள். ஒரு சிலரிடம் கடுமையாக இருப்பது அநேகரிடம் இரக்கமாக இருக்கிறது என்பதை மெய்ப்பிக்கும்படி (இடம்கொடாமல்), தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்பதை அவர்கள் நினைப்பார்கள்.”—**PK 675, 677.**

“சுட்டிக்காட்டப்பட்டுள்ள சாட்சியிலிருந்து தேவனுடைய ஊழியக் காரர்கள் பின்வாங்குவார்களானால், அவர்கள் மன்னிக்கப்படுவதில்லை. அவர்கள் பாவத்தை அனுமதிக்காமல் அதைக் கண்டிக்கவும் கடிந்துகொள்ளவும்வேண்டும்.”—**1T 213,214.**

“சபை அவளுடைய அங்கத்தினர்களிடம் உள்ள பாவங்களுக்குப் பெரிய அளவில் பொறுப்புள்ளவளாயிருக்கிறாள். பாவத்துக்கு எதிராகத் தனது குரலை உயர்த்தத் தவறிவிட்டால், அவள் தீமைக்குத் தன் முகத்தைக் காட்டுபவளாக இருக்கிறாள்.”—**PK 651.**

“(சபையாகிய) சரீரத்தின்மீது தேவனுடைய கோபத்தைக் கொண்டுவரும் பாவங்களை விழிப்புடன் தேடுவதற்குச் சபையின் தலைவர்கள் அலட்சியம்செய்தால், இந்தப் பாவங்களுக்கு அவர்கள் பொறுப்பாளிகளாகின்றனர்.”—**3T 269.**

“கிறிஸ்து எந்த ஆத்துமாக்களுக்காக மரித்திருக்கிறாரோ, அந்த ஆத்துமாக்களை நேசிக்கவேண்டியவர்களாக இருக்கும்போது, நாம் தீமையுடன் சமரசம்செய்யக்கூடாதவர்களாக இருக்கின்றோம்.”—**AA 554,555.**

“பொதுவான சம்பிரதாயம் என்னும் பாதையை விட்டுவிலகி, சீர்திருத்தத்திற்குப் பரிந்துரைசெய்யும் அனைவரும் எதிர்க்கப்படுவார்கள். பைத்தியக்காரார்கள் என்றும் புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள் என்றும்

அடிப்படைவாதிகள் என்றும் அவர்கள், அவர்களுக்கு இசைவான பாதையை எப்போதும் தொடரட்டும் என்றும் கூறப்படுவார்கள்."—**2T 377.**

"கிறிஸ்துவின் அடியார்கள் தங்களைப் பாவிகளிடமிருந்து வேறுபடுத்திக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு நன்மைசெய்ய வாய்ப்புக்கிடைக்கும்போது மட்டும் அவர்களுடைய சமுதாயத்தைத் தேர்ந்துகொள்ளவேண்டும்."—**PP 459.**

"பாவத்தின்மீதுள்ள வெறுப்பை நாம் பேணி, பாவியின்மீது இரக்கத்தையும் அன்பையும் பேணவேண்டும்."—**PP 140.**

"தெய்வபக்தியில்லாதவர்களின் தோழமையையும் நட்பையும் தியாகம் செய்து, தீமையை வெறுத்து நல்லதாக எது இருக்கிறதோ அதைக் கிறிஸ்தவன் பற்றிக்கொள்ளவேண்டும் ஆனாலும் பாவியைக் காப்பாற்றுவதற்காக நாம் எந்தத் தியாகத்தையும் செய்ய விருப்பமுடையவர்களாக இருக்கவேண்டும்."—**5T 171.**

"மரியாள் ஒரு பெரிய பாவி என்று பார்க்கப்பட்டிருந்தாள் ஆனால் கிறிஸ்து அவளுடைய வாழ்க்கையை உருவேற்படுத்தியிருந்த சூழ்நிலைகளை அறிந்திருந்தார். அவளுடைய ஆத்துமாவிலிருந்த நம்பிக்கை என்னும் எல்லாப் பொறிகளையும் அவரால் அணைத்திருந்திருக்கமுடியும் ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. நம்பிக்கையற்ற நிலைமையிலிருந்தும், பாழ்க்கடிப்பிலிருந்தும் அவளைத் தூக்கி எடுத்தவர்—அவர்தான். நன்மை செய்வதற்கான திறமைகள் மரியாளில் இருப்பதைக் கிறிஸ்து கண்டார். அவளுடைய சுபாவத்திலிருந்த மிக நல்ல தன்மைகளை அவர் கண்டார். ஒவ்வோர் ஆத்துமாவின் சூழ்நிலைகளையும் இயேசு அறிந்திருக்கிறார்."—**DA 568.**

"திருவிருந்து ஆராதனையில் இருந்த கிறிஸ்துவின் உதாரணம் அந்தக் குழுவின் தனிப்பட்ட உரிமையை தடைசெய்கிறது. வெளிப்படையான பாவம் குற்றமுள்ளவனைத் தவிர்க்கிறது என்பது உண்மையாயிருக்கிறது. இதைப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படையாகப் போதிக்கிறார் (1 கொரி. 5:11); ஆனால், இதற்கும் அப்பால் ஒருவரும் நியாயத்தீர்ப்புச் செய்யக்கூடாதவர்களாக இருக்கின்றனர்."—**DA 656.**

"அவர் நமக்கு நேராகச் செயலாற்றியிருக்கின்ற அதே மன உருக்கம், சாதுவான தன்மை, அதே மென்மையான தன்மை, இரக்கமுள்ள அன்பு, ஆகியவைகளை உடையவர்களாகத் தேவனுடைய ஊழியக்காரர்கள் இருக்க வேண்டும்."—**3T 186,187.**

"நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, அன்பு, உதாரணம், மென்மைமிக்க இருதயம், இரக்கம் ஆகியவை உள்ளவர்களாக இருந்தால், இப்பொழுது ஒரே ஒரு மதமாற்றம்மட்டுமே இருக்கின்ற இடத்தில், சத்தியத்திற்காக நூறு பேர்கள் மாறுவார்கள்."—**9T 189.** ★

# 23

# கிறிஸ்தவனும் அவனது அரசாங்கமும்!

### கிறிஸ்தவனுக்கு அரசாங்கத்திடமுள்ள அவனது கடமை

| | |
|---|---|
| **மத். 22:21** | "அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்." (கிறிஸ்தவன் தன்னுடைய அரசாங்கத்திற்குச் செய்யவேண்டிய கடமைகள் சில உள்ளன). |
| **ரோமர் 13:1–5** | உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப் பட்டிருக்கிறது. இருக்கும் அதிகாரத்திற்கு எதிர்த்து நாம் நிற்கக்கூடாது (வச. **2**). மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும் (வச. **5**). கிறிஸ்தவர்கள் தங்களுடைய அரசாங்க சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நல்ல குடிமக்களாக இருக்கவேண்டும். |
| **ரோமர் 13:6–7** | நாம் எல்லா வரிகளையும் செலுத்தவேண்டும். |
| **1 பேதுரு 2:13–17** | "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும்... கீழ்ப்படியுங்கள். இராஜாவுக்கானாலும் சரி... கீழ்ப்படியுங்கள்." நாம் இராஜாவைக் கனம்பண்ணவேண்டும் (வச. **17**). |
| **1 தீமோ. 2:1,2** | "நாம் இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளவர்களுக் காகவும் ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்." |
| **அப். 23:1–5** | அதிகாரத்திலிருந்த ஒருவனுக்கு எதிராகக் கடினமாகப் பேசினதைப் உணர்ந்தபோது, பவுல் மன்னிப்புக் கேட்டான் —(யாத். **22:28** – ம் பார்க்கவும்). |

### தேவனுடைய சட்டமும், மனிதனுடைய சட்டமும் எதிராகும்போது!

| | |
|---|---|
| **அப். 5:29** | "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியமாயிருக்கிறது." |

**தானி. 3** தூரா என்னும் சமவெளியில் நிறுத்தப்பட்டிருந்த அந்த விக்கிரகத்தை வணங்கிட மறுத்ததில், அந்த விசுவாசமிக்க மூன்று எபிரெயர்களும் அரசனுக்கு எவ்வளவு தூரம் கீழ்ப்படிந்து செல்ல முடிந்ததோ அவ்வளவு தூரத்திற்குச் சென்றனர். அங்கு குனிவதினால், (அந்தச் சிலையை வணங்குவதனால்), தனிப்பட்டவிதத்தில் நேரடியாக தேவப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலிருக்க நேர்ந்தபோதுமட்டும் அவர்கள் மறுத்து விட்டனர். பூமிக்குரிய அரசாங்கங்களுடன் நமது மனப்பாங்கு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல விளக்கமாக உள்ளது. நம்மால் எவ்வளவு தூரத்திற்கு அவர்களை மதிக்கவும், அவர்களுக்குக் கீழ்ப்படியவும் முடியுமோ அந்த அளவிற்குச் செய்யவேண்டும். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது என்று தெளிவாகப் பொருள்படும்போதுமட்டும் நாம் மறுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## கிறிஸ்தவனும் யுத்தமும்!

**யாத். 20:13** கொலை செய்யாதிருப்பாயாக.

**யாக். 2:10,11** விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலைசெய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்.

**குறிப்பு:**– அந்தக் காலத்தில் உலகமெங்கும் இருந்த கிறிஸ்தவர்கள் விபச்சாரம் செய்வது பாவம் என்று அறிந்திருந்தனர்; ஆனால், சிலர் யுத்த காலத்தின்போது தங்களுடைய நாட்டுக்காகக் கொலைசெய்வது சரிதான் என்று எண்ணியிருந்தனர். இந்தப் புதிய ஏற்பாட்டுக் காலத்தில், ஒரு கிறிஸ்தவன் விபச்சாரம் செய்வதைப்போலவே, கொலைசெய்வதும் தவறாக இருக்கிறது என்று இந்த வசனம் கூறுகிறது.

**யோவான் 18:36** என் இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்கு உரியதல்ல. இவ்வுலகத்திற்குரியதானால், என் ஊழியக்காரர்கள் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல.

**குறிப்பு:**– பூமிக்குரிய யுத்தங்களில் கிறிஸ்தவர்கள் போர் செய்வதில்லை என்பதற்கான தெளிவான புதிய ஏற்பாட்டு அறிக்கையாக இது இருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவ அரசாட்சி இருந்ததுபோல, தேவனுடைய இராஜ்ஜியம் இன்று **இந்த உலகத்திற்குரியது இல்லை.**

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் ஜனங்களை யுத்தத்தில் நடத்தி, அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்தார். இந்த யுத்தங்கள்

தேவனுடைய யுத்தங்களாக இருந்தன—(2 நாளா.். 20:15). இஸ்ரவேலரின் இந்தக் கரங்களினால், இந்தத் துன்மார்க்கமான ஜாதிகளைத் தோல்வியடையச் செய்ததனால், சுற்றிலுமிருந்த அஞ்ஞான ஜாதிகளின் கண்களுக்கு முன்னால் தேவனால் இஸ்ரவேலை உயர்த்த முடிந்திருந்து, அவருடைய ஜனங்களுடன் உண்மையான தேவன் இருக்கிறார் என்பதைக் காட்ட முடிந்திருந்தது. இஸ்ரவேலர்கள் எந்த ஜாதிகளுக்கு எதிராக யுத்தம்செய்திருந்தார்களோ, அவர்கள் பயங்கரமான துன்மார்க்கர்களாக இருந்தனர். வரலாறும் வேதாகமமும் அதைப் போலவே காட்டுகிறது. **அவர்களுக்கான தவணையின் காலம் முடிந்திருந்தது.** அவர்களைத் தண்டிக்கவும், முற்றிலுமாக அழிக்கவும் தேவன் அவருடைய சொந்த ஜனங்களான இஸ்ரவேலரைப் பயன்படுத்தினார்.

இன்று, புதிய ஏற்பாட்டுக் காலத்தில், தேவனுக்குத் தனி ஜாதி எதுவுமில்லை. தேவனுடைய அனுமதி இல்லாமல் யுத்தம் செய்வதும் அவருடைய பிரமாணத்தை மீறுவதாக இருக்கும். பண்டைய இஸ்ரவேல் தேவனுடைய அனுமதியையும் தெளிவான கட்டளையையும் உடையதாக இருந்தது; ஆனால், இந்தக் காரியத்தில் இன்றுள்ள புதிய ஏற்பாட்டுச் சபை தேவனுடைய அனுமதி இல்லாததாக இருக்கிறது. இந்தக் காலத்திற்காக ஆரம்பக்கால கிறிஸ்தவ சபை, இந்த உலக யுத்தங்களில் சேருவதற்கு மறுத்துவிட்டது. ஆரம்பக்கால கிறிஸ்தவர்கள் யுத்தம் செய்யவில்லை என்பதை வரலாறு காட்டுகிறது. கி. பி. 295–ம் ஆண்டில் மாக்ஸிமிலியன் என்ற இருபது வயதான வாலிபக் கிறிஸ்தவன் இராணுவத்தில் சேர மறுத்துவிட்டதனால், ரோம் நாட்டு நியாயாதிபதியால் மரணதண்டனை விதிக்கப்பட்டான். அவன் அந்த ரோம் நாட்டு ஆளுநரிடம்: **“என்னால் ஒரு போர் வீரனாகச் சேவை செய்யமுடியாது; என்னால் தீமை செய்யமுடியாது; நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறேன்”** என்று கூறினான்.

கி.பி. 70–ம் வருடத்தில் டைட்டசின் ரோம் நாட்டு சேனைக்கெதிராக எருசலேமைக் காக்கின்ற தற்காப்புப் போரில் கிறிஸ்தவர்கள் பங்கேற்கவில்லை; மாறாக, ஓடிப்போகும்படி இவர்கள் கிறிஸ்துவால் எச்சரிக்கப்பட்டிருந்தனர் (மத். 24:15–20; மாற்கு 13:14–18; லூக்கா 21:20,21). பின்பு, ரோமர்களுக்கெதிராக சண்டையிட்டிருந்த–பெரும் யூதத் தலைவனான பர்கோஹிபா, யுத்தத்தில் பங்கேற்க மறுத்ததினால் கிறிஸ்தவர்களைக் கொலைசெய்தான். கிறிஸ்தவர்கள் தங்களுடைய கைகளை மற்றவர்களின் இரத்தத்தினால் கறைப்படுத்துவதைவிட, மரிப்பது மேலானது என்று எண்ணியதாக அர்னோபியல் என்னும் ஆரம்பக்கால கிறிஸ்தவ எழுத்தாளன் நினைத்தான். (ஆதாரம் –இன்றைய கிறிஸ்தவம், நவ. 24,1972. பக். 8). பேதுருவை ஆயுதமற்றவனாக்கினதினால் (மத்.

26:52) கிறிஸ்து ஒவ்வொரு சேனை வீரனையும் ஆயுதமற்றவனாக்கினார் என்று தெர்த்துல்லியன் என்னும் ஆரம்ப கால சபைப் பிதா கூறினார்.

இந்தக் கால கட்டத்தில் (கான்ஸ்டன்டைன் காலம்வரையிலான ஆரம்பக்கால கிறிஸ்தவ சபையில்) கிறிஸ்தவன் யுத்தத்தில் பங்குபெற்றான் என்று நமது அறிவில்பட்ட எந்தக் கிறிஸ்தவ ஆசிரியனும் குறிப்பிட்டிருக்கவில்லை. —**ஆதாரம் முனைவர் பெயின்டன், பேராசிரியர், சபை வரலாற்றுத் துறை, யேல் பல்கலைக் கழகம். போர், சமாதானம் ஆகியவைகளுக்கு எதிரான கிறிஸ்தவ மனப்பாங்கு என்னும் அவரது நூலில்.**

கிறிஸ்தவர்கள் பேரரசனுக்குப் பலி செலுத்தாததினாலும் இராணுவங்களில் சேவை செய்யாததினாலும், மற்றக் காரணங்களுக்காகவும் அடிக்கடி உபத்திரவத்தை அனுபவித்தனர்.—**ஆதாரம் “உலக வரலாற்றின் சிறப்புக் காட்சி” ஆசிரியர் ஐ.பு. இக்கின். (வெளியிட்டோர் தாமஸ் நெல்சன் ரு சன்ஸ்).**

அப்படியிருந்தபோதிலும், காண்ஸ்டன்டைனின் காலத்திலிருந்து உண்டான கிறிஸ்தவ சபையின் மருள விழுகைக்குப்பின், கிறிஸ்தவ சபை ஆயுதங்களை எடுத்துக்கொள்ளவும், அதன் நபர்களை அப்படியே செய்யவும் அனுமதிக்கத் தொடங்கியது.

**மத். 26:52** உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு. (இயேசு பேதுருவிடம் கூறுகிறார்).

**குறிப்பு:** சட்டத்திற்கு விரோதமானவிதத்தில் இரவு வேளையில் தன்னுடைய ஆண்டவரை பிடித்துச்செல்லுவதற்கு எதிராகப் பேதுரு அவரைப் பாதுகாக்க முயன்றுகொண்டிருந்தபோதிலும், அப்போதிருந்ததுபோல, அவன் ஒரு நீதியான காரியத்திற்காகச் சண்டையிட்டுக்கொண்டிருந்தபோதுங்கூட, இயேசு இன்னும் அதை அனுமதிக்காதவராக இருந்தார். "பட்டயத்தை அதின் உறையிலே போடு" என்று இயேசு பேதுருவிடம் கூறினபோது, அவர் நிச்சயமாகவே கிறிஸ்தவ சபை முழுவதுடனும் பேசிக்கொண்டிருந்தார். பட்டயத்தை எடுப்பவர்கள் கர்த்தருடைய வருகையின்போது, கர்த்தருடைய பட்டயத்தால் அழிவார்கள்—(வெளி. 19:15).

**மத். 5:38,39** தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். ஒரு காரியம் தீமையானதாக இருந்தபோதிலும், அதைச் சரிசெய்வதற்காக ஆயுதங்களை எடுத்துக்கொள்ளுவதற்குக் கிறிஸ்தவனுக்கு இயேசு அனுமதி வழங்கவில்லை. இயேசு வரும்போது, அவர்தாமே எல்லாவற்றையும் சரிசெய்வார்.

**குறிப்பு:**—கிறிஸ்து வெளிநாட்டு அரசாங்கமாக இருந்த அஞ்ஞான ரோம நாட்டு அரசாங்கத்தின்கீழ் வாழ்ந்திருந்தார். அது கொடுமையுள்ளதாகவும், ஒடுக்குவதாகவும், அநீதியானதாகவும் இருந்தது; இருந்தபோதிலும், கிறிஸ்து ஒருபோதும் பட்டயத்தை எடுத்துக்கொள்ளவில்லை; அல்லது அந்த அஞ்ஞான வல்லமைக்கு எதிராக மற்றவர்கள் சண்டையிடவேண்டுமென்று தூண்டவும் இல்லை. அவர் வெளிப்படையாக அதைத் தடுத்தார். அதற்குப் பதிலாக, சமாதானத்தை உண்டுபண்ணுபவராகவும், ஒப்புரவாக்குபவராகவும், நிறம், ஜாதி, மொழி அல்லது சம்பிரதாயங்களைக் கணக்கிடாத எல்லா மனிதர்களுக்கும் பிதாவாக—எந்த ஒருவரின் இராஜ்ஜியம் மேலே—பரலோகத்தில் இருக்கிறதோ—அவருடைய பிரதிநிதியாக வந்தார்.

| | |
|---|---|
| **ரோமர் 12:19** | பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன். நீங்கள் பழிவாங்காமலிருங்கள் என்று கர்த்தர் கூறுகிறார். |
| **2 கொரி. 10:4** | எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாய் இல்லை. |
| **எபே. 6:12** | ஏனெனில், நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் போராடவில்லை. |
| **வெளி. 16:13–16** | அர்மெகதோனின் கடைசிப் பெரும் யுத்தத்திற்காக அசுத்த ஆவிகள் உலகத்தை ஆயத்தம்செய்துகொண்டிருக்கின்றன. |

**கிறிஸ்தவனின் உண்மையான வீடு!**

| | |
|---|---|
| **எபி. 11:10** | ஏனெனில், தேவன்தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்காக அவன் (ஆபிரகாம்) காத்திருந்தான். |
| **எபி. 11:13,14,16** | கிறிஸ்தவர்கள் பூமியின்மேல் அந்நியரும் பரதேசிகளுமாய் இருக்கிறார்கள். மேன்மையான பரதேசத்தையே விரும்பினார்கள். |
| **எபி. 13:14** | நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். |

ஒரு கிறிஸ்தவனால் தானாகவே உலகப்பிரகாரமான இராணுவங்களில் சேரமுடியாது என்பதை இந்தப் பாடம் காட்டுகிறது. அவன் சண்டையிலிருந்தும் வெறுப்பிலிருந்தும் அவனால் முடிந்தவரை தூரமாக விலகியிருக்கவேண்டும். அப்படியிருந்தாலும், இராணுவத்தில் சேரவேண்டும் என்பது போன்றவைகளால் அரசாங்கச் சட்டம் அவனுக்குக் கட்டளையிட்டால், அந்தத் தேசத்தின் கீழ்ப்படிதலுள்ள ஒரு பிரஜையாக, தூராவின் சமவெளிக்குச் செல்லும்படி கட்டளையிடப்பட்டபோது அந்த மூன்று எபிரெயர்களும் செய்ததுபோல

அவனும் செய்ய வேண்டும்; அப்படியிருந்தபோதிலும், ஆயுதங்களை எடுக்காமலிருக்கின்ற காரியத்தில், தன்னுடைய மனசாட்சியைப் பின்பற்றவும், ஓய்வுநாளை ஆசரிக்கவும், தன்னுடைய தேவனுக்குக் கீழ்ப்படியவும் அரசாங்க அதிகாரிகள் அனுமதிப்பார்களானால்மட்டும் செல்லவேண்டும். (இராணுவத்தில்) மருத்துவசேவை செய்வதற்கும் அதுபோன்ற வேறு பணிகளைச் செய்வதற்கும் ஒரு கிறிஸ்தவன் அவனுடைய தேசத்திற்கும் அரசாங்கத்திற்கும் கீழ்ப்படிந்து, அதே சமயத்தில், தேவனுடைய அவசியங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும்.

யுத்தம் எந்த வடிவத்திலிருந்தாலும் யுத்தத்தில் ஆயுதங்களை எடுக்கவேண்டாம் என்று சபை அதன் அங்கத்தினர்களை கேட்டுக்கொள்ளும் போது, யுத்தத்திற்கு எதிராக சட்டமியற்ற முடிவுசெய்யும்போது, சபை ஒரு சரியான நிற்றலை எடுத்துக்கொள்ளுகிறது என்று நான் நினைக்கிறேன். **—ஆதாரம் "எனது துயரத்தின் மகன் என்னும் சொற்பொழிவு" ஆசிரியர், ரெஜினால்ட் ஷயர்ஸ் S.D.A. ஜெனரல் கான்பரன்ஸின் ஊழிய இலாக்காவிலிருந்துள்ள ஒலிநாடா. மே, 1976.**

**மறுப்புகள்:—**

நமது மனைவிகளையோ மகள்களையோ தாக்குவதற்கு ஒரு எதிரி வந்தால், நாம் அவர்களைப் பாதுகாக்கக்கூடாதா?

**பதில்:—** இது ஒரு மாறுபட்ட கேள்வி. அப்படிப்பட்ட ஒரு நிலைமை எழுந்தால், எதிர்காலத்தில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை இப்பொழுது அறிந்துகொள்ளுவது என்பது கஷ்டமான ஒன்று என்றுமட்டுமே நம்மால் கூறமுடியும்; அப்படிப்பட்ட ஒரு அவசர நேரத்தில், நமக்கு ஒரு சரியான பதில் கொடுக்கப்படவேண்டியவிதமாகக் கிறிஸ்தவர்களான நாம் தேவனுடன் நெருக்கமாக வாழவேண்டும். நமது குடும்பத்தினரைப் பாதுகாப்பதற்காக எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கையானாலும், அது நாம் ஆக்கிரமிப்புச் செய்கிறவனைக் கொலைசெய்யத் திட்டமிடுகிறோம் என்னும் அர்த்தமாகாது. அவன் ஓர் அயல்நாட்டு எதிரியாக இருந்தாலும் அல்லது நமது சொந்த நாட்டுக்காரனாக இருந்தாலும், நாம் அவனை வெறுக்காமலும் அல்லது கவனம் செலுத்தாமலும் இருக்கிறோம். நாம் நமது எதிரியைக் கொலைசெய்வதற்குத் **திட்ட**மிடவும் எதிரியை வெறுக்கும்படியாகவும் கற்பிக்கப்பட்டிருந்த யுத்தத்திலிருந்து இது முற்றிலும் மாறுபட்ட நிலைமையாக இருக்கின்றது.

"உலகத்தால் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாதவிதத்தில் ஒரு கிறிஸ்தவனால் தேவனுடைய சிறப்பான பாதுகாப்பின்மீது உரிமைபாராட்ட

முடியும் என்பது ஒருபோதும் மறக்கப்படக்கூடாததாக உள்ளது. "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி, அவர்களை விடுவிக்கிறார்" என்று சங். 34:7 கூறுகிறது. "உங்கள் திராணிக்குமேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு தேவன் இடம்கொடுக்கமாட்டார்" என்று 1 கொரி. 10:13 வாக்குத்தத்தம் செய்கிறது.

"மானிட அரசாங்கத்தைத் தெயவீக நியமனச் சட்டம் என்று நாம் இனங்கண்டு, அதற்குக் கீழ்ப்படிவது ஒரு பரிசுத்தமான கடமை என்று போதிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், அதன் உரிமைகள் தேவனுடைய உரிமைகளுடன் போர் செய்யும்போது, நாம் மனிதர்களுக்கு கீழ்ப்படிவதைவிட தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டும். **மனித சட்டங்கள் அனைத்திற்கும் மேலாக, தேவனுடைய வார்த்தை அனுமதிக்கப்படவேண்டும். பூமிக்குரிய அதிகாரங்களின் மகுடங்களைவிட கிறிஸ்துவின் கிரீடம் மேலாக உயர்த்தப்படவேண்டும்."—GW 389.**

"யுத்தத்தின்மீது அதிகமான ஆர்வம் இல்லாதவர்களாகவும், அதற்குத் தாங்களே தொண்டர்களாக விருப்பமில்லாதவர்களாகவும் தங்களை வெளிக்காட்டினதால், ஓய்வுநாளை ஆசரிப்பவர்கள்மீது உலகிலுள்ள அநேகரின் கவனம் திரும்பியது. சில இடங்களில் அவர்கள் கலகக்காரர்களுக்கு அனுதாபம் காட்டிக்கொண்டிருக்கின்றனர் என்றும் பார்க்கப் பட்டனர் (பக். 356). யுத்தம் தேவனுடைய ஜனங்களின் எல்லாக் கொள்கைகளுக்கும் எதிரானதாக இருப்பதினால், தேவனுடைய சிறப்பான பொக்கிஷ மாக இருக்கும் அவர்களால் குழப்பத்தை உண்டுபண்ணும் யுத்தத்தில் ஈடுபடமுடியாது என்பது எனக்குக் காட்டப்பட்டது. சேனையில் அவர்களால் சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும் அதே நேரத்தில், தங்களுடைய அதிகாரிகளின் அவசியங்களுக்குக் கீழ்ப்படியவும் முடியாது. மனசாட்சியின் ஒரு மீறுதல் தொடர்ச்சியாக இருந்துகொண்டே இருக்கும். உலகப் பிரகாரமான மக்கள், உலகப் பிரகாரமான கொள்கைகளினால் ஆளுகைசெய்யப்படுகின்றனர்; அவர்களால் வேறு எதையும் பாராட்டமுடியாது (பக். 361). நாம் தேவனுக்கா அல்லது மனிதனுக்கா யாருக்குக் கீழ்ப்படியலாம்?."—**1T 356,361,362.**

**குறிப்பு:**– சாட்சியாகமம் முதலாம் பாகத்திலிருந்து எடுக்கப்பட்ட மேலே உள்ள சாராம்சங்கள், 1861 முதல் 1865 வரை அமெரிக்காவில் நடந்த பயங்கரமான உள்நாட்டுப் போரைக் குறிக்கின்றன. இந்த யுத்தம் அந்த நாட்டில் அடிமைமுறை இருந்த தென் மாநிலங்களில், அடிமைகளை விடுதலை செய்வதற்காக நடந்த—கலகத்தை அடக்குவதற்காகச் செய்யப்பட்டிருந்தது. இந்த யுத்தம் ஓர் நீதியான காரணத்தை உடையதாக இருக்கிறதென்று எலன் ஒயிட்டின் கணவர் ஜேம்ஸ் ஒயிட்டினாலும்

மற்றுமுள்ள அட்வெண்டிஸ்டுகளாலும் நம்பப்பட்டது.—**1T 716.**

"அப்படியிருந்தபோதிலும், இந்தப் போரிலுங்கூட செவன்த்—டே அட்வெண்டிஸ்டுகள் தொண்டர்களாக இருக்கவில்லை அல்லது குழப்பமிக்க இந்த யுத்தத்தில் ஈடுபடவும் இல்லை. அப்படிச் செய்வது அவர்களுடைய விசுவாசத்தின் கொள்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரானதாக இருக்கும் என்று திருமதி. ஒயிட் கூறுகிறார்கள். அடிமைத்தனத்தை திருமதி. ஒயிட் வெறுத்திருந்தாலும், அவர்களால் இந்த யுத்தத்தை ஆதரிக்கமுடியவில்லை. உலகப்பிரகாரமான யுத்தத்தில் தேவனுடைய ஜனங்களால் ஈடுபட முடியாது என்பதற்கான தெளிவான வழிகாட்டுதலாக இது இருக்கிறது.—**1T 358.**

பின்னர் செவன்த்—டே அட்வெண்டிஸ்டுகள் சட்டத்தின்மூலமாக இராணுவத்தில் சேர வற்புறுத்தப்பட்டபோது, அழிவில் ஈடுபடாத அவர்களுடைய மதக் கொள்கைகள் அங்கீகரிக்கப்பட்டு, அரசாங்கம் அவர்களுக்குச் சலுகை செய்தபின், இராணுவ மருத்துவமனைகளில் பணிபுரியவும் அல்லது அழிவை உண்டுபண்ணாத சேவைசெய்யவும் பிரவேசித்தனர்."—**1T 717.**

இராணுவப் பயிற்சிக்கு சுவிட்சர்லாந்துக்கு அழைக்கப்பட்ட மூன்று வாலிபர்கள், (இவர் தாங்கள் விரும்பிச் செல்லாமல், அவர்களுடைய தேசத்தின் சட்டம் இதைக் கோரியதால் சென்றார்கள்) கிறிஸ்துவின் சிலுவைக்கு உண்மையான சேனை வீரர்களாகக் காணும்படிக்கு, அவர்களுக்குத் தைரியத்தை உண்டுபண்ணக்கூடிய வார்த்தையை நாங்கள் கொடுத்தோம். தேவனுடைய தூதர்கள் அவர்களுடன் செல்லவும், ஒவ்வொரு சோதனையிலும் அவர்களைக் காவல்செய்யவும் வேண்டும் என்ற எங்களுடைய ஜெபம் இந்த வாலிபர்களைத் தொடரும்."—**2SM 335.**

**குறிப்பு**:– தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய தெரிந்துகொள்ளுதலினால் இராணுவத்தில் சேரக்கூடாதவர்களாக இருக்கின்றனர் என்பதையும், ஆனால் சட்டத்தினால் கட்டாயப்படுத்தப்படும்போதுமட்டும் சேரலாம் என்பதையும் இந்த எழுத்துக்களின் சுருக்கம் அடையாளப்படுத்துவதுபோல் காணப்படுகிறது. அப்படியிருந்தபோதும், தேவனுடைய கற்பனைகளை மீறாமலிருந்து, கிறிஸ்துவின் சிலுவைக்கு உண்மையான சேனை வீரர்களாகக் காணப்படவும், ஒவ்வொரு சோதனையிலிருந்தும் தேவனுடைய தூதர்கள் அவர்களைக் காவல்செய்யவும் வேண்டுமென்று நாம் ஜெபம்செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

"இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தத்தினால் தேசத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது அவருடைய நோக்கமாக இராமல், அவருடைய

கட்டளைகளுக்குக் கண்டிப்பாகக் கீழ்ப்படிவதனால் அதை அடைந்துகொள்ள வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாக இருந்தது."—**PP 392.**

"இவ்வாறாகப் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும்கூட **தேவனுடைய வெளிப்படையான கட்டளையில்லாமல்** இஸ்ரவேலர்கள் யுத்தஞ்செய்யக் கூடாதவர்களாக இருந்தனர். எண். 14:40–45–லுள்ள குறிப்பு, **தேவன் கூறாதபோது** தேசத்தைப் பிடிக்கச் சென்று, கசப்பான விதத்தில் தோல்வியடைந்த இஸ்ரவேலரைக் குறிப்பிடுகிறது"

"சாத்தான் யுத்தத்தில் பிரியப்படுகிறான். ஏனெனில் அது ஆத்துமாவின் மிகவும் மோசமான வெறிகளைத் தூண்டிவிட்டு, அதன்பின் அதன் இரைகளை நித்தியமாக தீயப் பழக்கத்திற்குள்ளும், இரத்தத்திலும் அடித்துச்செல்லுகிறது. நாடுகளை ஒன்றுக்கொன்று யுத்தம்செய்யத் தூண்டிவிடுவது அவனுடைய நோக்கமாக இருக்கிறது; இவ்விதமாக, கர்த்தருடைய நாளில் நிற்பதற்கென்று ஆயத்தம்செய்யவேண்டிய வேலையிலிருந்து சாத்தானால் மக்களின் மனங்களைச் திசைதிருப்பமுடியும்."—**GC 589.**

"எந்த மொழியாலும் விவரிக்க முடியாதவிதத்தில் சாத்தானின் ஏதுகரங்கள்–முகவர்கள்—பூமியைப் பயங்கரங்களின் ஒரு மேடையாகச் செய்திருக்கின்றனர். தங்களைக் கிறிஸ்தவர்களின் நாடுகள் (ஜாதிகள்) என்று சொல்லிக்கொள்ளுபவைகளால் யுத்தமும் இரத்தஞ்சிந்துதலும் நடத்தப்படுகின்றன. தேவனுடைய பிரமாணத்தைக் கருதாமலிருக்கும் ஒரு தன்மை அதன் நிச்சயமான பலனைக் கொண்டுவந்திருக்கிறது."— **RH February 6, 1900. 7SDABC 974.**

"கொலைகளையும் கொலைசெய்யப்பட்ட உடல்கள் பூமியின்மேல் கிடப்பதையும் பார்ப்பது, சாத்தானின் மகத்துவத்திற்குப் பொருத்தமாயிருக்கிறது. பரிதாபத்திற்குரிய இராணுவ வீரர்கள் புல்லைப்போல அறுக்கப்படுவதைக் காண அவன் விருப்பமுள்ளவனாக இருக்கிறான்." ★

# 24

# கிறிஸ்தவனும் இன உணர்வுகளும்!

**யோவான் 17:11** "அவர்கள் நம்மைப்போல ஒன்றாகியிருக்கும்படிக்கு ... (21–23) வேண்டிக்கொள்ளுகிறேன்."

**அப். 10:28** "எந்த மனிதனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு... **(Living Bible)** – நான் ஒருவனையும் ஒருபோதும் கீழானவன் என்று நினைக்காதபடி..."

**குறிப்பு:–** இந்தச் சத்தியத்தைப் போதிப்பதற்குத் தேவன் ஒரு தரிசனத்தைப் பேதுருவிற்குக் கொடுத்திருந்தார் (9–17 வசனங்கள் பார்க்கவும்). இந்தத் தரிசனம் இன வேற்றுமைகளை தேவன் சபைக்குள் அனுமதிப்பதில்லை என்பதைக் காட்டுகிறது.

**அப். 10:34** "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல."

**கலா. 3:28,29** "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவிற்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்."

**அப். 17:26** "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி ..."

**மல். 2:10** "நம் எல்லோருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ?"

**யோபு 31:15** "தாயின் கர்ப்பத்தில் என்னை உண்டுபண்ணினவர் அவனையும் (யோபின் வேலைக்காரனையும்) உண்டு பண்ணினார் அல்லவோ? ஒரேவிதமான கர்ப்பத்தில் எங்களை உருவாக்கினவரல்லவோ?"

**லேவி. 19:17** "உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக."

| | |
|---|---|
| **லேவி. 19:33,34** | "யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால், அவனைச் சிறுமைப்படுத்தவேண்டாம். நீங்கள் உங்களிடத்தில் அன்பு கூருவதுபோல, அவனிடத்திலும் அன்புகூருவீர்களாக. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்." (வச. 17–ம், யாத். 22:21; 23:9–ம் வாசிக்கவும்). |
| **லேவி. 19:9,10** | "எளியவனும், பரதேசியும் கவனிக்கப்படவேண்டும். |
| **யாக். 2:9** | பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவம் செய்கிறவர் களாய் இருப்பீர்கள்" (பட்சபாதம் காட்டுபவர்கள்–RSV.). |
| **லூக்கா 10:25–37** | நமது உடன் மனிதர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும், நாம் அவர்களுக்கு உதவிடவேண்டும் என்று ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார் என்பதை நல்ல சமாரியனின் உவமையிலிருந்து அறிகிறோம். |
| **ஏசாயா 65:5** | "நீ உன் மட்டிலிரு, என் சமீபத்தில் வராதே, உன்னைப் பார்க்கிலும் நான் பரிசுத்தன் என்று சொல்லுகிறார்கள்; இவர்கள் என் கோபத்தாலாகிய புகையாயிருக்கிறார்கள்." (நமது உடன் மனிதர்களுடன் நாம் கொண்டிருக்கும் இப்படிப்பட்ட மனோபாவத்தைத் தேவனால் சகித்துக் கொள்ளமுடியாது). |
| **யோவான் 13:35** | "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால்,... அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்." |
| **கலா. 2:11–14** | பேதுரு ஜாதி வித்தியாசத்தைக் காட்டினதற்காகப் பவுல் அவனைக் கடிந்துகொள்ளுகிறான். (எருசேலேமிருந்து அப்பொழுது தான் கலாத்தியாவுக்கு வந்திருக்கும் உடன் யூதர்கள், பேதுரு கலாத்தியப் புறஜாதியார்களுடன் சேர்ந்து போஜனம்செய்வதைக் கண்டால் என்ன நினைப்பார்கள் என்று பயந்து, பேதுரு கலாத்தியர்களுடன் சேர்ந்து உணவருந்துவதை நிறுத்திவிட்டான்). |
| **எண். 12:1–15** | மோசே ஒரு எத்தியோப்பிய ஸ்திரீயை (அல்லது அதிகமான மொழி பெயர்ப்புகள் கூறுவதுபோல, ஒரு கூஷிய ஸ்திரீயை) விவாகம் செய்துகொண்டதற்காக மிரியாம் விமரிசனம்செய்தபோது, அவள் குஷ்ட நோயினால் தாக்கப் பட்டு, ஏழு நாட்கள் பாளயத்திற்கு வெளியில் இருந்தாள். |

இது ஏறக்குறைய கூஷிய தேசத்தின் ஒரு பகுதியாக இருந்த மீதியான் தேசத்திலிருந்து வந்த மோசேயின் மனைவியான சிப்போராளைப்பற்றிய ஒரு குறிப்பாக இருக்கலாம். ஒரு கூஷிய ஸ்திரீயை—யூதர்களைவிடத் தோற்றத்தில் கருப்பானவளாக இருந்தவளை மோசே திருமணம்செய்துகொண்டதற்காகச் செய்யப்பட்ட மிரியாமின் விமரிசனத்திற்காக, அவள் உடனே தேவனால் தண்டிக்கப்பட்டாள்.

**ரோமர் 12:2** "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (தேவனால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட ஜனங்களுக்கான தேவனுடைய யோசனையிலிருந்து விலகிச் செல்லும் மற்ற எல்லா அமைப்புக்களுடனும், உலகத்தின் இன வேற்றுமைகளான தவறான எண்ணங்களாலும் கிறிஸ்தவன் சூழப்பப்படும்போது, இதுவே கிறிஸ்தவனின் இலட்சியமாக இருக்கவேண்டும்).

**மத். 7:12** "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம்." (நமது உடன் மனிதர்களுடனுள்ள நமது உறவு வழிநடத்தப்படுவதற்கான பொன்னான சட்டம் இது).

"யூதர்களும் புறஜாதியினரும் கருப்பர்களும் வெள்ளையர்களும் சுதந்திரமானவனும் அடிமையானவனும் பொதுச் சகோதரத்துவத்தில் ஒன்று சேர்த்து——இணைக்கப்பட்டு, தேவனுடைய பார்வையில் சமமானவர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு மதத்திற்குக் கிறிஸ்து அஸ்திபாரமிட்டார்."—**7T 225.**

"வேதாகமத்தின் மதம் ஜாதியையும் நிறத்தையும் அங்கீகரிப்பதில்லை. தேவன் மனிதர்களை மனிதர்களாகவே இனம் காண்கிறார்."—**9T 223.**

"மனித மனங்களின்மீது பரிசுத்த ஆவியானவர் அசைவாடும்போது, மனிதனுக்கும் அவனுடைய உடன் மனிதனுக்கும் இடையிலுள்ள அற்பமான குறைகூறுதல்களும் குற்றச்சாட்டுகளும் தூரமாக விலக்கப்படும். மனிதம், இருதயம் ஆகியவைகளின் அறைகளுக்குள் நீதியின் சூரியனின் ஒளிமிக்க கதிர்கள் பிரகாசிக்கும். பணக்காரர்களுக்கும், வெள்ளையர்களுக்கும், கருப்பர்களுக்கும் இடையில் பிரிவினைகள் எதுவும் இருக்காது. தவறான எண்ணங்களனைத்தும் உருகி நீங்கியிருக்கும். நாம் தேவனைச் சமீபிக்கும் போது, அது ஒரே சகோதரத்துவம்போல் இருக்கும்."—**RH Oct. 24, 1899.**

“பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டிருக்கும்போது, தவறான எண்ணத்திற்கு எதிரான ஒரு மானிட வெற்றி இருக்கும். நிறவேற்றுமை இப்பொழுது அநேகரால் கருதப்படுவதைப்போலல்லாது வேறுவிதமாகக் கருதப்படும். கிறிஸ்து அன்பு செலுத்துகின்றதுபோன்ற அப்படிப்பட்ட அன்பு, மனதை ஒரு தூய்மையான—பரலோகத்திற்குரிய—சுயநலமற்ற வெளிக்கு உயர்த்துகிறது. கிறிஸ்துவுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கும் ஒருவன் நிறம், ஜாதி ஆகிய தவறான எண்ணங்களுக்கும்மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறான்.” —**9T 209.**

“இனம் பற்றிய தவறான எண்ணங்கள் அனைத்தும், நாடுபற்றிய வேற்றுமைகளும் கிறிஸ்துவில் ஒரு பக்கமாக வைக்கப்பட்டு, நாம் அனைவரும் சகோதரர்களாக இருக்கிறோம்.”—**FE 203.**

“நாடு, இனம், ஜாதி ஆகியவைகளின் காரணமாக உள்ள வேறுபாடுகள் எதுவும் தேவனால் அங்கீகரிக்கப்படாமலிருக்கிறது. பிரிவினையின் சுவர்கள் ஒவ்வொன்றையும் தகர்ப்பதற்காகவே கிறிஸ்து வந்தார்.”—**COL 386.**

“ஜாதி என்பது தேவனுக்கு வெறுப்பானது. இப்படிப்பட்ட தன்மையுடைய ஒவ்வொன்றையும் அவர் பொருட்படுத்துபவராக இருக்கிறார். அவருடைய பார்வையில் சகல மனிதர்களது ஆத்துமாக்களும் சமமான மதிப்பை உடையவைகளாக இருக்கின்றன.”—**DA 403.**

“அவர்கள் சார்பாகச் செய்யப்படும் கிறிஸ்துவின் ஊழியத்தை வரவேற்கும் இந்த வெள்ளையர்களால் அவர்களுடைய நிறமுள்ள சகோதரர்களுக்கெதிரான தவறான எண்ணங்களைப் பேணமுடியாது.”—**7 MS 1896.**

“தேசீய வேற்றுமைகளை உண்டுபண்ணுகின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைக் கிறிஸ்து உடைத்தெறிந்து, மனிதக் குடும்பம் அனைத்துடனும் அன்பாயிருக்கும்படியும், தேவைமிக்க ஒவ்வோர் ஆத்துமாவையும் நமது சகோதரன் என்று பார்க்கும்படியும் அவர் நமக்குப் போதிக்கிறார்.” —**DA 823.**

(அப். 11:1–8–ல் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, பேதுரு எருசலேமில் அவர்களிடம் பேசினபோது), அந்தச் சகோதரர்கள் அவர்களுடைய தவறான எண்ணங்களும் தனித் தன்மையும் சுவிசேஷத்தின் ஆவிக்கு முற்றிலுமாக எதிரானவைகள் என்னும் மனத் திருப்தியை அடைந்தனர். தவறான எண்ணம் உடைத்து வீழ்த்தப்பட்டது. யுகங்களுக்கு ஊடாக இருந்த சம்பிரதாயத்தினால் நிறுவப்பட்டிருந்த தனித் தன்மை கைவிடப்பட்டது.—**AA 142.**

“வெள்ளையர்களுக்கும் கருப்பர்களுக்கும் நடுவில் பிரிவினையாகிய நடுச்சுவர் கட்டப்பட்டிருக்கிறது. தங்களை உண்டுபண்ணினவரிடம் மேலான அன்பையும் அயலகத்தாரின்மீது பட்சபாதமில்லாத அன்பையும் தங்கள்மீது இருக்கும் அரச கட்டளையெனச் செலுத்தும்—தேவனுடைய வார்த்தைக்கு கிறிஸ்தவர்கள் கீழ்ப்படியும்போது, எரிகோவின் மதில்கள் விழுந்ததுபோல, **இந்தத் தவறான எண்ணமாகிய சுவர்கள் அவைகளாகவே விழுந்துவிடும்.** வெள்ளை மனிதனின் பெயருக்குப் பக்கத்தில் கருப்பு மனிதனின் பெயர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. கிறிஸ்துவில் அனைவரும் ஒன்றாக இருக்கின்றனர். மனிதர்களை அவர்களுடைய பிறப்பு, நிலைமை, ஜாதி அல்லது நிறம் ஆகிய எதனாலும் உயர்த்தவோ தாழ்த்தவோ முடியாது. சுபாவம் மனிதனை உண்டுபண்ணுகிறது. ஒரு சிவப்பு மனிதனோ, சீனா மனிதனோ, ஒரு ஆப்பிரிக்கனோ—யாராக இருந்தாலும், அவன் கீழ்ப்படிதலுடனும், விசுவாசத்துடனும் அவனுடைய இருதயத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுப்பானானால்,... இயேசு அவனுடைய நிறத்திற்காக அவனைக் குறைவாக நேசிப்பதில்லை; அவர் அவனை மிகவும் அன்பான சகோதரன் என்றே அழைக்கிறார்.

“சுவிசேஷத்தின்மீது தனது நம்பிக்கையை வைத்திருக்கும் மிகவும் தாழ்மையான ஆப்பிரிக்கனுடன் தங்களுடைய இடங்களை மாற்றிக்கொள்ளுவதில் அரசர்களும் பிரபுக்களுமான மனிதர்கள் மகிழ்ச்சியடைக்கூடிய நாள் வந்து கொண்டிருக்கிறது.

“தேவனுக்கென்று சேவை செய்வதற்காக ஆதாயப்படுத்தப்படக்கூடிய ஆப்பிரிக்க இனத்திலுள்ள ஆத்துமாக்களின்மீது, அவர் இஸ்ரவேலரின்மீது கரிசனம் உடையவராக இருந்ததைவிடக் குறைவான கரிசனையை உடையவராக இல்லை”—**ChS 217,218.**

“சாத்தான் இருதயத்தில் நடுகின்ற வன்மம், பொறாமை, பொல்லாங்கு கூறுதல், பொறுமையின்மை, தவறான எண்ணம், சுயநலம், பிறர் பொருளின் மீதுள்ள இச்சை, மாயை ஆகிய அனைத்தும் வேருடன் பிடுங்கப்படவேண்டும்.”—**AH 196.**

“ஆத்துமாவுடைய மதிப்பின் அறிகருவியாகத் தோலின் நிறம் இருப்பதில்லை. சத்தியம் என்னும் பலமிக்க உளியினால் நாமனைவரும் உலகத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்டிருக்கிறோம். எல்லா வகுப்பினரும் எல்லா ஜாதியினருமான நம்மனைவரையும் தேவன் எடுத்து, அவருடைய ஆலயத்திற்கென்று ஆயத்தப்படுத்தப்படுவதற்காக, அவருடைய பணி மனைக்கு கொண்டுவந்திருக்கிறார். தேவனிடத்தில் ஜாதி அல்லது இனம், பிரிவினைகள், கட்சிகள் ஆகிய எதுவும் இல்லையென்பதை ஞாபகத்தில் வையுங்கள்.”—**MS 73, 1903.**

"வெள்ளை மனிதனுக்கென்று சிறப்பான பரலோகமும் கருப்பு மனிதனுக்கென்று வேறொரு பரலோகமும் இல்லாமலிருக்கவேண்டியதாக இருக்கிறது. வெள்ளை இனத்திற்கும், கருப்பு இனத்திற்கும் இடையில் பிரிவினையாகிய சுவரைக்கட்டுவதற்கு நமக்கு நேரமில்லை."—**SW 55.**

"வெள்ளை மனிதனின் பெயருக்குப் பக்கத்தில் கருப்பு மனிதனின் பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாரும் கிறிஸ்துவில் ஒன்றாக இருக்கின்றனர். சுபாவம் மனிதனை உண்டுபண்ணுகிறது. வெள்ளையர்களானாலும் கருப்பர்களானாலும் எல்லா மனிதர்களும் சுதந்தரமானவர்களாகவும், சமமானவர்களாகவும் இருக்கின்றனர் என்னும் இந்தக் கொள்கையை உலகத்தின்மீதும், பரலோக நுண்ணறிவாளர்களுக்கு முன்னும், கிறிஸ்தவர்களாக இருக்கும் நாம் ஏற்றுக்கொள்ளுவோமாக." **—MS 7, 1896; S.M. 2: 343.**

"கருப்பு நிற மக்கள் மதமாற்றமடைவதைப் பொறுத்தமற்ற வகையில் விரும்பிக்கொண்டிருந்த சில குறிபிட்ட வெள்ளைக்கார மக்கள், நிறமாற்றமுள்ள அவர்களுடைய சகோதரர்களுக்கருகில் உட்காரவும், அவர்களிரு சாராருக்கும் பொதுவானதாக இருந்த பாடல்களைப் பாடவும், ஜெபிக்கவும், சத்தியத்திற்குச் சாட்சி பகரவும் விருப்பமற்றவர்களாக இருந்தனர்."— **SW 20.**

கிறிஸ்தவ சபையில் காணப்படக்கூடாததாக இருந்த இந்த நிலைமையைத் திருமதி. ஒயிட் அவர்கள் புறஜாதியினருக்கெதிராக இருந்த, யூதர்களின் தவறான எண்ணத்திற்கு—ஒப்பிடுகிறார். தேவனை ஆராதிப்பதிலுங்கூட வெள்ளையர்களுடன் தோழமைகொள்ளுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று முத்திரையிடப்பட்ட அவர்களுக்கெதிரான (கருப்பர்களுக்குகெதிரான) தவறான எண்ணத்தினால், கருப்பர்களின் வாழ்க்கை கசப்பாக்கப்பட்டுக்கொண்டிருந்தது என்பதைத் திருமதி. ஒயிட் அவர்கள் கண்டார்கள் என்று அவருடைய 1896–ம் வருடத்துக் கைப்பிரதிகளில் 7 – ம் பாகத்தில் கூறுகிறார்.

"உங்களுடைய ஆராதனை செய்யுமிடங்களிலிருந்து நிறமுள்ள (வெள்ளையரல்லாத) ஜனங்களை விலக்குவதற்குத் தேவனிடமிருந்து உங்களுக்கு அனுமதி (லைசன்ஸ்) இல்லை. அவர்கள் வெள்ளையர்களான சகோதரர்களுடன் சபை அங்கத்தினர்களாக இருக்கவேண்டும்."—**SW 15.**

"நிறமுள்ள ஒரு சகோதரன் அவர்களுக்கருகில் உட்கார்ந்தால், அவர்கள் எதிர்ப்படையமாட்டார்கள் அல்லது அவனை நிந்திக்க மாட்டார்கள்; ஏனெனில்,அவர்கள் அதே பரலோகத்திற்குப் பயணம்செய்து கொண்டிருக்கின்றனர். தேவனுடைய இராஜ்யத்தில் அப்பம் புசிக்க அதே

மேசையில் அவர்களும் உட்காரவைக்கப்படுவார்கள்."—**SW 14.**

"நிறமென்னும் வேற்றுமைகோட்டைத் தேவன் வரைந்திருக் கிறதில்லை; அதனால், நாம் தேவனை எதிர்க்காமல் இருக்கும்படி மிகவும் காவல்செய்பவர்களாக நடக்கவேண்டும்." **வாஷிங்டன் DC–ல் உள்ள நமது சபைகளுக்கான கடிதம், 304, Oct 19, 1908.**

"நிறவேற்றுமையின் காரணமாகச் சகோதரனை ஏளனம் செய்பவர்களை இயேசு ஏளனம் செய்கின்றார்."—**SW 13.**

"வெள்ளையர்களின் தவறான எண்ணத்தைச் சந்திக்கவேண்டியது அவசியம் என்று மக்கள் எண்ணியிருக்கின்றனர். மத சம்பந்தமான ஆராதனை யில் பிரிவினையாகிய சுவர் கட்டப்பட்டிருக்கிறது. (இந்த மனிதர்கள்) கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக இருந்திருக்கவில்லை."—**SW 19.**

"இனத்தின் நிறவேற்றுமையினாலான தவறான எண்ணத்திற்கு இணங்குவதனால், அலட்சியம் என்னும் ஒரு நீண்ட நடத்தை, ஒடுக்குதல் ஆகியவைகளை அனுமதிக்க, அவர்கள் தங்களுடைய செல்வாக்கைக் கொடுத்துக்கொண்டிருப்பதையும், தேவனுடைய ஜனங்களால் பார்க்க முடியாதா? இந்த வேலையில், ஒரு பங்கை உடையவர்களாக இருந்தவர்களைக் கணக்குக் கொடுக்கும்படி தேவன் அழைக்கமாட்டாரா?

தேவனுடைய பரந்த சூரிய ஒளியில், மனத்துடனும் ஆத்துமாவுடனும் நிற்கும் மற்ற மனிதர்களைப்போலவே, நீக்ரோ இன மனிதர்களும் இருந்து, அவர்கள் வெள்ளை நிற மனிதர்களைப்போலவே நன்கு வளர்ச்சியடைந்துள்ள நல்ல உடலமைப்பும் உடையவர்களாக இருக்கின்றனர்."—**MS 7, 1896.**

ஜாதி,நிறம் ஆகியவை சம்மந்தப்பட்ட கேள்வியில் ஒரு முடிவான வேறுபாட்டை உண்டுபண்ணுவதினால், தேவ ஆவியைத் துக்கப்படுத்துவதைத் தவிர வேறு ஆதாயம் எதுவும் இருக்காது. அதே (ஒரே) பரலோகத்திற்கு ஆயத்தஞ்செய்ய இருப்பவர்களாக நாமனைவரும் இருக்கிறோம். நாம் அதே பரலோகப் பிதாவையும்—நம்மை நேசித்து நம்மனைவருக்காகவும் தம்மையே எந்தவித வேறுபாடும் இல்லாமல் கொடுத்த அதே மீட்பரை உடையவர்களாக நாம் இருக்கிறோம். இந்த உலக வரலாற்றின் முடிவை நாம் நெருங்கிக்கொண்டிருக்கின்றபோது, தேவனுடைய பிள்ளைகள் யாராவது பெருமையும் அகந்தையுமிக்க இருதயத்தை உடையவர்களாக இருந்து, தேவனை நேசிக்கும் இன்னொரு ஆத்துமாவிலிருந்து தன்னைத் திருப்பிக் கொள்ளுவதாகவும் அல்லது கிறிஸ்து மரித்திருக்கும் எந்த ஆத்துமாவுக்காகவும் உழைப்பதை நிறுத்துவதாகவும் ஆகக்கூடாது. கிறிஸ்துவின் அன்பு அது இருக்கவேண்டியவிதமாக இருதயத்தில் பேணப்பட்டிருக்கும்போது, ஆத்துமாவின் ஆலயத்தை, இனிமையான

மென்மைப்படுத்தும் அன்பின் ஆவி நிறைக்கும்போது, ஜாதி இருக்காது, தேசீயம்பற்றிய பெருமை இருக்காது; தோலின் காரணமான வேற்றுமைகள் உண்டுபண்ணப்படமாட்டாது; மென்மையான கருதுதலும், ஆறுதலும் எவர்களுக்குத் தேவையோ, அவர்கள் எந்த தேசீயத்தைச்சார்ந்தவர்களாக இருந்தாலும், ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கும் உதவி செய்வார்கள்.

கிறிஸ்து ஏதாவது வேற்றுமையை உண்டுபண்ணுவாரா என்று உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள்! அவர்களுடைய ஜனங்களைக் கூட்டிச் சேர்ப்பதில், நீங்கள் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, நீங்கள் வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள்; ஆகையால், சகோதரனே, நீ இங்கே உட்கார் சகோதரியே,... நீ இங்கே உட்கார் என்று அவர் கூறுவாரா? கறுப்பான தோலை உடையவர்கள் பின்னால் உள்ள இருக்கையில் உட்காருங்கள், வெளிரின தோலை உடையவர்கள் முன்னாலுள்ள இருக்கைகளுக்கு வரலாம் என்று அவர் கூறுவாரா?

ஒரே இடத்தில், வெள்ளை மக்களுக்கும் நிறமுள்ள மக்களுக்கும் இடையில் ஒரு திரை தொங்கவிடப்படவேண்டும் என்னும் முன்மொழிதல் உண்டுபண்ணப்பட்டது. இயேசு அதைச் செய்வாரா? என்று நான் கேட்டேன். இது கிறிஸ்துவின் இருதயத்தைப் துக்கப்படுத்துகிறது. ஓர் ஆத்துமாவின் விலைமதிப்பைப் பொறுத்தவரை, தோலின் நிறம் அறிகருவியாக இருப்பதில்லை. சத்தியம் என்னும் பலத்த உளியினால் நாமனைவரும் உலகத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய ஆலயத்திற்கென்று ஆயத்தம்செய்யப்படுவதற்காக நம்மனைவரையும் எல்லா வகுப்பினரையும் எல்லா நாட்டினரையும் எல்லா மொழியினரையும்— நம்மனைவரையும் அவரது பணிமனைக்குக் கொண்டு வந்திருக்கிறார்.— **(தென் ஆப்பிரிக்காவிலிருந்த W.S. ஹியாத் என்னும் ஊழியக்காரருக்கு எழுதின கடிதம்), கடிதம் எண் 26, பிப்ரவரி 15, 1900).**

**முக்கியமான குறிப்பு:– 1895**—ம் வருடத்தில் அமெரிக்காவின் தென் மாநிலங்கலிளுள்ள மிஸ்ஸிசிப்பி என்னுமிடத்தில் யாஜு நதித் தடத்தில் திருமதி. E.G. ஒயிட் அவர்களின் மகனான J.E. எட்சன் ஒயிட், நீக்ரோ மக்களுக்கு மத்தியில் ஊழியத்தை ஆரம்பித்தார். அவர் பயன்படுத்தியிருந்த படகிற்கு விடிவெள்ளி என்று பெயரிடப்பட்டிருந்தது. 1898—ல் இருந்து அவருடைய உயிர் ஆபத்தில் இருந்தது. அந்த அளவிற்கு வன்முறைமிக்க தவறான எண்ணங்களையும் எதிர்ப்பையும் வெள்ளயர்களிடமிருந்து எட்சன் சந்தித்துக் கொண்டிருந்தார். நீக்ரோக்களுக்கான சமூகச் சமத்துவத்திற்காக அவர் பரிந்துபேசிக்கொண்டும் அதை நடைமுறைப்படுத்திக்கொண்டும் இருந்தது அவருக்கு எதிரான குற்றச்சாட்டாக இருந்தது.—(**ஆதாரம்—யாஜு சிட்டி ஹெரால்ட் பத்திரிகைள், 1900**). கட்டிடங்கள் எரிக்கப்பட்டன. எட்சன்

ஒயிட் அவர்களும் அவரது உடன் வேலைக்காரர்களும், கல்லெறியுண்டனர். ஒருவர் சவுக்கால் அடிக்கப்பட்டார். அவருடைய பணியில் ஆர்வம்காட்டியிருந்த நீக்ரோ மக்கள் கொலைசெய்யப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்பட்டனர். இந்த நேரத்தில், அமெரிக்காவில் அடிமைகளைப் பிடித்துவைத்திருந்த மாநிலங்கள் முழுவதிலும் அதிகரிக்கும் பிரிவினையையும் வெறுப்பையும் எழுப்பி, ஒரு அலை உயர்ந்தது என்று வரலாறு வெளிப்படுத்துகிறது. நீக்ரோ மக்களுக்காக வெள்ளைக்கார மக்கள் பணிபுரிவது கடினத்தின்மேல் கடினமானது. தேவனுடைய வேலை நின்றுவிடும் என்பதுபோல் காணப்பட்டது. இந்தப் பின்னணியில் நிலவியுள்ள அவசரக்காலச் சூழ்நிலைகளில் கருப்பு மக்கள் அவர்களுடைய சொந்த மக்களுக்காக ஊழியம் செய்யும்படி பயிற்றுவிக்கப்படுவது அவர்களுக்கு நன்றாக இருக்கும் என்றும் கருப்பு மக்களும், வெள்ளை மக்களும் அவர்களுடைய தனித் தனியான ஆராதனை செய்யும் இடங்களை உடையவர்களாக இருப்பது நன்றாக இருக்கும் என்றும் திருமதி. ஒயிட் எழுதினார்கள்.—**9T 206.**

மேலும் அதிகமான சண்டைகள் ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவும், அந்த நேரத்திலிருந்த வேலைக்குத் தேவையில்லாத இடையூறு உண்டாவதைத் தவிர்க்கவும், ஒரு தற்காலிக நடவடிக்கையாக வெள்ளைக்காரர்களுடன் சமுதாயச் சமத்துவத்தைக் கோரிக்கைசெய்யவேண்டாம் என்று, நிறமிக்க விசுவாசிகள் வற்புறுத்தப்பட்டதுடன் **(9T 206,214)**, கலப்பினத் திருமணங்கள், குறிப்பாக அப்படிப்பட்ட திருமணங்களால் பிறக்கும் பிள்ளைகள், சூழ்ந்துள்ள தவறான எண்ணங்களினால் துன்பப்படவேண்டியதாக இருக்கும் என்பதனால், அப்படிப்பட்ட கலப்புத் திருமணங்கள் தவிர்க்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. **(2SM 343,344).** வேறுவிதமாகக் கூறுவதானால், உலகத்தின் தவறான எண்ணங்களையும் ஆபத்துக்களையும் சந்திப்பதில், விரைவில் வரவிருக்கும் அவர்களுடைய கர்த்தரைச் சந்திக்க மக்களை ஆயத்தப்படுத்தும் வேலையைத் தேவையில்லாமல் அடைத்துவிடக்கூடிய எதையும் தவிர்ப்பதற்காக, சர்ப்பத்தைப்போல வினா உள்ளவர்களாகவும், புறாக்களைப்போலக் கபடமற்றவர்களாகவும் இருக்கவேண்டும். **(மத். 10:16).**

சாட்சியாகமம் 9—ம் பாகத்தில் கொடுக்கப்பட்ட உபதேசம், அந்த நேரத்தில் சபைக்கு வெளியில் இருந்து உண்டான முக்கியமான தவறான எண்ணமாகிய அவசர நிலைமையைச் சந்திப்பதற்கானதாக இருந்தது. அது நிச்சயமாகவே முழு நிறைவான சிறந்த கொள்கை என்றோ சபைக்குள்ளிருந்தவர்களின் ஆவி என்றோ அர்த்தப்படாமலிருந்தது.

திருமதி. ஒயிட் அவர்களுடைய ஆலோசனைகளை உடைய இந்த நான்கு தூதுகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு பூகோளப் பகுதியில் எதிர்த்து முன்னேறியிருந்த சூழ்நிலைகளினால் உண்டான நிலைமைகளைச்

சந்திப்பதற்கென்று எழுதப்பட்டிருந்தன.—**RH, July 15, 1976:10–ல் E.G.ஒயிட் டிரஸ்டிகளால் மேற்கோளாகக் காட்டப்பட்டது.**

எட்சன் ஒயிட் அவர்களது அன்னையின் சாட்சியாகமத்திலிருந்த வார்த்தைகளைப்பற்றிய புரிந்துகொள்ளுதல் மிகவும் தெளிவாக இருக்கிறது. கலப்பினங்களாக இருக்கக்கூடியவர்களால் சகித்துக்கொள்ளாமலிருக்கக்கூடிய தென் பகுதியை மட்டுமே இது குறிப்பிடுகிறது. இப்பொழுது நிற வேற்றுமைகள் இல்லாத இடங்களில் அவைகளை நாம் உண்டுபண்ணுவதைத் தேவன் தடுக்கிறார். அந்தச் சாட்சியாகமம் இந்த இடத்திற்குப் பொருந்தக்கூடியதா—அது அவர்களைப் பிரிக்காதா என்று பலராலும் நான் கேட்கப்பட்டிருக்கிறேன் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அப்படிப்பட்ட எதையும் நானாகப் பொறுப்பேற்றுக் கொள்ளமாட்டேன். அப்படிச் செய்வதனால், நான் பாவம் செய்கிறவனாக இருப்பேன் என்று உணருகிறேன். நமது இரத்த சம்பந்தமான சகல உறவுகளும் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தருடையது என்றும், நாம் கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவிற்கு சகோதரர்களும்—சகோதரிகளுமாக இருக்கிறோம் என்றும் கர்த்தர் கருதுமிடத்தில் உங்களால் பிரிவினைகளை உண்டுபண்ணமுடியாது; அவ்வாறு நாம் கட்டிஎழுப்புவது, பண்டைய யூதர்களால் கட்டிஎழுப்பப்பட்ட பிரிவினையாகிய நடுச்சுவரைப்போன்று கேடுபயப்பதாக இருக்கும்.

பூமியின்மீதுள்ள மனுஷஜாதியான அனைவரையும் தேவன் ஒரே இரத்தத்தினாலே உண்டுபண்ணியிருப்பதுடன், அவர் அவைகளை அப்படியே கருதுகிறார். தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக இருந்தால், நாமும் அதை அதேவிதமாகக் கருதுவோம். இப்படிப்பட்ட காரியங்களில், எங்கு ஒரு மாறுபட்ட நடத்தை நமது வேலைக்கான பணிக்களத்தை அடைத்துவிடுமோ, அங்கு அவர்களுக்காக வேலைசெய்ய அனுமதிக்கப்படும்படி, நாம் நிர்ப்பந்திக்கப்படும்போதுமட்டும் இவைபோன்ற காரியங்களில் மனிதர்களின் தவறான எண்ணங்களைக் கருதாமலிருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.—**(M.A. கார்ன்வெல் என்பவருக்கு J.E.ஒயிட் எழுதின கடிதம் அக்டோபர் 10, 1899. E.G.ஒயிட்டும் இன உறவுகளும் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பக்கம் 64,65).**

நாம் வேலைசெய்யக்கூடிய ஒரே பாதையாக இதுமட்டுமே இருப்பதினால், நாம் இதைச் செய்திருக்கிறோம். (வெள்ளையர்களுக்காகவும் கருப்பர்களுக்காகவும் தனித்தனியாக வேலைசெய்திருக்கிறோம்). இரு இனங்களுக்குமாக ஒன்றுசேர்ந்து வேலைசெய்வதற்கும் நாம் முயற்சி செய்திருக்கிறோம்; அதனால் நமது உயிர்கள் அச்சுறுத்தப்பட்டிருந்தன. அந்தப் பிரச்சினையை நிர்ப்பந்தம்செய்து, அந்த வேலையிலிருந்து நாம் நீக்கப்படுவதைவிட, நம்மால் முடிந்தவிதங்களில் வாழுவதையும்

பணிசெய்வதையும் நாம் தெரிந்துகொண்டோம்.—**சுவிசேஷக் கட்டியக்காரன், ஜனவரி, 1901: 4. இரண்டு இனங்களுக்கான ஊழியம் என்னும் கட்டுரை. ஆசிரியர் J.E.ஒயிட்.**

## SDA சபையின் அதிகாரப்பூர்வமான நிலைமை

இந்தக் கேள்விக்கான பதிலாக ஜெனரல் கான்பரன்சில் செயல்படும் கொள்கைகளின் ஒரு சுருக்கம்: **62,63**–ம் பக்கங்கள்.

1. இனம்பற்றிய கருத்துவேறுபாடு எதுவுமில்லாமல் சபைக்குள், முழுமையானதும் சமமானதுமான வாய்ப்பு எல்லா நபர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.
2. இன வேறுபாடின்றி, தகுதியுடைய எவருக்கும் அங்கத்தினர் பதவியும் அதிகாரப் பதவியும் எல்லா சபைகளிலும்—எல்லா ஸ்தானங்களிலும் கிடைக்கவேண்டும்.
3. கல்வி அமைப்புகளில் ஆசிரியர்களையும், மற்ற வேலைக்காரர் களையும் நியமனம் செய்வதிலும், மாணவர்களைச் சேர்ப்பதிலும் இன சம்பந்தமான ஒருதலைப்பட்சமான விருப்பு—வெறுப்பு இருக்கக்கூடாது.
4. நோயாளிகளை அனுமதிப்பதில் மருத்துவமனைகளிலும், ஓய்வு விடுதிகளிலும் இனப் பாகுபாடுகள் இருக்கலாகாது.
5. ஒவ்வொரு யூனியன் கான்பரன்சிலும் மனித உறவுக் கமிட்டிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.
6. ஆரம்பப்பள்ளி முதல் பல்கலைக்கழக நிலைவரையிலுள்ள எல்லா செவன்த்—டே அட்வெண்டிஸ்ட் பள்ளிகளிலும், செவன்த்—டே அட்வெண்டிஸ்ட் வாலிபர்கள் இனம், நிறம் ஆகிய வேற்றுமை எதுவுமின்றி அவர்கள் தெரிந்து கொள்ளுகின்ற பள்ளிகளில் அனுமதிக்கப்படவேண்டும் —சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.
7. ஆவிக்குரிய தலைவர்கள் இனம், நிறம் காரணமாக வரையறுக்கப்படக்கூடாது. சில வெள்ளையர்களின் சபைகளில் கருப்பர்கள் போதகர்களாகவும், கருப்பர்களின் சபைகளில் வெள்ளையர்கள் போதகர்களாவும் நியமிக்கப்படுவார்களானால், மிகவும் விரும்பக்கூடிய உதாரணம் பலனாக இருக்கும்; ஆகையால், இதற்கான நிகழ்ச்சி நிரல்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.
8. இன—நிற வேற்றுமைகள்பற்றிய குற்றச்சாட்டுகளுடன் இடைப்பட ஏழு அங்கத்தினர்களடங்கிய ஓர் இரு இனக்கமிஷனை வட அமெரிக்கா

டிவிஷன் நியமித்திருக்கிறது.

**9.** சுவிசேஷத்தின் ஒரு பகுதியாக இந்தக் கொள்கைகளைக் கான்பரன்சிலுள்ள நிர்வாகிகளும் போதகர்களும் சுவிசேஷர்களும் போதிப்பதுடன், அதேவிதமாக வருங்கால வாய்ப்பை உடைய அங்கத்தினர் களுக்கும் போதிக்கப்படவேண்டும்.

ஆகையால், சகோதரராகவும் விருந்தினராகவும் அங்கத்தினராகவும், உடன் ஊழியராகவும் அல்லது தலைவராகவும் இருக்கும்படி எந்த ஒருவராக இருந்தாலும் இனம், நிறம், ஜாதிப் பிரிவு, தேசீயப் பிரிவு ஆகிய எதுவுமின்றி அனைவரும் வரவேற்கப்படுகின்றனர்.

1970–ம் வருடத்தில் அமெரிக்காவிலுள்ள நியூ ஜெர்சி மாநிலத்திலுள்ள அட்லாண்டிக் நகரில் கூடிய ஜெனரல் கான்பரன்சின் தீர்மானம்;

**25** இலட்சம் அங்கத்தினர்களில் எங்கேயாவது உள்ள ஏதாவதொரு அங்கத்தினர், அவர் நற்சான்றினை உடையவராக இருப்பாரானால், அவர் தேர்ந்தெடுக்கும் சபையில் அங்கத்தினராகலாம். அதன் பொருள் என்னவெனில், உலகெங்கிலுமாக உள்ள **18,000** சபைகளில் ஏதாவதொன்றில் அவர் அங்கத்தினராகலாம்.—**W. பவுல் பிராட்லி, போர்டு தலைவர், எலன் G. ஒயிட் எஸ்டேட் ஜூலை 1, 1976:8, SDA சபையின் நிலைமைபற்றிய அதிகாரப்பூர்வமான விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது**.

தங்களுடைய விருப்பங்களை அன்பினால் ஒன்றுசேர்த்துக்கட்டும்படி, ஒருமைப்பாட்டிலும் சகோதர அனுதாபத்திலும் ஒன்றுசேர்ந்து வருவதற்குப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள தேவன் அவருடைய சபையின் அங்கத்தினர்களை அழைக்கிறார். கிறிஸ்தவ ஒருமைப்பாடு ஒரு பலமிக்க ஏதுகரமாக இருக்கிறது. தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் ஒருமனப்பட்டவர்களாக இருக்கும்போது, சுய நலத்தினாலான தடைகள் மறைந்துவிடும்போது, விசுவாசிகளுக்கு மத்தியில் உள்ள ஒருமைப்பாட்டின் காரணமாக ஒரு மந்திர வித்தையைப்போல அநேகமநேகம் அதிகமான ஆத்துமாக்கள் மதமாற்றமடைவார்கள். ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு. பிரதேசவாரியான வேறுபாடுகளையும் நிறம், ஜாதி சம்பந்தப்பட்ட வேலைகளையும் கட்டிக்கொண்டிருப்பவர்கள், அதைக் கட்டுவதைவிட மிக அதிகமான வேகத்தில் கீழாக வைத்துவிடுவது (அழித்துவிடுவது) மிகவும் நன்றாக இருக்கும். யோவான் பதினேழாம் அதிகாரத்தில் அறிவிக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டியவனாக மனிதன் இருக்கிறான். அவன் தன் உடன் மனிதனுடனும் கிறிஸ்துவுடனும் ஒன்றாக, கிறிஸ்துவில் தேவனுடன் ஒன்றாக இருக்க வேண்டியவனாக இருக்கிறான். அப்பொழுது நீங்கள் அவரில் பூரணமானவர்களாக இருக்கிறீர்கள் என்னும்

வார்த்தைகளைக் கூறமுடியும்.—**MS 83, 1899.**

விசுவாசச் சகோதரர்களே!
உங்கள் இனம் எதுவாக இருந்தாலும்
இப்பொழுது, கைக்கோர்த்துக்கொள்ளுங்கள்!
ஒரு மகனைப்போல என் பிதாவுக்குச்
சேவை செய்பவன் நிச்சயமாகவே
எனக்கு உறவினனாக இருக்கிறான்!

— ஜான் ஆக்ஸன்ஹாம். ★

# 25

# கிறிஸ்தவனும் ஜெபமும்!

## ஜெபத்தின் அவசியம்

**மத். 14:23** அவர் தனித்து ஜெபம்பண்ண மலையின்மேல் ஏறி … அங்கே தனிமையாயிருந்தார். (மாற்கு 6:46; லூக்கா 6:12–ம் பார்க்கவும்). இரவு முழுவதிலும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார் (லூக்கா 9:28).

**குறிப்பு:–** இது கிறிஸ்துவின் தொடர்ச்சியான நடத்தையும் பழக்கமுமாக இருந்தது. அது நமக்கு ஒரு உதாரணமாக இருக்கிறது. மனிதர்களின் இரட்சகராக இருந்த தேவகுமாரனுக்கு ஜெபம் அவசியமானதாக இருந்திருந்தது என்பதை அவர் உணர்ந்திருந்தால், பலவீனர்களுக்கும் அழிவுக்குரிய பாவமுள்ளவர்களுக்கும் ஊக்கமான தொடர்ச்சியான ஜெபம் எவ்வளவு அதிகமான அவசியமாக இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.—**SC 94.**

**லூக்கா 11:1** எங்களுக்கு ஜெபம்பண்ணப் போதிக்கவேண்டும் என்பது சீஷர்களின் வேண்டுகோளாக இருந்தது.

**குறிப்பு:–** நீண்ட நேரமாகக் கிறிஸ்து அவருடைய பிதாவுடன் கொண்டிருந்த ஜெபம், தொடர்பு ஆகியவைகளின் பலனாகக் கிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்த வல்லமையையும், அழகையும், சமாதானத்தையும் சீஷர்கள் கண்டார்கள்; அதைப்போலவே, ஜெபம்பண்ணக் கற்றுக்கொள்ள அவர்களும் விரும்பினார்கள்.

**மத்தேயு 17:21** இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றிப் புறப்பட்டுப்போகாது. நாம் வல்லமையை உடையவர்களாக இருக்க, ஜெபித்து சுயமறுப்பைப் பழக்கப்படுத்தவேண்டும்.

**மத். 26:41** நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு, விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். சோதனையை மேற்கொள்ள, நாம் ஜெபம்பண்ண வேண்டும்.—(மாற்கு 14:38; லூக்கா 22:40).

| | |
|---|---|
| **லூக்கா 18:1** | சோர்ந்துபோகாமல் (மனிதர்கள்) எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும். |
| **சங்கீதம் 55:17** | அந்தி—சந்தி—மத்தியான வேளையிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன். |
| **தானி. 6:10** | தானியேலோவென்றால் … தினமும் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரஞ்செலுத்தினான். |
| **அப். 10:9** | பேதுரு ….. ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான். |
| **1 தெச. 5:17** | இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். |
| **1 தீமோ. 2:8** | அன்றியும் புருஷர்கள் எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். |
| **1 பேதுரு 4:7** | எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று… தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதை உள்ளவர்களாக இருங்கள். |
| **யாக். 5:16** | ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்; நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பலனுள்ளதாயிருக்கிறது. |

**குறிப்பு:–** தேவனுடைய ஒவ்வொரு மனிதனும் ஜெபம்பண்ணுபவனாக இருந்திருந்தான். ஜெபம்பண்ணாமல் நம்மால் பாவத்தின்மேல் வெற்றிகொள்ள முடியாது; நம்மால் தேவனை அறிந்துகொள்ளமுடியாது; நம்முடைய வாழ்க்கையில் அவருடைய இனிமையையும் அழகையும் உடையவர்களாக நம்மால் இருக்க முடியாது; மற்றவர்களை ஆதாயப்படுத்துவதற்கான பரிசுத்த ஆவியின் வல்லமையை நம்மால் பெறமுடியாது; நாம் ஜெபிக்கவேண்டும்.

“ஜெபஞ்செய்வதை அலட்சியம் செய்பவர்களைத் தீமையின் இருள் மூடிக்கொள்ளுகிறது.”—**SC 94.**

எலியா ஜெபம்பண்ணினான், அக்கினி இறங்கினது; மறுபடியும் ஜெபம்பண்ணினான், மழைபெய்தது. எலியா ஜெபம்பண்ணினபோது, ஒரு மரித்தபிள்ளை உயிர்பெற்று எழுப்பப்பட்டான்.சாலமோன் ஜெபம்பண்ணி ஞானத்தைப் பெற்றுக்கொண்டான். தானியேல் ஜெபம்பண்ணினபோது, நேபுகாத்நேச்சாரின் கனவின் அர்த்தம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. சபை ஜெபம்பண்ணினபோது, பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டான். ஜெபம்பண்ணுபவர்களுக்கு, தேவனால் எதுவும் செய்யமுடியும்!

**பதில் கொடுக்கப்பட்ட ஜெபங்களில் இருந்த நிபந்தனைகள்:**

1. நமது உதவியற்ற நிலைமை, நமது தகுதியின்மை, நமது பெரும் தேவை ஆகியவைகளை நாம் உணரவேண்டும். லூக்கா 18:13,14; மத். 14:30.
2. விசுவாசம். மத்தேயு 21:22; எபி.11:6; யாக்கோபு 1:5–7.
3. மற்றவர்களை மன்னித்தல். மாற்கு 11:25; மத். 6:12,14,15; 5:23,24; 18:35; யாக். 2:13.
4. விட்டுவிடப்பட்ட பாவம். சங்கீதம் 66:18; நீதி. 28:13; ஏசாயா 59:1,2; எசே. 33:15.
5. தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படிதல். நீதி. 28:9.
6. ஜெபத்தில் விடாமுயற்சி. லூக்கா 18:1 (வச. 2–7–ல் உள்ள உவமையைப் பார்க்கவும்) கொலோ. 4:2; ரோமர் 12:12.
7. தேவன் செய்யும் முடிவை ஏற்றுக்கொள்ளுகின்ற விருப்பம். மத். 26:39. (என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது).

**நாம் ஜெபம்பண்ணவேண்டிய விதம்**

**சங். 95:6** கர்த்தருக்கு முன்பாக முழங்காற்படியிடக்கடவோம். (2 நாளா. 6:13; தானி. 6:10; லூக்கா 22:41. நமது கர்த்தரின் உதாரணம் —எபே. 3:14–யும் பார்க்கவும்).

**குறிப்பு:**– தேவன் நம்மைவிடப் பெரியவராக இருக்கிறார் என்பதை ஒப்புகைசெய்யக்கூடியவிதத்திலும், தாழ்மையான, பக்தியின் செயலாகவும் நமது தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணுவது ஒரு வழக்கமான நிலையாக இருக்கிறது. இருந்தபோதிலும், இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் என்றுங்கூட நமக்குக் கூறப்பட்டிருக்கிறது (1 தெச. 5:17). இவ்வாறாக, நாம் எங்கே இருந்தாலும் அல்லது நாம் என்ன செய்துகொண்டிருந்தாலும்—நின்றுகொண்டிருக்கும்போதும் (மாற்கு 11:25) —படுக்கையில் படுத்திருக்கும்போதும் (ஏசாயா 38:1,2), எப்பொழுதும் நாம் நமது எண்ணங்களை, நமது பரலோகப் பிதாவினிடத்திற்கு உயர்த்தமுடியும்; இவ்வாறாக ஜெபம் என்னும் ஒரு சூழலில் நம்மால் வாழமுடியும்.

**மத். 6:6** இரகசியமாக ஜெபம்பண்ணுங்கள். (மத்.14:23–யும் பார்க்கவும். இயேசு ஜெபம்பண்ண தனித்திருந்தார். தனி ஜெபம் சுருக்க

மானவைகளாக இருக்கவேண்டும். கர்த்தருடைய ஜெபம் இதற்கு ஒரு உதாரணமாக இருக்கிறது.

**மத். 6:7** வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்.

**யோவான் 14:13,14** இயேசுவின் நாமத்தினால் ஜெபம் செய்யுங்கள்.

**பிலி. 4:6** ஸ்தோத்திரத்தோடே ஜெபம்பண்ணுங்கள்.

**மத். 6:9–13** நீங்கள் ஜெபம்பண்ணவேண்டியவிதமாவது (கர்த்தரின் ஜெபத்தின் உதாரணம்).

## நாம் யாருக்காக, எதற்காக ஜெபம்செய்யவேண்டும்?

**சங். 122:6** தேவனுடைய சபைக்காக.

**2 கொரி. 1:11** தேவனுடைய ஊழியக்காரர்களுக்காக. (பிலிப்பியர் 1:19 –யும் வாசிக்கவும்).

**1 தீமோ. 2:2** அரசர்களுக்காகவும், அதிகாரத்தில் இருக்கும் அனைவருக்காகவும்.

**1 தீமோ. 2:1** எல்லா மனிதர்களுக்காகவும்.

**யாக். 5:14** வியாதியஸ்தர்களுக்காக.

**மத். 5:44** நம்மைத் துன்பப்படுத்துபவர்களுக்காக.

**லூக்கா 18:13** நமக்காகவும் — (லூக்கா 23:42 – ம் வாசிக்கவும்).

**அப். 8:22** பாவமன்னிப்பிற்காக —(ச□. 32:5; 1 யோவான் 1:9 – ம் வாசிக்கவும்).

**லூக்கா 11:13** நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் வருவதற்காக. (அப். 4:31)

**யாக். 1:5** ஞானத்திற்காக.

**தானி. 2:19–23** நமது நன்றியறிதலைத் தேவனுக்கு வெளிக்காட்டுவதற்காக.

## தேவனின் அழைப்பு!

**எபி. 4:16** நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்.

**வேதாகமத்தில் உள்ள புகழ்மிக்க ஜெபங்கள்!**

| | |
|---|---|
| **யாத். 32:31,32** | இஸ்ரவேலின் மன்னிப்பிற்காக மோசேயின் ஜெபம். |
| **2 சாமு. 7:18–29** | தேவாலயக் கட்டிடத்திற்கான தாவீதின் ஜெபம். |
| **1 நாளா. 29:10–19** | தேவாலய நிர்மாணத்திற்காக ஜனங்கள் கொடுப்பதற்கு விருப்பமுள்ளவர்களாவதற்கான தாவீதின் ஜெபம். |
| **சங். 51:1–19** | பாவமன்னிப்பிற்கான தாவீதின் ஜெபம். |
| **1 இராஜா. 3:6–10** | ஞானத்திற்காகச் சாலமோனின் ஜெபம். |
| **2 நாளா. 6:14–42** | ஆலயம் பிரதிஷ்டைபண்ணப்பட்டபோது, சாலமோன் இராஜா ஏறெடுத்த ஜெபம். |
| **2 இராஜா. 19:14–19** | சனகெரிபிடமிருந்து விடுதலைபெறுவதற்காக எசேக்கியா செய்த ஜெபம். |
| **தானி. 9:3–19** | தன்னுடைய ஜனங்கள் எருசலேமிற்குத் திரும்புவதற்காக தானியேல் செய்த ஜெபம். |
| **மத். 6:9–13** | இயேசு செய்த கர்த்தருடைய ஜெபம். |
| **எஸ்றா 9:5–15** | இஸ்ரவேலின் பாவங்களுக்காக வருந்தி, எஸ்றா செய்த ஜெபம். |
| **யோவான் 17:1–26** | சீஷர்களுக்காக இயேசு செய்த ஜெபம். |
| **லூக்கா 23:34** | இயேசு சிலுவையின்மீதிருந்து, அவரைத் துன்பப் படுத்தினவர்களுக்காக மன்னிப்புக்கேட்டுச் செய்த ஜெபம். |

“திறமையான வேலைக்காரர்களாக இருக்க விரும்பும் அனைவரும் ஜெபத்திற்கு அதிக நேரம் கொடுக்கவேண்டும். தேவனுக்கும் ஆத்துமாவுக்கும் இடையில் உள்ள தொடர்பு திறந்துவைக்கப்பட்டிருக்கவேண்டும்.”—**GW 76.**

“நமக்கு மத்தியில் பெரும் காரியமாக, ஜெபம் அதிகமாக இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது.”—**9T 107.**

“பிறருக்கான நேரடியான முயற்சிக்குமுன், (இரகசியமான) தனி ஜெபம் செல்லவேண்டும் ஏனெனில், ஆத்துமாக்களை இரட்சிக்கின்ற அறிவைப் புரிந்துகொள்ள பெரிய ஞானம் அவசியப்படுகிறது.”—**COL 149.**

“தவறில் இருக்கும் ஒருவருக்கு, அதைரியமடையக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுக்காதீர்கள். நாம் ஜெபம்பண்ணுவோமாக … சாத்தானின் தாக்குதலை ஜெபம் ஒரு பக்கமாகத் திருப்புகிறது என்னும்

மெல்லிய குரலையும் அனுதாபமுள்ள ஒரு கரத்தின் பலமான பிடியையும் அவர் உணருவாராக."—**COL 250.**

"சிறிய ஜெபங்களைச் செய்யவேண்டியது (பொது இடங்களில்) ஒரு கிறிஸ்தவக் கடமை என்பதை அனைவரும் உணரவேண்டும். உலகம் முழுவதற்கும் சுற்றிச்செல்லுவதை விட்டுவிட்டு, உங்களுக்கு என்னவேண்டும் என்பதைச் சுருக்கமாகக் கூறுங்கள். அனைவரும் தனி ஜெபங்களில் தாங்கள் விரும்புகிறவரையில் நீண்ட ஜெபங்களைப் பண்ணும் சலுகையையும் தாங்கள் விரும்புகின்றவரை விளக்கமாக ஜெபிக்கும் சலுகையையும் பெற்றிருக்கின்றனர். தங்களுடைய உறவினர்களுக்காகவும் நண்பர்களுக்காகவும் அவர்களால் ஜெபம்பண்ண முடியும். தங்களுடைய துன்பங்களனைத்தையும் சோதனைகளையும் கூறுவதற்குத் தனி அறை சரியான இடமாக இருக்கிறது. இருதயத்திலுள்ள தனிப்பட்ட காரியங்களைத் திறப்பதற்கு தேவனை ஆராதிக்கின்ற பொதுவான இடம் பொருத்தமான இடம் அல்ல."—**2T 578.**

"ஜெபம் ஆத்துமாவின் மதமாக இருப்பதனால், தனி ஜெபத்தை அலட்சியம் செய்யாதீர்கள்."—**1T 163.**

"ஊக்கமான ஜெபத்தின் சத்தத்தில், சாத்தானின் சேனைகள் முழுவதும் நடுங்குகின்றன."—**1T 436.**

"பெரும் சீர்திருத்தத்தில் உலகத்தை அசைத்த வல்லமை, ஜெபத்தின் இரகசியமான இடத்திலிருந்து வந்தது."—**GC 210.**

"ஜெபம் தேவனில் எந்த ஒரு மாறுதலையும் உண்டுபண்ணுவதற் கென்றில்லாமல், அது நம்மைத் தேவனுடன் இசைவுள்ளவர்களாகச் செய்வதாக இருக்கின்றது."—**COL 143.**

"அதிகமாக ஜெபம்பண்ணுங்கள் ஏனெனில், ஜெபம் முக்கியமான கடமைகளில் ஒன்றாக இருக்கிறது. அது இல்லாமல் உங்களால் ஒரு கிறிஸ்தவ நடத்தையையும் நடத்தமுடியாது. அது உயர்த்துகிறது; பலப்படுத்துகிறது; மேன்மைப்படுத்துகிறது; ஜெபத்தில் ஆத்துமா தேவனுடன் பேசுகிறது."—**2T 313.**

"ஜெபம் என்பது ஒரு நண்பனிடத்தில் மனந்திறந்து பேசுவதுபோல தேவனிடத்தில் இருதயத்தைத் திறப்பதாகும்."—**SC 97.**

"தேவனுக்கு முன்பாக உங்களுடைய தேவைகளை, உங்கள் மகிழ்ச்சிகளை, உங்கள் வருத்தங்களை, உங்கள் கவலைகளை, உங்கள் பயங்களை வைத்துவிடுங்கள். உங்களால் அவரைப் பாரப்படுத்தமுடியாது; அவரைக் களைப்படையச் செய்யமுடியாது. நமது துயரங்களினால்

அவருடைய அன்பின் இருதயம் தொடப்பட்டிருக்கிறது. மனதைக் கலங்கச்செய்கின்ற எல்லாவற்றையும் அவரிடத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். அவரால் சிக்கறுக்க முடியாதபடி மிக அதிகக் கடினமான குழப்பங்கள் எதுவும் இல்லை. வேறு ஓர் ஆத்துமாவும் இல்லாததுபோல், ஒரே ஓர் ஆத்துமாவிற்காகத் தேவன் தமது நேசக் குமாரனைக் கொடுத்தார் என்பது போன்றதாக, தேவனுக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் இடையிலுள்ள உறவு சிறப்பானதாகவும் முழுமையானதாகவும் இருக்கிறது."—**SC 105.**

"ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேற்றமடைய விரும்பினால், நாம் அதிகமாக ஜெபத்தில் இருக்கவேண்டும். சத்தியத்தின் தூது முதலில் அறிவிக்கப்பட்டபோது எவ்வளவு அதிகமாக நாம் ஜெபித்தோம். அறையிலும் பண்ணை வீட்டிலும் பழத் தோட்டங்களிலும் தோப்புகளிலும் பரிந்துபேசுதலின் குரல் எவ்வளவு அடிக்கடி கேட்கப்பட்டிருந்தது. இரண்டு மூன்றுபேர் ஒன்றாகக் கூடி, வாக்குத்தத்தைப் பற்றிக்கொண்டு, அக்கறையுடன் ஜெபத்தில் அடிக்கடி பலமணி நேரங்களை நாம் செலவுசெய்திருந்தோம். அடிக்கடி அழுகையின் சத்தம் கேட்கப்பட்டது; அதற்குப்பின், நன்றி கூறும் குரலும் துதியின் பாடலும் கேட்கப்பட்டன. நாம் முதலாவது நம்பியிருந்ததைவிட இப்பொழுது தேவனுடைய நாள் சமீபமாய் இருக்கிறது. நாம் மிகவும் அதிகமான அக்கறை உள்ளவர்களாகவும், அதிகமான பேரார்வம் உள்ளவர்களாகவும், அந்த ஆரம்ப நாட்களைவிட அதிகமான ஊக்கமுடையவர்களாகவும் இருக்கவேண்டும். அப்போதிருந்ததைவிட இப்போது நமது ஆபத்துக்கள் பெரியவைகளாக உள்ளன. ஆத்துமாக்கள் அதிகமாகக் கடினமடைந்தவர்களாக உள்ளனர். கிறிஸ்துவின் ஆவியினால் நிரப்பப்படவேண்டிய நமக்கு ஜெபம் அவசியமானதாக இருப்பதுடன், அதைப் பெற்றுக்கொள்ளும்வரை ஓய்ந்துபோகக்கூடாது."—**5T 161,162.**

"உங்கள் அறையில் ஜெபம்பண்ணுங்கள். நீங்கள் உங்களுடைய அன்றாட வேலையைச் செய்துகொண்டிருக்கும்போது, உங்களுடைய இருதயம் அடிக்கடி தேவனுக்கு நேராக உயர்த்தப்படட்டும். இவ்வாறாகத்தான் ஏனோக்கு தேவனுடன் சஞ்சரித்தான். கிருபையின் சிங்காசனத்திற்கு முன்பாக இந்த இரகசியமான ஜெபங்கள் விலைமதிப்புமிக்க சுகந்த வாசனையைப்போல எழுகிறது. தேவன்மீது எவனுடைய இருதயம் தங்கியிருக்கிறதோ, அவனைச் சாத்தானால் மேற்கொள்ள முடியாது."—**SC 103.**

"நாம் சிலுவையைச்சுற்றி ஒன்றுகூடவேண்டும். நமது தியானம், உரையாடல், மகிழ்ச்சிமிக்க உள்ளக்கிளர்ச்சி ஆகிய யாவும் கிறிஸ்துவையும், சிலுவையிலறையப்பட்ட அவரையும்பற்றிய தியானப் பொருளாகவே இருக்க வேண்டும். நாம் தேவனிடத்திலிருந்து பெறும் ஒவ்வோர் ஆசீர்வாதத்தையும் நமது எண்ணங்களில் கொண்டிருந்து, அவரது பெரிய அன்பை உணரும்

போது, நமக்காகச் சிலுவையில் அறையப்பட்ட கரத்தினிடம் எல்லாவற்றையும் நம்பிக்கையுடன் ஒப்படைக்க நாம் விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

"துதியின் இறக்கைகளுடன் ஆத்துமா பரலோகத்திற்குச் சமீபமாக உயரலாம். உன்னதத்திலுள்ள பிராகாரங்களில் தேவன் பாடல்களினாலும், இசையினாலும் ஆராதிக்கப்படுகிறார். நாம் நமது நன்றியறிதலை வெளிக்காட்டும்போது, பரலோக சேனைகள் செய்யும் ஆராதனைக்குச் சமீபித்துக்கொண்டிருக்கிறோம். துதிசெலுத்துகிற எவனும் தேவனை மகிமைப் படுத்துகிறான். நன்றி கூறுதலுடனும் இனிய குரலுடனும் நாம் பக்திமிக்க மகிழ்ச்சியுடன் நமது சிருஷ்டிகருக்குமுன் வருவோமாக." —**SC 109.** ★

# 26

# சபையின் அஸ்திபாரம்!

**மத். 16:18** சபை பாறையின்மீது கட்டப்பட்டுள்ளது.

**குறிப்பு :**– இந்தப் பாறை இப்போதுதான் பேதுருவால் கூறப்பட்ட (வச. 16) சத்தியத்தின்படி நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாக இருக்கிறீர். இந்தப் பெரிய சத்தியத்தின்மேல்தான் கிறிஸ்தவ சபை கட்டப்பட்டிருக்கிறது.

**1 கொரி. 10:4** "அந்தக் கன்மலை கிறிஸ்துவே."

**சங். 18:31** "நம்முடைய தேவனையன்றிக் கன்மலை யார்?"

**ஏசா. 44:8** "என்னைத் தவிர தேவனுண்டோ?" இந்த 'தேவன்' என்று அர்த்தமுள்ள சொல், கன்மலை என்று அர்த்தமுள்ள ஓர் எபிரெய வார்த்தையிலிருந்து வருகிறது. "வேறு ஒருவனையும் அறியேன்."

**மத். 21:42** "வீடு கட்டுகிறவர்கள் (யூத சபைத் தலைவர்கள்) ஆகாததென்று தள்ளின கல்லே (கல்–இயேசு) மூலைக்குத் தலைக்கல்லாயிற்று" (புதிய புறஜாதிகளின் சபையானது).

**குறிப்பு :**– கன்மலையாக அல்லது மூலைக்குத் தலைக்கல்லாக இயேசு இருக்கிறார் என்று வசனங்கள் காட்டுகின்றன.

**1 கொரி. 3:11** "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல், வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது."

**குறிப்பு:**– பேதுருதான் கன்மலையென்று ரோமன் கத்தோலிக்கச் சபை கூறுகிறது; அது உண்மையல்ல. மத். 16:13–23–ல் உள்ள கீழ்க்காணும் காரியங்களைக் கவனியுங்கள்:

1. இங்குள்ள அறிமுகம் இயேசுவைப்பற்றி இருக்கிறது (வச. 13,14).

**2.** முடிவும் இயேசுவைப்பற்றினதாகவே இருக்கிறது (வச. 20).

**3.** பாதாளத்தின் வாசல்கள் பேதுருவை மேற்கொண்டன. (மத். 16:23; 26:69–75; கலா. 2:11–14) ஆகையால், பேதுரு கன்மலையாக இருக்கமுடியாது.

**4.** இங்கு, பேதுருவை இயேசு உயர்த்திக்கொண்டிருக்கவில்லை என்பதைச் சீஷர்கள் அறிந்திருந்தனர். அதி. 18:1–ல் உள்ள கேள்வி இப்படிப்பட்டதாக இருக்கிறது.

**5.** கிறிஸ்து கன்மலையாக அல்லது பெரிய கல்லாக இருக்கிறார் என்று பேதுரு தானே கூறுகிறான் (அப். 4:10–12; 1 பேதுரு 2:6–8).

**6.** கிறிஸ்துதான் கன்மலையாக இருக்கிறார் என்று புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகள் காட்டுகின்றன (மத். 21:42; ரோமர் 9:33; 1 கொரி. 10:4; எபே. 2:20).

**7.** கன்மலை என்பது தேவனுடைய வேறொரு பெயர் என்று பழைய ஏற்பாடும் காட்டுகிறது. (உபா. 32:3,4,15,18,30; 1 சாமு. 2:22; 22:2,3,32; சங். 18:2,31; ஏசா. 44:8).

**8.** ஒரே அஸ்திபாரம் இயேசு கிறிஸ்துதான் என்று பவுல் கூறுகிறான். (1 கொரி. 3:11).

ஆகவே, பேதுரு கன்மலையாகவோ சபையின் அஸ்திபாரமாகவோ இருக்கமுடியாது என்பது தெளிவானதாக இருக்கிறது. மத். 16:16–ல் பேதுரு கூறின பெரிய சத்தியமாக அது இருக்கிறது. அதுவே சபையின் அஸ்திபாரமாகவும் இருக்கிறது.

“பேதுரு அறிக்கைசெய்த சத்தியம் விசுவாசிகளின் விசுவாசத்திற்கு அஸ்திபாரமாயிருக்கிறது. பேதுரு என்னும் சொல், ஒரு கல்லைக் குறிக்கிறது. பேதுரு சபையின் அஸ்திபாரமான கன்மலையாக இருக்கவில்லை. பேதுரு தன்னுடைய கர்த்தரை மறுதலித்தபோதும், சபித்தபோதும் பாதாளத்தின் வாசல்கள் அவனை மேற்கொண்டன. எந்த ஒருவரை பாதாளத்தின் வாசல்களால் மேற்கொள்ள முடியாமலிருந்ததோ அந்த ஒருவரின்மீது சபை கட்டப்பட்டிருந்தது. தேவனுடைய சமூகத்திலும், பரலோக நுண்ணறிவாளர்களுக்கு முன்பாகவும், காணமுடியாத பாதாளத்தின் சேனைக்கு முன்பாகவும், ஜீவனுள்ள கன்மலையின்மீது, கிறிஸ்து அவருடைய சபையை ஸ்தாபித்தார். அந்தக் கன்மலையாக அவர்தாமே இருக்கிறார். நமக்காக அவரது சொந்த சரீரம் நொறுக்கப்பட்டது; காயப்படுத்தப்பட்டது; இந்த அஸ்திபாரத்தின்மீது கட்டப்பட்டுள்ள சபைக்கு எதிராகப் பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளமாட்டாது.”—**DA 412 413.** ★

# 27

# இராஜ்யத்தின் திறவுகோல்

**மத். 16:19** திறவுகோல்கள் பேதுருவுக்குக் கொடுக்கப்பட்டன.

**மத். 18:18** கட்டவும் கட்டவிழ்க்கவுமான வல்லமை பேதுருவுக்கு மட்டும் கொடுக்கப்படாமல், தேவனுடைய சபை முழுவதற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**குறிப்பு:** யூத மொழியில் உள்ள மொழிமரபின்படி, கட்டுதல் கட்டவிழ்த்தல் என்னும் வாக்கியத்தின் பொருள், எது பிரமாணத்தின்படியானது எது பிரமாணத்தின்படியானதன்று என்று அறிவிக்கும் சபையின் அதிகாரத்தை அர்த்தப்படுத்துவதாக உள்ளது; எது சரி அல்லது எது சரியில்லை என்று கூறுவதாக உள்ளது; எது செய்யப்படலாம் அல்லது எது செய்யப்படமுடியாது என்று சுட்டிக்காட்டுவதாக உள்ளது; இந்த வார்த்தைகள் சபைக்குள் மக்களை ஏற்றுக்கொள்ளுவது அல்லது சபையிலிருந்து மக்களை நீக்குவது என்பதில் சபைக்குள்ள அதிகாரத்தையுங்கூடக் காட்டுகிறது. (வச. 17,18 பார்க்கவும்). இவ்வாறாக, சபை பெரிய அதிகாரத்தை உடையதாகவும், பூமியின்மீது தேவனுடைய போதிக்கும் ஏதுகரமாகவும் உள்ளது. தேவனுடைய சபை கூறுவதை மக்கள் கவனித்து, அதற்கு மரியாதை காட்டவேண்டும்; இருந்தபோதிலும், சபை இவைகளையெல்லாம் தான் வேதாகமத்திற்கு இசைவாக இருக்கும்வரை மட்டுமே செய்யமுடியும். தேவனுடைய வார்த்தையில் இல்லாதவைகளைப் போதிக்கின்ற அதிகாரம் அதற்கு இல்லை (உபா. 4:2; ஏசா. 8:20; மத். 15:3,6,9; கலா. 1:8,9; வெளி. 22:18,19 பார்க்கவும்). பரிசுத்த வேதவாக்கியங்கள் இவ்வாறாக இருக்கின்றன என்பது தெளிவானதாக இருக்கிறது. சபையால் வேதவாக்கியங்களுக்கு அப்பால் செல்லமுடியாது. ஜனங்களுக்குப் பரலோகத்தைத் திறக்கவும் (அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளுவதற்குத்தக்கதாக) அல்லது மக்களுக்குப் பரலோகத்தை அடைக்கவும் (அவர்கள் தேவனுடைய வார்த்தையை நிராகரிப்பார்களானால்), இந்தத் திறவுகோல்கள் பயன்படுத்தப்படலாம்.

**லூக்கா 24:27** சத்தியத்தைப் போதிக்க இயேசு வேதவாக்கியங்கள் அனைத்தையும் பயன்படுத்தினார்.

**லூக். 24:45** வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளும்படி இயேசு அவர்களுடைய புரிந்துகொள்ளும் சக்தியைத் திறந்தார்.

**லூக். 11:52** யூதத் தலைவர்கள் மக்களிடமிருந்து திறவுகோலை (பழைய ஏற்பாட்டை) எடுத்துக்கொண்டார்கள்; ஆனால், பேதுருவுக்கும் தேவனுடைய சபை அனைத்திற்கும், எல்லா ஜனங்களுக்கும் சத்தியத்தைத் திறக்கும்படி திறவுகோல்களாகக் (பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும்) கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**அப். 17:11** பவுல் தங்களுக்குக் கூறியிருந்த சத்தியங்களைச் சோதிப்ப தற்குப் பெரோயா பட்டணத்து மக்கள் திறவுகோல்களை (வேதவாக்கியங்களை) பயன்படுத்தினார்கள்.

**2 தீமோ. 3:15-17** "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும்செய்யத்தகுதியுள்ளவனாக இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றன." பரிசுத்த வேத வாக்கியங்கள் நம்மை இரட்சிப்பிற்கேற்ற ஞானமடையச் செய்கின்றன.

பரிசுத்த வேதவாக்கியங்கள் நமக்குச் செய்யக்கூடிய எல்லாக் காரியங்களையும் கவனியுங்கள். வேறு எதை நாம் அதிகமாக பெற்றிருக்க வேண்டும்? அவைகள் பரலோகச் சத்தியங்கள் அனைத்தையும் திறக்கின்ற இரட்சிப்பின் திறவுகோல்களாக உள்ளன.

"கிறிஸ்துவின் வார்த்தைகள் பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்க ளாக உள்ளன. பரிசுத்த வேதவாக்கியங்களிலுள்ள வார்த்தைகள் அனைத்தும் அவருடையவைகள்; அவைகள் இங்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. பரலோகத்தைத் திறக்கவும் அடைக்கவும் அவைகள் வல்லமை கொண்டிருக்கின்றன. எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் மனிதர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவாரோ அல்லது நிராகரிக்கப்படுவாரோ, அவைகளை அவை அறிவிக்கின்றன; இவ்வாறாக, தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கம் செய்பவர்களின் பணி, நித்திய ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாக அல்லது மரணத்திற்கேதுவான மரண வாசனையாக இருக்கின்றது. நித்திய பலன்களை எடையிடுகின்ற ஒன்றாக அவர்களுடைய ஊழியம் இருக்கிறது."—**DA 413,414.** ★

# 28

# மருள விழுகை!

**அப். 20:28–30** "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிய ஓநாய்கள் உங்களுக்குள்ளே (சபைக்குள்ளே) வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள்" என்று பவுல் கூறுகிறான்.

**குறிப்பு:–** அஞ்ஞான ரோமாபுரியிலிருந்துண்டான பயங்கரமான உபத்திர வங்களின் காரணமாக ஆரம்ப காலத்தில் உண்மையான மக்கள்மட்டுமே கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். அப்படியிருந்தபோதிலும் கி.பி.312–ல் கான்ஸ்டன்டைன் ரோம நாட்டின் பேரரசனாகி, கிறிஸ்தவ மார்க்கத்தைத் தனது அரசாங்க மதமாக்க முடிவுசெய்தான். அவனுடைய உதாரணத்தைப் பின்தொடர்ந்து இலட்சக்கணக்கான அஞ்ஞானிகள் கிறிஸ்தவ சபைக்குள் பிரவேசித்தார்கள்; ஆனால் அவர்கள் தங்களுடன் தங்களுடைய பழைய விக்கிரகங்களையும், புனித நீரையும், குருமார்கள் கன்னியாஸ்திரீகள் ஆகியோரின் பிரம்மச்சரியத்தையும், ஞாயிற்றுக்கிழமை ஆராதனையையும், உத்தரிக்கும் ஸ்தலக் கோட்பாட்டையும் மற்றவைகளையும் கொண்டுவந்தார்கள். இவ்விதமாக, அஞ்ஞான மார்க்கம் கிறிஸ்தவ மதத்துடன் கலந்து, விரைவில் கிறிஸ்தவ மதம் மருளவிழுகையில் அமிழ்ந்துபோகத் தொடங்கியது. இந்த மருள விழுகைதான் இன்று நாம் ரோமன் கத்தோலிக்க சபை என்று கூறும் சபையாக முன்னேற்றமடைந்தது!

**2 தெச. 2:1–4** இயேசு திரும்பிவருவதற்குமுன், முதலில் ஒரு விழுகை உண்டாகுமென்றும், "பாவ மனுஷன் வெளிப்படுவான்" என்றும் பவுல் அறிவிக்கிறான். ஓய்வுநாளை மாற்றி, விக்கிரகங்களுக்குமுன் குனியும்படி மக்களுக்குப் போதித்து, பூமிக்குரிய ஒரு ஆசாரியத்துவத்தை உண்டுபண்ணி, பூமிக்குரிய ஒரு பாவமன்னிப்பை உண்டு பண்ணி, அநேக நூற்றாண்டுகளாக வேதாகமத்தை மக்களைவிட்டு நீக்கியிருந்த ரோமாபுரியில், போப்புவின்கீழ்

உண்டான (இந்த) பெரிய மருள விழுகையில், மேலே கூறப்பட்ட வசனம் நிறைவேறியது.

**தேவனுடைய ஆலயத்தில் தேவனைப்போல் உட்கார்ந்து**—தேவனுடைய உண்மையான ஆலயமாக இருந்து, இப்பொழுது விழுந்துபோயிருக்கிற ஆலயத்தில் ரோமாபுரியின் போப்புமார்கள் உட்கார்ந்துகொண்டிருக்கின்றனர். **தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும்...**தேவனுடைய ஆலயமாக இருக்கவேண்டிய ஆலயத்திற்குள் மிகச் சரியாக ஒரு மனிதன் எழும்பி, பூமியின்மீது தான் அதே தேவனாக இருப்பதாகவும், மனிதர்கள் வேதகாமத்திற்குப் பதிலாக தன்னுடைய வார்த்தைகளைக் கவனிக்கவும் சொல்லுவான்.

**அப். 3:20,21** இயேசு பூமிக்குத் திரும்பிவருவதற்குமுன், முதலில் தேவனுடைய சத்தியம் முழுவதும் திரும்பிவரும்; அவ்வாறு சத்தியம் திரும்பிவருவது சீர்திருத்தவாதிகளால் கீழ்க்காணும் வண்ணம் ஆரம்பமாயிற்று:

| | |
|---|---|
| **இங்கிலாந்தின் ஜான் விக்ளிப்** | **(1320 – 1384)** |
| **பொஹேமியாவின் ஹஸ்சும் ஜெரோமும்** | **(1373 – 1415)** |
| **இத்தாலியின் சவனரோலா** | **(1452 – 1498)** |
| **ஜெர்மனியின் மார்ட்டின் லூத்தர்** | **(1483 – 1546)** |
| **சுவிட்சர்லாந்தின் சுவிங்ளி** | **(1484 – 1531)** |
| **ஸ்காட்லாந்தின் ஜான் நாக்ஸ்** | **(1505 – 1572)** |
| **பிரான்சின் ஜான் கால்வின்** | **(1509 – 1564)** |

அதற்குப்பின்

| | |
|---|---|
| **இங்கிலாந்தின் ஜான் வெஸ்லி** | **(1703 – 1781)** |

தேவனுடைய சத்தியத்தைத் திரும்பக் கொண்டுவருவதில் அதிகமாக சீர்திருத்தவாதிகளில் தலை சிறந்தவராக **டாக்டர் மார்ட்டின் லூத்தர்** இருந்தார்.

| | |
|---|---|
| **டாக்டர் மார்டின் லூத்தர்** | **விசுவாசத்தினால் உண்டாகும் நீதி!** |
| **பாப்டிஸ்டுகள்** | **முழுக்கு ஞானஸ்நானம்!** |
| **மெதடிஸ்டுகள்** | **வாழ்க்கையில் சுத்தமான தன்மை!** |

| | |
|---|---|
| **அட்வெண்டிஸ்டுகள்** | **கிறிஸ்து வருகை சமீபமாயிருக்கிறது என்பதைக் காட்டும் தீர்க்கதரிசன ஆராய்ச்சி.** |

அமெரிக்காவிலுள்ள **வில்லியம் மில்லர்**, மத்திய தரைக்கடல் அருகில் உள்ள கிழக்குப் பகுதியிலுள்ள **ஜோசப் உல்ப்**, ஜெர்மனியைச் சேர்ந்த **விட்ரிங்கோ,** இங்கிலாந்தைச் சேர்ந்த **எட்வர்ட் இர்விங், ஹென்றி டிரம்மண்ட்** ஆகிய அப்படிப்பட்ட மனிதர்களால் கொண்டுசெல்லப்பட்டது.

**செவன்த்— டே அட்வெண்டிஸ்டுகள் :–** முந்தைய சீர்திருத்தவாதிகளால் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள எல்லாக் காரியங்களையும் நம்புவதுடன், தேவனுடைய ஓய்வுநாளைப்பற்றியும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆயத்தமாயிருப்பதுபற்றியும் போதிக்கின்றனர்.

**வெளி. 12:17** பூமியின்மீதுள்ள தேவனுடைய மீதமான அல்லது கடைசிச் சபை இரண்டு அடையாளங்களை உடையதாக இருக்கும். அவர்கள்:

1. **தேவனுடைய கற்பனைகளைக் காத்துக்கொள்ளுகிறவர்கள்!**
2. **இயேசுவைக்குறித்த சாட்சியை உடையவர்கள்!**

**குறிப்பு:– செவன்த்—டே அட்வெண்டிஸ்ட் சபைதான் இந்த இரண்டு அடையாளங்களையும் கொண்டிருக்கிறது; ஆகையால், செவன்த்—டே அட்வெண்டிஸ்ட் சபைதான் தேவனுடைய இன்றைய உண்மையான— மீதமான சபை.** இப்பொழுது எல்லா சத்தியங்களும் முழுமையாகத் திரும்பக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இயேசு விரைவில் வருவார்! ★

# 29

# வனாந்தரத்தில் சபை!

**மத். 16:18** பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை.

**மத். 28:20** இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம், நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.

**குறிப்பு:**—இந்த இரண்டு வசனங்களிலும் பூமியிலுள்ள தம்முடைய சபையை தாம் எப்பொழுதும் பார்த்துக்கொள்ளுவதாகத் தேவன் வாக்குத்தத்தம்பண்ணுகிறார். போப்பு மார்க்கம் உலகத்தை ஆட்சி செய்த **1260** வருடங்களில், அது தேவனுடைய ஜனங்களை முற்றிலுமாக அழித்து நீக்கிவிட முயன்றபோது, தேவன் அவருடைய சத்தியத்தை வனாந்தரத்தில் காப்பாற்றி வைத்தார் என்பதை வெளி. 12—ம் அதிகாரம் காட்டுகிறது.

**வெளி. 12:1** **"ஒரு ஸ்திரீ"** —தேவனுடைய உண்மையான சபை. (1 கொரி. 11:2)

**"சூரியன்"** —புதிய ஏற்பாடு—சுவிசேஷத்தின் முழு ஒளி.

**"சந்திரன்"** —பழைய ஏற்பாடு—குறைவான ஒளி. (குறிப்பு: ஸ்திரீயாகிய சபை சந்திரனின் மீது நிற்பதைக் கவனியுங்கள். புதிய ஏற்பாடு சுவிசேஷத்தின் சத்தியத்தை இன்று சூரியனைப்போல மிகத் தெளிவாக வெளிப்படுத்தினாலும், இன்னும் பழைய ஏற்பாடுதான் தேவனுடைய சத்தியத்தின் அஸ்திபாரமாக இருக்கிறது.)

**"நட்சத்திரங்கள்"** —தேவனுடைய தலைவர்கள் (பழைய ஏற்பாட்டில் 12 வம்சங்கள். புதிய ஏற்பாட்டில் 12 அப்போஸ்தலர்கள்).

## வனாந்தரத்தில் மெய்யான சபை:
## (வெளி. 12)

இயேசு கிறிஸ்துவாகிய
கன்மலையின்மேல்
கட்டப்பட்ட சபை

1 கொரி. 3:11

காண்ஸ்டன்டைனின்
மதமாற்றம்
கி.பி.312.

முதல்
ஞாயிறு ஆசரிப்புச் சட்டம்
கி.பி.321.

சபை மருளவிழுகிறது!

கிறிஸ்தவ சபையில்
அஞ்ஞான சம்பிரதாயங்கள்
ஒன்று கலக்கின்றன.
அப். 20:28–30.

★ஞாயிற்றுக் கிழமை

★ விக்கிரகங்கள்

★பூமிக்குரிய
ஆசாரியர்கள்

★உத்தரிக்கும் ஸ்தலம்.

★அப்பத்தை ஆராதித்தல்

★மரியாளை
வணங்குதல்.

★வேதாகமம்
நீக்கப்படுகிறது.

2 தெச. 2:1–4.

போப்புமார்க்கம் முழுமையாக ஸ்தாபிக்கப்பட்டது!
தேவனுடைய சத்தியம் மாற்றப்பட்டது!

★அட்வென்டிஸ்டுகள்:
கிறிஸ்துவின்
இரண்டாம் வருகை
சமீபம்.

★பாப்டிஸ்டுகள்:
முழுக்கு
ஞானஸ்நானம்.

★மெதடிஸ்டுகள்:
வாழ்க்கையில் சுத்தம்.

★மார்டின் லூத்தர்:
விசுவாசத்தினால்
உண்டாகும் நீதி.

மீதியான சபை
செவன்த்—டே அட்வென்டிஸ்ட் சபை!
சகல சத்தியங்களையும்
திரும்பவும் கொண்டுவருதல்!

வெளி. 12:17

சபை காத்துக்கொள்வது
தேவனுடைய
கற்பனையையும்
இயேசுவைப்பற்றிய
சட்சியையும்.

இயேசு திரும்பி
வருவதற்குமுன் எல்லாச்
சத்தியங்களையும் திரும்பக்
கொண்டுவருதல்.
அப். 3:20,21.

**வெளி. 12:3** **“ஒரு பெரிய வலுசர்ப்பம்”**—பிசாசு, சாத்தான் (வச. 9). **“ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும்”**—பூமியின் எல்லா அரசாங்கங்களின் மேலும் சாத்தான் ஆட்சிசெய்கிறான்.

**குறிப்பு:**– வேதாகமத்தில் ஏழு என்னும் எண் சில சமயங்களில் முழுமை—நிறைவு—என்பதை அர்த்தப்படுத்துகிறது; எனவே, ஏழு தலைகளை என்னும் சொல், இந்த உலகத்தின் எல்லா இராஜ்ஜியங்களையும் அரசாங்கங்களையும் சாதாரணமாக அர்த்தப்படுத்துகிறது—மனித அமைப்புகள் முழுவதையும் அர்த்தப்படுத்துகிறது என்று சில மக்கள் நம்புகின்றனர். இவர்கள் அனைவரும் தேவனுடைய ஜனங்களுக்கு எதிராக, சாத்தானின் யுத்தத்தில், சாத்தானால் நடத்தப்பட்டவர்களாகின்றனர்; அதனால் தான் என்னுடைய இராஜ்ஜியம் இந்த உலகத்திற்குரியதல்ல என்று இயேசு கூறுகிறார். பத்துக் கொம்புகள் என்னும் சொல் சாதாரணமாக இந்த எண்ணத்தைத் திரும்பக் கூறுகிறது அல்லது பலப்படுத்துகின்றது; ஏனெனில், உலகப் பேரரசான ரோமாபுரி பத்து இராஜ்யங்களாக விழுந்ததை (தானியேல் 7:24) அவைகள் அடையாளப்படுத்துவதுடன் பூமியிலுள்ள எல்லா நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தமுடியும்.

எல்லாம் சாத்தானின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதினால், பூமிக்குரிய வல்லமைகளின்மீது கிறிஸ்தவர்களால் அவர்களுடைய விசுவாசத்தை வைக்கமுடியாது என்பதை இது காட்டுகிறது.

தேவனுடைய ஜனங்களுக்கு எதிராகச் சாத்தான் நடத்தும் போரில் அவன் கட்டுப்பாட்டின்கீழ் வருவதினால், பூமிக்குரிய வல்லமைகளின்மீது கிறிஸ்தவர்களால் தங்களது விசுவாசத்தை வைக்கமுடியாதென்பதை இது காட்டுகிறது.

தேவனுடைய ஜனங்களுக்கு எதிரான சாத்தானின் சண்டையில், அவன் கட்டுப்படுத்துகின்ற பூமியின் தேசங்களனைத்தையும் பத்துக் கொம்புகள் எடுத்துக் கொள்கின்றன என்று மற்ற ஜனங்கள் நம்பும்போது, ஏழு தலைகள் என்பது தானியேலின் தீர்க்கதரிசனத்திலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் உள்ள பூமியின் ஏழு பெரிய அரசாங்கங்களையும், அவைகளின்மூலமாகச் சாத்தான் கடந்த காலத்தில் உலகம் முழுவதையும் கட்டுப்படுத்தினதையும், எதிர்காலத்திலும் அதேவிதமாகச் செய்யப்போவதையும் அர்த்தப்படுத்துகிறது.

இந்த ஏழு அரசாங்கங்களும் இவைகளாக இருக்கும்:

1. **பாபிலோன்**
2. **மேதிய—பெர்சியா**

3. **கிரேக்கம்**
4. **அஞ்ஞான ரோம அரசு**
5. **போப்புவின் ரோமாபுரி**
6. **சாத்தானின் ஆட்சி—சாத்தான் தானாகவும் அவனது பொல்லாத தூதர்களின் கூட்டத்துடனும் ஆயிரம் வருடம் இந்தப் பூமியின்மீது ஆட்சிசெய்யும்படி வற்புறுத்தப்படும்போது, அது அவனுடைய ஆட்சியாக இருக்கும்.—வெளி. 20:1–3.**
7. **ஆயிரம் வருடங்களுக்குப்பின், சிறிது காலத்திற்குப்பின் (வெளி. 20:3) யுகங்கள் நெடுகிலுமுள்ள துன்மார்க்கமான ஜாதிகள்—நாடுகளனைத்தையும் கடற்கரை மணலத்தனையான எண்ணிக்கை உள்ளவர்களையும் (வச. 8) சேர்த்துக்கொண்டு, புதிய எருசலேமைக் கைப்பற்றிக்கொள்ள நடத்துகிறான் ஆனால் அவன் முற்றிலுமாகத் தோற்றுப்போகிறான் (வச. 9).**

**வெளி. 12:4** சாத்தான் விழுந்தபோது, மூன்றிலொரு பங்கு தேவ தூதர்களும் அவனுடன் விழுந்தார்கள்—வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கு!

இயேசு பிறந்தவுடன் அவரைக் கொலைசெய்ய முயற்சிசெய்வதற்குச் சாத்தான் ஏரோதையும் அவனுடைய சேனை வீரர்களையும் பயன்படுத்தினான். (அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு...).

**வெளி. 12:5** ஒரு நாள் இயேசு பெரிய பலத்துடன் ஆட்சிசெய்வார்.

**வெளி. 12:6** போப்பு மார்க்கத்தின் பயங்கரமான உபத்திரவம் ஆரம்பித்தவுடன் சபை **1260** வருட காலம் வனாந்தரத்திற்கு ஓடிப்போகவேண்டியதாயிற்று. விஜிலியஸ் என்னும் போப்பு முதல் தடவையாகச் சுதந்தரமான அரசனாக ஆட்சியைத் தொடங்கினபோது,—**கி.பி. 538–ல், இது ஆரம்பமாயிற்று. 1260 வருடங்களுக்குப்பின், நெப்போலியனின் தளபதியான ஜெனரல் பெர்தியர், ஆறாவது போப்பாக இருந்த நான்காம் பயஸ் என்பவரை அவரது அரசாங்கச் சிங்காசனத்திலிருந்து கீழே இறக்கி, ஒரு கைதியாக பிரான்சுக்கு சிறைபிடித்துச் சென்றான். அங்கு அந்தப் போப்பு இறந்து போனார்.** அந்த **1260** வருடக் காலக்கட்டம் கி.பி. 1798–ல் முடிவடைந்தது. இந்த நேரத்தில், தேவனுடைய உண்மையான சபை வனாந்தரத்திலிருந்து

வெளியேவந்து, தேவனுடைய வேலையை முடிப்பதற்காக மறுபடியும் உலகம் முழுவதற்குள்ளும் செல்லும் தகுதியை அடைந்தது.

**வெளி. 12:7–10** மிகாவேல் (இயேசு கிறிஸ்து), சாத்தானுக்கெதிரான போரில் அவனை ஜெயிக்கிறார். சாத்தான் பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்படுகிறான். (இந்த வசனங்கள் சாத்தான் பரலோகத்திலிருந்து வெளியில் தள்ளப்பட்ட வரலாற்றின் காலத்தை நமக்குக் கொடுக்கப் பின்நோக்கிச் செல்லுகிறது).

**வெளி. 12:11** தேவனுடைய இரத்தச்சாட்சிகள் தங்களுடைய விசுவாசத்தை விட்டுவிடுவதற்குப்பதிலாக, இரத்தச்சாட்சிகளாக மரித்தார்கள். (இந்தப் பயங்கரமான காலத்தின்போது, உத்தேசமாக ஐந்து கோடி மெய் விசுவாசிகள் இரத்தசாட்சிகளாக மரித்தார்கள்!).

**வெளி. 12:12** இயேசு வெகு சீக்கிரத்தில் வருவாரென்றும், தன் வாழ்வு முடிவதற்கு கொஞ்சக் காலம்மட்டுமே இருக்கிறதென்பதையும் அறிந்திருப்பது, சாத்தானை அதிகக் கோபமுள்ளவனாக்குகிறது.

**வெளி. 12:14** ஒரு காலமும் காலங்களும் அரைக் காலமும் செல்லுமட்டும் அல்லது **1260** வருடங்கள் சபை வனாந்தரத்தில் பாதுகாக்கப்பட்டது. (வச. 6 பார்க்கவும்).

| | | | |
|---|---|---|---|
| **காலம்** | — | **ஒரு யூத வருடம்** | **360 நாட்கள்** |
| **காலங்கள்** | — | **இரண்டு யூத வருடங்கள்** | **720 நாட்கள்** |
| **அரைக் காலம்** | — | **அரை யூத வருடம்** | **180 நாட்கள்** |
| | | | **1260 நாட்கள்** |

**குறிப்பு:**–இந்த **1260** தீர்க்கதரிசன நாட்கள் அல்லது வருடங்கள் (எண்.14:34; எசே. 4:6) என்பதின் விளக்கமாகும்.

**வெளி. 12:15,16** பிசாசு சபையை அழிக்க வெள்ளத்தை (ஜனங்களையும், சேனைகளையும் வெளி. 17:15) அனுப்புகிறது. ஆனால், தேவன் அவருடைய உண்மையான சபையை வனாந்தரத்தில் பாதுகாப்பதில் தொடருகிறார்.

**வெளி. 12:17** பூமியின்மீதுள்ள தேவனுடைய மீதியான அல்லது கடைசிப் பகுதியான உண்மையான சபை இரண்டு அடையாளங்களைக் கொண்டிருக்கிறது!

# வனாந்தரத்தில் உள்ள சபை!

**ரோமாபுரியின் போப்பு ஓர் அரசராக ஆட்சிசெய்யத் தொடங்குகிறார்!**

**கி.பி. 538**

**நெப்போலியனின் தளபதி ஜெனரல் பெர்தியர் நான்காம் போப் பயசைக் கைதுசெய்கிறார்!**

**கி.பி.1798**

## வனாந்தரத்தில் சபை

**1260 வருடம் போப்பு மார்க்கச் சபை ஆட்சிசெய்தது. உண்மையான கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு அந்தக் காலப்பகுதி உபத்திரவக்காலமாக இருண்ட நாட்களாக இருந்தது.**

1. தேவனுடைய கற்பனைகளைக் காத்துக்கொள்ளுகிறது!.
2. இயேசுவைப்பற்றிய சாட்சியை உடையதாக இருக்கிறது!!

இவைகளே செவன்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் அடையாளங்களாக உள்ளன. இதனால் நாமே கடைசிகாலத்தின் தேவனுடைய மீதமான சபை என்று அறிகிறோம்.

1. தேவனுடைய கற்பனைகள் அனைத்தையும் காத்துக்கொள்ளுகிற
2.. முழுமையாகவும் முற்றிலுமாகவும் இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ள ஒரு சபையை தேவன் எதிர்பார்க்கிறார். ★

# 30

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி அவர்தாமே முன்னுரைத்த தீர்க்கதரிசனங்கள்: மத்தேயு 24

**மத் 24:2** யூதர்களின் தேவாலயத்தின் அழிவைப்பற்றிக் கிறிஸ்து முன்னறிவிக்கிறார் அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.

**வச. 3** சீஷர்கள் இயேசுவிடம் இரண்டு கேள்விகளைக் கேட்கின்றனர்.

1. **எருசலேம் எப்பொழுது அழிக்கப்படும்?**

2. **எப்பொழுது இயேசு திரும்பி வருவார்?**

உலகத்தின் முடிவு எப்பொழுது வரும்?

குறிப்பு:– இந்த இரண்டு சம்பவங்களும் ஒன்றுசேர்ந்து நடைபெறும் என்று சீஷர்கள் நினைத்தார்கள். ஆனால் இந்தத் தீர்க்கதரிசனத்தில் இயேசு அவைகளை இரண்டாகப் பிரித்து, எல்லாவற்றிற்கும் முதலாவதாக எருசலேம் அழிக்கப்படும், அதற்கு அதிக காலத்திற்குபின்பு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நேரத்தில், உலகம் முழுவதின் அழிவும் வரும் என்று காட்டினார். எருசலேமின் அழிவு, உலகம் முழுவதற்கும் ஒரு நாளில் என்ன சம்பவிக்கும் என்பதின் ஒரு சிறிய மாதிரியாக–சிறிய சித்திரமாக உள்ளது.

**வச. 4,5.** கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான எச்சரிக்கை. (எருசலேம் அழிக்கப்படுவதற்குமுன் கள்ளத்தீர்க்கதரிசிகள் வந்தார்கள் உலகத்தின் முடிவுக்கு முன்னதாகவும் கள்ளத்தீர்க்கதரிசிகள் வருவார்கள்).

**வச. 6.** சாதாரணமான யுத்தங்களும் யுத்தங்களைப்பற்றிய வதந்திகளும் உலகத்தின் முடிவிற்கான ஒரு அடையாளம் அல்ல.

**வச. 7.** ஆனால், யுத்தங்கள் பஞ்சங்களுடனும், கொள்ளைநோய் களுடனும், பூகம்பங்களுடனும், சேர்ந்து காணப்படும்போது,

நாம் முடிவின் ஆரம்பத்தில் இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளமுடியும். (நாடுகள் மற்ற நாடுகளுக்கு எதிராக விமானங்களையும், இராக்கெட்டுகளையும், அணுகுண்டுகளையும் இன்னும் மற்றவைகளையும் பயன்படுத்தி, எதிரி நாட்டில் உள்ள மக்களனைவரையும் அழிக்க முயற்சிசெய்யும்போது, அது மொத்தமான யுத்தமாக இருக்கிறது).

**வச. 9–11.** உலகத்தில் உள்ள துன்பங்களின் காரணமாக, தேவனைப் பின்பற்றுபவர்களைக் குற்றம்கூறி, மக்கள் அவர்களை வெறுப்பார்கள். அதிகமதிகமான கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்புவார்கள்.

**வச. 12.** தங்களைச் சுற்றிலும் உள்ள அக்கிரமத்தின் காரணமாக சபையிலுள்ள அநேகருடைய அன்பு தணிந்துபோவதினால், அவர்கள் உலகத்தின் பாவங்களைப் பின்தொடர்ந்து அழிவார்கள்.

**வச. 13,14.** நாம் தாங்கிக்கொள்ளவேண்டும்; பலமடைவதில் முன்னேற வேண்டும். உலகம் முடிவை நோக்கி வந்துகொண்டிருக்கிறது என்பதற்கான பெரிய அடையாளங்களில் ஒன்றாக உலகம் முழுவதிலும் சுவிசேஷம் பரவுகிறது. (இன்று செவன்த்–டே அட்வெண்டிஸ்ட் சபை, சுவிசேஷத்தின் தூதுடன் ஏறத்தாழ உலகத்தின் எல்லா மூலைகளையும் சென்றடைந்திருக்கிறது).

**வச.15.** தானியேல் கூறியுள்ள பாழாக்குகிற அருவருப்பு, மிகவும் கெட்டதான, குறிப்பாக மதத்திற்கு எதிரானதாக இருக்கிறது. வழக்கமாக யூதர்களுக்கு அருவருப்பு என்றால் விக்கிரகங்கள் என்று பொருள்படும். பாழ்க்கடிப்பு—உடைந்து விழுந்தது—அழிக்கப்பட்டது, வெறுமை (தானி. 9:26,27). இயேசு மரித்தபின் ஜனங்களின் பிரபு வந்து, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் அழித்துப்போடுவார்கள். இயேசுவின் மரணத்திற்கு நாற்பது வருடங்களுக்குப்பின் ரோமர்கள் யூதர்களின் ஆலயத்திற்குள் சென்று, அவர்களுடைய விக்கிரகத்தை அங்கு வைத்துச் சென்றபோது, இது நடந்தது. இது யூதர்களுக்கு அருவருப்பா யிருந்தது. அவர்கள் மிகவும் கோபமடைந்து, ரோமர்களை அந்த நகரத்திற்கு வெளியே விரட்டியடித்தார்கள்.

கி.பி.70–ல் டைட்டஸ் என்னும் தளபதி ரோமர்களின் சேனையுடன் வந்து, பயங்கரமான முற்றுகைக்குப்பின், அந்த நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் முற்றிலுமாக அழித்துவிட்டான். இயேசு சம்பவிக்கும் என்று கூறியிருந்ததுபோல (வச. 2) நடந்தது! லூக்கா 21:2–ம் இதைப் பற்றிக் கூறுகிறது. இந்த பயங்கரமான முற்றுகையில், பத்து இலட்சத்திற்கும்

அதிகமான யூதர்கள் இறந்தார்கள்; அது பாழாக்குதலின் காலமாக இருந்தது.

**வச.16–20** பாழாக்குகிற இந்த அருவருப்பைக் காணும்போது, கிறிஸ்தவர்கள் அந்த நகரத்தைவிட்டு ஓடிப்போகவேண்டும் என்று இயேசு கூறியிருந்தார். அவ்வாறு ஓடிப்போனதினால், அந்தப் பயங்கரமான நேரத்தின்போது, அவர்களில் ஒருவன்கூட அழியவில்லை.

**குறிப்பு**:–கிறிஸ்தவர்கள் இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஓடிப்போனதால், எருசலேமின் அழிவின்போது ஒரு கிறிஸ்தவன்கூட இறக்கவில்லை. இயேசு வருகின்ற உலகத்தின் முடிவின் நேரத்திலும் அதேவிதமாக இருக்கும். உலகம் முழுவதும் பாழாக்கப்படும். கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிபவர்கள் மட்டும் இரட்சிக்கப்படுவார்கள்.

**வச. 21,22.** கி.பி.70–ல் எருசலேம் அழிக்கப்பட்டபின், கிறிஸ்தவ சபையின்மீது பயங்கரமான உபத்திரவம் வந்தது. இந்த உபத்திரவம் இரண்டு பகுதிகளாக இருந்தன.

1. அஞ்ஞான ரோம அரசினால் உண்டான உபத்திரவம் கி.பி.70 முதல் கி.பி.312–ல் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவனானதுவரை நடந்தது.
2. போப்புமார்க்க ரோம அரசினால் கி.பி.538 முதல் கி.பி.1798 வரை நடந்த உபத்திரவத்தின் நாட்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தம் குறைக்கப்படும். 1798–ல் போப் நான்காம் பயஸ் அவருடைய வல்லமையை இழப்பதற்குமுன், கி.பி.1600–க்குச் சமீபமாக சீர்திருத்தம் எழுந்ததினால், அந்த உபத்திரவம் குறைக்கப்பட்டது.

**வச. 23,26.** கடைசி நாட்கள் சமீபிக்கும்போது, கள்ளத் தீர்க்கதரிசிகளும் கள்ளக் கிறிஸ்துக்களும் அதிகமதிகமாவார்கள். அவர்கள் பெரிய அடையாளங்களையும் ஆச்சரியங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். ஆனால், நாம் அவைகளை நம்பக்கூடாது; வேதாகமத்தைமட்டுமே நம்பவேண்டும். (ஏசாயா 8:20 பார்க்கவும்).

இந்த வசனங்களும் (**23,26** – ம் வசனங்களையும் கவனியுங்கள்) கூட கிறிஸ்து இங்கேயோ, அங்கேயோ எங்கேயோ பூமியின்மீது வருவார் என்று நமக்குப் போதிப்பதில்லை. அவர் பூமியின்மீது வராமல், ஆகாயத்தின்மேல் வருவார்.

**வச. 27.** மின்னல் தோன்றுவதைப்போல இயேசு வருவார். அதாவது

1. பூமியின்மீது அல்லாமல் — ஆகாயத்தில் வருவார்.
2. காணும்படியாக — நம்மால் அவரைக் காணமுடியும்.
3. கேட்கும் வண்ணமாக — அவர் வருகையின் ஆரவாரத்தை நாம் கேட்கலாம். (மின்னலுடன் சேர்ந்து வருகின்ற இடி, ஒரு பெரிய சத்தத்தை உண்டுபண்ணுகிறது. வலுவாய்த் தொனிக்கும் எக்காளச் சத்தத்தோடே என்கிற வச. 31–ஐப் பார்க்கவும்).

**குறிப்பு:**—உலகத்தில் மிகவும் எளிதாகக் காணக்கூடிய பொருள்களில் ஒன்றாக மின்னல் இருக்கிறது. மின்னல் பிரகாசிக்கிறதுபோல (வச.27) இயேசு வருவாரானால், அப்பொழுது நாம் அவரைக் காண்போம் என்பது மிகவும் தெளிவானதாக இருக்கிறது. நீதிமான்கள்மட்டுமின்றித் துன்மார்க்கர்களுங்கூடக் காண்பார்கள் (வச. 30), மின்னல் கிழக்கிலிருந்து தோன்றுவதுபோல (வச. 27), வானத்தின் கீழ்த்திசையிலிருந்து இயேசு தோன்றும்போது, அவரைச் சந்திப்பதற்காக நாம் கூட்டிச் சேர்க்கப்படுவோம். (வச. 31).

**வச. 28.** இயேசு வந்தபின் மரித்த துன்மார்க்கர்களுடைய உடல்கள் பூமியின்மேல் கிடக்கும். அவைகளைத் தின்பதற்காகப் பறவைகள் வரும். (வெளி. 19:17,18; ஏசா. 34:11–15; எரே. 25:33).

**குறிப்பு:**—அந்த நேரத்தில், தேவனுடைய பரிசுத்தவான்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கு ஆயிரம் வருடங்கள் தங்கியிருப்பார்கள் இந்த நேரத்தில் பூமி வெறுமையானதாகவும் பாழானதாகவும் கிடக்கிறது.

**வச. 29.** அந்நாட்களின் உபத்திரவம் முடிந்த உடனே, இந்த உபத்திரவத்தைப்பற்றி 21,22 வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. போப்பு, கி.பி.1798 வரை அரசராக இருந்திருந்தபோதிலும், சீர்திருத்தத்தின் காரணமாக கி.பி. 1600–க்குச் சமீபத்தில், அவருடைய உபத்திரவப்படுத்தும் வல்லமை குறைக்கப்பட்டது என்பதைக் கவனித்தோம். இதற்குப்பின் மே, 19, 1780–ல் விவரித்துக் கூறமுடியாத அந்த இருண்ட நாள் வந்தது. அந்த இரவில் சந்திரன் ரத்தம்போல் தோன்றினது. நவம்பர் 13, 1833–ல் வானத்தில் நட்சத்திர வீழ்ச்சி நடந்தது.

இவைகள் உலகத்தின் முடிவு சமீபமாயிருக்கிறது என்பதற்கான அடையாளங்கள்.

**வச. 30.** அடுத்தபடியாக நடைபெறவேண்டிய சம்பவமாக இயேசுவின் வருகை இருக்கிறது. (அவர் வருவதைத் துன்மார்க்கர்களும் கண்டு புலம்புவார்கள் என்று இந்த வசனம் கூறுகிறது).

**வச. 31.** கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்கும்படி தேவதூதர்கள் பரிசுத்தவான்களை அழைத்துச்செல்லுவார்கள்.


**வச. 32,33.** அத்திமரத்தில் இளங்கிளைகள் துளிர்க்கும்போது, அது வசந்தகாலம் சமீபம் என்பதைக் காட்டுகிறது; அதைப்போலவே, நாம் இந்த அடையாளங்களையெல்லாம் பார்க்கும்போது, கிறிஸ்துவின் வருகை சமீபமாயிருக்கிறது என்றும், அது வாசலருகில் இருக்கிறது என்றும் நாம் அறிந்துகொள்ள முடியும்.

**வச. 34.** இந்தக் காரியங்களின் நிறைவேறுதலையெல்லாம் (வச. 33) பின்னாகத் திரும்பிக் காண்கிற தலைமுறையினரில் இயேசு வருவார். இன்று இது நமது தலைமுறையாக உள்ளது. நமது நாளில் இயேசு வருவார்; ஏனெனில், பின்னாகப் பார்த்து, இந்த அதிகாரத்திலுள்ள ஒவ்வொரு அடையாளமும் நிறைவேறியிருப்பதைக் காணக்கூடிய ஒரே தலைமுறையினராக நாம் இருக்கிறோம்.

**இந்த அடையாளங்களனைத்தும் நடந்து முடிந்திருக்கின்றன.**

| | |
|---|---|
| **உலக மகா யுத்தம்** | **வச.7** |
| **கொள்ளை நோய்கள்** | **வச.7** |
| **பஞ்சங்கள், பூமியதிர்ச்சிகள்** | **வச.7** |
| **உலகத்திற்குச் சுவிசேஷம்** | **வச.14** |
| **எருசலேமின் அழிவு** | **கி.பி.70–ல் வச.15–19** |
| **கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட பெரும் உபத்திரவம்** | **வச. 21,22.** |
| **கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும்** | **வச. 24.** |
| **சூரியன் இருளடைந்தது** | **19, 1780, வச. 29.** |
| **சந்திரன் அதன் ஒளியைக் கொடாமலிருந்தது** | **வச. 29.** |

## மத்தேயு 24–ம் அதிகாரம்



**நட்சத்திரவீழ்ச்சி** **நவ. 30,1833, வச. 29.**

**நோவாவின் காலத்தில் இருந்த அதே நிலைமை** **வச. 37,38.**

**வச. 36.** கிறிஸ்து வருகின்ற சரியான நேரத்தை நம்மால் கூறமுடியாது.

**வச. 38,39.** உலகத்தின் துன்மார்க்க நிலைமை ஜலப்பிரளயத்திற்குமுன் இருந்ததைப்போலவே இருக்கும்.

“அறியாமலிருந்தார்கள்”—நோவாவின் நாட்களில் மக்கள் அறிந் திருக்கவேண்டும்; ஏனெனில், நோவா 120 வருடங்களாகப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தான். ஆனால், அவர்கள் அதை அறிய விரும்பவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களில் தொடர்வதை விரும்பியிருந்தனர். இயேசு வருவதற்குச் சமீபமாக இருக்கும் நேரத்திலும் அப்படியே இருக்கும்.

**வச. 40,41.** கிறிஸ்துவின் வருகையில் ஒரு பெரிய பிரிவினை உண்டாகிறது.

**வச. 44.** ஆகையால், நீங்களும் ஆயத்தமுள்ளவர்களாயிருங்கள்.

**வச. 51.** நாம் ஆயத்தமாயிராவிட்டால், கடினமாய்த் தண்டிக்கப் படுவோம்.

மத். **24:** இயேசு அவரது உரையின் சுருக்கத்தை மூன்று தடவை குறிப்பிடுகிறார் என்பதையும், ஒவ்வொரு தடவையும் மேற்கோண்டு அதிகமான விவரங்களைக் கூட்டுகின்றார் என்பதையும் கவனியுங்கள்.

**1.** கிறிஸ்துவின் நாள் வச.**1** — இரண்டாம் வருகை வச. 14

**2.** எருசலேமின் அழிவு கி.பி. **70** (வச.**15**) — இரண்டாம் வருகை வச.27,28

**3.**

போப்பு
மார்க்கத்தாலான
உபத்திரவத்தின்
முடிவு
வச.**51**

இரண்டாம் வருகை
கி.பி. 1600–1700
வச.29

# 31

# இயேசுவின் இரண்டாம் வருகை!

## இயேசு ஒரு வாக்குத்தத்தம்பண்ணுகிறார்

**யோவான் 14:1–3** "நான் மறுபடியும் வருவேன்." இயேசு வரும்போது நாம் அவரைப் பார்ப்போம்.

**மத். 24:27** "மின்னல் பிரகாசிப்பதைப்போல" இயேசு வருவார். (நாம் மின்னலை வானத்தில் பார்ப்பதுபோல, கிறிஸ்து வரும்போது நம்மால் அவரைப் பார்க்கமுடியும்).

**மத். 24:30** "மனுஷகுமாரன் வல்லமையோடும் மகிமையோடும்" வருவதைத் துன்மார்க்கர்களும் காண்பார்கள்.

**மத். 26:64** "மனுஷகுமாரன் … வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்."

**லூக். 21:27** "அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருவதைக் காண்பீர்கள்."

**அப். 1:9–11** "இந்த இயேசுவானவர் எப்படி உங்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள்.

**எபி. 9:28** "இரண்டாம் தரம் தரிசனமாவார்."

**வெளி. 1:7** "கண்கள் யாவும் அவரைக் காணும்; இயேசுவைக் கொலை செய்வதர்களும் அவரைப் பார்ப்பார்கள்" ஏனெனில், இயேசு வருவதற்குச் சற்றுமுன் ஒரு சிறப்பான உயிர்த்தெழுதலில் அவர்கள் எழுப்பப்படுவார்கள்! (தானி. **12:2**).

## இயேசு வரும்போது. அந்த ஆரவாரத்தை நாம் கேட்போம்!

**1 தெச. 4:16–18** "இயேசு ஆரவாரத்துடனும் பிரதான தூதனுடைய சத்தத்துடனும் தேவ எக்காளத்தோடும் வருவார்."

**சங். 50:3–5** "நம்முடைய தேவன் வருவார்; மௌனமாயிரார்."

**இயேசு வரும்போது. நீதிமான்களுக்கு என்ன சம்பவிக்கிறது?**

| | |
|---|---|
| **யோவான் 14:1–3** | நீதிமான்களை தம்முடைய வீட்டிற்கு அழைத்துச் செல்ல இயேசு வருகிறார்! |
| **ஏசா. 25:9** | நீதிமான்கள் இயேசுவைப் பார்க்கும்போது, "இதோ, நம்முடைய தேவன், இவருக்காகக் காத்திருந்தோம்" என்று பாடுவார்கள். |
| **1 தெச. 4:16–18** | கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்கும்படி மரித்து எழுந்த நீதிமான் களனைவரும், உயிரோடிருக்கிற நீதிமான்களனைவரும் ஒன்றாகச் சேர்ந்து உயரே எடுத்துக்கொள்ளப்படுவார்கள். |
| **மத். 24:31** | இயேசு வரும்போது, பரிசுத்த தூதர்களனைவரும் அவருடன் வருவார்கள். |
| **வெளி.. 22:12** | கிறிஸ்து வரும்போது, அவர் அளிக்கும் பலன் அவரோடுகூட வரும்! |
| **1 கொரி. 15:51–55** | நீதிமான்கள் (இனி ஒருபோதும் மரிக்காத) அழியாமையை பெறுகின்றனர். (இனி ஒருபோதும் நோயையும் முதுமையையும் அடைவதில்லை). |
| **பிலி. 3:20,21** | அவர்கள் இயேசுவின் சரீரத்தைப்போன்ற ஒரு மகிமையான சரீரத்தை உடையவர்களாக இருக்கின்றனர். |
| **லூக். 24:36–43** | உயிர்த்தெழுதலுக்குப் பின்னும், மறுரூபத்திற்குப் பின்னும், இயேசு உண்மையான ஒரு சரீரத்தைக் கொண்டிருந்தார். நீதிமான்களின் உயிர்த்தெழுதலுக்குப் பின், அவர்களும் உண்மையான சரீரத்தைக் கொண்டிருப்பார்கள். |
| **வெளி. 19:1–9** | உயிர்த்தெழுதலுக்குப்பின் நீதிமான்கள் பரலோகத்தில் மகிழ்ந்து—களிகூர்ந்து ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில் பங்குபெறுவார்கள். |
| **மத். 24:30** | "அப்பொழுது பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்." |
| **செப். 1:14 –18** | "பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்." |
| **வெளி. 6:14–17** | துன்மார்க்கர்கள் கர்த்தரிடத்திலிருந்து தங்களை மறைக்க முயன்று, பர்வதங்களையும், கன்மலைகளையும் நோக்கி ஓடுவர். |
| **2 தெச. 1:7–9; 2:8** | அவரது வருகையின் பிரசன்னத்தினால் துன்மார்க்கர் அழிக்கப்படுகின்றனர். |

**மத். 24:28;** பூமியின் மேற்பரப்பில் கிடக்கும் துன்மார்க்கர்களின் பிரேதங்களைப் பறவைகள் தின்னுகின்றன (**வெளி. 19:17,18**).

**ஏசாயா 34:1–15** பூமி சிதறுண்டு பாழாகியிருக்கிறது. (**எரே 25:30–33**).

## கிறிஸ்துவின் வருகையின் நேரம்

**மத். 24:36** கிறிஸ்துவின் வருகையின் மிகச் சரியான நேரத்தை நம்மால் கூறமுடியாது.

**1 தெச. 5:2** "இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வரும்." (2 பேதுரு 3:10; வெளி. 3:3–யும் ஒப்பிட்டுப் பாருங்கள்).

**குறிப்பு:**– இரவிலே திருடன் வருகிறவிதமாய், கர்த்தர் அல்ல கர்த்தருடைய நாள் வருகிறது! கிறிஸ்துவின் வருகையின் நேரம்தான் தெரியாததாக இருக்கிறது; ஆனால், கர்த்தர் தாமே வரும்போது, அவர் ஆரவாரத்துடனும், பிரதான தூதனுடைய சத்தத்துடனும், தேவ எக்காளத்துடனும் வருவார் (1 தெச. 4:16,17). கண்கள் யாவும் அவரைக் காணும் (வெளி. 1:7).

**1 தெச. 5:4** நாம் ஒவ்வொரு நாளும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புவதினால், அந்த நாள் ஒரு திருடனைப் போல நம்மீது வருவதை அவர் விரும்பவில்லை.

**மத். 24:32,33** எல்லா அடையாளங்களும் நிறைவேறியிருப்பதை நாம் காணும்போது, கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது– அது வாசலருகில் இருக்கிறது என்று நாம் கூறலாம்.

**மத். 24:34** இந்த அதிகாரத்தைத் திரும்பிப் பார்த்து, இந்த அடையாளங்களெல்லாம் நிறைவேறியிருக்கிறது என்று ஒரு தலைமுறை காணும்போது, அந்தத் தலைமுறையில் இயேசு வருவார். அந்தத் தலைமுறைதான் பூமியின் கடைசித் தலைமுறையாயிருக்கும் அந்தத் தலைமுறையில்தான் இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். (வச. 33).

**குறிப்பு** :– நாம் ஒரு பயங்கரமும் பக்திவிநயமுமான வேளையில் வாழுகிறோம். நமது தலைமுறையில் இயேசு வருவார். கர்த்தரைச் சந்திப்பதற்காக எவ்வளவு விரைவாக நாம் நமது ஜனங்களை ஆயத்தம்செய்யவேண்டும்?

### நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கவேண்டியதின் அவசியம்

**மத். 24:42** "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்."

**மாற்கு 13:32–37** "நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் என்றார்."

### இயேசு மீண்டும் வருவதற்காக நாம் ஜெபிக்கவேண்டும்

**வெளி. 22:20** "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்."

### அனைவரும் காணும்படியாகக் கர்த்தரின் இரண்டாம் வருகை இருக்கும் என்னும் கோட்பாட்டிற்கு எதிரான மறுப்புகள்

**மறுப்பு 1:–** இயேசு ஒரு திருடனைப்போல் இரவில் வருவார் என்று வேதாகமம் கூறுகிறது (1 தெச. 5:2; 2 பேதுரு 3:10; வெளி. 3:3; 16:15). ஆகையால், அவருடைய வருகையின்போது, அவரைப் பார்க்கும் தகுதியை நாம் கொண்டிருக்கமாட்டோம்.

**பதில்:–**இரவிலே திருடனைப்போல் வருவது கர்த்தர் அல்ல, கர்த்தருடைய நாள்தான். அதாவது திருடன் வருவதுபோல, அதாவது அவருடைய வருகையின் சரியான நேரத்தை நாம் அறிவதில்லை. "அந்த நாளையும் அந்த நாழிகையையும் ஒருவனும் அறியான்"—மத். 24:36,42; 25:13. "நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்"—வெளி. 3:3; வெளி. 16:15–லும்கூட "விழித்துக்கொண்டு காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" என்று காலத்தைப்பற்றித்தான் வற்புறுத்தப்படுகிறது (1 தெச. 5:4–யும் பார்க்கவும்).

இயேசு வரும்போது, அது ஒரு மகிமையான சம்பவமாக, எல்லோராலும் காணக்கூடியதாக இருக்கும் என்பதை வேதாகமம் தெளிவுபடுத்துகிறது.

**மறுப்பு 2:–** "உலகம் என்னைக் காணாது" என்று யோவான் 14:19 கூறுகிறதே.

**பதில்:–** (16–19) ஆகிய இந்த வசனங்கள் இயேசுவுக்குப்பதிலாக (ஊழியத்தின் பொறுப்பை) எடுத்துக்கொள்ளுவதற்காகத் தேற்றரவாளனாக வரும் பரிசுத்த ஆவியைப்பற்றிக் கூறுகிறது. சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி, மக்களை மனந்திரும்புவதற்கு நடத்துகின்ற ஒருவரைப்பற்றிக் கூறுகிறது. உலகம் இயேசுவை அவருடைய இந்த அந்தஸ்தில் (தோற்றத்தில்) ஒருபோதும் இனிக் காணாது. இயேசு இரண்டாவது தடவையாக வருவதற்குமுன், தவணையின் காலம் முடிவடைந்திருக்கும்;

அடுத்த முறை வரும்போது, அவர் இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் வருவார் (மத். 23:39; வெளி. 22:11,12–ம் பார்க்கவும்).

**மறுப்பு 3:–**கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிப் பயன் படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல் "பரௌசியா;" இதன் அர்த்தம் ஒரு இரகசியப் பிரசன்னம் என்பதாகும்.

**பதில்:–** கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை விவரிக்கின்ற நான்கு வார்த்தைகளில் "பரௌசியா" என்னும் வார்த்தை ஒன்று. எர்ச்கோமாய்= வருகை, எபிபேனியா=தரிசனம், அப்போகாலுப்சிஸ்=வெளிப்படுத்தல் ஆகியவை மற்ற வார்த்தைகள். பரௌசியா என்னும் வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. **1**. பிரசன்னம் **2**. வருகை — மிகச் சிறப்பாக, ஒரு அரசன் அவனுடைய எல்லா விதமான ஆடம்பரத்துடனும், மகிமையுடனும் வருகின்ற சடங்கு. பரௌசியா என்னும் வார்த்தை இரகசியமான அல்லது காணமுடியாத பிரசன்னம், வருகை, என்னும் அர்த்தம் தராமல், அதற்கு நேர் எதிரான அர்த்தமுடையதாக இருக்கிறது.

"இரண்டாம் வருகையைப்பற்றிய கோட்பாடு பரிசுத்த வேதவாக்கியங்களின் முக்கியமான கருத்தாக இருக்கிறது."—**GC 299.**

"கிறிஸ்துவின் இரண்டாம் வருகையான பாக்கியமான நம்பிக்கையின் பக்திவிநயமான உண்மைகள் அடிக்கடி மக்கள்முன் வைக்கப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. விரைவில் தரிசனமாக இருக்கும் கர்த்தருக்காகப் பார்த்துக்கொண்டிருப்பது, இப்பூமிக்குரிய காரியங்களை வெறுமையானதாகவும் ஒன்றுமில்லாததாகவும் கருதும்படி நம்மை நடத்துகிறது."—**6T 406.**

"கர்த்தர் விரைவில் வருகிறார் அதைப்பற்றிப் பேசுங்கள்; அதற்காக ஜெபியுங்கள்; அதை நம்புங்கள்; அதை வாழ்க்கையின் ஒரு பகுதி யாக்குங்கள்."—**7T 237.** ★

# 32

# ஆயிரம் வருட அரசாட்சி!

Kில்லனியம் என்னும் சொல், இரண்டு லத்தீன் சொற்களிலிருந்து உண்டாகிவருகிறது. மில்லி—ஆயிரம்; ஆன்னாஸ்—ஒரு வருடம். இப்படியாக ஒரு மில்லனியம் என்றால் ஒரு ஆயிரம் வருடங்கள் என்னும் அர்த்தமாகிறது.

**இரண்டு விதமான உயிர்த்தெழுதல்கள்:**

**யோவான் 5:28,29** இந்த இரண்டு உயிர்த்தெழுதல்களில் ஏதாவது ஒன்றில் அனைவரும் உயிர்த்தெழுவார்கள்.

1. ஜீவனுக்குரிய உயிர்த்தெழுதல்—நன்மை செய்தவர்களுக்கு.
2. அழிவுக்குரிய உயிர்த்தெழுதல்—தீமை செய்தவர்களுக்கு.

அழிவுக்குரியது என்றால், இரட்சிப்பைப்பற்றிய நம்பிக்கைகள் எதுவும் இல்லாமல், நித்திய மரணத்தை அடைதல் என்பதே அதன் பொருள்.

**1 தெச. 4:16** கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, ஆயிரம் வருட ஆட்சியின் தொடக்கத்தில், ஜீவனுக்கான உயிர்த்தெழுதல் நடைபெறுகிறது.

**வெளி. 20:5 (முற்பகுதி)** மரணமடைந்த மற்றவர்கள்—அதாவது துன்மார்க்கர், அழிவுக்குரிய உயிர்த்தெழுதலிலுள்ளவர்கள்—ஆயிரம் வருடங்களின் முடிவில் உயிர்த்தெழுகின்றனர்.

**குறிப்பு:**—ஐந்தாம் வசனத்தின் கடைசி, ஆறாம் வசனத்துடன் சேர்ந்ததாக இருந்து, முதலாம் உயிர்த்தெழுதலைப்பற்றி மறுபடியும் பேசுகிறது. ஐந்தாம் வசனத்தின் ஆரம்பம் அடைப்புக்குள் இருக்கவேண்டும். அது துன்மார்க்கர்களுக்கு என்ன சம்பவிக்கிறது என்பதை நமக்குக் காட்டுவதற்காக அதிகப்படியாகக் கொடுக்கப்பட்ட எண்ணமாக இருக்கிறது. இந்த இரண்டு உயிர்த்தெழுதல்களும் ஓர் ஆயிரம் வருடத்தால் (இடைவெளியால்) பிரிக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். கிறிஸ்துவிற்குச் சொந்தமானவர்கள் ஆயிரம் வருடத்தின் ஆரம்பத்தில், முதலில் எழுப்பப்படுகின்றனர்; சாத்தானுக்குச் சொந்தமானவர்கள், அந்த ஆயிரம்

வருடம் முடியும்வரை உயிர்த்தெழாமல், தங்களுடைய கல்லறைகளில் புதையுண்டிருக்கின்றனர்.

| | |
|---|---|
| **வெளி. 20:5; 20:6 (கடைசிப் பகுதி)** | “முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்.” (தேவனுடைய ஜனங்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் எழுந்துவருவதைக் கவனியுங்கள். |
| **1 தெச. 4:16–17** | இந்த நேரத்தில், கிறிஸ்துவில் மரித்தவர்களாக இருந்து, இப்பொழுது உயிரடைந்தவர்களும், இன்னும் உயிருடன் வாழ்ந்துகொண்டிருந்து அவருக்குச் சொந்தமானவர்களாக இருப்பவர்களும், கர்த்தரைச் சந்திப்பதற்காக ஆகாயத்தில் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படுகின்றனர். |
| **மத். 24:31** | பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடன்கூட இருப்பதற்காகத் தேவதூதர்கள் அவர்களைக் கூட்டிச்சேர்க்கின்றனர். |
| **யோவான் 14:1–3** | நீதிமான்கள் இயேசுவுடன் இருப்பதற்காகப் பரலோகத்திற்குச் செல்லுகின்றனர். |
| **வெளி. 19:1–9** | நீதிமான்கள் பரலோக இராஜ்ஜியத்தில் ஆட்டுக்குட்டி யானவரின் கலியாண விருந்தில் போஜனம்பண்ணிக்கொண்டிருக்கின்றனர். |
| **வெளி. 20:4,5 (கடைசிப் பகுதி), 6** | நீதிமான்கள் பரலோகத்தில் கிறிஸ்துவுடன்கூடத் தங்கியிருந்து, அவரோடுகூட ஆயிரம் வருடம் ஆளுகை செய்கின்றனர். |
| **1 கொரி. 6:2,3** | தேவனுடைய ஜனங்களுக்கு – நியாயத்தீர்ப்புச்செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (இந்த ஆயிரம் வருடங்களின்போது, தேவன் எந்த விதமாக, ஏன், எப்படி நியாயத்தீர்ப்பு செய்திருக்கிறார் என்பதைத் தேவனுடைய புத்தகங்களிலிருந்தும் ஆவணங்களிலிருந்தும் நாம் கண்டுகொள்ளலாம். தேவன் எல்லாக் காரியங்களையும் நல்லவிதமாகச் செய்திருக்கிறார் என்றும், அவர் நீதியுடனும் இரக்கத்துடனும் நியாயத்தீர்ப்பு செய்திருக்கிறார் என்றும், நம்மால் நமக்காகப் பார்த்துக்கொள்ளமுடியும். தேவனுடைய வழிகளைப்பற்றி இனி ஒருபோதும் பிரபஞ்சம் கேள்வி கேட்காது). |

## ஆயிரம் வருடத்தின்போது பூமியின் நிலைமை

**செப். 1:14–18; 2 தெச. 2:8** — **வெளி. 6:14–17; 2 தெச. 1:7–9; 2:8** கிறிஸ்துவின் வருகையின் பிரசன்னத்தினால், துன்மார்க்கர்கள் கொலைசெய்யப் படுகின்றனர்.

**ஏசாயா 24:1–6, 16–23;** — **ஏசாயா 34:1–15; எரே. 4:19–27; 25:30–33; மத். 24:28; வெளி. 19:17,18** பூமி பாழாகி வெறுமையாகிறது.

**வெளி. 20:1–3,7** — பாழடைந்த வெறுமையான இந்தப் பூமியில் (பாதாளத்தில்—ஒழுங்கின்மையும் வெறுமையான பூமியில்—கிரேக்க மொழியின்படி வறண்ட, சிதைந்த, பாழான, வெறுமையான இடம். அந்த ஆயிரம் வருடங்களின்போது, பூமி அப்படித்தான் இருக்கும்) சாத்தான் கட்டப்படுகிறான் (அவனால் மோசம்போக்கிட எவரும் இல்லாத சூழ்நிலையால் கட்டப்படுகிறான்).

## ஆயிரம் வருடத்தின் முடிவில்

**வெளி. 21:2** — தேவனுடைய ஜனங்களுடன் பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேம் கீழே இறங்குகிறது.

**வெளி. 20:5 (முதல் பகுதி)** — துன்மார்க்கர்கள் எழுப்பப்படுகின்றனர்.

**வெளி. 20:7,8** — (வச. 3) மறுபடியும் சகல ஜாதிகளையும் வஞ்சிக்கவும் தற்போதுதான் உயிர்த்தெழுப்பப்பட்ட துன்மார்க்கரை வஞ்சிக்கவும், ஆயிரம் வருடத்தின் முடிவில் சாத்தான் கட்டவிழ்க்கப்படுகிறான்.

**வெளி. 20:9** — புதிய எருசலேமைக் கைப்பற்றிக்கொள்ளச் சாத்தான் செய்யும் முயற்சியில், அவன் துன்மார்க்கரை நடத்துகிறான். தேவனால் வானத்திலிருந்து இறங்கிவந்த அக்கினி அவர்களைப் பட்சித்துப்போட்டது.

**வெளி. 20:11–13** — தம்முடைய புதிய இராஜ்யத்திற்குள் நுழைய துன்மார்க்கர் ஏன் அனுமதிக்கப்படவில்லை என்கிற அவர்களுடைய நியாயத்தீர்ப்பை, எல்லாரும் அறிந்து புரிந்துகொள்வதற் கேதுவாக அவர்கள் அழிக்கப்படுவதற்குமுன், தேவன் வெளிப்படுத்துகிறார்.

**வெளி. 20:10,14,15** சாத்தான், பாவம், மரணம், கல்லறை ஆகியவைகளுக்கான முடிவு.

**வெளி. 21, வெளி. 22** அதிகாரங்கள். சந்தோஷமும் நீதியும் என்றென்றைக்குமாக ஆளுகைசெய்யும்; தேவனுடைய புதிய வானம்— புதிய பூமி படைக்கப்படுதல்!

**வெளி. 20–ம் அதிகாரத்தைத் திருப்பிப் பார்த்தல்**

**வச. 1–3** ஆயிரம் வருடங்களின்போது, சாத்தான் பாழான பூமியில் கட்டப்படுதல்.

**வச. 4** அந்த ஆயிரம் வருடங்களின்போது, நீதிமான்கள் கிறிஸ்துவுடன் பரலோகத்தில் வாழுகின்றனர்.

**வச. 5 (முதல் பகுதி)** அந்த ஆயிரம் வருடங்களின் முடிவுவரை மீதியான மரித்தவர்கள் (அதாவது துன்மார்க்கர்கள்) மறுபடியும் உயிர்வாழ்வ தில்லை.

**வச. 5 (கடைசிப் பகுதி), 6** முதலாம் உயிர்த்தெழுதலில் எழுந்து வருபவர்கள் (அதாவது நீதிமான்கள்) கிறிஸ்துவுடன்கூடப் பரலோகத்தில் வாழ்ந்து கொண்டும், ஆளுகைசெய்துகொண்டும் இருக்கின்றனர்.

**வச. 7** அந்த ஆயிரம் வருடத்தின் முடிவில், சாத்தான் தற்போது உயிர்த்தெழுந்திருக்கும் ஜனங்களை மறுபடியும் வஞ்சிப்பதற்காக, மீண்டும் கட்டவிழ்க்கப்படுகிறான் அல்லது விடுதலைசெய்யப்படுகிறான்.

**வச. 8** தேவனுடைய ஜனங்கள் அனைவருடனும் புதிய எருசலேம் பூமிக்கு வரும்போது, அதைக் கைப்பற்றிக்கொள்ள முயற்சி செய்வதற்காக தன்னைப் பின்பற்றிவரும்படி உலகத்திலுள்ள துன்மார்க்கர் அனைவரையும் (கோகையும், மாகோகையும்) சாத்தான் வஞ்சிக்கிறான். பழைய ஏற்பாட்டில் கோகும், மாகோகும் இஸ்ரவேலரின் எதிரிகளாக வட திசையிலிருந்தனர். ஆனால், புதிய ஏற்பாட்டில், பூமியின்மீதெங்குமுள்ள தேவனுடைய எதிரிகளனைவரையும் அடையாளப்படுத்திக்காட்ட இப்பொழுது இந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வச. 9** துன்மார்க்கர்கள் தேவனுடன் யுத்தம்செய்து, அந்த நகரத்தைக் கைப்பற்றிக்கொள்ள முயலுகின்றபோது, தேவனால் வானத்தி லிருந்து அனுப்பப்பட்ட அக்கினி இறங்கி, அவர்கள் அனைவரையும் பட்சித்துப்போட்டது.

**வச. 10** முடிவில், பிசாசு அக்கினிக் கடலில் அழிக்கப்படுகிறான். மிருகத்தைப் போன்ற தவறான மதங்களான போப்பு மார்க்கமும் (ரோமன் கத்தோலிக்க சபையும்) கள்ளத் தீர்க்கதரிசியும் (விழுந்துபோன புரொட்டஸ்டாண்டு சபைகளும்) இவை அனைத்தும் என்றென்றைக்குமாக அழிக்கப்படுகின்றன.

**வச. 11–13** துன்மார்க்கர் ஏன் நித்திய ஜீவனை அடையமுடியாது என்று தேவன் காட்டும்போது, நியாயத்தீர்ப்பின் பெரிய வெள்ளைச் சிங்காசனம் உயர்த்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வழிகள் செம்மையானவைகள் என்று துன்மார்க்கர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். (வானத்திலிருந்து அக்கினி இறங்குவதற்குச் சற்றுமுன் இது நடைபெறுகிறது).

**வச. 14,15** சாத்தானும் பாவிகளும் அழிக்கப்படுகின்ற அதே நேரத்தில், அதைப்போலவே மரணமும் பாதாளமும் (கல்லறை)கூட அழிக்கப்படுகின்றன; இதுவே இரண்டாம் மரணம்! உண்மையான மரணம்! இனி இதிலிருந்து உயிர்த்தெழுதல் இல்லை.

“ஆயிரம் வருடங்களுக்கு (இந்தப் பூமி) இந்த இடம் சாத்தானுக்கும் அவனுடைய பொல்லாத தூதர்களுக்கும் வீடாக இருக்கவேண்டியதாக உள்ளது. இந்தப் பூமியில்மட்டும் இருக்கும்படி எல்லைக்குட்படுத்தப்பட்ட அவனுக்கு ஒருபோதும் விழுந்துபோகாதவர்களைச் சோதிக்கவும் தொந்தரவுசெய்யவும் பிற உலகங்களுக்குச் செல்லுவதற்கான மார்க்கம் இல்லை. இந்த அர்த்தத்தில்தான் அவன் கட்டப்பட்டிருக்கிறான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவனது வல்லமையைச் செயலாற்றுவதற்கு ஒருவரும் இல்லை. அநேக நூற்றாண்டுகளாக அவனது முழு மகிழ்ச்சியாக இருந்த வஞ்சம், பாழ்க்கடிப்பு ஆகியவைகளிலிருந்து அவன் முற்றிலுமாக நீக்கப்பட்டிருக்கிறான். தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராக அவன் செய்த கலகத்தின் பலனைக் காணும்படி பாழான இந்தப் பூமியின்மீது சாத்தான் ஆயிரம் வருடங்கள் முன்னும் பின்னுமாக அலைந்து திரிவான்; இந்த நேரத்தில்தான் அவனுடைய பாடுகள் மிகவும் கடுமையானதாக இருக்கும்.”—**GC 659,660.**

“பரிசுத்தவான்கள் அழியாமையைப்பெற்று இயேசுவுடன் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டபின், அவர்கள் தங்களுடைய வீணைகளையும், ஆடைகளையும், கிரீடங்களையும் பெற்றுக்கொண்டபின், அவர்கள் நகரத்துக்குள் பிரவேசித்தபின், இயேசுவும் பரிசுத்தவான்களும் நியாயத்தீர்ப்பிற்காக உட்காருகின்றனர். ஜீவபுஸ்தகம், மரணப்புஸ்தகம் ஆகிய புத்தகங்கள் திறக்கப்படுகின்றன. ஜீவபுஸ்தகத்தில் பரிசுத்தவான்களின்

நற்செயல்கள் அடங்கியுள்ளன. மரணப் புத்தகத்தில் துன்மார்க்கர்களின் துர்க்கிரியைகள் அடங்கியுள்ளன. இந்தப் புத்தகங்கள் சட்டநூலான வேதாகமத்துடன் ஒப்பிடப்பட்டு, அதன்படி, மனிதர்கள் நியாயம் தீர்க்கப் படுகின்றனர். பரிசுத்தவான்கள் இயேசுவுடன் ஒன்றுசேர்ந்து, மரித்த துன்மார்க்கர்களின்மீது நியாயத்தீர்ப்புச் செலுத்துகின்றனர்."—**EW 52.**


"துன்மார்க்கர்கள் கல்லறைக்குச் சென்றதைப்போலவே கிறிஸ்துவின்மீதான கிறிஸ்துவை பகைக்கும் இருதயத்தோடும் அவருக்கு எதிராகக் கலகஞ்செய்யும் ஆவியோடும் தங்களது இப்பொழுது வெளிவந்திருக்கிறார்கள்... தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் உயரே எழுந்தருளிச் சென்ற, கிறிஸ்து திரும்பி வருவதைப்பற்றித் தூதர்கள் அறிவித்த அதே ஒலிவ மலையின்மீது அவர் இறங்குகிறார்... புதிய எருசலேம் அதன் திளங்கும் அலங்காரத்துடன் பரலோகத்திலிருந்து இறங்கி, தூய்மையாக்கப்பட்டு அதற்கென்று ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் தங்குகிறது. கிறிஸ்து அவருடைய சீஷர்களுடனும் தூதர்களுடனும் அந்த நகரத்திற்குள் பிரவேசிக்கிறார்... மரித்த துன்மார்க்கர் எழுப்பப்படும்போது, மிகவும் விசாலமான பெருந்திரளானவர்கள் தன் பக்கத்திலிருப்பதை சாத்தான் காண்கிறான். அவனுடைய நம்பிக்கை மீண்டும் உயிரடைகிறது. மாபெரும் போராட்டத்தை விட்டுவிடக்கூடாது என்று தீர்மானிக்கிறான்... இருந்தாலும், ஆதியிலிருந்த தன்னுடைய தந்திரத்துடனேயே தன்னை சாத்தானாக அறிவிக்கவில்லை; தன்னை இந்த உலகத்தின் உரிமையாளனாகவும், தன்னுடைய சுதந்திரவீதம் சட்டவிரோதமாக தன்னிடமிருந்து பிடுங்கப்பட்டிருக்கிறதென்றும் கூறுகிறான். பொய்த் தோற்றத்தினால் ஏமாற்றப்பட்டு அவனுக்குக்கீழ் இருப்பவர்களிடம் தன்னை மீட்பராக எடுத்துக்காட்டி, தன்னுடைய வல்லமைதான் அவர்களை அவர்களுடைய கல்லறைகளிலிருந்து வெளியே கொண்டுவந்திருக்கிறதென்றும், மிகக் கொடூரமான ஆட்சியிலிருந்து தான் அவர்களை விடுவிக்கப்போவதாகவும் கூறுகிறான். கிறிஸ்துவின் சமூகம் நீக்கப்பட்டிருக்க, தன்னுடைய உரிமை பாராட்டுதலைத் தாங்குவதற்காகச் சாத்தான் அதிசயங்களைச் செய்கிறான். பலவீனமானவர்களை அவன் பலப்படுத்தி, தன்னுடைய ஆவியினாலும், சக்தியினாலும் எல்லோரையும் ஊக்கப்படுத்துகிறான். பரிசுத்தவான்களுடைய பாளயத்திற்கெதிராக அவர்களை நடத்தவும், தேவனுடைய நகரத்தைக் கைப்பற்றிக்கொள்ளவும் அவன் தனது தீர்மானத்தை முன்வைக்கிறான். இறுதியில் முன்னேறிச்செல்லும்படியான கட்டளை கொடுக்கப்படவே, எண்ணிலடங்காத சேனை முன்னோக்கிச் செல்லுகிறது. பூமிக்குரிய வெற்றி வீரர்களால் ஒருபோதும் அழைக்கப்பட்டிராத ஒரு சேனை, பூமியில் யுத்தம் ஆரம்பமான காலம் முதல் அதற்குச் சமமாக ஒருபோதும் இருந்திராத—யுகங்கள் நெடுகிலுமுள்ள படைகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து ஒரு

சேனையாக அழைக்கப்படுகிறது. எல்லா வீரர்களையும்விட அதிகமான பலமுடைய சாத்தான், அந்தச் சேனையை நடத்துகிறான். இறுதிப் போருக்காக அவனுடைய தூதர்களனைவரும் தங்களுடைய வல்லமைகளை ஒன்று திரட்டுகின்றனர்... துல்லியமான இராணுவக் கிரமத்துடன், மிகவும் நெருக்கமான அந்த இராணுவ அணியினர் தகர்ந்துபோன, சமமற்ற பூமியின் மேற்பரப்பின்மீது தேவனுடைய நகரத்தை நோக்கி முன்னேறிச் செல்லுகின்றனர். இயேசுவின் கட்டளையினால் புதிய எருசலேமின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. சாத்தானின் சேனைகள் அந்தச் நகரத்தைச் சூழ்ந்துகொண்டு, தாக்குதலுக்கு ஆயத்தம் செய்கின்றனர்!"—**GC 662–664.**

(பெரிய வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக, வெளி. **20:11–13**–யின்படியுள்ள நியாயத்தீர்ப்பில் கூடியிருக்கும் துன்மார்க்கர்கள் யாவரும் தண்டனையைக் கேட்கும்போது), தேவனுடைய நீதியை ஒப்புகைசெய்யவும் கிறிஸ்துவின் மேலாதிக்கத்திற்குக் குனிந்து வணங்கவும் நேரிட்டபோதிலுங்கூட, சாத்தானிடம் சுபாவம் மாறுதல் எதுவும் இல்லாததாக இருக்கிறது. கலகத்தின் ஆவி, பலத்த நீரோட்டத்தைப்போல மறுபடியும் வெடிக்கிறது. கட்டுக்கடங்காத வெறியினால் நிரப்பப்பட்டுள்ள அவன், இந்த மாபெரும் போராட்டத்தில் இணங்கக்கூடாது என்று தீர்மானம்செய்கிறான். பரலோகத்தின் அரசருக்கெதிரான நம்பிக்கையில்லாத கடைசிப் போராட்டத்தை நடத்தவேண்டிய நேரம் வந்திருக்கிறது. அவனுக்குக் கீழாக இருப்பவர்களுக்கு மத்தியில் அவன் விரைந்து அவனது சொந்த சீற்றத்துடன் உடனடியான சண்டைக்கென்று அவர்களை எழுப்ப அவன் ஏவுகிறான். எந்த எண்ணிலடங்காத இலட்சக்கணக்கானவர்களை கலகத்திற்குள் கவர்ந்து இழுத்திருந்தானோ அவர்களில் ஒருவரும் அவனுடைய மேலாதிக்கத்தை ஒப்புகை செய்பவர்களாக இல்லை. அவனுடைய வல்லமை ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது... அவர்களுடைய கோபாவேசம் சாத்தானுக்கு எதிராகப்பற்றி எரிவதுடன், வஞ்சகத்தில் அவனுடைய ஏதுகரங்களாக இருந்தவர்கள், பேய்த்தனமாகப் பெரும் சீற்றத்துடன் அவனுக்கு நேராகத் திரும்புகின்றனர்!

தேவனுடைய அக்கினி வானத்திலிருந்து கீழே இறங்குகிறது; பூமி நொறுங்குகிறது; அதன் ஆழங்களில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் வெளியே கொண்டுவரப்படுகின்றன. மிகவும் ஆழமும் அகலமுமான சாலைகள் வெடிக்கின்றன. பாறைகளெல்லாம் நெருப்பில் எரிகின்றன... பூமியின் மேற்பரப்பு மிக விசாலமான உருகிய அக்கினிப் பிழம்பாக–கொதிக்கும் அக்கினிக் கடலாகிறது.—**GC 671,672.**

நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன் – வெளி. 21:1. துன்மார்க்கர்களை எரிக்கும் அந்த அக்கினி பூமியைத் தூய்மைப்படுத்துகிறது. சாபத்தின் ஒவ்வோர் அடையாளமும் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது.




1. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (1 தெச. 4:16).
2. மரித்த பரிசுத்தவான்கள் உயிரடைதல் (வெளி. 20:6).
3. துன்மார்க்கர் அழிதல் (வெளி. 19:21; 1 தெச. 5:3).
4. சாத்தான் கட்டப்படுதல் (வெளி. 20:2).
5. பரிசுத்தவான்கள் பரலோகம் செல்லுதல் (1 தெச. 4:17).

1. பரிசுத்த நகரம் கீழே இறங்கி வருதல் (வெளி. 21:2).
2. மரித்த துன்மார்க்கர் உயிரடைதல் (வெளி. 20:5).
3. சாத்தான் விடுதலை அடைதல் (வெளி. 20:7).
4. துன்மார்க்கரது 2–ம் மரணம் (வெளி. 20:7–9, 14,15).
5. புதிய வானம்—புதிய பூமி (வெளி. 21:1; ஏசாயா 66:22).

நினைவு படுத்தக்கூடிய ஒன்றுமட்டும் மீந்திருக்கிறது. நமது மீட்பர், அவர் சிலுவையில் அறையப்பட்டதின் அடையாளங்களை எப்பொழுதும் உடையவராக இருப்பார். பாவம் செயலாற்றிய கொடூரமான செய்கையின் அடையாளங்கள்மட்டும் காயப்பட்ட அவரது சிரசிலும் அவரது விலாவிலும் கரங்களிலும் பாதங்களிலும் உள்ளன ...

இந்த பூமி மனிதனுக்கு ஆதியில் அவனுடைய இராஜ்யமாகக் கொடுக்கப்பட்டிருந்து, அவனால் சாத்தானின் கைகளுக்குத் துரோகமாகக் கொடுக்கப்பட்ட பூமி, இவ்வளவு காலமாகப் பலமிக்க அந்த எதிரியினால் பிடித்துவைக்கப்பட்டிருந்த அந்தப் பூமி, மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தினால் மீட்டுக்கொண்டுவரப்பட்டிருக்கிறது. பாவத்தினால் இழக்கப்பட்டுப்போன அனைத்தும் திரும்ப எடுத்துக் கட்டப்பட்டிருக்கிறது.

நீதிமானுக்கு அருளப்படுகின்ற ஈவை விவரிக்க மனிதமொழிகள் போதுமானவைகளாக இல்லை. அது காண்பவர்களால்மட்டுமே அறிந்து கொள்ளக்கூடும். தேவனுடைய பரதீசின் மகிமையை முடிவுள்ள எந்த மனத்தாலும் அறிந்துகொள்ளமுடியாது.

இரட்சிக்கப்பட்டவர்களின் சுதந்திரவீதம் ஒரு தேசம் என்று வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது (எபி. 11:14–16). அங்கு பரலோக மேய்ப்பர் அவருடைய மந்தையை ஜீவத் தண்ணீர்களிடத்திற்கு நடத்துகிறார். ஜீவவிருட்சம் அதன் கனிகளை மாதந்தோறும் கொடுக்கிறது. அந்த மரத்தின் இலைகள் ஜாதிகளின் ஆரோக்கியத்திற்காக உள்ளன.

பரலோகத்தின் சூழ்நிலையில் வேதனை இருக்கமுடியாது. இனிமேல் கண்ணீர் இருக்காது; மரண ஊர்வலங்கள் இருக்காது; துக்கம் கொண்டாடும் அடையாளச் சின்னங்கள் இருக்காது; பூமியில் மகிமைப்படுத்தப்பட்ட பெரு நகரமாகிய புதிய எருசலேம் அங்கே இருக்கிறது!—**GC 674–676.**

மாபெரும் போராட்டம் முடிவடைந்திருக்கிறது. இனிப் பாவமும் பாவிகளும் இல்லை. பிரபஞ்சம் முழுவதும் தூய்மையாயிருக்கிறது. விசாலமான படைப்பு முழுவதற்கும் ஊடாக இசைவு, சந்தோஷம் என்னும் ஒரு நாடி துடிக்கிறது. எல்லையில்லா அண்டவெளிக்கூடாக எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரிடத்திலிருந்து ஜீவன், ஒளி, மகிழ்ச்சி ஆகியவை ஒழுகிச்செல்லுகின்றன. மிக நுண்ணிய அணுவிலிருந்து மிகப் பெரிய உலகங்கள்வரையுள்ள அனைத்து அசையும் பொருட்களும், அசையாப் பொருட்களும் மங்காத அவைகளின் அழகிலும் பூரணமான மகிழ்ச்சியிலும் (அனைத்தும்) தேவன் அன்பாயிருக்கிறார் என்று அறிவிக்கின்றன.—**GC 678.** ★

# 33

# கிறிஸ்துவின் வருகை சமீபமாயிருக்கிறது என்பதைக் காட்டும் அடையாளங்கள்!

| | |
|---|---|
| **மத். 24:7** | மகா யுத்தம்—ஜாதிக்கு எதிராக ஜாதியும், நாட்டுக்கு எதிராக நாடும் செய்யும் யுத்தங்கள். |
| **வச. 7** | பஞ்சங்கள், கொள்ளைநோய்கள், பூமியதிர்ச்சிகள்!—லூக்கா 21:11—யும் வாசிக்கவும் |
| **வச. 14** | உலகமனைத்திற்கும் சுவிசேஷம் |
| **வச. 24** | கள்ளக் கிறிஸ்துகளும் கள்ள அப்போஸ்தலர்களும். |
| **வச. 29** | சூரியன் இருளடைந்தது. மே 19, 1780. |
| **வச. 29** | நட்சத்திர வீழ்ச்சி. நவம்பர் 13, 1833. |
| **வச. 37–39** | நோவாவின் காலத்திலிருந்த நிலைமை. (லூக்கா 17:26–30–ஐ வாசிக்கவும். எசே. 16:49,50 உடன் ஒப்பிடவும்). |
| **லூக். 21:25–28** | பூமியின்மேல் ஜாதிகளுக்குள் குழப்பங்களுடன் உள்ள மனத்துயர்கள், பயத்தினால் மனிதர்களுடைய இருதயங்கள் சோர்ந்துபோகும். |
| **2 தீமோ. 3:1–4** | பாவம் மிக அதிகரித்தல். |
| **2 தீமோ. 3:5** | … தெய்வ பக்தியின் வேஷம் (சபைக்குச் சொந்தமானவர்கள் அல்லது மத வாழ்க்கை வாழுபவர்கள் என்று கூறுவார்கள், ஆனால், வாழ்க்கையை மாற்றவும், மக்களை தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியக் கொண்டுவரவும் வல்லமை இல்லாதவர்கள். 2 தீமோ. 4:3,4; ஏசாயா 30:8–11–யும் ஒப்பிட்டுப் வாசிக்கவும்). |
| **யாக். 5:1–3** | அநேக செல்வந்தர்கள்… |

| | |
|---|---|
| **யாக். 5:4–8** | அநேக ஏழைகள். |
| **2 பேதுரு 3:3–7** | பரியாசக்காரர்கள். |
| **வெளி. 16:12** | கீழ்த்திசை மன்னர்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருத்தல். |
| **தானி. 12:4** | அறிவு அதிகரித்தல் பயண வேகம் அதிகரித்தல். |
| **யோவேல் 3:9–14** | அஞ்ஞான ஜாதிகள் எழும்புகின்றன. யுத்தத்திற்கு ஆயத்தம். |

**ஆயத்தமாயிருக்கும்படியான தேவ எச்சரிப்பு**

| | |
|---|---|
| **மத். 24:36** | கிறிஸ்து வருகின்ற சரியான நேரத்தைக் கூறும் தகுதியை உடையவர்களாக நாம் இல்லை (மத். 24:42; 25:13; வெளி. 3:3–யும் வாசிக்கவும்). |
| **மத். 24:32,33** | **இயேசுவின் வருகை எப்பொழுதும் சமீபமாக வாசலருகில் உள்ளது என்பதையும் நம்மால் கூறமுடியும்.** |
| **மத். 24:34** | கடைசித் தலைமுறை—பின்னால் திரும்பிப்பார்த்து இவைகளெல்லாம் நிறைவேறியிருப்பதைக் காணக்கூடிய தலைமுறை (வச. 33). ஆம் **இன்று நாம் அந்தத் தலைமுறையினராக இருக்கிறோம்! நமது காலத்தில் கிறிஸ்து வருவார்!** |
| **மத். 24:44** | ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள். |
| **மாற்கு 13:37** | **விழித்திருங்கள்.** |

நகரங்களில் குடி வாழ்பவர்களிடம் துன்மார்க்கம் சீராக அதிகரித்து வருவதனால், ஏறத்தாழ உலகளாவிய குற்றம் விரைவாகவும் நிச்சயமாகவும் வந்துகொண்டிருக்கிறது. குற்றம் என்னும் தொற்றுநோய்க்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதைப்பற்றிய சிந்தனையுள்ள தேவனுக்குப் பயப்படும் மக்கள் எங்கும் அச்சத்துடன் நிற்கின்றனர். அதிகரித்துக்கொண்டிருக்கும் நேர்மையற்ற தன்மை (ஊழல்), மனித எழுதுகோலால் விவரிப்பதற்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. அரசியல் சண்டை, லஞ்சம், மோசடி ஆகியவைகளையும், வன்முறை, சட்டமில்லாதத் தன்மை, மனிதப்பாடுகளைப்பற்றிய மந்தமான தன்மை, கொடுமைமிக்க தன்மை, மனித உயிரைப் பேய்த்தனமாக அழித்தல் ஆகியவைகளையும்பற்றிய—

இருதயத்தை நோயுறச்செய்கின்ற ஆவணங்களை புதிய வெளிப்படுத்தல்கள் ஒவ்வொரு நாளும் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. இவை இவ்வாறு அதிகரித்துவரும் பைத்தியம், கொலை, தற்கொலை ஆகியவைகளுக்கு ஒவ்வொரு நாளும் சாட்சிபகர்ந்துகொண்டிருக்கிறது.—**9T 89.** ★

# 34

# தேவனுடைய கற்பனைகள்!

**உபா. 5:29** தேவனுடைய பிரமாணங்களைக் காத்துக் கொள்ளுவதற்கு நமது இருதயங்கள் கீழ்ப்படியவேண்டும் என்று தேவன் மன்றாடுகின்றார். (இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் உள்ள 6–21 வசனங்களில் பத்துக் கற்பனைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. மனிதர்கள் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவேண்டுமென்று அவர் விரும்புகிறார்).

**மத். 5:17–19** நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள் அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.

**நிறைவேற்றுதல் என்னும் வார்த்தையின் அர்த்தம்பற்றிய குறிப்பு**

நிறைவேற்றுதல் என்னும் வார்த்தையானது அதன் உபயோகத்தைச் சார்ந்து, பல அர்த்தங்களை உடையதாக உள்ளது.

1. ஒரு தீர்க்கதரிசனத்தை அல்லது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுதல்:– அது கடக்கும்படியாகக் கொண்டுவருதல், அது நிறைவேறக் கொண்டு வருதல், அதைச் செயலாற்ற வை. (தானியேல் **2**–ம் அதிகாரத்தின் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் ஏறத்தாழ நிறைவேறியிருக்கின்றன).
2. ஒரு ஜெபத்தை அல்லது வாஞ்சையை நிறைவேற்று:– அதை அனுமதிக்கப்பட்டதாக அல்லது உண்மையாக வரச்செய் (சுகமளிப்பதற்கான எனது ஜெபம் நிறைவேறியது).
3. ஒரு கட்டளையை நிறைவேற்று:– கீழ்ப்படி, செயலாற்று அதைச் செய். (நாம் தேவனுடைய கட்டளையை நாள்தோறும் நிறைவேற்றவேண்டும் என்று அவர் கோருகிறார்).
4. நிபந்தனைகளை நிறைவேற்று:– அதற்குத் தக்கப்படி வாழு, இணங்கி நட, கீழ்ப்படி–நிபந்தனைகளுக்கு (மக்கள் தேவனுடனுள்ள உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றாததனால், யூத ஜாதி நிராகரிக்கப்பட்டது).

**5.** நோக்கத்தை நிறைவேற்றுதல்:—தக்கபடி வாழு அல்லது உண்மையான நோக்கத்தை நிறைவேற்று. (ஓர் ஊழியக்காரன் சமூகப் பணிகளைமட்டும் செய்துகொண்டிருந்து, பாவத்திலிருந்து இரட்சிப்பவராக இயேசு கிறிஸ்துவை மக்களுக்குச் சுட்டிக்காட்ட மறுத்துவிட்டால், அவரது அழைப்பின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றாமலிருந்துகொண் டிருக்கிறார்).

**6.** வேலையை நிறைவேற்று:— முழுமையாக்கு, முடி, வேலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவா. (இயேசு பூமியில் நிறைவேற்றும்படி அவரால் அனுப்பப்பட்ட வேலையை நிறைவேற்றினார்).

**7.** முழு அளவிற்கு நிறை, ஏதாவது ஒன்றுக்கு அதன் முழு அர்த்தத்தையும் கொடுத்தல். (இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது. மத். 3:15; அதாவது நீதிமானாக்கப்படுதலுக்கு அதன் முழு அர்த்தத்தையும் கொடு; அதன் முழு முக்கியத்துவத்தையும் கொடு).

தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவதில், அந்தத் தீர்க்கதரிசனங்கள் அவருடைய சொந்த வாழ்க்கையிலும், அவரைச் சமீபித்துக் கொண்டிருந்த அவருடைய மரணத்திலும், அவரது உயிர்த்தெழுதலிலும் நிறைவேறினதைக் காட்டினார். நாம் கொலைசெய்யாதவர்களாகமட்டும் இராமல் வெறுக்காமலும் இருக்கவேண்டும் (மத். 5:21,22) என்பதையும், நாம் விபச்சாரம் செய்யாத வர்களாகமட்டும் இராமல், நமது மனங்களில் இச்சையுள்ள எண்ணங்கள் இல்லாதவர்களாகவும் இருக்கவேண்டும் என்பதையும் காட்டினதால் (வச. 27,28), இயேசு பிரமாணத்தை நிறைவேற்றுவதில், அவர் அதற்குக் கீழ்ப்படிந்தவராகமட்டும் இராமல், அதை அதன் முழு அளவிற்கு நிரப்பினார். ஆகையால், நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவது என்பது நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் காத்துக்கொள்ளுவதுடன் நமது வாழ்க்கையில் அதன் முழு அர்த்தத்தையும் கொடுப்பதாகும். இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக இராஜ்ஜியத்தில் எல்லோரிலும் சிறியவன் என்னப்படுவான் (மத். 5:19); அதாவது, தேவனுடைய பார்வையில் மிகவும் சிறியவனாக இருப்பான்; இருப்பவர்களில் மிகவும் கெட்டவனாக இருப்பான். அவைகளைக் கைக்கொண்டு, அவைகளைக் கைக்கொள்ளும்படி மற்றவர்களுக்கும் போதிக்கிறவன், பரலோக இராஜ்ஜியத்தில் பெரியவன் எனப்படுவான்.

**லூக். 16:17** “வேதத்தின் ஓர் எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்.”

**யாக். 2:10–12** தேவனுடைய பிரமாணத்தின் ஒவ்வொரு விதிகளையும் நாம் கைக்கொள்ளவேண்டும். நாங்கள் அவைகளில் அதிகமானவை களைக் கைக்கொள்ளுகிறோம் என்று கூறுவதுமட்டும் போதாது; ஏனெனில், ஒருநாள் நியாயப்பிரமாணத்திலுள்ள ஒவ்வொரு விதிகளினாலும் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். (வச. 12).

**குறிப்பு:–** இந்தப் பிரமாணம் சுயாதீனப்பிரமாணம் என்று கூறப்படுகிறது; ஏனெனில், அதை நாம் கைக்கொள்ளும்போது, பாவத்திலிருந்து விடுதலை யானவர்களாக இருக்கிறோம்.

**1 யோவான் 3:4** நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்.

**குறிப்பு:–** தேவனுடைய பிரமாணத்தின் எந்தப் பகுதியை மீறினாலும் அது பாவமாக இருந்து, பாவத்தின் சம்பளம் மரணமாயிருக்கிறது–ரோமர் 6:23.

**யாக். 1:22–25** தேவனுடைய பிரமாணம் ஒரு கண்ணாடியைப் போல் இருக்கிறது. அது நமது பாவங்களை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. அப்படியிருந்த போதிலும், ஒரு கண்ணாடியால் நம்மைச் சுத்தப்படுத்தமுடியாது; தண்ணீரினால்மட்டுமே அதைச் செய்யமுடியும். அதைப்போல, தேவனுடைய நியாயப் பிரமாணத்தால் நம்மை மன்னிக்கவோ சுத்தரிக்கவோ முடியாது. இயேசுவின் இரத்தம்மட்டுமே நம்மைப் பாவத்திலிருந்து சுத்திகரிக்கிறது.

**எபி. 8:8–10** தேவனுடைய, புதிய ஏற்பாட்டு மக்களுடனுள்ள அவருடைய உடன்படிக்கையில் (அல்லது ஒப்பந்தத்தில்), பிரமாணமானது நமது மனங்களிலும் இருதயங்களிலும் எழுதப்படும்.

**1 யோவான் 5:2,3** நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்தால், அவருடைய கற்பனைகள் பாரமானவைகளாக இருக்காது.

**1 யோவான் 2:3–5** அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான் அவனுக்குள் சத்தியம் இல்லை.

**நீதி. 28:9** வேதத்தைக் கேளாதபடி நமது செவிகளை நாம் விலக்கினால், நமது ஜெபங்களும் ஆண்டவருக்கு அருவருப்பாயிருக்கும்.

**ஏசா. 8:20** வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்க வேண்டும். ஒரு சபை தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாததற்குக் காரணம், அதனிடம் வெளிச்சம் இல்லை என்பதுதான். அது சத்தியத்தைக்குறித்த தேவவசனமாக இது இருக்கிறது.

**வெளி. 12:17** தேவனுடைய கடைசி உண்மையான சபை (மீதியான சபை) தேவனுடைய கற்பனைகளைக் காத்துக்கொள்ளும் (வெளி. 14:12–யும் வாசிக்கவும்).

## பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம்

**ரோமர் 6:14,15** நீங்கள் நியாப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் …

**குறிப்பு:** நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம் என்பதன் பொருள், நாம் நியாயப்பிரமாணத்தை மீறியிருப்பதினால், அதன் தண்டனைக்குக் கீழாக்கப்பட்டிருக்கிறோம் என்பதே. நாம் நியாயப்பிரமாணத்தை மீறும்போது மட்டுமே நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாகிறோம். அதாவது தண்டனைக்கு, அதன் நியாயத்தீர்ப்பிற்கு அல்லது தண்டிக்கப்படுவதற்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். இன்று நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்களாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், கிறிஸ்து நமக்காக மரித்து, நம்முடைய தண்டனையை எடுத்துக்கொண்டிருக்கிறார். கிருபையின்கீழ் என்றால் தேவனுடைய அன்பிற்கும் மன்னிப்பிற்கும்கீழ் இருக்கிறோம் என்று அர்த்தமாகிறது. இயேசு நமது குற்றங்களனைத்தையும், நமது தண்டனை களனைத்தையும் தம்மீது எடுத்துக்கொண்டார். இவ்விதமாகத்தான் இயேசு நம்மை இரட்சித்திருக்கிறார். அப்படியிருந்தபோதிலும், நாம் பாவம் செய்த உடனே மறுபடியும் நியாயப்பிரமாணத்தின் தண்டனைக்குக்கீழாக வந்துவிடுகிறோம் அப்பொழுது மறுபடியும் மன்னிப்பிற்காகத் தேவகிருபை நமக்கு அவசியப்படுகிறது.

**ரோமர் 6:15** **கேள்வி:** இதனால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் செய்யலாமோ?

**பதில்:** கூடாதே. (தேவன் தடைபண்ணுகிறார்).

**ரோமர் 6:1,2** **கேள்வி:** ஆகையால், என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?

**பதில்:** கூடாதே!

வேறுவார்த்தைகளில் கூறுவதானால், தேவன் நம்மை இரட்சிக்கின்ற காரணத்தால், நாம் பாவம்செய்து கொண்டே இருக்கலாமென்றும் தேவப்

பிரமாணத்தை மீறிக்கொண்டே இருக்கலாமென்றும் நினைக்கக்கூடாதவர்களாக இருக்கிறோம். தேவனுடைய கிருபை எப்போதும் இருந்ததைவிட, தேவனுடைய பிரமாணத்தைக் காத்துக்கொள்ள நம்மை அதிக விருப்பமுள்ளவர்களாகச் செய்யவேண்டும். பாவத்திற்கு மரித்த நாம், இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? (வச. **2**)

**ரோமர் 3:31** "அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல் நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே"

"தேவனுடைய நியாயப்பிரமாணம் அவருடைய மெய்யான தன்மையின் வெளிக்காட்டுதலாக உள்ளது. அது அன்பு என்னும் பெரும் கொள்கையின் உடலோடுகூடிய உருவமாக இருக்கிறது. எனவே, அது பரலோகத்திலும், பூமியிலும் அவருடைய அரசாங்கத்தின் அஸ்திபாரமாக இருக்கிறது."—**SC 65.**

சீனாய் மலையிலிருந்து நியாயப்பிரமாணம் அறிவிக்கப்பட்டபோது, தேவன் அவருடைய சுபாவத்தின் பரிசுத்தத் தன்மையை மனிதர்கள் அறியும்படிச்செய்து, அதனுடன் ஒப்பிட்டு, அவர்களுடைய சொந்தப் பாவத் தன்மையைக் காணும்படிச் செய்தார். பாவத்தைப்பற்றிய ஒரு மன உணர்த்துதலையும், அவர்களுக்கு ஓர் இரட்சகரின் அவசியத்தையும் வெளிப்படுத்துவதற்காக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது. நியாயப்பிரமாணம் மாறாதது என்பதற்கும், நித்தியமானது என்பதற்கும், வானங்களில் ஒளிவீசிக்கொண்டிருக்கும் சூரியனும், நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் கெட்டியான பூமியும், தேவனுடைய சாட்சிகளாக இருக்கின்றன. அவைகள் இல்லாமலாகிப்போனாலும், தெய்வீகக் கற்பனைகள் தொடர்ந்து இருக்கும். வேதத்தில் ஒரு உறுப்பு அவமாய்ப்போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்—லூக். 16:17. இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டி என்று பொருளாக (நிழலாக) சுட்டிக்காட்டிக்கொண்டிருந்த முறைகள் (பலிமுறைச் சடங்காச்சாரங்கள்) அவருடைய மரணத்தில் ஒழியவேண்டியதாக இருந்தது. ஆனால், நியாயப்பிரமாணத்திலுள்ள கற்பனைகள் தேவனுடைய சிங்காசனத்தைப்போல மாற்றமுடியாததாக இருக்கிறது.

"கர்த்தருடைய பிரமாணம் பூரணமானதாக இருப்பதினால், அதிலிருந்து மாறுபடும் ஒவ்வொன்றும் தீமையாய் இருக்கவேண்டும். தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலிருப்பவர்களும்,

மற்றவர்களை அப்படிச் செய்யப் போதிப்பவர்களும் கிறிஸ்துவால் ஆக்கினைக்குட் படுத்தப்பட்டுள்ளனர். நியாயப்பிரமாணத்தின் உரிமைகளை இரட்சகரின் கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை நடப்பித்திருந்தது. மானுடத்தில் அதைக் காத்துக்கொள்ள முடியும் என்பதை அது மெய்ப்பித்து, கீழ்ப்படிதலினால் முன்னேற்றமடையக்கூடிய சுபாவத்தின் மிக மேலான தன்மையை காட்டியது. கீழ்ப்படிந்த அவரைப்போலவே, கீழ்ப்படியும் அனைவரும் கற்பனை, பரிசுத்தமாயும், நீதியாயும், நன்மையாயும் இருக்கிறது என்று அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல், தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறும் அனைவரும் கற்பனை அநீதியானது, அதற்குக் கீழ்ப்படியமுடியாது என்னும் சாத்தானின் கூற்றைத் தாங்கிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறாக, அவர்கள் பெரும் எதிராளியின் வஞ்சகத்திற்கு வழிமொழிந்து, தேவன்மீது கனக் குறைவை வைக்கின்றனர். அவர்கள் தேவப் பிரமாணத்திற்கு எதிரான முதல் கலகக்காரனான ஒரு துன்மார்க்கனின் பிள்ளைகளாக இருக்கின்றனர். அவர்களை மறுபடியும் பரலோகத்தில் அனுமதிப்பது என்பது அதிருப்தி, கலகம் ஆகியவைகளின் மூலக்கூறுகளைக் கொண்டுவந்து, பிரபஞ்சத்தின் நல்ல நிலைமையை மீண்டும் ஆபத்துக்குள்ளாக்குவதாயிருக்கும். நியாயப்பிரமாணத்தின் ஒரு கொள்கையைக்கூட (வேண்டுமென்றே) விருப்பத்துடன் கருதாமலிருக்கும் எந்த ஒரு மனிதனும், பரலோக இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கமாட்டான்.” —**DA 308,309.**

### லூத்தரன் சபை

பத்துக் கற்பனைகளிலுள்ள கற்பனையை நான் நிராகரிக்கவேண்டும் என்பது எவ்விதமாக எனக்கு அறிவிக்கப்பட்டது என்பதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். கற்பனையில்லாத இடத்தில் ஏதாவது பாவம் இருக்கக்கூடும் என்பது கற்பனைசெய்து பார்க்கக்கூடியதா? எவர்களெல்லாம் கற்பனையை இல்லாமல் செய்கிறார்களோ அவர்களெல்லாம் நிச்சயமாகப் பாவத்தையும் இல்லாமல் செய்கின்றனர்.—**மார்ட்டின் லூத்தர்–ஆவிக்குரிய அந்திக் கிறிஸ்து, 71,72–**

**கேள்வி:–** பழைய ஏற்பாட்டில் எத்தனை விதமான பிரமாணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

**பதில்:** மூன்று.

1. சடங்காச்சாரப் பிரமாணம் அல்லது சபைப் பிரமாணம். இதைத் தேவன் யூதர்களுக்கு அவர்களுடைய ஆராதனைக் கிரமங்களுக்காகவும் பலிமுறைகளுக்காகவும் பண்டிகைகளுக்காகவும் மற்ற சடங்குகளுக்காகவும் கொடுத்தார்.

2. சிவில் சட்டம் (சமூகச் சட்டம்) அல்லது அவர்களுடைய அரசியல் காரியங்களை ஒழுங்குபடுத்தியிருந்த சட்டம்.

3. சன்மார்க்கப் பிரமாணம் அல்லது தேவனுக்கும் உடன் மனிதர்களுக்கும் உள்ள கடமைகள் சம்மந்தப்பட்டது. இது சுருக்கமாகப் பத்துக் கற்பனைகளில் அறியப்பட்டிருந்தது.

**கேள்வி:—** நாம் யூதர்களின் சடங்காச்சாரப் பிரமாணங்கள் அல்லது சபைச் சட்டங்களை காத்துக்கொள்ளவேண்டும் என்னும் கடமைப்பாட்டின்கீழ் இருக்கிறோமா?

**பதில்:—** இல்லை. அது கட்டளையாக அனுபவித்திருந்த தற்காலிகச் சட்டங்கள்; கிறிஸ்துவைக் காட்டும் பொருளாகவும் நிழலாகவும்மட்டுமே இருக்கின்றன. அவரது மரணத்தினால் அவை நிறைவேறியிருந்தபோது, யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் இடையில் இருந்த பிரிவினைகள் நீக்கப்பட்டிருந்தன. சடங்காச்சாரப் பிரமாணம் அதற்குமேல் அவசியமில்லாததாக இருந்ததினால் அது நீக்கப்பட்டது.

**கேள்வி:—** நாம் சன்மார்க்கப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவேண்டும் என்னும் கடமைப்பாட்டுக்குள் இருக்கிறோமா?

**பதில்:—** ஆம். அது தேவனுடைய தன்மையில் ஸ்தாபிக்கப்பட்டு, மாற்றமுடியாததாக இருந்ததனால், அது உலகளாவிய பொருந்துதலுக்காக, சமூகச் சடங்காச்சாரப் பிரமாணங்கள் சம்மந்தப்பட்டவரை நடைமுறைப்படுத்த முடியாததாக இருந்தது. கிறிஸ்து அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதைக் கோருகிறார்.—**மார்ட்டின் லூத்தர்—சுருக்கமான வேதோபதேசம்: 16, 1834—ம் வருடப் பதிப்பு.**

எவர்கள் கிறிஸ்துவை உண்மையாக நம்புகிறார்களோ, அவர்கள் பிரமாணத்தின் சாபத்திலிருந்தும், பிரமாணத்தின் கட்டாய நிலைமையிலிருந்தும் கிறிஸ்துவின்மூலமாக விடுதலைசெய்யப்பட்டிருந்தபோதிலும், அந்தப்படி பிரமாணம் இல்லாமலிருந்தாலும், அதே காரணத்திற்காக தேவகுமாரன் அவர்களை மீட்டிருப்பதினால், அவர்கள் இரவும் பகலும் தேவனுடைய பிரமாணத்தைத் தியானம்செய்யவேண்டியவர்களாக இருந்து, அதைக் காத்துக் கொள்வதில் தொடர்ச்சியாகச் செயலாற்றவேண்டும்.—**லூத்தரன் Formula of Concord, Article 6.**

## மெதடிஸ்டுகள்

மோசேயினால் இஸ்ரவேலின் பிள்ளைகளுக்குக் கொடுக்கப் பட்டிருந்த சடங்காச்சாரப் பிரமாணம் பழைய பலிமுறைகளுடன் தேவாலய ஆராதனைகளுடன் சம்மந்தப்பட்டதாக இருந்து, எல்லாத் தடை உத்தரவுகளையும் தற்காலிகச் சட்டங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்தது. அவைகளை அழிக்கவும், இல்லாமல் செய்துவிடவும், முற்றிலும் நீக்கவும், நமது கர்த்தர் உண்மையாகவே வந்திருந்தார். இதற்கு அப்போஸ்தலர்களனைவரும் சாட்சி பகருகின்றனர். கட்டளையாக இருந்த அந்தக் கையெழுத்தை நமது கர்த்தர் குலைத்து, நீக்கி, அதை எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்தார்...

ஆனால், பத்துக் கற்பனைகளில் அடங்கியிருந்து, தீர்க்கதரிசிகளால் வலியுறுத்தப்பட்டிருந்த சன்மார்க்கப் பிரமாணத்தை அவர் நீக்கவில்லை. அதன் எந்தப் பகுதியையாவது நீக்குவது அவரது வருகையின் வடிவமைப்பாக இருக்கவில்லை. பரலோகத்தில் விசுவாசமிக்க உறுதியான சாட்சியாக நிற்கும் அது, ஒருபோதும் மீறப்படமுடியாத பிரமாணமாக இருக்கிறது. சடங்காச்சாரப் பிரமாணங்களிலிருந்து முற்றிலுமாக வித்தியாசமான ஓர் அஸ்திபாரத்தின்மீது சன்மார்க்கப் பிரமாணம் நிற்கிறது. இந்தப் பிரமாணத்தின் ஒவ்வொரு பகுதியும் மனித இனம் முழுவதின்மீதும் எல்லாக் காலங்களிலும், காலத்தையும், இடத்தையும் சார்ந்ததாக இராமல், தேவனுடைய தன்மையையும் மனிதனுடைய தன்மையையும் அவர்கள் ஒருவருக்கொருவரிலுள்ள மாறாத உறவையும் வலியுறுத்துவதாக இருக்கும்.—**ஜான் வெஸ்லி பிரசங்கம் 25 "மலைப் பிரசங்கத்தைப்பற்றியது"—ஆதார நூல் அநேக சந்தர்ப்பங்களிலுள்ள பிரசங்கம், முதல் பாகம் வெளியீடு, நியுயார்க் B. Waugh & T. Mason, 1836: 221, 222.**

வெளிப்படையாகவும் விளக்கமாகவும் பிரமாணத்தை நியாயந்தீர்த்து, பிரமாணத்தைப்பற்றித் தீமையாகப் பேசுகின்றவர்களே, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எதிரியாக இருப்பவர்களின் வரிசையில் முன்னணியில் இருப்பவர்கள். அவர்கள் சிறியதோ அல்லது பெரியதோ, ஒன்றைமட்டுமல்ல, எல்லாக் கற்பனைகளையும் ஒரேயடியாக நீக்கவும், (அதன் கட்டுப்பாடுகளை கலைக்கவும், தளர்த்தவும், கட்டவிழ்க்கவும்) போதிக்கின்றனர். எந்தவிதமான மறைவுமின்றி அநேக வார்த்தைகளினால்: "நியாயப்பிரமாணத்துடன் நமது கர்த்தர் என்ன செய்தார்– அவர் அதனை ஒழித்துவிட்டார். ஒரே ஒரு கடமைமட்டுமே இருக்கிறது; அது விசுவாசிப்பதே" என்று கூறுகின்றனர். இவை உண்மையாகவே எதிர்த்து நிற்பதாகும். இது கர்த்தருடைய முகத்துக்கு நேராக அவரை எதிர்த்துநின்று, "எந்த ஒரு தூதைக் கொடுக்கும்படி அவர் அனுப்பப்பட்டாரோ அதை அவர் புரிந்துகொள்ளவில்லை" என்று

கூறுவதாகும். ஓ கர்த்தாவே! இந்தப் பாவத்தை அவர்கள்மீது சுமத்தாதிரும். பிதாவே, அவர்களை மன்னியும்; ஏனெனில், தாங்கள் செய்வது இன்னதென்று அவர்கள் அறியாமலிருக்கிறார்கள்.

**இந்தப் பலத்த பொய்த் தோற்றத்துடன் கலந்திருக்கும் சூழ்நிலைகளில், அதிக ஆச்சரியமாக இருப்பது என்னவெனில், அதில் ஈடுபட்டவர்கள், அவருடைய பிரமாணத்தை தூக்கியெறிந்துவிட்டு அவரை கனம் பண்ணுவதாக நம்பிக்கொண்டிருப்பதும், அவருடைய கோட்பாட்டை அழித்துக்கொண்டிருக்கும்போதே, அவருடைய ஊழியத்தை மகிமைப்படுத்துவதாக நம்பிக்கொண்டிருப்பதும்தான். ஆம் அவர்கள், ரபி வாழ்க! என்று கூறி அவரை முத்தமிட்ட யூதாசைப்போலவே அவரைக் கனப்படுத்துகின்றனர்! அவர், அவர்கள் ஒவ்வொருவருடனும் முத்தத்தினாலேயோ மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறீர்கள் என்று கூறலாம். அவருடைய இரத்தத்தைப்பற்றிப் பேசி, அவருடைய கிரீடத்தை நீக்கிவிடுவதும், அவருடைய சுவிசேஷத்தை முன்னேற்றமடையச்செய்வதாகப் போலியாகக்கூறிக்கொண்டு, அவருடைய கற்பனையின்பகுதியை லேசானதாக வைப்பதும், அவரை ஒரு முத்தத்தினால் காட்டிக்கொடுப்பதைத்தவிர வேறு ஒன்றுமில்லை.** கீழ்ப்படிதல் அவசியமில்லையென்று நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விசுவாசத்தைப்பற்றிப் பேசி, தேவனுடைய கற்பனையை இல்லாமல்செய்யவோ அல்லது பலனற்றதாக்குவதற்கேதுவாகவோ கிறிஸ்துவைக்குறித்து போதிக்கிறவர்களும் இந்தக் குற்றத்திலிருந்து எவ்விதத்திலும் தப்பமுடியாது.—**ஜான் வெஸ்லி "செயல்கள்" 25 (கிராண்ட் ராபிட்ஸ் மிச்சிகன் ரோண்டர்வன்) 1872 மறுபதிப்பு,–317, 318.**

### வெஸ்லி

"அவர்களுடைய பெரிய வேண்டுகோள்: தங்களது கணிப்பின்படி, கிறிஸ்துவின் பாடுகளையும் அவரால் கிடைக்கும் நன்மைகளையுங்குறித்து மாத்திரம் பேசுவது நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக இருக்கிறது. ஆனால் இதை நாம் முற்றிலும் மறுக்கிறோம். மனிதர்களுக்குப் பாவத்தை உணர்த்துவதும், நரகத்தின் கரையில் இன்னும் நித்திரை செய்துகொண்டிருப்பவர்களை எழுப்புவதுமாகிய நியாயப்பிரமாணத்தின் முதல் வேலையையே அது நிறைவேற்றவில்லை. ஒருவேளை ஓரிரு இடங்களில் நிலைமை மாறியிருக்கலாம். ஆயிரத்தில் ஒருவர் சுவிசேஷத்தினால் நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டிருக்கலாம்; ஆனால், இது ஒரு பொதுவான நியதியாக இல்லை. நியாயப்பிரமாணத்தினால், நியாயப்பிரமாணத்தினால் மாத்திரமே பாவிகளை உணர்த்துவது தேவனுடைய செயல்முறையாக இருக்கிறது. இதற்காக தேவன் சுவிசேஷத்தை நியமிக்கவில்லை; கர்த்தரும் அப்படி உபயோகிக்கவில்லை. இவ்விதமாக அதைப் பொருட்படுத்துவதற்கோ

பயனுள்ளதாக இருக்கும் என்று நினைப்பதற்கோ வேதவாக்கிய அதிகாரம் எதையும் நாம் பெற்றிருக்கவில்லை. இயற்கையான முறையில் இதை எதிர்பார்க்க எந்தக் காரணமும் இல்லை. பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல், சுகமுள்ளவனுக்கு வேண்டியதில்லை என்று நமது கர்த்தரும் சொல்லியிருக்கிறார். ஆகையால், சுகமாயிருப்பவனுக்கு அல்லது சுகமாயிருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பவனுக்கு வைத்தியனை ஏற்பாடுசெய்வது பொருத்தமற்றது.

முதலாவதாக, சுகவீனமாயிருக்கிறார்கள் என்னும் மன உணர்வினை நீங்கள் அவர்களுக்கு உண்டுபண்ணவேண்டும். நொறுங்காத முழுமையான இருதயத்தை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு கிறிஸ்துவை கொடுப்பதும் அதற்கு நிகராக பொருத்தமில்லாததே."—**John Wesley, Vol. 1: Sermon 5: 216,217.**

அப்படிப்பட்ட ஒரு சுவிசேஷம் (நியாயப்பிரமாணம் கோரும் உரிமைகளைச் சேர்த்து பிரசங்கம்பண்ணாத) ஒரு அழகிய கட்டிடத்தை அமைக்கலாம் ஆனால், அதன் அஸ்திபாரம் மணலின்மீது இருக்கிறது. சுவிசேஷம் இல்லாத நியாயப்பிரமாணம் இருளும் நம்பிக்கையற்றதுமாக இருக்கிறது. நியாயப்பிரமாணம் இல்லாத சுவிசேஷம் திறமையற்றதாகவும், வல்மையற்றதாகவும் இருக்கிறது.—**பிரசங்கம் செய்வது எப்படி என்பது பற்றிய போதனைகள். மத்தேயு சிம்சன் பிரசங்கம் 129 (ஈட்டன் & மெய்ன்ஸ் நியூயார்க் 1906).**

"தேவனால் மோசேக்குக் கொடுக்கப்பட்ட சமயச் சடங்காச் சாரங்கள்பற்றிய பிரமாணம் கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்தாமலிருந்தாலும், எந்த ஒரு பொதுநல அமைப்பிலும் தேவையின் காரணமாகவும் அந்தச் சமூகச் சட்டங்கள் பெற்றுக்கொள்ளப்படவேண்டியவைகளாக இல்லாமலிருந்தாலும், அதற்கு முற்றிலும் மாறானவிதமாகச் சன்மார்க்கப் பிரமாணங்கள் என்று கூறப்படும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதிலிருந்து எந்த ஒரு கிறிஸ்தவனும், எப்படிப்பட்டவனாக இருந்தாலும் விடுதலை பெற்றவனாக இல்லை."—**மத சம்மந்தமான துணை விதிகள், பழைய ஏற்பாட்டைப்பற்றியது. மெதடிஸ்ட் சபையின் கோட்பாடுகளும் ஒழுங்குகளும் 1956, (நாஷ்வில் தி மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸ், 1957) பகுதி 66: 28இ 29.**

**குறிப்பு:**– இது சர்ச் ஆப் இங்கிலாந்து சபையின் மத சம்மந்தமான துணை விதிகளைப்போன்றதாகவே இருக்கின்றது.

**பாப்டிஸ்ட்**

"தேவனுடைய கற்பனை–தெய்வீக கற்பனை. அது பரிசுத்தமானதாகவும் பரலோகம் சார்ந்ததாகவும், பூரணமானதாகவும்

இருக்கிறது... மிகப் பெரிய கற்பனையுமில்லை, மிகச் சிறிய கற்பனையும் இல்லை. அதன் பரிபூரணம் அதன் தெய்வீகத்திற்குச் சாட்சியாயிருக்கிறது. நாம் பத்துக் கற்பனைகளில் காண்பதுபோன்ற கற்பனையை எந்த ஒரு மனிதனாலும் கொடுத்திருக்கமுடியாது"—**ஸ்பர்ஜனின் பிரசங்கங்கள்: 280.**

தேவனுடைய நியாயப்பிரமாணம் அவருடைய சன்மார்க்க அரசாங்கத்தின் நித்தியமானதும் மாறாததுமான சட்டமாக இருக்கிறது என்றும், விழுந்துபோன மனிதன் அதன் கொள்கைகளை கடைபிடிக்க முடியாதிருக்கக் காரணம், அவனுக்குப் பாவத்தின்மேல் இருக்கும் விருப்பம் மட்டுமே என்று வேதவாக்கியங்கள் சொல்லுகின்றன. பரிசுத்தப் பிரமாணங்களுக்கு உண்மையாக கீழ்ப்படிய ஒரு மத்தியஸ்தரின் மூலமாக அவ்விருப்பத்திலிருந்து அவர்களை விடுவித்து திரும்பக்கட்டுவதே சுவிசேஷத்தின் பெரும் நோக்கமாக இருக்கிறது.—**பாப்டிஸ்ட் சபை டைரக்டரி: 167இ168 பதிப்பு 1877.**

**கேள்வி:** நான் அறிந்திருக்கும் சில மதச் சார்புள்ள மக்கள் பத்துக் கற்பனைகள் பிரமாணத்தின் ஒரு பகுதி என்றும் இன்று அது நமக்கு பொருந்துவதாக இல்லை என்றும் என்னிடம் கூறுகின்றனர், இது சரியா?

**பதில் :** அல்ல. இது சரியல்ல. இந்தத் தவறான அபிப்பிராயங்களினால் நீங்கள் தவறாக நடத்தப்படமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் எனப் புதிய ஏற்பாடு கூறும்போது, அதன் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்துகொள்ளவேண்டியது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது.

நியாயப்பிரமாணம் என்னும் சொல் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் இரண்டு அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நீங்கள் பாருங்கள். சில சமயங்களில், அது பழைய ஏற்பாட்டிலுள்ள சமயச் சடங்குகள்பற்றிய காரியங்களையும், உணவு, பானம் போன்றவைகளைப்பற்றிய ஒழுங்குமுறைகளைப்பற்றியும் பேசுகின்ற சடங்காச்சாரப் பிரமாணத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இந்தப் பிரமாணத்திலிருந்து கிறிஸ்தவர்கள் உண்மையாக விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் ஆனால், புதிய ஏற்பாடு சன்மார்க்கப் பிரமாணங்களைப் பற்றிப் பேசுகின்றது. இது நிரந்தரமானதும் மாறாததுமான தன்மையை உடையதாக இருந்து, பத்துக் கற்பனைகளில் சுருக்கமாக்கப்பட்டிருக்கிறது.—**முனைவர் பில்லி கிரஹாம் அவர்கள் அவருடைய செய்தித்தாள் பகுதியில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.—காலங்களின் அடையாளங்கள். ஆகஸ்ட் 23, 1955.**

**பிரிஸ்பிட்டேரியன்**

நாங்கள் கற்றறிந்திருக்கிறபடியால்:–

1. தேவனுடைய பிரமாணங்கள் அனைத்தும் கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துகிறது. ஒப்பிடுக. யாக். 2:10.
2. தேவனுடைய பிரமாணங்கள் அனைத்தும் கிறிஸ்தவ ஊழியக் காரர்களால் அவைகளின் சரியான இடத்தில் பிரசங்கிக்கப்படவேண்டும்.
3. தேவனுடைய பிரமாணங்களில் சில கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லாத சிறியவைகளாக இருக்கின்றன என்று பாசாங்குசெய்பவர்கள், அவருடைய இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்களாக உள்ளனர்.
4. உண்மையான பக்தி எல்லாக் கற்பனைகள்மீதும் மரியாதை செலுத்துவதாக உள்ளது. ஒப்பிடுக சங். 119:6.

**—வேதாகம விளக்க நூல். சுநஎ. ஆல்பர்ட் பார்னெஸ், சுவிசேஷம் பற்றியது. மத்தெயு 5:19—ன்மீதான குறிப்பு, திருத்திய பதிப்பு, நியூயார்க் ஷார்பர்ஸ் சகோதரர்கள் 1868.**

“இது (நியாயப்பிரமாணம் சுவிசேஷம் ஆகியவைகளின் இணைப்பு) எல்லாக் கிறிஸ்தவ பிரசங்கங்களுக்கும் உண்மையான கருத்துச் செறி வுள்ளதாக இருக்கிறது. பிரமாணமில்லாமல், சுவிசேஷத்தை புரிந்துகொள்ள முடியாது. அல்லது அது சாதாரணமான நுண்ணுர்வுத் தன்மையாக இருக்கும். சுவிசேஷம் இல்லாமல் தூய்மையான சன்மார்க்கத் தன்மையாவதிலிருந்து நியாயப்பிரமாணத்தினால் தப்பிக்கமுடியாது.”—**பிரிஸ்பிட்டேரியன் வாழ்க்கை முறை—ஜான் மக்கே: 153, பிரன்டைஸ்ஷால் கம்பெனி. இங்கில்உட் கிளிஙப் N.J. 1960**.

**காங்கிரிகேஷனல் (LMS)**

“மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வார்த்தை யாக்கோபின் நிருபத்தில் காணப்படுகிறது. ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால், எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்—யாக். 2:10. யாக்கோபின் வார்த்தைகளிலுள்ள வெளிப்படையான கடுமையான விளக்கம்: பத்துக் கற்பனைகளில் ஒன்பதுக்கு கீழ்ப்படிந்தால், பத்தாவது கற்பனையை மீறியிருந்தாலும் அப்படிப்பட்ட கீழ்ப்படிதல் அவர்கள் கணக்கில் வரவு வைக்கப்படும் என்பதாக எண்ணுகின்றனர் அதைப்பற்றி அவர்கள் மீண்டும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.”—**p. 11**.

“கிறிஸ்துவில் உள்ள ஜீவ ஆவியின் பிரமாணம் அவனை (மனிதனை) பாவம், மரணம் ஆகிய பிரமாணத்திலிருந்து விடுதலைசெய்கிறது என்பதையும், ஆனால், தேவனுடைய பிரமாணத்திலிருந்து விடுதலைசெய்வதில்லை

என்பதையும், மனிதனுக்கு பக்திவிநயத்துடன் ஞாபகப்படுத்தவேண்டியது அவசியமாக இருக்கிறது."—**p. 12.**

"கிறிஸ்தவர்கள் பிரமாணத்திலிருந்து விடுதலை பெறவில்லை என்னும் ஒரு உணர்வு (நடைமுறை அறிவு) இருக்கிறது, பிரமாணத்தைக் காத்துக் கொள்வதற்கு மனிதனைக் கிருபை தகுதிப்படுத்தும்போதுமட்டுமே, அவர்கள் அதிலிருந்து விடுதலை பெறுகின்றனர். தனது நாட்டுச் சட்டத்தின்படி வாழுகின்ற சன்மார்க்கமான ஒரு மனிதன் கைதுசெய்யப்படுவதிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறான் என்பது போன்றதாக இது இருக்கிறது (p. 23). ஓய்வுநாளுக்கு நேரான விஷயத்தில் பேச்சிலும் செயலிலும் இருந்த கிறிஸ்துவின் மனப்பாங்கைப்பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் வார்த்தைகளினால் கூறினார் என்றும், ஆனால் செயலில் பழைய ஏற்பாட்டுக் கட்டளை கட்டுப்படுத்தியிருந்த தன்மையில் அவர் இளைப்பாறினார் என்றும் சிலர் கற்பனை செய்திருக்கின்றனர்; அப்படியானாலும், இயேசுவின் செயல்களையும் போதனைகளையும் முற்றிலுமாகத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக இந்தப் பார்வை இருக்கிறது" (p. 50).—**பத்துக் கற்பனைகள் Rev. G. காம்டிபல் மார்கன் நியூயார்க் பிளமிங் ரீவல் கம்பெனி 1901.**

**சர்ச் ஆப் இங்கிலாந்து (ஆங்கிலிக்கன் சபை)**

சமயச் சடங்காச்சாரங்களைத் தொடுகிற நியாயப்பிரமாணம் மோசே வழியாக தேவனிடமிருந்து கொடுக்கப்பட்டதாக இருந்தபோதிலும், அவைகள் கிறிஸ்தவ மக்களைக் கட்டுப்படுத்தாமலிருந்தபோதிலும், எந்த ஒரு பொது நல அமைப்பிலும் அவசியத்தின் காரணமாக சமூகக் கட்டளைகள் பெற்றுக்கொள்ளப்படவேண்டியவைகளாக இல்லாமலிருந்தபோதிலும், அதற்கு முற்றிலும் மாறான விதமாக சன்மார்க்கப் பிரமாணம் என்று கூறப்படும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து எந்த ஒரு கிறிஸ்தவ மனிதனும், எப்படிப்பட்டவனாக இருந்தாலும், விடுதலை பெறவில்லை.—**சர்ச் ஆப் இங்கிலாந்து 39 மதம் சம்மந்தப்பட்ட துணை விதிகள், துணைவிதி 7.**

**D.L.** மூடி (கடந்த நூற்றாண்டின் பெரிய அமெரிக்க சுயாதீன சுவிசேஷகன்) பிரமாணத்தைப்பற்றி:– "பத்துக் கற்பனைகள் இன்னும் கட்டுப்படுத்துபவைகளாக இருக்கின்றன என்றும், அவைகளின் மீறுதல் களுக்கு தண்டனை இணைக்கப்பட்டிருக்கிறதென்பதையும் மக்கள் புரிந்துகொள்ளும்படி செய்யப்படவேண்டும். நிறுக்கப்பட்டு, குறைவாகக் காணப்படுகிறாய்."—**டுவைட் L. மூடி பக்கம் 16இ சிக்காகோ பிளமிங் ர் ரீவல் கம்பெனி 1898.**

தேவன் என்னிடத்திலிருந்து என்ன கோருகிறார் என்பதையும் ஆனால் என்னால் சுயமாக என்ன செய்யமுடியாது என்பதையும் நியாயப்பிரமாணம் எனக்கு காட்டுகிறது. நான் தொலைந்தவனாக இருக்கிறேன் என்பதையும், நியாயப்பிரமாணம் எனக்குக் காட்டுகிறது. நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனான என்னால் எப்படிப்பட்டவனாக இருக்கமுடியாதோ, அதை கிருபையினால் அப்படிப்பட்டவனாவதற்கு அது எனக்கு கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிறது (ரோமர் 8:3).

ஆம்! சுவிசேஷத்தினுடைய கிருபையின் முழு நோக்கமும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு நம்மைத் தகுதிப்படுத்துவதாக இருக்கிறது. பரிசுத்தம், பரிசுத்தமடைதல் என்பவை ஒரு அனுபவத்தைவிட அதிகமானதாக இருக்கிறது; அது வாழவேண்டிய ஒரு வாழ்க்கையாக இருக்கிறது.

நாம் கிருபையைப் பெற்றிருக்கிறோம் என்று கூறிக்கொண்டிருந்தும் ஒரு நீதிமானாக்கப்பட்ட வாழ்க்கையை நடத்துவதற்கு எது அவசியமாக இருக்கிறது என்பதை (என்னும் அறிவை) இன்னும் நாம் உடையவர்களாக இல்லாமலிருந்தால், அப்போது நாம் பெற்றுக்கொண்டது தேவனுடைய கிருபையை அல்ல; நாம் ஒரு மனோதத்துவமான அனுபவத்தை உடையவர்களாக இருக்கலாம். கிறிஸ்தவம் பரலோகத்துக்கு ஒரு பாஸ்போர்ட்டைக் கொடுப்பதுபோலவே, பூமியின் வெற்றிகளையும் கொடுக்கிறது.—**பிரமாணமும் கிருபையும் ஆலன் ரெட்பாத் (மூடி நினைவு ஆலயத்தின் போதகர், சிக்காக்கோ) புதிய நூற்றாண்டுத் தலைவர் என்னும் நூல் எண் 59. பக்கம் 13. ஜூலை 1958.** ★

# 35

# சன்மார்க்கப் பிரமாணமும் சடங்காச்சாரப் பிரமாணமும்!

பத்துக் கற்பனைகள் தேவனுடைய எல்லாப் பிரமாணங்களுக்கும் அஸ்திபாரமாக இருப்பதனால், அது தேவனுடைய கற்பனை, தேவப் பிரமாணம் என்று கூறப்படுகிறது. நம்முடைய வாழ்க்கையில் காணப்படவேண்டிய சரியான காரியங்களை அவை நமக்குக் காட்டுவதனால், சன்மார்க்கப் பிரமாணம் எனவும் கூறப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் எல்லா மனிதர்களும் கேட்கும்படி தேவன் தாமே பேசினதும் எழுதிக் கொடுத்ததுமான ஒரே பொருளாகப் பத்துக் கற்பனைகள் இருக்கின்றன. அது எவ்வளவு முக்கியமாக இருக்கிறது என்பதை இது காட்டுகிறது. சடங்காச்சாரப் பிரமாணம் என்பதன் பொருள் என்னவெனில், அவைகளைச் செய்திருந்த மக்களுக்குச் சிறப்பான ஆவிக்குரிய பொருளை உடையதாக இருந்த யூத சபையின் சட்டம் என்பதாக இருந்தது. பழைய ஏற்பாட்டிலிருந்த சடங்காச்சாரப் பிரமாணங்கள் இயேசுவின் முதலாம் வருகையையும் குறிப்பாக அவரது மரணத்தையும் எதிர்பார்த்திருந்தது. இந்த விசேஷமான சடங்காச்சாரப் பிரமாணங்கள் இயேசுவின் வருகையை எதிர்பார்த்து கொண்டிருந்ததினால், இயேசு வந்தபின் இவை முடிவடைந்தன. இந்தச் சடங்காச்சாரப் பிரமாணங்கள் என்றும், சில சமயங்களில் சட்டதிட்டங்களாகிய நியாப்பிரமாணம் என்றும் கூறப்பட்டிருந்தன. தேவனால் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், மோசே இதை ஜனங்களிடம் பேசி எழுதி வைத்ததனால், சில சமயங்களில் அது மோசேயின் நியாயப்பிரமாணம் என்றுகூடப் பேசப்பட்டது.

பாவத்திற்காக மிருகங்களை பலியிடும் பழைய ஏற்பாட்டின் தொடர்ச்சி, எரியும் விளக்குத்தண்டுகளின் தொடர்ச்சி, அன்றாட சமூகத்தப்பங்கள், பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியர்கள் செய்திருந்த பணிகள், போஜன பானபலிகள், விசேஷமான மாதாந்திர ஓய்வுநாட்கள், அதில் இந்தப் பானமும் போஜனமும் உண்டுபண்ணப்பட்டிருந்தது. விருத்தசேதனம் செய்கின்ற சமயச் சடங்காகிய சம்பிரதாயம் ஆகிய அனைத்தும் யூதச் சபையின் சடங்காச்சாரங்களின்

ஒரு பகுதியாக இருந்து, நமக்காக இயேசு சிலுவையில் மரித்தபோது நீக்கப்பட்டுப்போயின.

**குறிப்பு:**– புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப் பின்னாகப் பார்க்கும் விசேஷமான சபைச் சட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை நாமும்கூட உடையவர்களாக இருக்கிறோம். இவைகள்:

**1.** ஞானஸ்நானம்

**2.** பரிசுத்த திருவிருந்து ஆராதனை (கர்த்தருடைய வீட்டின் தீர்மானம்) ஆகியவைகளாக உள்ளன.

| பத்துக்கற்பனைகள் | சடங்காச்சாரப் பிரமாணங்கள் |
|---|---|
| 1. உபா. 5:22. தேவன் அவைகளைப் பேசினார்; இரண்டு கற்பலகைகளின்மீத அவைகளை எழுதினார். அவர் அதனுடன் எதையும் கூட்டவில்லை. | 1. உபா. 31:24 மோசே அவைகளை ஒரு புத்தகத்தில் எழுதினான். |
| 2. உபா. 10:4,5 உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டது. | 2. உபா. 31:26 உடன்படிக்கைப் பெட்டிக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டது. |
| 3. பிர. 12:13,14; யாக். 2:10-12 சன்மார்க்கக் கடமைகளுடன் இடைப்படுகிறது. | 3. எபி. 9:9,10 கிறிஸ்து வரும் வரை தற்காலிகச் சட்டங்களுடன் இடைப்பட்டது. |
| 4. சங். 111:7,8; லூக்கா 16:17 என்றென்றைக்கும் உறுதியாக நிற்கிறது. | 4. கொலோ. 2:14-17; எபே. 2:15 சிலுவையில் அறையப்பட்டு குலைத்துப் ரோபடப்பட்டது. |

இவைகள், நமக்காக சிலுவையில் மரித்த கிறிஸ்துவைப் பின்னாக பார்ப்பது மட்டுமின்றி, பரலோகத்தில் நாம் கர்த்தருடன் சேர்ந்து புசிக்க இருப்பதையும் பானம் பண்ண இருக்கும் நேரத்தையுங்கூட எதிர்பார்க்கிறது (மத். 26:29; 1 கொரி. 11:26) அந்த நேரத்தில், இந்தத் தற்காலிகச் சட்டங்களும் கடந்து சென்றுவிடும்.

1 கொரி. 7:19 இந்த வசனத்தில் இந்த இரண்டு பிரமாணங்களும் எளிதில் காணப்படுகின்றன. விருத்தசேதனம் இதற்குமேல் எந்தவிதமான அர்த்தத்தையும் உடையதாக இல்லை; ஆனால், தேவனுடைய பத்துக்

கற்பனைகள் இன்னும் கீழ்ப்படியப்படவேண்டியவையாக உள்ளன.

“இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டியாகச் சுட்டிக்காட்டியிருந்த பொருளாக இருந்தமுறை அவருடைய மரணத்தினால் நீக்கபட்டது; ஆனால், நியாயப் பிரமாணத்திலுள்ள கற்பனைகள் என்பது தேவ சிங்காசனத்தைப்போல மாற்ற முடியாதவைகளாக உள்ளன.”—**DA 308.**

சன்மார்க்கப் பிரமாணங்களுக்கும் சடங்காச்சாரப் பிரமாணங்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமைகளைப்பற்றிய அறிக்கைகளுக்காக இந்த நூலின் 34–ம் பாடத்துடன் ஒப்பிட்டு வாசிக்கவும். ★

**36**

# பிரமாணம்பற்றிய சில வசனங்கள் விளக்கப்படுகின்றன

**ரோமர் 6 :14** நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்பட்டில்லாமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். அதாவது, இயேசு நமக்காக சிலுவையின்மீது தண்டனையை எடுத்துக்கொண்டு நம்மை இரட்சித்திருப் பதனால் நாம் இனிமேல் பிரமாணத்தின் தண்டனைக்குக் கீழானவர்களாக இல்லை. இன்று நாம் நமது இரட்சிப்பிற்கான நன்றியை, நமது இடத்தை எடுத்துக்கொண்ட அவருடைய கிருபைக்கும் அவருடைய ஆச்சரியமான அன்பிற்கும் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் கிறிஸ்துவின் கிருபையினால்மட்டுமே இரட்சிக்கப்பட்டிருந்தாலுங்கூட, அவருடைய பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவதிலிருந்து கிறிஸ்தவனுக்குச் சாக்குபோக்கைக் கொடுப்பதில்லை. நாம் நன்றியறிதலுடன் அவரது பிரமாணத்தைக் காத்துக்கொள்ளவேண்டும்.

(**குறிப்பு:**– இந்த அதிகாரத்திலுள்ள 15:1,2–யும் ரோமர் 3:31–யுங்கூட கவனிக்க வேண்டும்).

நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாக இல்லை. அப்படியானால், சன்மார்க்கப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதிலிருந்து கிறிஸ்தவர்கள் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்படலாமா? நிச்சயமாகவே இல்லை. இது ஒரு சாவுக்கேதுவான தவறாக இருந்து, ஆபத்தான பலன்களை உடையதாக இருக்கிறது. கிறிஸ்தவச் சுயாதீனம் என்னும் பாசாங்கின்கீழ் தேவனுடையப் பிரமாணம் முழுவதையும் மறைத்துவைக்கின்ற சுயாதீனவாதிகளும், நியாயப்பிரமாணம் சிலுவையில் நீக்கப்பட்டுக் கிருபையின்கீழ் இருப்பதனால், நியாயப்பிரமாணம் அவசியமில்லை என்னும் ஆண்டிநோமியன்களும் இவ்விதமான பெரிய எதிர்ப்பாளர்களாக உள்ளனர். நியாயப்பிரமாணத்தின் நடுக்கத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் எல்லா விசுவாசிகளையும் கிறிஸ்து விடுதலைசெய்திருக்கிறார். ஆனால்,

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதிலிருந்து அவர்களை விடுதலை செய்திருக்கவில்லை; அதாவது, நன்மை தீமை ஆகியவைகளின் தன்மை இன்னும் அதேவிதமாக இருப்பதைப்போல், அது எங்கெங்கே இருந்ததோ அங்கேயே இன்னும் இருக்கிறது.—**முழு வேதாகம விளக்கம் பற்றிய விளக்கம் Chr வெர்ட்ஸ்ஒர்த் D.D.லிங்கன், சபையின் பேராயர் (ரிவிங்ஸ்டன்ஸ்). ரோமர் 6 :14,15–ன்மீது (விளக்கம் அவருடையது).**

கொலோ. **2:14–17** சடங்காச்சாரப் பிரமாணங்களின் நோக்கம் கிறிஸ்துவில் நிறைவேறியிருந்ததினால், சிலுவையில் அறையப்பட்ட பிரமாணம் சடங்காச்சாரப் பிரமாணமாக இருந்தது. இயேசு கிறிஸ்து அவருடைய ஜீவனினாலும் மரணத்தினாலும் கொண்டுவந்திருந்த இரட்சிப்பை எதிர்நோக்குவது சடங்காச்சாரப் பிரமாணத்தின் முழு நோக்கமாக இருந்தது. இயேசு மரித்தபோது, சடங்காச்சாரப் பிரமாணத்தின் அர்த்தம் முடிவடைந்தது. இந்த விசேஷித்த ஓய்வுநாட்கள் பரிசுத்த நாட்கள், போஜன–பானபலிகள் ஆகிய இவைகள் அனைத்தும் பத்துக் கற்பனைகளுடன் அல்லாமல், சடங்காச்சாரப் பிரமாணங்களுடன் இங்கு இடைப்படுகின்றன என்பதைக் காட்டுகின்றன.

**குறிப்பு:– வச. 14,** கையெழுத்தாக இருந்த சட்டங்கள்; **வச 17 வருங்காரியங்களுக்கு** நிழலாயிருக்கிறது; அதாவது, அது **கிறிஸ்துவை** எதிர்பார்த்துக்கொண்டிருந்த சடங்காச்சாரப் பிரமாணமாக இருந்தது.

லேவி. 23–ம் அதிகாரத்தில் உள்ள விசேஷமான ஓய்வுநாட்களும் அதில் செயலாற்றப்பட்டிருந்த பலவிதமான போஜன–பானபலிகளும் மற்றச் சடங்காச்சாரங்களும் (வச. 37), இவை அனைத்தும் உண்மையில் கர்த்தருடைய ஓய்வுநாட்களுக்கு அப்பாற்பட்டவைகளாக இருந்தன. 43–ம் பாடம் இந்த வசனத்துடன் மறுபடியும் இடைப்பட்டுள்ளது. இந்த வசனத்தைப் பற்றி, விளக்கவுரையாளர்கள் என்ன கூறுகின்றனர் என்பதைக் கவனியுங்கள்.

| | |
|---|---|
| **எபே. 2:15** | சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணம். அதாவது சடங்காச்சாரப்பிரமாணத்திலுள்ள சட்டதிட்டங்கள்.(கொலோ. 2:14; எபி. 9 :10; யாத். 12:43 வசனங்களை ஒப்பிடுங்கள்). |
| **ரோமர் 10:14** | நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். |

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதினால் நீதியைச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்று யூதர்கள் நம்பினார்கள். நீதிமானாக்கப்படுதல் என்பது உண்மையாகவே தேவனிடமிருந்துள்ள இலவசமான ஈவாக இருக்கிறதென்று இந்த வசனங்களில் பவுல் போதிக்கிறான். நாம் விசுவாசத்தினால்மட்டுமே

இயேசுவை ஏற்றுக்கொள்வோமானால், அது நம்முடையதாக இருக்கிறது. தேவனுடைய பிரமாணம் நீக்கப்பட்டிருக்கிறதென்று ரோமர் 10:4 போதிப்பதில்லை. ஆனால், இரட்சிப்பிற்கு ஒரு கருவியாக இருக்கும் பிரமாணத்தை அல்லது நீதிமானாக்கப்படுவதற்குக் கருவியாக இருக்கும் பிரமாணத்தைக் கிறிஸ்து முடிவுக்குக் கொண்டு வருகிறார். நாம் ஒரு தடவை பாவம் செய்துவிட்டால், பிரமாணத்தினால் நமக்கு நீதியையோ இரட்சிப்பையோ கொடுக்கமுடியாது; கிறிஸ்து ஒருவரால் மட்டுமே நமக்காக அதைச் செய்யமுடியும்.

**மற்ற மொழி பெயர்ப்புகளைக் கவனியுங்கள்:–**

விசுவாசிக்கும் ஒவ்வொருவனுக்கும் கிறிஸ்து நீதிமானாக்கப்படுதலின் ஒரு கருவியாக இருந்து, நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.— **மாண்ட்கொமரி.**

ஏனெனில் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாகவும் நீதிமானாக்கப் படுதலின் கருவியாகவும் இருக்கிறார்.—விரிவாக்கப்பட்ட வேதாகமம்.

ஏனெனில், நீதியாக நிற்பதின் ஒரு பாதையாக இருப்பதற்காகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்திற்கு ஒரு முடிவை வைத்திருக்கிறார்.—**சார்லஸ் வில்லியம்!**

அவரில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் நியாயப்பிரமாணத்தினால் உண்டாகும் நீதிக்கான போரின் முடிவுக்கான கருவியாக கிறிஸ்து இருக்கிறார்.—**பிலிப்ஸ்!**

நியாயப்பிரமாணத்தைக் காத்துக்கொள்வதனால், அடைந்து கொள்ள முயன்றுகொண்டிருக்கும் எல்லாவற்றையும், கிறிஸ்துவை நம்புகிற வர்களுக்கு அவர் கொடுக்கிறார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் (வச. 6). ஆனால்... விசுவாசத்தின்மூலமாக இரட்சிப்பு வருகிறது.—**ஜீவனுள்ள வேதாகமம்.**

இயேசுவின்மீதுள்ள விசுவாசத்தினால்மட்டுமே நாம் இரட்சிக்கப்பட்டி ருக்கிறோம் என்றாலும், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்கு கிறோமா? அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோம்.— **ரோமர் 3:31.**

இயேசு நம்மை இரட்சித்ததற்குப் பின்னர், அவருடைய பரிபூரணமான பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்படி நம்மைத் திரும்பவும் நடத்துகிறார்.

விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றால், இனி நாம் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியம் இல்லை

யென்பது இதன் அர்த்தமா? அல்ல; அதற்கு நேர் எதிரானது. உண்மையில் நாம் இயேசுவை நம்பும்போதுமட்டுமே நம்மால் அவருக்கு உண்மையாகக் கீழ்ப்படியமுடியும்.—**ஜீவனுள்ள வேதாகமம்.**

**2 கொரி. 3:7–11** எழுத்துக்களினால் எழுதப்பட்டு, கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியம் (வச. 7)... ஒழிந்துபோகிற (வச. 7–ன் முன்பகுதி) ஒழிந்துபோனதாயிருக்கிறது (வச. 11).

இந்த வசனத்தின்படி, ஒழிந்துபோனது பத்துக் கற்பனைகள் அல்ல. அந்த நியாயப்பிரமாணத்தின்படியான மரணத்துக்கேதுவான பழைய ஊழியமாக இருக்கிறது. நாள்தோறும் மனிதர்கள் பாவம் செய்தபோது பழைய ஏற்பாட்டிலிருந்த ஊழியமானது ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக (பரிசுத்த ஸ்தலத்துக்கு முன்பாக) மிருகங்களின் மரணத்தைக் கோரியிருந்தது. இஸ்ரவேல் நாடு அநேக பாவங்களுக்காக பாவிக்கு மரணதண்டனையைக் கொடுத்திருந்தது. புதிய ஏற்பாட்டில் இப்படியாக இல்லை.

புதிய ஏற்பாட்டுச் சபை மனிதன் பாவம் செய்யும்போது அவனைக் கொலைசெய்வதோ மிருகங்களைப் பலியிடுவதோ இல்லை. மரணத்தை உண்டுபண்ணியிருந்த பழைய ஊழியம் தான் கடந்துசென்றிருக்கிறது; ஆனால், பழைய ஏற்பாட்டின்படியான பத்துக் கற்பனைகளின் ஊழியம்தான் இப்போது கடந்துசென்றிருக்கிறது. பத்துக் கற்பனைகள் சென்றுவிடவில்லை என்பதைக் கவனியுங்கள் (மத். 5:17–19; லூக்கா 16:17; ரோமர் 3:31 மற்றவைகளையும் கவனிக்கவும்).

**மற்ற மொழிபெயர்ப்புகள்:–**

நியாயப்பிரமாணத்தினால் ஊழியம் செய்தல் (வச. 7) பழைய ஊழியம் (வச. 9).—**பிலிப்ஸ்.**

ஆனால், மரணத்தைக் கொண்டுவரும் ஊழியமும் அதன் பிரமாணமும் கற்பலகைகளில் எழுதப்பட்டிருக்கிறது.—**வெய்மவுத்.**

ஏனெனில், நியாயப்பிரமாணத்தின் இயக்கம்—செயல்—மரணத்தைக் கொண்டுவருகின்றது.—**அடிப்படை ஆங்கில வேதாகமம்.**

மரணத்தை உண்டுபண்ணும் ஊழியம் என்னும் சொற்றொடர், மோசேயின் ஏற்பாடுகளைக் குறித்து, அந்தத் தொடர்புகள் 13–ம் 15–ம் வசனங்களை போதுமான அளவிற்கு அடையாளப்படுத்திக்காட்டுகிறது. ஊழியம் செய்தல் என்பது, சரியான விதத்தில் ஊழியம் என்னும் அர்த்தத்தை உடையதாக இருக்கிறது. இங்குள்ள வார்த்தை மோசேயின் பொருளாதார நிர்வாகத்தின் கீழிருந்த முழு ஏற்பாட்டை, அதனால்

அவனுடைய பிரமாணங்கள் பலரை அறியச்செய்யப்பட்டிருந்ததை—அல்லது தொடர்ச்சியாகச் செல்லுவதைக் குறிக்கிறது. யூத முறைமைகளைப்போன்ற ஒன்றின்கீழ் ஊழியம்செய்வது அல்லது மிகக் கண்டிப்பாக மோசே தானே ஊழியம் செய்திருந்த செயலையும் சந்தர்ப்பத்தையும் குறிக்கிறது.—**ஆல்பர்ட் பர்னெயின் வேதாகம விளக்க நூல், 2 கொரி. 3:7—ன்மீது (பிரிஸ்பிட்டேரியன்).**

**ரோமர் 7:1–7** நியாயப்பிரமாணத்திலிருந்து கட்டவிழ்க்கப்பட்டது. (வச. 2). அந்த நியாயபப்பிரமாணத்திலிருந்து விடுதலை (வச. 3), நியாயப் பிரமாணத்துடனான ஒப்பந்தம் (வச. 4), நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டது (வச. 6).

இந்த வசனங்களை சுற்றிலுமுள்ள மற்ற எல்லா வசனங்களும், பவுல் இங்கு பலமாகப் போதித்துக்கொண்டிருப்பது, கிறிஸ்து நமக்காக மரித்திருப்பதனால் பாவிக்கு மரணமாக இருக்கின்ற **நியாயப்பிரமாணத்தின் ஆக்கினையிலிருந்து** அல்லது தண்டனையிலிருந்து, நாம் கட்டவிழ்க்கப்பட்டு இருக்கிறோம்; விடுதலை செய்யப்பட்டிருக்கிறோம்; மரித்திருக்கிறோம். **இயேசு** நமக்காக மரித்து, நமது பாவங்கள் அனைத்தையும் சிலுவைக்கு எடுத்து சென்றிருப்பதனால், **நாம்** அனைத்து ஆக்கினைகளிலிருந்தும் விடுதலைசெய்யப்பட்டவர்களாக இருக்கலாம் (8:1 பார்க்கவும்); இதுவே சுவிசேஷத்தின் மகிமையான செய்தியாக இருக்கிறது.

**முதல் கணவன்**:—பாவம்; மரணம்; விடுதலை இல்லை. நாம் அனைவரும் பாவம் செய்தவர்களாக இருப்பதனால், நாம் அனைவரும் இதற்குத் தகுதியானவர்களாக இருக்கிறோம்.

**இரண்டாவது கணவன்**:—இயேசு கிறிஸ்து; மன்னிப்பு; ஜீவன்; முழு விடுதலை. (இதற்கு நாம் தகுதியானவர்களாக இல்லை) ஏனெனில், இயேசு அவரது அன்பினால் நமக்காக மரித்திருக்கிறார்.

இந்த வசனங்கள் நியாயப்பிரமாணம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று அர்த்தம் கொடுக்கவில்லை என்பதற்கு 7,12,14; 8:4; 3:31 ஆகியவை தெளிவாக இருக்கிறது. அந்த ஆக்கினையிலிருந்துதான் இப்பொழுது நாம் விடுதலையாகியிருக்கிறோம்.

இவ்விதமாக நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக இல்லாம லிருந்தாலும் நியாயப்பிரமாணத்தின் ஆக்கினைக்கும் ஆளுகைக்கும் மரித்திருக்கிறோம். கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினால் நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிறோம். நியாயப்பிரமாணம் எதைக் கோருகிறதோ அதைக் கிருபையினால் இலவசமாகவும் விருப்பத்துடனும்

செய்கிறோம்.—**மார்ட்டின் லூத்தர் ரோமருக்கெழுதின நிருபத்தின் விளக்கம். ஒரு புதிய மொழிபெயர்ப்பு:– J. தியொடர் முல்லர் Th.D, Ph.D. பேராசிரியர் கிறிஸ்தவக் கோட்பாடுகளும் புதிய ஏற்பாட்டு விவிலிய விளக்க உரைகளும். கன்கார்டியாய செமினரி செயின்ட் லூயிஸ், மிஸ்ஸோரி, (ஜோண்டர்வான் பப்ளிஷிங் ஹவுஸ், கிராண்ட் ராபின்ஸ் மிச்சிகன்) 1954, பக்கம் 93. ரோமருக்கு எழுதின நிருபம். 7:5,6 பற்றியது.**

சட்டப்படியான ஒரு கடமையினாலோ அதற்கு கீழ்ப்படியவேண்டும் என்ற கடமைப்பாட்டினாலோ நாம் அதற்கு மரித்தவர்களாக இருக்கிறோம் அல்லது அதிலிருந்து விடுதலையாக்கப்பட்டு இருக்கிறோம் என்று அவர் கூறவில்லை; ஏனெனில், அப்படிப்பட்ட ஒன்று ஒரு விடுதலை இல்லை, அல்லது இருக்க முடியாது; ஆனால், நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் என்பதற்கான ஒரு பாதையாக நாம் மரித்திருக்கிறோம் (வச. 14). நீதிமானாக்கப்படுதலின் ஓர் உபாத்தியாகவும் பரிசுத்தமாக்கப்படுதலின் ஓர் ஆதாரமாகவும் நாம் அதிலிருந்து (நியாயப்பிரமாணத்திலிருந்து) விடுதலைசெய்யப்பட்டிருக்கிறோம். கடமையின் சட்டமாகக் கிறிஸ்தவர்கள் அதிலிருந்து விடுதலைசெய்யப்பட்டுள்ளனர் என்பது அதன் அர்த்தம் அல்ல (வச. 6).—**ரோமர் 7: 4இ6 ன்மீதான பார்னேயின் விளக்கம் (பிரிஸ்பிட்டேரியன்).**

“நியாயப்பிரமாணம் தேவனுடைய உணரும் சித்தமாக இருப்பதனால், அதனால் சாகமுடியாது. புனித பவுலார் ரோமருக்கெழுதின நிருபம்,”— **ஹான்ட்லி C.G. மூல் M.A. D.D. கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நொரீசியன் பேராசிரியர் (நியூயார்க் ஜார்ஜ் H. டோரன் & கோ) பக்கம் 182, ரோமர் 7:4 பற்றியது.**

நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலைசெய்யப்பட்டிருக்கிறோம். நாம் செய்த பாவத்திற்காக நம்மை ஆக்கினைக்குள்ளாக்குகின்ற நியாயப் பிரமாணத்தின் வல்லமையிலிருந்து நாம் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறோம்.— **முழு வேதாகமத்தையும்பற்றி ஒரே பாகத்தில் உள்ள மாத்யூ ஹென்றியின் வேதாகம விளக்கம். பிராட் ஓக் பதிப்பு (மார்ஷல் மார்கன் & ஸ்காட்) 1970 ரோமர் 7:1–6 பற்றியது.**

“அப்பொழுது நீங்கள் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களா யிருந்தீர்கள், அதாவது அதன் நடுக்கத்திற்கும் சாபத்திற்கும் மரித்தவர்களாயிருந்தீர்கள்; ஆனால் அதன் சன்மார்க்க அவசியங்களுக்கு மரிக்கவில்லை (வச. 4)… சன்மார்க்கப் பிரமாணம் மோசேக்கும் முந்தி இருந்தது என்பதையும், அது இல்லாமல் செய்யப்படவோ திறனற்றதாகவோ செய்யப்படவில்லை என்பதும் கவனிக்கப்படவேண்டும். நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலைசெய்யப்பட்டிருக்கிறோம் என்று

அப்பொழுது அப்போஸ்தலன் கூறுவதன் நோக்கம் என்ன?... சன்மார்க்கப் பிரமாணம் மாற்றப்படவில்லை, ஆனால் கிறிஸ்துவின் கிருபையினால் அதன் சாபம் நீக்கப்பட்டிருக்கிறது.... நாம் நியாயப்பிரமாணத்தின் தாக்கத்திலிருந்து—நம்மை ஆக்கினைக்குட்படுத்தி, அதைரியப்படுத்தி, அடிமைப்படுத்தியிருந்த அதன் பெலத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கிறோம். அந்தக் காரியங்களின் மதிப்புக்களில் நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்களாக இல்லாமலாகிவிடுகிறோம். சன்மார்க்கப் பிரமாணம் என்று கூறப்படும் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து, எப்படிப்பட்ட கிறிஸ்தவனாக இருக்கும் எவனும் விடுதலைசெய்யப்பட்டிருக்கவில்லை என்று சர்ச் ஆப் இங்கிலாந்தின் ஏழாவது துணை விதி கூறுகிறது'' (வச. 6).—**முழு வேதாகமத்தின்மீதுள்ள விளக்கம் Chrs. வேர்ட்ஸ்வொர்த் D.D. லிங்கனின் பேராயர் (ரிவிங்டன்ஸ்) ரோமர் 7:4,6 பற்றியது.**

கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டிருப்பது நாம் தான், நியாயப்பிரமாணம் அல்ல. இந்த மரணம் உயிர்த்தெழுந்திருக்கும் ஒருவருடன் நாம் இணைந்துகொள்ள தேவனுடைய மகிமைக்கான ஆவிக்குரிய கனிகொடுக்கும் தன்மையின் நிறைவாக, நியாயப்பிரமாணத்துடனுள்ள நமது திருமணக் கட்டுப்பாடுகளை இல்லாமற்செய்து, ஒரு புதிய உறவிற்கு ஒப்பந்தம் செய்துகொள்ள நம்மைச் சுயாதீனப்படுத்துகிறது. கிறிஸ்துவுடனேகூட அவர்களை அடக்கம்செய்த ஒரு வாழ்க்கை—அவர்களுடைய பிணையாளியாயும் தலையாயும் இருப்பவருடன், ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதும் பரிசுத்தமுமான ஒரு புதிய வாழ்க்கை! ஆக, விசுவாசிகள் இரு வாழ்க்கையை உடையவர்களைப்போல இங்கு பார்வைக்குக் கொண்டுவரப்படுகின்றனர் (வச. 4). நம்மைக் கட்டியிருந்த நியாயப் பிரமாணத்திற்கு நாம் மரித்தவர்களாகி, என்பதுதான் உண்மையான வாசிப்பு என்பது இப்பொழுது உலகளாவிய விதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. (அதிகாரப்படுத்தப்பட்ட வாசகம் என்னும் வேதாகமம்) பெற்றிருக்கும் வாசிப்பு, எப்படிப்பட்ட அதிகாரமும் இல்லாததாகவும், அந்த வாதத்தின் குரலுடன் அமையாததாகவும் இருக்கிறது; ஏனெனில், நாம் பார்த்திருப்பது போன்று பேசப்பட்ட அந்த மரணம், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவுடன் உள்ள ஐக்கியத்தின்மூலமாக நியாயப்பிரமாணங்களின் மரணமாக இல்லாமல், நமது மரணமாக இருக்கிறது.—**ஜெமிசன், பாசட் & ப்ரவுன் ஆகியோரின் ரோமர் 7:4,6 பற்றிய வேதாகம விளக்கம்.**

**எபி. 7:12; 11:28** வசனங்களை வாசிக்கும்போது, இந்த வசனத்தின் அர்த்தம் பத்துக் கற்பனைகளைக் குறிப்பிடாமல், பழைய லேவியராகமத்தின் படியான ஆசாரியத்துவத்திலிருந்து, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி,

நமது புதிய ஆசாரியரான இயேசு கிறிஸ்துவிற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்னும் அர்த்தத்தைக் காணமுடியும். பழைய லேவிய முறையின்படியான ஆசாரியத்துவம் நமது உண்மையான ஆசாரியரான இயேசு கிறிஸ்துவைமட்டுமே எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

ஏனெனில், ஆசாரியத்துவ வல்லமைகளில் (ஒருவரிடமிருந்து அடுத்த வருக்கான) மாற்றம் (மாறுதல்) இருப்பதனால், ஆசாரியத்துவம் சம்மந்தமான பிரமாணத்திலும் ஒரு மாற்றம் (மாறுதல்) அவசியத்தின் காரணமாகப் பின் தொடர்ந்திருக்கும்.—**எபி. 7 :12, பற்றி J.B. பிலிப்ஸ் என்பவரால் மொழியாக்கம் செய்யப்பட்டது.**

**கலாத்தியருக்கு எழுதின நிருபம்:** இந்தப் புத்தகம் சடங்காச்சாரப் பிரமாணம் பற்றிய கேள்வியுடன் இடைப்படுகிறது—குறிப்பாக விருத்தசேதனம் என்னும் செயலுடனும் இடைப்படுகிறது—அதிகாரம் 2:3; 5:2,3,6,11; 6:12,13,15. யூதக் கிறிஸ்தவர்களின் ஆரம்பத்தில், யூதர்களில் சிலர் விருத்தசேதனம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று நினைத்தார்கள்; இல்லை, அது பத்துக் கற்பனைகளில் காணப்படாமல், அதெல்லாம் சிலுவையில் முடிவடைந்த யூதர்களின் சடங்காச்சாரமுறையின் ஒரு பகுதியாக இருக்கிறதென்று பவுல் கூறினார். இதைப்பற்றிய பவுலின் தெளிவான அறிக்கையை 1 கொரி. 7:19–ல் கவனியுங்கள்.

உண்மையில் இந்தப் புத்தகத்தில் பவுல், அனைத்துப் பிரமாணங்களுக்கும் பொதுவான உண்மையாக இருக்கும் சில கொள்கைகளைக் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக:–

**2:16** ‘‘நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனிதன் நீதிமானாக்கப்படுவதில்லை. கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனிதனும் நீதிமானாக்கப்படுவதில்லையே.’’

**3:11** ‘‘நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது; ஏனெனில், விசுவாசத் தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே.’’

**3:13** ‘‘கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு நம்மை நீங்களாக்கி மீட்டுக்கொண்டார்.’’

**4:5** ‘‘நாம் புத்திர சுவீகாரத்தை அடையும்படி, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக...’’

**5:4** ‘‘நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து, கிருபையினின்று விழுந்தீர்கள்.’’

**5:14** ‘‘உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறரிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.’’

**5:23** ‘‘இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றும் இல்லை.’’

சன்மார்க்கப் பிரமாணமாகிய பத்துக் கற்பனைகள் உட்பட எல்லாப் பிரமாணங்களையும் பற்றிய உண்மையாக இந்த வசனங்கள் இருக்கின்றன. ஏனெனில், எந்தப் பிரமாணமும் நம்மை ஆக்கினைக்குட்படுத்துவதின்றி நம்மை இரட்சிக்காது. அவர் ஒருவர்மட்டுமே அவருடைய மரணத்தினால் நம்மை மீட்டுக்கொண்டிருக்கிறார். நல்லவர்களாக இருப்பதினாலோ, நல்ல காரியங்களைச் செய்வதினாலோ, நியாயப்பிரமாணத்தைக் காத்துக் கொள்ளுவதினாலோ நம்மை நாம் நீதிமான்களாக்கமுடியாது; ஏனெனில், நாம் அதிகப் பலவீனமுள்ளவர்களாகவும் அதிகப் பாவமுள்ளவர்களாகவும் இருக்கிறோம்.

‘‘அதெப்படியெனில், என்னிடத்தில் … நன்மை வாசமாயிருப்பதில்லை.’’ ரோமர் 7:18. இவ்வாறாக, நாம் இயேசு கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினால் மட்டுமே ஜீவனையும் நீதிமானாக்கப்படுதலையும் பெற்றுக்கொள்ளமுடியும். அவருடைய தியாக பலியினாலும் அவருடைய அன்பினாலும் நமக்காக மரித்த ஒருவராகவும் நம்மை மன்னித்தவராகவும் நம்மை இலவசமாக அவருடைய குமாரர்களாக ஏற்றுக்கொண்டவராகவும் அவர் ஒருவர்மட்டுமே இருக்கிறார். அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்’’ என்று (ரோமர் 8:3,4) கூறும்போது, இந்தச் சத்தியத்தை மிகத் தெளிவாக முன்வைக்கிறது.

அப்படியே, கிறிஸ்து சிலுவையில் தொங்கின கள்ளனை விசுவாசத் தினால்மட்டும் இரட்சித்ததுபோல, நம்மனைவரையும் இரட்சிக்கிறார்; ஆனால், நாம் இரட்சிக்கப்பட்டபின், அவருடைய பரிசுத்தப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்தால், மறுபடியும் ஒரு நீதியான வாழ்க்கையையும் கிருபை யையும் தருகிறார் (ரோமர் 3:31) இதுவே இரட்சிப்பின் திட்டமாக இருக்கிறது.

இந்த இசைவு அல்லது கூட்டுறவு அல்லது விசுவாசத்திற்கும் கிரியைக்கும் இடையில் உள்ள சமநிலை, எபே. 2:8–10–லும்கூட விவரிக்கப்

பட்டுள்ளது. கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி, அவர் முன்னதாக அவர்களை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

“அப்படியே கிரியையில்லாத விசுவாசம் செத்தது” என்று நாம் யாக். 2: 17– 26–லும் வாசிக்கிறோம்.

ஆயினும் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தின் விசேஷமான காரணம்: பழைய யூதச் சடங்காச்சாரப் பிரமாணங்களுக்குள் விழுந்து விடுவதற்கு எதிராக, குறிப்பாக விருத்தசேதனத்திற்குள் விழுந்துவிடுவதற்கெதிராக கிறிஸ்தவர்களை—மிகக் குறிப்பாக—கலாத்தியக் கிறிஸ்தவர்களை எச்சரிப்பதே.

கலாத்தியர்கள் விருத்தசேதனம் பெறுவார்களா? அல்லது பெறாமலிருப்பார்களா? இது முடிவான கேள்வியாக இருக்கிறது.—**விளக்கம் செய்பவரின் வேதாகமம்–கலாத்தியர்–G.G பிண்ட்லி. (நியூயார்க் ஜார்ஜ் H.D. டோரன் & கோ), பக்கம் 302.**

இங்கு குறிப்பிடப்படுகின்ற நியாயப்பிரமாணத்தின் கிரியைகள், சன்மார்க்கப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதைப்பற்றியதாக இராமல், சடங்காசசாரப் பிரமாணங்கள் பற்றியதாக இருந்தாகவேண்டும் (வச. 2). இப்போதுள்ள விவாதத்தில், அப்போஸ்தலனின் பார்வையில் முதலாவதாக நிற்கும் நியாயப்பிரமாணத்தில் உள்ளவைகள் முந்திய அதிகாரத்தின் 12– 19 வசனங்களிலும் அடுத்த அதிகாரம் 1– 10 வசனங்களிலும் (வச. 10) உள்ள தூதுகளின் சிந்தனைகளின் அர்த்தம்; சடங்காச்சாரத் தன்மையை வெளியரங்கமாக உள்ளதாக இருக்கிறது.—**கலாத்தியருக்கான நிருபம் பற்றிய பிரசங்க மேடை வேதாகம விளக்கம், ஸ்பென்ஸ் & எக்சல் (வில்காக்ஸ் & போலட் கம்பனி, சிகாகோ) பக்கம் 120. கலாத்தியர் 3:2–10; ரோமர் 14:1–6.**

**1.** உணவு சம்மந்தப்பட்டது (வச. 1–4). பவுல் இங்கு அஞ்ஞான வியாபாரிகளால் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போஜனத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறான். இந்த உணவை வாங்கக்கூடாது என்று சில கிறிஸ்தவர்கள் நினைத்தார்கள்; அது ஒரு பொருட்டல்ல; ஏனெனில், ஒரு தடவை அது கடைவீதிக்கு வந்துவிட்டால், அதை வாங்குவதில் கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களைக் கனப்படுத்துகின்றனர் என்று ஒருவரும்

நினைப்பதில்லை என்று மற்றவர்கள் நினைத்தார்கள். இங்கு பவுல் ரோமர் 14:1–6–ல் அப்படிப்பட்ட அற்பமான காரியங்களில் நாம் ஒருவரை ஒருவர் நியாயம் தீர்க்காமல், ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று அவனுடைய மனசாட்சியின்படி முடிவுசெய்யவேண்டும் என்று கூறுகிறான். (1 கொரி. 8–ம் அதிகாரத்தையும், 1 கொரி. 10:25–29–யும் பார்க்கவும்).

**2.** நாட்களைப் பொருத்தவரை (வச. 5,6), பவுல் இங்கு பழைய, யூதச் சடங்காச்சாரிய ஓய்வுநாட்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறான். விசுவாசத்தில் புதியவர்களாக இருந்த யூதக் கிறிஸ்தவர்கள் இன்னும் இந்த நாட்களை மற்ற நாட்களைவிட மேலானதாகக் கருதியிருந்தனர்; ஆனால், யூத சம்பிரதாயங்களில் வளர்ந்துவராத மற்றவர்கள் இந்த நாட்களனைத்தையும் ஒரே விதமாகக் கருதியிருந்தனர். இந்தக் காரியங்களில்கூட நாம் ஒருவரை ஒருவர் ஆக்கினைக்குட்படுத்தவோ நியாயம் தீர்க்கவோகூடாது என்று பவுல் கூறுகின்றான்; ஏனெனில், சிறிது காலத்துக்குப்பின் அப்படிப்பட்ட கேள்விகள் அவைகளாகவே அடங்கிவிடும். இந்தச் சடங்காச்சார ஓய்வுநாட்களை ஒருவரும் கைக்கொள்ளுவதும் நினைப்பதும் இல்லை என்பதையும் அவைகளனைத்தும் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியிருந்தன என்பதையும் இப்போது நாம் அறிந்திருக்கிறோம்–கொலோ. 2:14–17. இந்தச் சடங்காச்சார ஓய்வுநாட்கள் (லேவி. 23– ம் அதிகாரம் காண்க), உண்மையில் கர்த்தருடைய ஓய்வுநாளுக்கு அப்பாற்பட்டவைகளாக இருந்தன (லேவி. 23:38).

**குறிப்பு:**– இந்த வசனத்தைப்பற்றி வேதாகம விளக்கவுரையாளர்கள் என்ன கூறுகின்றனர் என்பதைப்பற்றி 43–ம் பாடத்தில் கருத்துக்கள் இடைப்பட்டுள்ளது). ★

# 37

# பழைய, புதிய உடன்படிக்கைகள்!

Vபிரெயர் ஏழு முதல் பத்து வரையுள்ள அதிகாரங்களை வாசித்து சிந்தனை செய்யுங்கள் 4:14–16 வசனங்களையும்கூடக் கவனியுங்கள்.

## அர்த்தங்கள்

உடன்படிக்கை என்றால், ஒரு ஒப்பந்தம் என்று பொருள்படும். வேதாகமத்தில் ஏற்பாடு என்பதுங்கூட பொதுவாக ஒப்பந்தம் என்று அர்த்தப் படுகிறது. உதாரணம்:– பழைய ஏற்பாடு–யூத ஜாதியுடனுள்ள தேவனின் பழைய ஒப்பந்தம்; புதிய ஏற்பாடு–புதிய ஏற்பாட்டில் எல்லா ஜாதியிலுமுள்ள தேவனுடைய சபையுடனுள்ள அவருடைய ஒப்பந்தம்.

## பழைய உடன்படிக்கை அல்லது பழைய ஒப்பந்தம்

இந்த உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் யூத ஜனங்களுக்கு உடையதாக இருந்தது (யாத். 19:4–8; 24:3–8; உபா. 28:1–14). யூத ஜனங்கள் தேவனுக்கு விசுவாசமுள்ளவர்களாக அவருடைய பிரமாணத் திற்குக் கீழ்ப்படிந்திருந்தால், அப்போது தேவன் அவர்களைத் தமது ஜனங்களாக்கிக்கொண்டு, அவர்களை உலகத்தின் மிகப் பெரிய ஜாதியாக மாற்றுவார் என்பதே ஒப்பந்தமாக இருந்தது. அவர்களுடைய வழிகளிலெல்லாம், தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார். இந்த உலகத்தில் அவர்கள் தேவனுடைய பிரதிநிதியாகவும் ஆசிரியர்களாகவும் இருப்பார்கள். எல்லா ஜாதிகளும் அவர்களுக்குப் பயப்படுவார்கள். ஒவ்வொரு சிறுவனும் தேவனுடைய இந்த உடன்படிக்கைக்குச் சொந்தக்காரனாக இருக்கிறான் என்பதற்கான அடையாளமாக இருக்கும்படி, விருத்தசேதனம் கொடுக்கப்பட்டிருந்தது (ஆதி. 17: 1–14) ஆயினும், யூத ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் தேவனுடைய ஜனங்களாக இருப்பதிலிருந்து நிராகரிக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் வேத வாக்கியங்களை கருத்துடன் கவனியுங்கள்:– யாத். 19:4–8; 23:21,22; 24:3–8; உபா. 8:19,20; 11:26,28; 28:15–68; யோசு. 23:14–16; எரே. 18:9,10.

## புதிய உடன்படிக்கை அல்லது புதிய ஒப்பந்தம்

யூத ஜாதி தேவனுக்கு விசுவாசமாக இராமல், இயேசு பூமிக்கு வந்தபோது அவரைச் சிலுவையில் அறைவதற்கு அனுமதித்ததினால்,

பழைய உடன்படிக்கை அல்லது பழைய ஒப்பந்தம் ஒரு முடிவுக்கு வந்தது; அது யூத மக்களால் முறித்துப்போடப்பட்டிருந்தது.

எனவே, தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை அல்லது புதிய ஒப்பந்தத்தை உண்டுபண்ணினார். இந்த நேரத்தில், அந்த ஒப்பந்தத்தை ஒரு ஜாதியுடன் ஏற்படுத்தாமல், அவரைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொரு தனி மனிதனுடனும் (அவன் யூதனாக இருந்தாலும் அல்லது புறஜாதிக்காரனாக இருந்தாலும்) ஏற்படுத்தினார். இந்த ஒப்பந்தம் பழைய ஒன்றிலிருந்த அதேபோன்ற நிபந்தனைகளை அடிப்படையாகக்கொண்டதாக இருந்தது. நாம் விசுவாசமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாக இருந்தால் (எபி. 8 : 10), அப்போது தேவன் புதிய எருசலேமை—பரலோகக் கானானை நமக்குத் தந்து, நம்மைப் பரிசுத்த ஜாதியாகச் செய்து (1 பேதுரு 2:9), இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பார். நாம் தனிப்பட்டவர்களாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, புதிய உடன்படிக்கைக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதற்கான அடையாளமாக ஞானஸ்நானம் கொடுக்கப் பட்டிருக்கிறது (கலா. 3:27–29). அப்படியிருந்தபோதிலும், நாம் யூதர்களைப் போல, தேவனிடம் விசுவாசமில்லாதவர்களாக, அவருக்கு கீழ்ப்படிய மறுத்தால், நாமுங்கூட நீக்கப்பட்டுப்போவோம் (ரோமர் 11:21,22); ஏனெனில், தேவன் பட்சபாதமுடையவரல்ல–அப். 10:34.

பழைய உடன்படிக்கையில் பூமிக்குரிய ஒரு ஆசரிப்புக்கூடாரம்—பரிசுத்த ஸ்தலம் இருந்தது, அதில் பூமிக்குரிய ஒரு ஆசாரியத்துவம் ஊழியம் செய்யப்பட்டிருந்தது. பொருளான (அடையாளமான) விதத்தில் மிருகங்களின் இரத்தத்தின்மீது, பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தன–எபி. 9:1–10.

புதிய உடன்படிக்கையில் ஒரு பரலோகப் பரிசுத்த ஸ்தலம் இருக்கிறது. அதில் இயேசு கிறிஸ்துவாகிய நமது பரலோக ஆசாரியர் ஊழியம் செய்கிறார். நமக்காகக் கல்வாரிச் சிலுவையில் அவர் சிந்தின இரத்தத்தினால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன–எபி. 9:11–17.

பழைய உடன்படிக்கையில் மக்களால் பூமிக்குரிய ஆசாரியர்கள் மூலமாக மட்டுமே தேவனிடத்தில் சேரமுடிந்தது; ஆனால், புதிய உடன்படிக்கையில் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் நேராகக் கிறிஸ்துவிடம் செல்லலாம்–எபி. 9:8,24; 4:40–16). புதிய உடன்படிக்கையில் இயேசு ஒருவரே நமது மத்தியஸ்தராக இருக்கிறார்–(1 தீமோ. 2:5), பரிந்து பேசுபவராகவும் இருக்கிறார்–(1 யோவான் 2:1,2, தேவன் தமது ஜனங்களுடன் இன்று செய்திருக்கும் உடன்படிக்கை எவ்வளவு ஆச்சரியமானதாக இருக்கிறது!

**தெளிவான விளக்கம்:**

| பழைய உடன்படிக்கை (கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்டது. உபா. 28) | புதிய உடன்படிக்கை (கீழ்ப்படிதலையும் அடிப்படையாகக் கொண்டது. எபி. 8:6–13) |
| --- | --- |
| **1**.இஸ்ரவேல் ஜாதியுடன் செய்யப்பட்டது. | **1**.கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு தனிப்பட்டவருடனும் செய்யப்பட்டது. |
| **2**.உடன்படிக்கையின் ஜாதிக்குச் சொந்தமானவர்களாக இருப்பதற்கான அடையாளம்—விருத்தசேதனம்! | **2**. கிறிஸ்துவையும் அவருடைய புதிய உடன்படிக்கையையும் தனிப்பட்ட விதத்தில் தெரிந்து கொண்டிருப்பதற்கான அடையாளம்—ஞானஸ்நானம்! |
| **3**. பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலம் | **3**. பரலோக பரிசுத்த ஸ்தலம் |
| **4**. லேவியின் கோத்திரத்தைச் சேர்ந்த பூமிக்குரிய ஆசாரியர்கள். | **4**. பரலோக ஆசாரியர் இயேசு கிறிஸ்து. |
| **5**. பாவிகளுக்காகக் கிறிஸ்துவையும் அவருடைய மரணத்தையும் எதிர்நோக்கி கொண்டிருக்கும் சட்டத் திட்டங்களாகிய நியாயப்பிரமாணம். | **5**. கிறிஸ்துவின் மரணத்தையும் அவருடைய வருகையையும் பின்னோக்கியும் முன்னோக்கியும் பார்க்கும் சட்டமாக ஞானஸ் நானமும் பரிசுத்த திருவிருந்து ஆராதனையும் இருக்கின்றன. |
| **6**. பாவத்திற்காக மிருகங்களைப் பலி செலுத்துதல் | **6**. பாவத்திற்கான இயேசு கிறிஸ்துவின் பலி. |
| **7**. பூமிக்குரிய கானான்பற்றிய வாக்குத்தத்தம். | **7**. பரலோகக் கானானைப்பற்றிய வாக்குத்தத்தம். |
| **8**. எருசலேமிற்கான புகழ் மகிமை பற்றிய வாக்குத்தத்தம். | **8**. புதிய எருசலேமிலுள்ள புகழ் மகிமை பற்றிய வாக்குத்தத்தம். |
| **9**. பூமியின்மீது தேசீய அளவிலான செழுமைபற்றிய வாக்குத்தத்தம். | **9**. புதிய பூமியின் ஆசீர்வாதங் களைப் பற்றிய வாக்குத்தத்தம். |
| **10**. யூத ஜாதியினரின் கிறிஸ்துவின் மீதிருந்த அவிசுவாசம்; அவரை நிராகரித்தது—இதன் காரணமாக முடிவடைந்தது. | **10**. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுவதின்மூலமாக, இரட்சிப்பை விரும்பும் அனைவருக் கும் திறந்திருக்கிறது. |

**முக்கியமான குறிப்பு:—**

நமக்காக இயேசு இன்று உண்டுபண்ணியுள்ள ஞாயிற்றுக்கிழமையின் பரிசுத்தம் புதிய உடன்படிக்கையிலும் புதிய ஒப்பந்தத்திலும் இருக்கிறதென்று சில ஜனங்கள் கூறினபோதிலும், வேதாகமம் இதை நமக்கு கூறுவதில்லை! இயேசு அவருடைய மரணத்தினால் புதிய உடன்படிக்கையை முத்திரையிட்டார் என்று வேதாகமம் கூறுகிறது—(எபி. 9:12–17). மனிதர்கள் இறந்தபோது, ஒரு ஏற்பாடு அமுலுக்கு வருகிறது என்பதை 17– ம் வசனம் சுட்டிக்காட்டுகிறது. ஒரு தடவை அது உறுதிப்படுத்தப்பட்டு, தொடர்ந்து இருக்கும்போது, எந்த மனிதனாலும் அதை இல்லாமல் செய்யவோ அதனுடன் எதையாவது சேர்க்கவோ முடியாது (கலாத்தியர் 3:15).

புதிய உடன்படிக்கையிலுள்ள ஞானஸ்நானம், பரிசுத்த திருவிருந்து, கால் கழுவுதல் ஆகிய அனைத்தும் இயேசுவால் அவருடைய மரணத்திற்கும், முன்னதாகவே வைக்கப்பட்டது. ஒரு தடவை இயேசு மரித்திருந்து அவருடைய சொந்த இரத்தத்தினால் புதிய உடன்படிக்கையை முத்திரையிட்டபின், அதனுடன் அதிகமான ஒன்றையும் கூட்டுவதற்கு முடியாமலிருக்கிறது.

ஆகையால், கிறிஸ்துவின் மரணத்திற்குச் சிறிது காலத்திற்குப் பின் அறிமுகப்படுத்திக்கொண்டிருக்கும் ஞாயிற்றுக்கிழமைக்கான பரிசுத்தம் என்பது புதிய உடன்படிக்கையில் இருக்கமுடியாது. கிறிஸ்துவின் மரணத்துக்குபின், புதிய உடன்படிக்கைக்குள் ஞாயிற்றுக்கிழமையைக் கொண்டுவர முயற்சிசெய்வது மிகவும் பிந்தினதாக இருக்கிறது. ★

# 38

# பழைய ஏற்பாட்டு பரிசுத்த ஸ்தலத்தின் பொருள்!

**எபி. 8: 1-5** பூமியிலிருந்த பரிசுத்த ஸ்தலமும் லேவிய ஆசாரியத்துவமும் பரலோகத்திலிருக்கும் உண்மையான பரிசுத்த ஸ்தலத்திற்கும் நமது உண்மையான ஆசாரியராக இருக்கும் இயேசுவிற்கும் ஒரு உதாரணமாகவும் நிழலாகவும் (எபி. 8:5) அல்லது ஒரு பொருளாகவும் (எபி. 9:9; 8:1,2; 9:11) இருந்தது. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்த ஸ்தலம் சுவிசேஷ காலத்துக்கு ஒரு பொருட்பாடமாகவும் அல்லது உதாரணமாகவும் நிழலாகவும் இருந்தது.

### பாவ நிவாரண நாளின்மீதான குறிப்பு:-
### லேவி. 16; எபி. 9:7.

பிரதான ஆசாரியன் அந்த வருடத்தின் முதல் தடவையாக, இயேசுவை எடுத்துக்காட்டியிருந்த ஒரு ஆட்டின் இரத்தத்துடன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்திருந்த யூதருடைய வருடத்தின் மிக அதிகமான பரிசுத்தமான நாளாக அது இருந்தது. உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருந்த கற்பனைகள் இஸ்ரவேலர் அனைவரையும் மரணதண்டனைக்கு உட்படுத்தியிருந்தது; ஏனெனில், பாவத்தின் சம்பளம் மரணமாயிருக்கிறது; ஆனால், எல்லாருடைய பாவங்களுக்காகவும் கிறிஸ்து மரிக்கவிருக்கிறார் என்பதையும், அதனால் அவரை ஏற்றுக்கொண்ட அனைவரும் விடுதலை பெற்றுச் செல்லலாமென்பதையும் காட்டுவதற்காக பிரதான ஆசாரியன் கிருபாசனத்தின்மீது இரத்தத்தைத் தெளித்திருந்தான்.

அவரை ஏற்றுக்கொள்ளும் எல்லாப் பாவிகளுடைய இடத்தையும், இயேசு கல்வாரியின்மீதான தம்முடைய சொந்த பலியினால் எடுத்துக் கொண்டு, தம்முடைய சொந்த இரத்தத்தைச் செலுத்தும் கடைசி நியாயத்தீர்ப்பை இது எதிர்காலத்தில் வரப் பார்த்துக்கொண்டிருந்தது. நாம் அதை ஏற்றுக்கொண்டால் மட்டுமே இயேசுவின் இரத்தம் நம்மனைவருடைய பாவங்களையும் மூடுகிறது. அவர் மரித்திருப்பதனால் நம்மால் ஜீவிக்கமுடியும்.

| **பரிசுத்த ஸ்தலம் பழைய ஏற்பாடு** | **பரிசுத்த ஸ்தலம் புதிய ஏற்பாடு** |
|---|---|
| ★ பலிபீடம் | ★ கிறிஸ்துவின் சிலுவை |
| ★ மிருகத்தின் இரத்தத்தின்மீது உண்டாகும் பாவமன்னிப்பு. | ★ கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் பாவமன்னிப்பு. |
| ★ கடல் தொட்டி | ★ இயேசுவின்மூலம் சுத்தமடைதல் |
| ★ விளக்குத் தண்டு | ★ உலகத்திற்கு ஒளியாக இருக்கும் இயேசு. |
| ★ தேவசமுகத்துக்கு அப்பம் | ★ ஜீவ அப்பமாகிய இயேசு. |
| ★ சுகந்த தூபபீடம் | ★ நம்மீது அருளப்படும் கிறிஸ்துவின் நீதி. |
| ★ உடன்படிக்கைப் பெட்டி | ★ பரலோக சிங்காசனத்தின் மீதிருந்து தேவன் செய்யும் ஆளுகை. |
| ★ ஷக்கீனா மகிமை | ★ தேவனுடைய ஜனங்களுடன் உள்ள அவருடைய பிரசன்னம். |
| ★ உடன்படிக்கைப் பெட்டியிலுள்ள தேவனுடைய நியாயப்பிரமாணம் | ★ மனித இருதயங்களில் உள்ள தேவனுடைய நியாயப்பிரமாணம். |
| ★ லேவிய ஆசாரியத்துவ முறை. | ★ நமது மகா பிரதான ஆசாரியராக இருக்கும் இயேசு |

**யூத பண்டிகைகளும் சுவிசேஷ காலத்தை எதிர்நோக்கியிருந்தன**

| | | |
|---|---|---|
| வசந்த காலம் | ★ பஸ்கா பண்டிகை | ★ கிறிஸ்துவின் மரணம் |
| | ★ பெந்தெகொஸ்தே | ★பரிசுத்த ஆவி ஊற்றப்படுதல் |
| கனி காலம் | ★ எக்காளங்கள் | ★ நியாயத்தீர்ப்பிற்கென்று ஆயத்தம் பண்ணும்படியான அறிவிப்பின் தூது, அட்வென்டிஸ்ட்சபையின்தூதில் நிறைவேறியது-வெளி. 14:6,7. |

★ பாவ நிவாரணப் பண்டிகை ★ நியாயத்தீர்ப்பு

★ கூடாரப் பண்டிகை ★ புதிய பூமி

பாவ நிவாரண நாளின் முடிவில், சாத்தானை எடுத்துக்காட்டியிருந்த போக்காடு-அசாசேல்-சாத்தானே காரணமானவனாக இருந்த எல்லாப் பாவங்களுடனும் இனி ஒருபோதும் திரும்பிவராதபடி-தூரமாக அனுப்பி விடப்பட்டிருந்தது. அதேவிதமாக, நியாயத்தீர்ப்பிற்குப்பின்-உலகத்தின் முடிவில்-இனி ஒருபோதும் திரும்பிவராதவிதமாக சாத்தானும் பாவமும் தேவனுடைய பிரபஞ்சத்திலிருந்து முற்றிலுமாகத் அழிக்கப்படுவார்கள்.

குறிப்பு:- சாத்தான் நமது பாவங்களைச் சுமப்பவன் அல்ல என்பதையும், உண்மையாகவே நமது இரட்சிப்பு சம்மந்தப்பட்ட காரியத்தில் அவன் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்பதையும் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். நமது பாவத்தைச் சுமப்பவர் கிறிஸ்துவே; கிறிஸ்து ஒருவர்மட்டுமே! அவர் தனது சொந்த சரீரத்தில் நமது பாவங்களனைத்தையும் சுமந்து, நமக்காகச் சிலுவையில் மரித்து, இவ்வாறாக நமக்கு நித்திய இரட்சிப்பைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

‘‘நியாயத்தீர்ப்பின் கடைசிநாளில் சாத்தான் சுமக்கும் பாவங்கள் யாவும் அவனுடையவைகளாகவும், தண்டனை அனைத்தும் அவனுக்குச் சொந்தமானதாகவும் உள்ளன. பாவம்செய்யும்படி தூண்டிவிடுபவனாகவும் மனித இனத்தின் சோதனைக்காரனாகவும் இருக்கும் அவன், பாவம் செய்யப்படுவதற்கு காரணமாக இருந்த அவன், பாவங்களுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றாகவேண்டும்!

கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்; ஆனால், சாத்தான் அவனுடைய பாவங்களுக்காக மரித்தாகவேண்டும்.

இந்த உலகத்தைச் சாபத்திற்குள்ளாகச்செய்த பயங்கரமான பாடுகளுக்கு நம்மால் தேவனைக் குற்றப்படுத்தமுடியாது. இந்த உலகத்திற்குள் பிரவேசித்திருக்கும் தீமைக்கான முழுப் பொறுப்பையும் சாத்தான்மட்டுமே சுமக்கிறான் என்பதை அனைவரும் காணும்படியாகச் செய்யப்படவேண்டும் இவ்வாறு, இறுதி நியாயத்தீர்ப்பானது தேவனுடைய நாமத்தைச் சிறப்பித்துக்காட்டுகிறது.

பாவியின் சார்பாகத் தமது சொந்த இரத்தத்துடன் பிதாவுக்கு முன்பாகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கும் மகா பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து, மனம் வருந்தி விசுவாசிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவின் பெயரையும் அவருடைய இருதயத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்.’’—**PP 351.**

“உன்னதத்தில் உள்ள பிராகாரங்களில் கிறிஸ்து அவருடைய சபைக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். தமது இரத்தத்தை மீட்பின் விலையாக எவர்களுக்காகக் கொடுத்திருக்கிறாரோ, அவர்களுக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அவருடைய பாவ நிவாரண பலியின் வலிமையை நூற்றாண்டுகளாலும் யுகங்களாலுங்கூடக் குறைக்கமுடியாது.”—**AA 552,553.**

போப்புமார்கள் குருமார்கள் ஆகியோரின் போதனைகள் தேவனுடைய சுபாவத்தையும் கிறிஸ்துவின் சுபாவத்தையுங்கூடக் கடுமையானதாகவும் மனத் துயரத்தை உண்டுபண்ணக்கூடியதாகவும் தடைசெய்கின்றதாகவும் காணும்படி மனிதர்களை நடத்தியிருந்தன. குருமார்கள், பரிசுத்தவான்கள் ஆகியோரின் மத்தியஸ்தத்திற்காக வேண்டிக்கொள்ளும்படியானவிதத்தில், மனிதனுடைய விழுந்து போன நிலைமையில், அவன்மீது மிக அதிகமாக அனுதாபமில்லாதவராக இரட்சகர் எடுத்துக்காட்டப்பட்டிருந்தார்…

அநேகர் வஞ்சிக்கப்படாதவர்களாக இருந்தனர்… பாவியின் சார்பாக உள்ள மனிதர்கள், தேவ தூதர்கள் ஆகியோரின் மத்தியஸ்தம் எவ்விதமாக வீண் என்பதை அவர்கள் கண்டனர். அவர்களுடைய மனங்களின்மீது மெய்யான ஒளி உதயமானபோது, என்னுடைய ஆசாரியராகக் கிறிஸ்து இருக்கிறார்; அவருடைய இரத்தம் என்னுடைய பலியாக இருக்கிறது; அவருடைய பலிபீடம் என்னுடைய பாவ அறிக்கைக்கானதாக இருக்கிறது என்று மகிழ்ந்து களிகூர்ந்ததுடன் வியந்து கூவினார்கள்.—**GC 73,74.** ★

# 39

# பழைய—புதிய இஸ்ரவேல்!

## பண்டைய இஸ்ரவேலர்கள்

**உபா. 28** யூத ஜாதிக்குத் தேர்ந்தெடுக்கும் ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. கீழ்ப்படிந்திருக்கும்போது, ஆசீர்வாதங்கள் பின்தொடரும் (வச. 1–14), கீழ்ப்படியாமலிருக்கும்போது, சாபங்கள் பின்தொடரும் (வச. 15–68). இவ்வாறாக இஸ்ரவேலருக்கான ஆசீர்வாதங்கள் நிபந்தனைக்குட்பட்டதாக இருந்தன—(யாத். 19:4–8; 23:21,22; 4:3–8; உபா. 8:19,20; 11:26–28; யோசு. 23:14–16 ஆகியவைகளை கவனமாக வாசிக்கவும்).

**எரே. 18:7–10** தேவனுடைய ஆசீர்வாதம் நிபந்தனைக்குட்பட்டது.

**யோவான் 19:15** எங்களுக்கு இராயனைத்தவிர வேறு அரசன் இல்லையென்று அறிவித்து, யூத ஜாதி அவர்களுடைய மேசியாவை நிராகரித்தது.

**மத். 21:33–45** தேவனுடைய இராஜ்ஜியம் உங்களிடமிருந்து நீக்கப்பட்டு (வச. 43), புறஜாதிகளுக்கு (ஆவிக்குரிய மக்களுக்கு–1 பேதுரு 2:5,9,10) கொடுக்கப்படும்.

**மத். 23:38** இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப் படும்.

## புதிய இஸ்ரவேலர்கள்

**வெளி. 21:12** புதிய எருசலேமின் வாசல்கள் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களின் பெயர்களைமட்டுமே உடையதாக இருக்கின்றன; ஆகையால், நாம் பரலோகத்தை அடைய யூதர்களாகவேண்டும்!

**கலா. 3:28,29** நாம் நமது வாழ்க்கையைக் கிறிஸ்து இயேசுவிற்குக் கொடுப்பதனால், நாம் ஆபிரகாமுக்குள்ள வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்திர வாளிகளாகி, ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிவிடுகிறோம் (வச. 29).

| | |
|---|---|
| **ரோமர் 2:28,29** | எவனொருவன் ஆவிக்குரிய இஸ்ரவேலனாக இருக்கிறானோ அவனே இன்று உண்மையான யூதனாக இருக்கிறான். |
| **ரோமர் 9:6–8** | இன்று தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக இருப்பவர்கள் மாம்சப்பிரகாரமான பிள்ளைகளாக இல்லாமல் (யூதர்கள்), வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாக (கிறிஸ்துவில் இருப்பவர்கள்) இருக்கின்றனர். |
| **கலா. 6:16** | இயேசுவிற்குச் சொந்தமானவர்களாக இருக்கும் அனைவரும் இன்று தேவனுடைய இஸ்ரவேலர்களாக இருக்கின்றனர். |
| **ரோமர் 11:17–22** | இயற்கையான கிளைகள் (யூதர்கள்) முறிக்கப்பட்டு, செயற்கையான கிளைகள் (புறஜாதியினர்) அந்த இடத்திலே ஒட்டவைக்கப்பட்டிருக்கின்றனர். |

ஆனால், அவர்கள் நல்ல தன்மையில் தொடராவிட்டால், அவர்களும் முறிக்கப்பட்டுப் போவார்கள் (வச. 22).

| | |
|---|---|
| **ரோமர் 11:23,24** | அவருடைய பண்டைய ஜனங்கள் இயேசு கிறிஸ்துவி னிடத்துக்குத் திரும்புவார்களானால், திரும்பவும் ஒட்டவைப்பதற்கு இயேசு வல்லவராயிருக்கிறார். |

இயேசுவை ஏற்றுக்கொள்ளும் ஒருவன்–தேவனுடைய பார்வையில் ஆவிக்குரிய யூதனாக உண்மையான இஸ்ரவேலனாக இருக்கிறான் என்பதை இந்த ஆராய்ச்சி காட்டுகிறது. கிறிஸ்து இல்லாமல், நமக்கு நம்பிக்கை எதுவும் இல்லை; ஆனால், அவரில் நாம் தேவனுடைய இஸ்ரவேலராகி, ஆபிரகாமிற்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்த வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக்கொள்ளுகிறோம். ★

# 40

# ஓய்வுநாள்!

**ஆதி. 2:1–3** சிருஷ்டிப்பின்போது மனிதனுக்கு ஓய்வுநாள் கொடுக்கப்பட்டது. அந்த நேரத்தில், பாவமோ சடங்காச்சாரப் பிரமாணமோ யூத ஜனங்களோ இருக்கவில்லை. ஓய்வுநாள் இவைகள் ஒன்றுக்கும் சொந்தமானதல்ல. ஒரு பரிசுத்தமான தேவனிடத்திலிருந்தும் பூரணமான உலகத்திலிருந்தும் ஏதேனிலிருந்தும் அது நமக்கு வந்தது. ஓய்வுநாள் சம்மந்தப்பட்டவரையில், தேவன் மூன்று காரியங்களைச் செய்தார் என்று பின்வரும் வசனங்கள் கூறுகின்றன:

1. அவர் அதில் ஓய்ந்திருந்தார்!
2. அவர் அதை ஆசீர்வதித்தார்!!
3. அவர் அதைப் பரிசுத்தப்படுத்தினார்!!!

**யாத். 16:22–30** எந்த நாள் அவருடைய ஓய்வுநாள் என்பதை தேவன் அற்புதங்களினால் காட்டினார். இது தேவன் எங்கு அவருடைய கற்பனைகளை இரண்டு கற்பலகையில் எழுதியிருந்தாரோ அந்த சீனாய் மலைக்கு அவர்கள் வருவதற்கு முன்னானதாகவே இருந்தது.

### சீனாய் மலையில்

**யாத். 20:8–11** சிருஷ்டிகராகிய தேவனின் நித்திய நினைவுச் சின்னமான ஓய்வுநாள், கற்பலகையின்மீது எழுதப்பட்டு, உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த சன்மார்க்கப் பிரமாணமாகிய பத்துக் கற்பனைகளுக்குள் உட்படுத்தப்பட்டிருக்கிறது.

### சீனாய் மலைக்குப்பின்

**ஏசாயா 58:13,14** ஓய்வுநாளை தேவன் என்னுடைய பரிசுத்த நாள் என்று கூறுகிறார். அது தேவனுடைய நாளாக இருக்கிறது.

தேவனுடைய நாளில் நாம் நமது கால்களை விலக்கி, அதில் நமது சொந்த விருப்பத்தின்படி செய்யாமலிருக்கவேண்டும்

**எசே. 20:12–20** உலகத்தைச் சிருஷ்டித்த தேவன், நமது இருதயங்களைத் திரும்பவும் சிருஷ்டித்து, நம்மை உண்மையான கிறிஸ்தவர்களாக்கியிருக்கிறார் என்பதைக் காட்டுகின்ற ஓய்வுநாளானது பரிசுத்தப்படுத்துதல் என்பதன் ஒரு அடையாளமாகவும் இருக்கிறது.

## இயேசுவின் காலத்தில்

**லூக்கா 4:16** ஓய்வுநாளில் ஆராதனைசெய்வது கிறிஸ்துவின் வழக்கமாக இருந்தது.

**லூக்கா 23:52–56; 24:1** இயேசுவின் காலத்தில், கற்பனையின்படி ஓய்வுநாள் (வச. 56, வெள்ளிக்கிழமைக்கும் ஞாயிற்றுக்கிழமைக்கும் இடையிலிருந்த நாளாக இருந்தது; இன்றும் அப்படியே இருக்கிறது என்பதைக் காட்டுகின்ற முக்கியமான வசனங்களாக இவைகள் உள்ளன).

**லூக்கா 16:17** “வேதத்தின் ஓர் உறுப்பும் அவமாய்ப்போகாது என்று இயேசு கூறினார்.”

**மத். 2:8;** கர்த்தருடைய நாள்—ஓய்வுநாள் என்று இயேசு கூறுகிறார். **மாற்கு 2:28**

**மத். 12:10–13;** ஓய்வுநாள் எவ்விதமாக ஆசரிக்கப்படவேண்டும் என்று இயேசு காட்டுகிறார். **லூக். 13:11–17**

## அப்போஸ்தலர்களின் காலத்தில்

**அப். 17:2** ஓய்வுநாளில் ஆராதனைசெய்வது பவுலின் வழக்கமாக இருந்தது.

**அப். 16:13** ஓய்வுநாளில் வழக்கத்தின்படி ஜெபம்செய்யப்படுகிற இடமான ஆற்றின் கரைக்கு பவுலும், சீலாவும், தீமோத்தேயுவும், லூக்காவும் சென்றனர்.

**அப். 3:42,44** ஓய்வுநாளில் பவுல் புறஜாதியினருக்கும் அதைப் போலவே யூதர்களுக்கும் பிரசங்கம்செய்தான்.

**எபி. 4: 4–10** “தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (வச. 4).” இயேசுவிற்குச் சொந்தமானவர்கள் (கிறிஸ்துவில் ஆவிக்குரிய இளைப்பாறுதலை உடையவர்கள்) – தேவன் இளைப்பாறியிருந்ததுபோல – அதே நாளில் ஓய்ந்திருப்பார்கள் (வச. 10).

### வேதாகமத்தின் முடிவில்

**வெளி. 1:10** கர்த்தருடைய நாள். வேதகாமத்தின் முடிவில் கர்த்தருடைய நாள் என்று அவர் அழைக்கும் ஒரு நாளை அவர் இன்னும் உடையவராக இருக்கிறார் என்று இந்த வசனம் மெய்ப்பிக்கிறது. இந்த நாள் ஓய்வுநாள் என்று வேதகாமம் கூறுகிறது (மத். 12:8; மாற்கு 2:28; ஏசாயா 58:13; யாத். 20:10).

**வெளி. 12:17** தேவனுடைய கடைசியான மீதியான சபை கற்பனைகளைக் காத்துக்கொள்ளும் சபையாக இருக்கும் (வெளி. 14:12—ஐ வாசிக்கவும்).

### புதிய பூமியில்

**ஏசாயா 66:23** புதிய பூமியிலுங்கூட பரிசுத்தவான்கள் தொடர்ந்து ஓய்வு நாளில் தேவனுக்கு முன்பாகத் தொழுதுகொள்ளுவார்கள். ★

# 41

# ஓய்வுநாளை எப்படி ஆசரிக்கவேண்டும்?

### ஓய்வுநாள் பரிசுத்தமாக ஆசரிக்கப்படவேண்டும்

**யாத். 20:8–11** நாம் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும். நாமோ, நமது குமாரர்களோ, குமாரத்திகளோ, வேலைக்காரர்களோ, மிருக ஜீவன்களோ, நம்முடன் தங்கியிருக்கும் விருந்தினர்களோ ஓய்வுநாளில் வேலைசெய்யக்கூடாது

**நெகே. 13:19–21** ஓய்வுநாளில் வாங்குவதோ, விற்பதோ, வியாபாரம் செய்வதோ கூடாது.

**எரே. 17:21,22** ஓய்வுநாளில் சுமை சுமப்பதும், சாதாரணமான வேலை செய்வதும் தடைசெய்யப்பட்டிருக்கிறது; அது பரிசுத்தமாக ஆசாரிக்கப்படவேண்டும்.

**ஏசாயா 58: 13,14** நாம் ஓய்வுநாளில் நமது சொந்த வழிகளின்படி நடவாமலும், நமது சொந்தமான மகிழ்ச்சிகளைத் தேடாமலும் அல்லது சொந்த பேச்சைப் பேசாமலும் இருந்து, ஆனால் அதைவிடமேலாக அவரைக் கனப்படுத்த வேண்டும்.

### ஆயத்த நாள்

**லூக்கா 23:54** வெள்ளிக்கிழமை ஆயத்த நாளாக இருக்கிறது. முடிந்தவரை நாம் வெள்ளிக்கிழமையில் எல்லாவற்றையும் ஆயத்தம் செய்யவேண்டும்.

**யாத். 16:23–25** ஓய்வுநாளுக்காக, குறித்த நேரத்தில் வெள்ளிக் கிழமையென்றே உணவு வகைகள் ஆயத்தம்செய்யப்பட்டிருக்கவேண்டும்.

**ஓய்வுநாளின் நேரம்**

**ஆதி. 1:5; லேவி. 23:32** சாயங்காலம் தொடங்கிச் சாயங்காலம் மட்டும்—அதாவது வெள்ளிக்கிழமை சூரியன் மறையும் நேரத்திலிருந்து சனிக்கிழமை சூரியன் மறையும்வரை. (லேவி. 23:32– ஒரு சடங்காச்சார ஓய்வுநாளைக்குறித்துச் சொல்லுகிறது; என்றாலும், தேவனுடைய நேரத்தைக் காத்துக்கொள்ளுகின்ற கொள்கையில், சூரியன் மறைவதிலிருந்து சூரியன் மறையும்வரை என்று இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.)

**ஓய்வுநாளில் சபைக்குச் செல்லுதல்**

லூக்கா **4:16** நமது முன்மாதிரியாக உள்ள இயேசு பெருமான் ஓய்வுநாளில் சபைக்குச் சென்றார்; ஆகையால், நாமும் சபை கூடிவருதலை விட்டுவிடாமலிருக்கவேண்டும் (எபி. 10:25).

**துன்பத்திலிருக்கும் மக்களுக்கு நாம் உதவவேண்டும்**

மத். **12:12** "ஆதலால் ஓய்வுநாளிலே நன்மைசெய்வது நியாயம்தான்"

லூக்கா **13:11–17** நோயாளிகளுக்கும் துன்பத்தில் இருப்பவர்களுக்கும் ஓய்வுநாளில் நாம் உதவிசெய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

"(வெள்ளிக்கிழமை மாலையில் சூரியன் மறைவதற்குமுன்) தேவனுடைய வார்த்தையை வாசிப்பதற்காவும், துதியின் பாடல்களைப் பாடவும் ஜெபம்செய்யவும், குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் ஒன்றுகூடுவார்களாக."—**6T 356.**

"ஓய்வுநாள் பிரமாணத்தின் ஒரு பகுதியைமட்டும் ஆசரிப்பது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படாததாக இருக்கிறது. நீங்கள் உங்களை ஓய்வுநாள் ஆசரிப்பவர்கள் என்று அறிவிக்காமலிருப்பதைக்காட்டிலும் அதிக தீமையை அது பாவிகளின் மனங்களில் ஏற்படுத்துகிறது."—**4T 248.**

"பரதீசிலுங்கூட மனிதனுக்கு ஒரு ஓய்வு தேவை என்பதைத் தேவன் கண்டார். தேவனுடைய கிரியைகளையும் அவரது வல்லமையையும் நல்ல தன்மையையும் அதிக முழுமையாகத் தியானம்செய்வதற்காக அந்த ஒரு நாளில், அவனுடைய சொந்த விருப்பங்களையும் வேலைகளையும் ஒரு பக்கமாக வைத்துவிடவேண்டியது, அவனுக்கு அவசியமாக இருந்தது."—**PP 48.**

“ஒரு புதிய அமைப்பாக ஓய்வுநாள் சீனாய் மலையின்மீது அறிமுகப் படுத்தப்பட்டதாக இராமல், அது சிருஷ்டிப்பின்போது ஸ்தாபிக்கப்பட்டதாக இருக்கிறது. சிருஷ்டிகரின் கிரியையாக அது இருக்கிறதென்று நினைக்கப்படவும் ஆசரிக்கப்படவும்வேண்டிய ஒரு நினைவுச் சின்னமாக அது இருக்கிறது. அது வானங்களையும் பூமியையும் உண்டுபண்ணியவர் தேவன் என்று அவரைச் சுட்டிக்காட்டி, மற்ற எல்லாத் தவறான தெய்வங்களிலிருந்தும் அவரை உண்மையான தேவன் என்று சிறப்பித்துக் காட்டுகிறது. ஏழாம்நாளைக் காத்துக்கொள்ளும் அனைவரும் இந்தச் செயலினால், யேகோவாவை ஆராதிப்பவர்கள் என்று காட்டுகின்றனர் ...

வேலைசெய்வதற்கென்று தேவன் மனிதர்களுக்கு ஆறுநாட்களைக் கொடுத்து, அவர்களுடைய சொந்த வேலைகள், ஆறு வேலைநாட்களில் செய்யப்படவேண்டும் என்று அவர் கோருகிறார். நன்மை இரக்கம் ஆகியவைமிக்க செயல்களை ஓய்வுநாளில் செய்வது அனுமதிக்கப் பட்டிருக்கிறது. நோயாளிகளும் துன்பப்படுபவர்களும் எல்லா நேரங்களிலும் கவனிக்கப்பட்டாகவேண்டும்; ஆனால், தேவை இல்லாத வேலைகள் கண்டிப்பாகத் தவிர்க்கப்படவேண்டும்.... தொழில், வியாபாரம் சம்பந்தப்பட்ட காரியங்களை விவாதம் செய்பவர்கள், அல்லது அவைகளைப்பற்றி ஓய்வுநாளில் திட்டம் தீட்டுபவர்கள், உண்மையாகவே அந்தக் காரியங்களில் ஈடுபடுபட்டார்கள் என தேவன் கருதுகிறார். ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கு, உலகப்பிரகாரமான தன்மைகளையுடைய காரியங்களில் நமது மனங்கள் ஈடுபடுவதை நாம் அனுமதிக்கக்கூடாது.”— **PP 307.**

“ஓய்வுநாளில் சரீரப் பிரகாரமான வேலைகளைவிட்டுமாத்திரம் விலகாமல், பரிசுத்தமான காரியங்களில்மட்டுமே சஞ்சரிக்கும்படி மனதை ஒழுங்குபடுத்தவேண்டும் என்றும் தேவன் எதிர்பார்க்கிறார். அற்பமானதும் முக்கியமில்லாததுமான காரியங்களில் ஈடுபடுவதனாலும், உலகப் பிரகாரமான காரியங்களைப்பற்றி உரையாடுவதினாலும் நான்காவது பிரமாணம் உண்மையாகவே மீறப்படுகிறது. சத்தியத்தில் பூரணமாக மனமாற்றமடையாதவர்கள் உலகப் பிரகாரமான தொழில்களிலும் காரியங்களிலும் அவர்களுடைய மனங்களைத் தாராளமாக ஓடவிட அடிக்கடி அனுமதிக்கின்றனர்; எனவே, மிருக ஜீவன்கள், விவசாயங்கள், லாப—நஷ்டங்கள் ஆகியவைபற்றிய உரையாடல்கள் இப்படிப்பட்டவைகளாக (ஓய்வுநாளை மீறுவதாக) உள்ளன.”—**2T 703.**

“இஸ்ரவேலர்கள் பூமிக்குரிய கானானுக்குள் பிரவேசிப்பதற்காக எகிப்தைவிட்டு வெளியேறியபோது ஓய்வுநாள் அவர்களைச் சிறப்பித்துக் காட்டியிருந்த ஓர் அடையாளமாக இருந்ததைப்போல, பரலோக ஓய்வில்

பிரவேசிப்பதற்காக தேவனுடைய ஜனங்கள் உலகத்தைவிட்டு வெளியே வரும்போது, அவர்களைச் சிறப்பாக வேறுபடுத்திக்காட்டும் அடையாளமாக ஓய்வுநாள் இருக்கிறது. தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையில் உள்ள உறவின் அடையாளமாகவும், அவர்கள் அவருடைய பிரமாணத்தைக் கனப்படுத்துகின்றனர் என்பதன் ஓர் அடையாளமாகவும் ஓய்வுநாள் இருக்கிறது. அது அவருடைய பக்திவிநயமான பிரஜைகளையும் மீறினவர்களையும் வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது.''—**1T 349.**

``நம்மைப் பரிசுத்தம்செய்கின்ற கிறிஸ்துவின் வல்லமையின் அடையாளமாக ஓய்வுநாள் இருக்கிறது. கிறிஸ்து எவர்களையெல்லாம் பரிசுத்தம் செய்கிறாரோ அவர்களுக்கெல்லாம் அது கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின்மூலமாக தேவனுடைய இஸ்ரவேலரின் ஒரு பகுதியாகும் அனைவருக்கும் ஓய்வுநாள் கொடுக்கப்பட்டிருக்கிறது.''—**DA 288.**

``ஓய்வுநாளை ஆசரிப்பதில் பெரிய ஆசீர்வாதங்கள் விரிவடைந் திருக்கின்றன. ஓய்வுநாள் நமக்கு ஒரு மனமகிழ்ச்சியின் நாளாக இருக்கவேண்டும் என்று தேவன் வாஞ்சிக்கிறார்... தேவனுடைய பரிசுத்த நாளுக்குப் பயபக்தி செலுத்துபவர்களை, தம்முடைய மக்களாக தேவன் இனம் காண்கிறார் என்பதற்கான அடையாளமாக ஓய்வுநாள் இருக்கிறது. அவர் தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவார் என்பதற்கான ஓர் ஆணையிடுதலாக அது இருக்கிறது. தேவ அரசாங்கத்தின் அடையாளத்தை ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொரு ஆத்துமாவும் தன்னை நித்தியமான தெய்வீக நித்திய உடன்படிக்கையின்கீழ் வைக்கிறது. அவன் வாக்குத்தத்தம் என்னும் இணைப்பை (தொடர்பை) உடைய கீழ்ப்படிதல் என்னும் பொன் சங்கிலியால் தன்னைப் பிணைத்துக் கொள்கிறான்...''—**6T 349,350.**

``உலகளாவிய விதமாக ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டிருந்தால், பயபக்திக்கும் ஆராதனைக்குமுரிய பொருளாக, மனிதனுடைய எண்ணங்களும் பாசங்களும் சிருஷ்டிகரிடத்தில் நடத்தப்பட்டிருந்திருக்கும். அப்போது ஒரு விக்கிரக ஆராதனைக்காரனோ, கடவுள் இல்லை என்பவனோ, சந்தேகவாதியோ ஒருபோதும் இருந்திருக்கமாட்டான். ஓய்வுநாளை ஆசரிப்பது, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுக்களையும் உண்டுபண்ணின உண்மையான தேவன்மீதுள்ள இராஜபக்தியின் அடையாளமாக இருக்கிறது.''—**GC 438.**

``ஓய்வுநாளின் அதிகமான நேரத்தைப் பெற்றோர்கள் அவர்களுடைய பிள்ளைகளுடன் செலவிடவேண்டும். அநேக குடும்பங்களில் வயது குறைந்த பிள்ளைகள், எந்த அளவிற்கு அவர்களுக்குச் சிறப்பானதாக கருதப்படுகிறதோ அந்தப் பொழுதுபோக்குகளைக் காணும்படி—தங்களுடைய

விருப்பத்துக்கு விட்டுவிடப்படுகின்றனர். தனியாக விட்டுவிடப்பட்ட அந்தப் பிள்ளைகள் விரைவில் அமைதியற்றவர்களாகி, விளையாடத் தொடங்கி, ஏதாவது தவறான காரியங்களில் ஈடுபடுகின்றனர் இவ்வாறாக, ஓய்வுநாளானது அவர்களுக்குப் பரிசுத்தமான முக்கியத்துவம் இல்லாத நாளாகிவிடுகிறது.'' **—6T 358.**

''சூரியன் மறையும்போது, பரிசுத்தமான மணி நேரங்களின் முடிவை அடையாளப்படுத்தும்விதத்திலும், வேலை நாட்களின் கவனங்களுக்கூடாக தேவப் பிரசன்னம் இருக்கும்படி அழைக்கவும், ஜெபத்தின் குரலும், துதிகளின் பாடலும் அடையாளப்படுத்தப்படுவதாக.''**—6T 359.** ★

# 42

# வேதாகமத்திலுள்ள வாரத்தின் முதல் நாள்!

வேதாகமத்தில் ஞாயிற்றுக்கிழமை என்னும் வார்த்தை இல்லை; ஆனால், வாரத்தின் முதல் நாள் என்னும் வார்த்தைகள் ஒன்பது தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு தடவை பழைய ஏற்பாட்டிலும், எட்டு தடவைகள் புதிய ஏற்பாட்டிலும் கூறப்பட்டுள்ளன.

**பழைய ஏற்பாட்டுக் குறிப்பு:**

**ஆதி. 1:5** தேவன் அவருடைய கிரியையை சிருஷ்டிப்பில் தொடங்கினார்.

**புதிய ஏற்பாட்டுக் குறிப்பு:**

**மத். 28:1** இயேசுவின் சரீரத்திற்குச் சுகந்தவர்க்கமிட ஸ்திரீகள் வாரத்தின் முதல் நாளில் வந்தார்கள். இது ஓய்வுநாளின் முடிவாக இருந்தது. (ஆகவே புதிய ஏற்பாட்டின்படி ஓய்வுநாளுக்குப்பின் ஞாயிற்றுக்கிழமை வருகிறது).

**மாற்கு 16:1,2** வாரத்தின் முதல் நாளில் இயேசுவின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிட அந்த ஸ்திரீகள் வந்தார்கள் அந்த வேளை, ஓய்வுநாள் முடிந்த பின்னராக இருந்தது.

**மாற்கு 16:9** வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். அது ஒரு பரிசுத்த நாளாக இருந்தது என்று குறிப்பிடப்படவில்லை; அல்லது அதைக் கைக்கொள்ளவேண்டும் என்ற கட்டளையும் இருக்கவில்லை!

**லூக். 24:1** இயேசுவின் சரீரத்திற்குச் சுகந்தவர்க்கமிட அந்த ஸ்திரீகள் வந்தார்கள். இது அவர்கள் கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்ததற்குப் பின்னான நாளாக இருந்தது-(23:56).

இயேசுவின் மரணத்திற்கு முப்பது முதல் ஐம்பது வருடங்களுக்குப்பின் லூக்கா இந்தச் சுவிசேஷத்தை எழுதினார். அப்போதும் அவர் ஏழாம்நாளான

ஓய்வுநாளைக் கற்பனையின்படியான ஓய்வுநாள் என்று தொடர்ந்து கூறுவதைக் கவனியுங்கள்! கற்பனையின்படி ஓய்வுநாள் வெள்ளிக்கிழமைக்கு அடுத்த நாளாக இருக்கிறது. வெள்ளிக்கிழமை ஆயத்தநாள் என்று கூறப்பட்டிருக்கிறது (லூக். 23:54; 23:56; 24:1). ஸ்திரீகள் இயேசுவின் சரீரத்திற்கு ஓய்வுநாளில் சுகந்தவர்க்கமிட வராமல், ஞாயிற்றுக்கிழமை ஒரு சாதாரணமான வேலை நாளாக இருந்ததினால், அன்று வந்தார்கள்.

**யோவான் 20:1** மகதலேனா மரியாள் அதிகாலையில் கல்லறைக்கு வந்து பார்த்தபோது, அது வெறுமையாக இருப்பதைக் கண்டாள். அன்றைய ஞாயிற்றுக்கிழமை ஒரு பரிசுத்தநாள் என்று குறிப்பிடப்படவில்லை.

**யோவான் 20:19** சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்ததினால், ஒன்று கூடியிருந்த அதே நாளில், இயேசு சீஷர்களுக்குத் தரிசனமானார். (அது ஒரு பரிசுத்தமான நாளாக இருக்கிறது என்ற குறிப்பு இல்லை—அல்லது அதைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளவேண்டும் என்ற குறிப்பும் இருக்கவில்லை).

**அப். 20:7** பவுல் வாரத்தின் முதல் நாளில் பிரசங்கம்செய்தான். இதை நாம் அநேகமாக சனிக் கிழமை இரவு என்று கூறுவோம் ஏனெனில், இது வாரத்தின் முதல் நாளின் முதல் பகுதியாக—சனிக் கிழமை இரவாக இருந்தது.

**குறிப்பு:**

1. ஒரு கூட்டத்தைக்குறித்த அல்லது வாரத்தின் முதல் நாளில் செய்யப்பட்ட பிரசங்கத்தைக்குறித்த ஒரே ஒரு புதிய ஏற்பாட்டு சம்பவமாக இது இருக்கிறது.
2. பவுல், மறுநாள் காலையில் புறப்பட்டுச் செல்ல ஆயத்தமாக இருந்த சூழ்நிலைதான், அவன் அந்த இரவில் பிரசங்கம் செய்ததற்கான காரணமாக இருந்தது. மேலும் விவரிக்கவேண்டுமானால், அது விசேஷமான பிரிவு உபச்சாரக் கூட்டமாக இருந்தது.
3. வாரத்தின் முதல்நாள் ஒரு பரிசுத்த நாளாக இருக்கிறதென்றோ அதை ஆசரிக்கவேண்டும் என்றோ எந்த ஒரு கட்டளையும் இங்கு குறிப்பிடப் படவில்லை.
4. இவ்வாறாக, ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டும் என்ற அதிகாரம் எதுவும் இங்கு இருக்கவில்லை என்பது தெளிவாயிருக்கிறது.

**1 கொரி. 16:1-2** எருசலேமிலிருக்கிற ஏழைகளுக்கு உதவும்படி, அவன் வந்திருக்கும்போது சேகரித்துக்கொள்ள தன்பேரிலே பணம் சேர்க்கும்படி பவுல் சபை அங்கத்தினர்களிடம் கேட்டான் (வச. 3).

**குறிப்பு:**

1. பாடுதல், ஜெபித்தல், பிரசங்கம் செய்தல் அல்லது சபை கூடிவருதலைக்குறித்து அல்ல, அதற்கு நேர் எதிராக, காணிக்கையைக் குறித்துக் குறிப்பிடுகிறான். சபையால் அல்ல தான் சொந்தமாக செய்ய விரும்பிய ஊழியத்தைக் குறிப்பிடுகிறான். (விசுவாசிகள் தனிப்பட்ட விதமாக தர்மப் பணம் சேகரித்து உதவவேண்டும் என்றான்).
2. வாரத்தின் முதல் நாளில் இது செய்யப்படவேண்டியதாக இருந்ததற்குக் காரணம், அது வாரத்தின் முதல் வேலை நாள். அன்று, அவர்களுடைய கடந்த வாரத்தின் லாபத்தை கணக்குப் பார்த்து, இந்த வாரத்தின் வேலைக்கு அவர்கள் ஆயத்தப்படுவர். வெள்ளிக்கிழமையில் நேரம் போதாததாக இருந்ததால், அன்று செய்யவில்லை.
3. வாரத்தின் முதல் நாள் ஒரு பரிசுத்த நாள் அல்லது கர்த்தருடைய நாள் என்று அதை ஆசரிக்கும்படியான கட்டளை எதுவும் இங்கு குறிப்பிடப்படவில்லை; மாறாக, இந்த வசனம் காட்டுவதுபோல-அது ஒரு வேலை நாளாக இருந்தது.
4. நிச்சயமாகவே ஞாயிற்றுக் கிழமையை ஆசரிக்கும்படி இங்கு எந்த அதிகாரமும் இல்லை.

**சுருக்கம்:-** இந்த ஒன்பது வசனங்களிலும் வாரத்தின் முதல் நாள் ஓய்வுநாள் என்று ஒருபோதும் கூறப்படவில்லை என்பதைக் கவனியுங்கள். அது ஒரு பரிசுத்த நாள் என்றும் ஒருபோதும் கூறப்படவில்லை. அதைக் கைக்கொள்ளும்படியாக நாம் ஒருபோதும் கட்டளை பெறவில்லை. அது உயிர்த்தெழுதலின் ஒரு ஞாபகச் சின்னம் என்று நமக்கு ஒருபோதும் சொல்லப்படவில்லை; ஆகையால், ஞாயிற்றுக் கிழமையை (ஓய்வுநாளாகவோ அல்லது வேறு பரிசுத்த நாளாகவோ) ஆசரிப்பது என்பது வேதாகமத்தில் இல்லாத ஒன்றைச் செய்வதாகும். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாய்ப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் (மத். 15:9) என்று வேதாகமம் கூறுகிறதே, கவனித்தீர்களா?

## உயிர்த்தெழுதல்பற்றிய வேதாகம அடையாளம்

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அடையாளமாக ஞான ஸ்நானத்தை வேதாகமம் நமக்குக் கொடுத்திருக்கிறது.

**ரோமர் 6:4,5** கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய், நடந்துகொள்ளும்படிக்கு, ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே அடக்கம்பண்ணப் பட்டோம்; ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவருடைய உயிர்த் தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ஞானஸ் நானத்தைப்பற்றிப் பேசுகிறது)

**கொலோ. 2:12** ஞானஸ்நானத்தினாலே அவரோடேகூட அடக்கம்பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். ★

# 43

# ஓய்வுநாள்பற்றிய சில மறுப்புகள்!

1. அப். 20:7 வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடுவதாகவும், திருவிருந்து ஆராதனையில் பங்குபெறுவதாகவும் இந்த வசனம் காட்டுகிறது.

அப்பம் பிட்குதல் என்னும் சொல் ஒரு சாதாரண உணவை இங்கு குறிப்பிட முடியும். ஆனால் இந்த வாசகத்தின் அடக்கத்தில் அநேகமாக இங்கு கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பிடுவதுபோல் காணப்படுகிறது. இந்த வசனம் ஞாயிற்றுக் கிழமையை ஒரு பரிசுத்தமான நாள் என்று காட்டுகிறதென்று சில ஜனங்கள் கூறுகின்றனர்.....!?

**பதில்:**

**1.** வாரத்தின் முதல் நாளில் மத சம்பந்தமான ஒரு கூட்டம் நடந்தது என்பதாக இந்த ஒரே ஒரு நேரத்தில் மட்டும்தான் நாம் வாசிக்கிறோம்.

**2.** கிறிஸ்தவர்கள் வழக்கமாகக் கூடுகின்ற நாளாக அது இருந்தது அல்லது அது ஒரு பரிசுத்த நாளாக இருந்தது அல்லது கர்த்தருடைய நாள் அல்லது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் நினைவுநாள் என்று இந்த வசனத்தில் எந்த இடத்திலும் நாம் வாசிப்பதில்லை அதற்குப் பரிசுத்தமான பட்டம் கொடுக்கப் பட்டிருக்கவுமில்லை.

**3.** மறுநாளில் (காலையில்) பவுல் புறப்பட்டுச் செல்ல ஆயத்த மாயிருந்தது இந்த இரவு நேரக் கூட்டத்திற்குக் காரணமாக இருந்தது; குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், அது ஒரு சிறப்பான பிரிவு உபச்சாரக் கூட்டமாக இருந்தது. அதன் நீண்ட நேர நிகழ்ச்சிமட்டுமே அது வழக்கப்படி இல்லாத ஒன்றாக இருந்தது என்பதைக் காட்டுகிறது (வச. 9).

**குறிப்பு :**– தேவனால்மட்டுமே ஒரு நாளைப் பரிசுத்தம் செய்யமுடியும்; ஒரு குறிப்பிட்ட நாளில் கூட்டம் நடத்துவதினாலேயே அதை ஒரு பரிசுத்த நாளாக மாற்றிவிட முடியாது!

**4.** இந்தக் கூட்டத்தின் நேரம் வாரத்தின் முதல் நாளின் இருளான பகுதியிலிருந்தது (வச. 7,8 கடைசிப் பகுதி); ஆனால், நாம் எதனை சனிக்கிழமை இரவு என்று கூறுகிறோமோ–அது–வாரத்தின் முதல்நாளின் முதல்பகுதி அல்லது இரவுப் பகுதியாக வேதாகமக் காலத்தில் இருந்தது.

**குறிப்பு:**– வேதாகம நேரம் (நாள்) சாயங்காலம் தொடங்கி (மறுநாள்) சாயங்காலம் வரை, அல்லது சூரிய அஸ்தமனத்திலிருந்து (மறுநாள்) சூரிய அஸ்தமனம் வரை என்பதாக உள்ளது. அப்படியே சனிக்கிழமை இரவு வாரத்தின் முதல் நாளின் ஆரம்பமாக இருக்கிறது; ஆகையால், வாரத்தின் முதல் நாளின் இரவு நேரத்தில் பவுல் பிரசங்கம் செய்திருந்தால், அது சனிக்கிழமை இரவாக இருந்திருக்கவேண்டும். (வேதாகமக் கணக்கிடுதலின்படி நமது ஞாயிற்றுக்கிழமை இரவு வாரத்தின் இரண்டாம் நாளின் ஆரம்பமாக உள்ளது).

இவ்வாறாகப் பவுலின் அந்த விசேஷமான பிரிவு உபச்சாரக் கூட்டம் சந்தேகத்திற்கிடமில்லாமல், நாம் வழக்கமாகக் கூறும் ஞாயிற்றுக்கிழமை இரவில் இல்லாமல், சனிக் கிழமை இரவில் நடந்திருந்தது. அப். 20:7–ல் உள்ள இந்தத் தனிப்பட்ட வசனம் ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தம் என்பதற்கான சான்று எதையும் கொடுப்பதில்லை.

**பின்வரும் வேதாகம மொழிபெயர்ப்புக்களைக் கவனியுங்கள்**

பிரிவு உபச்சார விருந்துக்காக நாங்கள் சனிக்கிழமை மாலையில் ஒன்று கூடினோம். பவுல் ஜனங்களிடம் பேசத் தொடங்கி, மறுநாளில் அவன் புறப்பட்டுச் செல்லவேண்டியதாக இருந்ததனால், நடு இரவுவரை பேசிக்கொண்டிருந்தான்–அப். 20:7.—**புதிய ஆங்கில வாசகத்தின் புதிய ஏற்பாடு (1966) நவீன கால மனிதனுக்கான நற்செய்திகள் என்றும் கூறப்படுகிறது.**

அந்தச் சனிக்கிழமை இரவில், மறுநாள் புறப்பட்டுச் செல்லவேண்டியவனாக இருந்த பவுல், அப்பம் பிட்பதற்கான எங்களுடைய கூட்டத்தில் நடு இரவுவரையிலும் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தான் அப். 20:7—**புதிய ஆங்கில வேதாகமம் (1970), "அல்லது எழுத்தின்படியாக 'சனிக்கிழமை இரவைக்குறித்து,' 'வாரத்தின் முதலாம் நாளில்,' யூதக் கணக்கிடுதலின்படி சூரிய அஸ்தமனத்திலிருந்து சூரிய அஸ்தமனம்வரை"—அப்.**

**20:7–க்கு ஜீவனுள்ள வேதாகமத்தில் உள்ள பொழிப்புரை (கீழ்க் குறிப்பு) (ஜூலை 1971). K.N. டெய்லர்.**

**கீழ்க்காணும் விளக்கங்களையுங்கூடக் கவனியுங்கள்:**

அது யூதர்களின் ஓய்வுநாளைப் பின்தொடர்ந்த சாயங்கால வேளையாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை காலையில் அந்தக் கப்பல் பயணம் புறப்பட வேண்டியதாக இருந்தது.—**"அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையும் நிருபமும்" கோனிபியர் & ஹவ்சன் அதிகாரம் 20: 520. முதல் பாகம் (நியூ யார்க் தாமஸ் Y க்ரோவெல் & கோ), அப். 20:7 பற்றிய விளக்கம்.**

யூதர்கள் ஒரு நாளைச் சாயங்காலத்திலிருந்து காலைவரை என்று கணக்கிட்டிருந்தனர். அந்தக் கொள்கையின்படி, வாரத்தின் முதல் நாள் நமது சனிக்கிழமை சாயங்காலமாக இருக்கிறது.—**அப்.நடபடிகள்பற்றிய விளக்கம் ஹொரேஷியோ B. ஹாக்கெட் கிரேக்க மொழி புதிய ஏற்பாட்டுப் பேராசிரியர் ரோச்செஸ்டர், தியாலஜிகல் செமினரி, பக்கம் 329,330 (பாஸ்டன். G கோல்டு & லின்கன்) 1858.**

"மாடி அறையில் உள்ள விளக்குகள்" இந்தக் கடைசிச் சூழ்நிலையிலிருந்து அந்தக் கூட்டம் ஓய்வுநாளில் சூரியன் மறைந்தன்பின்–யூதர்களின் கணக்கிடுதலின்படி, வாரத்தின் முதல் நாளின் ஆரம்பத்தில் ஆரம்பமாயிற்று என்று பொருள்கொள்ளப்பட்டிருக்கிறது.—**(வேதாகம இலக்கியக் கலைக்களஞ்சியம் அப். 20:7–ல் உள்ள கர்த்தருடைய நாள் என்பது பற்றி ஓய்வுநாள்பற்றிய வரலாறு என்னும் நூலில், கிட்டோ என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆண்ட்ரூஸ் & கொன்ரேடி), page 204 கீழ்க்குறிப்பு பதிப்பு 1912).**

ஞாயிற்றுக் கிழமை ஆசரிப்புக்கு இந்த வாசகம் முழுமையான ஆதாரத்தைத் கொடுக்கவில்லை. அப்போஸ்தலனின் பயணம் பிரிவுபசாரத்திற்காக இந்த சிறு கூட்டத்தை சேர்த்திருக்கவேண்டும். ஞாயிற்றுக் கிழமையை கொண்டாடாவிடினும் கூடினதினிமித்தம் பவுலும் பேசியிருக்கவேண்டும்.— **கிறிஸ்தவ மதம் சபை ஆகியவைகளின் வரலாறு, முனைவர் அகஸ்டஸ் நீண்டர் (சபை வரலாறுகளின் இளவரசன்) லூதரன் டிரான்ஸ் ஹென்ரி ஜான்ரோஸ் (1831) முதலாம் பாகம், page 337.**

| | |
|---|---|
| **2. 1கொரி 16:1,2** | இந்த வசனம், பிரசங்கம்செய்தல், ஜெபித்தல், பாடுதல் அல்லது வேறு எந்த விதமான சபை கூடுதலையும் குறிப்பிடுவதில்லை. அது வாரத்தின் முதல் நாளில், யூதர்களும் ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் தங்களுடைய வியாபாரத்தையோ, தொழிலையோ |

வேலையையோ தொடங்குகின்ற சம்பிரதாயத்தைப் பார்வைக்குக கொண்டு வருகிறது. இங்கு பவுல் எருசலேமிலுள்ள ஏழைகளுக்கான உதவித் தொகையை, வாரத்தின் முதல் நாளில் வேலையைத் துவக்கும்முன், முந்தின வாரத்தில் தேவன் அவர்களை எந்த அளவிற்குச் செழுமைப்படுத்தினார் என்று சோதிக்கும்போது, அந்தத் தர்மப் பணத்தை அவனிடத்தில் கொடுத்துவைக்கும்படி (அவனுடைய சொந்த வீட்டில் அல்லது அவன் தொழில் செய்திருந்த இடத்தில்) பவுல் விசுவாசிகளைக் கேட்டுக்கொள்கிறான். ஞாயிற்றுக் கிழமை காலையில் வேலையை ஆரம்பிக்கவிருந்த நேரத்தில், இப்படிச் செய்வது வழக்கமான நடத்தையாக இருந்தது. வெள்ளிக்கிழமை சாயங்காலத்தில் ஓய்வுநாள் வந்துகொண்டிருந்ததனால் உண்மையாகவே அப்படிப்பட்ட கணக்குப் பார்ப்பதற்கான நேரம் இருக்கவில்லை. இந்த வசனம் ஞாயிற்றுக்கிழமையை ஓர் ஆராதனை நாள் என்று அடையாளப்படுத்திக்காட்டுவதில்லை.

மதச்சார்பற்ற சாதாரணமான வாரத்தின் ஆரம்பத்தைப்பற்றி ஒருவர் சாதாரணமாகச் சிந்திக்கும்போது, இங்கு குறிப்பிடப்படுவது அனைத்தும் எளிதாக விளக்கப்பட்டிருக்கிறது.—**கிறிஸ்தவ மதம் சபை ஆகியவைகளின் பொதுவான வரலாறு, முனைவர் ஆகஸ்டஸ் நீண்டர், 1:339. (ஜெர்மன் பதிப்பு) ஓய்வுநாளின் வரலாறு என்னும் புத்தகம், பக். 200–ஆண்ட்ரூஸ் & கோன்ரேடி பதிப்பு 1912.**

1 கொரி. 16:2–ல் வாரம்தோறும் ஒரு சிறு தொகையைத் தனியாக எடுத்துவைப்பதைக் காட்டுகின்ற தெசௌரிஜோன் **(THESAURIZON)** என்னும் வார்த்தையானது ஒரு பொதுவசூல் என்னுகிற எண்ணத்திற்கு எதிரானது. இந்த வாசகத்தில் ஞாயிற்றுக் கிழமைக்கான மதசம்பந்தமான தனிச் சிறப்புக்கான சான்றுகள் எதையும் நம்மால் காணமுடியாது.—**கிறிஸ்தவ சபையை நடுதல், பயிற்சி அளித்தல் ஆகியவைகளின் வரலாறு. முனைவர் அகஸ்டஸ் நீண்டர் மொழிபெயர்ப்பு, ரைலாய்ட், பாகம் 1 page 158 கீழ்க் குறிப்பு பக்கம் 159 (லண்டன் ஜார்ஜ் பெல் & சன்ஸ் 1900).**

அவனிடம் வைத்தல்–பொதுவாக நினைக்கப்படுகின்றவிதமாக இல்லாமல், கூட்டத்தில் வைக்கமால் வீட்டில் வைத்தல் என்று பொருள்படும்.—**கொரிந்தியர்களுக்கெழுதின முதலாம் நிருபம் – JJ லியாஸ் என்பவரால் பதிப்பிக்கப்பட்டது. page 164, 1 கொரி 16:2 பற்றிய விளக்கம்**.

**குறிப்பு:**– லிட்டெல் & ஸ்காட்ஸ் (**Liddell & Scots**) ஆகியோரின் கிரேக்க அகராதியின்படி, 1 கொரி. 16:2–ல் உள்ள தன்னிடத்தில் என்பதற்கான

பார் ஹிட்டோ என்னும் கிரேக்கச் சொல் ஒருவருடைய வீட்டில் அல்லது இல்லத்தில் என்று பொருள்படும் விதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த வாசகத்திலிருந்து அதனை (ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தம்) என்று நம்மால் அர்த்தம் கொள்ளமுடியாது.—**பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்குமான கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்பட்டது. இங்கிலாந்து சபை ஊழியர்களால் (போதகர்களால் 1 கொரி 16:2 என்பதின் விளக்கமாகப் பதிப்பிக்கப்பட்டது).**

**3. வெளி. 1:10** இங்கு கர்த்தருடைய நாள் என்று குறிப்பிடும் சொல் (அடிக்கடி ஞாயிற்றுக்கிழமை என்று பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந தபோதிலும்) ஞாயிற்றுக்கிழமையைக் குறிப்பதாக இல்லை. வேதாகம காலத்தில் கர்த்தருடைய நாள் என்பது தேவனுடைய ஒய்வுநாளைமட்டுமே குறித்தது.—மத். 12:8; மாற்கு 2:28; லூக்கா 6:5; யாத். 20:10; ஏசா. 58:13 வசனங்களைப் வாசிக்கவும்.

**4. கலா. 2:14–17** இங்கு நீக்கப்பட்டுப்போன ஓய்வுநாட்கள் லேவி. 23 –ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள சடங்காச்சாரப் பிரமாணங்களாக உள்ளன. அவைகள் வருடம் முழுவதிலும் பலதரப்பட்ட நேரங்களில் வந்திருந்தன. இந்த நாட்களில் யூதர்கள், அவர்களுடைய போஜனபலிகளையும் பானபலிகளையும் மற்றவைகளையும் செய்திருந்தனர். இவை அனைத்தும் கிறிஸ்துவையும் எதிர்காலப் பணிகளையும் எதிர்நோக்கியிருந்தன.

கொலோ. 2:14–17 – ல் உள்ள இந்த ஓய்வுநாட்கள், சடங்காச்சாரப் பிரமாணங்களில் உள்ள ஓய்வுநாட்களாக உள்ளன என்பது மிகத் தெளிவானதாக இருக்கிறது.

1. கட்டளைகளால் நமக்கு விரோதமாக இருந்த கையெழுத்துக்களில் உள்ள ஓய்வுநாட்களில் (வச. 14) (ஏழாம் நாள்–ஓய்வுநாள் சன்மார்க்கப் பிரமாணமாகிய பத்துக் கற்பனைகளில் உட்பட்டதாக இருந்து, கற்பலகைகளின் மேல் எழுதப்பட்டிருந்தது).
2. அந்த ஓய்வுநாட்கள் (பண்டிகை ஓய்வுநாட்கள்) போஜனபலி, பான பலி, அமாவாசை போன்றவைகளுடன் சம்பந்தப்பட்ட ஓய்வுநாட்களாக இருந்தன.
3. வருங்காரியங்களுக்கு நிழலாக இருந்த ஓய்வுநாட்கள் (அதாவது கிறிஸ்துவைப்பற்றினதாக இருந்தது. (பத்துக் கற்பனைகளில் உள்ள ஏழாவது நாளாகிய ஓய்வுநாள் வரவிருந்த கிறிஸ்துவை **எதிர்நோக்காமல்** (வேலி. 23:38) தேவனுடைய படைப்பின் வல்லமைக்கு

நினைவுச் சின்னமாக உள்ள சிருஷ்டிப்பைப் **பின்நோக்குவதாக** உள்ளது.

**கீழ்க்காணும் வேதாகம விளக்கங்களை கவனியுங்கள்**

கையெழுத்தாக—சட்டங்களாக இருந்த—சடங்காச்சாரப் பிரமாணத்தைப் புரிந்துகொள்ளவேண்டியதாக இருந்தது.—**ஒரே விளக்க நூல் புத்தகமாக உள்ள மாத்யூ ஹென்றியின் வேதாகம விளக்க நூல். நபிராட் ஓக் பதிப்பு (மார்ஷல் மார்கன் & ஸ்காட்) கொலோ. 2:14–17 பற்றி, 1970.**

அது யூதர்களுடைய பண்டிகைகளைமட்டுமே குறிப்பிட்டுள்ளன.—**எலியட்டின் வேதாகம விளக்க நூல், ஜோண்டர்வன் பதிப்பகம்) 1970 கொலோ. 2:14–17 பற்றியது.**

கையெழுத்து லேவியப் பிரமாணமாக இருந்தது... சன்மார்க்கப் பிரமாணத்தை நீக்குவதற்காகக் கிறிஸ்து வரவில்லை. நியாயப்பிரமாணத்திலுள்ள பத்துக் கற்பனைகள் நீக்கப்படவில்லை அல்லது எப்பொழுதுமே நீக்கப்பட முடியாது என்று பயபக்தியுடன் கூறப்படுவதாக. சட்டதிட்டங்கள் சாதாரணமான உள்ளாட்சியுடன் தற்காலிகமானவையாக இருந்தன. **1**.பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் செய்யப்பட்ட ஒவ்வொரு செயலுக்காகவும் வெளியரங்கமாகக் கூறப்பட்ட சாபம் (கலா. 3:10–13 ) **2**. விருத்தசேதனம் சமயச் சடங்குகள் கட்டளைகள் ஆகிய அனைத்துச் சடங்காச்சாரப் பிரமாணங்கள். இங்கு பவுலின் அர்த்தம் இதுவாக உள்ளது.—**முழு வேதாகமம்பற்றி வேதாகம விளக்க நூல் Chr. வேர்ட்ஸ் ஓர்த் D.D லிங்கன் ஆலயத்தின் பேராயர் (ரிவிங்கஸ்டன்).–கொலோ. 2:14–17 பற்றியது (ஆங்கிலிக்கன்).**

**வச. 14** கையெழுத்துக்களாலான சட்டங்கள் என்னும்போது, அப்போஸ்தலன் சடங்காச்சாரப் பிரமாணங்கள் என்று சாட்சியாக அர்த்தம் கொள்ளுகிறான்... வச. 16 இங்கு அப்போஸ்தலன் கையெழுத்துக்களாலான சில சட்டங்களைக் குறிப்பிட்டு பேசுகிறான். (வாராந்திர) ஓய்வுநாள் நீக்கப்பட்டது என்னும் தகவல் எதுவும் இங்கு இல்லை.—**கொலோ. 2:14–17 பற்றி ஆதாம் கிளார்க் என்பவரின் வேதாகம விளக்க நூல் (மெதடிஸ்டு).**

அந்த ஓய்வுநாள்–கிரேக்க மொழியில், அந்த என்னும் சொல் நீக்கப்பட்டிருக்கிறது... (அந்த ஓய்வுநாட்கள் அல்ல) அதாவது பாவ நிவாரணநாள், கூடாரப் பண்டிகை போன்ற யூதர்களின் ஆராதனைக்குச் சொந்தமானவைகளாக இருந்தவைகள் ஒரு முடிவுக்கு வருகின்றன (லேவி. 23:32; 37,39). வாராந்திர ஓய்வுநாள் அதிக நிரந்தரமான அஸ்திபாரத்தின்மேல் தங்கியிருக்கிறது. அது ஆறு நாட்களில் நிகழ்ந்த படைப்பின் நினைவுச்

சின்னமாக இருக்கும்படி பரதீசில் ஏற்படுத்தப்பட்டதாக இருக்கிறது— லேவி. 23:38. மற்ற ஓய்வுநாட்களிலிருந்து கர்த்தருடைய ஓய்வுநாளை வெளிக்காணும்படி வேறுபடுத்திக்காட்டுகிறது.—**முழு வேதாகமம்பற்றிய விளக்க நூல் ஜெமிசன் பாசட்டும் நபிராவுனும்.–(ஒலி பான்ட்ஸ்) 1970, கொலோ. 2:14–17 பற்றிய விளக்கம்.**

பழைய ஏற்பாட்டிலுள்ள ஓய்வு என்னும் சொல் ஏழாவது நாளுக்கு மட்டும் பொருத்தப்படாமல், எபிரெயர்களால் ஆசரிக்கப்பட்டிருந்த எல்லாப் பரிசுத்தமான இளைப்பாறுதலுடனும் பொருத்தப்பட்டிருந்தது; குறிப்பாக அவர்களுடைய பண்டிகைகளின் ஆரம்பம், முடிவு ஆகியவைகளுடன் பொருத்தப்பட்டிருந்தது…

கொலோ 2:16–ல் ஓய்வுநாள் என்று சரியாகக் கூறப்பட்டிருந்த ஓய்வுநாளைப்பற்றிக் குறிப்பாக அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை. அப்போஸ்தலன், பத்துக் கற்பனைகளில் ஒன்று மனித இனத்தைக் கட்டுப்படுத்தாமல் நின்றுவிட்டது என்று அர்த்தம் கொள்ளும்படி போதித்தான் என்பதற்கு மிகவும் லேசான காரணமுங்கூட இருப்பதில்லை. அவன் சன்மார்க்கப் பிரமாணங்களின்மீதோ பத்துக் கற்பனைகளின்மீதோ தன்னுடைய கண்ணை வைக்காமல், எபிரெயர்களுடைய பண்டிகைகளாக இருந்து, அவர்களுடைய சடங்காச்சாரத்தின் பகுதியாக இருந்து, பொருளாக இருந்து ஆசரிக்கப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையில் உள்ள நாட்களின்மீது தன் கண்ணை வைத்திருந்தான்.

சன்மார்க்கப் பிரமாணத்தின் எந்த பகுதியைப்பற்றியும் – வரப்போகிற நன்மைகளுக்கு நிழலாய் இருக்கிறது என்று கூறமுடியாது. இந்தப் பிரமாணங்கள் அவைகளின் தன்மையிலிருந்து—சன்மார்க்கப் பிரமாணத்தின் தன்மையிலிருந்து—தொடர்ச்சியான—உலகளாவிய பொருத்தலை—நடை முறைப்படுத்துவதை உடையதாக இருக்கிறது.—**கொலோ 2:16,17–ம் மீதான ஆல்பர்ட் பர்னேஸ் அவர்களின் வேதாகம விளக்கவுரை (பிரிஸ்பிட்டேரியன்).**

மோசேயினால் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சமயச் சடங்கில் அல்லது சடங்காச்சாரப்பிரமாணத்தில் அவர்களுடைய பழைய பலிமுறைகள், ஆலய ஆராதனைகள் அனைத்துடனும் சம்பந்தப்பட்ட தடைகள் அனைத்தும் சட்டங்கள் அனைத்தும் அடங்கியிருந்தன. இவைகளை அழிக்கவும் முடிவுக்கு கொண்டுவரவும், முற்றிலுமாக நீக்கவும் உண்மையாகவே நமது கர்த்தர் வந்தார். இதற்கு அப்போஸ்தலர்கள் அனைவரும் சாட்சி பகருகின்றனர். கட்டளைகளால் நமக்கு விரோதமாக இருந்த (இந்த) கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்தார்–(கொலோ 2:14).

ஆனால் பத்துக் கற்பனைகளில் அடங்கியிருக்கும் சன்மார்க்கப் பிரமாணம் தீர்க்கதரிசிகளால் வலிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளைக் கர்த்தர் நீக்கவில்லை. இது ஒருபோதும் முறிக்கப்படமுடியாத ஒரு பிரமாணமாக இருக்கிறது.—**பல சந்தர்ப்பங்களில் செய்த பிரசங்கங்கள், ஜான் வெஸ்லி, 115–வது பிரசங்கம்–மலைப் பிரசங்கம் பற்றிய பிரசங்கம் 2–வது பாகம், முதல் பதிப்பு, பக்கம் 221,222, நியூ யார்க், வாஹ் & மேசன் 1836.**

**5. ரோமர் 14:5,6** புதிய ஏற்பாட்டின் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு ஓய்வுநாளோ, பரிசுத்த நாளோ இல்லை, எல்லா நாட்களும் ஒரேவிதமாக இருக்கின்றன என்று இந்த வசனங்கள் போதிக்கின்றன என்று நம்புகின்றனர்.

**பதில்:** இந்த நம்பிக்கை முற்றிலுமாகத் தவறானது. யோவானால் கர்த்தருடைய நாள் என்று கூறப்பட்டுள்ள ஒரு விசேஷமான நாள் கிறிஸ்தவர் களுக்கு இருக்கிறது என்று வெளி. 1:10–ல் அறிவிக்கப்படுகின்றது.

பத்துக் கற்பனைகளில் காணப்படுகின்ற வாராந்திர ஓய்வுநாளைப்பற்றி ரோமர் 14:5,6 பேசாமல், லேவி. 23–ம் அதிகாரத்தில் விவரிக்கப் பட்டுள்ளபடியான வருடம் முழுவதிலும் சிதறியிருக்கும் யூத சமயச் சடங்காச்சாரிய நாட்களைப்பற்றி பேசுகிறது. அவை கர்த்தருடைய ஓய்வு நாளுடன் தொடர்பின்றி இருக்கிறது (வச. 38).

யூதர்களாக வளர்ந்திருந்து, கிறிஸ்தவர்களாகியிருப்பவர்களுக்கு, அந்த நாட்களை மறப்பது என்பது இயற்கையாகவே மிகவும் கஷ்டமானதாக இருக்கிறது. ஆனால் புறஜாதியிலிருந்து புதிதாக மதம் மாறினவர்கள், அவைகளைப்பற்றி அப்படிப்பட்ட உணர்ச்சி இல்லாதவர்களாக இருக்கின்றனர். இந்த முக்கியமில்லாத காரியங்களில் ஒருவருக்கொருவர் அன்பும் புரிந்துகொள்ளுதலும் உடையவர்களாக இருக்கவேண்டும் என்று பவுல் ஒவ்வொரு கூட்டத்தினரையும் நோக்கிக் கெஞ்சுகிறான்.—**ஜீவனுள்ள வேதாகமம் K.N. டெய்லர்.**

**ரோமர் 14:5 பற்றிய பொழிப்புரை பின்வருமாறு:–**

தேவனை ஆராதிப்பதற்கான விசேஷமான நாட்களாக யூதர்களுடைய பண்டிகை நாட்களை ஆசரிக்கவேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் இந்தச் சிரமங்களுக்கெல்லாம் செல்லுவது தவறும் முட்டாள்தனமுமானது; ஏனெனில் எல்லா நாட்களும் ஒரேவிதமாகத் தேவனுக்குச் சொந்தமானவைகளாக உள்ளன என்று மற்றவர்கள்

நினைக்கின்றனர். இந்த விதமான கேள்விகளில் ஒவ்வொருவரும் தனக்கென்று முடிவு செய்யவேண்டும்.

**கீழ்க்காணும் வேதாகம விளக்கங்களைக் கவனியுங்கள்:**

ரோமர் 14:5, சன்மார்க்கத் தவறாக இருந்த காரியங்களைக் குறிப்பிடாமல், சடங்காச்சாரங்களை ஆசரிப்பதைக் குறிக்கிறது.—**ஆல்பர்ட் பர்னேஸ் வேதாகம விளக்க நூலில் ரோமர் 14:5 பற்றியது (பிரிஸ்பிட்டேரியன்).**

**குறிப்பு:**—ரோமர் 14—ம் அதிகாரத்திற்கான முன்னுரையில், 5,6 வசனங்கள்பற்றிய குறிப்புகளில், யூத உபவாச நாட்களிலுள்ள தனித் தன்மைகளும் ஆசரிப்புக்களும் என்பதுபற்றி ஆல்பர்ட் பர்னேஸ் குறிப்பிடுகிறார்.

சடங்காச்சாரப் பிரமாணத்திற்கு ஏதோ ஒருவிதமான கடமைப்பாட்டின்கீழ் இருப்பதாக எண்ணினவர்கள், ஒரு நாளை மற்றொரு நாளைவிட அதிகமாக மேன்மைப்படுத்தி, பஸ்காப் பண்டிகை, பெந்தெகொஸ்தே, அமாவாசைகள், கூடாராப் பண்டிகை ஆகியவைகளின் நேரங்களுக்கு ஒரு மரியாதை வைத்திருந்தனர்.—**ரோமர் 14:5,6 பற்றி ஒரே புத்தமாக உள்ள மாத்யூ ஹென்ரியின் வேதாகம விளக்க நூல், பிராட் ஓக் பதிப்பு, மார்ஷல் மார்கன் & ஸ்காட் (1970).**

அப்போஸ்தலனின் பேச்சுக்களைக் கேட்டிருந்தவர்களிடம், மறைந்துபோன யூதப் பண்டிகை நாட்களின் மத்தியில், ஏழாம் நாள் ஓய்வுநாளையும் சேர்த்துக் கொண்டிருந்த அர்த்தத்தில் அவன் பேசியிருந்தான் என்று காட்டுவது மிகவும் கடினமானதாக இருந்திருக்கும்.—**ரோமர் 14:6 —ன் மீதான முழு வேதாகம விளக்கம், ஜாமிசன் பாசட் & ப்ரௌண் 1970.**

பஸ்கா பண்டிகை, பெந்தெகொஸ்தே, கூடாரப் பண்டிகைகள் அமாவாசைகள், ஜூபிலி மற்றுமுள்ளவைகளான விசேஷமான யூத அமைப்புகளையும் அவர்களுடைய பண்டிகைகளையும்பற்றிய குறிப்பும் இங்கு செய்யப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் சன்மார்க்கக் கட்டுப்பாடுகள் என்று மதமாற்றமடைந்த யூதன் இன்னும் எண்ணினான். இந்தவிதமாக வளர்க்கப்படாதவனாக இருந்த புறஜாதிக் கிறிஸ்தவனிடம் அப்படிப்பட்ட தவறான எண்ணங்கள் இருக்கவில்லை... மதம் மாறின புறஜாதிக்காரன் ஒவ்வொரு நாளையும் மேன்மைப்படுத்துகிறான். இந்தப் பண்டிகைகள் அவனைக் கட்டுப்படுத்தவில்லையென்று யோசிக்கிறான். நாட்களில் தனித் தன்மை இல்லை; ஓய்வுநாளைப்பற்றிக்கூட இல்லை. இந்த நாள் பரிசுத்தமான நாளாக இருக்கிறது அல்லது இல்லாமலிருக்கிறது என்பதை ஆலோசிப்பதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவன் தன் மனதை இணங்கச்

செய்வதுபோல், சுயாதீனமுள்ளவனாக இருக்கிறான் என்று அந்த வசனம் கூறுவது ஒருபோதும் வேண்டுமென்று செய்யப்படாதது என்று நாம் அதேவிதமாகச் சேர்த்துக்கொள்கிறோம். மேலே உள்ள பண்டிகைகளை ஆசரிப்பதில் உள்ள காரியத்தில் நேர்மையானவனாக அல்லது நேர்மையற்றவனாக இருக்கும் காரியத்தில், அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கடவன்.—**ரோமர் 14:5,6—ன் மீதான ஆதாம் கிளார்க் வேதாகம விளக்க நூல் (மெதடிஸ்ட்).**

ஓய்வுநாள் ஆசரிப்பு ஆசீர்வாதமான ஒன்று என்பதைவிட பிரமாணங்களில் ஒன்று என்று நினைக்கும்படியான வெளிச்சத்தில் காட்டப்பட்டு, ஓய்வுநாளை ஆசரிப்பதுபற்றிய கேள்வியில் நாம் மந்தமானவர்களாக இருக்கும்படி, வேத வாக்கியம் மேற்கோள்காட்டப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இது நிலைநிறுத்தப்படுமானால், மாறுபாடானதாகிவிடக்கூடும் வெளிப்படுத்தலின் ஆவிக்கு தளர்வான (தொய்வு) அருவருப்பானதாக இருக்கிறது. ஒருவன் ஒரு நாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான். வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான் என்னும் ரோமர் 14:5 வசனம் பற்றி பவுலிடமிருந்து புறப்படும் அறிக்கையின்மீது வேற்றுமைமிக்க இந்தக் கோட்பாடு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நமது மொழிபெயர்ப்பாளர்கள் சரியாக—ஓரேவிதமாக—என்னும் சொல்லை இதற்கு முன்னால் அமைத்துச் சேர்த்துவிட்டனர். இந்த முன் அமைத்தல் ஆதியானதாக உள்ள கிரேக்க மொழியில் இல்லை. இது யூதர்ளுடைய பண்டிகைகளைக் குறிப்பதாக இருந்தாகவேண்டும்.—**பல்வேறுபட்ட சபைகளில் உள்ள ஊழியக்காரர்கள் பக்கம் 339,340. ஆசிரியர் ரிச்சர்டு விண்டர் L.L.D., D.D. வெளியீடு தி ரிலிஜீயஸ் ட்ராக்ட் சொசைட்டி 1836, லண்டன்.**

**6. கலா. 4:10,11** இந்த நாட்கள், மாதங்கள், காலங்கள், வருடங்கள் ஆகிய யூத முறைகளுடன் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன என்னும் உண்மை லேவி. 23—ம் அதிகாரத்திலுள்ள சாதாரணமான சடங்காச்சார நாட்களையே காட்டுகின்றன. கலாத்தியர்களுக்கு எழுதின நிருபம் முதலாவதாகச் சடங்காச்சாரப் பிரமாணத்தைப்பற்றிய கேள்வியுடன் குறிப்பாக விருத்தசேதனம் பற்றிய கேள்வியுடன் இடைப்படுகிறது. கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் ஏழாம் நாள்—ஓய்வுநாள் குறிப்பிடப்படவில்லை.

சரியான விதத்தில் கூறப்படுமானால், கலா. 4:10 வசனத்தில் அப்போஸ்தலன் ஒய்வுநாளைக் குறிப்பிடுகிறான் என்று யூகம்செய்வது ஒரு சிறப்பான விளக்கமாக இல்லை; ஏனெனில், அது பத்துக் கற்பனைகளில்

ஒரு பகுதியாக இருந்து, இரட்சகராலும் அப்போஸ்தலர்களாலுங்கூட ஆசரிக்கப்பட்டிருந்தது.—**கலாத்தியர் பார்னேயின் வேதாகம விளக்க நூல். – கால் & இன்ஜ்லிஸ் லண்டன் & எடின்பர்க் பக்கம் 412, கலாத்தியர் 4:10 பற்றியது.**

**குறிப்பு:**– கலா. 4:10,11 குறிப்பிடப்பட்டுள்ள வருடங்கள் ஒய்வு வருடங்களாகவும், யூபிலி வருடங்களாகவும் உள்ளன (யாத். 23:10–11; லேவி. 25:8–12). காலங்கள் (கிரேக்க மொழி ஏற்படுத்தப்பட்ட பருவ காலங்கள்) யூத மத நாட்களில் அமைக்கப்பட்டுள்ள வருடாந்தரப் பண்டிகைகளாக உள்ளன (எண். 28:2). நாட்களும் மதங்களும் சமயச் சடங்காச்சார முறையில் உள்ள ஏழு மாதாந்திர சடங்காச்சார ஓய்வுநாட்களும் அமாவாசைகளும்.

(லேவி. 23–ம் அதிகாரம், எண். 10:10; 28:11–17) உண்மையில் இவைகளனைத்தும் கர்த்தருடைய ஓய்வுநாட்கள் அல்லாதவைகளாக இருந்தன (லேவி. 23:38).

**7.** புதிய ஏற்பாட்டில் ஓய்வுநாள் கட்டளை கொடுக்கப்படவில்லையென்று இந்த மறுப்பு அறிவிக்கிறது.

புதிய ஏற்பாட்டில் இந்தக் கட்டளை திரும்பக் கூறப்படவேண்டிய அவசியம் இல்லையென்று நாம் இதற்குப் பதில் கூறமுடியும். ஒரு உதாரணத்திற்கு மூன்றாவது கற்பனை புதிய ஏற்பாட்டில் திரும்பக்கூறப்படவில்லை. பத்துக் கற்பனைகள் இருந்ததினாலும் கிறிஸ்துவாலும் அப்போஸ்தலர்களாலும் அது தெளிவாகப் போதிக்கப்படுவது தொடர்ந்திருந்ததினாலும் அதைத் (திரும்பக் கூறுவதற்கான) அவசியம் இருக்கவில்லை. (மத். 5:17–19; லூக்கா 16:17; ரோமர் 3:31; 1 கொரி. 7:19; 1 யோவான் 2:4; 1 யோவான் 3:4 மற்றவைகளையும் பார்க்கவும்).

புதிய ஏற்பாடு முழுவதற்கும் ஊடாகப் பத்துக் கற்பனைகள் அனைத்திலும் உண்மையாகவே ஒரு குறிப்பிட்ட சான்றாக ஓய்வுநாள் என்னும் ஒரு கற்பனை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டமுடியும். நமது கர்த்தருடைய வழக்கம் (லூக். 4:16) – ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது; ஒரு சான்றாக உள்ளது; அவருடைய வார்த்தையில் ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது (மாற்கு 2:27). அவரது கட்டளையில் (உத்தரவில்) ஓய்வுநாட்களில் நன்மையான காரியங்களைச்செய்வது பிரமாணத்தின் பிரகாரமானதாக இருக்கிறது.(மத். 12:12; லூக்கா 13:11–17; 14:1–6; யோவான் 5:10–16; 9:13–16).

அதற்கும் மேலாக ஓய்வுநாளில் ஆராதனை செய்வது பவுலின் வழக்கமாக இருந்தது என்று புதிய ஏற்பாட்டில் சான்றாக்கப்பட்டுள்ளது

—(அப். 17:2). ஓர் அஞ்ஞானப் பிரதேசத்தில் அவன் ஓய்வுநாளை ஞாபகத்தில் வைத்திருந்ததும் ஒரு சான்றாக உள்ளது (அப். 16:13). யூதர்களுக்கானாலும் புறஜாதியினருக்கானாலும் பவுல் ஓய்வுநாளில் பிரசங்கம் செய்துகொண்டிருப்பதையுங்கூட நாம் காண்கிறோம் (அப். 13:42,44). படைப்பின் முடிவில் தேவன் ஓய்ந்திருந்தபோது, அவர் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார் என்று நாம் புதிய ஏற்பாட்டில் நினைவூட்டப் பட்டிருக்கிறோம் (எபி. 4:4). மேலும், நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால்—அவருடைய ஆவிக்குரிய இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்களாக இருந்து, தேவன் அவருடைய கிரியைகளிலிருந்து ஓய்ந்திருந்ததைப்போல, நாமும் நமது வேலைகளிலிருந்து ஓய்ந்திருப்போம் (வச. 10). பின்னர் வெளி. 1:10—ல் கர்த்தருடைய நாளைப்பற்றி யோவான் பேசுகிறான். இது வேதாகம காலத்தில் இல்லாததும்—இருக்கமுடியாததுமான—நிச்சயமான—ஒரு புதிய ஏற்பாட்டு நாளை, வேறு எந்த நாளுமாக இராமல் பண்டையதும் நன்கு அறியப்பட்டிருந்ததுமான கர்த்தருடைய ஓய்வுநாளைக் குறிப்பிடுகிறான் (யாத். 20:10; ஏசா. 58:13; புதிய ஏற்பாட்டில் மத். 12:8; மாற்கு 2:28; லூக்கா. 6:5 காண்க).

வேதத்தில் ஓர் எழுத்தின் உறுப்பு அவமாய்ப்போவதைப்பார்க்கிலும் வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும் (லூக். 16:17) என்று இயேசு கூறுகிறார்.

ஞாயிற்றுக்கிழமையை கைக்கொள்ளுவதற்கான எந்த ஒரு கட்டளையும் புதிய ஏற்பாட்டில் நிச்சயமாகவே இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டும்.

**8.** (முதல் **400** வருடங்களில் இருந்த கிறிஸ்தவ எழுத்தாளர்கள்) சபைப் பிதாக்கள் ஞாயிற்றுக்கிழமையைக் கர்த்தருடைய நாள் என்று அறிவிக்கின்றனர் என்று இந்த மறுப்பு அறிவிக்கிறது.

**பதில்:**—இது மிகவும் சரியானது. மரித்தவர்களுக்காகச் செய்யப்படும் ஜெபம், சிலுவையின் அடையாளம், போப்புவின் மிகமேலான அதிகாரம், திருவிருந்தில் உள்ள அப்பத்தையும் திராட்சரசத்தையும் கிறிஸ்துவின் உண்மையான சரீரமாகவும் இரத்தமாகவும் மாற்றுதல், விக்கிரகங்களுக்கு முன் குனிதல், உத்தரிக்கும் ஸ்தலம் பற்றிய கோட்பாடு இன்னும் இவை போன்றவைகளையும் தாங்கும்படி—ஆதரிக்கும்படியுங்கூட சபை பிதாக்கள் பயன்படுத்தப்படலாம். இதன் காரணமாகத்தான் கத்தோலிக்க சபை ஒரு கூட்டமான சபைப் பிதாக்களைப் பயன்படுத்துகின்றது. அப்படியிருந்தபோதிலும் புரொட்டஸ்டாண்டுகள் வேதாகமம் ஒன்றைமட்டுமே நம்புகின்றனர்.

அடிக்கடி சபைப் பிதாக்கள் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து புதிதாக மதம் மாறிவனவர்களாக இருந்து, அவர்களுடைய எழுத்துக்கள் எந்த ஒரு காரியத்திலும் மிகவும் நிச்சயமில்லாத நிலைமையிலிருந்து நம்மிடத்திற்கு வந்திருக்கிறது என்பது ஞாபகத்தில் வைக்கப்படவேண்டும்.

நமது தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதற்குப்பதிலாக மனிதர்களுடைய பாரம்பரியங்களைப் பின்பற்றுவதைப்பற்றி மத். 15:3–9–ல் கிறிஸ்து நம்மை எச்சரிக்கிறார். ★

# 44

# மரித்தவர்களின் நிலை என்ன?

## முதல் பொய்

**ஆதி. 2:17** ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தால் அவர்கள் சாவார்கள் என்று தேவன் கூறினார்.

**குறிப்பு:**– ஆதாம் பாவம்செய்யும் அதே நாளில் அவன் மரிப்பான் என்று இந்த வசனம் கூறுகிறதென்று சில மக்கள் நினைக்கின்றனர். அப்படி யிருந்தபோதிலும், ஆதாம் பாவம்செய்யும் நாளில் பாவத்தின் பலன் உடனே செயல்படத் தொடங்கி, நிச்சயமாக தவிர்க்க முடியாதவிதமான மரணத்திற்கு நடத்தும் என்று எபிரெய வார்த்தைகள் அடையாளப்படுத்துகின்றன. அதன் கனியை புசித்தால், நீங்கள் மரணத்திற்குள் விழுந்து விடுவீர்கள்.— **ஜீவனுள்ள வேதாகமம்.**

**ஆதி. 3:4** ஆதாமும் ஏவாளும் சாகமாட்டார்கள் என்று சாத்தான் கூறினான்–இது முதல் பொய்யாக இருந்தது!

**குறிப்பு:**– அதிகமான சபைகள் சாத்தானின் இந்தப் பொய்யை இன்று பின்பற்றி, உண்மையான நபர்–ஆத்துமா–மரணத்திற்குப் பின்னும் உயிர் வாழுகின்றது என்று போதிக்கிறான். ஆனால் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். உண்மையாகவே ஆதாம் மரித்தான். ஆத்துமா அழியாதது என்று வேதாகமத்தில் எந்த இடத்திலும் கூறப்படவில்லை, அல்லது மரணத்திற்குப்பின் மனிதன் உயிர்வாழ்கிறான் என்றும் கூறப்படவில்லை.

## வேதாகமம் என்ன கூறுகிறது,

**1 தீமோ. 6:15,16** தேவன் ஒருவர்மட்டுமே சாவாமையை உடையவராக இருக்கிறார்.

**யோபு 4:17** அழிவுக்குரிய மனுஷன்.

**பிர. 9:4,6,10** மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்.

**சங். 146:3,4** அந்த நாளில் அவனுடைய யோசனைகள் அழிந்து போகும்.

**சங். 115:17** மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்.

**அப். 2:29,34** "தாவீது பரலோகத்துக்கு எழுந்து போகவில்லையே."

**குறிப்பு:**– மரணத்தில் மனிதன் மிருகங்களைப்பார்க்கிலும் வித்தியாச மானவனல்ல என்று வேதாகமம் கூறுகிறது; ஏனெனில், எல்லாம் ஒரே இடத்திற்குச் செல்லுகின்றன. (பிர. 3:19–21) 21–ம் வசனத்தில் நாம் ஒரு கேள்வியை உடையவர்களாக நாம் இருக்கிறோம். மனிதனுடைய ஆவியும் மிருகங்களின் ஆவியும் வெவ்வேறு இடங்களுக்குச் செல்லுவதில்லை என்பதை ஒவ்வொருவருக்கும் அதிகமாகத் தெளிவுபடுத்துவதற்காக இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. "எல்லாம் ஒரே இடத்திற்குப் போகிறது... எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது (பிர. 3:20); ஆனபடியால், மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையானவன் அல்ல;" விசேஷமான அனுகூலத்தை உடையவனல்ல (வசனம் 19).

## மரித்தவர்கள் எப்பொழுது தங்களுடைய ஜீவனை மறுபடியும் அடைவார்கள்,

**எபி. 11:39,40** கடந்த காலத்திலிருந்த நல்ல மனிதர்களும் ஸ்திரீகளும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலை பெற்றுக் கொள்ளவில்லை (வச. 35); ஏனெனில், அவர்கள் நம்மை யல்லாமல் பூரணமாகமாட்டார்கள். தெளிவான வார்த்தை களில் சொல்வதானால், இயேசுவின் வருகையின்போது, நடைபெறும் உயிர்த்தெழுதலில் நாமனைவரும் ஒன்றாக பூரணராக்கப்பட இருக்கிறோம்.

**யோபு. 14:12** "மனுஷன் படுத்துக்கிடக்கிறான்; வானங்கள் ஒழிந்து போகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை." மனிதன் மரித்தவுடன் பரலோகத்திற்கு எழாமல், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரை காத்திருக்கிறான் (வெளி. 6:14–17 காண்க), யோபு 14:14,15 "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்பொழுது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன். என்னைக் கூப்பிடும்; அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்." அப்படியே மனிதன் மரித்து, இயேசு அவனை அழைக்கும் வரை அவன் நித்திரையில் காத்துக்கொண்டிருக்கிறான்.

**கொலோ. 3:4** “நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.”

**1 கொரி. 15:51–55** “கடைசி எக்காளம் தொனிக்கும்போது ...” நாமெல்லாம் மறுரூபமாக்கப்படுவோம். அந்த நேரத்தில், அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும். இந்த அதிகாரத்தில் உள்ள 23–ம் வசனத்தையும் வாசிக்கவும். பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

**1 தெச. 4:16–18** “கர்த்தர் தாமே... பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.” (கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, மரித்த நீதிமான்கள் உயிர்த்தெழுகின்றனர்).

**பிலிப். 3:20,21** கிறிஸ்துவின் வருகையில், நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

இயேசு வரும்போது, நாம் ஜீவனை உடையவர்களாக இருப்போம் என்று நாம் எவ்விதமாக நிச்சயிக்கலாம்?

**யோவான் 11:25** “என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்” அவர் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாக இருப்பதனால், நாம் இயேசுவை விசுவாசித்தால் மறுபடியும் ஜீவிப்போம். வச.11-14–ல் இயேசு மரணத்தை நித்திரை என்று கூறுகிறார். நித்திரையிலிருந்து லாசருவை எழுப்பின அதேவிதமாக ஒரு நாள், உயிர்த்தெழுதல் நடைபெறும் கடைசி நாளில் நம்மையும் இயேசு எழுப்புவார் (வச. 24).

**1 யோவான் 5:12** “குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்” நாம் ஜீவனை உடையவர்களாக இருப்பதற்கான ஒரே மார்க்கம் கிறிஸ்துவை உடையவர்களாக இருப்பதுதான். ஜீவனைப் பற்றிய ஒரே நம்பிக்கை, நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது. நாம் அவரை நேசித்தால் ஜீவனுடையவர்களாகலாம். அவரில்லாதிருந்தால், நம்மால் ஜீவனைப் பெறமுடியாது.

“மரணம் என்பது கிறிஸ்தவனுக்கு ஒரு நித்திரையாக—விநாடி நேர மவுனமும் இருளுமாக இருக்கிறது. ஜீவன் கிறிஸ்துவில் தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நமது ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, அவருடனே கூட நாமும் மகிமையில் வெளிப்படுவோம்.”—**DA 787.**

“மரித்தோரிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்ததுபோல, அவரில் நித்திரை செய்துகொண்டிருப்பவர்கள் மறுபடியும் எழும்பவேண்டியவர்களாக உள்ளனர். சீஷர்கள் இயேசுவை அறிந்திருப்பதைப்போல, நாமும் நமது நண்பர்களை அறிந்து கொள்ளுவோம். இந்த அழிவுக்குரிய வாழ்க்கையில் அவர்கள் உருவழிந்தவர்களாக, சுகமில்லாதவர்களாக, உருக்குலைந்தவர்களாக இருந்திருக்கலாம். அவர்கள் பூரணமான உடல்நலத்துடனும், இலட்சணத்துடனும் எழுகின்றனர். இருப்பினும் அவர்களுடைய மகிமையடைந்த சரீரத்தில் அவர்களுடைய அடையாளம் பூரணமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது நாம் இப்பொழுது அறியப்பட்டிருப்பதுபோல அறியப்படுவோம்.”—**DA 804.**

“சிறு பிள்ளைகள் தேவதூதர்களால் அவர்களுடைய அன்னைகளின் கரங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றனர். மரணத்தினால் பிரிக்கப்பட்டிருந்த நண்பர்கள் இனி ஒருபோதும் பிரிக்கப்படமுடியாத விதத்தில் ஒன்றுசேருகின்றனர். அவர்கள் ஒன்றுசேர்ந்து மகிழ்ச்சியின் பாடல்களுடன் தேவனுடைய நகரத்தை நோக்கி உயர்ந்து பறந்து செல்லுகின்றனர்.”—**GC 645.** ★

# 45

# ஆத்துமா

வேதாகமத்தில் ஆத்துமா என்றால் அசையக்கூடிய, சிந்திக்கக்கூடிய, நேசிக்கக்கூடிய, வெறுக்கக்கூடிய மற்ற தன்மைகளையுடைய உயிர்– ஜீவன் என்று பொருள்படும். சில சமயங்களில், இது ஆங்கில மொழியில் மிருகஜீவன் என்று கூறப்படுகிறது. அதாவது மனிதனும் மிருகங்களும் உடையவைகளாக உள்ள ஜீவன் என்று கூறப்படுகின்றது.

மரங்கள், புல், மலர்கள் போன்றவை ஆத்துமாக்கள் அல்ல; மிருகங்கள், பறவைகள், மீன்கள், விசேஷமாக மனிதர்கள் ஆகியவை நகரவும் உணரவும்கூடிய தன்மையுள்ள ஜீவனை உடையவைகளாக இருப்பதனால் அவைகள் ஆத்துமாக்கள் என்று கூறப்படுகின்றன. வேதாகமத்திலுள்ள கவிதைகளிலும் மற்ற இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள ஆத்துமா என்னும் சொல் சில சமயங்களில் ஒரு மனிதனிடமுள்ள அன்பு, வெறுப்பு, போற்றுதல் இன்ன பிறவுமான ஆழமான உணர்சிகளுக்கான அர்த்தத்தைக் கொடுக்கின்றன.

**எண். 31:28** மக்களும் விலங்கினங்களுமாகிய இரு வகுப்பினரும் ஆத்துமா எனப்படுகின்றனர்.

**ஆதி. 1:20** இந்த வசனத்தில் உள்ள உயிர் என்னும் சொல் ஆத்துமா என்னும் அர்த்தத்தையுடைய சொல்லிலிருந்துண்டாயிருக்கிறது. இது மீன்களும் கூட ஆத்துமாக்கள் என்று காட்டுகின்றது (வெளி. 16:3; நீதி. 12:10–யும் வாசிக்கவும்).

**எசே. 18:4,20** “பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். ஆத்துமாவால் சாகமுடியும் (அதன் ஜீவன் அதிலிருந்து போய்விடுகிறது).

**யோசு. 10:28, 30,39** யோசுவா அந்தப்பட்டணங்களில் இருந்த ஆத்துமாக்களைக் கொன்றான். அதாவது அங்கு வாழ்ந்திருந்த மக்களைக் கொன்றான்.

**ஆதி. 2:7** சுவாசமும் சரீரமும் ஒன்றுசேர்ந்தபோது, மனிதன் ஒரு ஜீவாத்துமாவானான்; அதாவது, நகர்ந்து செல்லவும், சிந்திக்கவும், அன்பு செலுத்தவும்கூடிய ஒரு ஜீவன் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. மரணத்தில் சுவாசமும் சரீரமும் பிரிக்கப்படுகின்றபோது, அதற்குப்பின் மனிதன் ஓர் ஆத்துமாவாக இருப்பதில்லை. அதற்குப்பின் அவனால் நகரவோ, சிந்திக்கவோ, உணரவோ, வேறு எதையும் செய்யவோ முடியாது. இருந்தபோதிலும், இயேசுவின் வருகையின்போதுள்ள உயிர்த்தெழுதலில் மரித்தவர்கள் மறுபடியும் ஜீவனை உடையவர்களாகி, நகரவும், சிந்திக்கவும், அன்புசெலுத்தவும் தேவனைத் துதிக்கவும் தகுதியுடையவர்களாகி ஆத்துமாக்களாவார்கள்.

**ஏசா. 53:12** அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார்.

**மத். 10:28** தேவனால் ஆத்துமா, சரீரம் ஆகிய இரண்டையும் நரகத்தில் அழிக்கமுடியும். இந்த வசனத்தில் உள்ள ஆத்துமா என்னும் சொல், மனிதனுடைய எதிர்கால வாழ்க்கையைக் குறிக்கிறது. மனிதனால் இதனை எந்த ஒருவரிலிருந்தும் எடுத்துக்கொள்ளமுடியாது; ஆனால், தேவனால் முடியும்.

**குறிப்பு:**– புதிய ஏற்பாட்டிலுள்ள ஆத்துமா என்னும் சொல் சூக்கே என்னும் கிரேக்க மொழியிலிருந்து ஜீவன் என்று மொழிபெயர்க்கப்பட்டு, கிங் ஜேம்ஸ் வெர்சன் என்னும் ஆங்கில வேதாகமத்தில் நாற்பது தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலுள்ள ஆத்துமா என்னும் சொல் நெபேஷ் என்னும் எபிரெய மொழியிலிருந்து ஜீவன் என்று மொழிபெயர்க்கப்பட்டு, நாற்பத்தொன்பது தடவையும், நபர் என்று முப்பது தடவையும், ஆத்துமா என்று நானூற்று இருபத்தெட்டுத் தடவையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆத்துமா அழியாதது என்றும் அல்லது மரணத்திற்குப்பின் உயிர்வாழ்வதில் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றும் எங்கேயும் எப்பொழுதும் (வேதாகமத்தில்) குறிப்பிடப்படவில்லை.

ஆத்துமா அழியாது என்னும் இயல்பை இயற்கையாக உடையது என்னும் அதன் தன்மையைப்பற்றிய கோட்பாட்டை, சந்தேகத்திற்கிடமான வரலாற்றிலிருந்து மேற்கத்திய கிறிஸ்தவ உலகம் அதிகாரப்பூர்வமான முன்னோரிடமிருந்து பெற்றுக் கொண்ட சாசனமாகவும், சந்தேகத்திற்கிடமான மதிப்பிற்கும் அதிகமானதாக மத்திய காலத்தின் முடிவுவரை ஏற்றுக்கொள்ளப் படாமலிருந்தது.—**மரித்தோரின் உயிர்த்தெழுதல் பீன் பென்னட் (செஸ்டர் இங்கிலாந்து) page 26.**

| | | |
|---|---|---|
| **ஆதி. 2:7** | **ஜீவாத்துமா அல்லது ஜீவனுள்ளது** | **—RSV & விரிவாக்கப்பட்ட வேதாகமம்** |
| | **ஜீவனுள்ள மனிதன்** | **—ஜீவனுள்ள வேதாகமம்** |
| | **ஜீவனுள்ள பிராணி** | **—புதிய ஆங்கில வேதாகமம்.** ★ |

# 46

# ஆவி!

Mவி என்னும் சொல் மிக அதிகமான வேறுபட்ட அர்த்தங்களை உடையதாக இருப்பதினால், அது ஒரு கடினமான வார்த்தையாக உள்ளது.

1. **பரிசுத்த ஆவி** — தேவத்துவத்தில் மூன்றாம் நபர்.
2. **பணிவிடை ஆவிகள்** — தேவனுடைய தூதர்கள்.
3. **அசுத்த ஆவிகள்** — சாத்தானின் தூதர்கள்.
4. **ஒரு ஆவி** — மக்களைப் பயமடையச் செய்கின்ற ஏதோ ஒருவிதமான இரகசியமான ஆவி (உண்மையில் சாத்தானின் தூதர்கள்).
5. **ஆவி** — ஆவிக்குரியது, பரிசுத்தமும் நீதியுமானது; "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24); பொருள்: மனிதனைவிட மேலான, பரிசுத்தமும் நீதியுமான தேவன் ஆவிக்குரியவர்.
6. **ஆவி** — ஒரு காரியத்தின் உண்மையான அர்த்தம் அல்லது நோக்கம். உதாரணம் — அந்த விளையாட்டின் ஆவி.
7. **ஆவி** — ஒரு மனிதன் இருக்கும் விதம். உதாரணம்— அவன் ஒரு நல்ல ஆவியை உடையவன். (அன்பும் உதவியும் செய்யக்கூடியவன்—விரைவில் மன்னிக்கின்ற ஒரு மனிதன்) அல்லது அவன் ஒரு கெட்ட ஆவியை உடையவன்—ஓர் அசிங்கமான மனிதன்; அதைப்போலவே ஒரு பேராசையுள்ள ஆவி, ஓர் அன்புள்ள ஆவி, ஒரு பழிவாங்கும் தன்மையுள்ள ஆவி, ஒரு கோபமுள்ள ஆவி, ஓர் அவசரப்படும் ஆவி, அப்படியே அந்த மனிதன் எப்படிப்பட்டவன் என்று விவரிப்பது.

**8. ஆவி** — மனம், உணர்ச்சிகள், கிளர்ச்சிகள். உதாரணம்:—என் ஆவி எனக்குள் கலங்கியிருந்தது. ஜீவன், உயிர்சத்து, சக்தி, நுண்ணறிவு என்றுங்கூட அர்த்தம் கொள்ளலாம்.

**9. ஆவி** — எரியக்கூடிய திரவம். விஸ்கி, ஆல்கஹால், மீத்தேல் கலந்த ஆவி.

**10. ஆவி** — யோபு 27:3–ல் உள்ளதுபோல சுவாசம், பெருங்காற்று, காற்று. தேவனுடைய ஆவி என் நாசியில் இருக்குமட்டும். அதாவது தேவன் அவனுக்குள் கொடுத்த சுவாசம் (மற்ற வேதாகமங்களின் ஓரங்களைக் காணுங்கள்).

**குறிப்பு:**–தேவன் ஆதாமை உண்டுபண்ணினபோது அவர் தம்முடைய ஜீவ சுவாசத்தை அவனுடைய நாசியில் ஊதினார் என்று ஆதி. 2:7–ல் வாசிக்கிறோம். ஆனால் மனிதன் மரிக்கும்போது அதற்குநேரெதிராக நடைபெறுகிறது. ஆவி (அல்லது சுவாசம்) அதைத் தந்த தேவனிடத்திற்குத் திரும்புகிறது–(பிர. 12:7) அல்லது (சங். 104:29) "நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் சாகின்றன." அப்படியிருந்தாலும் உயிர்த்தெழுதலில் மரித்தவர்களுக்குள் சுவாசம் திரும்பிச் செல்லும்படி தேவன் செய்கிறார்–(எசே. 37:5,9,10,14); அப்போது அவைகள் மறுபடியும் ஜீவிக்கின்றன. லூக்கா 23:46–ஐக் கவனியுங்கள். "உம்முடைய கைகளில் என்னுடைய ஆவியை ஒப்புவிக்கிறேன்." தானி. 5: 23 உடன் ஒப்பிடப்பட்டது. தம்முடைய கைகளில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவர். வாழும்படியாக மனிதனுக்கு தேவன் கொடுத்த ஆவி, சுவாசமாயிருக்கிறது; அவை பின்வரும் வசனங்களில் காணப்படுகின்றன:

| | **ஜேம்ஸ் அரசனின் மொழிபெயர்ப்பில்:** | **மற்றும் சில மொழிபெயர்ப்புகளில்:** |
|---|---|---|
| **யோபு 14:10** | ★ஆவியை விட்டார். | ★ கடைசி மூச்சை விடுகிறார். RSV, மொப்பட். |
| **யோபு 27:3** | ★ஆவி. | ★ சுவாசம் NEB, LIVING BIBLE |
| **எசே. 37:14** | ★ஆவி. | ★ சுவாசம் NEB, கீழ்க் குறிப்பு |
| **மத்தேயு 27:50** | ★ஆவியைவிட்டார். | ★ கடைசி சுவாசத்தை விட்டார். NEB, GOOD NEWS FOR MODERN MAN. |

| | | |
|---|---|---|
| **மாற்கு 15:37** | ★ஜீவனை விட்டார். | ★ கடைசி மூச்சை விட்டார். RSV, மரித்தார். NEB, PHILIPS GOOD NEWS. |
| **யோவான் 19:30** | ★ஆவியை ஒப்புக் கொடுத்தார். | ★ அவருடைய கடைசி சுவாசத்தை வெளியில் விட்டார். NEB, (குறிப்பு:மரித்தார்-பிலிப்ஸ் GOOD NEWS) |
| **யாக். 2:26** | ★ஆவியில்லாதது. | ★ சுவாசம் இல்லாமலானபோது, NEB. |

**குறிப்பு:**—புதிய ஏற்பாட்டில் உள்ள "ஆவி என்னும் சொல் நாமா" என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து வந்திருக்கிறது. அதிலிருந்து நாம் நாமேடிக் காற்றின் அழுத்தத்தினால் இயக்கப்படும் பொருள்கள் என்று அர்த்தம் தரும் ஆங்கில வார்த்தையை அடைந்துகொள்கிறோம்.

பழைய ஏற்பாட்டில் உள்ள ஆவி என்னும் சொல் எபிரெய வார்த்தையான ரூகா, காற்று என்று மொழிபெயர்க்கப்பட்டு, **92** தடவைகள் பயன்படுத்தப்பட்டன.

| | |
|---|---|
| **காற்று** | **— 1;** |
| **தொனித்தல்** | **— 4;** |
| **சுவாசம்** | **— 28;** |
| **புயல்** | **— 1;** |
| **காற்றான** | **— 1;** |
| **குளிர்ச்சியான** | **— 1;** |
| **வாசனை** | **— 8;** |
| **புயல்காற்று** | **— 1;** |
| **ஆவி** | **— 240** |

தடவைகள் ஜேம்ஸ் அரசன் வாசகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மனிதனின் ஆவி அழியாதது என்றோ, அல்லது மரணத்துக்குப்பின் ஒரு தனிப் பொருளாக உயிர்வாழ்வது என்றோ எங்கும் விவரிக்கப்படவில்லை. இருந்தபோதிலும் கிறிஸ்து திரும்பிவரும்போது, அவர் மரித்தவர்களுக்கு மறுபடியும் சுவாசத்தைக் கொடுக்கும்போது, அவர்கள் மீண்டும் ஒரு தடவை வாழுகின்றனர். ★

# 47

# மரித்தவர்களின் நிலையைப்பற்றிய மற்ற அறிஞர்களின் அறிக்கைகள்!

Mத்துமா அல்லது ஆவி தன்னில் தானே அழியாமையை கொண்டதல்ல என்றும், கிறிஸ்து இல்லாமல் மனிதனுக்கு ஜீவன் இல்லை என்றும் வேதாகமம் போதிக்கிறதை ஆதரிக்கின்ற அநேக மாபெரும் கிறிஸ்தவ தலைவர்களும் சீர்திருத்தவாதிகளும் அல்லது இரத்தசாட்சிகளும் கடந்த காலத்தில் இருந்தார்கள் என்பதையும், நிகழ்காலத்திலும் அநேக கிறிஸ்தவ தலைவர்கள் இருக்கின்றனர் என்பதையும் அறிவதில் சில ஜனங்கள் ஆச்சரியமடைகின்றனர். மரணம் என்றால் மரணம் தான் (ஒரு நித்திரை); ஜீவனைக் கொடுக்கக்கூடிய ஒரே ஒருவரான இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், நடைபெறும் உயிர்த்தெழுதல்வரை இந்த நித்திரை தொடரும். ஆத்துமா அழியாது என்னும் எண்ணம் பழைய கிரேக்க அஞ்ஞான மார்க்கத்திலிருந்து சபைக்குள் வந்தது என்றும் அதை வேதாகமத்தில் காணமுடியாது என்றும் அநேக மூதறிஞர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். இந்த வேதாகம சத்தியத்தை நம்பி அல்லது ஆதரித்த நூற்றுக்கணக்கான பிரபல கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் சீர்திருத்தவாதிகளுடையஇந்தப் பொருள்பற்றிய கருத்துக்களின் சாராம்சங்கள்:

**மார்டின் லூத்தர் (1483–1546):** “கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரை, மரித்தவர்கள் நித்திரை செய்பவர்களாக, சுயநினைவற்றவர்களாக இருக்கின்றனர் என்று பொதுவாகப் போதித்தார். ஆத்துமா அழியாது என்னும் எண்ணம் போப்பு மார்க்கத்தின் அதிகாரத் தோரணைகள்மிக்க சாணக்குன்றிலிருந்துண்டான இயற்கையாக இல்லாத கோட்பாடுகளில் ஒன்றாக இருக்கிறது.”

போப்பு மார்க்கத்தின் பல தவறுகளை தாக்குவதில் லூத்தர்: “ஆத்துமா என்பது மனித சரீரத்தில் ஒரு உருவம் கொண்டது; போப்பு உலகத்தின் பேரரசன், பரலோகத்தின் அரசன், பூமியின் தெய்வம், ஆத்துமா அழியாதது என்பவை போன்ற ரோமன் கத்தோலிக்கச் சாணக்குன்றிலிருந்துண்டான முடிவில்லாத விகாரமான போதனைகள்...”—**ஆதாரம் – அசர்சியோ**

**ஓம்நியம் ஆர்டிக் குலோரியம் N. லுதரி பெர்புல்லம் லியோனிஸ் நோவிஸ் ஆமம் டம்னட்டோரம் அவரது எழுத்துக்களில் உள்ள 27 வது கட்டுரை, பாகம் 7 (விமர்– ஹெர்மான் போல்ஹாஸ் நாச் போல்ஜெர் 1897) பக்கம் 131,132.**

“மரித்தவர்கள் நாட்களையும் வருடங்களையும் எண்ணாமல் (கணக்கிடாமல்) அங்கே படுத்திருக்கின்றனர்; ஆனால், அவர்கள் எழுப்பப்படும் போது ஒரு நிமிடங்கூட நித்திரை செய்யவில்லை என்பதுபோல அவர்களுக்குத் தோன்றும்.”—**பிரசங்கி என்னப்படும் சாலமோனின் புத்தகம் பற்றிய ஒரு விளக்கம் மார்டின் லூத்தர் 1573, பக்கம் 151.**

மரணத்தை நிந்திக்கவும், அதனை மிகவும் ஆழ்ந்த—பலமிக்க—இனிமையான உறக்கம் என்று கருதவும், கல்லறை என்பது இளைப்பாறுகின்ற ஒரு கட்டில் என்பதைத்தவிர வேறில்லை என்று கருதவும் கிறிஸ்தவர்களாகிய நாம் நாமாகப் பயிற்சியடைந்து பழக்கப்பட்டவர்களாகவேண்டும். நமது சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்–யோவான் 11:11. இந்தச் சிறு பெண் மரிக்கவில்லை–மத். 9:24 என்று அவர் இதை சாட்சியாகக் கூறுவதைப்போல, மெய்யாகவே இது தேவனுக்குமுன் உண்மையாக இருக்கிறது.—**மரண ஆராதனையின்போது பயன்படுத்துவதற்கான லத்தீன், ஜெர்மன் மொழிகளிலான கிறிஸ்தவ பாடல். மார்டின் லூத்தர் 1542. லூத்தரின் எழுத்துகள் என்னும் புத்தகம் (1932), ஆறாம் பாகம், பக்கம் 287,288.**

இவ்வாறாக, மரணத்துக்குப்பின் ஆத்துமா அதன் படுக்கையறைக்குச் செல்லுகிறது. அது நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது, அதன் உறக்கத்தை அது உணர்வதில்லை. அது ஒரு நித்திரை—ஓர் இளைப்பாறுதல்—ஒரு சமாதானம் என்று தேவன் எதைக் கூறுகிறாரோ அந்தச் சரீரப் பிரகாரமான நித்திரை என்னும் உதாரணத்துடன் நமக்கு நாமே திருப்தியடைந்துகொள்கிறோம். தனது அயலானின் வீட்டில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை உறங்கிகொண்டிருக்கிறவன் இயற்கையாகவே அறிவதில்லை. அப்படியிருந்தபோதிலும், வாழ்க்கையின் இயற்கையான தன்மைக்கு எதிராக தன்னுடைய உறக்கத்தில் அவன் சுயநினைவற்றவனாக இருந்தபோதிலும், அவன் இன்னும் உயிருடன்தான் இருக்கிறான். இதேவிதமாகத்தான் மிகச் சரியாக அந்த வாழ்க்கையிலும் நடைபெறும். ஆனால் அது வேறொரு மிக நல்லவிதமானதாக இருக்கும்.” **—ஆஸ்லிகூங் டெசர்ஸ்டென் பூச்சஸ் போஸ் சிரி.ஃ.பென், முதல் பாகம் கோல்ஸ் 1759–1760—மார்டின் லூத்தர்.**

“அவருடைய அருமையான பிள்ளைகள் அனைவருடனுங்கூட ஒன்றாகச் சேர்ந்து அவர் நம்மை அழைத்து எழுப்புகின்ற நேரம்வரை … கிறிஸ்துவில்… உள்ள மரணம் ஒரு கட்டிலின்மீது மிக நன்றாக இனிமையாக, மென்மையாக, சுருக்கமாகச் செய்யும் நித்திரையாக இருக்கும். நாம் அதனை நித்திரை என்று கூறுவதனால் அதிலேயே தங்கியிருக்கமாட்டோம் என்பதை அறிந்திருப்பதுடன், மறுபடியும் வாழ்வதெற்கென்று எழுப்பப்படுவோம் என்பதையும் நாம் அறிவோம். நாம் உறங்குகின்ற அந்த நேரம் நாம் இப்போதுதான் நித்திரைக்குள் விழுந்தோம் என்பதைவிட அதிகமான நேரமாகக் காணப்படமாட்டாது. ஆகையால், மரணத்தின் நேரத்தில் நாம் ஆச்சரியமடைந்தவர்களாகவும் அபாய எச்சரிப்படைந்தவர்களாகவும் இருந்திருந்தோமே என்று நம்மைநாமே கண்டனம் செய்பவர்களாக இருந்து, நமது கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவை மேகங்களின்மீது சந்திப்பதற்காகத் திடீரென்று உயிருடன் கல்லறைக்கு வெளியே வருவோம்.

பரிசுத்தவான்களின் மரணத்தைப்பற்றி பேசும் வேதவாக்கியங்கள், அவர்கள் நித்திரையில் வீழ்ந்து, அவர்களுடைய பிதாக்களுடன் ஒன்று சேர்க்கப்பட்டு, அவர்களுக்குமுன் மரித்திருந்த பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக்கொண்டிருந்தனர் என்று கூறுகின்ற வேதவாக்கியங்கள் எல்லா இடங்களிலும் ஆறுதலைக் கொடுப்பதாக இருக்கிறது.”—**லூத்தரின் இறையியல் பற்றிய ஆழமான ஓர் ஆராய்ச்சி மார்டின் லூத்தர். பதிப்பாசிரியர்—ஹக் தாம்சன் கெர் ஜுனியர், பக்கம் 242**.

“வேதவாக்கியத்தை அஸ்திபாரமாகவைத்து, ஆத்துமாவின் நித்திரை என்னும் கோட்பாட்டை வலியுறுத்தி, அதன்பின் உத்தரிக்கும் ஸ்தலம் என்பதும் பரிசுத்தவான்களுக்கு ஆராதனைசெய்வது என்பதும் தவறானது என்பதை எடுத்துக்காட்டி, அவருடைய வாழ்க்கையின் கடைசி விநாடிவரை அந்த நம்பிக்கையில் லூத்தர் தொடர்ந்தார்.”—**ஓர் இடைநிலை—உத்தரிக்கும் ஸ்தலம் பற்றிய எதிர்வாதம்பற்றிய சுருக்கமான வரலாற்றுப் பார்வை.1765 பக். 14. ∴பிரான்ஸிஸ் நப்லாக் பர்னி, தலைமை டீக்கன்.**

“உயிர்த்தெழுதலைப்பற்றிய பெரும் வற்புறுத்தலுடன் லூத்தர் நித்திரையைப்பற்றிய வேதாகம உருவகத்தில் கருத்துச் செலுத்துவதில் முதற்கவனம் செலுத்தினார் ஏனெனில், நித்திரையில் விழும் ஒருவர் அவருக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது என்பதை அறியாதவராக விழித்தெழும் போது, எதிர்பாராதவிதமாக காலைப்பொழுதில் விழிப்பதுபோல நாம் மரணத்துக்கும் அதற்கு ஊடாக எவ்விதமாக வந்திருக்கிறோம் என்பதை அறியாதவர்களாக, கடைசி நாளில் திடீரென்று எழுவோம். அவர் வந்து அந்தச் சிறிய கல்லறையைத் தட்டி, டாக்டர் மார்டின் அவர்களே எழுந்திருங்கள் என்று

கூறும்வரை நாம் நித்திரை செய்துகொண்டிருப்போம். அப்போது நான் ஒரு விநாடியில் எழுந்து, என்றென்றைக்கும் அவருடன் இருப்பதில் மகிழ்ச்சி உள்ளவனாக இருப்பேன்.''—**கிறிஸ்தவ நம்பிக்கை, பக்கம் 37, முனைவர் T.A. கன்டோனென் (லூத்தரன் அறிஞர்) குறிப்பு –மரணம் என்பது ஒரு நித்திரை என்று 125 தடவைகள் லூத்தர் தமது எழுத்துக்களில் நேரடியான விதமாகக் குறிப்பிடுகிறார்.**

**வில்லியம் திண்டேல் (1484–1536),** சீர்திருத்தவாதி, வேதாகம மொழிபெயர்ப்பாளர், இரத்தசாட்சி—''உயிர்த்தெழுதல்வரை ஜீவன் இல்லையென்று பலமாகப் போதித்தார்.''

**ஜார்ஜ் விஷார்ட் (1500–1546)** லாட்டிமர் என்பவரின் நண்பர், ஜான் நாக்ஸ் என்பவருக்கு ஆசிரியர், ஒரு இரத்தசாட்சி—நியாயத்தீர்ப்பின் நாள்வரை அனைவரும் நித்திரைசெய்கின்றனர் என்றும், கிறிஸ்துவின் வருகைவரை அழியாமை அருளப்படுவதில்லை என்றும் போதித்தார்.

**ஜான் மில்டன் (1608–1674),** பரிசுத்த கவிஞர்களில் மிகப் பெரியவர். க்ரோம்வெல் என்பவருக்குச் செயலாளர்:—''நியாயத்தீர்ப்பின் நாள்வரை கல்லறை (சரீரம், ஆத்துமா) ஆகிய எல்லாவற்றிற்கும் பொதுவான பாதுகாவலனாக உள்ளது.''

**டாக்டர் எட்வர்ட் ஒயிட் (1819–1887)** காங்கிரகேஷனல் ஐக்கியத்தின் தலைவர்:—கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரை அழியாமை இல்லையென்று ஏறத்தாழ **40** வருடங்கள் அவர் போதித்தார். நித்திய தண்டனை (சித்திரவதை) என்பது… வேதாகமத்தின் ஒவ்வொரு வரிக்கும் எதிரானது என்று எப்போதையும்விட மிக உறுதியாக நான் நம்புகிறேன் என்றும் கூறினார்.

**டாக்டர் ராபர்ட் W. டெல் (1829–1895)** காங்கிரகேஷனலிஸ்ட் என்னும் பத்திரிக்கையின் ஆசிரியர்; இங்கிலாந்து, வேல்ஸ் ஆகியவைகளின் காங்கிரகேஷனல் யூனியன் பெரும் தலைவர்; உலகளாவிய முதல் காங்கிரகேஷனல் (ஆலோசனைச் சங்கத்தின்) சபைகளின் தலைவர் **(1891). 1874**–ல் அவர் காங்கிரகேஷனல் யூனியனுக்கு முன்பாக, கிறிஸ்துவில்மட்டுமே ஜீவன் இருக்கிறது என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்னும் அவருடைய அறிக்கையை வாசித்து அறிவித்து, கிறிஸ்துவின் பாவ நிவாரணத்தையும் மற்றும் வேதாகமத்தின் மையத்தில் உள்ள பெரும் சத்தியங்களையும்—இந்த சத்தியம் மிகத் தெளிவாகச் சித்தரித்துக்காட்டியிருக்கிறது என்று மிகவும் வலியுறுத்தி எழுதினார்.

**டீன் ப்ரட்ரிக் W ஃபாரர் (1831–1903)** வெஸ்மினிஸ்டர் குருமார்களின் மடாலயச் சட்ட ஆலோசகர்; காண்டர்பரியின் டீன்:—நித்திய ஆக்கினையைப்பற்றிப் போதிக்கின்ற ஒரு வேதவாக்கியத்தைக்கூட வேதவாக்கியம் முழுவதிலிருந்தும் அவரால் காணமுடியவில்லையென்று அவர் அறிவித்தார்.

**ஹெர்மன் ஓல்ஸ்ஹுஸென் (1796–1839),** லூத்தரன் இறையியல் பேராசிரியர், கோனிஸ்பெர்க்:—ஆத்துமா அழியாதது என்னும் கோட்பாடும் அதைப்போன்ற பெயரும் வேதாகமம் முழுவதிலும் முற்றிலுமாக அறியப் படாததாக இருக்கிறது என்றார்.

**வில்லியம்க்ளட்ஸ்டன் (1809–1898),** பிரிட்டனின் பிரதம இறையியல் வல்லுநர்:—“ஆத்துமா இயற்கையாகவே அழியாதது என்னும் ஒரு கோட்பாடு வேத வாக்கியத்தால் முற்றிலுமாக அறியப்படாததாக இருக்கிறது.”

**டாக்டர் J. அகர்பீட் (1840–1924),** வெஸ்லியன் பேராசிரியர்:— ஆத்துமா அழியாதது என்பதற்கான மறுப்பு என்னும் புத்தகத்தை அவர் எழுதினார். கிரேக்கத் தத்துவத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு கோட்பாட்டுக்கு எதிரான மறுப்பு... (இந்தக் கோட்பாடு) தேவனிடத்திலிருந்து வருகிறது என்பவர்கள் அதற்கான தேவனுடைய அதிகாரத்தை மெய்ப்பிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு சான்றினை இந்த விஷயத்தில் நான் ஒருபோதும் காணாதவனாக இருக்கிறேன் என்று தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**டாக்டர் வெய்மவுத் (1822–1902),** வேதாகம மொழிபெயர்ப்பாளர்:—ஆத்துமாவின் அழியாத தன்மை, நித்திய ஆக்கினை ஆகிய கோட்பாடு களுக்கெதிராக அவர் பலமாக எழுதினார்.

“அழிப்பது அல்லது அழித்தல் என்பதை அடையாளப்படுத்திக் காட்டுகின்ற ஐந்து அல்லது ஆறு பலமிக்க வார்த்தைகள் கிரேக்க மொழியில் இருக்கும்போது, அவைகளை மொத்தமாக தவறாக எடுத்துக்காட்டுவதும், அவைகளை நித்தியமான—துர்ப்பாக்கியமுமான உயிருடனிருத்தல் என்று விளக்குவதையும் ஏற்றுக்கொள்ள என் மனது ஏற்கமறுக்கிறது; இது கருப்பை வெள்ளையென்று மொழிபெயர்க்கும் தவறு போன்றதைத்தவிர வேறில்லை” என்றும் குறிப்பிட்டார்.

**டாக்டர் லைமன் அப்பட் (1835–1922),** கிறிஸ்டியன் யூனியன், வெளிப்பார்வை என்னும் பத்திரிக்கைகளின் ஆசிரியர், காங்கிரகேஷ னலிஸ்ட் சபையின் போதகர்:—“சாகாத புழு இன்னோம் பள்ளத்தாக்கில் இருந்த பிரேதங்களைப் பட்சித்துக்கொண்டிருந்தது. அது அதற்குச் சமமான சித்திரவதையின் தெளிவான அடையாளமாக இல்லாமல்—அழிவாக

இருக்கிறது. மரணம்பற்றிய காரியத்தில் அநேகர் தவறான தத்துவத்தை உடையவர்களாக உள்ளனர். இயற்கையாகவே மனிதன் அழியாமையை உடையவனாக இருக்கிறான் என்பது அந்தத் தத்துவமாக இருக்கிறது... நமது கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின்மூலமாக ஜீவனையும் அழியாமையையும் தெரிந்துகொள்பவர்களின்மீது வேத வாக்கியங்களின் போதனையின்படி அழியாமை அருளப்பட்டிருக்கிறது என்னும் மன உணர்த்துதல் எனக்குள் வளர்ந்துகொண்டிருக்கிறது'' என்று கூறினார்.

**டாக்டர் எட்வர்ட் பீச்சர் (1803–1895),** காங்கிரகேஷனல் சபை இறையியல் வல்லுநர், இல்லியநாய்ஸ் கல்லூரித் தலைவர்:—ஆத்துமாவின் இயற்கையான பிரிக்கமுடியாத அழியாமையை வேதாகமம் அழுத்தமாக மறுக்கிறது என்கிறார்.

**டாக்டர் ஹூப்ரான்ஸ் டெயிட்டிஸ்க் (1813–1890),** லூத்தரன். எபிரெய மொழி அறிஞர், ராஸ்டாக், ஏர்லான்ஜென் லிப்சிக் கல்லூரிகளின் பேராசிரியர். தன்னில்தானே அழியாமையை உடையது என்னும் அர்த்தமுள்ள எதுவும் வேதாகமம் முழுவதிலும் இல்லை. வேதாகமத்தின் பார்வையில் ஆத்துமாவை இறக்கச்செய்யமுடியும் அது அழியும் தன்மையை உடையது என்று குறிப்பிடுகிறார்

**J.N. பெட்டிஞ்டிசல் (1815–1887),** காங்கிரகேஷனல் சபையைச் சேர்ந்தவர், காங்கிரகேஷனல் சபையின் அயல்நாட்டு ஊழிய போர்டின் மாவட்டச் செயலாளர்:—பிளேட்டோவின் தத்துவத்தின் செல்வாக்கிற்கு சபை இணங்கும் வரை, நித்திய ஆக்கினை என்னும் பிடிவாதமான கோட்பாடு சபைக்குள் நுழையவில்லை என்ற தனது கண்டுபிடிப்பை வெளியிட்டார்.

**டாக்டர் ஜார்ஜ் தன பூட்மான் (1828–1903),** பிலடெல்பியாவின் பாப்டிஸ்ட சபையின் முதல் போதகர், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ சம்பிரதாயங்களின் பூட்மான் அமைப்பு என்பதை ஏற்படுத்தினார். இவர்: ''மனிதனின் இயற்கையான அழியாமை என்னும் கோட்பாட்டைப் பரிசுத்த வேத வாக்கியத்தின் ஒரு வாசகமுங்கூடப் போதிப்பதில்லை'' என்று கூறியுள்ளார்.

**டாக்டர் வில்லியம் டெம்பில் (1881–1944),** கான்டர்பெரியின் தலைமைப் பேராயர், பிரிட்டனின் தலைமைப் பேராயர்:—''இயல்பாகவோ உரிமையினாலோ மனிதன் அழியாமையை உடையவன் அல்ல; ஆயினும் இழக்கப்பட்டுப்போனவர்களின் முடிவில்லாத ஆக்கினையைப்பற்றிப் பேசும் அநேக வாசகங்கள் இருப்பதில்லையா? இல்லை, எனது அறிவுக்கு எட்டியவரை ஒன்றுமேயில்லை. நித்திய அழிவு என்பது முடிவில்லாத

ஆக்கினையாக இல்லாமலிருந்தாலும், அது நித்தியமான ஆக்கினையாக உள்ளது. (இயற்கையும் மனிதனும் தேவனும் என்பதிலிருந்து). நித்திய ஆக்கினை என்பது மொத்தமாக நீக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் நம்பிக்கையுடன் கூறலாம். மனிதர்கள் கிரேக்கர்களிடமிருந்துள்ள வேதாகம ஆதாரம் இல்லாத தனிப்பட்ட ஆத்துமாவின் இயற்கையான அழியாமைப்பற்றிய யூகத்தை இறக்குமதி செய்யாமலிருந்து, அதற்குபின் அதைத் தங்களுடைய மனங்களில் உள்ளவர்களாகப் புதிய ஏற்பாட்டை வாசித்தால், அவர்கள் அதிலிருந்து நித்திய ஆக்கினை என்னும் ஒரு நம்பிக்கையை பெறாமல், நித்திய நாசம் (அழிவு) என்பதைப் பெற்றி ருப்பார்கள். அந்த (அயோநியன்) நித்தியமானது என்று கூறப்படுவது அந்த ஆக்கினையாக உள்ளது. அதற்குள் போடப்படும் ஜீவன் அல்ல'' (கிறிஸ்தவ விசுவாசமும் வாழ்க்கையும் என்பதிலிருந்து) என்றார்.

**டாக்டர் கெப்பான்ட்ஸ் வான்டெர்லியு (1890–1950),** லூதரன் அல்லது குரோனிஞ்சன் பல்கலைக்கழகப் பேராசிரியர்:—''சரீரம் சாகின்றது... ஆவியும், நான் இருக்கிறேன் என்று கூறும் ஆத்துமாவுங்கூட அழியாது. ஆனால், மனிதனின் முழு ஜீவனும் தேவனால் புதுப்பிக்கப்படும். பிந்தின நாளில் தேவன் என்னை எழுப்புவார். அழியாத ஆத்துமா என்பது கற்பனைகள். பழைய தியான நூல்களும் சபைப் பாடல்களும் அதை நிறைய உடையவைகளாக உள்ளன. இப்பொழுதுங்கூட துக்க வீட்டில் உள்ள மக்களும் கல்லறைத் தோட்டத்தில் உள்ளவர்களும் அதே ஆதாரத்திலிருந்து ஆறுதல்செய்யப்படுகின்றனர் இருந்தபோதிலும், இந்த எடுத்துகாட்டுதல்கள் எல்லாம் எந்த விதத்திலும் கிறிஸ்தவத் தன்மை உடையதாக இராமல், கலப்படமற்ற கிரேக்கத் தத்துவமாக—கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிரான கொள்கையாக இருக்கிறது''

**டாக்டர் ஆப்ரெ விினி (1900)** காங்கிரகேஷனல் என்னும் காலாண்டுப் பத்திரிக்கையின் ஆசிரியர், யார்க்ஸையர் ஐக்கிய சுதந்திர கல்லூரிப் பேராசிரியர்:—''ஆவியின் இயற்கையான அழியாமை என்பது, ஒரு கிறிஸ்தவ எண்ணமாக இருப்பதைவிட, கிரேக்க எண்ணமாகவே உள்ளது.''

**டாக்டர் மார்டின் J.** ஹெய்நெக்கன் பேராசிரியர், முறைப்படியான இறையியல். லூத்தரன் இறையியல் செமினரி பிலதெல்பியா:—ஆத்துமா என்பது சரீரத்திலிருந்து தெளிவான விதத்தில் வேறுபாடு உடையது என்னும் எண்ணத்தை (யோசனையை) அவர் பலமாகத் தாக்குகிறார். (உதாரணம் அவருடைய அடிப்படைக் கிறிஸ்தவப் போதனைகள்).

''எந்த ஒரு காரணத்தைக்கொண்டும் கிறிஸ்தவ நம்பிக்கை என்பது ஆத்துமா அழியாதது என்னும் நம்பிக்கையுடன் அடையாளப்படுத்தப்

படக்கூடாததாக இருக்கிறது. மரணத்தில் ஆத்துமா சரீரத்தை விட்டுப்பிரிகிறது என்று மனிதர்கள் யூகம் செய்கின்றனர்; ஆனால், மரிப்பது என்பது இரவில் படுக்கைக்குச் சென்று காலையில் எழுப்பப்படுவதிலிருந்து வித்தியாசமானதல்ல''—**டாக்டர் எமில் ப்ரூன்னர் (1889),** பேராசிரியர், முறைப்படியாகவும் நடைமுறையாகவும் உள்ள இறையியல். சூரிப் பல்கலைக்கழகம். பிரின்ஸ்டன், இன்டர்நேஷனல் பல்கலைக்கழகம், டோக்கியோ ஆகியவைகளில் விருந்தினரான பேராசிரியர், நித்திய நம்பிக்கை என்பதிலிருந்து:–

''மேற்கத்திய மனிதனின் சிந்தனைக்குள் ஆத்துமா அழியாதது என்னும் பிளாட்டோனியப் போதனை மிக ஆழமாக நுழைந்துவிட்டது. அது கிறிஸ்தவ இறையியலிலும் சபைப் போதனைகளிலும் சுவைத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, கி.பி.**1512**–ல் நடந்த லேட்டரன் ஆலோசனைச் சங்கத்தில் ஒரு பிடிவாதமான கோட்பாடாக அறிவிக்கப்பட்டது; ஆனால், மரணம் என்னும் பிரச்சினையின் இந்தப் பரிகாரம் கிறிஸ்தவச் சிந்தனையுடன் ஒப்புரவாகமுடியாத விதத்தில் நேர் எதிரானதாக நின்று முற்றிலுமாகக் கிறிஸ்தவப் போதனைக்கு அந்நியமானதாகவும் நிற்கிறது. நமது ஆத்துமா தெய்வீகமானதாகவும் முற்றுமுடிய அடிப்படையானதாகவும் இருப்பதனால், ஆத்துமா அழிக்க முடியாதது, மனிதர்களாகிய நாம் அழியாமையை உடையவர்களாக இருக்கிறோம் என்னும் அபிப்பிராயம், தேவனையும் மனிதனையும்பற்றிய வேதாகமப் பார்வையுடன் ஒப்புரவாக முடியாததாக இருக்கிறது. அழியாமையைப்பற்றியுள்ள தத்துவஞான நம்பிக்கை, அதன் தெய்வீக ஆக்கியோனின் வார்த்தையை திரும்பவும் உண்டுபண்ணுகின்றதும், தவறாகக் கூறுவதுமான ஒரு எதிரொலியைப்போல் இருக்கிறது. பாவத்தின் மூலமாக அவனுடைய ஆதியாக இருந்த நிலையின் உண்மையான இழப்பை அது கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் இருப்பதனால், அது தவறாக இருக்கிறது. ஆதியில் லூசிபர் காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேரூபாக இருக்கும்படி வைக்கப்பட்டிருந்த தன்மையைப் பாவம் மாற்றினதல்லவா?''

**டாக்டர் ரெயின்கோல்ட் நிபுர் (1892),** யூனியன் இறையியல் செமினரி யில் பேராசிரியர், மனிதனின் இயல்பும் விதியும் என்னும் புத்தகம் (ஸ்கிரிப்னர்ஸ்) **1955:–**

ஓரிடிகூன் என்னும் இறையியல் வல்லுனரின் பிளாட்டோனியக் கொள்கை மனிதனின் ஐக்கியம்பற்றிய வேதாகம அர்த்தத்தை முழுவதுமாக அழிக்கிறது… அறிவுக்குப் பொருத்தமானதுபோல் தோன்றுகின்ற அல்லது தோன்றாத ஆத்துமாவின் அழியாமை என்பதைப்பற்றிய சான்றுகள் யாவும்

வாழ்க்கையைப் பூர்த்திசெய்யும்படி மனித மனதின்மேல் ஆதிக்கம்செய்யவும் கட்டுப்படுத்தவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் ஒரு பகுதியாக உள்ளது. மனிதனிலும் அவனுடைய வரலாற்றிலும் உள்ள ஏதோ ஒரு வல்லமையினால் அல்லது பிரிக்கமுடியாத தகுதியினால், அறிந்துகொள்ளவும் வாழ்க்கையின் நிறைவைச் செய்துமுடிக்கவும் வகைதேடுகின்ற மாற்றுக்கோட்பாடுகளைவிட உயிர்த்தெழுதலில் வாழ்க்கையும் வரலாறும் பூர்த்தியடையும் என்னும் கிறிஸ்தவ நம்பிக்கை குறைந்த அளவில் அறிவுக்குப் பொருந்தாததாக இருக்கிறது.

**டாக்டர் T.A. கன்டோனன் (1900),** லூத்தரன், பேராசிரியர் ஹம்மா தெய்வீகப்பள்ளி. இறையியல் பற்றிய லூத்தரன் உலக சம்மேளனக் கமிஷனின் அமெரிக்க அங்கத்தினர். கிறிஸ்தவ நம்பிக்கை **1954 :–**

சரீரமும் ஆத்துமாவும் பிரிக்கப்பட்ட இரு தனிப் பொருளாக இருக்க முடியும் என்னும் இவ்விதமான சிந்தனை முற்றிலுமாக வேதாகமத்திற்கு அந்நியமானது. வேத வாக்கியத்துக்கு உண்மையாக இருந்து, கிரேக்கப் பார்வையை நிச்சயமாக நிராகரித்து, கிறிஸ்தவ நம்பிக்கையான சரீரத்தின் உயிர்த்தெழுதலை நான் நம்புகிறேன் என்று கூறுகிறது... ஒரு மனிதனின் அறியாமையைப்பற்றி கிறிஸ்தவ மதத்துக்கு ஒன்றும் தெரியாது. அது மரணத்தை மறுப்பதாகவும் அதைத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்று அங்கீகரிக்கவில்லை என்றும் அர்த்தப்படும்... சரீரம் ஆத்துமாவுடன் மரணத்திலிருந்து முழு மனிதன் உயிர்த்தெழுகிறான் என்பதைத்தவிர ஆத்துமா அழியாதது என்பது இல்லை. மனிதனுக்கு அழியாமை உள்ள ஓர் ஆத்துமா இருக்கிறதென்றும், மிருகங்களுக்கு இல்லையென்றும் வேதாகமம் அந்தக் காரியத்தில் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் வேறுபாடு செய்வதில்லை. மரணத்தில் மனிதனும் மிருகங்களும் தாவரங்களுங்கூட ஒரேவிதமாகவே இருக்கின்றன. சரீரத்தைப்போலவே, ஆத்துமாவும் அழிக்கப் படக்கூடியது என்னும் பார்வைக்கு வேத வாக்கியத்தில் போதுமான அளவிற்கு ஆதரவு (தாங்குதல்) உள்ளது. ஆத்துமாவிலிருந்து பிரிக்க முடியாததாக அழியாமை இருக்கிறது என்னும் கருத்து வேதவாக்கியத்தின் போதனையை நீக்கிப் பதிலாக வைத்திருப்பதனால், இந்தச் சான்று இருளாக்கப்பட்டிருக்கிறது. மரணம் என்பது பரலோகத்தில் பிரவேசிப்பது என்று அர்த்தப்படுமானால், அப்பொழுது உயிர்த்தெழுதலும் நியாயத் தீர்ப்பும் அவைகளின் தனிச் சிறப்பை இழந்துவிடுகின்றன. சரீரத்துக்கு அப்பால் ஆத்துமாவிற்கு உயிர்வாழ்க்கை இல்லை. சரீரம், ஆத்துமா ஆகிய முழு மனிதனும் மரிக்கின்றனர். கடைசி நாளில் சரீரம், ஆத்துமா ஆகிய முழு மனிதனும் எழுப்பப்படுகிறான். நமது சொந்த பூமிக்குரிய பார்வையின்

கருத்தில், மரித்தவர்கள் நித்திரைசெய்துகொண்டி ருக்கின்றனர் என்று நாம் கூறி, அதன்பின் நித்திரையில் கடந்துசெல்லும் காலம் நூற்றாண்டுகளாக இருந்தபோதிலும், எனக்கு அது விநாடி நேரமாக இருக்கும் என்று லூத்தரன் சொல்வதைப்போல் நாமும் கூறலாம். (துன்மார்க்கரின் விதியைப்போன்ற) நித்திய மரணம் புதிய ஏற்பாட்டு வெளிப்படையான அல்லது உய்த்து உணரக்கூடியதாக உள்ள மரணத்தைப்பற்றிய புதிய ஏற்பாட்டின் பொதுவான கருத்தில் அபொலியா அழிவு என்பது ஜீவனுக்கு ஆதாரமாக இருக்கும் தேவனிடத்திலிருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டிருப்பதாகும். அது தர்க்கவியல் ரீதியாக இல்லாமை என்று பொருள்படும். வாழ்க்கையின் நம்பிக்கைகளனைத்தும் மதிப்புகளையும் இல்லாமைக்குள்ளாக்குகின்ற அப்படிப்பட்ட இழப்பு, கேட்டினை ஒரு பயங்கரமான உண்மையாகச் செய்யும்… மரணத்தில் தனிப்பட்ட கிறிஸ்தவனின் நம்பிக்கை, மரணத்தின் அதிகாரத்தை எதிர்ப்பதற்கான வல்லமை மனிதனில் இல்லாமல் மரணத்திலிருந்து மனிதனை உயிர்ப்பிப்பது தேவனுடைய வல்லமையாக இருக்கிறது. மரணம் என்பது உண்மையானதாக இருக்கிறது. வேறொரு உயிர் வாழ்க்கைக்காகக் கல்லறையைத் தாண்டிச் செல்லுகின்ற தன்னிடமிருந்து பிரிக்கமுடியாத ஒரு வல்லமையை உடையவனாக மனிதன் இல்லை.. மரித்தவர்களின் உயிர்த்தெழுதலில் மரணத்தின்மீதான கிறிஸ்துவின் வெற்றி தனிச் சிறப்பாக வெளிக் காட்டப்படும்.

**டாக்டர் D.R.G.** ஓடிவன் சபை அறிவு சம்மந்தப்பட்ட பேராசிரியர். உதவிப் பேராசிரியர் தத்துவமும் மதமும் விக்லீஙப் கல்லூரி டொர்னடொ. சரீரமும் ஆத்துமாவும் என்னும் நூலிலிருந்து:

அது (சரீரமும் ஆத்துமாவும் இரு வேறுபட்ட தனிப் பொருட்கள் என்னும் கோட்பாடு) இயற்கையாகவே ஆத்துமா அழியாத தன்மையை உடையது என்று உரிமைபாராட்டுகிறது. அப்படியிருந்தாலும் நாம் வேதாகமத்திற்குத் திரும்பும்போது மனிதனைப்பற்றிய ஒரு மாறுபட்ட பார்வை முழுவதுமாக உண்மையானதாக யூகிக்கப்படுகிறது…ஆத்துமாவின் அழியாத தன்மையை மெய்ப்பிப்பதற்குக் கிரேக்க தத்துவம் முன்கொண்டுசென்ற வாதங்களின் வலிமைகளில் பிதாக்கள் உயர்த்தப்பட்டதில் சந்தேகம் இல்லாமலும் முடிவாக மனிதனுக்கு ஓர் இடைநிலை இருக்கிறது என்று உண்மையாகவே கொடுக்கப்பட்ட ஒரு யோசனை இறுதி நியாயத்தீர்ப்பிற்குமுன் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படும்படி மனிதனுக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தது (என்னும் கருத்தை உண்டுபண்ணினது). இந்த யூகத்தின் முன்னேற்றம்தான் உத்தரிக்கும் ஸ்தலம் என்னும் கோட்பாட்டை நடத்தினது. (சரீரமும் அதன் கூட்டான ஆத்துமாவும்) என்னும் மத சம்மந்தமான மனித இனம்பற்றிய

ஆய்வு அதன் பிறப்பில் வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதாக இராமல் கிரேக்கர்களின் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டதாக இருக்கிறது. ரோமன் கத்தோலிக்க மார்க்கமும் புரொட்டஸ்டான்டு மார்க்கமும் இந்த ஆரம்பகாலத் தவறைத் தொடருவதற்கு வழிநடத்தியிருக்கின்றன. மனிதனைப்பற்றிய வேதாகமப் பார்வை, மதப்பார்வையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது.

**டாக்டர் ஒஸ்கார் குல்மான் 1902,** பேராசிரியர் இறையியல் கல்விப் பிரிவு பேசல், சோர்போன் பல்கலைக்கழகங்கள், பாரீஸ், புரோட்டஸ்டன்டு) கூறுவது:

“இன்று ஒரு சாதாரணமான கிறிஸ்தவனை (நன்றாகக் கற்றறிந்த புரொட்டஸ்டன்டாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்) மரணத்துக்குப்பின் மனிதனின் விதி என்ன என்பதுபற்றிய புதிய ஏற்பாட்டின் போதனையின்படியான அவனது கருத்து என்ன என்று நாம் கேட்கவேண்டிவந்தால், சில தவிர்ப்புகளுடன் ஆத்துமா அழியாதது என்னும் பதிலை நாம் பெற்றுக்கொள்வோம். இருப்பினும், விசாலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்த யூகம் கிறிஸ்தவ மார்க்கத்தின் மிகப் பெரும் தவறான புரிந்துகொள்ளுதலாக இருக்கிறது. இந்த உண்மையை மறைக்க முயற்சிசெய்வதில் எவ்விதமான அர்த்தமும் இல்லை. ஆத்துமா அழியாதது என்னும் கிரேக்க நம்பிக்கையுடன் பொருத்தமில்லாததாகக் கிறிஸ்தவ விசுவாசம் இருக்கிறது. விவிலிய ஏட்டு விளக்கவுரையினால், நமது கட்டளையின் அடிப்படையாக இருக்கும் அதற்கு மறுப்பு தெரிவிக்க எந்த விமர்சகர்களும் இதுவரை முயலவில்லை. ஆத்துமா அழியாதது என்னும் கிரேக்க நம்பிக்கை முற்கால கிறிஸ்தவ மதத்தின்மீது சாட்டும் தவறு, மிகவும் விசாலமாகப் பரவினதாக இருக்கிறது. மேலும், வேதவாக்கியங்கள் நமக்கு என்ன போதிக்கின்றன என்னும் முழுமையான புற உண்மையைக் கவனிப்பதற்கான பொதுவான தகுதியின்மையில் அந்த வசனங்களைப்பற்றிய அவர்களுடைய விளக்கம் இல்லாமல், தங்களுடைய அபிப்பிராயங்களைக் கலக்காமல் மக்கள் ஒன்றுசேர்ந்துள்ளனர். நுண்ணறிவுமிக்க மக்களின் பகுதியில்கூட தங்களைப் பரிசுத்த வேதவாக்கியங்களின் வெளிப் படுத்துதலைச் சார்ந்திருப்பவர்கள் என்று கூறிக்கொள்பவரிடமுங்கூட உள்ள இந்த கவனிக்கும் தகுதியின்மை அதற்குச் சமமான ஆச்சரியத்தை உண்டுபண்ணுவதாக உள்ளது. எனது இந்தப் பணியினால் கோபமூட்டப்பட்டவர்களின் வாதங்கள் வேதவாக்கியங்களின் அடிப்படையில் இருக்குமானால், அவைகள் என்னை மிகவும் அதிகமாக உணர்த்தும்.” (ஆத்துமாவின் அழியாத தன்மை அல்லது மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் என்னும் புத்தகத்திலிருந்து

அத்துடன் “இன்றைய கிறிஸ்தவம்” ஜூலை 21, ஆகஸ்ட் 18, 1958 என்னும் பத்திரிக்கைகளில் உள்ளது).

**டாக்டர் A.A. பெல்ப்ஸ்,** போதகர், காங்ரகேஷனல் சபை ரோய்ச்செஸ்டர் நியூயார்க்:—“வேதாகம துகில் கொடி” பத்திரிக்கை ஆசிரியர். இயற்கையில் மனிதன் அழியாமையை உடையவனா? பக்கம் **639–650**. ஆத்துமா அழியாது என்னும் கோட்பாட்டை நிராகரிப்பதற்கான 12 காரணங்களை நம் முன்னர் வைக்கிறார்.

**1.** அது ஒரு தீய வரலாற்றை உடையதாக இருக்கிறது; அது ஏதேனில் சர்ப்பத்தினால் அறிமுகப்பபடுத்தப்பட்டு, அஞ்ஞானத் தத்துவத்திலிருந்து குதித்தெழுகிறது. அது பிளாட்டோவின் கொள்கையுடன் சமரசம்செய்கிறது. ரோமன் கத்தோலிக்கச் சபையால் சுவீகாரம்செய்யப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**2.** அது மனிதனின் விழுகையைப்பற்றிய வேதாகம அறிக்கையுடன் மோதுகிறது.

**3.** அது மனிதனின் சிருஷ்டிப்பைப்பற்றிய விவரத்திலிருந்து மாறுபாடு உள்ளதாக இருக்கிறது.

**4.** மரணம்பற்றிய வேதாகமக் கோட்பாட்டை அது எதிர்க்கிறது.

**5.** அது உடற்கூறுபற்றிய உண்மைகளுடன் மாறுபடுகிறது.

**6.** மனிதனுடைய நிகழ்கால உயிர்வாழ்க்கை நிலைமையுடன் அழியாமை என்பது எங்கும் கூறப்படவில்லை.

**7.** தேடி அடைந்துகொள்ளவேண்டிய ஓர் ஆசீர்வாதமாக அழியாமை இருக்கிறது; அநது ஒரு பிறப்புரிமை அல்ல.

**8.** பிரிக்கமுடியாத அழியாமை என்பது துன்மார்க்கர்களின் வீழ்ச்சி (அழிவு) பற்றிய வேதவாக்கியத்தை எதிர்ப்பதாக இருக்கிறது.

**9.** ஓர் உயிர்த்தெழுதலின் அவசியத்தை அது மேற்கொள்கிறது.

**10.** அது நியாயத்தீர்ப்பை ஒரு பக்திவிநயமான கேலிக்கூத்தாக குறைக்கிறது.

**11.** அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்னும் கோட்பாட்டை கவிழ்க்கிறது.

**12.** அது முகமதியக் கோட்பாடு, ஷாக்கரிசம், சுவீடன் போர்ஜியனிசம் ஆவிமார்க்கம், உத்தரிக்கும் ஸ்தலம், மரியோலேட்டரி, யுனிவர்சலிசம், நித்திய ஆக்கினைக் கொள்கை ஆகிய தவறுகளின் நாற்றுகளுக்கான ஆதாரமாக இருக்கிறது.

காலங்கள் நெடுகிலுமாக இந்த வேதாகம சத்தியங்களை நம்பியிருக்கின்ற நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ தலைவர்கள் அறிஞர்கள் இரத்தசாட்சிகள் ஆகியோரில் இவர்கள் ஒரு சிலராகமட்டுமே உள்ளனர். ★

# 48

# மரணத்திற்குப்பின்னுள்ள மனிதனின் நிலைமைபற்றிய அட்வென்டிஸ்ட் போதனைகளுக்கெதிரான சில மறுப்புகள்!

**1.**
**லூக்கா 16:19–31** மரித்தவுடனே, நல்லவர்களின் ஆத்துமாக்கள் பரலோகத்திற்குச் செல்லுகிறது என்றும், கெட்டவர்களின் ஆத்துமாக்கள் நரகத்திற்குச் செல்லுகின்றது என்றும், ஐசுவரியவான் லாசருவின் கதை காட்டுகிறதென்று சில மனிதர்கள் கூறுகின்றனர்.

**பதில்:**– கீழ்க் காணும் காரணத்தினால் இது உண்மையில் மிக நல்ல மறுப்பு அல்ல.

**1.** இது யூதர்கள் அவர்களுடைய பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து அவர்கள் திரும்பிவந்தபோது, அவர்களுடன் திரும்பக்கொண்டு வந்த ஒரு பழைய யூதக் கதையாக இருந்தது. பரலோகத்துக்குச் செல்லுவதற்கு ஐசுவரியம் ஒரு பாஸ்போர்ட் அல்ல என்று அவருடைய சத்தியத்தைச் சித்தரித்துக்காட்ட, யூதர்களால் நன்கு அறியப்பட்டிருந்த இந்தக் கதையை இயேசு சாதாரணமாகப் பயன்படுத்தினார். பொருளாசைக்காரர்களாக இருந்த பரிசேயர்கள் (வச. 14), தங்களுடைய செல்வத்தைச் சார்ந்து இருந்தனர். ஆனால் இயேசு அவருடைய போதனைக்குக் கூர்மையைக்காட்ட அவர்களுடைய சொந்தக் கதையைப் பயன்படுத்தி, அது செல்வமாக இல்லாமல் நீதியாக இருக்கிறது என்றார். மக்கள் அறிந்திருந்த சித்திர விளக்கங்களையும் உவமைகளையும் பயன்படுத்துவது கிறிஸ்துவின் வழக்கமாக இருந்தது. புதிய ஏற்பாட்டின் ஒரு பழங்காலத்துக் கையெழுத்துப் பிரதிகளில் ஒன்றில் கையெழுத்துப் பிரதி D என்று கூறப்பட்டிருந்த இந்தக் கதை, (மத். 13:34; மாற்கு 4:33,34) வெளிப்படையாக ஓர் உவமைதான் என்று கூறப்பட்டிருந்தது. செல்வத்தின்மேல் நம்பிக்கை வைப்பதற்கு எதிரான இந்தப் பாடம் —

நாம் ஒவ்வொருவரும் இன்று செவிசாய்க்கவேண்டிய ஒரு பாடமாக இருக்கிறது; ஏனெனில், அநேகர் பணத்தையே பார்க்கின்றனர்; ஆனால், தேவன் நீதியை விரும்புகிறார்.

2. சில மக்கள் கூறுவதுபோல இந்தக் கதை ஆத்துமாக்களைப்பற்றியோ ஆவிகளைப்பற்றியோ பேசுவதில்லை என்பதை ஜாக்கிரதையாகக் கவனியுங்கள். இந்த உவமையில் உண்மையான சரீரங்களுடன்கூடிய உண்மையான மக்கள் விவரிக்கப்பட்டுள்ளனர். (கண்கள், முடி, விரல், நாக்கு மற்றுமுள்ளவைகள் (வச. 23,24)ஆகியவைகளைப்பற்றி இந்த உவமையில் குறிப்புச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள்).

3. லூக்கா 16:19–31–ல் மக்கள் ஒருவரை ஒருவர் எளிதாகப் பார்க்கவும் ஒருவருடன் ஒருவர் முன்னும் பின்னுமாகப் பேசிக்கொள்ளவுங்கூடிய விதத்தில் பரலோகமும் நரகமும் ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கியிருப்பதாக விவரிக்கப்பட்டிருப்பதினால், அது ஒரு உவமையாக இருக்கிறது என்பதும் சந்தேகமில்லாமல் தெளிவாகிறது.

அது தெளிவாக ஓர் உவமையாக மட்டும் இருந்து, ஆத்துமா, ஆவி ஆகியவைகளைப் போதிப்பதற்காகக் கொடுக்கப்படாமல் (இங்கு குறிப்பிடப் படாதவைகளாக உள்ளவைகளைப் போதிப்பதற்காகக் கொடுக்கப்படாமல்), அல்லது மரணத்திற்குப் பின்னுள்ள உண்மைகளைப்பற்றிப் போதிக்காமல், பூமிக்குரிய செல்வங்களின்மீது நம்பிக்கைவைக்கின்ற தவறைப்பற்றிப் போதிக்கிறது.

பண்டைய நவீன கால மிகச் சிறந்த விளக்க உரையாளர்களான இரு சாராரும் காரணத்துடன் அதனை ஒரு உவமை என்றே கருதுகின்றனர்.— **கிரேக்க ஏற்பாடு லூக். 16:19–31–ஐப் பற்றி ப்ளும் ஃபீல்ட் என்பவர்.**

உவமைகள், மரங்கள் அரசர்களை நியமிப்பதில்லை என்பதையும் அல்லது திருமணம்செய்து கொள்ளுவதில்லை என்பதையும் மெய்ப்பிப்பிப்ப தற்காக இல்லாமல், விசேஷமான பாடங்களைப் போதிக்கின்றன என்பதை அறிந்துகொள்ள நியாயாதிபதிகள் 9:8–15; 2 இராஜா. 14:9 ஆகியவைகளைக் கருத்துடன் வாசியுங்கள்.

மரணத்தைப்பற்றி வேதாகமம் என்ன போதிக்கின்றன என்பது கீழ்க்காணும் வேதவாக்கியங்களிலிருந்து தெளிவாகக் காணப்படுகின்றது.

**மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் — பிர. 9:5–10;**

**மரித்தவர்கள் கர்த்தரைத் துதியார்கள் —சங். 115:17;**

| | |
|---|---|
| **அந்த நாளில் அவனுடைய யோசனைகள் அழிந்துபோம்** | **—சங். 146:4;** |
| **பாவம்செய்கிற ஆத்துமாவே சாகும்** | **—எசே. 18:4,20;** |
| **தாவீது பரலோகத்துக்கு எழுந்து போகவில்லையே** | **—அப். 2:34;** |
| **மனுஷன் படுத்துக்கிடக்கிறான் வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதுமில்லை** | **—யோபு 14:10–12;** |
| **இயேசுவின் வருகையின்போதுமட்டுமே மரித்தவர்கள் எழுப்பப்படுகின்றனர்** | **—1 தெச. 4:16–18; 1 கொரி. 15:51–55; கொலோ. 3:3; பிலிப். 3:20,21.** |

**2. லூக்கா 23:43** வேதாகமத்திலுள்ள மற்ற போதனைகளுக்கு இசைவாக இருக்கும் இந்த வசனத்திற்கு இலக்கணப்படியான கால் புள்ளி, அரைப் புள்ளி ஆகியவைகள் சரியான இடத்தில் இடப்பட்டு வாசிக்கப்படவேண்டும். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதேசியிலிருப்பாய் என்றார்.

இலக்கண மரபுப்படியான கால் புள்ளி, அரைப் புள்ளி போன்றவைகள் ஆதியான (Original) எழுத்துக்களில் அறியப்படாதவைகளாக இருந்து, மிகவும் பிந்தின காலத்தில் ஐரோப்பிய மொழிபெயர்ப்புகளால் அமைக்கப் பட்டன. இந்த வசனத்தில் இன்றைக்கு என்னும் சொல்லிற்குமுன் கால்புள்ளி வைக்கப்படாமல், இன்றைக்கு என்னும் சொல்லிற்குப்பின் அந்தக் கால் புள்ளி வைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். இயேசு அவனை நோக்கி: (இப்பொழுது, எல்லாம் நம்பிக்கையில்லாததாகக் காணப்படும் இந்த நாளில்) **Verily I say unto thee today, thou shalt be with me in paradise** என்று கூறிக்கொண்டிருந்தார். இயேசு அவனை நோக்கி: இன்று, நீ என்னுடனேகூடப் பரதீசியிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் என்றுள்ளபடி அந்தக் கால் புள்ளி இன்று என்னும் சொல்லுக்குப்பின் அமைக்கப்பட்டிருந்திருக்கவேண்டும்.

(ஐரோப்பிய மொழிபெயர்ப்பாளர்கள் இந்தக் கால் புள்ளியை இன்று என்னும் சொல்லுக்குப்பின் வைப்பதற்குப்பதிலாகத் தவறாக முன் வைத்ததினால் இந்த விபரீதம், கருத்து வேறுபாடு உண்டாகிவிட்டது. இயேசுவே அன்று பரலோகம் செல்லவில்லை என்பதை வேறு வேதவாக்கியத்திலிருந்து

அறிந்துகொள்ளும்போது, இந்தக் கால் புள்ளி இன்று என்னும் சொல்லுக்குப் பின்னால் வைக்கப்படுவதற்குப்பதிலாக முன்னால் வைக்கப்பட்ட தினால்தான் இந்தக் கருத்து வேறுபாடு உண்டாவதற்கு இடமுண்டாயிற்று என்பதை நியாயமான வாசகர்கள் அறிந்துகொள்ளுவார்கள். வேதவாக்கியங்களில் தவறு எதுவும் இல்லை என்பதையும் அறிந்துகொள்ளுவார்கள். இது சம்மந்தமாக ஒரு சிறு சித்திரவிளக்கத்தைப் பார்ப்போம்.

ஐரோப்பிய நாட்டில் கீழ் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த ஒருவனின் வழக்கு மேல்முறையீடு காரணமாக மரணதண்டனை நிறுத்தி வைக்கப்பட்டு, வழக்கு அரசனின்முன் வந்தது. நியாய விசாரணையின் கீழ் நீதிமன்றத் தீர்ப்பு தவறு என்று அரசன்முன் மெய்ப்பிக்கப்பட்டது. உடனே வெகு தொலைவில் இருந்த நீதிமன்றத்திற்கு அவனை விட்டுவிடும்படி ஒரு தந்தியை அரசன் அவசரமாகக் கொடுத்தான்; அது பின்வருமாறு இருந்தது: KILL HIM NOT, LEAVE HIM என்று இருந்தது; ஆனால் துரதிர்ஷ்டவசமாகத் தந்தியைப் பெற்ற தந்தி அலுவலக்காரர் தவறாக—பின்வரும் விதமாக எழுதிவிட்டார்: **KILL HIM, NOT LEAVE HIM.** இந்தக் கால் புள்ளி தவறான இடத்தில் வைக்கப்பட்டதினால் விடுதலைசெய்யப்படவேண்டியவன் மரணதண்டனை அடைந்தான்; அதைப் போலவே, லூக்கா 23:43—ல் உள்ள இன்று என்னும் சொல்லுக்குப்பின் வைக்கப்படவேண்டியதாக இருந்த கால் புள்ளி மொழிபெயர்ப்பாளர்களால் தவறாக முன்வைக்கப்பட்டதனால், இந்தப் பெரும் அர்த்த வித்தியாசம், முரண்பாடு உண்டாகிவிட்டது. உண்மையில் வேதவாக்கியத்தில் முரண்பாடு இல்லை. இப்பொழுதே என்று அர்த்தம் தருகின்ற இன்றைக்கு என்னும் வார்த்தை அல்லது இந்த நேரத்திலும் என்னும் வார்த்தை அதேவிதமாக யூதப் பேச்சுக்களில் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. (சகரியா 9:12 பார்க்கவும்).

யோவான் 20:17—ல் இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்துக்கு ஏறிப்போகவில்லை (என்றார்) என்று மரியாளிடம் கூறியதால், அந்த வெள்ளிக் கிழமையில் அவர் பரதீசுக்குப் போகவில்லை என்பதை மூன்று நாட்களுக்குப்பின் மரியாளிடம் கூறினதிலிருந்து அறிந்துகொள்ளுகிறோம்.

அந்த மனமாற்றமடைந்த கள்ளனை அவனுடைய கல்லறையிலிருந்து அழைக்கும்படி, இயேசு இரண்டாவது தடவை வரும்போதுமட்டுமே அவன் பரதீசுக்கு நடப்பான்—(கொலோ. 3:4 காண்க).

**3. 2 கொரி. 5:8** இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும்…

இந்த வசனங்களில் ஆத்துமாக்களைப்பற்றியோ ஆவிகளைப்பற்றியோ குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனிக்கவும். பவுல் இங்கு இப்போதுள்ள சரீரங்களுக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, எதிர்காலத்தில் நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய மகிமைமிக்க சரீரங்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தையும் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறான்.

இவ்வாறாக, 2 கொரி. 5:8 கீழ்க்காணும்விதமாக வார்த்தை மாற்றம் செய்யப்படமுடியும். நாம் நம்பிக்கை உடையவர்களாக இருந்து (இப்போது நம்முடையதாக உள்ள) இந்த தேகத்தை விட்டுக்குடிபோகவும் (நமது புதிய சரீரத்தில்). கர்த்தருடைய பிரசன்னத்தில் இருக்கவும் நான் விரும்புகிறேன் என்று நான் கூறுகிறேன்.

உண்மையில் இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரை நடைபெறாது. (1 கொரி. 15:51–55; பிலி. 3:20,21; கொலோ. 3:4)

1 – ம் 2 – ம் வசனங்களிலிருந்து பவுல் இங்கு ஆத்துமாக்களைப்பற்றியோ ஆவிகளைப்பற்றியோ கூறாமல், நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறான் என்பதைக் காணமுடியும்.

பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு (இப்பொழுதுள்ள நமது சரீரம்) அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு (புதிய சரீரம்) இனி ஒருபோதும் சாகாத சரீரம்) நமக்கு உண்டென்று அறிந்திருக்கின்றோம்–(2 கொரி. 5:1,2).

ஏனெனில் இந்தக் கூடாரத்தில் (இப்பொழுதுள்ள சரீரத்தில்) நாம் தவித்து (நோயையும் வேதனையையும் துயரத்தையும் உடையவர்களாக இருந்து) நமது பரம வாசஸ்தலத்தை (நமது மகிமைமிக்க சரீரத்தைத்) தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சை உள்ளவர்களாக இருக்கிறோம்–2 கொரி. 5:2

ஜீவனுள்ள வேதாகமம் என்னும் மொழிப்பெயர்ப்பில் 2 கொரி. 5:1–6 வசனங்கள் மொழி அமைப்புச் செய்யப்பட்டுள்ள விதத்தையுங்கூடக் கவனியுங்கள்.

ஏனெனில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்தக் கூடாரம் நம்மிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும்போது, நாம் மரித்து இந்த சரீரத்தைவிட்டு நீங்கி, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து உயிரடையும்போது, மனிதக் கைகளால் உண்டுபண்ணப்படாத தேவனால் தாமே உண்டுபண்ணப்பட்ட

ஆச்சரியமான புதிய சரீரங்களை கொண்டிருப்போம். இப்பொழுதுள்ள நமது சரீரங்களுடன் நாம் எப்படிக் களைப்படைந்தவர்களாக இருக்கிறோம்? நாம் புதிய உடைகளை அணிந்துகொள்ளுவதைப்போல, பரலோக சரீரங்களை அடைந்து கொள்ளுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். ஏனெனில் நாம் சாதாரணமாக, சரீரம் இல்லாத ஆவிகளைப்போல இருக்கமாட்டோம்.

பூமிக்குரிய இந்த சரீரங்கள் நம்மைத் தவிக்கவும் பெருமூச்சுவிடவும் செய்கின்றன. ஆனாலும் மரிக்கவும் சரீரம் இல்லாதவர்களாயிருக்கவும் நாம் விரும்புவதில்லை. நித்திய ஜீவனினாலே, மரிக்கக்கூடிய இந்தச் சரீரங்கள் விழுங்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் நமது புதிய சரீரத்திற்குள் கடந்துசெல்ல விரும்புகிறோம். தேவன் இதைத்தான் நமக்கென்று ஆயத்தஞ்செய்து, அதன் உத்திரவாதமாக நமக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுத்திருக்கிறார். பூமிக்குரிய இந்தச் சரீரங்களில் நாம் செலவிடும் ஒவ்வொரு வினாடி நேரமும், நமது நித்திய வீட்டிலிருந்தும் இயேசுவிடமிருந்தும் விலகிச்சென்றிருக்கும் நேரமாக இருக்காது என்பதை நாம் உணர்ந்து, இப்பொழுது நாம் நம்பிக்கையுடன் நமது பரலோகச் சரீரங்களை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம்.

**4. பிலிப். 1:21–24** தேகத்தை விட்டுப்பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு (வச. 23).

பவுல் இங்கு அவனுடைய மரணத்தையும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் ஒன்றாக இணைக்கிறான்; ஏனெனில், அவனுக்கு மிகவும் அடுத்தபடியாக நடக்கக்கூடிய சம்பவமாக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கிறது. ஆயிரக்கணக்கான வருடங்கள் கடந்து சென்றாலும், அவன் அதை அறிவதில்லை. அவனுக்கு அது ஒரு வினாடி நேரம் போன்றதாக இருக்கிறது. தேவனுடைய ஒரு பரிசுத்தவான் மரணத்தில் அவனுடைய கண்களை மூடும்போது, அடுத்தபடி அவன் காண்கின்ற காரியம் இயேசு அவனுக்காக வருவதாக உள்ளது.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இது எப்படிப்பட்ட தைரியமூட்டுதலாக இருக்கிறது. இந்த இரண்டு சம்பவங்களையும் பவுல் மிகத் தெளிவாக ஒன்றுடன் ஒன்றாக இணைத்தபோதிலும், நமக்காக உள்ள இயேசுவின் இரண்டாம் வருகையின்போதுமட்டுமே நாம் இயேசுவுடன் இருப்போம் என்பதைப் பவுல் மிகத் தெளிவாகப் போதிக்கிறான்.

**கொலோ. 3:4** நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

| | |
|---|---|
| **1 தெச. 4:16** | ஏனெனில், கர்த்தர் தாமே பிரதான தூதனுடைய சத்தத்தோடும்... வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். |
| **1 கொரி. 15:51–54** | ... கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ... மரித்தோர் எழுந்திருப்பார்கள். |
| **2 தீமோ. 4:8** | நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது... அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். |
| **பிலிப். 3:20–21** | கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர ... தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். |

பிலிப். 1:21–24 – ல் ஒரு ஆத்துமாவோ ஆவியோ பரலோகத்திற்குச் செல்லுவதாகக் குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கப்படும். கிறிஸ்துவின் வருகையில் நாம் எழுப்பப்படும்போது, நாம் முழு மனிதர்களாக எழுப்பப் படுகிறோம். சரீரம்—ஆத்துமா (ஜீவனின் தகுதிகளின் எல்லா விதமான நிறைவுடனும் உணர்ச்சிகளுடனும்), ஆவி (சுவாசம், மனம், சுபாவம், சித்தம்) ஆகியவைகளுடனும் எழுப்பப்படுகிறோம் (வச. 21). சாவு எனக்கு ஆதாயம், அநேகவிதமான உபத்திரவங்களையும் பரீட்சைகளையும் சந்திக்கவேண்டியவனாக இருந்த பவுல் (2 கொரி 11:23–28) காண்க; கடைசியில் மரணத்தில் அவனால் எவ்விதமாக இளைப்பாறமுடியும் என்பதைப்பற்றிச் சந்தேகத்திற்கிடமில்லாமல், சில நேரங்களில் தியானம்செய்திருந்தான்— (வெளி. 14:13–யும் கவனியுங்கள்). அவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவனுடைய கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்கிறான் என்னும் நம்பிக்கையை உடையவனாக இருந்தான் (2 தீமோ. 4:6–8). அப்படியிருந்தும் நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (பிலிப். 1:24) பவுலினிடத்தில் விலைமதிப்புமிக்க பொக்கிஷமாகக் கொடுக்கப்பட்டிருந்த தேவனுடைய மந்தைக்காகப் பவுல் உயிருடன் இருந்தபோது விழிப்புடன் பணியாற்றுவதில் தொடர்ந்திருந்தான்— (அப். 20:31).

பேதுரு 3:18–20 வேத வாக்கியத்தில் மிக அதிகக் கடினமாக ஒரு பகுதியாக இது இருக்கிறது. ரோமன் கத்தோலிக்க சபை சில சமயங்களில் உத்தரிக்கும் ஸ்தலம் என்னும் கோட்பாட்டை மெய்ப்பிப்பதற்காக இந்த வசனங்களைப் பயன்படுத்துகின்றது. அவர் கல்லறையில் இருந்த மூன்று நாட்களில், மிக அதிகமான நாட்களுக்குமுன் ஜலப்பிரளயத்தினால் தண்ணீரில்

அமிழ்ந்துபோன பாவிகளுக்குப் பரலோகத்தை அடைந்துகொள்ளுவதற்கான இரண்டாவது வாய்ப்பைக் கொடுப்பதற்காகப் பிரசங்கம் செய்யும்படி இயேசு உத்திரிக்கும் ஸ்தலத்திற்குச் சென்றார் என்னும் கருத்தை இந்த வசனங்கள் போதிக்கின்றன என்று அவர்கள் கருதுகின்றனர். புரொட்டஸ்டாண்டுகள், பொதுவாக, இதை நம்மால் உயிர்த்தெழுந்த இதே இயேசு (ஆவியில் எழுப்பப்பட்டவர்) ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த ஜனங்களுக்குப் பிரசங்கம்செய்த அதே இயேசுவாக இருக்கிறார் என்று பேதுரு இங்கு சுட்டிக்காட்டுகிறான் என்பதை நம்புகின்றனர். இரட்சிக்கப்படுவதற்கான ஒரே மார்க்கமாக அப்பொழுது பேழை இருந்ததைப்போல, இப்பொழுது இரட்சிக்கப்படுவதற்கான ஒரே மார்க்கமாக ஒரு புதிய வாழ்க்கையை நாம் வாழ நம்மை நடத்துவதற்கான, பாவத்தினால் மரித்திருந்த நம்மை மரணத்திலிருந்துள்ள உயிர்த்தெழச் செய்கின்றதாக இருக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஞான ஸ்நானத்தினால் நாம் சாட்சி பகருகிறோம்.

எனவே ஜேம்ஸ் அரசரின் வேதாகம வாசகத்தைத் தொடர்ந்துள்ள இந்த வசனங்களைப்பற்றிய விளக்கம் இவ்விதமாக இருக்கவேண்டும்.

**வச. 18** ஏனெனில்; கிறிஸ்துவும் தம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவர்களாய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே (ஒரு மனிதனாக) கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். (மறுபடியும் உயிர்வாழும்படி செய்யப்பட்டார்).

**வச. 19** அந்த ஆவியிலே (அவருடைய பதவியில் தெய்வீகத்தில் உள்ள ஒருவராக) அவர் போய் காவலிலுள்ள ஆவிகளுக்கு (பாவம் என்னும் சிறையிலுள்ள மனிதர்களுக்கும்) பிரசங்கித்தார்.

**வச. 20** அந்த ஆவிகள் (மனிதர்கள்) பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமல் போனவைகள். அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.

18 முதல் 22 வரையுள்ள வசனங்களின் சிந்தனைகளைக் கீழ்க்காணும்விதமாக மொழிமாற்றம் செய்யமுடியும். நீதியுள்ள ஒரு மனிதனாக இருந்த கிறிஸ்து, அநீதியான மனிதர்களாக இருந்த நம்மை இரட்சிப்பதற்காகவும் தேவனிடத்தில் கொண்டுவருவதற்காகவும் ஒரு தடவை மரித்தார். ஒரு மனிதனாக இருந்த அவர் கொலைசெய்யப்பட்டார். ஆனால்

தெய்வீகமான ஒருவராக இருந்த அவர் மறுபடியும் ஒரு தெய்வீகமானவராக எழுந்தார். கீழ்ப்படியாமையினாலும் பாவங்களினாலும் நோவாவின் காலத்தில் சிறையில் வைக்கப்பட்டிருந்த அவர்களுக்கு நோவா பேழையை ஆயத்தம்செய்துகொண்டிருந்தபோது, மிக முன்னான காலத்தில் இந்தத் தெய்வீகமானவர் பிரசங்கம்செய்திருந்தார். அப்படியிருந்தும், எட்டுபேர் மாத்திரமே அந்த ஜலப்பிரளயத்திலிருந்து காக்கப்பட்டனர்.

ஞானஸ்நானம் நமது சரீரங்களிலுள்ள அழுக்கை நீக்காமல், பாவத்தி லிருந்து சுத்திகரிக்கப்பட்டுள்ள நல்மனசாட்சியுடன் தேவனைச் சந்திக்கும்படி நம்மைத் தகுதிப்படுத்துகின்றதாக இருக்கின்றது. ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் ஓர் அடையாளமாக இருந்து, பாவத்திலிருந்து நாமுங்கூட எவ்விதமாக எழுப்பப்படலாம் என்பதன் அடையாளமாக இருக்கிறது. இன்று இயேசு பரலோகத்தில் தேவனுக்கு வலதுபக்கத்தில் தேவ தூதர்களுடனும் அவருக்குக் கீழாக உள்ள அனைவரின்மீதுமுள்ள அதிகாரத்துடனும் அதிகாரத்தின் இடத்தில் இருக்கிறார்.

**1 பேதுரு 3:19 பற்றிய வேதாகம விளக்க உரையாளர்களின் பார்வை.**

கீழ்ப்படியாதவர்களும் தேவனுடைய பிரமாணத்துக்கெதிராக மிக அதிகமான வெளிப்படையான மீறுதல்களைப்பற்றிய மன உணர்த்துதல்களையும் உடையவர்களாக இருந்த ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்தில் பூமியின் குடிகள் அவருடைய நீதியான பிரமாணத்தினால் அழிவு என்னும் தண்டனைக்குள்ளானார்கள். ஆனால் அவர்கள் மனந்திருந்தவேண்டும் என்பதற்காக அவர்களுடைய தண்டனை தாமதப்படுத்தப்பட்டு, இந்த நோக்கத்திற்காக அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த தேவனுடைய நீடிய பொறுமையை 120 வருடங்கள் காத்திருந்தது. இந்தக் காலத்தின் போது குற்றவாளிகளாக விசாரிக்கப்பட்டுத் தண்டனை அடைந்தவர்கள், தெய்வீக நியாயத்தீர்ப்பின்கீழ்க் கைதிகளாகச் சிறையில்—காவலில்—நிறுத்திவைக்கப்பட்டு, தங்களுடைய மனந்திரும்புதலுக்காகவோ அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை நிறைவேற்றுவதற்கான இடைவேளையில் இருப்பவர்களாகவோ எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கடினமான வாசகத்தின் பொருள் இதுதான் என்று நான் நீண்ட காலமாக நம்பியிருக்கிறேன். வேறு எதையும் இந்த இடத்துக்கு பொருத்தமானதாக நான் காணவில்லை. ஆதி. 6:3—லிருந்து ஜலப்பிரளயத்துக்கு முன்னிருந்தவர்களுடன் மன உணர்த்துதலை உண்டுபண்ணவும் கடிந்துகொள்ளவும் தேவ ஆவியானவர் போராடினார் என்பது சான்றாக உள்ளது. நுமாசி என்னும் கிரேக்க வார்த்தையை

இந்த விஷயத்தின் பார்வையில் ஆவிகள் என்று அர்த்தம்கொள்ளுவது சாத்தியமற்றதாக உள்ளது; ஏனெனில், இது சரீரம் இல்லாத ஆவிகள் என்னும் அர்த்தத்தை உண்டுபண்ணும். ஆனால் நிச்சயமாக அது அந்த அர்த்தத்தைத் தொடர்வதில்லை. ஏனெனில், எபி. 12:23–ல் சொல்லப்பட்டுள்ள பூரணமாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்துக்கும் என்பது நீதிமான்களையும் இன்னும் போராடிக்கொண்டிருக்கும் சபையில் உள்ள மனிதர்களையும் எபி. 12:9–ல் உள்ள ஆவிகளின் பிதா என்பது இன்னும் சரீரத்தில் உள்ள மனிதர்களையும், எண். 16:22–ல் உள்ள மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே என்பது எண்ணாகமம் 27:16–ல் உள்ள மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் என்பதும் சரீரமில்லாத நிலையில் உள்ள மனிதர்கள் என்றும் அர்த்தம் கொடுப்பதில்லை.—**ஒரு விளக்கமும் கருகலான குறிப்புகளும்!—1 பேதுரு 3:19 பற்றி ஆடம் கிளார்க் L.L.D. (மெதடிஸ்ட்) நியூயார்க் லேன் & ஸ்காட் 1851.**

சீர்திருத்தக் காலத்தில் 1 பேதுரு 3:19 வசனங்களை விவிலிய அறிஞர்கள், ‘‘முற்பிதாவாகிய நோவாவின் மூலமாகக் கிறிஸ்து பிரசங்கம் செய்தார்’’ என்று விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.—**1 பேதுரு 3:17–22 பற்றித் தெளிவாக விளக்குபவரின் வேதாகமம் டாக்டர் J. ராவ்சன் லும்பி.**

‘‘நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாதவர்களாக இருந்தவர்களுக்கு கிறிஸ்து பிரசங்கம்செய்தார் என்பது நிச்சயமானதாக இருக்கிறது; அதைப்போலவே, அவர்கள் மரித்தபின் அவர்களுக்கு அவர் ஒருபோதும் பிரசங்கம்செய்யவில்லை என்பதும் அதிக நிச்சயமானதாக இருக்கிறது’’—**மத கோட்பாடுகள் பற்றிய விளக்கம், பக்கம் 166. டாக்டர் ஜான் பியர்சன் (சர்ச் ஆப் இங்கிலாந்து).**

**6. வெளி. 6:9,10** மரணத்துக்குப்பின் ஆத்துமா உயிர்வாழ்கிறது என்றும் பலிபீடத்துக்குக் கீழே தங்கியிருந்து, உரத்த சத்தத்துடன் (வச. 10) சத்தமிடக் கூடியதாக இருக்கிறதென்றும் இந்த வசனங்கள் மெய்ப்பிக்கின்றன என்று சில ஜனங்கள் கூறுகின்றனர்.

நீதிமான்களின் ஆத்துமாக்கள் பரலோகத்துக்குச் செல்லுகின்றன என்று கூறும் அதே மக்கள், நீதிமான்களின் ஆத்துமாக்கள் பலிபீடத்தின் கீழ் உள்ளன என்றுங்கூட கூறும் இந்த வசனத்தை அடிக்கடிப் பயன்படுத்துவது வேடிக்கையானதாகவே இருக்கிறது. இந்த ஆத்துமாக்கள் பழி வாங்கும்படி சத்தமிட்டுக் கூப்பிடுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது (வச. 10). இப்படிக்கூறும் அதே ஜனங்கள், துன்மார்க்கர்கள் ஏற்கனவே தண்டிக்கப்

பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் தண்டிக்கப்படுவதை நீதிமான்களால் பார்க்கமுடியும் என்பதை மெய்ப்பிக்கவும், லூக்கா 16 – ம் அதிகாரத்தில் உள்ள ஐசுவரியவான் லாசருவின் கதையுங்கூட மேற்கோள்காட்டுகின்றனர் அது அப்படி இருக்குமானால், பழிவாங்கும்படி நீதிமான்கள் ஏன் சத்தமிட்டுக் கூப்பிடுகின்றனர்?

இந்த வாசகம் முழுவதும் உருவகமானது என்பதையும் எழுத்தின் படியானதல்ல என்பதையும் காண்பது எளிதாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் உருவகங்களின் ஒரு புத்தகமாக உள்ளது. அது எழுத்தின்படியானதல்ல. ஏறத்தாழ அதில் உள்ளதெல்லாம் உருவகமாக இருக்கிறது. வெளி. 5:6–ல் அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியையும், அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாக இருக்கிறது என்பதையும் கவனியுங்கள். ஆனால் தொண்டை அறுக்கப்பட்டு ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடைய ஒரு ஆட்டுகுட்டியாக கிறிஸ்து பரலோகத்தில் தோன்றுவதில்லை. இது தெளிவாக உருவகமாகமட்டும் உள்ளது. இதைப்போலவே, இந்த அதிகாரங்கள் முழுவதற்கும் ஊடாக உள்ள நான்கு மிருகங்கள் இருப்பது நான்கு மூப்பர்கள் (5–ம் அதிகாரம்) முத்திரைகள் பலவிதமான நிறங்களை உடைய குதிரைகள், கோதுமை, பார்லி, எண்ணெய், திராட்சை ரசம், அதி. 6, 9,10–ம் வசனம் வரும்வரை உள்ள பலிபீடம், ஆத்துமாக்கள் சத்தமிட்டுக் கூப்பிடுதல், வெள்ளை அங்கிகள் ஆகியவைகள் யாவும் உருவகங்களாக உள்ளன; அனைத்தும் குறிப்பான சத்தியங்களின் உருவகங்களாக உள்ளன. அவைகளை எழுத்தின்படி எடுத்துக் கொள்ளமுடியாது. 9,10–ம் வசனங்களை இந்த அதிகாரத்தில் உள்ள வேறானவைகளாக எடுத்துக்கொள்ளாமல், எழுத்தின்படி எடுத்துக்கொள்வது இசைவானதாக, பொருத்தமானதாக இருக்காது.

இங்கு வெளி. 6:9–ல் உள்ள ஐந்தாம் முத்திரை தேவனுடைய வார்த்தைக்காகவும் அவர்கள் பற்றிக்கொண்டிருந்த சாட்சிக்காகவும் இருண்ட காலங்களில் கொலைசெய்யப்பட்ட கோடிக்கணக்கான இரத்தச்சாட்சிகளைப் பற்றியும் இடைப்படுகிறது. பலிபீடத்துக்குக்கீழே கிறிஸ்துவின் மரணத்தை எதிர்நோக்கி பலிபீடத்தின்மீது மிருகங்கள் கொலைசெய்யப்பட்டு, அவைகளின் இரத்தம் பலிபீடத்துக்குகீழாக ஊற்றப்பட்டதைப்போல, இங்கு பலிபீடத்தின்கீழ் என்பது தேவனுடைய பரிசுத்தவான்கள் தேவனால் அவர்களுக்காகச் சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழ் பாதுகாப்பின்கீழ் (லேவி. 4:7) இளைப்பாறுவதைக் குறிக்கிறது (வச. 9). பொதுவாக மிருகஜீவன்கள் அல்லது அசையும் ஜீவன்கள் சிந்திக்கவும் வெறுக்கவும், நேசிக்கவும், பயப்படவுங்கூடிய பல

தன்மைகளை உடையவைகளைக் குறிக்கிறது. மனிதன் சம்மந்தப்பட்ட காரியத்தில் சந்தோஷப்படவும், போற்றவும், தேவனைத் துதிக்கவும் செய்யக்கூடியதைக் குறிக்கிறது. இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆத்துமாக்கள் என்னும் வார்த்தை இந்த இரத்தசாட்சிகள் மனிதர்களால் கொலைசெய்யப்பட்டிருந்தபோதிலும், அவர்களுடைய எதிர்கால ஜீவனைத் தமது கரத்தில் வைத்திருக்கும் தேவன் அவர்களுக்கு மறுபடியும் ஜீவனைக் கொடுப்பார். இந்த எதிர்கால ஜீவனை அவர்களிடமிருந்த மனிதர்களால் எடுத்துக்கொள்ளமுடியாது.

**வச. 10:** அவர்கள் மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். இரத்த சாட்சிகளாகப் பயங்கரமானவிதத்தில் உண்டான அவர்களுடைய மரணம் பழிவாங்கப்படவேண்டும் என்று சத்தமிட்டுக் கூப்பிடுகிறது. தேவன் அவர்களை நினைக்கிறார் என்பதையும் இந்த வசனம் அடையாளப்படுத்துகிறது.

**வச. 11:** அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. உலகம் அவர்களை மரணத்துக்கு தகுதியான மதப்புரட்டர்கள் என்றபோதிலும், தேவன் அவர்களை நீதிமான்கள் என்று கூறுகிறார். அவர்கள் இன்னும் கொஞ்சக் காலம் இளைப்பாறவேண்டும். அவர்கள் இன்னும் பரலோகத்தில் இல்லை. அவர்கள் இன்னும் அவர்கள் பரிசைப் பெற்றுக்கொள்ளாமல், தேவனுடைய பணி முடிவடைவதற்காகவும் கிறிஸ்து அவருடைய ஜனங்களனைவரையும் ஒன்று சேர்த்து அவருடைய வீட்டுக்கு எடுத்துச்செல்வதற்காகவும், அவர் வருவதற்காக இளைப்பாறிக் காத்திருக்கவேண்டும் (எபி. 11:39,40).

இது எழுத்தின்படி நடந்தது என்றும், யோவான் இந்த இரத்தச் சாட்சிகளை உண்மையாகவே பலிபீடத்தின்கீழ் கண்டான் என்றும் நாம் நினைத்துக்கொள்ளாதவர்களாக இருக்கிறோம். ஏனெனில் அந்த முழு எடுத்துக்காட்டுதலும் உருவகமாக இருக்கிறது. அப்படியல்லாமல் காயமடைந்தவர்களும் இரத்த சாட்சிகளானவர்களும் பரலோகத்திலிருந்து கொண்டு உண்மையாகவே பழிவாங்கும்படி ஜெபம் செய்கிறார்கள் என்று நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. ஆனால், உபத்திரவம்செய்த ஒவ்வொருவனும் உபத்திரவப்படுத்தப்பட்டவர்களின் மரணத்தைப்பற்றி அவர்கள் பரலோகத்துக்குச்சென்று உபத்திரவம் செய்தவனுக்கெதிராகப் பேசுவதைப்போல் பயப்பட வேண்டும்.—**வெளி. 6:10 பற்றி பிரிஸ்பிட்டேரியன் சபையைச்சேர்ந்த ஆல்பர்ட் பர்னேயின் கருத்து.**

ஆபேலின் இரத்தத்தைப்போல் அவர்களுடைய இரத்தம் பழி வாங்குவதற்காகக் கூப்பிட்டது. சில சமயங்களில் நாம், இரத்தம், இரத்தத்தைக் கூப்பிடுகிறது என்று கூறுகிறோம்—**வெளி. 6:9,10 பற்றிய**

**ஆடம் கிளார்க் என்னும் மெதடிஸ்ட் சபையை சேர்ந்தவரின் விளக்கம்.**

**குறிப்பு:**– “ஆதி. 4:10– ல் உள்ள ஆபேலின் இரத்தம் கூப்பிடுகிறது என்பது பற்றிய ஆடம் கிளார்க்கின் குறிப்பு. இது எழுத்தின்படியானது அல்ல என்பது தெளிவானதாக இருக்கிறது. ஆபேலின் இரத்தம் உண்மையாகவே கூப்பிடவில்லை. ஆனால் இறந்துபோன ஆபேல் உண்மையாகவே பேசினதுபோலவும் அல்லது அவனுடைய இரத்தம் உண்மையாகவே கூப்பிட்டதுபோலவும் தேவன் அதை கவனித்தார் என்றும் அர்த்தமாகிறது.”– ஆல்பர்ட் பர்னேசும் ஆடம்கிளார்க்கும் வெளி. 6:9,10 பற்றிச் சுட்டிக்காட்டுவது மிகத் தெளிவானதாக இருக்கிறது.

| | | |
|---|---|---|
| **7.** | **ஆதி. 25:8** | **—ஆபிரகாம் பிராணன் போய் (ஆவி போய்) மரித்தான்.** |
| | **ஜீவனுள்ள வேதாகமம்** | **—ஆபிரகாம் மரித்தான்.** |
| | **அடிப்படை ஆங்கில வேதாகமம்** | **—ஆபிரகாம் அவருடைய மரணத்துக்கு வந்தான்.** |
| | **புதிய ஆங்கில வேதாகமம்** | **—ஆபிரகாம் அவனுடைய கடைசிச் சுவாசத்தை விட்டான்.** |
| **8.** | **ஆதி. 35:18** | **அவளுடைய ஆத்துமா பிரியும்போது,** |
| | **ஜீவனுள்ள வேதாகமம்** | **—ராகேலின் கடைசி சுவாசத்துடன்** |
| | **புதிய ஆங்கில வேதாகமம்** | **—அவளுடைய கடைசி சுவாசத்துடன்** |
| | **அடிப்படை ஆங்கில வேதாகமம்** | **—அவளுடைய ஜீவன் அவளை விட்டுச்சென்றது.** |
| **9.** | **1 இராஜா. 17:21,22** | **—அந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் மறுபடியும் வந்தது.** |
| | **புதிய ஆங்கில வேதாகமம்** | **—அந்தப் பிள்ளையின் சரீரத்துக்குள் ஜீவசுவாசம் திரும்பிவந்தது.** |
| **10.** | **பிர. 12:7** | **—ஆவி தன்னைத் தந்த தேவனிடத்துக்கு மறுபடியும் போகாததற்கு முன்னும்** |
| | **புதிய ஆங்கில வேதாகமம்** | **—ஆவி அதைத் தந்த தேவனிடத்திற்கு திரும்பிச் செல்லுகின்றது.** |
| | | **கீழ்க்குறிப்பு: சங். 104:29 நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள).** |

**11. 1 சாமு. 28:7–19**

**அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயின் கட்டளையின் படி சாமுவேல் தீர்க்கதரிசி தோன்றினதாகக் கூறப்படுகிறது. இது சாமுவேலாக இல்லாமல், அந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயும், சவுலும், சாமுவேல் என்று எவ்விதமாக நினைத்துக் கொண்டார்களோ அதைப்போல இருந்தது; சாத்தானால் அவனுடைய அற்புதங்களுடனும் சாமர்த்தியமான வஞ்சகத்துடனும் மக்களை ஏமாற்றமுடியும் என்று வேதாகமம் எச்சரிக்கின்றது. "ஆகையால்... அவர்கள் பொய்யை விசுவாசிக்கதக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்புவார்" என்னும் 2 தெசலோ. 2:9–11–ஐ மிகக் கவனமாக வாசியுங்கள். (மத். 24:24; 2 கொரி. 11:14,15; வெளி. 13:13,14; –யும்கூட வாசியுங்கள்). வெளி. 16:13,14,16.**

மரித்தவர்களிலிருந்து உள்ளதுபோலக் கூறிக்கொள்ளும் (போலியான) ஆவிகளுடன் தேவனுடைய மக்கள் தொடர்புகொள்ள முயன்றுகொண்டிருப்பதற்கு எதிராக தேவன் அவருடைய ஜனங்களை அடிக்கடி எச்சரித்திருந்தார். (உபா. 18:9–10; லேவி. 19:31; 20:27; ஏசாயா 8:19,20). சவுல் தேவனுடைய கட்டளையைமீறி அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயினிடத்திற்குச் சென்றபோது, தேவனால் அதற்குமேல் அதிகமாக ஒன்றையும் அவனுக்காகச் செய்யமுடியவில்லை. அவன் சாத்தானின் வஞ்சகத்துக்கு ஓர் இரையானான்.

சாமுவேல் மரித்தவுடன் பரலோகத்துக்கு சென்றான் என்று சில சமயங்களில் மேற்கோள் காட்டுபவர்கள், சாமுவேல் பூமிக்குள்ளிருந்து வருகிறான் என்று கூறும் இந்த வாசகத்தை மேற்கோள் காட்டுவதையும் கவனிக்கவேண்டியதாக இருக்கிறது. (வச. 13,14)

சாமுவேல் தீர்க்கதரிசி மரித்தவுடன் பரலோகம் சென்றான் என்றும், ஆனால் தற்கொலை செய்துகொண்ட சவுல் நரகத்திற்குச் சென்றான் என்றும் கூறும் ஜனங்கள், நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள் என்று சாமுவேல் கூறுவதாக உள்ள இந்த வேதவாக்கிய வாசகத்தில் குழப்பமடைந்துபோவார்கள். (வச. 19).

இவை அனைத்துமே சாத்தானின் வஞ்சகம் என்பது தெளிவானதாக இருக்கிறது. எந்தோரில் இருந்த அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயினாலும் சவுலாலும் காணப்பட்ட காட்சியை இங்கு வேதாகம எழுத்தாளர் சாதாரணமாக விவரித்துக் கொண்டிருக்கிறார். ★

# 49

# நரகம்!

வேதாகமத்தில் உள்ள நரகம் (hell)என்னும் வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன.

1. கல்லறை
2. உலகத்தின் முடிவில் உண்டாக உள்ள **(hell – fire)** நரக அக்கினி.

## முதல் அர்த்தம்

பழைய ஏற்பாட்டில், ஷியோல் என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஹேட்ஸ் என்னும் வார்த்தை. புதிய ஏற்பாட்டில் உள்ள ஹேட்ஸ் என்னும் வார்த்தை கீழ்க்காணும் வசனங்களில் காணப்படுகிறது. மத். 11:23; 16:18; லூக்கா 10:15; 16:23; அப். 2:27,31; வெளி. 1:18; 6:8; 20:13,14.

## இரண்டாவது அர்த்தம்

உலகத்தின் முடிவிலுள்ள அக்கினி—கெஹினா என்னும் புதிய ஏற்பாட்டு வார்த்தையில் இருந்துள்ளது. கெஹினா என்னும் வார்த்தை கீழ்க்காணும் வசனங்களில் காணப்படுகிறது. மத். 5:22,29,30; 10:28; 18:9; 23:15,33; மாற்கு 9:43,45,47; லூக்கா 12:5; யாக். 3:6.

கெஹினா என்னும் புதிய ஏற்பாட்டு வார்த்தை (பழைய ஏற்பாட்டிலுள்ள ஹின்னோவாம் என்னும் வார்த்தையிலிருந்துள்ளது). இது எருசலேமிற்கு தெற்கிலிருந்த ஒரு ஆழமான இடுக்கமான பள்ளத்தாக்காக இருந்தது. ஆகாஸ், மனாசே ஆகிய அரசர்களின் நாட்களில், இஸ்ரவேல் மக்கள் அவர்களுடைய பிள்ளைகளை இந்தப் பள்ளத்தாக்குகளில் மோளேகுக்கு நரபலி கொடுத்திருந்தனர். பயங்கரமான இந்த பாவங்களின் காரணமாக இந்தப் பள்ளத்தாக்கு வெட்டுகிறவர்களின் பள்ளத்தாக்கு என்று அறியப்படும் என்று தீர்க்கதரிசியான எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தான். எருசலேமின் ஜனங்களுக்கு ஹின்னோவாம் (அல்லது கெஹினா) தண்டனையின் ஒரு இடம், வெட்கத்தின் ஒரு இடம் என்று அறியப்பட்டதாகியது. பின்னர் இந்த இடம் குப்பைக் கூளங்களையும் குற்றவாளிகளின் பிரேதங்களையும்

எரிப்பதற்குப் பயன்படுத்தும் இடமானது. நெருப்பு எவைகளை எரிக்காமல் விட்டுவைத்திருந்ததோ அவைகளைப் புழுக்கள் தின்றன; எனவே அவியாத அக்கினி என்னும் வழக்குச்சொல்லும் சாகாத புழுக்கள் என்னும் சொல்லும் எதுவும் தப்பிக்காது என்பதையும், எல்லாம் மொத்தமாக அழிக்கப்பட்டுவிடும் என்பதையும் காட்டுவதாக அந்த உணர்த்துதல் இருந்தது.

| | |
|---|---|
| **மல்கியா 4:1,3** | அக்கிரமம் செய்கிற யாவரும் பெரும் பாவியாயிருப்பார்கள் … அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகும். அவர்கள் சாம்பலாயிருப்பார்கள். |
| **ரோமர் 6:23** | பாவத்தின் சம்பளம் மரணம். |
| **எசே. 18:4,20** | பாவம் செய்கின்ற ஆத்துமாவே சாகும். |
| **எசே. 28:18,19** | பிசாசு சாம்பலாக்கப்படும்; இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்… என்று வேதம் கூறுகிறது! |
| **சங். 37:10** | துன்மார்க்கன் இரான். அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால், அவன் இல்லை. |
| **சங். 37:20** | கர்த்தருடைய சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணம் போல் புகைந்துபோவார்கள்; அவர்கள் புகையாய்ப் புகைந்து போவார்கள். |
| **ஓபதியா 1:15,16** | இராதவர்களைப்போல் இருப்பார்கள் |
| **நாகூம் 1:9,10** | முழுவதும் காய்ந்துபோன செத்தையைப்போல் எரிந்து போவீர்கள் |
| **2 பேதுரு 2:12** | கெட்டழிந்து போவார்கள். |
| **வெளி. 20:9** | வானத்திலிருந்து அக்கினி இறங்கி, அவர்களைப் பட்சித்துப்போட்டது. (இது ஆயிரம் வருடத்தின் முடிவில் நிகழும் இரண்டாம் மரணமாக இருக்கிறது.—வெளி. 20:14,15). |
| **வெளி. 21:4** | இனி வருத்தமும் இல்லை. |

**குறிப்பு:**—2 பேதுரு 2:4 லுள்ள நரகம் என்னும் வார்த்தை ஒரு விசேஷமான டார்ட்டாரு என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது. இது அவர்களுடைய தெய்வங்களின் தண்டனை அளிக்கும், பூமியின் ஆழத்திலுள்ள இடத்தை விவரிக்க பயன்படுத்தப்பட்ட ஒரு விசேஷமான

வார்த்தையாக உள்ளது. சாத்தானும் அவனுடைய தூதர்களும் தேவனால் கொடுக்கப்படும் எதிர்காலத் தண்டனையிலிருந்து தப்பிக்கமுடியாத இடத்தில் வைக்கப்பட உள்ளனர் என்பதை விவரிக்க பேதுரு இந்த இடத்தில் அந்த வார்த்தையை உபயோகிக்கின்றான்.

## நரக அக்கினிக்கு ஒரு முடிவு உண்டு என்னும் கோட்பாட்டிற்கான மறுப்புகள்:–

**1. ஏசாயா 66:24:** இது இங்கு பிரேதங்களைப்பற்றிப் பேசுகிறது. அதன் அர்த்தம் இறந்துபோன உடல்களாகும். இங்கு உயிருள்ள ஜனங்களைப் பற்றியோ ஆத்துமாக்களைப் பற்றியோ ஆவிகளைப் பற்றியோ குறிப்பிடவில்லை.

சாகாத, புழு அவியாத அக்கினி (இன்னோவாம் அல்லது கெஹினா என்னும் பள்ளத்தாக்கிலிருந்து எடுக்கப்பட்டது) என்பது வேதாகமத்தி லிருந்துள்ள முழு அழிவைப்பற்றிய ஒரு சித்திரமாக உள்ளது. அந்தப் பிரேதங்கள் இருந்ததைப் போலவே, அவைகள் முற்றிலுமாக மொத்தமாக அழிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்த இங்கு எதாவது இருக்கும். இந்த வசனம் துன்மார்க்கர்களின் நித்திய ஜீவனைப்பற்றிப் போதிக்காமல், அதற்கு எதிரானதாக இருக்கிறது. துன்மார்க்கர்கள் யாவரும் முற்றிலுமான முடிவுக்கு வருவார்கள் என்று போதிக்கிறது.

**2. மத். 25:41** நித்திய அக்கினி. எபிரேய, கிரேக்க மொழியின்படி நித்திய அக்கினி என்றால், எல்லாவற்றையும் அது முதலில் எரித்து முடிக்கின்ற வரை ஒருபோதும் அணையாத அக்கினி என்று பொருள்படும். அதன்பின் எரிப்பதற்கு ஒன்றும் இல்லாததினால் அது அழிந்துவிடும். நித்திய அக்கினி என்றால் அதிலிருந்து தப்பிக்கமுடியாது என்றும் அர்த்தப்படும். எல்லாம் அழிக்கப்பட்டு விடும்.

நித்தியமாக இருப்பது பாவியாக இல்லாமல், அக்கினியாக இருக்கிறது என்பதையும், எரியாமல் எதுவும் விட்டுவைக்கப்படாதவரை இது எரிந்து கொண்டிருக்கும் என்பதை கவனியுங்கள். (நித்தியம் என்னும் ஆங்கில அர்த்தத்தில் இல்லாமல், யூதர்கள் அதைப் பயன்படுத்திய விதத்தில் அதன் பலன் நித்தியமானது என்னும் வகையில் இருக்கிறது).

சோதோம், கொமோரா பட்டணங்களை முற்றிலுமாக அழித்த அக்கினியைப்பற்றி யூதா 7 நித்திய அக்கினி என்று பேசுவதைக் கவனியுங்கள். ஆனால் இந்த அக்கினி இன்றும் எரிந்துகொண்டிருக்கவில்லை. அது எல்லாவற்றையும் முற்றிலுமாக எரித்ததினால், நித்திய அக்கினி என்றுக் கூறப்பட்டது. அந்த அக்கினி அதன் பலனில் நித்தியமாக இருக்கிறது.

சோதோம், கொமோரா பட்டணங்கள் சாம்பலாக்கப்பட்டன என்று 2 பேதுரு 2:6 கூறுகிறது. உலகத்தின் முடிவின்போதும் இவ்விதமாகத்தான் இருக்கும்.

பின்பு அவர் சோதோம், கொமாரா பட்டணங்களை சாம்பல் குவியலாக மாற்றி, பூமியின் முகத்தில் இல்லாதபடி அவர்களை துடைத்து நீக்கி, எதிர் காலத்திலுள்ள தெய்வபக்தியில்லாத அனைவரும் பின்னிட்டுப்பார்த்துப் பயப்படும்படி அவர்களை ஓர் உதாரணமாக வைத்தார்.—**ஜீவனுள்ள வேதாகமம் 2 பேதுரு 2:6.**

**3. மத். 25:46** நித்திய ஆக்கினை—நித்தியமாக இருப்பது. பாவியாக இல்லாமல், ஆக்கினையாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். பாவத்திற்கான தண்டனை மரணமாக இருக்கிறது (ரோமர் 6:23). இந்த மரணம் தான் நித்தியமானதாக இருக்கிறது. இரண்டாம் மரணம் (பாவிகள் சந்திக்கவேண்டியதாக உள்ள உண்மையான மரணம்), நித்தியமானதாக இருக்கிறது. இந்த மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் உண்டாகாது. அவர்கள் மறுபடியும் இனி ஒருபோதும் உயிர்வாழ மாட்டார்கள் அந்த மரணம் என்றென்றைக்குமானது. அது நித்தியமானது.

**4. மாற்கு 9:43–48** இது புழுக்களும் அக்கினியும் வீசப்பட்ட அனைத்தையும் அழித்திருந்த இடமான கெஹினா என்பதன் ஒரு சித்திரமாக இருந்தது. உலகத்தின் முடிவில், இதைபோலவே இருக்கும்; அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும். அவியாத அல்லது அவிக்கமுடியாத என்னும் வார்த்தைகள் அந்த அக்கினி ஒருபோதும் அழியாது என்று அர்த்தப்படாமல், ஒரு மனிதனாலும் அதை அவிக்கமுடியாது என்பதாக உள்ளது. அது எல்லாவற்றையும் இந்த உலகத்தையுங்கூட எரித்துவிடக்கூடியவிதமாக உஷ்ணமானதாகவும், பயங்கரமானதாகவும் இருக்கும் (2 பேதுரு 3:10–12). வரவிருக்கும் அழிவின் காரணமாக, (மாற்கு 9:44–48) நமது தேவனிடமிருந்து நம்மை நீக்கக்கூடிய எல்லா பாவங்களையும் விட்டுவிலகவும், அந்தப் பாவம் நமக்கு நமது சொந்த வலது கண்ணைப்போலவோ சொந்த வலது கையைப்போலவோ விலை மதிப்புள்ளதாக இருந்தாலுங்கூட நாம் அதை விட்டுவிலக வேண்டும் என்று அது நமக்குக் கூறுகிறது.

**5. மத். 3:12 லூக்கா 3:17** அவியாத அக்கினி.

அவியாத அக்கினி என்றால், அந்த அக்கினி ஒருபோதும் அணையாது என்பது அர்த்தமன்று. ஒருவனாலும் அதை அணைக்கமுடியாது என்பது அதன் அர்த்தமாகும். அது எல்லாவற்றையும் எரித்துவிடும். எருசலேமின் பாவத்தின் காரணமாக, அந்த நகரத்தை அக்கினி பட்சிக்கும் என்றும், அங்து

ஒருபோதும் அவிக்கமுடியாத அக்கினியாக இருக்கும் என்றும், நாம் எரே. 17:27–ல் வாசிக்கிறோம். இது கி.மு.587–ல் சிதேக்கியா என்னும் அரசனின் காலத்தில் நேபுகாத்நேச்சரால் நிறைவேற்றப்பட்டது (2 நாளாகமம் 36:19). அந்த அக்கினி அதன் வேலையைச் செய்துமுடித்ததும் அணைந்துவிட்டது; உண்மையாகவே, அது இன்று எருசலேமில் எரிந்துகொண்டிருக்கவில்லை.

ஜீவனுள்ள வேதாகமம், எரே. 17:27–ன் கடைசிப்பகுதியைக் கீழ்க்காணும் விதமாக மொழிபெயர்க்கிறது.

அந்த அக்கினி அரண்மனைகளெங்கும் பரவி, முற்றிலுமாக அழிக்கும். சீறும் அந்த அக்கினிச் சுவாலைகளை அணைக்க ஒருவனும் தகுதியுள்ளவனாக இருக்கமாட்டான்.

**6. லூக்கா 16:19–31** இந்தக் கதையில் ஆத்துமாக்களைப்பற்றியோ ஆவிகளைப்பற்றியோ குறிப்பிடப்படவில்லை. பரலோகம், நரகம் ஆகியவை களைப்பற்றியும் அவை ஒன்றுக்கொன்று எவ்வளவு அருகில் இருக்கின்றன என்பதைப் போதிக்காமல், பொருளாசைமிக்க பரிசேயர்களுக்கு (வச. 13,14) செல்வம் பரலோகத்திற்கான அனுமதிச் சீட்டன்று என்பதைச் சித்தரிக்கக் கூறப்பட்ட உவமையாக இருந்தது. இந்த முக்கியமான விஷயத்தைச் சித்தரித்துக் காட்ட இயேசு பயன்படுத்திய இந்தக் கதை, யூதர்களால் பாபிலோனிலிருந்து கொண்டுவரப்பட்ட, மிகவும் நன்றாக அறியப்பட்டிருந்த யூதர்களுடைய கதைகளில் ஒன்றாக இருந்தது.

பழைய காலத்திலும் நவீன காலத்திலும் உள்ள மிகச் சிறந்த வேதாகம விளக்க உரையாளர்கள் காரணத்துடன் இதனை ஓர் உவமை என்று எண்ணுகின்றனர்.—**லூக்கா 16:19–31 பற்றிக் கிரேக்க ஏற்பாடு என்னும் நூல் ஆசிரியர் ப்ளூம் ஃபீல்ட்.**

**7. வெளி. 14:11; 20:10** இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். துன்மார்க்கர்களுக்குத் தப்பிச் செல்லும் மார்க்கம் இல்லையென்னும் அர்த்தத்தை இது கொடுக்கிறது. அவர்கள் முற்றிலுமாக எரிந்து தீரும்வரை, இனி எரிக்கப்படுவதற்கு வேறொன்றுமில்லை என்னும்வரை அவர்கள் அந்த அக்கினியில் இருப்பார்கள்.

எபிரெய மொழியிலும் கிரேக்க மொழியிலும் என்றென்றைக்குமுள்ள சதாகாலம் என்பது, தப்பிக்கும் மார்க்கம் எதுவுமின்றி உயிருள்ள காலம்வரை அங்கிருத்தல் என்று பொருள்படும். என்றென்றைக்கும் உள்ள சதாகாலம் என்பதைத் தேவனுக்கும் மகிமையில் உள்ள பரிசுத்தவான்களுக்கும் பொருத்துவது முடிவில்லாத ஜீவன் என்று பொருள்படும்; ஏனெனில், தேவன் அழியாமை உள்ளவராக இருக்கிறார் என்பதுடன் பரிசுத்தவான்களுக்கும்கூட

நித்திய ஜீவன் வழங்கப்படும்; ஆனால், என்றென்றைக்கும் என்னும் அதே வார்த்தைகள் துன்மார்க்கர்களுக்குப் பொருத்தப்படும்போது, அவர்களால் அக்கினிச் சுவாலைகளிலிருந்து ஒருபோதும் தப்பமுடியாது என்று பொருள்படும். துன்மார்க்கர்களுக்கு அழியாமை கொடுக்கப்படாததினால், அவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள். இனி ஒரு அலறுதலும் இருக்காது என்று வெளி. 21 கூறுகிறது. (அப்படியே துன்மார்க்கர்கள் அழிக்கப்படுவார்கள், நரக அக்கினி ஒரு முடிவுக்கு வரும்). தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது என்று வெளி. 20:9 கூறுகிறது.

யூத மொழிகளிலுள்ள என்றென்றைக்கும் என்னும் வார்த்தைக்கு நன்கு அறியப்பட்டுள்ள அர்த்தத்தை வேதாகமத்தில் உள்ள வேறு சில வாக்கியங்கள் காட்டுவதைக் கவனியுங்கள்.

| | |
|---|---|
| **யாத். 21:6** | ஒரு வேலைக்காரன் அவனுடைய எஜமானுக்கு என்றென்றைக்கும் ஊழியஞ்செய்யவேண்டும்; அதாவது, அவன் உயிருடன் இருக்கும்வரை ஊழியம் செய்ய வேண்டும். |
| **1 சாமு. 1:22** | சாமுவேல் கர்த்தருடைய ஊழியத்தை என்றென்றைக்கும் செய்யவேண்டும்; அதாவது, அவன் உயிருடன் இருக்கும் காலம்வரை செய்யவேண்டும் (வச. 28). |
| **யோனா 2:6** | யோனா சமுத்திரத்தின் அடிவாரத்தில் என்றென்றைக்கும் … அதாவது அவனுடைய சொந்த வல்லமையினால் அவனால் ஒருபோதும் தப்பிக்கமுடியாது. (ஆனால் இந்த என்றென்றைக்கும் என்பது மூன்று நாட்களுக்கு மட்டுமாக இருந்தது). |
| **பிலெமோன் 15** | பிலேமோன் ஒநேசிமுவை என்றென்றைக்கும் அவனுடையவனாக மீண்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும்; அதாவது அவனுடைய மீதியான வாழ்க்கை முழுவதிலும் ஏற்றுக்கொள்ளவேண்டும். |

எபிரேய கிரேக்க மொழியிலுள்ள என்றென்றைக்கும் என்னும் வார்த்தைக்குக் கற்றுணர்ந்தவர்கள் காட்டும் அர்த்தம். அதன் ஆரம்ப அர்த்தத்தில் அது குறுகிய அல்லது நீண்ட காலத்தை அடையாளப்படுத்துகிறது. அதன் இடைவிடாத கால தூரத்தில் அடிக்கடி கிரேக்க இலக்கிய நடையில் மனித வாழ்க்கையின் காலத்தைக் குறிக்கிறது.—**புதிய ஏற்பாட்டின் ஒரு பொருள் தன்மைகள் அயோன் என்றென்றைக்கும் என்பதைப்பற்றிய**

**விளக்கம் பக்கம் 208, 209 ஃபிரெஞ்ச் தலைமை பேராயர்.**

அந்தத் தொடுவானம் முடிவில்லாத தூரத்தில் இருந்தாலும் சரி அல்லது சீசரின் வாழ்க்கையின் கால அளவைவிட அதிகமான தூரத்தில் இல்லாமலிருந்தாலும் சரி, பொதுவாக அந்த வார்த்தை, தொடுவானம் பார்வையில் இல்லையென்பதைப் பொதுவாக விவரிக்கிறது.

கிரேக்க ஆவணத்தின் சொல்பகுதி. ஐயோனியோஸ் என்றென்றைக்கும் என்பதுபற்றி J.M மவுல்டனும் ஜார்ஜ் மில்லிகனும். காலத்தில் இடையே உள்ள தூரம் விசேஷமாக வாழ்வின் ஒரு காலம்... மனிதனின் வயது... (அயோன் என்றென்றைக்கும் என்பதின்கீழ்) முதல் அர்த்தம் பட்டியலிடப்பட்டது. லிட்டெல் ஸ்காட் ஆகியோரின் கிரேக்க நிகண்டு முடிவில்லாதது என்றெல்லாம் கால இடைவேளையை விவரிக்கிறது.—**நித்தியம் என்பதுபற்றி—புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் அகராதி W.E. வின்சி .**

அயோன் என்னும் வார்த்தையை ஒரு மனிதனின் ஆயுட்காலத்துக்கும் பயன்படுத்தமுடியும்.—**காலம் என்பதைப்பற்றி வேதாகம இறையியல் வார்த்தைகள் பற்றிய நூல், பக்கம் 266. ஆலன் ரிச்சர்ட்சன் 1950.**

காரியத்தின் தன்மை அனுமதிக்கின்ற காலம்வரை அதன் பண்புச்சொல் கால இடைவெளியைக் குறிப்பிட நடத்துகிறது.—**பிலேமோன் 15,16—ல் உள்ள என்றென்றைக்கும் என்னும் வார்த்தையை பயன்படுத்துவதைப்பற்றி, பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்குமான கேம்ப்ரிட்ஜ் வேதாகமம், H.C.G. மூல்.**

அது வாழ்க்கையின் எல்லா நாட்களையும் பொதுவாக அடையாளப் படுத்துகிறது.—**ஓலாம் என்பதைப்பற்றி ஜெஸ்நியல் 1846 மொழிபெயர்ப்பு, S.P. ட்ரெஜ்ஜிலெஸ், பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் பற்றிய எபிரெய கல்தேய நிகண்டு.**

என்றென்றைக்கும்— அதாவது அவனுடைய வாழ்க்கையின் முடிவுவரை—**யாத். 21:6 பற்றிக் கேம்ப்ரிட்ஜ் வேதாகமம்.**

நித்தியம் என்றென்றைக்கும் எப்பொழுதும் என்னும் வார்த்தைகள் சில சமயங்களில் நீண்ட காலத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் கண்டிப்பாகப் புரிந்து கொள்ளக்கூடாதவைகளாக உள்ளன.—**நித்தியம் என்பதின்கீழ்: அலக்ஸான்டர் குருடன்சின் ஒத்துவாக்கிய அகராதி.**

“ஆனால் தேவனிடமிருந்துள்ள அக்கினி வானத்திலிருந்து அவர்கள் மீது சொரிந்திருக்கும்போது பெரிய மனிதர்கள், பலவான்களான மனிதர்கள், மேன்மையானவர்கள், ஏழைகள், துன்பப்படுபவர்கள், ஆகிய அனைவரும்

ஒன்றுசேர்ந்து எரிந்திருக்கின்றனர். சிலர் விரைவில் அழிக்கப்பட்டபோது, மற்றவர்கள் நீண்ட நேரம் பாடுபட்டதை நான் கண்டேன். அவர்கள் அவர்களுடைய சரீரங்களால் செய்த செயல்களுக்குத்தக்கதாகத் தண்டிக்கப் பட்டிருந்தனர். சிலர் அநேக நாட்களாக எரிந்துகொண்டிருந்தனர். அவர்களில் ஒரு பகுதி எரிந்து முடியாமல் இருந்த காலம்வரை, பாடுகள்மிக்க அவர்களுடைய உணர்வுகள் தங்கியிருந்தன. இரையாகும்படியான அவர்களுடைய மிகக் குறைவான சிறுபகுதியிருக்கும் காலம்வரை, ஜீவனின் புழு சாகாமலும் அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும்.''—**EW 294.**

''தேவன் இரக்கத்தில் சந்தோஷப்படுபவர். மீகா 7:18 ... அழிக்கும் செயலும் நியாயத்தீர்ப்பில் வெளிப்படையாகக் குற்றம் சாட்டப்படுதலும் அவர்களுக்கொரு அபூர்வமான செயல்களாக இருக்கின்றன (ஏசாயா 28:21). ஆனால் இரக்கத்தினாலும் அன்பினாலும் எதிர்காலத்திலிருந்த திரையை அவர் உயர்த்தி, பாவகரமான ஒரு நடத்தையின் பலன்களை அவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

(துன்மார்க்கர்களை அழிப்பது) தேவனுடைய பகுதியாக உள்ள ஒருதலைபட்சமான வல்லமையுள்ள அவரது இரக்கத்தை நிராகரித்தவர்கள், அவர்கள் விதைத்ததை அறுவடை செய்கின்றனர். தேவன் ஜீவனின் ஊற்றாக இருக்கிறார். ஒருவன் பாவத்துக்குச் சேவைசெய்வதைத் தெரிந்துகொள்ளும்போது, அவன் தன்னைத் தேவனிடமிருந்து வேறுபடுத்திக் கொள்கிறான். இவ்வாறாக, அவன் தன்னைத்தானே ஜீவனிலிருந்து வெட்டி நீக்கிக்கொள்கிறான்.''—**DA 763,764.**

''பாவியைத் தண்டிக்க முடியாத அளவிற்கு தேவன் மிக அதிகமான இரக்கம் உடையவராக இருக்கிறார் என்று தங்களுக்குத் தாங்களே முகஸ்துதி செய்துகொள்ளுபவர்கள், அவருடைய நீதியான பிரமாணத்தை மீறும் ஒவ்வொருவரையும் பழி வாங்குதல் சந்திக்கும் என்பதைப்பற்றி இரண்டு மடங்கு நிச்சயமுள்ளவர்களாவதற்குக் கல்வாரியைமட்டும் நோக்குபவர்களாக இருக்கவேண்டும்.''—**ST, April 3, 1884.**

**விசேஷமான குறிப்பு**:— சிலர் கடந்த காலத்தில் தங்களுடைய வாழ்க்கையைத் தேவனுக்குக் கொடுத்திருப்பதனால், அதற்குப்பின் அவர்கள் தேவனைவிட்டு விலகிச்சென்று, தொடர்ச்சியான பாவமிக்க வாழ்க்கைக்குள் பிரவேசித்திருந்தபோதிலும், அவர்களால் நரகத்தின் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளமுடியும் என்று நம்பித் தங்களை தாங்களே வஞ்சித்துக்கொள்கின்றனர். இந்தக் கோட்பாடு சில சமயங்களில் நித்திய பாதுகாப்பு அல்லது ஒரு தடவை இரட்சிக்கப்பட்டால் எப்பொழுதும் இரட்சிப்பு

என்று கூறுகின்றனர். அப்படியிருந்தபோதிலும், நாம் தொடர்ச்சியாக இயேசுவிற்கு அருகில் இருக்கவேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது. அவருக்குள்மட்டுமே நாம் பாதுகாப்பாக இருக்கமுடியும்; கீழ்க்காணும் வசனங்களைக் கவனியுங்கள் :–

| | |
|---|---|
| **மத். 18:23–25** | வேலைக்காரன் மன்னிக்கப்பட்டான் (வச. 27); ஆனால், தேவனிடம் மன உருக்கம் இல்லாமல் இருந்ததனால், மன்னிப்பு பின்னிழுத்துக் கொள்ளப்பட்டது; அவன் தண்டனையை அனுபவிக்கவேண்டியவனானான். (வச. 32,35). |
| **மத். 24:13** | முடிவு பரியந்தம் நிற்பவன் … |
| **யோவான் 15:1–7** | நிலைத்திரு. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், … அவன் எரியுன்டு … அக்கினியிலே போடுகிறார்கள். அவைகள் எரிந்துபோம். (வச. 6). |
| **ரோமர் 11:22** | உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார். அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால், உனக்குத் தயவு கிடைக்கும். நிலைத்திரா விட்டால், நீயும் வெட்டுண்டுபோவாய். |
| **1 கொரி. 9:27** | மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகின்ற நானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். |
| **எபி. 6:4–6** | மறுதலித்துப்போனவர்கள். (வச. 6). |
| **எபி. 10:26,27** | நான் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாய் இருந்தால், நியாயத்தீர்ப்பு வரும் என்ற பயத்தோடு எதிர்பார்த்தலும், பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். |
| **எபி. 10:38** | பின்வாங்கிப்போவானானால், அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். |
| **2 பேதுரு 2:20–22** | பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். (வச. 20). ★ |

# 50

# ஆவி மார்க்கம்!

Mவி மார்க்கம் அஞ்ஞான நாடுகளில் மட்டுமல்லாது கிறிஸ்தவ நாடுகளிலும் காணப்படுகின்றது. ஆவி மார்க்கத்திலுள்ள ஆவிகள் உண்மையாகவே சாத்தானுடைய விழுந்துபோன தீயதூதர்களாக இருக்கின்றனர். பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்ட அவர்கள் அற்புதங்கள், சுகமளித்தல், அடையாளங்கள் ஆகியவைகளைச் செய்வதன் மூலமாக, உலகத்தை வஞ்சித்து தேவனுக்கு எதிரான கலகத்தில் தொடர முயன்றுகொண்டிருக்கின்றனர். மரித்தவர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றனர் என்று கூறி, சாத்தானின் இந்தப் பொல்லாத ஆவிகள் இறந்துபோனவர்களைப்போல, (அவர்களுடைய தோற்றத்தில்) நடிக்கின்றனர். கடைசி நாட்களில் நடைபெறுகின்ற மிகப் பெரும் வஞ்சகங்களில் ஒன்றாக இது இருக்கிறது. ஆவி மார்க்கத்திற்கெதிராக வேதாகமம் நம்மைப் பலமாக எச்சரிக்கிறது.

### பரலோகத்திலிருந்து சாத்தானின் விழுகை

**எசே. 28:14** ஆதியில் சாத்தான் தேவசிங்காசனத்தைச் சூழ்ந்திருந்து—அபிஷேகம்பண்ணப்பட்டிருந்த கேருபீன்களில்—தேவதூதர்களில்—ஒருவனாக இருந்தான்.

**எசே. 28:15** அவன் குறையற்றவனாகச் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான்.

**எசே. 28:17** மேட்டிமை அவன் விழுகைக்குக் காரணமாக இருந்தது.

**ஏசாயா 14:12–15** ஆதியில் சாத்தான், லூசிபர் (பேரொளிச் செல்வன்) என்று அழைக்கப்பட்டிருந்தான். மேட்டிமையின் மூலமாக அவன் விழுந்தான். அவன் தேவனுக்குச் சமமாகவேண்டும் என்று விரும்பினான்.

**வெளி. 12:7–10** சாத்தானும் அவனைப் பின்தொடர்ந்த தேவ தூதர்களும் பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டனர்.

## முதல் பொய்

| | |
|---|---|
| **ஆதி. 2:17** | பாவம்செய்தால் மரிப்பான் என்று தேவன் ஆதாமிடம் கூறினார். (பாவம்செய்யும் அதே நாளில் மரணதண்டனை அவன்மீது அறிவிக்கப்படும். அந்த நாளிலிருந்து மரணம் அதன் வேலையைத் தொடங்கும்). |
| **ஆதி. 3:4** | முதல் பொய். ஆதாமும் ஏவாளும் சாகமாட்டார்கள் என்று சாத்தான் அறிவித்தான். (சாத்தானின் இந்தப் பொய்யை உலகத்திலுள்ள மிக அதிகமான சபைகள் பின்பற்றி மரணத்திற்குப்பின்னும் மனிதன் உயிர்வாழுகிறான் என்று கூறுவது மிகவும் துயரமிக்கதாக இருக்கிறது. |
| **பிர. 9:4–6, 10** | "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்று வேதாகமம் கூறுகிறது. |
| **சங். 146:3,4** | "அந்நாளிலே அவனுடைய யோசனைகள் அழிந்துபோம்" என்று வேத வாக்கியம் கூறுகிறது. |
| **யோவான் 11:11** | "நமது சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந் திருக்கிறான்" என்று இயேசு கூறுகிறார். |

## சாத்தான் எப்படிச் செயலாற்றுகிறான்?

| | |
|---|---|
| **மத்.7:15** | (ஓர் உண்மையான கிறிஸ்தவனைப்போல தோன்ற முயன்றுகொண்டு) ஆட்டின் உடையைப் போர்த்திக்கொண்டு அவன் வருகிறான். |
| **மத். 7:21–23** | நாம் உண்மையாகவே தேவனுடையவர்களாகவே இருக்கிறோம் என்பதற்கு, கர்த்தாவே என்று கூறுவதும், தீர்க்கதரிசனம் உரைப்பதும், வெளித்தோற்றத்தில் பிசாசுகளைத் துரத்துவதும், அநேக ஆச்சரியமான செயல்களைச் செய்வதும் ஒரு அடையாளம் அல்ல! |
| **மத். 24:24** | "(கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாக) பெரும் அடையாளங்களினாலும் ஆச்சரியங்களி னாலும் வஞ்சிக்கச்" சாத்தான் முயலுகிறான். |
| **2 கொரி. 11:14,15** | மக்களை வஞ்சிப்பதற்காக ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான். |
| **2 தெச. 2:9–12** | "சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்..." அவர்கள் பொய்யை |

விசுவாசிக்கத்தக்கதாகச் செயலாற்றுகிறான்.

**வெளி. 13:13–14** வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணுவது போன்ற பெரிய ஆச்சரியங்களினாலும் அற்புதங்களினாலும் அவன் உலகத்தை வஞ்சிப்பான்.

**வெளி. 16:13,14,16** அர்மகெதோன் யுத்தத்திற்காக அவன் உலகத்தை ஆயத்தம் செய்வான்.

**ஆவி மார்க்கத்திற்கெதிரான தேவனுடைய எச்சரிப்பு**

| | |
|---|---|
| **லேவி.**19:31 | "அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடிக் குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்." |

**குறிப்பு:**– யாராவது ஒருவனுக்கு நண்பனாகவோ தோழனாகவோ இருந்து, அந்த நபர் என்ன பேசவேண்டும் அல்லது என்ன செய்யவேண்டும் என்று கூறுகின்ற ஓர் ஆவிதான், அறிமுகமான ஆவி என்பதன் அர்த்தமாக உள்ளது. அப்படிப்பட்ட அறிமுகமான ஆவியை உடைய மக்கள் தீட்டானவர்களாக உள்ளனர். அவர்கள் நாம் கருதாதவர்களாகவோ அல்லது கவனிக்காதவர்களாகவோ இருக்கவேண்டும்.

**லேவி. 20:27** "அஞ்சனம் பார்க்கிறவர்களும், குறி சொல்லுகிறவர்களும், மந்திரவாதிகளும் நிச்சயமாகவே கொலைசெய்யப்படவேண்டும்."

**உபா. 18:9–14** (அறிமுகமான ஆவியிடம் ஆலோசனை கேட்கும் ஒருவன்) அல்லது மரித்தவர்களிடம் ஆலோசனை கேட்கும் ஒருவன் (மரித்தவர் களுடன் தொடர்புகொள்ளுவதாக அல்லது தூதைப் பெறுவதாகக் கூறிக் கொள்ளுபவன்), இவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.

**ஏசாயா 8:19,20** அறிமுகமான ஆவிகளை உடையவர்களாக இருப்பவர்களிடத்திற்கு நாம் ஒருபோதும் செல்லக்கூடாது; அல்லது மந்திர வாதிகளிடத்திற்கும் செல்லக்கூடாது; அல்லது உயிருள்ளவர்கள் செத்தவர்களிடத்தி லிருந்து உதவியைத் தேடாமல், நாம் தேவனிடத்திற்கு மட்டும் செல்லவேண்டும்.

**ஆவி மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் அழிக்கப்படுவார்கள்!**

**1 நாளா. 10:13,14** சவுல் அஞ்சனம் பார்க்கிறவளிடத்தில் விசாரிக்கச் சென்றது, அவனுடைய மரணத்திற்கான ஒரு காரணமாக இருந்தது. (ஆவிகளிடத்தில் பேசி, அவைகளிடமிருந்து தூதைப் பெறும் ஒருவன் அல்லது ஒருத்தி சாத்தானின் முகவராக

| | |
|---|---|
| | இருக்கிறான் — இருக்கிறாள்). |
| **ஏசாயா 47:13,14** | ஜோதிடர்கள், நட்சத்திரக் கணிப்பாளர்கள் மாதங்களைக் கணிப்பவர்கள் (ஒவ்வொரு மாதத்திலும் என்ன நடக்கும் என்று கூறுபவர்கள்). அவர்கள் தாளடியைப்போல் இருப்பார்கள். நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும். நெருப்பு விட்டு வைக்கப்படாதவிதமாக அவர்களை முற்றிலுமாக எரித்துவிடும். |
| **மத்தேயு 8:29** | பொல்லாத ஆவிகள், சரியான நேரத்தில் — உலகத்தின் முடிவில் — தண்டிக்கப்படும் என்பதை அவைகள் அறிந்திருக்கின்றன. |
| **வெளி. 20:9,10,14,15** | சாத்தான், துன்மார்க்கர்கள், பிசாசுகள் ஆகியோரின் முடிவு அக்கினிக் கடலில் இருக்கிறது. |
| **வெளி. 21:8** | "சூனியக்காரர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்." |
| **எசே. 28:18,19** | "சாத்தான் அக்கினியினால் பட்சிக்கப்பட்டு, சாம்பலாக்கப்படுகிறான். இனி ஒருபோதும் இருக்கமாட்டான்." |

## தப்பிக்கும் மார்க்கம்

| | |
|---|---|
| **லூக்கா 4:33–37** | பொல்லாத ஆவிகளிடமிருந்து நம்மை மீட்கின்ற வல்லமையை உடையவராக இயேசு இருக்கிறார். (**மத். 8:28–33; மாற்கு 1: 23–27; லூக்கா 8: 26–36** – யும் சேர்த்து வாசிக்கவும்). |
| **ரோமர் 5:6** | "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்." |
| **எபி. 7: 25** | நாம் கிறிஸ்துவினிடத்திற்குமட்டும் வந்தோமானால், கிறிஸ்து நம்மை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். |
| **யோவான் 6:37** | இயேசுவை ஏற்றுக்கொள்ளுவதினால், நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம். |

**உபாகமம் 18:9–14** – ல் உள்ள வார்த்தைகள் விளக்கப்படுகின்றன.

"…தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறது". (**உபாகமம் 12: 31; லேவி. 18: 21; 20: 25** – யும் சேர்த்து வாசிக்கவும்)

அக்கினையை ஆராதித்தல் என்பது சூரியனை ஆராதிப்பதன் ஒரு பகுதியாக இருக்கிறது. இது ஆதிகாலத்திலிருந்தே அஞ்ஞான மார்க்கத்தினால் நடத்தப்பட்டிருந்து, இன்றுங்கூட பெர்சியாவிலும் மற்ற இடங்களிலும் செயல்

படுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டுக் காலங்களில் அஞ்ஞானிகளால் மோளேகு ஆராதிக்கப்பட்டிருந்து, சட்டரீதியாக இல்லாத பிள்ளைகளை உண்டுபண்ணவும் பின்பு அந்த (தகப்பனில்லாத) பிள்ளைகளை அக்கினியில் எரிப்பதற்காகவும் விசேஷமான ஸ்திரீகளை ஏற்படுத்துவதும் மோளேகு என்னும் அஞ்ஞான தெய்வத்திற்குப் பிரியமானதாக இருந்தது என்று எண்ணப்பட்டிருந்தது. இந்தப் பயங்கரமான அருவருப்பு இஸ்ரவேலுக்குள்ளும் கடந்து வந்தது. (**2** இராஜா. **21:6;** எரெமியா **32:35**). இன்றுங்கூட சில தேசங்களில் அக்கினியில் கடக்கச் செய்வது தூய்மைப்படுத்துவதின் அடையாளமாக இருந்தது.

**ஆவித்தொடர்பு**:– சீட்டுபோடுவதினால் ஆவிகளின் சித்தத்தைக் கண்டறிதல் (அடிக்கடி தலையில்லாத அம்புகளைப் பயன்படுத்தி அறிதல்).

நாள் பார்க்கிறவன் உண்மையில் மேகங்களை ஆராய்பவன் ஆவிகளின் சித்தத்தைக் கண்டுபிடிக்கவும் அல்லது மேகங்களின் இயக்கத்தைக் கவனித்து என்ன நடக்க இருக்கிறது என்று கண்டுபிடிக்க முயலுபவன். **14** –ம் வசனத்தில் உள்ள நாள் பார்க்கிறவன் என்பது ஒரு தனி வார்த்தையிலிருந்து வருகிறது. அநேகமாக, காரியங்களைச் செய்வது சரியாக இருக்கும் என்னும் நேரங்களையும் சில காரியங்களைச்செய்வது நன்றாக இருக்காது என்னும் நேரங்களை, தனிப்பட்ட பிசாசின் நேரத்தை அறிபவன் என்னும் அர்த்தத்தை உடையதாக இருக்கிறது. சில அஞ்ஞான மக்கள் அப்படிப்பட்ட அநேக நேரங்களை உடையவர்களாக உள்ளனர். அப்படியிருந்தபோதிலும் எபிரேய மொழியிலுள்ள இந்த வார்த்தை இயற்கையின் ஓசைகள் என்று பொருள்பட்டு, இயற்கையில் பல்வேறுபட்ட இரகசியமான ஓசைகளின் அர்த்தத்தைத் கூறுபவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களையும் குறிக்கக் கூடும். (உதாரணம் – பூச்சிகளின் ரீங்காரம், இலைகளின் சலசலப்பு, ஆந்தையில் அலறல் போன்றவை).

**வசீகரிப்பவன்**:–ஆவி என்ன கூறினது என்பதை அறிந்துகொள்ளுவதற்காகப் பாம்புகளை ஆராயும் ஒருவன். அத்துடன் விலங்குகளின் குடல்கள் பறவைகள் பறப்பது போன்றவைகளையும் ஆராய்பவன். வசியம்செய்பவன் மக்கள் எதைச் செய்யவேண்டும் என்று விரும்புகிறானோ அதை ஒரு மந்திர வார்த்தையினாலோ ஜாலவித்தையினாலோ மக்களைச் செய்யவைக்கும் ஒருவனாகவும் இருக்கிறான்.

**பெண் மந்திரவாதி**:–பொல்லாத ஆவிகளுடன் இடைப்படுகின்ற ஒரு ஸ்திரீ, மாய வித்தை செய்யச் சில சமயங்களில் மருந்துகளையும் மருந்துச்

செடிகளையும் பயன்படுத்துபவள்.

**வசீகரிப்பவன்**:—கட்டுகளைக் கட்டுபவன் என்று பொருள்படும். தீமையைத் தூரமாக விலக்கிவைப்பதற்காகக் கயிறின்மீது இடப்படும் விசேஷமான முடிச்சுக்களாக இவைகள் இருந்தன. இன்று தீமையை மக்களிடமிருந்து விலக்குவதற்காக அவர்கள் எல்லா வகையான பொருட்களையும் தங்களுடன் கொண்டு (அணிந்து) செல்லுகின்றனர். தேவன் இதனைக் கண்டனம் செய்கிறார். ஏனெனில் மற்ற எவை களின்மீதும் நம்பிக்கை வைக்காமல், நமது நம்பிக்கை அவரது வாக்குத்தத்தங்களின் மீது மட்டுமே இருக்கவேண்டும்.

**அறிமுகமான ஆவிகளுடன் ஆலோசனை செய்பவன்**:—அறிமுகமான ஆவிகளுடன் பேசும் ஒருவன் அல்லது கேள்விகள் கேட்கும் ஒருவன். அதாவது குடும்பத்திலிருந்து பிரிந்து சென்றவர்களின் ஆவிகள் அல்லது நண்பர்களின் ஆவிகள் அல்லது ஒரு குடும்பத்தின் தோழன் அல்லது கேள்விகள் கேட்பவன் இவ்விதமாகப் பொல்லாத ஆவிகளுடன் ஆலோசனை செய்யும்போது, ஒரு காலி குப்பி அல்லது பறை அடிக்கடி உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அது ஓசைகளை உண்டுபண்ணியிருந்தது. அவைகள் ஆவிகளிடமிருந்து வந்த தூதுகள் என்று விளக்கம்செய்யப்பட்டிருந்தன.

**பொல்லாத ஆவிகளுடன் இடைப்படும் ஒரு மனிதன்**:— மந்திரவாதிக்கான எபிரெய வார்த்தை உண்மையில் அறிந்துகொள்ளுபவன் என்று அர்த்தம் கொடுக்கிறது. ஏனெனிஜல் மந்திரவாதி மாயாஜாலங்கள் அனைத்தையும், ஆவிகள் என்ன கூறின என்பதையும் அறிந்திஜருப்பதுபோல் பாசாங்குசெய்துகொண்டி ருந்தான்.

**மரித்தவர்களுடன் பேசுபவன்**:—அவன் மரித்தவர்களுடன் பேசும் ஒருவன் என்று அர்த்தப்படும்.உண்மையில் மரித்தவர்களின் ஆவிகள் என்பதுபோல் காட்டிக்கொண்டிருக்கும் சாத்தானின் ஆவிகளுடன் பேசிக்கொண்டிருக்கும் ஒருவன். பொல்லாத ஆவிகளுடன் இடைப்படும் மக்களைப்பற்றி விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள்.

**மாயவித்தைக்காரன்**:—மாய வித்தைகளைச்செய்து, அதிர்ஷ்டத் தைக்கூறும் ஒருவன் (எதிர்காலத்தில் மக்களுக்கு என்ன நடக்கும் என்று கூற முயற்சிக்கிறான்). மாய வித்தைக்காரர்கள் அவர்களுடைய மாய வித்தையினால் பொல்லாத ஆவிகளையும் நோயையும் நீக்கிவிட முடியும் என்று கூறியிருந்தனர்.

**சோதிடர்கள்**:—நட்சத்திரங்களைப் பார்த்து என்ன நடக்கப்போகிறது, என்பதைத் தங்களால் கூறமுடியும் என்று கூறினவர்கள். கனவுகளின்

அர்த்தங்களையும் தங்களால் கூறமுடியும் என்று பாசாங்குசெய்திருந்தனர்.

**சூனியக்காரன்**:–பொல்லாத ஆவிகளின் வல்லமையின் மூலமாகச் செயலாற்றும் எல்லா ரையும் விவரிக்கும் ஒரு பொதுவான வார்த்தை. அவர்களால் மரித்தவர்களிடமிருந்து தூதைப்பெறமுடியும் என்றும், விலங்குகளின் குடல்களை ஆராய்வதினாலும், பறவைகள் பறந்து செல்லுவதைக் கவனிப்பதினாலும், தண்ணீரின்மேல் எண்ணெயை ஊற்றி அது பரவும் விதத்தினாலும் என்ன நடக்கப்போகிறது என்பதைக் கூறமுடியும் என்றும் சூனியக்காரர்கள் கூறுகின்றனர்.

**நிகழவிருப்பதை உரைப்பவன்**:–நட்சத்திரங்களை ஆராய்ந்தும் மற்ற வழிகளிலும் எதிர்காலத்தில் மக்களுக்கு என்ன நடக்கும் என்று முடிவுசெய்ய முயலுகின்றவன் — முடிவுசெய்பவன் என்று அர்த்தப்படும்.

இவைகளைச் செய்கின்ற அனைவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் என்றும், இவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்கள் என்றும் வேதாகமம் நம்மை மிகத் தெளிவாக எச்சரிக்கிறது. நாம் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம், நமது நம்பிக்கை கர்த்தரில்மட்டுமே இருக்கவேண்டும்.

**முக்கியம்:**– இந்த விஷயத்தின்மீதான வகுப்பு ஆராய்ச்சியின் பகுதியாக மாபெரும் ஆன்மீகப் போராட்டம் **31–34** அதிகாரங்களை வாசியுங்கள்.

“அறிமுகமான ஆவிகள், மரித்தோரின் ஆவிகளாக இல்லாமல், சாத்தானின் தூதுவர்களான பொல்லாத தூதர்களாக உள்ளனர்.” — **P.P:685**

ஆவிகளின் உலகத்திலிருந்துள்ள பார்வையாளர்களைப்போலக் காணப்படும் பார்வையாளர்கள் சில சமயங்களில் கூறும் அபாய முன்னெச் சரிப்புகளும் எச்சரிப்புகளும் சரியானவை என்று மெய்ப்பிக்கின்றன; அதன்பின் நம்பிக்கையை ஆதாயப்படுத்தியிருக்கும்போது, வேதவாக்கியங்களின்மீதுள்ள விசுவாசத்திற்கு வெடிவைக்கின்ற நேர் எதிரான கோட்பாடுகளை அவைகள் முன் வைக்கின்றன. சில உண்மைகளை அவைகள் அறிவிக்கின்றன என்பதும் எதிர்காலச் சம்பவங்களைச் சில சமயங்களில் அவைகள் முன்னறிவிக்கும் தகுதியை உடையவனாக இருக்கின்றன என்பதும் அவைகளின் அறிக்கைகளுக்கு நம்பகத் தன்மையைத் தோற்றுவிக்கின்றன் அவைகளின் தவறான போதனைகளைத் திரளானவர்கள் உடனே ஏற்றுக்கொள்ளப்படுவதினால், அவைகள் வேதாகமத்தின் பரிசுத்தமான சத்தியங்களாக இருப்பதுபோல், ஆட்சேபணை இல்லாமல் நம்பப்படுகின்றன.

“இந்த அதிசயங்கள் தேவனிடத்திலிருந்துண்டானவை என்று பெற்றுக் கொள்ளும்படி சிலர் சோதிக்கப்படுவார்கள். நமக்கு முன்பாக நோயாளிகள் சுகப்படுத்தப்படுவார்கள். நமது பார்வையில் அற்புதங்கள் செய்யப்படும். சாத்தானின் பொய்யான அதிசயங்கள் அதிக முழுமையாக வெளிக்காட்டப்படும் போது, நமக்காகக் காத்திருக்கும் பரீட்சைகளுக்காக நாம் ஆயத்தமானவர்களாக இருக்கிறோமா? அநேக ஆத்துமாக்கள் கண்ணியில் அகப்படுத்தப்பட்டு எடுத்துக்கொள்ளப்படமாட்டாதா? தேவனுடைய வெளிப்படையான பிரமாணத் திலிருந்தும் கற்பனைகளிலிருந்தும் விலகிச்சென்று கட்டுக் கதைகளுக்கு செவி சாய்த்து, இந்தப் பொய்யான அதிசயங்களைப் பெற்றுக்கொள்ள அநேகருடைய மனங்கள் ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. நாம் விரைவில் ஈடுபட வேண்டியதாக உள்ள போட்டிக்காக நம்மை நாம் ஆயுததாரிகளாக்கிக்கொள்ள இப்பொழுது வகைதேடவேண்டும். ஜெபத்துடன் வாசிக்கப்பட்டு, நடைமுறையில் பொருத்தப்படுத்தப்பட்டுள்ள விசுவாசம் மட்டுமே சாத்தானின் வல்லமையிலிருந்து கேடயமாக நம்மைக் காத்து, கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நம்மை ஜெயம் கொண்டவர்களாகக் கொண்டுவரும்.” **— 1T:302**

“ஆத்துமா அழியாது, ஞாயிற்றுக்கிழமையின் பரிசுத்தம் என்னும் இரு தவறுகளின் மூலமாக சாத்தான் மக்களை அவனுடைய வஞ்சகத்தின் கீழ்க் கொண்டுவருவான்.” **— G.C:558**

“ரோமன் கத்தோலிக்க வல்லமையின் கரத்தைப் பற்றிக் கொள்ளுவதற்காக புரொட்டஸ்டாண்டு மார்க்கம் பிளவுக்கு அப்பால் தனது கரத்தை நீட்டும்போது, ஆவி மார்க்கத்துடன் தனது துயரத்தைப் பற்றிக்கொள்ள, அவன் பிளவைக் கடக்கும் போது, இந்த மூவரின் ஐக்கியத்தின் செல்வாக்கின்கீழ் நமது நாடு ஒரு புரொட்டஸ்ட் டாண்டு குடியரசு என்னும் அதன் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கொள்கைகளை மறுக்கும்போது, போப்புமார்க்கத்தின் தவறான கொள்கைகளையும் பொய்த் தோற்றத்தையும் பிரச்சாரம் செய்வதற்காக ஏற்பாடுசெய்யும்போது, சாத்தானின் ஆச்சரியமான செயல்களின் நேரம் வந்திருக்கின்றதென்பதையும், முடிவு சமீபமா யிருக்கிறது என்பதையும் அப்பொழுது நாம் அறிந்துகொள்ளலாம்.” **— T. 5:451**

“மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், அவர்களுக்குமுன் தோன்றுபவர்கள் பிசாசின் ஆவிகள் என்றும் கூறுகிற வேதாகம சத்தியங்களுடன் இந்த ஆவிகளை எதிர்த்து நிற்க தேவனுடைய ஜனங்கள் ஆயத்தமாயிருக்கவேண்டும். தவறு, பொய்த் தோற்றம் ஆகியவைகளின்

நாளில் நாம் நிற்பதற்காக உன்னதத்திலிருந்த ஞானத்தை நாம் தேடவேண்டும்." — **E.W:87**

"தங்களுடைய மனங்களை வேதாகமச் சத்தியங்களினால் பலப்படுத்தி இருப்பவர்களைத்தவிர வேறொருவரும் கடைசிப் பெரும் போராட்டத்திற்கூடாக நிற்கமாட்டார்கள்." — **G.C:593,594**

"ஊக்கமான ஜெபத்தின் சத்தத்தில், சாத்தானின் சேனைகள் முழுவதும் நடுங்குகின்றன." — **T. 1:346**

"நமது மீட்பரின் மேலான வல்லமையினால் நாம் புகலிடத்தையும் விடுதலை யையும் காணாதவர்களாக இருந்திருந்தால், சாத்தானுடையதும் அவனுடைய சேனையினுடையதுமான வல்லமையும் வன்மமும் நமக்கு உண்மையாகவே அபாய உணர்வை உண்டுபண்ணும். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அவருடைய விழிப்பான கவனிப்பின்கீழ் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கின்றனர். அவர்களைப் பாதுகாப்பதற்காக, மேலான பலமிக்க தேவ தூதர்கள் பரலோகத்திலிருந்து அனுப்பப்படுகின்றனர். தேவன் அவருடைய ஜனங்களைச் சுற்றிலும் நிறுத்தி வைத்திருக்கும் காவலை உடைத்து, அதற்கூடாகக் கடக்க துன்மார்க்கர்களால் முடியாது." — **G.C:517**

பூமியின்மேல் வாசம்செய்யும் அனைவரையும் சோதிக்கும்படி உலகம் முழுவதிலும் உண்டாகக்கூடிய சோதனையின் நேரம் நமக்கு முன்பாக இருக்கிறது. எவர்களுடைய விசுவாசம் தேவனுடைய வார்த்தையின்மீது உறுதியாக அமைக்கப்படாமலிருக்கிறதோ அவர்கள் அனைவரும் வஞ்சிக்கப்பட்டும் மேற்கொள்ளப்பட்டும் போவார்கள். மனிதப் பிள்ளைகளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் ஆதாயப்படுத்தி, அநீதியினால் உண்டாகும் சகலவிதமான வஞ்சகத்துடனும் சாத்தான் செயலாற்றுகிறான். அவனுடைய வஞ்சகம் தொடர்ச்சியாக அதிகரிக்கும்; ஆனால் மனிதர்கள் தாங்களாகவே அவனுடைய சோதனைகளுக்கு இணங்கும்போது மட்டுமே அவனுடைய நோக்கத்தை ஆதாயமாக அவனால் அடைந்துகொள்ள முடியும். சத்தியத்தைப்பற்றிய அறிவை அக்கறையுடன் தேடுபவர்களும், கீழ்ப்படிதலின் மூலமாகத் தங்களுடைய ஆத்துமாவைத் தூய்மைப்படுத்த முயலுபவர்களும், சத்தியத்தின் தேவனில் நிச்சயமான ஒரு தற்காப்பைக் காண்பார்கள். "என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை, நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும் படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிறச் சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" – வெளி. **3:10.** ★